விகடன்
பிரசுரம்

வந்தார்கள்.. வென்றார்கள்!

2,00,000 பிரதிகளைக்
கடந்து அமோக
விற்பனையில்!

மதன்

வந்தார்கள்.. வென்றார்கள்!



மதன்

விகடன்
பிரசுரம்

Title :
VANTHARGAL VENDRARGAL
© MADHAN

ISBN : 81-89780-59-X

விகடன் பிரசுரம்: 15

நூல் தலைப்பு:
வந்தார்கள்.. வென்றார்கள்!

நூல் ஆசிரியர்:
© மதன்

நூல் வடிவமைப்பு:
அரஸ், பொன்ஸீ

முதற்பதிப்பு : ஜனவரி, 1994
இருபத்தி நான்காம் பதிப்பு : மார்ச், 2013
விலை : ₹ 200

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

ஆசிரியர்:
இரா.சரவணன்

முதன்மை உதவி ஆசிரியர்:
அ.அன்பழகன்

தலைமை உதவி ஆசிரியர்கள்:
எம்.நாகமணி, கே.பாசுமணி, சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: books@vikatan.com

படித்தார்கள்... பிரமித்தார்கள்!

ஆனந்த விகடன் வெளியீடுகளின் இணை ஆசிரியராக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய மதன், ஒரு சிறந்த கார்ட்டூனிஸ்ட் மட்டுமல்ல, உண்மையில் அவர் பல திறமைகளைத் தன்னகத்தே மறைத்து வைத்திருப்பவர்.

மதன் எதையும் சுவைபடச் சொல்லும் ஆற்றல் படைத்தவர். ஜூனியர் விகடனில் மொகலாய சரித்திரத்தை அவர் எழுதத் தொடங்கியபோது, வடக்கே பாபர் மசூதி சர்ச்சை பெரிய அளவில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. 'இந்த நேரத்தில் இப்படி ஒரு தொடரா?!' என்று சிலர் நினைத்தார்கள். சிலர் பயப்படவும் செய்தார்கள்.

ஆனால், 'ஆரம்பித்த நேரம் சரியில்லையோ' என்று ஒரு கணம்கூட அவர் தயங்கவில்லை. 'இதுதான் சரியான சமயம்... உண்மைகளைச் சொல்வதனால் நன்மைதான் ஏற்படும்.. தொல்லைகள் வருவதில்லை' என்ற திடமான நம்பிக்கையோடு எழுதினார்.

மதன் மொகலாய சரித்திரத்தைச் சொல்லச் சொல்ல, உண்மையில் ஒரு மகத்தான வெற்றியாக தொடர் அமைந்தது. எந்தக் களங்கமும் அவர் எழுத்தில் இருக்கவில்லை. ஒவ்வொரு மன்னரையும் நேசித்து, ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அவரே நேரில் இருந்து பார்த்தது போல எழுதிய பாங்கு அதிசயமானது. வாசகர்களும் 'சொக்குப்பொடி' போட்டது போல அவர் எழுத்துக்கு மயங்கினார்கள்.. லட்சக்கணக்கானோர் படித்தார்கள்... பிரமித்தார்கள்.

எனது இனிய நண்பரும் எனக்குப் பெரும் பக்கபலமாக விளங்கியவருமான மதனின் இணையற்ற சாதனையான இந்தத் தொடரைப் புத்தகமாக வெளியிட்டபோது வாசகர்களிடையே பலத்த வரவேற்பு கிடைத்தது. வாசகர்களின் ஆதரவு தொடர்ந்து இருப்பதால் தற்போது புதிய பதிப்பாக இப்புத்தகத்தை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

எஸ். பாலசுப்ரமணியன்
ஆனந்த விகடன்

எழுத்தாளர் சுஜாதா அணிந்துரை...



மதன் என் இனிய நண்பர். அவர் ஒரு தேர்ந்த கார்ட்டூன் சித்திரக்காரர் என்பது நாடறிந்த உண்மை. மதன் ஒரு நல்ல பத்திரிகாசிரியர்... இயல்பாக, திறமையாகத் தமிழில் எழுதக்கூடியவர் என்பது அத்தனை பரவலாகத் தமிழ் அன்பர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை...

'வந்தார்கள்.. வென்றார்கள்!' வரும்வரை.

மதன் இப்போது எழுத்துத்துறைக்கும் வந்துவிட்டார், வென்று விட்டார்.

முன்பு ஜூனியர் விகடனில் நான் 'ஏன்? எதற்கு? எப்படி?' எழுதும்போது அங்கங்கே சில பதில்களில் மதனின் கைவண்ணம் புகுவதை நான் சந்தோஷத்துடன் அனுமதித்தேன். அப்போதே எனக்குத் தெரிந்துபோயிற்று - ஒரு நாள் இவர் முழுப் புத்தகம் எழுதி வெல்லப் போகிறார் என்று. என்ன எழுதப் போகிறார் என்பதுதான் சஸ்பென்ஸாக இருந்தது. சரித்திரம் எழுதப் போகிறார் என்று அறிவிப்பு வந்தவுடன் சற்று ஆச்சரியப்பட்டேன்.

மதனுக்கு விஞ்ஞானத்தில் ஆர்வம் உண்டு என்பது எனக்குத் தெரியும். நிறைய ஆங்கிலப் புத்தகங்கள் படிப்பார் என்பதும் தெரியும். மதன் இந்திய சரித்திரத்தை, இத்தனை புத்தகங்களை இவ்வளவு ஆழமாகப் படித்திருக்கிறார் என்பது இன்பமான அதிர்ச்சி அளித்தது.

'வந்தார்கள்.. வென்றார்கள்!' என்பதை மதன் சுலபமாக, சம்பிரதாயமான சரித்திரச் சம்பவங்களின் தொகுப்பாக எழுதியிருக்கலாம். அல்லது அங்கே இங்கே குதிரைகளும் பீரங்கிகளும் ஒற்றர்களும் மஸ்லின் முகத்திரை ராஜகுமாரிகளும் மதுக்கோப்பைகளும் சேர்த்து சுவாரஸ்யமான நாவலாகப் பண்ணியிருக்கலாம். மாறாக, முற்றிலும் வேறுபட்ட ஒரு Narrative Style ஐ அமைத்துக் கொண்டு மொகலாய மன்னர்களை, படையெடுத்து வந்து நம் நாட்டைச் சூறையாடி நல்லதும் கெட்டதும் கலந்து ஆண்ட அந்த மன்னர்களை, நிஜரூபத்தில் நகமும் சதையும் பாசமும் கோபமும் கிறுக்குத்தனமும் சூழ்ச்சியும் பேதமையும்... சுருக்கமாக, அத்தனை சரித்திரர்களையும் மூச்சுவிட்டு முதுகு சொறிந்துகொண்டு வாழ்ந்த-வீழ்ந்த மனிதர்களாகக் காட்டியிருக்கிறார். நமக்குச் சம்பிரதாயமாகச் சொல்லிக் கொடுக்கப்பட்ட சரித்திரத்தில் அக்பர், ஔரங்கசீப், துக்ளக், சிவாஜி போன்றவர்களின் சில குணங்கள்தான் வெளிச்சமிடப்பட்டன.

துக்ளக் தலைநகரை மாற்றியதும் அக்பர் ராஜபுதன மங்கையை மணந்து இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு முயன்றதும் ஔரங்கசீப் சங்கீதத்தை வெறுத்ததும் சிவாஜி அஃப்ஸல்கான் மீது சீறிப்பாய்ந்ததும் இப்படி ஒவ்வொரு மன்னருக்கும் ஒரே ஒரு குணாதிசயம்தான் சரித்திரப் பாடங்களினால் நம் மனதில் பதிக்கப்பட்டு மிச்சமிருக்கிறது. மதன் அந்த மன்னர்களின் பின்னணி, வளர்ந்தவிதம் இவற்றுடன் அவர்களின் நிஜரூபத்தையும் முழுப்பரிமாணத்தையும் காட்ட முயன்றிருக்கிறார்.

“மென்மை, கொடூரம், இரக்கம், நிதானமின்மை, நீதியுணர்வு, குழந்தைத்தனம், கலையுணர்ச்சி, கொலைவெறி இவற்றின் களேபரமான கலவைதான் ஜஹாங்கீர் பாதுஷா!” இத்தனை விஸ்தாரமாக ஒவ்வொரு மன்னரின் பின்னணியையும் மதன் ஆராயும்போது நமக்குப் பல புதிய செய்திகளும் ஆச்சரியங்களும் கிடைக்கின்றன.

சரித்திரம் என்பதே நடந்துபோனதை மற்றொரு காலகட்டத்தில் கிடைக்கும் குறைபட்ட சாட்சியங்களை வைத்துக்கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புவதுதான். சூழ்நிலை சாட்சியங்களை வைத்துக் கொண்டுதான் நாம் நமது சோழர்களையும் மொகலாயர்களையும் மறுபடி உருவாக்குகிறோம். அப்படி உருவாக்குகையில் ஒரு கோடியில் இருப்பது மிகையான சம்பவங்களைக் கொண்ட சரித்திர நவீனங்களின் தீப்பந்தங்களும் உறையூர் ஒற்றர்களும் யவன மங்கைகளும்...

இவர்கள் எல்லாம் இல்லை என்று மதன் சொல்லவில்லை. இந்தப் புத்தகத்தில் இவையெல்லாமே உண்டு. ஆனால், தேதிகளும் படைவீரர்களின் எண்ணிக்கைகளும் நகைகளின் விவரங்களும் சரித்திர ஆதாரத்தின் அடிப்படிப்படையில் கொடுத்திருப்பதால், மிகை தவிர்க்கப்பட்ட சரித்திரம் இது. உதாரணம் அனார்கலி - சலீம் கதை இதில் இல்லை. காரணம் - அது சரடு.

மதனின் தமிழ்நடை சுலபமாக, சரளமாக இருக்கிறது. சரித்திரத்துக்கு என்று கமா, புல்ஸ்டாப் போடாமல் நீண்ட வாக்கியங்கள் கொண்ட புராதன நடையைப் பயன்படுத்தவில்லை அவர்.

“முதல் நாள் இரவு ஜாலியாக நண்பர்களின் தோளில் கைபோட்டுக் கொண்டு மதுவில் மூழ்கியதும் உண்டு. மறுநாள் ‘குடித்துவிட்டு உளறியதற்காக’ அவர்களுக்குச் சவுக்கடி தந்ததும் உண்டு!”

“அரண்மனை வி.ஐ.பி-க்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். மகாராணி மும்தாஜுக்கு ஆறு லட்சம் ரூபாய் ‘விழா போனஸாக’ தரப்பட்டது!”

போன்ற வாக்கியங்களின் Contemporaneity ‘தற்காலத்தன்மை’ பின்னணியில் உள்ள உண்மை சரித்திர ஆராய்ச்சியை மறைத்துவிட்டாலும் இம்மாதிரி யாரேனும் சரித்திரப் பாடம் எழுதியிருந்தால் நான் சரித்திரத்தில் நூற்றுக்கு நூறு வாங்கியிருப்பேன் என்பது உண்மை.

இந்தப் புத்தகத்தின் சிறப்புக்கு மற்றொரு காரணம் - சிறந்த ஓவியங்களும் புகைப்படங்களும்தான்.

ஜூ.வி.-யில் இது தொடராக வெளிவந்தபோது பல பாராட்டுக் கடிதங்களையும் சில மிரட்டல் கடிதங்களையும் பெற்றது என்பது எனக்குத் தெரியும். அந்த மிரட்டல் கடிதங்கள்தான் இந்த நூலின் யோக்கியமான, உண்மையான, பாரபட்சமற்ற சரித்திர மதிப்புக்குச்

சான்றிதழ்கள்.

சுஜாதா

சென்னை
21.12.93

A FLAWLESS PORTRAIT...

How to make history interesting to a commoner, a lay reader? Madhan has come up with an answer in his book under review. One must salute Madhan and Ananda Vikatan for having come up with such a bold experiment; and succeeded exceedingly well...

The approach is direct, simple and unambiguous. From Timur to Bhadur Shah it is one engaging account. From king to king, Madhan has distinctively changed the size and style of writing which is indeed a clever stroke.

The telling is compelling. Now a survey with housewives about Indian history would reveal that they are more knowledgeable - Thanks to this book.

The book should find a place in every household, as an authentic account of ourselves. A flawless portrait.

- THE HINDU
12.7.1994

1

தைமூர்..

ஆண்டியாக இருந்தாலும் சரி, அலெக்ஸாந்தராக இருந்தாலும் சரி, வடக்கிலிருந்து இந்தியத் துணைக் கண்டத்துக்குள் நுழைய வேண்டுமென்றால் - விண்ணை முட்டும் இமயமலைத் தொடரைத் தாண்டியாக வேண்டும். அல்லது வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் ஆழமான சிந்து நதியைக் கடந்தாக வேண்டும். இயற்கை அமைத்துத் தந்த இந்தப் பெரும் அரண்களைத் தாண்டி இந்தியாவுக்குள் நுழைய முயற்சித்து, அதில் கம்பீரமாக வெற்றிகண்டவர்கள் - கிரேக்க மன்னன் அலெக்ஸாந்தர் உட்பட - மிகச் சிலரே.

அலெக்ஸாந்தரைத் தொடர்ந்து சுமார் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, கி.பி.1221-ல் மங்கோலியத் தலைவன் செங்கிஸ்கான் வெறிபிடித்த பெரும் படையுடன் சிந்து நதிக்கரை வரை வந்து நின்றான். 'இந்தியாவா, பாரசீகமா?' என்று சிந்தனையுடன் அவன் வெளிப்படுத்திய மூச்சு, வட இந்தியாவை அங்குமிங்குமாக ஆண்டுகொண்டிருந்த மன்னர்களை வெப்பக் காற்றாகத் தாக்கி நடுங்க வைத்தது. நல்ல காலமாக அவன் பாரசீகம் (பெர்ஷியா) பக்கம் குதிரைகளைத் திருப்பிக்கொண்டு முன்னேற - இந்தியா அவன் ரத்த வெறியிலிருந்து தப்பியது என்று சொல்லலாம்!

பிறகு, 1398-ல்தான் இந்தியாவுக்கு நிஜமான ஆபத்து வெடித்தது. மங்கோலியப் பரம்பரையில் வந்த தைமூர் என்கிற கொடுங்கோல் மன்னன் மத்திய ஆசியாவிலிருந்து ஒரு பெரும் படையுடன் கிளம்பி ஆப்கானிஸ்தானைக் கடந்து இந்தியாவுக்கு வந்து சேர்ந்தான். சிந்து நதியை அவன் சட்டை செய்யவில்லை. படகுகளை வரிசையாக நிறுத்தி இணைத்துப் பாலம் ஏற்படுத்தி கணநேரத்தில் நதியைக் கடந்து டெல்லியை நோக்கி முன்னேறினான்.

அவன் இந்தியாவில் தங்கியிருந்தது ஆறு மாதங்கள்தான். இருப்பினும், பிற்பாடு மொகலாய சாம்ராஜ்யம் இந்தியாவில் தோன்றுவதற்கான ஒரு முக்கிய காரணம் தைமூர் என்பதால் அவன் சம்பந்தப்பட்ட ரத்தமயமான இந்திய அத்தியாயங்களை நம்மால் ஒதுக்க முடியவில்லை. ஆகவே, சற்று நெருக்கமாகச் சென்று - இதோ சிந்து நதிக் கரைக்குப் பெரும் படையுடன் வந்து சேர்ந்த தைமூருடன் சற்றுப்

பயணிப்போம். ஆனால், வாசகர்கள் சற்று மனதைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டும். தைமூரின் கொலை வெறியை அருகில் இருந்து காண நெஞ்சுரம் தேவை!

ஆப்கானிஸ்தானின் தலைநகரமான காபூலின் வடக்கில், முந்தைய சோவியத் ரஷ்யாவின் தென்கோடியில், இன்றைய உஸ்பெக் பகுதியில் உள்ள முக்கிய நகரம் சாமர்கண்ட். துருக்கிய - மங்கோலிய இனத்தைச் சேர்ந்த தைமூரின் தலைநகரம் அதுதான். சாமர்கண்டிலிருந்து கிளம்பிய தைமூரின் மாபெரும் படை முதலில் பாக்தாத் நகரைச் சூறையாடியது. பிறகு பாரசீகம். வெறியும் வேகமும் கொண்ட தைமூரின் வீரர்கள் பாரசீகத்தைப் பந்தாடினார்கள். கொடூரக் களிப்புடன் அவர்கள் வெட்டி வீழ்த்திய மனிதத் தலைகளின் எண்ணிக்கை சுமார் எழுபது ஆயிரம். அவற்றைக் குவித்து நூற்றுக் கணக்கான ‘மனிதத் தலை பிரமிடுகளை’ உருவாக்கிய பிறகே தைமூர் பாரசீகத்தைவிட்டு வெளியேறினான்.

அடுத்தபடி ரஷ்யா. மாஸ்கோவுக்குள் புகுந்து சூறையாடிவிட்டு சில நாட்கள் ஓய்வெடுத்துக்கொண்டு நேராக இந்தியாவை நோக்கி அவன் படை முன்னேற ஆரம்பித்தது. இலக்கு - அவன் ஏற்கெனவே கேள்விப் பட்டிருந்த, புகழ்பெற்ற டெல்லி நகரம்.

இந்தியாவை நோக்கி தைமூரின் படை முன்னேறிய வேகத்தோடு ‘பறவைகள்கூடப் போட்டியிட முடியவில்லை’ என்று சரித்திர ஆராய்ச்சியாளர் ஒருவர் குறிப்பிடுகிறார்.

செப்டம்பர் 22. ஆண்டு 1398. தைமூரின் படை சிந்து நதிக்கரையோரம் வந்து சேர்ந்தது. இந்தப் பரபரப்பான செய்தி வந்து சேர்ந்தவுடனே வட இந்தியா பீதியில் ஆழ்ந்தது. டெல்லியில் கோலோச்சிய பலம் வாய்ந்த சுல்தான் பிரோஷ் ஷா துக்ளக் இறந்து பத்து ஆண்டுகள் நகர்ந்துவிட்டன. ‘நானா, நீயா?’ என்று கோஷ்டிச் சண்டையில் ஈடுபட்டிருந்த ‘பொம்மை’ அரசர்கள் இருவர் டெல்லியை ஏதோ ஒரு ஒப்புக்கு ஆண்டு கொண்டு

இருந்தனர். ஒரு கோஷ்டியின் தலைவனான மல்லூகான் இக்பாலின் கை ஓங்க, அவன் உதவியோடு டெல்லி அரியணையில் உட்கார்ந்தான் முகமது ஷா. அவன் பதவியேற்ற கையோடு தைமூரின் படை டெல்லியை நெருங்கிக்கொண்டிருக்கும் செய்தியும் வந்து சேர்ந்தது.

“வரட்டுமே! ஒரு நொண்டி மன்னனுக்கா நாம் பயப்படுவது? ஆர்ப்பாட்டம் போடும் அந்த மங்கோலிய நாடோடியைத் தோற்கடித்தால் டெல்லி சுல்தானாகிய தாங்கள்தான் உலக சாம்பியன்!” என்கிற ரீதியில் மன்னனை மல்லூகான் இக்பால் உசுப்பேற்ற - யார், என்ன, ஏது என்று எதுவும் விசாரித்து அறியாமலேயே போர் உடை பூண்டான் முகமது ஷா (இளம் வயதில் ஒரு போர்க்களத்தில் எதிரியின் அம்பு தொடையில் பாய்ந்ததால் தைமூரின் கால் பாதிப்புக்குள்ளானது. ஆகவே, சற்று விந்தி விந்தி நடந்த அவனை தைமூர் இ லெங் - ‘நொண்டி தைமூர்’ என்று மற்றவர்கள் குறிப்பிட்டார்கள். ‘இப்படி எனக்கு ஒரு பெயர் இருப்பது தெரியும். ஆனால், என் எதிரில் வந்து யாரும் என்னை அப்படி அழைக்க மாட்டேன் என்கிறார்களே!’ என்று அலுப்புச் சிரிப்புடன் தைமூர் குறிப்பிடுவதுண்டு. நம்மைப் பொறுத்தவரை ‘தைமூர்’ என்றே அழைப்போம். எதற்கு வீண் பிரச்னை?!).

சிந்து நதியைக் கடந்த தைமூரின் படை, மகிழ்ச்சியைக் கொண்டாட பஞ்சாப் பகுதி முழுவதையும் சூறையாடி வெறியாட்டம் போட்டது. சுமார் ஒரு லட்சம் பேர் தைமூரிடம் அடிமைகளாகச் சிக்கினார்கள். அவர்களை மொத்தமாகக் கயிறுகளால் கட்டி தைமூரின் படை கூடவே இழுத்துச் சென்றது.

டிசம்பர் ஆரம்பம்... வாட்களை உயர்த்தியவாறு, ஏகமான ரத்த ஆர்வத்துடன் டெல்லி நகர எல்லையில் முகாமிட்ட இந்த மங்கோலியப் படையின் மொத்த எண்ணிக்கை சுமார் தொண்ணூறு ஆயிரம்!

டெல்லி பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்த தைமூரிடம் நெருங்கிச் சென்ற சில தளபதிகள், களத்தில் குதிக்கும் தருணத்தில் கையோடு சுமார் ஒரு லட்சம் அடிமைகளை - அதுவும் இந்தியாவைச் சேர்ந்தவர்களை - பக்கத்தில் வைத்துக்கொண்டிருப்பது சற்று ஆபத்தானது என்றும் ஏதேனும் கலவரமான சூழ்நிலையில் அவர்கள் தப்பித்து எதிரிகளோடு சேர்ந்தால் அதனால் பிரச்னை ஏற்படலாம் என்றும் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, தேர்ந்த சில ஆயிரம் அடிமைகளைத் தவிர, மற்றவர்களைத் தீர்த்துக்கட்டிவிடலாம் என்றும் யோசனை சொன்னார்கள். “அடங்கி ஒடுங்கிப் போய் துவண்டு கிடக்கும் இந்த அடிமைக் கூட்டத்தைக் கொன்று தள்ளுவதில் நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்க முடியாது. பிரச்னையைத் தீர்க்க நான் வேறு ஒரு வழி பண்ணுகிறேன்!” என்று சொன்ன தைமூர், சில நூறு அடிமைகளை நட்ட நடுவில் கொண்டுவரச் செய்தான். மறுகணம் அவன் ஆணையிட, தைமூரின் வீரர்கள் உருவிய வாட்கள் அந்த அடிமைகளின் உடல்களை துண்டு துண்டாக வெட்டி வீழ்த்தித் தள்ளின. “ஏதேனும் வாலாட்டினால் இதே கதிதான் மற்றவர் களுக்கும்!” என்று சொல்லிவிட்டு நகர்ந்தான் தைமூர். இந்தப் பயங்கரக் காட்சியைப் பார்த்த பல்லாயிரக்கணக்கான அடிமைகள் கதிகலங்கிப் போனார்கள்.

செங்கிஸ்கான்

இருந்தாலும் விதி அந்த அடிமைகளை விட்டு வைக்கவில்லை. டெல்லி சுல்தானின் போர் ஏற்பாடுகளைப் பற்றித் துப்பறிய, தன் தளபதிகளுடன் கிளம்பிச் சென்றான் தைமூர். இதை எப்படியோ தெரிந்து கொண்ட மல்லூகான் திடீரென்று ஒரு படையுடன் கோட்டையிலிருந்து வெளிப் பட்டு, சில வீரர்களோடு மட்டும் இருந்த தைமூரைத் துரத்தியடித்த தமாஷ் நடந்தது.

முகம் சிவந்து, கோபம் கொந்தளிக்கப் பாசறைக்கு தைமூர் திரும்பியபோது பேரணியாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த அடிமைகளில் சிலர், தங்களின் பரிதாபச் சூழ்நிலையையும் மறந்து 'களுக்'கென்று சிரித்துவிட (அல்லது தன்னைப் பார்த்து அவர்கள் சிரித்ததைப் போன்ற ஒரு பிரமை தைமூருக்கு ஏற்பட்டிருக்கலாம்..!), அவர்கள் பக்கம் பார்வையைத் திருப்பிய தைமூர் நிதானமாக, "இவர்களில் யாரும் உயிரோடு இருக்கக்கூடாது" என்று கர்ஜித்தான். அதைத் தொடர்ந்து ஒரு மணி நேரத்துக்குள் அத்தனை பேருடைய தலைகளும் சீவப் பட்டன.

இந்த ஒட்டுமொத்த கொலைக்குப் பிறகும் அவ்வப்போது தைமூர் முகத்தில் லேசான கவலை ரேகைகள். "அடுத்தபடி நாம் எதிர் கொள்ள வேண்டிய அந்தப் பிரச்னையைச் சமாளிக்க ஏற்பாடுகள் தயாரா?" என்று தன் தளபதிகளிடம் கேட்டான் தைமூர். தைமூரின் கவலைக்குக்

காரணம் உண்டு. இமயமலைத் தொடர், சிந்து நதி - இரு பெரும் அரண்களுக்கு அடுத்தபடி வேற்று நாட்டுப் படைகளுக்கு திகிலூட்டிய விஷயம் - இந்தியர்களுக்கே உரித்தான 'யானைப் படை' என்கிற நடமாடும் அரண்!

எளிமையான இந்திய அரசர்களிடம்கூட நிறைய யானைகள் உண்டு என்பதும், அந்த யானைகள் கட்டுப்பாட்டோடும் ஆவேசத்தோடும் போர்களில் பங்கேற்பது வழக்கம் என்பதும், யானைகளையே நேரில் பார்த்திராத வெளிநாட்டு மன்னர்களுக்கு வியப்பையும் பிரமிப்பையும் ஏற்படுத்தியது. இந்தியாவுக்குள் நுழையப் பார்த்த கிரேக்க, மங்கோலிய, ஆப்கான் மற்றும் துருக்கிய தளபதிகள் பலர், தங்களை நோக்கி ஆயிரக் கணக்கில் யானைகள் பிளிறிக் கொண்டு புழுதி பறக்க திமுதிமுவென்று ஓடிவருதாகக் கற்பனை செய்துகொண்டே பீதியில் ஆழ்ந்ததுண்டு. ஆகவே, தைமூரும் சற்றே கவலைப்பட்டதில் ஆச்சரியமில்லை. ஆனால், அந்தக் கவலை அவனைப் பெரிதாகக் கலவரப்படுத்தவும் இல்லை.

டெல்லி சுல்தானின் யானைப் படையை எதிர்கொள்ளத் தயாரானான் தைமூர்.

டிசம்பர் 17-ம் தேதி....

சுல்தான் முகமது ஷாவின் கோட்டைக் கதவுகள் திறந்தன. உயர்த்திப் பிடித்த வாட்களும் கேடயங்களும் பளீரிட, பத்தாயிரம் குதிரை வீரர்கள் வெளியே அணிவகுத்து வந்தனர். தொடர்ந்து நாற்பதாயிரம் வீரர்கள் கொண்ட காலாட் படை... பிறகு தரை அதிர தொடர்ந்து வந்தன யானைகள் - நெற்றிப் பகுதியில் இரும்பு முட்கள் பதிக்கப்பட்ட கவசங் களுடன், தந்தங்களில் பொருத்தப்பட்ட நீண்ட வாட்களுடன்!

'யானை என்கிற இந்தப் பிராணி இத்தனை பெரிய உடம்பைத் தூக்கிக்கொண்டு இவ்வளவு வேகமாகக்கூட முன்னேறுமா?' - சில விநாடிகள் வியந்தான் தைமூர். பிறகு அவன் தலையசைக்க, படிப்படியாக அவன் தீட்டிய போர்த் திட்டங்கள் அமல்படுத்தப் பட்டன. அவனுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட குதிரை வீரர்கள் ஏராளமான துணிச்சலுடன் மின்னல் வேகத்தில் பாய்ந்து சுல்தானின் படைக்குள் புகுந்தார்கள். அவர்கள் வீசியெறிந்த 'கதை' போன்ற உருண்டைப் பகுதி பூராவும் கூர்மையான 'முட்கள்' பதிக்கப்பட்ட - ஆயுதங்களை, முன்னேறி வந்த யானைகள் மிதித்து வலி தாங்காமல் பிளிறித் தடுமாறின. அதையும் மீறி வந்த யானைகள் தைமூர் படை தோண்டிவைத்த நூற்றுக்கணக்கான பள்ளங்களில் கால் பதிக்க, பள்ளங்களில் புதைக்கப்பட்டிருந்த சூலாயுதங்கள் அவற்றின் பாதங்களைத் துளைத்து ரணமாக்க, யானைப் படை நிலைகுலைந்தது. எதிர்பாராமல் நிலவிய வித்தியாசமான இந்தக் கலவரத்தால் கவனம் சிதறிய சுல்தானின் குதிரை வீரர்களை தைமூரின் வீரர்கள் வெட்டிச் சாய்த்தார்கள்.

உடனடியாக அடுத்தகட்ட நடவடிக் கையைச் செயல்படுத்த ஆணையிட்டான் தைமூர். இருபுறமும் பக்கவாட்டிலிருந்த ஒட்டகங்களும் எருமைகளும் ஏக காலத்தில் முகமது ஷாவின் படையை நோக்கி விரட்டப்பட்டன. அவற்றின் முதுகுகளில் பெரிதாக வைக்கோல் மூட்டை! அவற்றோடு பாய்ந்துவந்த மங்கோலியக் குதிரை வீரர்கள், கடைசி நிமிடத்தில் எல்லா வைக்கோல் மூட்டைகளுக்கும் தீ வைத்து விட்டு விநாடியில் பின்தங்கினார்கள். திடீரென்று கிளம்பிய ஒரு ராட்சத நெருப்பு வியூகம், சுல்தானின் படையை நோக்கிக் குறுகிக்

கொண்டே வந்ததைக் கண்ட யானைகள் தாறுமாறாக ஓடித் தங்கள் வீரர்களையே துவம்சப்படுத்திய அதே நேரத்தில் தைமூரின் வீரர்கள் முழு வெறியோடு புகுந்து விளையாடினார்கள். அவர்களின் சிவந்து போன வாட்களின் வீச்சில் பல நூற்றுக் கணக்கான தலைகள் அங்குமிங்கும் ரத்தத் துளிகளுடன் பறந்தன.

அலெக்ஸாந்தர்

ஒரே நாளில் - மாலை நேரம் வந்து சேர்வதற்குள் போர் முடிந்துவிட்டது.

தைமூரின் தலைமையில் அவனுடைய வெற்றிப் படை, நடுங்கிக்கொண்டிருந்த டெல்லிக்குள் ஆரவாரத்துடன் நுழைந்தது...!

பிறகுதான் மறுபடியும் பயங்கரம்!

தைமூரின் ரத்தமயமான அணுகு முறையைப் பற்றிப் படிக்கும்போது 'இப்படி ஒரு கொலை வெறியா?' என்று புருவங்களை உயர்த்தத் தோன்றும். ஆனால், அந்த வெறிதான் அவன் வெற்றிக்குக் காரணமாக இருந்தது. இடையூறு செய்பவர்களிடம் இரக்கம் காட்டுவதோ, எதிரிகளை ஏனோதானோ என்று விட்டுவிடுவதோ

அவனுக்குப் பிடிக்காத ஒன்று! தைமூரைப் பொறுத்தமட்டில் தலைவேறு உடல்வேறாகத் தரையில் கிடப்பவன்தான் எந்தப் பிரச்னையும் ஏற்படுத்தாத எதிரி!

எதிர்த்து நிற்பவர்களைத் தீர்த்துக் கட்டுவதை வேகமாக முடிக்க வேண்டும் என்பதும் தைமூரின் கொள்கைகளில் ஒன்று. "யாரும் சோம்பலாக உட்காரக்கூடாது. எல்லோரும் கூட்டுறவாகச் செயல்பட்டால் தான் கால தாமதம் இல்லாமல் காரியத்தை முடிக்க முடியும்" என்று தைமூர் அவ்வப்போது தன் படை வீரர்களிடம் வலியுறுத்துவது வழக்கம்.

அதனால்தான் பஞ்சாப் பிரதேசத்தில் சிறைப்படுத்தப்பட்ட ஒரு லட்சம் அடிமைகளின் தலைகளைச் சீவ அவன் ஆணையிட்டபோது அதை நிறைவேற்ற ஒவ்வொரு படைவீரனும் வாளை உருவிக் கொண்டு கிளம்பினான். அப்போது தொழுகைக் காலங்களில் தைமூருக்காகப் புனித குர்-ஆன் ஓதும் முதியவர் ஒருவர் அப்படியே அமர்ந்திருக்க "என்ன பெரியவரே! சும்மா உட்கார்ந்திருந்தால் எப்படி? நீங்களும் ஒரு வாளை எடுத்துக் கொண்டு போய் ஒத்துழைக்கலாம் அல்லவா?" என்று தைமூர் சொல்ல, பதறிப்போய் எழுந்த பெரியவரின் கையில் தைமூரின் சகாக்கள் ஒரு வாளைத் தந்து இழுத்துக்கொண்டு சென்றார்கள். ஒரு எறும்பைக்கூட மிதிக்க யோசிக்கும் அந்த முதியவர் தட்டுத்தடுமாறிய வண்ணம் ஒரு அடிமையின் வயிற்றில் அரை குறையாக வாளைச் செருக, மிச்சத்தை மற்ற வீரர்கள் பார்த்துக்கொண்டார்கள். பிறகு அந்த அடிமையின் தலையைச் சீவிய ஒரு வீரன், தான் செய்த கொடுமையான காரியத்தை நினைத்து அழுதவாறு திரும்பி நடந்து கொண்டிருந்த பெரியவரை அழைத்து "தலையை விட்டுவிட்டுப் போனால் எப்படி?" என்று அவர் கையில் துண்டிக்கப்பட்ட தலையைக் கொடுத்து அனுப்பினான் என்பதெல்லாம் சரித்திரப் பெட்டிச் செய்திகள்!

தைமூரின் வெற்றிப்படை டெல்லி நகரின் பிரதான வீதிகளில் நுழைந்தது. இந்தத் தகவல் மின்னலைப் போலப் பரவ, கூடவே நீண்டதோர் இடியோசையாக அவனது பெரும் குதிரைப் படையின் குளம்புச் சத்தம் நகரெங்கும் எதிரொலித்தது. டெல்லிவாழ் மக்கள் பீதியில் துவண்டுபோனார்கள்.

தன் தளபதிகளுடன் குதிரையை நகர வீதிகளில் சாவதானமாகச் செலுத்திய வண்ணம் வந்த தைமூரின் முகம் அமைதியாக இருந்தது. ஆங்காங்கே இண்டு இடுக்கிலிருந் தெல்லாம் சற்றுத் துணிவுடன் எட்டிப் பார்த்த நகர மக்கள் சிலருக்கு இது சற்று நம்பிக்கை தந்தது. உண்மையில் தைமூர் முகத்தில் நிலவியது வெற்றிகரமாக விருந்து உண்ட வேங்கையின் முகத்தில் இருக்கும் அமைதிதான் என்பதும், அதைத் தொடர்ந்து எப்போது வேண்டுமானாலும் திடீர்ப் புயல் வீசலாம் என்பதும் அவனுடைய தளபதி களுக்கு மட்டுமே தெரிந்திருந்தது. தைமூரின் குதிரையைத் தங்கள் குதிரைகள் முந்தாமல் லகானை எச்சரிக்கையாக இழுத்துப் பிடித்தவாறு அவனுடன் மௌனமாக வந்த தளபதிகள், சுல்தானின் அரண்மனையை நோக்கி முன்னேறினார்கள்.

அரண்மனைக்குள் நுழைந்த தைமூர் நேராகச் சென்று வெற்றி ஆரவாரத்தின் நடுவே சிம்மாசனத்தில் அமர்ந்தான். அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், பிரபுக்கள், ஊர்ப் பெரியவர்கள், செல்வந்தர்கள், வசதி படைத்த வர்த்தகர்கள் எல்லோரும் வரிசையாக ஒவ்வொருவராக வந்து தைமூரின் முன் மண்டியிட்டு வணங்கினார்கள். பலர் அவன் காலில்

முத்தமிட்டார்கள். யார், எவர் என்று ஒருவர் மெலிதாக தைமூரிடம் எடுத்துச் சொல்லிக் கொண்டே வர... வந்தவர்கள் வைரங்களையும் வைடூரியங் களையும் தங்க ஆபரணங்களையும் வாட்களையும் தைமூர் காலடியில் குவித்துப் பச்சையாகவே உயிர்ப் பிச்சை கேட்டனர். சிம்மாசனத்தில் பொறுமையிழந்து அமர்ந்தவாறு மரியாதைகளை ஏற்றுக் கொண்டான் தைமூர். அதற்குக் காரணம் உண்டு. தைமூருக்கு ஒரு இடத்தில் தொடர்ந்து உட்கார்ந்து பழக்கமில்லை - அது சிம்மாசனமாக இருந்தாலும் சரி! நாடோடி மன்னனாக அலைபாய்ந்துகொண்டிருந்த அவனுக்குத் திறந்தவெளிதான் பிடித்தமான சூழ்நிலை. ‘அரண்மனையை’ ஒட்டகங் களின் மீது சுருட்டி வைத்துக் கட்டி, எங்கு சென்றாலும் தன்கூடவே எடுத்துச் செல்லும் வழக்கமுடையவன் தைமூர். கூடாரங்கள்தான் அவன் அரண்மனை! ஆகவே, ‘காலில் விழும் வைபவம்’ முடிந்த கையோடு தைமூர் செய்த முதல் காரியம் - அரண்மனைக்கு வெளியே வந்து கூடாரங்கள் அமைத்துத் திறந்த வெளியில் தங்கியதுதான்! சற்று ஓய்வெடுத்துக்கொண்டு பிற்பகல் தொழுகைக்காக குவ்வாத்-அல்-இஸ்லாம் மசூதிக்கு தன் பரிவாரங்களுடன் சென்றான் தைமூர். (டெல்லிக்கு அருகே புகழ்பெற்ற குதுப்மினாரை ஒட்டி குத்புதீன் அய்பெக் கி.பி.1193-ல் கட்டிய பிரமாண்டமான மசூதி அது. இந்தியாவில் கட்டப்பட்ட முதல் பெரும் மசூதி இதுதான் என்று சொல்லப் படுகிறது. சிதிலமடைந்த அந்த மசூதியின் வாயிலை இன்றும் நாம் காணலாம்.)

தொழுகை முடிந்தவுடன் குதுப் மினாரையும் மசூதியையும் சுற்றிப் பார்த்த தைமூர், “இந்த இந்தியக் கலைஞர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. கட்டடங்களை ஆரம்பிக்கும்போது விஸ்வரூபம் எடுக் கிறார்கள். கடைசியில் பொற்கொல்லர் களைப் போல நுணுக்கமான வேலைப் பாடுகளுடன் முடிக்கிறார்களே!” என்று வியந்தானாம்.

பிறகு குதுப்மினார் (முதல் மாடி வரை) கட்டிய குத்புதீனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த சுல்தான் ஷாம்சுதீன் இல்தூத்மிஷ் மற்றும் அலாவுதீன் கில்ஜியின் கல்லறைகளுக்குச் சென்று மரியாதை செலுத்தி விட்டு டெல்லி நகர் திரும்பினான் தைமூர். விருந்தும் மற்ற கேளிக்கைகளும் தயாராக இருந்தன. ஒயின் கோப்பைகள் உருண்டன. ஒரு கோப்பை ஒயினை உள்ளே தள்ளிய தைமூர் ஆர்வத்துடன் கேட்ட கேள்வி “யானைகள் எங்கே?”



தைமூரின் கல்லறை - சாமர்கண்ட்

தளபதிகள் சொல்லியனுப்ப, தைமூர் படை காயப்படுத்தாமல் கைப்பற்றியிருந்த நூற்று இருபது யானைகள் வரிசையாக வந்து மண்டியிட்டுத் தும்பிக்கையை உயர்த்தி தைமூருக்கு 'சலாம்' செய்தன. குஷியானான் தைமூர். "இந்த மிருகங்களை ஜாக்கிரதையாகச் சங்கிலியால் பிணைத்து வையுங்கள். இவை என்னுடன் ஊருக்கு வரப்போகின்றன!" என்று ஆணையிட்டான். பிறகு டெல்லி சுல்தான் வளர்த்த (அஸ்ஸாம் காடுகளில் பிடிக்கப்பட்ட) காண்டாமிருகங்களை வரிசையாக அழைத்துவந்தார்கள். யானை களைப் போல தைமூரைக் கவர எதுவும் செய்யாமல் 'தேமே'யென்று வந்து போன காண்டாமிருகங்கள் மீது தைமூர் அதிகமாக நாட்டம் செலுத்தவில்லை.

இதெல்லாம் ஒருபுறம் நடந்தேற, இன்னொருபுறம் சிறைப்படுத்தப்பட்ட பெரிய மனிதர்களின் பெயர், பதவிகளை லிஸ்ட் எடுத்து அவர்கள் தத்தம் உயிருக்காகத் தர வேண்டிய பணயத் தொகையையும் தைமூரின் நிதியமைச்சர்கள் புத்தகங்களில் குறித்தார்கள்.

பிறகுதான் மறுபடியும் பயங்கரம்..!

உண்மையில் என்ன நடந்தது என்று யாராலும் சொல்ல முடியவில்லை. ஆனால், டெல்லியின் கெட்ட காலம் - தைமூர் காதில்

வந்து விழுந்த ஒரு தகவல் அவன் கண்களைச் சிவப்பாக்கியது! எழுந்து நின்ற தைமூர், "டெல்லியைத் தரைமட்டமாக்குங்கள்" என்று கர்ஜித்தான்.

'டெல்லியின் எல்லையில், மக்கள் யாரும் தப்பிச் செல்லாமல் இருக்கக் காவல் போட்டிருந்தான் தைமூர். அவன் காலில் விழுந்து பணிந்த சில செல்வந்தர்கள், தங்கள் பொக்கிஷங்களோடு கூட்டமாக டெல்லியில் இருந்து குதிரைகளில் ஏறித் தப்பிக்க முயன்றதாகவும் தடுக்கப் பார்த்த தைமூரின் வீரர்கள் சிலர் கொல்லப் பட்டதாகவும் தகவல் வரவேதான் தைமூரின் கோபம் உச்சத்துக்குப் போய்விட்டது' என்று சில ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

எது எப்படியோ, அடுத்த பத்து நாட்கள் தைமூரின் படை டெல்லியில் நடத்திய வெறியாட்டத்துக்கு இணையாக சரித்திரத்தில் மிகச் சில நிகழ்ச்சிகளையே குறிப்பிட முடியும். அவன் ஆணை பிறப்பித்த சில மணி நேரத்தில் டெல்லியில் திரும்பிய பக்கமெல்லாம் வெட்டுப்பட்ட உடல்கள் குவிந்தன. சாமானியன் வீட்டிலிருந்து சகல வசதிகளும் கொண்ட மாளிகை வரை எதையும் தைமூரின் வீரர்கள் விட்டு வைக்க வில்லை. ஆசைதீரச் சூறையாடிவிட்டுத் தீ வைத்தார்கள். டெல்லியில் அந்தக் கொடுங்கோலனின் படையினர் வெட்டிச் சாய்த்தவர்களின் எண்ணிக்கை மூன்று லட்சம் பேர் (ஒரு லட்சத்திலிருந்து ஐந்து லட்சம் வரை கணிப்புகள் வேறுபடுகின்றன!). எங்கு பார்த்தாலும் தீச்சுவாலைகள் பேயாட்டம் போட, பிரமாண்டமாகச் சூழ்ந்த புகை மண்டலத்தில் டெல்லி மாநகர் சுடுகாடாக மாறியது...

ஊருக்கு வெளியே கூடாரத்தில் அமர்ந்து தொடர்ந்து ஒயின் குடித்துக்கொண்டிருந்தான் தைமூர். அப்போது உள்ளே வந்த ஒரு தளபதி, "இந்தியர்களுடைய தங்க ஆபரணங்களைக் கைப்பற்ற வீட்டுக்குள் புகுந்து தேடி அலைய வேண்டிய அவசியமே இல்லை. இந்த நாட்டில் வேலைக்காரப் பெண்கள்கூடத் தங்க நகைகள் அணிந்து கொண்டுதான் நடைபோடுகிறார்கள்!" என்று தலைவனிடம் தகவல் சொல்லிவிட்டு ஆர்வத்துடன் திரும்பி ஓடினான்.

இடைவேளைகூட விடாமல் பத்து நாட்கள் தைமூரின் வீரர்கள் தங்கள் கத்திகளை ரத்தத்தில் நனைத்த பிறகு ஒருவழியாக ஓய்ந்தார்கள். தொடர்ந்து, தைமூரின்முன் ஆயிரக்கணக்கான கைதிகள் கொண்டுவந்து நிறுத்தப்பட்டனர். அவர்களை உணர்ச்சியில்லாமல் பார்வையிட்ட தைமூர், "இவர்களிலிருந்து சிற்பிகளையும் ஓவியர் களையும் கட்டடக் கலைஞர்களையும் தனியாகத் தேர்ந்தெடுத்து அப்புறப்படுத்துங்கள். நாம் கைப்பற்றிய யானைகளுடன் அவர்களும் நம் ஊருக்குக் கொண்டு செல்லப்படுவார்கள். எதற்கும் உபயோகமில்லாத மற்றவர்கள் தலைகள் வழக்கம்போல சீவப்படலாம்!" என்று உறுமினான்.

யானைகள் மீதும் ஒட்டகங்கள் மீதும் ஏற்றப்பட்ட பொக்கிஷத்தோடு தைமூரின் படை டெல்லியைவிட்டுக் கிளம்பியது. பறவையின் வேகத்தில் உள்ளே நுழைந்த அதே படை இப்போது டெல்லியில் சூறையாடப்பட்ட விலையுயர்ந்த பொருட்களின் எடை தாங்காமல் நத்தையாக ஊர்ந்ததாகக் கேள்வி!

'தைமூர் வெளியேறிய பிறகு இரண்டு மாதங்களுக்கு டெல்லியில் யாருமே நடமாட வில்லை. துண்டம் துண்டமாகக் கிடந்த உடல்களை அப்புறப்படுத்தக்கூட ஆள் இல்லாமல் ஊரே நாறிப்போனது. தொலை தூரத்திலிருந்து பார்த்தால், ஆயிரக் கணக்கில் வல்லூறுகளும்

காகங்களும் வட்டமடித்துக் கொண்டு இருந்தது தெரிந்தது. இரவு நேரத்தில் நரிகளின் ஊளையும் கழுதைப் புலிகளின் வெறிச் சிரிப்பும் காற்றில் மிதந்து வந்தன' என்று சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

போகிற வழியில் யமுனை நதியைக் கடந்து மீரட் நகரைச் சூறையாடிவிட்டு அதைத் தொடர்ந்து லாகூர் நகரிலும் முழு ஆவேசத்துடன் தன் கைவரிசையைக் காட்டிவிட்டு, சிந்து நதியை மீண்டும் கடந்து சாமர்கண்டுக்குத் திரும்பினான் தைமூர். சாமர்கண்ட் நகரில் காடுகளிலும் நடை பாதைகளிலும் கூடாரங்கள் போட்டு, இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கலைஞர்கள் தங்க வைக்கப்பட்டார்கள்.

கொடூரத்துக்கு நடுவே புன்னகை வரவழைக்கும் காரியம் ஒன்றையும் தைமூர் செய்தான். இந்தியாவிலிருந்து வந்த அத்தனை யானைகளுக்கும் பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சள் என்று உடல் முழுக்க வண்ணம் பூசி, வரிசையாகத் தான் தங்கியிருந்த இடத்துக்கு வெளியே காவலுக்கு நிறுத்திக் கொண்டான் தைமூர்!

இரண்டு ஆண்டுகள் கழித்து, துருக்கி நாட்டுக்குள் புகுந்து சுல்தான் இரண்டாம் பயேஸியத்தை வெற்றி கண்டான் தைமூர். அங்கும் ஒரு ரத்த ஆறு ஓடியது. சுல்தானை ஒரு இரும்புக் கூண்டில் அடைத்து இழுத்து வந்து சித்ரவதை செய்து சாகடித்தனர் தைமூரின் தளபதிகள்.

'கொலைவெறி பிடித்த கொடுங்கோலர் களின் மரணமும் அநேகமாகக் கொடூரமாகத் தான் இருக்கும்' என்று வாசகர்களின் மனதோரத்தில் ஓர் எதிர்பார்ப்பு இருப்பது இயற்கையே. ஆனால், சரித்திரத்தில் எப்போதும் அப்படி நிகழ்ந்துவிடுவதில்லை. சீனாவைக் கைப்பற்றத் திட்டங்கள் தீட்டிக் கொண்டிருந்த தைமூர், சில நாட்கள் நோய்வாய்ப்பட்டு ஜனவரி 1405-ல் படுக்கையில் வீழ்ந்து பல சாமானியர்களைப் போலவே 'பொட்'டென்று உயிரை விட்டது ஆன்ட்டி க்ளைமாக்ஸ்தான்!

இந்தியாவிலிருந்து அழைத்துச் செல்லப் பட்ட இந்தியக் கட்டடக் கலைஞர்களைக் கொண்டு சாமர்கண்ட் நகரில் தைமூரின் கல்லறை கட்டப்பட்டது. அங்கு சென்று தங்கிய சில மாதங்களில் துருக்கிய, பெர்ஷிய கலை நுணுக்கத்தைக் கற்று தேர்ந்த இந்தியக் கலைஞர்கள், 'குர் அமிர்' என்கிற ஒரு அற்புதமான கல்லறையைக் (கட்டாயத்தின் பேரில்தான்!) கட்டிமுடித்தார்கள். அந்தக் கச்சிதமான கல்லறை ஓர் ஆரம்பம்தான்...

இப்படிப் பிரமிப்பூட்டும் கட்டடங்களையும் கல்லறைகளையும் கட்டும் பழக்கம் தொடரப் போகிறது - பிற்பாடு தைமூர் வழிவந்த மொகலாயர்களினால் - இந்தியாவில்..!

2

முகமது கோரி..

வாளேந்தினான் பிருத்விராஜ்!

டெல்லி...!

இந்தியாவின் நெற்றிப் பகுதியை வசீகரமாக அலங்கரிக்கும் இந்த மங்கலப்பொட்டை அழிக்கப் பார்த்த வேற்று நாட்டவர்கள்தான் எத்தனை பேர்! அதற்காக எத்தனை எத்தனை முயற்சிகள்...!

உலக சரித்திரத்தில் எத்தனையோ நகரங்கள் சுவடில்லாமல் மடிந்து மண்ணுக்குள் புதைந்து போயிருக்கின்றன. ஆனால், டெல்லியின் கதை வேறு. எந்தச் சக்தியாலும் இந்த நகரத்தை நிரந்தரமாக வீழ்த்த முடியவில்லை - வரலாற்றுப் பக்கங்களிலிருந்து அகற்றவும் முடியவில்லை! மீண்டும் மீண்டும் ஃபீனிக்ஸ் பறவையாக உயிர்பெற்று சிலிர்த்தெழுந்து நின்றது டெல்லி!

ஆனால், கம்பீரமான இந்த மாநகரம் வரலாற்றுப் போக்கில் வாங்கிய கத்திக் குத்துகளும் தாங்கிய சோதனைகளும் நம்மைத் திகைக்க வைக்கின்றன...

முதலில்...

பாபர் நிறுவிய மொகலாய சாம்ராஜ்யத்துக்குள் நாம் பஸ் ஏறிப் பயணம் செய்வதற்குமுன் ஒரு ‘ஃப்ளாஷ்பேக்’ ராக்கெட்டில் ஏறிப் பின்னோக்கி வேகமாகப் பயணிப்போம். அந்தக் கால டெல்லியைப் பற்றிச் சற்று உணர்ச்சிபூர்வமாகப் புரிந்து கொள்ள இந்த வேகப் பயணம் உதவும்...

ஆகாயத்திலிருந்து ஒன்றும் ‘திடுதிப்’பென்று குதித்த நகரமல்ல டெல்லி! என்றோ முன்னாளில் டெல்லியும் ஒரு பொட்டல்காடாகத்தான் இருந்திருக்க வேண்டும். அப்போதைய வரலாற்றுக் குறிப்புகள் இன்று ஏதும் இல்லை. மகாபாரதத்தில் டெல்லியைப் பற்றி வருகிறது - இந்திரப்பிரஸ்தா’ என்ற பெயரில் பாண்டவர்கள் யமுனை நதிக்கரையில் உருவாக்கிய ஊர் அது என்று. டெல்லியருகே சில ஆண்டுகளுக்குமுன் தோண்டி எடுக்கப்பட்ட பொருட்கள், கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டு

பிடித்துள்ளனர். பாண்டவர்கள் ஆட்சிக்குப் பிறகு டெல்லியில் என்ன நடந்தது என்று தெரியவில்லை. கி.மு.-ல் வந்த மெகஸ்தனீஸ், ஹுவான்சுவாங் போன்ற புகழ்பெற்ற வேற்றுநாட்டுப் பயணிகள்கூட டெல்லியைப் பற்றி ஏதும் தாங்கள் எழுதிய விவரங்களில் குறிப்பிடவில்லை.



தூண் உச்சியில் கருடன் சிலை இருந்தது!

முறையாக எழுதப்பட்ட வரலாற்றின்படி கி.பி.736-ல் டெல்லியை ஒரு ஊராக உருவாக்கி உருப்படியாக உட்கார்ந்து ஆட்சிபுரிந்தவர்கள் தோமார் என்று அழைக்கப்பட்ட ராஜபுத்திரர்கள்தான். அப்போது அந்த ஊருக்கு வைக்கப்பட்ட பெயர் தில்லிகா. ஆரம்பத்தில் (தற்போதைய) ஹரியானா பகுதியில் வாழ்ந்து வளர்ந்த இந்த ராஜபுத்திர வம்சத்தின் புகழ்பெற்ற மன்னன் ஆனங்பால். இன்று குதுப்மினார் உள்ள பகுதியில்தான் லால்கோட் (சிவப்புக் கோட்டை) என்று வரலாற்றில் குறிப்பிடப் படும் பெரும் கோட்டையை ஆனங்பால் கட்டினான். அந்தக் கோட்டைக்குள் நுழைய ஒன்றுக்கு மேற்பட்ட வாயில்கள் இருந்தன. பிரதான வாயிலில் இருபுறமும் கல்லில் செதுக்கப்பட்ட பெரிய சிங்க பொம்மைகள் ‘காவல்’ புரிந்தன! பிரச்னைகளுடன் வரும் மக்கள், மன்னனின் உதவியை நேரடியாக நாட வசதியாக வாயிலில் பெரும் மணி ஒன்றும், அதில் ஒலியெழுப்ப நீண்ட கயிறும் இருந்தன. கோட்டைக்குள் மையத்தில், படமெடுக்கும் நாகப்பாம்பின் சிலையைப் பெரும் பீடமாக்கி (இந்துக்களின் புராணப் படி பூமியை ஆதிசேஷன் தாங்குவதால்...!) அதனமேல் வானுயர்ந்த ஸ்தூபி ஒன்றையும் கட்டினான் ஆனங்பால் மன்னன்.

இன்று... மூன்று மீட்டர் அகல வெளிக் கோட்டைச் சுவரின் சிதிலமான பகுதி களையும் ஓரிரு சிதைந்த வாசல்களையும் தான் நம்மால் காண முடிகிறது. குதுப்மினார் உள்ள பகுதிக்குள் தற்போது

காணப்படும் இரும்புத்தூண், ஆனங்பால் நிறுவிய ஸ்தூபி அல்ல. நான்காம் நூற்றாண்டில் உருவாக்கப் பட்ட இந்த இரும்புத்தூணின் பின்னணி வேறு. 99.72 சதவிகிதம் சுத்த இரும்பினால் உருவாக்கப்பட்ட இந்த ஸ்தூபி, சுமார் 1600 ஆண்டுகளாகத் துருப்பிடிக்காதது ஒரு அதிசயம்! கி.பி.385-லிருந்து 415 வரை வட இந்தியாவை நெடுக ஆண்ட இரண்டாம் சந்திரகுப்தர் நினைவாக அமைக்கப்பட்ட ஸ்தூபி இது என்றும், அதன் உச்சியில் விஷ்ணுவின் வாகனமாகிய கருடனின் சிலை ஒன்று முன்பு இருந்தது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். வேறு ஊரிலிருந்து பிற்பாடு குதுப்மினார் பகுதிக்கு இந்தத் தூண் கொண்டுவரப்பட்டது. கருடன் சிலை போன இடம் யாருக்கும் தெரிய வில்லை!

தோமார்கள் ஆட்சியமைத்து சுமார் முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு சௌகான் ராஜபுத்திரர்கள், தோமார் ராஜபுத்திரர்களை வென்று டெல்லியைக் கைப்பற்றினார்கள். இந்த வம்சத்தில் கடைசியாக வந்த புகழ் பெற்ற மன்னன்தான் ‘சம்யுக்தை’ புகழ் (மூன்றாம்) பிருத்விராஜ்.

கன்னோசி நாட்டு மன்னன் ஜெயச் சந்திரனின் மகள் சம்யுக்தையை அவன் காதலித்ததும், அவளுடைய சுயம்வரத்துக்குத் தன் எதிரியான பிருத்விராஜுக்கு ஜெயச் சந்திரன் அழைப்பு அனுப்பாமல் அலட்சியம் காட்டியதும், சுயம்வர வாயிலில் பிருத்விராஜ் போன்று ஒரு சிலையைச் செய்து வாயிற் காப்போன் போல அதை நிற்கவைத்ததும் நமக்குத் தெரிந்த விஷயம்! இது கேள்விப்பட்ட பிருத்விராஜ், புயலாகப் புரவியில் பாய்ந்து சம்யுக்தையைக் கடத்திச் சென்றது (அவள் ‘ஓகே’ சொன்ன பிறகுதான்!) பள்ளி மாணவர்களுக்கும் தெரிந்த உணர்ச்சியூட்டும் காதல் வரலாறு!

சுமார் கி.பி.1000-லிருந்தே மங்கோலி யர்களும் துருக்கியர்களும் இரானியர்களும் ஆப்கானியர்களும் இந்திய எல்லையில் தொல்லை கொடுக்க ஆரம்பித்துவிட்டதால், மன்னன் பிருத்விராஜ் தன் கோட்டையை ஏற்கெனவே மேலும் பலப்படுத்தியிருந்தான். கோட்டையின் சில பகுதிகளில் புதிதாகத் தற்காப்புச் சுவர்கள் எழுப்பினான். இருப்பினும் பிருத்விராஜ் மன்னனின் ஆட்சியும், காதல் வாழ்க்கையும் நெடுநாள் நிலைக்கவில்லை. லட்சியக் காதலர்கள் வெற்றிகரமாகத் திருமணம் செய்துகொண்டு விட்டது கண்டு பொறுக்காமலோ என்னவோ, விதி வில்லனுக்கு உதவியது. ஆப்கானிஸ்தானில் இருந்து படையோடு வந்துசேர்ந்த வில்லன் முகமது கோரிக்குச் சம்யுக்தை என்ற பெண் தேவைப்படவில்லை. அவன் விரும்பியது இந்திய மண் - குறிப்பாக டெல்லி!

‘மாற்றானிடம் மண்டியிடக்கூடாது’ என்று வீர முழக்கம் செய்த பிருத்விராஜ், தனியாகப் பிரிந்து நின்ற ராஜபுத்திரக் குறுநில மன்னர்களை மிகக் குறுகிய காலத்துக்குள் ஒன்றுசேர்த்தான். கோரியை எதிர்கொள்ள ராஜபுத்திரப்படை ஓங்கிய வாட்களுடன் தயாரானது.

1191-ம் ஆண்டு கடைசியில், டெல்லி அருகே நடந்த யுத்தத்தில் ராஜபுத்திரர்களின் படையின் வீரத்துக்கும் ஆவேசத்துக்கும் முன் தடுமாறித் தோற்று ஓடியது ஆப்கான் படை.

இந்தத் தோல்வியைச் சற்றும் எதிர் பார்க்காத முகமது கோரி கோபத்தில் கொந்தளித்தான். சில மாதங்களுக்குள் மேலும் ஒரு பெரும்படையுடன் பஞ்சாப் மாநிலத்தைக் கடந்து டெல்லியை நோக்கி முன்னேறினான். இந்த முறை, புதிதாக, 10,000 வில்லேந்திய முரட்டுத்தனமான ஆப்கான் குதிரை வீரர்கள், கோரியின் படையில்

சேர்த்துக்கொள்ளப்பட்டு இருந்தார்கள்.

மறுபடியும் யுத்தம்... வருவதோ, பலம் கூட்டப்பட்ட பெரும்படை... பிருத்வி ராஜுக்கு ஒரு முக்கிய இடத்திலிருந்து மட்டும் உதவி கிட்டியிருந்தால் இந்திய வரலாறு மாறியிருக்கும்தான்! தன் மகளை 'இழந்த' அவமானத்தால் இன்னமும் மறுகிக் கொண்டிருந்தான் கன்னோசி மன்னன் ஜெயச்சந்திரன். செல்வாக்கும் படைபலமும் கொண்ட மாமனாரின் உதவி மருமகனுக்குக் கிட்டவில்லை. மருமகனும் உதவி கோர வில்லை. விளைவு - வில்லனுக்குச் சாதகமாகப்போனது!

1192-ல் நடந்த இரண்டாவது யுத்தத்தில் ஆப்கானியப் பெரும்படையின் குள்ளநரித் தனமான கொரில்லாத் தாக்குதலுக்கு முன் நேரடிப் போர் புரிந்த ராஜபுத்திரர்களின் படை களைத்துப் போனது. கடைசிவரை வாளைச் சுழற்றி எதிரிகளை வீழ்த்திய பிருத்விராஜை, ஏராளமான எதிரிகள் சூழ்ந்துகொண்டு சிறைப்படுத்தினார்கள். விலங்கிட்டு ஆப்கான் சுல்தானின்முன் நிறுத்தினார்கள். 'முதல் யுத்தத்தில் நம்மை மண் கவ்வ வைத்த அந்த ஆபத்தான வீரன் இவன்தானா?' என்ற நினைப்பு பகீரென மனதில் ஊடுருவியதோ என்னவோ... முகமது கோரி ஆணையிட, கம்பீரமாக நின்ற அந்த நிராயுதபாணியான ராஜபுத்திர வீரனின் தலை இரக்கமேயில்லாமல் உடனடியாக வெட்டி வீழ்த்தப்பட்டது.

ஆம், ரத்தச்சேற்றில் கிடந்த ஆயிரக் கணக்கான ராஜபுத்திர மாவீரர்களின் உயிரற்ற உடல்களைத் தாண்டித்தான் முகமது கோரியின் படை டெல்லிக்குள் வெற்றிப் பிரவேசம் செய்ய முடிந்தது!

அரண்மனைக்குள் பிரவேசித்த அந்த அந்நிய நாட்டு மன்னன் திகைத்துப் போனான். அங்கே ராணி சம்யுக்தையும் நூற்றுக்கணக்கான ராஜபுத்திரப் பெண்களும் தீக்குளித்து, தங்கள் மறைந்த கணவர்களுடன் ஏற்கெனவே வீர சொர்க்கம் புகுந்து இருந்தார்கள். கன்னோசி மன்னன் ஜெயச் சந்திரனையும் முகமது கோரி விட்டுவைக்க வில்லை. கன்னோசி தரைமட்டமாக்கப் பட்டது. ஜெயச்சந்திரனும் கொல்லப் பட்டான். "என்னதான் மனஸ்தாபம் இருந்திருந்தாலும் மருமகனின் உதவிக்கே போகாத இந்தத் துரோகி இன்னும் ஆபத்தானவன்... தீர்த்துக் கட்டுங்கள் இவனை!" என்று ஆப்கான் மன்னன் குற்றம் சாட்டிவிட்டுக் கொன்றானா என்று தெரிய வில்லை!

சில நிமிடங்கள் நாம் சிந்திக்க வேண்டி யிருக்கிறது.

இந்திய வீரர்களுக்கு என்ன குறைச்சல்? முன்னேறிய நாகரிகம், மதிநுட்பம் வாய்ந்த அமைச்சர்கள், படைபலம், முறையான போர்த்திட்டம்... எல்லாம் இருந்தும் ஏன் அந்நியப் படையெடுப்பின்போதெல்லாம் வெற்றிகளைவிடத் தோல்விகளை இந்தியர்கள் தழுவ நேர்ந்தது?

சரித்திர ஆராய்ச்சியாளர்கள் இதற்குச் சுவையான, பரிதாபமான பல காரணங் களைக் கூறுகிறார்கள்...

3

முகமது கஜினி..

சோமநாதர் கோயிலும் முகமது கஜினியும்...

முகமது கோரியைக்கூட நாம் ஏற்றுக்கொள்ளலாம். வில்லனாக வந்தாலும் இந்தியாவைத் தன் சாம்ராஜ்யத்தின்கீழ் கொண்டுவர வேண்டும் என்ற அரசர்களுக்கே உரிய நியாயமான ஆசை அவனுக்கு இருந்தது. ஆனால், அவனுக்கு முன் இந்தியாவுக்கு வந்த முகமது கஜினியின் கதை வேறு. கோரியோடு ஒப்பிட்டால் கஜினி அதீத வெறிபிடித்த ஒரு சூப்பர் வில்லனாகவே வரலாற்றில் காட்சி தருகிறான்.

இங்கே பரீட்சையில் பல முறை தோல்வியடையும் மாணவரை கஜினி முகமதுவுடன் நாம் தமாஷாக ஒப்பிடுகிறோம். உண்மையில் கஜினி தொடர்ந்து தோல்வி யடைந்ததால் மறுபடி மறுபடி இந்தியாவுக்கு வரவில்லை. அநேகமாக அவனுடைய பதினேழு படையெடுப்புகளுமே வெற்றிதான்!

ஆப்கானிஸ்தானில் காபூலுக்குத் தெற்கே உள்ள நகரம் கஜினி. கி.பி.977-ல் மத்திய ஆசியாவைச் சேர்ந்த ஒரு துருக்கியப் பிரபு (ஆரம்பத்தில் அவர் ஒரு துருக்கிய அடிமையாக இருந்ததாகவும் சிலர் கூறுகிறார்கள்) கஜினியைத் தலைநகராக்கி செல்வாக்குடன் ஆட்சிபுரிந்தார். அவருடைய மகன்தான் கஜினி முகமது. கி.பி.998-ல் தந்தை இறந்த பிறகு அரியணையில் கஜினி முகமது அமர்ந்தபோது அவனுக்கு வயது இருபத்தேழு.

இரண்டு ஆண்டுகள் கழித்துப் பிறந்த புதிய நூற்றாண்டு தங்களைப் பொறுத்தவரை பெரும் தலைவலியோடு ஆரம்பிக்கப் போகிறது என்பதை வட இந்தியாவை ஆண்ட மன்னர்கள் சற்றும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். கி.பி.1000-ல் ஆரம்பித்தது இந்தியாவை நோக்கி கஜினியின் முதல் படையெடுப்பு.

ஏன் அப்போது எல்லோருக்குமே முதல் இலக்கு இந்தியா? - காரணம் உண்டு...

மத்திய ஆசியாவிலும் சரி, ஆப்கானிஸ்தானிலும் சரி, அரேபியாவிலும் சரி - மன்னர்கள் மகுடம் சூட்டிக் கொண்டதும் அவர்கள் கேட்டு மலைத்த கதைகள் இந்தியாவைப் பற்றித்தான். இந்திய மண்ணில் விண்ணை முட்டும் கோயில்கள், கட்டி முடிக்கப்பட்ட மாளிகைகள், கொட்டிக் கிடக்கும் ஆபரணங்கள் - இவை பற்றிப் பலர் விளக்கமாக விவரிக்க, வெறிச்சோடிய பாலைவனத்தையும்

கரடுமுரடான மலைத் தொடர்களையும் சூழ்நிலையாகக் கொண்டு ஆட்சி புரிந்த அம்மன்னர்கள் கண்களில் ஆர்வம் பொங்கியெழுந்ததில் ஆச்சரியமில்லை!

மாபெரும் குதிரைப் படையோடு கால தாமதம் செய்யாமல் கைபர் கணவாய் வழியாக இந்தியாவுக்குள் நுழைந்தான் கஜினி முகமது. சிந்து நதியைக் கடந்து பஞ்சாப் பீடபூமியில் அவன் படை புகுந்த போது அதை மடக்கி நின்று எதிர்கொண்டது பஞ்சாப் மன்னன் ஜெயபாலனின் படை.

ஜெயபாலன் பிராமண குலத்தைச் சேர்ந்த மன்னன்! ஒன்பதாம் நூற்றாண்டில் காபூல் சமவெளியையும் காந்தாரத்தையும் ஆண்ட ஷாகியா மன்னர் ஒருவரிடம் இந்த ஜெயபாலனின் கொள்ளுத் தாத்தா (அல்லது எள்ளு) அமைச்சராக இருந்தார். அமைச்சராக இருந்ததோடு அமைதியாக உட்காராத அவர், அரசையும் கைப்பற்றினார். அவரது வழிவந்தவர்கள் பிற்பாடு ஆப்கானிய, அரபுப் படைகளின் அதிரடித் தாக்குதல்களைத் தாங்காமல் பஞ்சாப் மாநிலத்துக்கு ஆட்சியை நகர்த்திக் கொண்டார்கள். பஞ்சாபில் உறுதியாக ஆட்சி செய்ய அமர்ந்தவுடன், எடுத்த எடுப்பிலேயே முகமது கஜினியின் அதிரடிப் படையோடு மோத நேர்ந்தது மன்னன் ஜெயபாலனின் போதாத காலமே!

அசுரத்தனமும் அதிபுத்திசாலித்தனமும் கலந்து போரிட்ட ஆப்கான் படையிடம் ஜெயபாலன் வீரர்களின் வீரம் எடுபட வில்லை. முதல் போரிலேயே பெரும் வெற்றி அடைந்தது கஜினியின் படை. வெற்றியைத் தொடர்ந்து வெறியாட்டத்தில் இறங்கினார்கள் ஆப்கான் படையினர். பஞ்சாப் பூமியில் அவர்கள் கொள்ளையடித்த செல்வத்தை அள்ளிக்கொண்டு ஒட்டகங்கள் மீது ஏற்றி வைப்பதில் ஆயிரமாயிரம் ஆப்கான் வீரர்கள் பல மணி நேரம் செலவிட்டார்கள். வந்த வேகத்தில் ஊர் திரும்பினார்கள். ஒவ்வொரு முறையும் இதே கதை... இதே

கொள்ளை... கொலைகள்... பிறகு ஊர் திரும்பல்!

கஜினி முகமதுவுக்கு இந்தியா மிகவும் பிடித்துப் போய்விட்டது. கி.பி.1000-ல் ஆரம்பித்து அநேகமாக ஆண்டுக்கொருமுறை இந்தியாவின் மீது படையெடுப்பதை ஒரு பிரத்யேக திருவிழாவாகக் கொண்டாடினான் கஜினி. ஒரு ஓநாயின் வாயில் சிக்கிக் குதறப் பட்ட மான் குட்டிகளைப் போல சௌராஷ்டிரம், கன்னோசி, மதுரா, தானேஸ்வர் என்று ஒவ்வொன்றாக கஜினி படையின் வாள் வீச்சில் ரத்தம் பூசிக் கொண்டது. இந்தியாவில் முல்தான் பிரதேசத்தை ஆண்ட சுல்தான் தாவூத் என்னும் இஸ்மாயிலி பிரிவைச் சேர்ந்த சுல்தானையும் கஜினி விட்டு வைக்கவில்லை. கொள்ளை என்று இறங்கிய பிறகு எதிரி எவனாக இருந்தால் என்ன? - தாவூதை வெட்டிச் சாய்த்து முல்தான் தலைநகரைத் தரைமட்டமாக்கினான் முகமது கஜினி.

கஜினிக்கு இன்னொரு விசித்திரமான கொடூரமான பழக்கம் இருந்தது. அவன் வெற்றிகொண்ட மன்னர்களின் கைவிரல்கள் அத்தனையையும் வெட்டி எடுத்துக்கொண்டு திரும்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். இப்படி அவன் ஏதோ தபால் தலைகளைப் போலச் சேகரித்த விரல்கள் ஆயிரக் கணக்கில்.

இந்தியாவில் ஒவ்வொரு முறை புகுந்து வெற்றிக்கொடி நாட்டிய மறுகணம் ஆப்கான் படை குறிவைத்துக் குதூகலத்துடன் கிளம்பியது இந்துக்களின் கோயில்களை நோக்கித்தான். “மாதக்கணக்கில் நம் வீரர்கள் அலைந்து திரிந்து சேகரிக்க வேண்டிய செல்வம் அனைத்தையும் ஒரே பாய்ச்சலில் அள்ளிக்கொண்டு வர வேண்டுமா? அரண்மனைகள்கூட அவசரமில்லை. நேரத்தை வீணாக்காமல் முதலில் கோயில் களின் பக்கம் நம் படையைத் திருப்புங்கள். அங்கு நம்மை வழிமறிக்க அகழிகள், அரண், ஆட்படை எதையும் இந்தியர்கள் வைத்திருப்பதில்லை” என்று முன்கூட்டியே கஜினிக்கு இந்தியாவைப் பற்றி ஒற்றர்கள் விவரித்திருந்தர்கள்...

குறிப்பாக சோமசுந்தர் கோயிலுக்கு நேர்ந்த அனுபவம் - ஓர் உச்சக்கட்ட பயங்கரம்!

டிசம்பர் 1025 - பதினேழாவது முறையாக, புழுதி பறக்க ராஜஸ்தான் பாலைவனத்தைப் புயலாகக் கடந்து குஜராத்தின் தென் கோடியில் உள்ள சோமநாத் ஊருக்குள் அலையென கஜினியின் படை புகுந்தது. அங்கு கடற்கரையோரம் இருந்த, சோமநாதர் என்று வழிபடப்பட்ட சிவன் கோயில் - நாடெங்கும் புகழ்பெற்றது. கர்ப்பக்கிருகத்தில் காட்சி தந்த சிவலிங்கத்தை, கோயில் கட்டிய வல்லுநர்கள் அந்தரத்தில் மிதக்கும்படி அமைந்திருந்தது ஓர் அதிசயம்! சோமநாதர் ஆலயச் சொத்தில் பத்தாயிரம் கிராமங்கள் அடக்கம் என்றால் கோயிலில் கொழித்த செல்வச் செழிப்பைப் பற்றிப் புரிந்து கொள்ளலாம்.

இதுதவிர, மன்னர்களும் செல்வந்தர்களும் பக்தர்களும் காணிக்கையாக அளித்த செல்வம் ஒரு சிறுமலையாகக் குவிந்திருந்தது. கூடவே, அரசர்கள் காணிக்கையாகச் செலுத்திய நூற்றுக்கணக்கான தங்க விக்கிரகங்கள்... அவற்றை அலங்கரிக்க வைரங்கள், வைடூரியங்கள், முத்துக்கள் பதித்த அற்புதமான ஆபரணங்கள்... இன்னொருபுறம் கோயில் கஜானாவில் பெருமலையாக நிரம்பி வழிந்த பொற் காசுகள்..!

ஒவ்வொரு சூரிய கிரகணத்தன்றும் ஒரு லட்சத்துக்கு மேல் இந்துக்கள் கடலில் நீராடி சோமநாதர் கோயில் முன் பக்திப்

பரவசத்துடன் கூடுவது வழக்கம். சோமநாதர் கோயிலில் பூஜைகள் நடத்த நியமிக்கப் பட்டிருந்த அர்ச்சகர்கள் மட்டுமே ஆயிரம் பேர். பூஜை காலங்களில் ஆலயத்தில் நடனமாட ஐந்நூறு அழகிய நாட்டிய மணிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். பாடகர்கள் ஐந்நூறு பேர். ஆலயத்துக்கு வரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தங்கள் முடியைக் காணிக்கையாகச் செலுத்துவதும் வழக்கத்திலிருந்தது. அதற்காக நியமிக்கப்பட்ட நாவிதர்கள் முந்நூறு பேர்!

அவ்வளவு ஏன்? “ஒவ்வொரு நாளும் இரு முறை கடலிலிருந்து ஒரு பெரும் அலை கிளம்பி முன்னேறிச் சற்றுத் தொலைவிலிருந்த சோமநாதர் ஆலயப் படிகட்டுக்களைத் தொட்டு வணங்கித் திரும்பும்” என்று ஊர் மக்களால் வியந்து பேசப்பட்ட திருத்தலம் அது!

தொலைவிலிருந்தே ஜொலித்துக்கொண்டு இருந்த புகழ்வாய்ந்த இந்த ஆலயத்தைத் தன் படையின் முன்னணியில் குதிரை மீது அமர்ந்து பார்வையிட்ட முகமது கஜினியின் கண்களில் ஆர்வமும் அவசரமும் கொப்பளித்தன. “இதுதான் அந்தப் பணக்காரக் கோயிலா?” என்று முணுமுணுத்த அவனது இதயத் துடிப்பு உற்சாகத்துடன் அதிகரித்தது. “முன்னேறுங்கள்!” என்று ஆணையிட்டான் கஜினி. ஏந்திய ஈட்டிகளுடனும் அகலமான வாட்களுடனும் பாய்ந்தது ஆப்கான் படை. சோமநாதர் கோயில் தனக்கு ஒரு ‘திறந்த வீடாக’ இருக்கும் என்றே நினைத்தான் கஜினி. இப்படி வழிமறித்து எதிர்ப்பார்கள் என்று அவன் கனவிலும் நினைத்திருக்க மாட்டான். ஓட்டமெடுப்பதற்குப் பதில் பல்லாயிரக் கணக்கில் ஊர் மக்கள், கோயிலில் பணி புரிபவர்கள், அர்ச்சகர்கள் திரண்டு எழுந்து கூவிக்கொண்டும் அழுதுகொண்டும் கதறிக் கொண்டும் ஓடி வந்தார்கள்.

கையில் கிடைத்ததையெல்லாம் எடுத்துக் கொண்டு கஜினியின் படையை எதிர்த்து நின்றார்கள். சுல்தானின் கண்கள் சிவந்தன. “தடுப்பவர்களின் தலைகளைத் தரையில் உருளச் செய்யுங்கள்” என்று கர்ஜித்தான் கஜினி. ஆப்கான் படை வீரர்களின் ஆயிரக் கணக்கான வாட்கள் சுழலத் தொடங்கின. வெட்டித் தள்ளத் தள்ள மேலும் மேலும் மக்கள் முன்னேறி வந்து வழிமறித்தார்கள்.

அன்று சோமநாதர் ஆலயத்தின் வெளியே துண்டாடப்பட்டு, உயிரற்று வீழ்ந்த ஐம்பது ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களின் உடல்களை, பதறி வந்த கடல் அலைகள் குளிப்பாட்டிச் சிவந்தன. இத்தனை வெறியாட்டத்துக்குப் பிறகு வெற்றிகரமாக ஆலயத்துக்குள் நுழைந்த கஜினி முகமது, ரத்தமயமான அந்தச் சூழ்நிலையிலும் கோயிலின் செல்வச் செழிப்பைக் கண்டு பிரமித்துப் போனான். உன்மத்தம் அடைந்தவர்களைப் போல விக்கிரகம், ஆபரணம் என்று ஒன்று விடாமல் அள்ளி மூட்டை கட்டினார்கள் சுல்தான் வீரர்கள். கர்ப்பக்கிருகத்தில் ஒளிவீசிக்கொண்டு அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்த சிவலிங்கத்தின் மீது கஜினியின் பார்வை திரும்ப... மேலும் பிரமித்தான்! உடனே ஆச்சரியத்துடன் பக்கத்திலிருந்த படை வீரனின் ஈட்டியை வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்தான். ஈட்டியை சிவ லிங்கத்தைச் சுற்றி நாலாபுறமும் சுழற்றிப் பார்த்தான். கஜினியின் கண்களில் இருந்த வியப்பு மெள்ள அகன்றது. வெறி புகுந்தது.

“பலே! சாமர்த்தியமாகத்தான் அமைத்து இருக்கிறார்கள்! மேலே கூரையிலும் பக்கவாட்டிலும் உள்ள அந்தக் கற்களை அகற்றித் தள்ளுங்கள்... இது ஏதோ காந்த சக்தியின் வேலை!” என்று கஜினி ஆணையிட, வீரர்கள் உடனே செயல்பட்டனர். சுற்றிலும் கற்கள்

உடைக்கப்பட்டு அகற்றப்பட்டன. சிவலிங்கம் மெள்ள அசைந்தது. பிறகு கீழே இறங்கி இறங்கி... ‘தொப்’பென்று வீழ்ந்தது. தன் இரு கைகளாலும் அல்க்காக அந்த சிவலிங்கத்தைத் தூக்கி வந்து கோயில்முன் போட்டு உடைத்தான் முகமது கஜினி. படை வீரர்கள் ‘ஹோ’வென்று ஆரவாரிக்க வானமும் சிவந்தது..!

-சோமநாதர் கோயிலில் நடந்தேறிய இத்தனை கொடூரத்தையும் விவரமாக, சற்று வருத்தத்துடன் எழுதியிருப்பவர் அல் காஸ்வினி எனும் அரபு நாட்டுச் சரித்திர ஆராய்ச்சியாளர்.

காரியம் முடிந்த பின் கடைசி முறையாக இந்தியாவை ஒரு நிறைவான பெருமூச்சுடன் திரும்பிப் பார்த்துவிட்டு நாடு திரும்பினான் முகமது கஜினி. சோமநாதர் கோயிலிலிருந்து அவன் கொண்டுபோன தங்கம் மட்டுமே ஆறு டன் எடைக்கு மேல் என்பது குறிப்பிடத் தக்கது!

அல் காஸ்வினி என்றில்லை... பல முஸ்லிம் சரித்திரப் பேராசிரியர்கள் கஜினி முகமது பற்றிக் குறிப்பிடும்போது ‘அவன் தேவை யில்லாமல் வெறியாட்டம் ஆடியதாகவே’ வருந்திக் குறிப்பிடுகிறார்கள். இத்தனைக்கும் சாம்ராஜ்யம் நிறுவும் எண்ணம் எதுவும் கஜினிக்கு இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே, அவன் நிகழ்த்திய கொடுமையை நியாயப்படுத்தக்கூடிய வாதங்களை யாரும் எடுத்து வைக்க முன்வரவில்லை. சுருக்கமாகச் சொல்லப் போனால், முகமது கஜினியை கொலைவெறி பிடித்த ஒரு கொள்ளைக் காரனாகத்தான் நாம் கொள்ள முடியும். இதில் மாறுபட்ட கருத்துக்களுக்கு இடம் இல்லை.

ஆனால், ஒன்று... கொள்ளையடித்த பெரும் செல்வத்தைக் கொண்டு தன் சொந்த ஊரான, கஜினியைச் சிறந்த நகரமாக உருவாக்கச் செலவழித்தான். அருமையானதொரு லைப்ரரியும் மியூஸியமும் மக்களுக்காகக் கட்டித் தந்தான். அவன் அரண்மனையில் கவிஞர்களும் பாடகர்களும் ஓவியர்களும் கூடி, தங்கள் கலைத்திறனை சுல்தான்முன் காட்டி அவனை மகிழ்வித் தார்கள். பிர்தௌஸி, அல்பெரூனி போன்ற புகழ்வாய்ந்த சரித்திர ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்களை அவன் அன்புடன் தன்னோடு வைத்துக் கொண்டிருந்தான். அவர்களும் பெரும் செல்வாக்குடனும் சகல வசதிகளுடனும் வாழ்ந்தார்கள். ஆம்... கஜினிக்கும் ஒரு மறுபக்கம் இருக்கத்தான் செய்தது!

வடமேற்கில் தொடர்ந்து கஜினி முகமது படையெடுத்துக் கொண்டிருந்த அதே நேரத்தில்தான் ஒரு மாவீரன் இந்தியாவின் தெற்குப் பகுதியிலிருந்து ஒரு பெரும் படையுடன் கிளம்பி வடக்கு நோக்கி வந்து சேர்ந்தான். அவனுடைய வீரர்களை யாராலும் எதிர்த்து நிற்க முடியவில்லை. இன்றைய ஹைதராபாத், ஒரிஸ்ஸா, வங்காளம்... எல்லா நாடுகளும் அந்த மன்னன் வீரத்தின்முன் மண்டியிட்டன. கங்கைநதி நீரைக் குடங்களில் நிரப்பி, தான் வெற்றி கண்ட மன்னர்களின் தலை மீது வைத்துத் தன் ஊருக்குத் திரும்பினான் அந்த மன்னன். அந்த மாவீரன்தான் தமிழகத்தை ஆண்ட ராஜேந்திர சோழன்!

இந்தியாவின் வடமேற்கே கஜினி படையெடுத்து வந்திருக்கும் விஷயத்தை நிச்சயம் ஒற்றர்கள் ராஜேந்திர சோழனிடம் சொல்லாமல் இருந்திருக்க மாட்டார்கள். ஆனால், ராஜேந்திர சோழனின் விருப்பம் கப்பற்படையுடன் சென்று மலேயா, சுமத்திராவைக் கைப்பற்ற வேண்டும் என்பதாக இருந்தது.

தென்னாட்டிலிருந்து வந்திருக்கும் ஒரு மாமன்னன் கங்கை வரை வந்து வெற்றிக் கொடி நாட்டிய விஷயம் முகமது கஜினிக்கும்

சொல்லப்பட்டிருக்க வேண்டும். ‘சிந்து நதியைக் கடந்தது போதாதா? கங்கையை வேறு கடந்து, படை பலம் தெரியாமல் யாரோ ஒரு தென்னாட்டு மன்னனுடன் யார் மோதிக் கொண்டிருப்பது? எதற்கு வீண்வம்பு?’ என்று தன் கவனத்தை வட மேற்குப் பகுதிகளிலேயே கஜினி செலுத்தி யிருக்க வேண்டும். கஜினி முகமது, ராஜேந்திர சோழன் - இருவரும் போர்க்களத்தில் நேருக்கு நேர் சந்திக்காமலேயே திரும்பினார்கள் என்கிறது வரலாறு!

ஆப்கானிஸ்தான் திரும்பிய கஜினி முகமது, ஒரு விஷக் காய்ச்சலில் படுத்து 1030-ல் இறந்துபோன செய்தி கேட்ட வட இந்தியா நிம்மதிப் பெருமூச்சு விட்டது என்றே கூறலாம்!

கஜினி, பிறகு கோரி முகமது, பிறகு தைமூர்... இப்படித் தொடர்ந்து இந்தியாவுக்குள் வேற்று நாட்டவர்கள் படையுடன் புகுந்தும் - இந்தியக் குறுநில மன்னர்கள் ஒன்று சேர்ந்து எந்த ஒரு தற்காப்பு நடவடிக்கையையும் எடுக்காதது ஒரு பரிதாபகரமான உண்மை. ‘ஒன்று பட்டால்தான் உண்டு வாழ்வு’ என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள் இந்த ராஜபுத்திர மன்னர்கள். தவிர, மறதி என்கிற வியாதியும் அவர்களைப் பீடித்து இருந்தது. ஒவ்வொரு முறை அந்நியப் படை வரும்போதும் விழித்துக்கொண்டு அவசர கதியில் அரைகுறையாக ஒருங்கிணைவதும் படையெடுப்பு முடிந்தவுடன் எல்லாமே மறந்து விடுவதும் - பிறகு பழையபடி கச்சிதமாகப் பிரிந்து, உள்ளூர் சண்டையில் இறங்குவதும் அவர்களுக்கு வழக்கமாகி போனது. (பிருத்விராஜ்-ஜெயச்சந்திரன் ஒரு உதாரணம்!).

இந்தியர்களின் தொடர்ந்த தோல்விக்கு மேலும் சில காரணங்கள்...

அந்நியப்படை இந்தியாவுக்குள் நுழைய வழி - கைபர் கணவாய் அல்லது கோமால் கணவாயாக இருந்தது. சீனர்களைப் போல 1500 மைல் நீள நெடுஞ்சுவர்கூடத் தேவை யில்லை - இந்த இரண்டு கணவாய்களைக் காக்க சிறு கோட்டைகளைக்கூட எழுப்ப வில்லை இந்திய மன்னர்கள். ‘உங்களைக் காக்க நான் ஏன் கோட்டை எழுப்ப வேண்டும்?’ என்கிற ரீதியில் காழ்ப்பு உணர்ச்சியும் விதண்டாவாதமும் அன்று மலிந்திருந்ததுதான் காரணம். இத்தனைக்கும் வடபுலத்து அரசர்கள் பலர் உறவினர்கள்!

இந்திய மன்னர்களுக்கு நல்ல ஜாதிக் குதிரைகள் வளர்ப்பு என்பது எப்போதுமே புரிபடாமல் இருந்தது (சோழர்கள்கூட வருடா வருடம் ஐயாயிர, பத்தாயிரம் என்று குதிரைகளை அரபு நாடுகளிலிருந்து இறக்குமதிதான் செய்தார்கள்!). ஆனால், ஆப்கான் குதிரைப்படையோ, பிரத்யேகப் போர்ப்பயிற்சி பெற்று ‘சிக்’கென்று இருந்தது.

ராஜபுத்திரர்கள் நேரடிப் போரில் மாவீரர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், ‘போர் தர்மத்தைப் பின்பற்றுகிறேன் பேர்வழி’ என்று களத்தில் அவர்கள் தேவையில்லாத பெருந்தன்மை காட்டுவதை ஒரு பெருமையாகக் கருதினார்கள். அது பலமுறை வினையாக முடிந்தது (முதல் யுத்தத்தில் முகமது கோரியை வெற்றி கொண்டும் பிருத்விராஜ் அவனைக் கொல்லாமல் விட்டது ஒரு உதாரணம்!).

பொதுவாகவே பல இந்திய மன்னர் களுக்குப் போர் என்பது வீரம் கலந்த ஒரு பொழுதுபோக்காகவே இருந்தது. ஆகவே, தற்காப்புக்காக யுத்தம் செய்வதோடு நிறுத்திக் கொண்டார்கள். ‘வலியச் சென்று தாக்குவதே சிறந்த தற்காப்பு’ என்ற உண்மையை அவர்கள் புரிந்துகொள்ளவே யில்லை. அண்டை நாட்டுப் படையினரின் கதை

வேறு. மலைகளையும் நதிகளையும் கடந்து அவர்கள் இந்தியாவுக்கு வரக் காரணம் - அவர்களுகாக இங்கு காத்திருக்கும் பெரும் செல்வம்! அது அவர்களுக்கு ஒரு இலக்காக இருந்தது. இந்திய வீரர்களோ கடமைக்காகவும் வீர மரணத்துக்காகவும் மட்டுமே களம் குதித்தார்கள்! வந்தவர்களை மதம் இணைத்திருந்தது. நம்மவர்களை ஜாதிகள் பிரித்து வைத்திருந்தன. இங்கே படையில் பெரும் பதவிகள் தரும்போது ஜாதியையும் கருத்தில் கொண்டு செயல் பட்டார்கள். ஆப்கான் படையில் திறமைக்கு மட்டுமே மதிப்பு தரப்பட்டது உண்மை!

முகமது கஜினிக்குப் பிறகு வந்த கோரி முகமதுவின் வெற்றிகரமான இந்தியப் படையெடுப்பு பற்றி சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டோம். கோரி முகமது ஊர் திரும்பும் முன் இந்தியாவின் வடபகுதியைத் தன் சார்பில் ஆட்சி புரியத் தேர்ந்தெடுத்தது - தன் பிரதம தளபதிகளில் ஒருவனை, அந்தத் தளபதியின் பெயர் குத்புதீன் அய்பெக். கோரிக்கு அடிமையாகச் சேவகம் புரிந்து, சேனாதிபதியாகப் படிப்படியாக உயர்ந்து, பிறகு டெல்லி மன்னனாக அரியணையில் அமர்ந்தான் குத்புதீன் அய்பெக். எத்தனையோ அரசர்கள் கட்டிய அமர்க்களமான மாளிகைகளெல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் போய்விட, அடிமையாக வாழ்க்கையை ஆரம்பித்த குத்புதீன் துவக்கி வைத்த ஒரு அதிசயம் - டெல்லியில் உயர்ந்து நின்று அவன் பெருமையை இன்றைக்கும் முரசு கொட்டிக் கொண்டிருக்கிறது...

அதுதான் குதுப்மினார்..!

4

குத்புதீன் அய்பெக்.. ஆராம் ஷா.. இல்தூத்மிஷ்..

ஆரம்பம் - அடிமைகளின் சாம்ராஜ்யம்!

நிகழ்காலத்தில் கடும் உழைப்பு, எதிர்காலம் பற்றி நம்பிக்கைக் கனவுகள் - இவை மட்டும் இருந்தால்போதும் - கொத்தடிமையும் கொற்றவனாக ஆக முடியும். இதற்குத் துல்லியமான உதாரணம் - குத்புதீன் அய்பெக்!

கடைத்தெரு ஒன்றில் ஏலத்துக்கு வந்த துருக்கிய இனத்தைச் சேர்ந்த ஏழைச் சிறுவன் குத்புதீனை முதலில் வாங்கியவர் ஒரு ஆப்கான் வியாபாரி. பிறகு பக்ருதீன் அப்துல் அஜீஸ் என்ற வயது முதிர்ந்த ஒரு பேராசிரியரிடம் கைமாறினான் குத்புதீன். முதியவர் இறந்த பிறகு அவருடைய மகன்கள் இன்னொரு வியாபாரியிடம் லாபத்துக்கு இளைஞன் குத்புதீனை விற்றனர்.

ஆப்கானிஸ்தானில், கஜினி நகருக்குச் சென்ற அந்த வியாபாரியிடம் யாரோ ஒருவர் 'சுல்தான் கோரி முகமதுவுக்கு அடிமைகள் தேவையாம்!' என்று சொல்ல... கோரியின் அரண்மனைக்குச் சென்றார் அவர். அவ்வளவாக அழகான தோற்றம் இல்லையென்றாலும், விசாலமான உடற்கட்டுடன் - துறுதுறுவென்று புத்திசாலித்தனம் அலைபாயும் கண்களுடன் வந்து நின்ற குத்புதீன் அய்பெக்கைப் பார்த்த விநாடியில் சுல்தானுக்குப் பிடித்துப் போய்விட்டது. வியாபாரிக்கு நல்ல லாபம்!

கோரியிடம் அடிமையாகப் பணிக்குச் சேர்ந்த அய்பெக், மிக விரைவில் மன்னனின் முழு நம்பிக்கையைப் பெற்றுப் படிப்படியாக உயர்ந்து குதிரைப் படையின் தலைவனாகவும் பிறகு பிரதம தளபதிகளில் ஒருவனாகவும் பதவி உயர்வு பெற்றான்.

டெல்லி மன்னன் பிருத்விராஜுடன் நடந்த யுத்தத்தில் தளபதியாக அய்பெக் காட்டிய வீரமும் பிறகு, ஜெயச்சந்திரனின் கன்னோசித் தலைநகரைக் கைப்பற்றுவதில் அவன் காட்டிய தீரமும் சுல்தான் கோரிக்குப் பெருமித உணர்வையும் மற்ற தளபதிகளுக்குப் பொறாமை உணர்வையும் ஏற்படுத்தியது.

பிறகு குஜராத், பீஹார், வங்காளப் பகுதிகளை போனஸாக வென்று கோரியின் காலடியில் வைத்த குத்புதீன் அய்பெக்கைத் தன் பிரதிநிதியாக டெல்லியில் முடிசூட்டிப் பாராட்டிவிட்டு ஆப்கானிஸ்தானுக்குக் கிளம்பினான் கோரி முகமது. அதைத்

தொடர்ந்தும் தொய்வாக அமரவில்லை குத்புதீன். முதன்முதலில் ஒரு நிலையான இஸ்லாமியச் சாம்ராஜ்யத்தை இந்தியாவில் நிறுவித் திறமையாகவும் கட்டுப்பாட்டுடனும் ஆட்சிபுரிந்தார் அவர். (ஆகவே, இனி ‘அவர்’ என்றே அழைப்போம்!)

242 அடி - ஒரு அற்புதம்!

குத்புதீன் அய்பெக் கட்டியது குதுப்மினார் முதல் மாடி வரைதான். வானுயர அதை வெற்றிகரமாக முழுதும் கட்டி முடித்தவர் சுல்தான் இல்தூத்மிஷ். குதுப்மினார் முழுவதையுமே இல்தூத்மிஷ்தான் கட்டினார் என்று கூறுபவர்களும் உண்டு!

உலகிலேயே மிக உயர்ந்த இந்த வகை டவர் இதுதான். (உயரம்-242 அடி. உச்சிக்குச் செல்ல 319 படிகள்). பாக்தாத் நகரிலிருந்து டெல்லிக்கு வந்து தங்கியிருந்த குவாஜா குத்புதீன் பக்டியர் காகி என்னும் மகான் மீது பெருமதிப்பு வைத்திருந்த இல்தூத்மிஷ், அவர் பெயரைக் குதுப்மினாருக்குச் சூட்டியதாகத்தான் சரித்திரம் தெரிவிக்கிறது. விசுவாசம் கருதி முந்தைய சுல்தான் குத்புதீன் அய்பெக் பெயரையும் இல்தூத்மிஷ் குதுப்மினாரில் செதுக்கியதால், பிற்பாடு எந்த குத்புதீன் என்று சற்றுக் குழப்பம் ஏற்பட்டுவிட்டது!

முஸ்லிம் மக்களைத் தொழுகைக்கு அழைக்கவும் குதுப்மினார் பயன்பட்டது என்று கூறப்படுகிறது. முதலில் மூன்று மாடிகள் மட்டுமே கொண்டிருந்த குதுப்மினாரில் 1368-ல் பிரோஷ்ஷா துக்ளக், உச்சிப் பகுதியை இரண்டாகப் பிரித்து ஒரு பால்கனியை மட்டும் சேர்த்து குதுப்மினாருக்கு மேலும் அழகூட்டினார்!



பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பிறகு சற்று மோசமான நிலையில் இருந்த குதுப்மினாரைச் சீரமைக்க முடிவு செய்யப்பட்டது. அதற்காக கர்னல் ராபர்ட் ஸ்மித் என்ற பிரிட்டிஷ் கட்டடக் கலை வல்லுநரை அரசு அழைத்துக் கொண்டு வந்தது. வந்தவர், ரிப்பேரோடு நிறுத்திக் கொள்ளாமல் அதிகப்பிரசங்கம் செய்தார். குதுப்மினாருக்கு முத்தாய்ப்பாக ஒரு ‘ஆங்கிலக் கூரை’ வைத்தால் மேலும் அழகாக அமையும் என்று முடிவு செய்து, மரத்தால் ஒரு சிறு கோபுரம் அமைத்து உச்சியில் அதைப் பொருத்தினார். இயற்கை அதை அனுமதிக்க வில்லை! ஒரு பெரும் இடியின் மூலம் தன் ஆட்சேபணையைத் தெரிவித்தது! விழுந்த இடியினால் கோணலாகிப்போன உச்சாணிக் கோபுரத்தைப் பார்த்தார்கள் கலையுணர்வு கொண்ட பிரிட்டிஷ் அதிகாரிகள் சிலர்... தலையிலடித்துக் கொண்டு அதை (1848-ல்) கீழே இறக்கச் சொன்னார்கள். நண்பர்களின் விளையாட்டுக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படாத சிறுவனைப்போல பரிதாபமாகச் சுணங்கி நிற்கும் அந்தக் கூரையை இன்றும் நாம் குதுப்மினார் அருகில் காணலாம். ‘இது என்ன ஓர் அபத்தம்!’ என்று குதுப்மினாரே அந்த ‘வெள்ளைக்காரக் குல்லாயை’ ஒதுக்கித் தள்ளிவிட்டதாம்!



குதுப்மினார் அருகே உள்ள இல்தூத்மிஷ் கல்லறை...

‘சுல்தான் குத்புதீன் அய்பெக் ஒரு சுறுசுறுப்பான, போலித்தனம் இல்லாத மன்னர். மல்யுத்தம் உட்பட எல்லாவிதப் போர்முறைகளிலும் தேர்ச்சிபெற்று விளங் கியவர். தனக்கு விசுவாசமானவர்களுக்கு லட்சம் லட்சமாகப் பணத்தை எடுத்து அள்ளித் தருகிற தாராள மனமும் இந்த மன்னருக்கு உண்டு. அதே சமயம் இரும்புக் கரம் கொண்டு டெல்லியிலும் சுற்றுப் புறங்களிலும் தொல்லை தந்துகொண்டு இருந்த வழிப்பறிக் கொள்ளைக்காரர்களைக் கூண்டோடு ஒழித்து மக்களை நிம்மதி மூச்சுவிடச் செய்தவர் அவர்...’ என்று சரித்திர ஆசிரியர்கள் குத்புதீனைப் பாராட்டு கிறார்கள்.

அதே சமயம், இஸ்லாமிய மதத்தை இந்தியாவில் பரப்புவதில் முழுமூச்சாக இறங்கிய குத்புதீனால் உடைத்துத் தள்ளப் பட்ட இந்துக் கோயில்கள் ஏராளம். அப்படி உடைத்துப் பெயர்த்தெடுக்கப்பட்ட இந்துக் கோயில் பகுதிகளை வீணாகத் தூக்கியெறிய வில்லை சுல்தான் குத்புதீன். கோயில்களின் தூண்களையும் படிகளையும் அலாக்காகக் கொண்டு வந்து மசூதிகள் கட்டும்போது கச்சிதமாகப் பயன்படுத்தினார் அவர். குதுப்மினாரில் காணப்படும் இந்துக் கோயில் கலை வடிவங்களையே சாட்சியமாகக் காட்டி, ‘கோரி முகமதுவை முதல் போரில் முறியடித்ததைக் கொண்டாடும் வகையில் பிருத்விராஜ் கட்டிய வெற்றிக் கோபுரம்தான் குதுப்மினார்’ என்று பிற்பாடு மறுப்புக் கதை சொன்னவர்களும் உண்டு. அது - கதை தான்!

குத்புதீனுக்கு முடிசூட்டிவிட்டு ஆப்கானிஸ்தானுக்குக் கிளம்பிய கோரி முகமது, லாகூர் அருகே சிந்து நதிக்கரையில் தங்கி இளைப்பாறியபோது மர்மமான முறையில் கொல்லப்பட்டான். கொலைகாரன் யார் என்று கண்டுபிடிக்கப்படவில்லை!

‘பிருத்விராஜ் சௌகான் போரில் கொல்லப்படவில்லை. அவன் சாகாவரம் பெற்றவன்! உண்மையில், பழுக்கக் காய்ச்சிய ஈட்டியால் பிருத்விராஜின் கண்களைத் தோண்டியெடுத்துப் பார்வையிழக்கச் செய்த முகமது கோரி, அவனையும் அவனுடைய நெருங்கிய நண்பனையும் கைதிகளாக்கித் தன்னுடன் அழைத்துச் சென்றான். சிந்து நதிக்கரையில் கூடார வாயிலில் மந்திரி பிரதானிகளுடன் ஜாலியாக

அமர்ந்திருந்த கோரி, ‘வில்வித்தையில் சூரன்’ என்று அழைக்கப்பட்ட பிருத்விராஜிடம் ‘வில் வித்தையில் பெரிய ஆளாமே நீ? இப்போது உன்னால் வில்லை இயக்க முடியுமா?’ என்று சவால்விட... தொலைவில் இருந்த பிருத்விராஜ், ‘முயற்சிக்கிறேன்!’ என்று ஒரு வில்லை வாங்கினான். சுமார் நூறடி தொலைவில் ஒரு அடிமை. அவன் தலையில் ஒரு கனி வைக்கப்பட்டது! அருகிலிருந்த நண்பன், கோரி முகமது அமர்ந்திருந்த இடத்தைச் சொல்லிச் சொல்லி உதவ... வில்லைத் திருப்பி பிருத்விராஜ் எய்த அம்பு, காற்றைக் கிழித்துக்கொண்டு மின்னலாகச் சென்று, திகைத்துப்போன கோரியின் மார்பில் பாய்ந்து, அவன் உயிரையும் பறித்துக்கொண்டு முதுகு வழியாக வெளியேறிவிட்டது...’ என்று ஒரு கதை உண்டு. இன்றைக்கும் ராஜஸ்தானில் இந்தக் கதையை நாட்டுப்புறப் பாடலாகக் கிராமத்து மக்கள் உணர்ச்சிப்பெருக்குடன் பாடுகிறார்கள்!

இந்திய மண்ணில் பிரவேசித்த அந்நிய நாட்டுப் படையை எதிர்த்து வாள் உயர்த்தி, அவர்களை ஒரு போரில் விரட்டியும் அடித்த ஒரு மாவீரனை ராஜபுத்திரர்களால் இன்றைக்கும் மறக்க முடியவில்லை. அவன் வீரத்தை ஒரு உணர்ச்சிகரமான தத்துவமாக மக்கள் மனதில் பூட்டிவைத்துக் கொண்டதால் துளிர் விட்டு வளர்ந்த கதைதான் மேலே சொல்லப்பட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வேலை என்று இறங்கி விட்டால், அதை அரைகுறையாக முடிப்ப தெல்லாம் முகமது கோரிக்குப் பிடிக்காத விஷயம். எதுவாக இருந்தாலும் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்பதில் நம்பிக்கை வைத்த அவன் பிருத்விராஜின் தலை - உடல் விஷயத்திலும் அதையேதான் பின் பற்றினான்!

டெல்லியைத் தலைநகராகக் கொண்டு கம்பீரமாகவும் திட்டவட்டமாகவும் குத்புதீன் அய்பெக் துவக்கி வைத்த ஆட்சியை ‘அடிமைகளின் சாம்ராஜ்யம்’ என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். பிறப்பாலோ, சூழ்நிலையாலோ வாழ்க்கையின் அடிமட்டத்தில் சிக்கிக்கொண்டு வாடும் எவருக்கும் அடிமை குத்புதீன் டெல்லி சுல்தானாக மகுடம் சூட்டிக்கொண்ட வரலாறு ஒரு நம்பிக்கை நட்சத்திரம்.

ஆனால், குத்புதீன் ஆட்சி சுமார் நான்கு ஆண்டுகளே நீடித்தது. 1210-ம் ஆண்டு நவம்பர் மாத ஆரம்பத்தில், லாகூர் அருகே ஒரு மைதானத்தில் ‘போலோ’ விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது குதிரையிலிருந்து எசகுபிசகாக விழுந்த சுல்தான் குத்புதீன் அய்பெக்கின் உயிர் அந்த மைதானத்திலேயே பிரிந்தது.

குத்புதீனைத் தொடர்ந்து டெல்லி அரியணையில் ஏறிய ஆராம்ஷாவின் ஆட்சியே எசகுபிசகாக அமைந்து தொலைத்ததால் அமைச்சர்கள் கூடிப் பேசி ஆராம்ஷாவைத் தொலைத்துக்கட்ட அவசரமாக முடிவெடுத்தார்கள். அவர்கள் சொல்லியனுப்ப, குத்புதீனுக்கு மாப்பிள்ளையாக வாய்த்த இல்தூத்மிஷ், படை திரட்டிக்கொண்டு வந்து ஆராம் ஷாவைப் போரில் தோற்கடித்தார். மணி மகுடம் தலைமாறியது. போரில் வீழ்ந்த ஆராம்ஷாவின் உடல் இன்றுவரை கிடைக் காததால், அந்த சுல்தானின் கல்லறையை மட்டும் டெல்லியில் நாம் காண முடியாது.



குவ்வாத்-அல்-இஸ்லாம் - சுமார் 23 இந்து, ஜைனக் கோயில்களை இடித்து, அவற்றின் உடைந்த பகுதிகளையே உபயோகித்து குத்புதீன் டெல்லியில் கட்டிய முதல் மசூதி...

புது சுல்தான் இல்தூத்மிஷும் அடிமையாக வாழ்க்கையை ஆரம்பித்தவர்தான். சுல்தான் குத்புதீன் நல்ல விலை கொடுத்து வாங்கிய கட்டுமஸ்தான அடிமை! பழைய பாடம் திருப்பிப் படிக்கப்பட்டது. தன்னிடம் விசுவாசமாகவும் புத்திசாலித்தனமாகவும் பணியாற்றிய இல்தூத்மிஷை கவர்னர் ஆக்கியதோடு நிறுத்திக் கொள்ளாமல், தன் மருமகனாகவும் ஆக்கிக்கொண்டார் குத்புதீன்.

ஆராம்ஷாவின் அரைவேக்காட்டுத் தனமான ஆட்சி ஓராண்டுகூடத் தொடர வில்லை என்றாலும், அதற்குள் பல குறுநில மன்னர்கள் 'இதுதான் சமயம்!' என்று சுதந்திரக்கொடி உயர்த்தினார்கள். இல்தூத்மிஷ் வந்தமர்ந்த கையோடு, வாள் முனையில் எல்லோரையும் வழிக்குக் கொண்டு வர வேண்டியதாயிற்று.

இல்தூத்மிஷ் ஆட்சியின்போதுதான் செங்கிஸ்கானின் மங்கோலியப் படை கொலை வெறியோடு சிந்து நதிக்கரை வரை வந்து நின்றது. அந்தப் படையை எதிர்த்து வாலாட்டப் பார்த்த இந்திய எல்லைப்புற மன்னர்களின் உதவிக்குப் புத்திசாலியான இல்தூத்மிஷ் போகாமல் தவிர்த்தார். அது ஒருவகையில் டெல்லிக்கு நல்லதாகப் போயிற்று. மங்கோலியப் படை சிந்து நதியைக் கடந்து டெல்லி செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு, பாரசீகம் நோக்கிப் பயணத்தைத் தொடர... நிம்மதிப் பெருமூச்சு விட்டார் சுல்தான் இல்தூத்மிஷ். சில மாதங்கள் கழித்து, மங்கோலிய ஆபத்து நீங்கியதைக் கொண்டாடும் வகையில் குவாலியர், மால்வா, உஜ்ஜயினி மீது வரிசையாகப் போர் தொடுத்துக் கபளீகரம் செய்தது டெல்லி பாதுஷாவின் படை.

குறிப்பாக, உஜ்ஜயினி நகர் உருத் தெரியாமல் தரைமட்டமாக்கப்பட்டது. அங்கிருந்த புகழ் வாய்ந்த காளிமாதாவின் கோயில் தூள் தூளாக்கப்பட்டது. பல்லாயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். அதுதான் இல்தூத்மிஷ் மேற்கொண்ட கடைசிப் படையெடுப்பு. அங்கிருந்து கிளம்பி டெல்லிக்குத் திரும்புவதற்குள் கடுமையான காய்ச்சலில் விழுந்தார் இல்தூத்மிஷ். பல்லக்கில்

படுக்கவைத்து, அவசர அவசரமாக அலுங்காமல் நலுங்காமல் சுல்தானை டெல்லிக்குக் கொண்டு போனார்கள். அரண்மனை வைத்தியர்கள் சுல்தானைப் பிழைக்கவைக்கப் போராடி னார்கள். படுக்கையில் நடந்த இந்தப் போரில் கடைசியில் சுல்தானை நோய் வென்றது. இல்தூத்மிஷ் இறந்த தேதி 29, ஏப்ரல் 1236.

‘இருபத்தாறு ஆண்டுகள் ஆட்சிபுரிந்த இல்தூத்மிஷ், இந்தியாவில் குத்புதீன் அமைத்துத் தந்த அஸ்திவாரத்தின் மீது வெற்றிகரமாக இஸ்லாமியச் சாம்ராஜ்யத்தை எழுப்பியவர்’ என்கிறது சரித்திரம்.

சுல்தானுக்குச் சரியான மகன்கள் வாய்க்கவில்லை. ‘கேளிக்கையே வாழ்க்கை’ என்பதுபோலத் திரிந்துகொண்டிருந்த மகன்களிடம் இல்தூத்மிஷுக்கு ஏற்கெனவே சில ஆண்டுகளாக நம்பிக்கை அடியோடு போயிருந்தது. கூர்ந்த அறிவும் ஆழ்ந்த திறமையும் கொண்ட தன் மகள் ரஸியா மீதுதான் மிகுந்த அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். ‘மது, மாது என்று மஞ்சத்திலேயே தஞ்சம் கொண்டிருக்கும் என் மகன்கள் யாருக்கும் நாடாளும் தகுதி இல்லை. நாம் ரத்தம் சிந்தி உருவாக்கி அமைத்த சாம்ராஜ்யத்தைக் கட்டிக் காக்கும் தகுதி என் மகள் ரஸியாவுக்குத்தான் உண்டு!’ என்று 1232-ல் குவாலியரில் வெற்றிபெற்றுத் திரும்பியதிலிருந்தே இல்தூத்மிஷ், தன் ஆலோசகர்களிடம் புலம்பிக்கொண்டு இருந்தார். படுக்கையில் வீழ்ந்து மரணத்தை நோக்கிச் சரிந்துகொண்டிருந்தபோது தன் ஆலோசகர்களை நெருக்கமாக அழைத்து நடுங்கும் குரலில், “ரஸியாவிடம் ஆட்சிப் பொறுப்பை அளியுங்கள்” என்று மன்னர் மன்றாடியதாகத் தகவல்!

சுல்தான் இப்படி ‘சீரியஸாகவே’ சொல்வது கேட்டு அரசவையிலிருந்த ஆசாரமான முஸ்லிம் பெரியவர்கள் திகைத்துப் போனார்கள். “இது என்ன பைத்தியக்காரத்தனம்!? ஒரு பெண்ணுக்கு - அதுவும் முஸ்லிமாகப் பிறந்தவளுக்கு மகுடமா? இதை அனுமதிக்க முடியாது!” என்று ஒருமனதாக முடிவெடுத்தார்கள். இல்தூத்மிஷ் சுல்தானின் வேண்டுகோளை மீறி, அவர் மகன் ருக்னுதீன் பிரோஸ் என்பவனை அரியணையில் அமர்த்தி, ஒரு அபத்தத்துக்கு வழிவகுத்தார்கள்...

5

ரஸியா..

டெல்லியை ஆண்ட பெண் புலி!

மகுடம் சூட்டிக்கொண்டால் மட்டும் மதிநுட்பம் வந்து விடுமா என்ன? அரசவைப் பெரியவர்களின் உதவியோடு ஆட்சியில் அமர்ந்த ரஸியாவின் ஒன்றுவிட்ட சகோதரன் ருக்னுதீன் பிரோஸ், தன் கடமைகளைப் பற்றி கவலையேபடாமல் அந்தப்புரத்தில் அடியோடு அமிழ்ந்தான். மதுக்கோப்பைகள் கீழே உருள, மங்கைகள் மேலே புரள - ஆட்சிக்கு வந்த சில நாட்களுக்குள் அவன் துவக்கிய கேளிக்கைகள் கேவலமாகப் போய்க்கொண்டிருந்தன.

சுல்தானின் அம்மா ஒரு மோசமான பெண்மணி. பெயர் - ஷா துர்க்கான். முன்பு அரண்மனையில் வேலைக்காரப் பெண்ணாக இருந்து பிற்பாடு சுல்தான் இல்தூத்மிஷை வளைத்துப் போட்டாள் அவள். அறிவு, அன்பு, பண்பு, பணிவு எதுவும் இல்லாத அந்த வெட்டிப் பெண்மணிக்கு அடித்தது யோகம். பொழுது புலர்ந்ததோ, விடிந்ததோகூடத் தெரியாமல் அலங்கோலமாக அந்தப்புரத்தில் கிடந்த மகனுக்குச் ‘சகல வசதிகளும்’ செய்து கொடுத்துவிட்டு அவன் பெயரில் ஆட்சி நடத்தியது அம்மாதான். அவளுக்கு மண்டியிடாத ஆலோசகர்கள் எல்லாம் மண்ணுலகிலிருந்து விடைபெற்றார்கள். தலையாட்டாதவர்களுடைய தலைகள் சீவப்பட்டன. மற்ற ராணிகள் திகைத்துப்போய் மெல்லிய குரலில் ஆட்சேபித்தார்கள். உடனே அந்தப்புரத்திலேயே அவர்களைச் சிறை வைத்தாள் ஷா துர்க்கான்.

“இப்போது அரியணையில் அமர்ந்திருப்பது என் மகன். நடப்பதோ என் ஆட்சி. இதோ, பாருங்கள்!” என்று சொல்லிச் சிரித்துவிட்டு “யாரங்கே?” என்று குரல் கொடுத்தாள். ஓடி வந்த காவலர்கள் வணங்கி நின்றார்கள். இறந்து போவதற்குமுன் இல்தூத்மிஷ் இன்னொரு ராணிக்கு அளித்த கடைசிப் பரிசான ஒரு குழந்தை பலவந்தமாகத் தாயிடமிருந்து பறிக்கப்பட்டது. “இந்தக் குழந்தை ஒரு எதிர்கால ஆபத்து. தோண்டி எடுங்கள் அதன் கண்களை!” என்று உத்தரவு போட்டாள் ஷா துர்க்கான். மற்ற ராணிகள் கதறக் கதற, வந்த காவலர்கள் ஆணையை உடனடியாக நிறைவேற்றினார்கள்.

அந்தப்புரத்திலிருந்து கசிந்து வெளியேறிப் பரவிய இந்தக் கொடுமையான செய்தி, மக்களை ஆத்திரத்தில் ஆழ்த்தியது. டெல்லி ஆட்சியின் கீழ் இருந்த அயோத்தி, வங்காளம், முல்தான், லாகூர் மன்னர்களும் வைஸ்ராய்களும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு

போர்க்கொடி தூக்கினார்கள்.

தலைக்கு மேல் ஆபத்து என்றவுடன் பயந்து போனாள் தாய். மயக்கத்திலிருந்த மகனைத் தட்டியெழுப்பி போர் உடை அணியச் செய்தாள். மகன் பிரச்னைகளைச் சமாளிப்பான் என்று இத்தனைக்கும் நடுவில் அவள் கணக்குப் போட்டது வியப்பான விஷயம்தான்.

ஆடையே அணியாமல் நேரத்தைக் கழித்துக்கொண்டிருந்த ருக்னுதீனின் உடலில் புதிதாக, திடீரென்று போர் உடை! மதுக் கோப்பைகளைவிடக் கனமான எதையும் அதுவரை தூக்கியிராத கைகளில் போர்வாள்! ருக்னுதீன் சுல்தான், ஒரு படையை அழைத்துக்கொண்டு தட்டுத் தடுமாறி குதிரையேறி போருக்குக் கிளம்பிய அழகைக் கண்ட டெல்லி மக்களின் எரிச்சல் உச்சத்துக்குப் போனது.

ரஸியாவுக்கு மக்களிடையே இருந்த அன்பு, மரியாதை, ஆதரவு கண்டு அவளிடம் இதுவரை வாலாட்டாமல் இருந்தாள் ராணி ஷா துர்க்கான். ரஸியாவும் மிகுந்த புத்திசாலித் தனமாகப் பொறுமை காத்தாள்.

ஆனால், வரவர சூழ்நிலை ரஸியாவுக்குச் சாதகமாகிக்கொண்டு இருப்பதைக் கண்ட ராணியின் கொஞ்ச நஞ்ச அறிவும் மழுங்கிப் போக, ரஸியாவை ரகசியமாக கொல்லும் முயற்சிகள் நடந்தன.

இதைக் கேள்விப்பட்ட டெல்லி மக்களின் ஆத்திரம் கட்டு மீறியது. கலவரம் வெடித்தது. “ரஸியா... ரஸியா!” என்று மக்கள் உணர்ச்சி கரமாகத் திரண்டு நின்று குரல் கொடுத் தார்கள். ஊர் எல்லையைக்கூடத் தாண்ட வில்லை ருக்னுதீன் சுல்தான். “மகனே! திரும்பி வா!” என்று அலறியபடியே செய்தி அனுப்பினாள் கொலைகார ராணி. “இனியும் பொறுப்பதில் பயனில்லை” என்று முடிவு கட்டிய அமைச்சர்கள் அவசரக் கூட்டம் போட்டார்கள். ராணியை சிறைக்குள் தள்ளினார்கள். அங்கே அவள் உயிரும் பறிபோனது.

ஆட்சி ரஸியாவுக்குப் போய்விட்ட செய்தி கேட்ட ருக்னுதீன் உடனே செய்தது - ஒரு கோட்டைக்குள் ஒளிந்துகொண்டதுதான்! அமைச்சர்கள் அனுப்பிய வீரர்கள், இடுக்கில் மாட்டிக்கொண்ட ஒரு பெருச்சாளியைப் போல ஒரு மூலையில் பதுங்கிய அவனைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள். சில நாட்கள் கழித்து (9-ம் தேதி நவம்பர் 1236 அன்று) அவனைத் தீர்த்தும் கட்டினார்கள்.

‘ஏகமான பிரச்னைகள் வியூகமாகச் சூழ்ந்து நின்ற நிலையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ரஸியா என்னும் பெண்ணரசியிடம் - மிகத் திறமை வாய்ந்த மன்னர்களுக்கு இணையான மதிநுட்பம், ராஜதந்திரம், நிர்வாகத் திறமை, வீரம் குடிகொண்டிருந்தது...’ என்று வரலாற்று ஆசிரியர்கள் பாராட்டு மடல் படிக்கிறார்கள். வாத-பிரதிவாதங்களைக் கேட்டுத் திட்டவட்டமாக நீதி வழங்குவதிலும் தவறு செய்தவர்களைத் தண்டிப்பதிலும் ரஸியா தயங்கவில்லை. போர்க்களத்தில் வாளேந்தி முன்னணியில் சென்றதும் ரஸியாதான். அப்போதெல்லாம் பெண் உடையைக் களைந்து எறிந்துவிட்டு ஆண் வீரர்களைப் போல உடை அணிந்துகொண்டாள் அவள். தகராறு செய்த குறுநில மன்னர்களும் கவர்னர்களும் ரஸியாவின் வீரத்துக்கு முன் மண்டியிட்டார்கள். பஞ்சாப், சிந்து, வங்காளம்... எல்லாப் பிரதேசங்களும் ரஸியா முன் கைகட்டி தலை வணங்கின. “நான் பெண்ணாக இருந்தால் என்ன? என்னையும் சுல்தான் என்றே அழையுங்கள்!” என்று உத்தரவு போட்டாள்

ரஸியா.

ஒரு நாள்... குதுப்மினார் அருகில் இல்தூத்மிஷ் நிர்மாணித்த மசூதியில் தொழுகைக்குச் சென்ற ரஸியாவைத் திடீரென்று ஆபத்து சூழ்ந்துகொண்டது. ரஸியாவுக்கு எதிராகக் கிளம்பியிருந்த ஆயிரம் பேர் அடங்கிய ஒரு கொலைப்படை நூருதீன் என்பவன் தலைமையில் மசூதியைச் சூழ்ந்துகொண்டது. இதை முன்பே ஒற்றர்கள் மூலம் அறிந்துகொண்டிருந்த ரஸியா, முன்னேற்பாட்டுடன் வந்திருந்தது அவர்களுக்குத் தெரியாமல் போனது. சற்றுத் தொலைவில் ஒளிந்திருந்த ரஸியாவின் திறமை மிகுந்த குதிரைப்படை வீரர்கள், நூருதீன் படையைச் சுற்றி வளைத்துப் பிடித்து வீழ்த்தினார்கள். சூழ்ச்சி பிசு பிசுத்தது.

நிறையப் படிப்பதிலும் அறிஞர்களிடம் அறிவுபூர்வமாக உரையாடுவதிலும் சுல்தான் ரஸியாவுக்கு ஆர்வம் இருந்தது. புனித குர்-ஆனைச் சுத்தமான உச்சரிப்போடு தங்கு தடையில்லாமல் ரஸியா ஓதியதைக் கேட்டவர்களெல்லாம் வியந்தார்கள்.

இப்படியாக, வேறெந்த வகையிலும் குறை சொல்ல முடியாத இந்த ராணியிடம் ஒரு பெருங்குறை மட்டும் இருந்தது - அவர் பெண்ணாகப் பிறந்ததுதான் அது! அரசவையில் இருந்த செல்வாக்கு மிகுந்த அமைச்சர்கள் அணி ஒன்று ‘என்னதான் இருந்தாலும் ஒரு பெண் மண்ணாளுவதா?’ என்று புழுங்கினார்கள். அந்தப்புரத்தில் வாழவேண்டிய ஓர் ஆரணங்கு அரியணையில் அமர்ந்தது ஆரம்பித்திலிருந்தே அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ரஸியா சுல்தான் எத்தனையோ திறமையாகச் செயல்பட்டும் அவர்கள் மனதை மட்டும் மாற்ற முடிய வில்லை. அவர்கள் வாய்க்கு வகையாக சிக்கிய அவல்தான் யாகூத் என்ற அடிமை!

ஆப்பிரிக்காவிலிருந்து வந்து அரண் மனையில் அடிமையாகச் சேர்ந்தவன்தான் இந்த ஜலாலுதீன் யாகூத். எத்தியோப்பிய இனத்தைச் சேர்ந்த யாகூத், புத்திக் கூர்மையுடன் பணிபுரிந்து ரஸியா சுல்தானின் கவனத்தைக் கவர்ந்தான். மிகச் சிறந்த மெய்க்காப்பாளனாகவும் திகழ்ந்த அவன் படிப்படியாக ரஸியாவின் நண்பனாகவும் ஆனான்.

இபன்பதூதா என்கிற அந்தக் கால சரித்திர ஆசிரியர் ‘அது தகாத நட்புதான்!’ என்கிறார். ரஸியா காலத்திலேயே வாழ்ந்த மின்ஹாஜ் என்னும் இஸ்லாமியப் பேராசிரியர் ‘ரஸியாவுக்குச் சிறந்த முறையில் பணிவிடை செய்து செல்வாக்குப் பெற்றான் யாகூத்’ என்று மட்டும் குறிப்பிடுகிறார். ‘இது என்ன உறவு என்று புரியவில்லை. ஆனால், இருவரும் தேவையில்லாத வகையில் நெருக்கமாகப் பழகுகிறார்கள். தொட்டுத் தொட்டுப் பேசுகிறாள் ரஸியா. பொது இடத்தில், குதிரை மீது ரஸியாவை அலாக்காக, ஆதரவோடு தூக்கி அமர்த்து கிறான் இந்த எத்தியோப்பிய யாகூத்!’ என்று இன்னொரு சரித்திர ஆசிரியர் குறிப்பிடுகிறார்...

எது எப்படியோ! பரபரப்பான பத்திரிகைகள் மட்டும் அந்தக் காலத்தில் இருந்திருந்தால், ‘அடிமையுடன் அரசி கும்மாளம்!’ என்று தலைப்புச் செய்தி போட்டிருக்கும்! இல்லாததால், வாய் வழியாகத் ‘தகவல்கள்’ வேகமாகப் பரப்பப் பட்டன!

ரஸியா மீது பொறுமையிழந்த ஆஸ்தானப் பெரியவர்கள் பொழுது மங்கிய பிறகு கூடிப்பேசினார்கள். இருட்டு வேளையில் சதித் திட்டங்கள் தீட்டப்பட்டன. தீர விசாரிக்காமலேயே இதற்கு ஆதரவு தந்தான், டெல்லிக்கு வடக்கே சுமார் 150 மைல் தொலைவில் உள்ள சிர்ஹிந்த் பகுதியை ஆண்ட இக்தியாருதீன் அல்தூனியா. “பதவியிலிருந்து இறக்குங்கள் இந்தப் பெண் சுல்தானை!” என்று போர்க்கொடியும் உயர்த்தினான்.

“அதிகப்பிரசங்கி அல்தூனியாவுக்குப் பாடம் புகட்டிவிட்டு வருவோம்!” என்று முழங்கிய ரஸியா சுல்தான், படை திரட்டிக் கொண்டு கிளம்பினாள். சதிகாரர்கள் திட்டம் போட்டு மெய்க்காப்பாளன் யாகூத் கவனத்தைத் திருப்பித் தனியே அழைத்து சென்று, நயவஞ்சகமாக அவனை குத்திக் கொன்றார்கள். ஆவேசமாகப் போராடிய ரஸியாவை ஏராளமான எதிரிகள் சூழ்ந்து கொண்டு சிறைப்படுத்தி அல்தூனி யாவிடம் சேர்ப்பித்தார்கள்.

‘முதலில் எதிரிகளின் வலையில் சிக்காமல் வாழ்ந்தாக வேண்டும். டெல்லியில் உள்ள குள்ளநரிகளைப் பிறகு கவனிப்போம்!’ என்று முடிவுகட்ட வேண்டிய சூழ்நிலை ரஸியாவுக்கு.

ரஸியாவை நெருக்கத்தில் பார்த்த அல்தூனியாவின் நெஞ்சத்திலோ உடனடியாகக் கிளர்ந்தெழுந்தது காதல்தான்! ரஸியா பேசப் பேச, ஒரு ‘புது அடிமை’ உருவானான் அங்கே! பித்துப் பிடித்தவனைப் போல அவளையே பார்த்துக்கொண்டிருந்த அல்தூனியாவிடம் தனக்கு எதிராக டெல்லியில் போடப்பட்டு வரும் சதியின் பின்னணியை விளக்கினாள் ரஸியா. ‘தவறு செய்துவிட்டோம்’ என்று அல்தூனியாவுக்குப் புரிந்தது. பிராயச்சித்தமாக, அந்த வீரப் பெண்ணைத் தன் மனைவியாக்கிக் கொண்டான்.

அடுத்தகட்டமாக, அல்தூனியா-ரஸியா தம்பதியின் தலைமையில் போர்ப்படை டெல்லி நோக்கிக் கிளம்பியது. இந்தக் காட்சி நிச்சயம் மற்ற வீரர்களுக்கு வித்தியாசமான ஒரு அனுபவமாகத்தான் இருந்திருக்கும்!

இதற்குள் டெல்லி பிரபுக்கள் ரஸியாவின் ஒன்றுவிட்ட சகோதரன் பஹ்ராமைப் பதவியில் அமர்த்தியிருந்தார்கள்.

ஆனால்... விதி எதிரிகள் பக்கம் கட்சி மாறியது.

போகிறவழியில் மேலும் பல ஆதர வாளர்கள் அல்தூனியாவுக்குப் படை உதவி செய்ய... அப்படி வந்து சேர்ந்த ஒரு படையோடு ஆபத்தும் வந்து கலந்தது. ரஸியாவின் படை டெல்லியை நெருங்கிய சமயம் பார்த்து அவர்களுடைய தளபதிகள் பலர் திடீரென்று தங்கள் ஆதரவைக் கைகழுவினார்கள். கூடவே, பல வீரர்களும் நழுவினார்கள். படை சிறுத்தாலும் மனம் தளராமல் வீரத்தோடு போர்புரிந்தனர் அல்தூனியாவும் ரஸியாவும்.

இடையில் இருவரும் கூடாரத்தில் சற்று ஓய்வெடுக்க வந்தபோது, கூடவே காலனும் பின்தொடர்ந்தான். “இந்தப் பெண்ணிடம் மறுபடியும் மகுடம் போனால் இஸ்லாமிய ஆட்சி நிலைத்து நின்றுவிடும்” என்று ஆத்திரத்தில் இருந்த (அவர்கள் உதவிக்காக வந்த ஒரு படையில் சேர்ந்திருந்த) சில இந்து வீரர்கள் ‘பழிதீர்க்கிறேன் பேர்வழி’ என்று உள்ளே வாளை உருவிக்கொண்டு புகுந்தார்கள். எதிர்பாராத இந்த ஆபத்தை முதலில் கவனித்தவள் ரஸியாதான். ஒரு விநாடி திகைத்தாலும், உடனே சுதாரித்துக்கொண்டு வாளைப் பாய்ந்து எடுத்துக்கொண்டு எதிரிகள்மீது பாய்ந்தாள் அவள்.

பெண் புலியாக இருந்தாலும் பலர் சுற்றி வளைத்துக்கொண்டு வேட்டையாடினால் என்ன செய்ய முடியும்? ரஸியாவின் உடலை வந்தவர்களின் வாட்கள் திரும்பத் திரும்பப் பதம் பார்த்தன. ரத்தத்தில் தோய்ந்த ரஸியாவின் உயிரற்ற உடல் கீழே விழுந்தது. போராட முனைந்த அல்தூனியாவையும் கொலைக்காரர்கள் வெட்டிப் போட்டார்கள்.

கி.பி.1236-ல் இந்த் வீரப் பெண்மணி டெல்லியில் அமர்ந்து ஆட்சிபுரிந்த காலம் மூன்று ஆண்டுகளும், சில மாதங்களும்தான். முதலாவதும் கடைசியாகவும் டெல்லி அரியணையில் அமர்ந்த ஒரே பெண் சுல்தான் - ரஸியா பேகம்!

முழுமையான திறமை பெற்ற இந்த ராணியைத் தீர்த்துக்கட்டியது எவ்வளவு பெரிய தவறு என்பதை அவசர புத்தியோடு இயங்கிய அந்தக் கொலைக்காரர்கள் பிற்பாடு - சில ஆண்டுகளுக்குள் புரிந்து கொண்டு

இருப்பார்கள்...

6

பஹ்ராம்.. நஸீருதீன் மகமூத்.. பல்பன்..

இரும்புக்கரம்!

மக்களாட்சியிலாவது பரவாயில்லை... ஆட்டம் போடும் பதவியாளர்களை அடுத்த தேர்தலில் கவனித்துக் கொள்ளலாம். மன்னராட்சிக்கு மதம் பிடித்துவிட்டால் கடவுளைத்தான் மக்கள் நம்ப வேண்டியிருந்தது. அவர்களின் பிரார்த்தனைகள் பலிக்கச் சற்றுக் காலதாமதமானாலும்... அதற்குள் வெறியாட்டம் போட்டுவிடும் அடங்காப்பிடாரிகளும் உண்டு!

சதித் திட்டங்களிலிருந்து மீண்டு சிம்மாசனத்தில் ரஸியா சுல்தான் அமர்ந்திருந்தால் அந்தப் பெண்ணரசியின் ஆட்சி எப்படி அமைந்திருக்கும் என்று யாரால் சொல்ல முடியும்? ஆனால், அந்த வாய்ப்பு மக்களுக்குக் கிட்டவில்லை. அந்தக் கொலையைத் தொடர்ந்து ஆறாண்டுகளுக்கு ஒரு படு குழப்பமான நிர்வாகச் சீர்கேட்டை மக்கள் அனுபவிக்க வேண்டி வந்தது.

ரஸியா தீர்த்துக்கட்டப்பட்ட பிறகு, கி.பி.1240-லிருந்து 1246 வரை பஹ்ராம், மஸூத் என்ற இரு சுல்தான்கள் டெல்லியில் ஒருவர்பின் ஒருவராக அமர்ந்து நாட்டை 'ஒருவழி'யாக்கினார்கள். அரண்மனையில் சுல்தான் இல்துத்மிஷ் காலத்திலிருந்து செல்வாக்குடன் இருந்த 'பிரபுக்கள் குழு'வைப் பகைத்துக் கொண்டான் பஹ்ராம். அவர்களால் மதிக்கப்பட்ட முஸ்லிம் மகான் ஒருவரைத் தேவையில்லாமல் தூக்கிலிட்டான். வெறுத்துப் போன பிரபுக்கள் சதியாலோசனைகளில் இறங்கினார்கள். இதற்குள் மங்கோலியப்படை ஒன்று வடக்கிலிருந்து புகுந்து லாகூரைக் கபளீகரம் செய்தது. இன்னொருபுறம் பீஹார், வங்காளம், சிந்து, முல்தான் பிரதேசங்கள், பலவீனமாகிப்போன டெல்லியின் கைப்பிடியில் இருந்து கழன்றுகொண்டன.

நிலைமை மோசமாகவே, பஹ்ராம் மாளிகையைப் பிரபுக்கள் அனுப்பிய படை சூழ்ந்துகொண்டது. உள்ளே நுழைந்த வீரர்கள் அப்போதுதான் உறங்கப்போன சுல்தானை நிரந்தரமாகத் தூங்க வைத்தார்கள்.

அடுத்த சுல்தான் மஸூத் - இதிலிருந்து எல்லாம் பாடம் கற்பதாக இல்லை! ஒரு மனிதனால் என்னவெல்லாம் கேளிக்கைகளில் ஈடுபட

முடியும் என்ற தொடர் சோதனையில் இறங்கியிருந்த அவனை இழுத்துக்கொண்டு பாதாளச் சிறையில் தள்ளிப் பூட்டினார்கள். அதோடு சரி, பிறகு சிறைக்கதவு திறக்கப் படவேயில்லை.

இப்படிப் பெரும் குழப்பத்தை நோக்கிச் சறுக்கிக்கொண்டிருந்த அரசாட்சியை உடனடியாகக் காப்பாற்றியாக வேண்டிய சூழ்நிலை... இல்தூத்மிஷ் சுல்தானின் இளையமகனும் ரஸியாவின் சகோதரரும் ஆன நஸீருதீன் மகமூத் என்பவரை 1246-ம் ஆண்டு ஜூன் 10-ம் தேதி பதவியில் அமர்த்தினார்கள் அரசவைப் பெரியவர்கள்.

இருபதாண்டுகள் 'ஆட்சி'புரிந்த நஸீருதீனை மன்னர் என்பதைவிட மான் குட்டி என்று அழைக்கலாம்! எந்தத் தப்புத் தண்டாவுக்கும் போகாமல் மிக எளிமையாக வாழ்ந்த வித்தியாசமான மன்னர் நஸீருதீன் மகமூத். புனித குர்-ஆன் முழுவதையும் தன் கைப்பட மிக அழகாக எழுதுவதில் தன் வாழ்க்கையையே செலவிட்ட இந்தச் சுல்தான், தான் எழுதியவற்றை விற்று அதில் வந்த வருமானத்தைத் தன் உணவு போன்ற சொந்தச் செலவுகளுக்குப் பயன்படுத்தினார் என்னும்போது பல சுல்தான்களோடு ஒப்பிடுகையில் வியப்பாகவும், பிரமிப்பாகவும் இருக்கிறது! அதுமட்டுமல்ல... மற்ற எந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும் பார்க்காமல் ஒரே மனைவியுடன் கடைசி மூச்சு வரை காலந்தள்ளியவர் சுல்தான் நஸீருதீன். சாப்பாடும் மனைவிதான் தயாரித்தாக வேண்டும். கொதிக்கும் வாணலியில் ஒருமுறை விரலை சுட்டுக்கொண்ட சுல்தானின் இல்லத்தரசி வலி தாங்காமல் "கொஞ்ச நாளைக்காவது ஒரு சமையற்காரப் பெண்ணை வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாமா?" என்று கேட்டதற்கு "ஒரு விரலைச் சுட்டுக்கொண்டதற்காகவா? அந்த ஆடம்பரமெல்லாம் தேவையில்லை. சமாளித்துக்கொள்" என்று சுல்தானிடமிருந்து பதில் வந்தது!

எப்படி இந்த மென்மையான மான் குட்டியால் இருபது ஆண்டுகள் சுல்தானாகக் காலந்தள்ள முடிந்தது? இவரை அரவணைத்துக் காவல் புரிந்தது அமைச்சராக இருந்த ஒரு பெரும் சிங்கம் - பெயர் பல்பன்.

இருபது ஆண்டுகள் பெயருக்கு மன்னராக இருந்த நஸீருதீன் சுல்தான் இறப்பதற்குமுன் பல்பனையே தன் வாரிசாக (நஸீருதீனுக்குக் குழந்தைப்பேறு இல்லை) நியமித்தார்.

பல்பன் துருக்கிய அடிமையாக மங்கோலி யர்களால் பாக்தாத் நகரில் கைப்பற்றப்பட்டு பிறகு சுல்தான் இல்தூத்மிஷால் விலைக்கு வாங்கப்பட்டவர். பிற்பாடு ரஸியா பேகம் ஆட்சியில் மெய்க்காப்பாளராகப் பணி புரிந்தவர். ரஸியா கொலைக்குப் பிறகு, பதவி உயர்வுகள் பெற்று நஸீருதீன் சுல்தானுக்குப் பிரதம அமைச்சரானதோடு தன் மகளையும் பல்பன் எச்சரிக்கையாக சுல்தானுக்கு மணம் முடித்து வைத்தார்.

பல்பனின் நாற்பதாண்டு ஆட்சி முழுவதும் ஒருவிதத்தில் 'அவசர நிலை பிரகடனம்' செய்யப்பட்டதாகவே இருந்தது. அவர் சுண்டுவிரலுக்குக் கீழ் நாடு அடங்கிச் சுணங்கிக் கிடந்தது என்றுகூடச் சொல்லலாம். தவறிழைப்பவர்களுக்குப் பல்பன் தந்த தண்டனைகள் அப்படி! எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, இந்துக்களாக இருந்தாலும் சரி - அவர்கள் தோல்கள் உரிக்கப்பட்டன - நிஜமாகவே! சந்தேகத்துக்கிடமாக நடந்து கொண்டால் போதும் - அவர்கள் எத்தனை செல்வாக்கு உடையவர்களாக இருந்தாலும் சத்தம் போடாமல் தீர்த்துக்கட்டப் பட்டார்கள்! சற்று ஆபத்தான முஸ்லிம்

பிரபுக்கள், அவ்வப்போது கிளம்பிக் கலவரத்தில் ஈடுபட்ட ராஜபுத்திர மன்னர்கள் எல்லோரும் ஒட்டுமொத்தமாக சுல்தான் பல்பனால் கழுவிலேற்றப்பட்டனர். இந்தப் பணிகளையெல்லாம் செவ்வனே செய்ய மிகத் திறமையான படை உருவாக்கப்பட்டது. பல்பன் ஆட்சியில் ஒரு வழிப்பறிக் கொள்ளை கூட நடக்கவில்லையென்றால் பார்த்துக் கொள்ளலாம்!

“சட்டத்தின்முன் எல்லோரும் சமம். இதைத் திட்டவட்டமாகப் புரிந்து கொண்டால் போதும்!” என்று அவ்வப்போது பல்பன் எடுத்துச் சொல்வது உண்டு. இதை வெறும் வாய்ப்பேச்சாக நிறுத்திக்கொள்ள வில்லை சுல்தான். நாலாயிரம் குதிரைகளை லாயத்தில் வைத்திருக்கும் அளவு செல்வாக்குள்ள மாலிக் பக்பாக் என்னும் கவர்னர், குடிவெறியில் ஒரு சாமானிய ஊழியரைச் சவுக்கால் அடித்துக் கொன்று விட, தகவல் பல்பனுக்குப் போய்ச் சேர்ந்தது. கவர்னரைக் கைது செய்து தர்பாருக்கு இழுத்துவரச் செய்த சுல்தான், அவர் உடைகளைக் கழற்றி எறிந்துவிட்டு சவுக்கால் அடிக்கச் சொல்லித் தண்டனை வழங்கினார். கொஞ்ச நேர விளாசலிலேயே கவர்னர் உயிர் பிரிந்தது. உடனடியாகத் தன் பின்னாலேயே மேலுலகம் வந்த முதலாளியைப் பார்த்த ஊழியர் வியந்து போயிருக்க வேண்டும்!

பிரமுகர்கள் செய்யும் தப்புத் தண்டாக் களையெல்லாம் எழுதி வைக்க ஒரு குறிப்பு எழுதுபவரையும் (நிருபர்!) நியமித்திருந்தார் பல்பன். மேற்சொன்ன அந்த ஊழியரை கவர்னர் கொன்ற செய்தியைத் தன்னிடம் சொல்லாமல் மறைத்ததற்காக அந்த ‘நிருபரும்’ உடனே தூக்கிலிடப்பட்டது பெட்டிச் செய்தி!

அதேபோல அயோத்தியின் ஆளுநரான ஹைபத்கான் ஒரு முதிய சேவகனை அடித்துக் கொன்றுவிட, கைது செய்யப்பட்ட ஹைபத்கானுக்கு ஐந்நூறு பிரம்படிகள் தரப்பட்டன. தோலுரிந்து ரத்தவிளாறாக உடல் சிவந்து துவண்டு கிடந்த ஹைபத் கானைத் தானே இழுத்துக் கொண்டுபோய், இறந்த ஊழியரின் விதவையின் காலடியில் போட்டு ஒரு குறுவாளை அவளிடம் தந்து “உங்கள் வேதனை தீர நீங்களே இவரைக் குத்திக் கொல்ல அனுமதி வழங்குகிறேன்!” என்று சொல்லித் திரும்பினார் பல்பன் (சுமார் இருபதாயிரம் ரூபாய் மதிப்புள்ள வெள்ளி நாணயங்களைக் கொண்டுவரச் செய்து விதவையிடம் கொடுத்து ஹைபத்கான் உயிர்ப்பிச்சைக் கேட்டுக் கெஞ்சினார் என்பதும், பணம் வென்றது என்பதும் வேறு விஷயம்!).

பல்பன் ஆட்சியில் டெல்லி மாநகரம் கம்பீரமாக ஜொலித்தது என்பதில் சந்தேகம் இல்லை. அதில் நடுநாயகமாக அமர்ந்து பல்பன் நடத்திய தர்பார், வெளிநாட்டிலிருந்து வந்த பயணிகளை எல்லாம் பிரமிக்க வைத்தது. வெட்டிப் பேச்சு, ஜோக் அடிப்பது போன்ற விஷயங்களில் சுல்தானும் ஈடுபட்டதில்லை. மற்றவர்களையும் அனுமதித்ததில்லை. அரசர்க்குரிய கம்பீரத்தோடு முழு உடையில்தான் பல்பன் எப்போதும் காணப்பட்டார். நண்பர்கள் சுவாதீனமாக சுல்தானிடம் உரிமை எடுத்துக் கொள்வது, உறவினர்கள் கூடிக் கும்மாளம் போடுவது போன்ற எதுவுமே அரண்மனையில் நடந்ததில்லை.

‘இளம் வயதில் மதுப்பழக்கம் இருந்ததுண்டு. ஆனால், அரியணை ஏறிய மறுகணத்திலிருந்து குடிப்பதை அடியோடு நிறுத்தினார் சுல்தான். பிறகு சாகிறவரை மதுக்கோப்பையை அவர் தொட்டது இல்லை!’ என்கிறார் வரலாற்று ஆசிரியர் பரானி. தவிர, படித்தவர்களை, கலைஞர்

களை, மகான்களை மிகுந்த மதிப்புடன் நடத்தினார் பல்பன். த்வைதம் என்னும் தத்துவத்தை உலகுக்குத் தந்த மகான் மத்வாச்சாரியார், மத்திய இந்தியாவில் இருந்து டெல்லிக்கு வந்தபோது சுவாமிகளை மரியாதையுடன் வரவேற்று உபசாரம் செய்தார் சுல்தான் பல்பன்.

கி.பி.1279-ல் பல்பன் ஆட்சிக்குப் பெரும் ஆபத்து வந்தது. வடக்கிலிருந்து முரட்டுத் தனமான ஒரு மங்கோலியப் பெரும்படை இந்தியாவுக்குள் புகுந்தது. தன் மூத்த மகன் முகமதுக்குக் கச்சிதமாகப் போர்த் திட்டங்கள் சொல்லிக் கொடுத்து மங்கோலியர்களை எதிர்கொள்ள அனுப்பினார் பல்பன். சுல்தான் படை வெற்றிகரமாக எதிரிகளை விரட்டியடித்தது. இம்மி பிசகாமல் தான் சொன்னதை நிறைவேற்றி மகன் வெற்றிக் கொடி நாட்டிய செய்தி வந்தவுடன், இந்தியா தற்போது ஒலிம்பிக்ஸ் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் இருந்தால் நாம் எப்படி மகிழ்வோமோ அந்த அளவு மகிழ்ந்துபோனார் பல்பன். ‘இதோ என்னை மிஞ்சப்போகும் வாரிசு!’ என்று ஆனந்தக்கண்ணீர் வடித்தார்.

ஆபத்து நம்பர் 2, வங்காளத்திலிருந்து கிளம்பியது. துஹ்ரில்கான் என்னும் கவர்னர் - சுல்தானை எதிர்த்து வங்காளத்தைச் சுதந்திர நாடாக அறிவித்தான். பல்பன் மிரட்டிப் பார்த்தும் கேட்கவில்லை. அமீர் கான் என்னும் ஒரு பிரதம தளபதியைப் பெரும் படையோடு அனுப்பினார் சுல்தான். துஹ்ரில்கான் படையிடம் தோற்றுத் திரும்பியது டெல்லிப்படை. இது பல்பனுக்கு ஏற்பட்ட முதல் தோல்வி!

இந்த விவரம் வர, தாங்கமுடியாத கோபத்தில் பல்பன் முகம் முழுமையாகச் சிவந்துபோனது. தோல்வியோடு திரும்பிய அமீர்கானைக் கோட்டை உச்சியில் ஸ்பெஷலாகத் தூக்குமரம் தயாரித்து ‘தோற்று திரும்பும் தளபதிகளுக்கு இதுதான் கதி’ என்று சொல்லிவிட்டுத் தளபதியை தூக்கிலிட்டார் சுல்தான்.

துஹ்ரில்கான் கில்லாடி மன்னன்தான்! சில மாதங்கள் கழித்து மாலிக் தார்கி என்னும் தளபதியின் தலைமையில் சுல்தான் அனுப்பிய இன்னொரு படையும் துஹ்ரில் கான் படைக்குப் புறமுதுகு காட்டித் திரும்பியது. திகைத்துப்போனார் பல்பன். இந்தத் தளபதிக்கும் பழைய தண்டனை தரப்பட்டது. பிறகு “வெற்றி கிடைக்கும்வரை தோல்விகளைப் பொருட்படுத்தக்கூடாது” என்று பக்கத்திலிருந்தவர்களிடம் சொல்லி விட்டு, தன் இளைய மகன் புஹ்ராகானைத் தளபதியாக அழைத்துக்கொண்டு ஒரு பெரும் படையுடன் தானே போருக்குக் கிளம்பினார். இரண்டு லட்சம் படை வீரர்கள், கூடவே யமுனை நதியில் - பிறகு கங்கை நதி வழியாக பெரும் படகுகளில் பல்வேறு ஆயுதங்களுடன் ஒரு படை!

‘பல்பன் என்கிற குள்ளநரியின் மூளை கொண்ட கிழச்சிங்கம் வங்காளத்தை நோக்கி நேரடியாக வருகிறது’ என்கிற செய்தி வந்ததும் - இதுவரை வீரத்தோடு போர்புரிந்து வந்த துஹ்ரில்கானுக்குத் திடீரென்று பயம் தொற்றிக்கொண்டது. தன் தோல் முழுவதும் உரிக்கப்படுவது போலவும், கூர்மையான மூங்கிலில் கழுவேற்றப்படுவது போலவும், கண்கள் தோண்டி எடுக்கப்படுவது போலவும் கற்பனையில் காட்சிகள் விரிய... ஒரிஸ்ஸா பகுதியில் உள்ள ஒரு காட்டுக்குள் பீதியுடன் ஓடி ஒளிந்து கொண்டான் துஹ்ரில். காட்டுக்குள் பல்பனின் படை புகுந்தது. ஒரு குதிரையில் ஏறித் தப்பிக்கப் பார்த்த துஹ்ரில்லை ஒரு வீரன் செலுத்திய அம்பு கீழே தள்ளியது. அவன் தலையைச் சீவிக் கொண்டுவந்து சுல்தான் காலடியில் போட்டார்கள்.

“என் வயதான காலத்தில் என்னை இவ்வளவு சிரமப்படுத்திய இவனது ஊருக்குப் பாடம் புகட்டுங்கள்” என்று கர்ஜித்தார் பல்பன். துஹ்ரில்கானின் அரண்மனை இருந்த லக்னௌதி நகர் கடைவீதியில் இரண்டு மைல் தொலைவுக்கு வரிசையாக நடப்பட்ட, கூர்படுத்தப்பட்ட மூங்கில்கள் - துஹ்ரில்கான் பக்கம் போர் புரிந்த வீரர்கள், தளபதிகள், உற்றார், உறவினர் எல்லோர் உடலையும் ஊடுருவின. ஏதோ ரத்தமழை பொழிந்ததைப் போல கடைவீதி சிவந்து அலைபாய்ந்தது.

வந்த காரியம் முடிந்த பிறகு, தன் இரண்டாம் மகன் புஹ்ராகானை (கொஞ்சம் ஜாலி டைப்!) அழைத்து, “உன்னை வங்காள கவர்னராக நியமிக்கிறேன். உன் விளையாட்டுப் புத்தியைக் கைவிட்டு கவனத்தோடு, திறமையோடு ஆட்சிபுரிய வேண்டும். நான் சொல்வதை அலட்சியப் படுத்தினால் துஹ்ரில்கான் கதிதான் உனக்கும்!” என்று எச்சரித்துவிட்டுத் திரும்பினார் சுல்தான். அதுதான் பல்பன்!

இரும்புக்கரம் கொண்டு எவ்வளவு கச்சிதமாக ஆட்சி நடத்தும் மன்னனுக்கும் முடிவு ஒன்று உண்டு அல்லவா? ஊருக்குத் திரும்பிய சுல்தானைப் பேரிடி ஒன்று தாக்கியது. ‘தனக்கு நிகரான வாரிசு’ என்று கனவு கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த பல்பனின் மூத்த மகன் முகமது, வடமேற்கு எல்லையில் மறுபடியும் (வருடம் 1285) புகுந்த மங்கோலியப் படையோடு மோத நேர்ந்தது.

இம்முறையும் சுல்தானின் படை வெற்றி பெற்றும் வீரர்கள் சிலர் மறைந்திருந்து நடத்திய திடீர்த் தாக்குதலில் முகமது உயிரிழக்க நேர்ந்தது.

தான் உயிரையே வைத்திருந்த மூத்த மகன் இறந்த செய்தி கேட்ட பல்பன், பித்துப் பிடித்ததைப் போலப் பல நாட்கள் தொடர்ந்து கதறினார். புத்திர சோகம் தாங்காமல் தன் துணிகளைக் கிழித்துக் கொண்டு மண்ணை வாரி தன் உடல் மீது இறைத்துக்கொண்டு முட்டி மோதி அழுத பல்பன் நிலையைக் கண்டு மந்திரிப் பிரதானிகள் செய்வதறியாமல் திகைத்தார்கள். உணவு, உறக்கம் எதுவும் இல்லாமல் ஒரு இருட்டு அறையின் மூலையில் முடங்கிப் போன பல்பனின் உடல்நிலை வெகுவேகமாக மோசமானது. மகன் இறந்து ஓராண்டுகூட ஆகவில்லை - அவ்வப்போது ‘முகமது... என் அருமை மகனே..’ என்ற லேசான கதறல்கள் கேட்கும். பிறகு அதுவும் நின்றுவிட்டது. கதவை உடைத்துக்கொண்டு உள்ளே போனவர்கள் பார்த்தது - எலும்பும் தோலுமாக சுல்தானை நிலைகுத்திய விழிகளோடு..!

7

கெய்கூபாத்..

மதுக்கோப்பைகள்... மங்கைகள்!

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக கட்டுக்கோப்பான ஒரு ஆட்சியை வெற்றிகரமாக நிலை நிறுத்திய டெல்லி சுல்தான் பல்பனின் உடல் ஜில்லிட்ட உடனேயே அரசவைப் பிரதானிகள் சற்று அவசரக்குடுக்கைகளாகச் செயல்பட்டார்கள். பல்பன் தன் வாரிசாக டெல்லி அரியணையில் அமர்த்த ஆசைப்பட்டது அவர் பேரன் கய்குஸ்ரூவை. மங்கோலியர்களால் வஞ்சகமாகக் கொல்லப்பட்ட இளவரசர் 'ஷாகீத்' (தியாகி) முகமதுவின் மகன் கய்குஸ்ரூ. ஆனால், வங்காளத்தில் வைஸ்ராயாக பல்பன் நியமித்துவிட்டு வந்த புஹ்ராகானின் மகன் கெய்கூபாத் என்னும் பதினெட்டு வயது இளைஞரை - மறைந்த சுல்தானின் விருப்பத்தை மீறிச் சிம்மாசனத்தில் அமர்த்தினார்கள் பிரபுக்கள்.

கெய்கூபாத் சிறுவயதில் வளர்ந்தது தாத்தா பல்பனிடம்தான். பெரியவர் இறக்கும்வரை பேரன் மதுவையோ, மங்கையையோ தொட்டதில்லை. எப்போது பார்த்தாலும் ட்யூஷன், படிப்பு என்று படுகண்டிப்புடன் பவ்யமாக வளர்க்கப்பட்ட இந்த இளவரசருக்குத் தலைமையேற்கும் திறமை இருக்கிறதா என்று யாரும் சீர்தூக்கிப் பார்க்காததன் விளைவு - சாம்ராஜ்யம் சீரழிவுப் பாதையில் உடனடியாகத் திருப்பிவிடப்பட்டது!

இதுநாள்வரை தான் 'கட்டுப்பாடாக' வாழ்ந்ததற்குக் காரணம் - தாத்தாவிடம் தனக்கு இருந்த அச்சம்தான்... ஒழுக்கம் அல்ல என்பதை விரைவில் நிரூபித்தார் புதிய சுல்தான் கெய்கூபாத். முதல் வேலையாக, டெல்லியருகே யமுனை நதிக்கரையில் கேளிக்கைகளுக்காகவே ஒரு மாளிகை கட்டப்பட்டது. அங்கு சுல்தான் அருகில் மதுக்கோப்பைகள் அடுக்கி வைக்கப்பட்டன. படுக்கையைச் சுற்றிலும் மதிமயக்கும் மங்கைகள்! 'கெய்கூபாத் ஆட்சியில் ஒவ்வொரு மறைவிடத்தில் இருந்தும் கேள்விக்குரிய பெண்கள்தான் வெளிப்பட்டனர். ஒவ்வொரு தெருவிலும் கும்மாளம் தலைவிரித்தாடியது. நீதிபதிகள்கூட மதுமயக்கத்துடன் தெருவில் தள்ளாடிக் கொண்டிருந்தார்கள்' என்று நானூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பாரசீகச் சரித்திர ஆசிரியர்

ஃபெரிஷ்டா குறிப்பிடுகிறார்.

கெய்கூபாத் நெருங்கிய ஆலோசகராக வைத்துக்கொண்டது நிஜாமுதீன் என்கிற விஷப்பாம்பை! சுல்தானைத் தொடர்ந்து மதுமயக்கத்திலும் நினைவுக்கு வந்த போதெல்லாம் மங்கைகளின் அரவணைப் பிலுமே வைத்திருந்த இந்தப் பாம்புதான் பட்டத்து ராஜாவாக நடந்துகொண்டது எனலாம்.

ஆட்சிப் பொறுப்புக்கு நியாயமாக வந்திருக்க வேண்டிய இளவரசர் கய்குஸ்ரூவைச் சுல்தான் அழைப்பதாக சொல்லியனுப்பி டெல்லிக்கு வரவழைத்தான் வில்லன் நிஜாமுதீன். தலைநகரின் பிரதான வீதியில் நுழைந்த கய்குஸ்ரூவை, நிஜாமுதீன் நியமித்த கொலையாளிகள் வழிமறித்துப் பாய்ந்து தீர்த்துக்கட்டினார்கள்! அதைத் தொடர்ந்து, பல்பன் காலத்திலிருந்து விசுவாசிகளாக வாழ்ந்து வந்த பிரபுக்கள் ஒவ்வொருவராக மர்மமான முறையில் விஷம் வைக்கப்பட்டும் கழுத்து நெரிக்கப் பட்டும் குறுவாள் பாய்ச்சப்பட்டும் மேலுலகம் அனுப்பி வைக்கப்பட்டார்கள். எல்லாக் கொடுமைகளுக்கும் பின்னணியில் கச்சிதமாக இயங்கிய நிஜாமுதீன் என்னும் இந்தக் கபட ஓநாயை டெல்லியில் யாருமே சந்தேகப்படவில்லை என்பது வியப்பான விஷயம்!

ஆனால், வங்காளத்தில் டெல்லி சுல்தானின் பிரதிநிதியாக ஆட்சிபுரிந்து வந்த தந்தை புஹ்ராகானை (பல்பன் மகன்) கவலை பீடித்தது. நிஜாமுதீன் மீது சந்தேகம் கிளம்ப... மகனைத் திருத்த ஒரு படையுடன் டெல்லிக்குக் கிளம்பிச் சென்றார் தந்தை. அங்கே வில்லனின் முழுநேரக் கைப் பாவையாக மகன் மாறிவிட்டிருந்தது கண்டு மனம் வருந்தி, ஊர் திரும்புவதற்குமுன் மகனைத் தனியாக அழைத்து எச்சரித்துவிட்டு வேதனையோடு விடைபெற்றார் புஹ்ராகான். அப்பாவை அனுப்பிவிட்டு கெய்கூபாத் அரண்மனைக்குத் திரும்புவதற்குள் வஞ்சக அமைச்சரின் ‘திட்டம்’ சுல்தானை வழி மறித்தது - மயங்கவைக்கும் ஒரு பெண் உருவில்!

கெய்கூபாத் சென்ற பாதையில் ஒரு அரபுக் குதிரையில் அமர்ந்து குறுக்கிட்டாள், நிஜாமுதீனால் அனுப்பப்பட்ட ஒரு அழகு தேவதை. அரண்மனைக்குத் திரும்பும் திட்டத்தை அந்தரத்திலேயே விட்ட சுல்தான், அங்கேயே அவளுடன் கூடாரம் போட்டுத் தங்கிவிட்டதாகத் தகவல். பிறகு குதிரை அழகியையும் அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்த சுல்தான் கெய்கூபாத், அமைச்சர் நிஜாமுதீனை அழைத்து ஆர்வத்துடன் “அமைச்சரே! வரும் வழியில்...” என்று ஆரம்பிக்க, “அவசரப்படாதீர்கள் சுல்தான்!” என்று நிஜாமுதீன் கண் சிமிட்டி யவாறு அந்தப்புரக் கதவுகளை திறந்தான். அங்கே புத்தம் புதிதாக வரவழைக்கப்பட்ட அழகிகளின் அணிவகுப்பே நடந்தது. பேதலித்துப்போய் நின்ற சுல்தான் கெய்கூபாத் மனதில் ‘இவனல்லவோ அமைச்சன்!’ என்ற எண்ணம்தான் மேலோங்கி நின்றிருக்க வேண்டும்! தந்தையின் அறிவுரைகள் தலைதெறிக்க ஓடிப்போயின. மலர்க் கூட்டத்துக்குள் காணாமல் போன வண்டைப்போல அந்தப் புரத்து அழகிகளின் மென்மையான உடல்களுக்கிடையே மறைந்துபோனார் சுல்தான்.

ஒரு தனிமனிதனின் விஷயம் என்பது வேறு. ஆனால், ஒரு தலைவனுக்கு ஒழுக்கம், கட்டுப்பாடு, பொறுப்பு உணர்ச்சி இல்லாமல் போனால் சாம்ராஜ்யமே சிதறிப் போய்விடும் என்பதற்கு கெய்கூபாத் ஓர் உதாரணம்!

முழுசாகக் கெட்டுப்போன இந்தச் சுல்தானின் ஆட்சி மூன்றாண்டுகள் நீடித்தது. ஆட்டம் போட்ட அரசரின் உடல் ஆட்டம் காண ஆரம்பித்தது. கொண்டாட்டமாக வாழ்ந்த மன்னரின் உடலில் இப்போது முடக்குவாதமும் வேறு பல நோய்களும் கும்மாளமிட்டன. குடிநீருக்குக்கூடக் குரல் கொடுக்க முடியாத நிலையில் கொற்றவன் முடங்கிக் கிடக்க, கலவரங்களும் பிரபுக்களின் கோஷ்டிச் சண்டைகளும் வெடித்தன. ஆப்கானிய கில்ஜி பிரபுக்களின் கோஷ்டியும் துருக்கியப் பிரபுக்களின் கோஷ்டியும் பதவிச் சண்டையில் இறங்கின. கில்ஜி பிரபுக்களின் கை ஓங்கியது!

ஜலாலுதீன் பிரோஷ் ஷா என்னும் கில்ஜி பிரபு தலைமையில் ‘கமாண்டோ படை’ ஒன்று டெல்லி அரண்மனையைச் சுற்றி வளைத்துக்கொண்டது. இவர்கள் கையில் சிக்கினான் வஞ்சக அமைச்சர் நிஜாமுதீன். அவன் வாயில் பலவந்தமாகக் கடும் விஷம் ஊற்றப்பட்டது. செத்து வீழ்ந்த நிஜாமுதீனைத் தாண்டிக்கொண்டு சுல்தானின் படுக்கை அறையில் புகுந்தார்கள் வீரர்கள். கண்களில் பீதியோடு, வாய் குழற, உடல் நடுங்கப் படுத்திருந்த சுல்தானின் முடியைப் பிடித்துக் கீழே தள்ளிய ஒரு வீரன் ஆவேசத்துடன் குனிந்தான். “என்னை நினைவிருக்கிறதா சுல்தான்? அந்த அயோக்கியன் நிஜாமுதீன் சொன்னான் என்பதற்காக, ஒரு தவறும் செய்யாத என் தந்தையின் தலையைச் சீவச் சொன்னீர்களே... நினைவிருக்கிறதா?” என்று கேட்டுவிட்டு, ஒரு ஆயுதமும் பயன்படுத்தாமல் தொடர்ந்து காலால் எட்டி உதைத்தே சுல்தானைக் கொடூரமாகக் கொன்றான் அந்தக் கில்ஜி வீரன். பிறகு, படுக்கையோடு சுல்தானின் உடலைச் சுற்றி உப்பரிகை வழியாக யமுனை நதியில் வீசியெறிந்தார்கள் கில்ஜி படையினர்.

மாமன்னர் பல்பன் சிரமப்பட்டு நிலை நிறுத்திய பெருமைவாய்ந்த ‘அடிமைகள் சாம்ராஜ்யம்’ இந்த வகையில் கொடூரமாக முடிவுபெற்றது!

ஜூன் 13, 1290-ம் ஆண்டு ஜலாலுதீன் பிரோஷ் ஷா, செத்துப்போன சுல்தானின் குழந்தையை எச்சரிக்கை உணர்வோடு கொன்றுவிட்டு டெல்லி சுல்தானாக முடி சூட்டிக்கொண்டார்.

ஜலாலுதீன் பிரோஷ் ஷா ஒரு வித்தியாசமான சுல்தான். எதற்கெடுத்தாலும் உணர்ச்சிவசப்படுகிற, கண்ணீர் விடுகிற டைப்! சுல்தானிடம் காரியம் சாதித்துக் கொள்ள விரும்பிய எல்லோருமே ஒரு சோகக் கதையைத் தயாராகக் கொண்டு செல்வதை வழக்கமாகக் கொண்டார்கள்! எடுத்த எடுப்பிலேயே சிம்மாசனத்தில் உட்கார மறுத்து, “பக்கத்தில் எளிமையாக ஒரு நாற்காலி போடுங்கள், போதும்... புகழ் பெற்ற பெரும் மன்னர் பல்பன் அமர்ந்த அரியணையில் இந்த எளியவன் அமருவதா?” என்று கண்ணீர் விட்டார் ஜலாலுதீன். சிரமப்பட்டுச் சிம்மாசனத்தில் சுல்தானை அமர்த்த வேண்டியிருந்தது.

சுல்தான் ‘மென்மையான டைப்! என்பதைக் கேள்விப்பட்ட உடனேயே மாலிக் சஜ்ஜு என்னும் ஒரு வைஸ்ராய், படையோடு டெல்லியை முற்றுகையிட... ஜலாலுதீன் சுல்தானின் மகன் ஆர்காலிகான் தலைமையில் வெளிக்கிளம்பிய டெல்லிப் படை எதிரிகளைத் தோற்கடித்தது. மாலிக் சஜ்ஜுவையும் மற்ற சேனாதிபதிகளையும் கழுத்துக்குப் பின்னால் மரக்கட்டைகளை வைத்துச் சங்கிலிகளால் பிணைத்துத் தந்தையின்முன் நிறுத்தினார்கள். அது தவறாகப் போய்விட்டது! பரிதாபமான நிலையில் எதிரிகளைப் பார்த்தவுடனே மன்னர் கண்களில் நீர்! “வைஸ்ராய் என்று நல்ல பெயர் எடுக்க வேண்டாமா? ஏன் இப்படித் தவறான வழிக்குப் போகிறீர்கள்?”

என்று கேட்டு, அவர்களை விடுவித்து நல்ல புத்தி சொன்னார் சுல்தான் ஜலாலுதீன்.

தவிர, அந்தத் துரோகிகளுக்கு விருந்து அளித்துப் பரிசுகளும் தந்து அன்புடன் சுல்தான் அனுப்பியதைக் கண்டு அரசவையே தலையிலடித்துக் கொண்டது. துணிச்சலான ஒரு கில்ஜி பிரபு, "மேன்மைதாங்கிய சுல்தான் அவர்களே! தாங்கள் மதிக்கும் மன்னர் பல்பன்கூட துரோகிகளை மட்டும் எந்தக் காரணம் கொண்டும் மன்னிக்கக்கூடாது என்று சொல்வது வழக்கம். இந்த வஞ்சகர்களின் கண்களையாவது தோண்டி எடுக்க அனுமதியுங்கள். இல்லாவிடில் நாளைக்கு எல்லோருக்கும் துணிச்சல் வந்து விடும். அது ஆபத்து!" என்று வேண்டினார்.

"நியாயமான வாதம். ஆனால், எனக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது. கல்லறையை நோக்கி நடந்து கொண்டிருக்கும் நான், மற்றவர்கள் ரத்தத்தை மிதித்துக்கொண்டு செல்ல விரும்பவில்லை!" என்று புன்னகையுடன் ஜலாலுதீனிடமிருந்து பதில் வந்தது.

பிடிபட்ட ஒரு பெரும் கொள்ளைக்காரக் கூட்டத்துக்குக்கூடப் புத்திமதி வழங்கி, விடுதலை தந்த இந்த 'இளகிய' சுல்தானுக்கும் ஒரு நாள் திடீரென்று 'மூட் அவுட்' ஆனது. ஸித்தி மௌலா என்ற இஸ்லாமியச் சித்தர் ஒருவர் தனக்கெதிராகச் சதியாலோசனைகள் செய்கிறார் என்று கேள்விப்பட்ட மாத்திரத்தில், அவரை இழுத்துவரச் செய்தார் மன்னர். அரசவையில் எல்லோர் முன்னிலையிலும் சித்ரவதை செய்யப்பட்டார் அந்தச் சித்தர் (சுல்தானையே எதிர்த்து அகம்பாவத்துடன் பேசியதும் ஒரு காரணம்!) பிறகு, அரசு ஆணைப்படி அவரை டெல்லி வீதியில் கிடத்தி, யானையின் காலால் இடறச் செய்தார்கள்.

"நிராயுதபாணியான நாடோடி நான். இறைவனின் தொண்டனான என்னை இப்படி நடத்திய ஒரே குற்றத்துக்காக உன் கதியும் உன் வாரிசுகளின் கதியும் என்ன ஆகப்போகிறது பார், சுல்தான்!" என்று இறப்பதற்குமுன் ஆவேசமாகச் சாபம் தந்தார் சித்தர்.

ஸித்தி மௌலாவின் தலை சிதறிய மறுகணம், கரும் மேகங்கள் தலைநகரைச் சூழ்ந்துகொண்டன. திடீரென்று வெறித் தனமாக வீசிய புழுதிக் காற்றில் டெல்லி மேலும் இருண்டது. அன்றிலிருந்து ஓராண்டு (கி.பி.1291-ல்) மழை அடியோடு இல்லாமல் பெரும் பஞ்சத்தில் மக்கள் தவித்தனர். பலர் பட்டினியில் இறந்தனர். சுல்தானின் மூத்த வாரிசு கான்கனான் என்பவரும் நோய்வாய்ப் பட்டு இறந்தார். இதற்கெல்லாம் சித்தரின் சாபம்தான் காரணம் என்போரும் உண்டு.

ஸித்தி மௌலாவுக்கு மட்டுமே ஏனோ கடுமையான தண்டனை வழங்கிய சுல்தான் மற்றபடி மிகுந்த இரக்கக் குணத்தோடுதான் ஆட்சிபுரிந்தார். அதே சமயம் படையெடுத்து வந்த மங்கோலியர்களை வெற்றிகொண்டு, தனக்கு வீரமும் உண்டு என்று நிரூபித்தார். தோல்வி கண்ட மங்கோலியர்களில் ஒரு பெரும்பகுதியினர் முஸ்லிம்களாக மதம் மாறி டெல்லியிலேயே நிரந்தரமாகக் குடியேறினார்கள். அவர்களின் தள்பதிகளில் ஒருவனுக்குத் தன் மகளையும் இரக்கத்துடன் மணம் செய்து வைத்தார் சுல்தான் ஜலாலுதீன்!

அமைதியை விரும்பிய இந்த மென்மையான சுல்தானையும் விதிவிட்டு வைக்கவில்லை. அளவு கடந்த, தேவை இல்லாத இரக்க குணமே அவருக்கு ஆபத்தாக முடிந்தது!

8

ஜலாலுதீன் கில்ஜி..

வஞ்சகத்தின் மறு உருவம்!

வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும்போது, ‘மனைவி மட்டுமல்ல - மன்னன் அமைவதும் இறைவன் கொடுத்த வரம்’ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது..!

குத்புதீன் அய்பெக்கும் இல்தூத்மிஷும் அடிமைகளாக வாழ்க்கையை ஆரம்பித்து பிற்பாடு திறமை மிகுந்த அரசர்களாக உயர்ந்தார்கள். மாமன்னர் பல்பனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த கெய்கூபாத் மிக விரைவில் கெட்டுச் சீரழிந்தார்.

சில இஸ்லாமிய அரசர்கள் இந்துக்களைத் தேர்ந்தெடுத்துத் துன்புறுத்தினார்கள். சில சுல்தான்களோ குத்திச் சாய்ப்பதற்கு முன் ‘இந்துவா, முஸ்லிமா’ என்றெல்லாம் பார்த்ததில்லை. கஜினி முகமது இறந்த பிறகு சுல்தான் அலாவுதீன் ஹுசேன் (இவர் மருமகன்தான் கோரி முகமது) படையெடுத்துச் சென்று கஜினி மாநகரைத் தீக்கிரையாக்கித் தரைமட்டமாக்கினார். பல்லாயிரக்கணக்கான இஸ்லாமியக் குடிமக்கள் (பெண்கள், குழந்தைகள் உட்பட) இரக்கமில்லாமல் வெட்டிக் கொல்லப் பட்டார்கள். அதே சமயம் சிந்து நாட்டு இளவரசர் முகமது பின் காஸிம், இந்து மன்னர் ஒருவரை வெற்றிகொண்டபோது அவருக்குச் சிந்து சுல்தானிடமிருந்து வந்த கடிதத்தில் ‘அவர்கள் தோல்வியை ஒப்புக்கொண்டுவிட்டதால் அந்த ஊரில் உள்ள, உடைக்கப்பட்ட கோயிலைப் பழுதுபார்க்கவும். அவர்கள் தங்கள் கடவுளை வழிபடுவதில் நமக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. மற்றபடி அந்த மக்களின் வழிபாட்டு முறையிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் இடையூறு எதுவும் ஏற்படுத்த வேண்டாம்’ என்கிற ரீதியில் கடிதம் வந்தது.

டெல்லியைப் பிற்பாடு ஆண்ட சுல்தான் சிகந்தர் லோடி, ஜான்பூரில் ஆட்சிபுரிந்து வந்த முஸ்லிம் மன்னரை வென்றதைத் தொடர்ந்து அந்த ஊரில் இருந்த மசூதிகளை உடைத்துத் தள்ள ஆணையிட்டதாகச் சரித்திரக் குறிப்பு உண்டு!

டெல்லி சுல்தான் முகமது துக்ளக் இறந்த பிறகு பட்டத்துக்கு வந்த பிரோஸ் துக்ளக் ஆட்சியில் இந்துக்களின் கோயில்கள்

உடைக்கப்பட்டன. அதே சமயம் இந்து மதம் பற்றிய நூல்களை அரபு மொழியிலும் பாரசீக மொழியிலும் மொழிபெயர்க்கவும் தக்க ஏற்பாடுகள் செய்தார் பிரோஸ்!

பிற மதத்தினரின் வழிபாட்டுத் தலங்களை உடைப்பதைக் கடமையாகக் கருதிய மன்னர்களும் உண்டு. கொள்ளையடிக்க ஒரு சாக்காகப் பயன்படுத்தியவர்களும் உண்டு. சில கோயில்களை உடைப்பதைத் தங்கள் வெற்றியின் அறைகூவலாக மட்டும் கருதினார்கள். (பிற முஸ்லிம் மன்னர்கள் நாட்டிலுள்ள மசூதிகளைச் சில சுல்தான்கள் உடைத்ததற்கு இதுதான் காரணம்!)

இந்தியாவின் தெற்குப் பகுதியை அலசினால் பீஜப்பூர் சுல்தான்கள் மராத்தியையும் ஒரு ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டதாகச் சரித்திரம் கூறுகிறது. வங்காளத்தை ஆண்ட ஒரு முஸ்லிம் மன்னர், வங்காள மொழியில் ராமாயணத்தை மொழி பெயர்க்க அறிஞர்களை நியமித்தார். சிட்டகாங் பிரதேசத்தை கி.பி.1500-ல் ஆண்ட ஓர் இஸ்லாமிய குறுநில மன்னர், மகாபாரதத்தை வங்காளத்தில் மொழி பெயர்க்கச் சொல்லி அதற்கென தன் ஆஸ்தான கவிஞரை நியமித்தார். இந்து மதத்தைச் சேர்ந்த அந்தக் கவிஞரின் பெயர் இந்திர பரமேஸ்வர் என்பது குறிப்பிடத் தக்கது!

பொதுவாக மன்னர்களை, அவர்கள் எந்த மதமாக இருந்தாலும் சரி - ஹீரோக்கள், வில்லன்கள் என்றுதான் வரலாறு பிரிக்கிறது. மன்னர்களில் குள்ளநரிகளும் உண்டு. புள்ளிமான்களும் உண்டு. தங்கள் ஆட்சி எப்படி அமைய வேண்டும் என்பதை அவர்களின் மனநிலைதான் முதற்கண் நிர்ணயித்தது. பெரும்பாலானவர்களுக்கு மதம், இனம் எல்லாம் கடைக்கண்தான்!

இந்த ரீதியில், சுல்தான் ஜலாலுதீன் கில்ஜி என்னும் உணர்ச்சிவசப்படும் இரக்கக் குணமுள்ள, மென்மையான புள்ளிமான் பாலூட்டி வளர்த்த அலாவுதீன் கில்ஜி ஒரு வஞ்சக வேங்கையாக உருவானது துரதிஷ்ட வசமான வரலாற்று நிகழ்ச்சி! ஜலாலுதீனின் சகோதரரின் மகன் அலாவுதீன். சிறு வயதிலேயே தந்தையை இழந்த அலாவுதீனை மிகுந்த பாசத்துடன் வளர்த்தார் சுல்தான் ஜலாலுதீன். வயதுக்கு வந்தவுடன் காரா பகுதிக்கு (இன்றைய அலஹாபாத் சுற்றுப் புறம்) தன் வைஸ்ராயாக நியமித்தார். தன் மகளையும் அலாவுதீனுக்கு மணம் செய்வித்தார்.

கி.பி.1292-ல் மால்வா பகுதியை வெற்றி கொண்டு, சூறையாடிய செல்வத்தை ஜலாலுதீன் காலடியில் சிறு மலையாக குவித்து பவ்யமாக வணங்கி 'நன்றி நாடகம்' போட்டார் அலாவுதீன். பெருமிதத்தில் ஆழ்ந்த சுல்தான் - பதில் மரியாதையாக மருமகனுக்கு அயோத்தி நகரைப் பரிசாக அளித்தார்.

இரண்டாண்டுகள் கழிந்தன. திடீரென்று எட்டாயிரம் குதிரை வீரர்களை அழைத்துக் கொண்டு தெற்கு நோக்கிப் புயலெனக் கிளம்பினார் மருமகன் அலாவுதீன் கில்ஜி. அந்தப் படை (மராட்டிய) தேவகிரி நாட்டில் (பிற்பாடு தௌலதாபாத் என்று அழைக்கப் பட்டது) சூறாவளியாகப் பாய்ந்தது. மன்னர் ராமச்சந்திரதேவ் எதிர்ப்பு எடுபடவில்லை. அலாவுதீன் படை ஆவேசத்துடன் அபகரித்த வைர, வைடூரியங்கள், தங்க நகைகள் இன்று அடுக்கி வைத்து எடுத்துச்செல்ல வேண்டும் எனில், பல லாரிகள் தேவைப்படும்!

வெற்றி முழக்கத்துடன் அலாவுதீன் படை தேவகிரியிலிருந்து

கிளம்பியபோது... எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்தது. முன்பே தப்பிச் சென்றுவிட்டிருந்த ராமச்சந்திரதேவ் மகன் - பட்டத்து இளவரசர் சங்கர்தேவ் ஒரு பெரும் படையுடன் அலாவுதீன் படையை வீர முழக்கத்துடன் வழிமறித்தார்! “மகனே! நாங்கள் சமாதானம் செய்து கொண்டாயிற்று!” என்று தந்தை ராமச்சந்திரதேவ் கோட்டை உச்சியிலிருந்து குரல் கொடுத்தது யார் காதிலும் விழவில்லை! “யார் இந்த இளைஞன்?” என்று கர்ஜித்த அலாவுதீனுக்கு விஷயம் தெரிந்தவுடன் கோபம் தலைக்கேறியது. பிறகு துரிதகதியில் நடந்த கடும் போரில், அனுபவம் வாய்ந்த அலாவுதீன் படையை வெகுநேரம் சங்கர் தேவ் வீரர்களால் சமாளிக்க முடியவில்லை. இந்த முறை தேவகிரி அரண்மனையில் மிச்சமிருந்த செல்வத்தையும் அலாவுதீனுக்கு அர்ப்பணம் செய்ய வேண்டி வந்ததில், மன்னர் ராமச்சந்திரதேவ் மற்றும் மகா ராணிகள் அணிவதற்குக்கூட ஆபரணம் இல்லாமல் போனது என்று கேள்வி!

அலாவுதீன் பெருமிதத்துடன் பல யானைகளில் வைத்து எடுத்துச் சென்றது சுமார் இருபதாயிரம் பவுண்ட் எடையுள்ள தங்கம், இருநூறு பவுண்ட் முத்துக்கள், முப்பதாயிரம் பவுண்ட் வெள்ளி மற்றும் இலவச இணைப்பாகப் பல மூட்டைப் பட்டுத்துணிகள்!

வெற்றிக்கொடி தகதகக்க, வீர மருமகன் திரும்பி வரும் செய்தி கேட்ட சுல்தான் ஜலாலுதீன் மகிழ்ச்சியில் கூத்தாடாத குறை! அவருடைய அருமை மனைவி முல்லிக் ஜஹான் முகத்திலோ கவலை ரேகைகள்... சுல்தானிடம் “மன்னா! அலாவுதீனை நான் நம்பவில்லை. அவன் ஆபத்தானவன் என்று என் உள் மனது எச்சரிக்கிறது!” என்றார் ராணி.

ஜலாலுதீனுக்கு சிரிப்பும் கோபமும் வந்தன. “நான் எடுத்து வளர்த்த மகனை இப்படிச் சந்தேகப்படுவதா? போரில் வெற்றி என்பதை லட்சியப் பயணமாகக் கொண்ட வீரன் அலாவுதீன். இப்படிப்பட்ட வீரர்கள் சற்று அளவு மீறிய துடிப்புடன்தான் செயல் படுவார்கள்! தேவையில்லாத கற்பனையில் மிதந்து கவலைப்படாதே!” என்று சமாதானம் சொல்லிவிட்டு அரசவையைக் கூட்டினார் ஜலாலுதீன்.

தர்பாரில் அமர்ந்திருந்தவர்களின் முகங் களிலும் சுரத்தில்லாதது கண்டு சுல்தானுக்குத் திகைப்பு! புருவங்களை வில்லாக உயர்த்திய சுல்தான், “வெற்றிப் படைக்குத் தலைமை தாங்கி வரும் என் மருமகனை எதிர்கொண்டு வரவேற்க நான் கிளம்ப வேண்டாமா? ஏன் இந்த மெத்தனம்?” என்று அவையோரைக் கேட்டார்.

அறிவுக்கூர்மையும் துணிவும் கொண்ட முல்லிக் அஹமது ஹபீப் என்ற அமைச்சர் எழுந்து வணங்கிவிட்டு, “மேன்மைதாங்கிய சுல்தானிடம் சற்று வெளிப்படையாகப் பேச விரும்புகிறேன். அலாவுதீனிடம் நாம் சற்று எச்சரிக்கையாக இருப்பது நல்லது என்பது என் எண்ணம். முதலில் அலாவுதீன் தங்கள் அனுமதி இல்லாமலேயே தெற்குப் பகுதிக்குப் படையெடுத்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

அப்படிச் செய்ய வேண்டிய அவசரம்தான் என்ன? அவர் எடுத்து வரும் அளவுக்கு அதிகமான செல்வம், மேன்மைதங்கிய சுல்தானுக்கா அல்லது தன்னைப் பலப் படுத்திக்கொள்ளவா? இளவரசரை தாங்கள் வரவேற்பதற்கு பதிலாக, ஒரு படையுடன் சென்று வழிமறிப்பது இந்தச் சூழ்நிலையில் நல்லது என்று தோன்றுகிறது. தேவகிரியில் இருந்து கொண்டுவரப்படும் செல்வத்தின் கனம் தாங்காமல் திணறிக் கொண்டிருக்கும் அலாவுதீன் படை, அந்த மூட்டைகளை விட்டுவிட்டு

நம் படைக்கு எதிராக வாளைத் தூக்க விரும்பமாட்டார்கள். நேரடி மோதலைத் தவிர்த்துப் பதுங்கத்தான் பார்ப்பார்கள். மொத்தத்தில், அலாவுதீனைப் புரிந்துகொள்ள இது ஒரு வாய்ப்பு!” என்று விளக்கமாகப் பேசினார் அமைச்சர் ஹபீப்.

பாசம் ஒரு போதைப் பொருளாக மூளையைப் பேதலிக்கச் செய்திருந்ததால், அமைச்சரின் அறிவுரை சுல்தான் முகத்தில் சுளிப்பைதான் வரவழைத்தது. இது கண்ட மற்ற அமைச்சர்கள் சற்றுப் பின்வாங்கி ஜால்ராக்களைக் கையிலெடுத்தார்கள்! சுல்தான் எரிச்சலுடனும் புன்னகையுடனும் பேச ஆரம்பித்தார்: “அமைச்சர்களே! முல்லிக் அஹமது ஹபீப் சொன்னதில் எனக்கு உடன்பாடில்லை. அலாவுதீனை என் மார்பில் அணைத்து வளர்த்தவன் நான். அவன் எனக்குத் துரோகம் இழைப்பான் என்று சொல்வது, நானே எனக்குத் துரோகமிழைத்துக் கொள்வேன் என்று சொல்வதைப்போல! ஆகவே, வெற்றிக் கனியோடு வரும் நம் வீரப்படையை வரவேற்க நானே நேரடியாகச் செல்ல முடிவெடுத்துள்ளேன்!”

சுல்தான் முடிவாக அறிவித்ததும் சபை கலைந்தது. அமைச்சர் ஹபீப் முகத்தில் வேதனை... “அறிவு என்னும் ஒளியைப் பாசம் எனும் கிரகணம் பிடித்துவிட்டது. அறிவுரைகள் எப்படி எடுபடும்?” என்று குமுறிக்கொண்டே அவர் வெளிநடப்புச் செய்ததாகக் கூறப்படுகிறது.

சுல்தான் ஜலாலுதீன் கில்ஜி தன்னை வரவேற்கக் கிளம்பிவரும் செய்தி அலாவுதீனுக்குப் போய்ச் சேர்ந்தது. துரிதமாக கங்கை நதியைக் கடந்து கரையோரமாகப் பெரும்கூடாரம் போட்டு, வரப்போகும் மாமனுக்கு வரவேற்பு வளைவுகள் அமைத்தார் அலாவுதீன்!

கங்கை நதிக் கரையோரமாக மிதந்து வந்து நின்ற ஒரு அழகிய பெரிய படகிலிருந்து உற்சாகக் குரலுடன் இறங்கினார் சுல்தான் ஜலாலுதீன் கில்ஜி. தேதி: ஜூலை 19, 1296.

விதி மேலும் விளையாடியது...

மருமகன் கலவரப்படப் போகிறான் என்று நெகிழ்ச்சியுடன் நினைத்த அப்பாவி சுல்தான் ஜலாலுதீன், தன்னுடன் படை வீரர்களைக்கூட அழைத்துச் செல்லவில்லை. நெருங்கிய ஆலோசகர்கள், சில அமைச்சர்கள் மட்டுமே கூட இருந்தார்கள். அவர்களையும் படகிலேயே இருக்கச் சொல்லிவிட்டு, இரு கைகளையும் நீட்டியவாறு "அலாவுதீன்!" என்று சொல்லிக்கொண்டே முன்னேறினார் அந்த எண்பத்திரண்டு வயதான சுல்தான்!

கூடாரத்திலிருந்து வெளியே வந்து அவரை எதிர்கொண்ட அலாவுதீன், சுல்தானை நெருங்கியவுடன் 'உணர்ச்சிகரமாக'க் குனிந்து அவர் பாதங்களைத் தொட்டு வணங்கி... ஓரக்கண்ணால் தன் தளபதிகளைப் பார்த்து தலையசைத்தார். மன்னரும் மிகுந்த அன்புடன் குனிந்து அலாவுதீனின் தோளைத் தொட்டுத் தூக்க, முகமது பின் சலீம் என்னும் அலாவுதீனின் மெய்க்காவலன் பின்னால் இருந்து வாளை உயர்த்தி சுல்தான் முதுகில் பாய்ச்சினான்!

எதேச்சையாக மன்னர் நகர, அவர் தோள்பட்டையருகில் தோலைக் கிழித்தது வாள். அலறித் திரும்பிய சுல்தான், "துரோகி அலாவுதீன்!" என்று கதறியவாறு தட்டுத் தடுமாறி படகை நோக்கி ஓடத் துவங்கினார். "உம்... விடாதீர்கள்" என்று அலாவுதீன் ஆணையிட, யக்தியாருதீன் என்னும் ஒரு காவலாளி ஓடிச்சென்று அந்த முதிய மன்னரின் முடியைப் பிடித்துக் கீழே தள்ளினான்.

"ஐயோ..!" என்று பரிதாபமாக மன்னரிடம் இருந்து கிளம்பிய கதறல், சில விநாடிகள்தான் கேட்டது. இந்த முறை அடியாளின் வாள்வீச்சில் சுல்தான் ஜலாலுதீன் கில்ஜியின் தலை முழுமையாகத் துண்டிக்கப்பட்டு விட்டது. பிறகு, ஒரு ஈட்டியில் அந்தத் தலையைப் பொருத்தி அலாவுதீன் அருகில் அடியாட்கள் நிறுத்தினார்கள். அந்த விநாடியில், புது சுல்தானாகப் பதவி உயர்வு பெற்ற அலாவுதின் கில்ஜியின் வாயிலிருந்து குபீரென்று சிரிப்புச் சத்தம் கிளம்பியது.

ஒட்டுமொத்தமாக அராபிய, பாரசீக மற்றும் முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்கள் அலாவுதீன் நிகழ்த்திய இந்த நயவஞ்சகச் செயலைக் 'கொடூரமானது... மன்னிக்கவே முடியாதது... சரித்திரத்தில் மிகக் கேவலமான கொலைகளில் ஒன்று...' என்றெல்லாம் குறிப்பிட்டுக் குமுறுகிறார்கள்.

அலாவுதீன் கில்ஜியின் நன்றிகெட்ட இந்த வெறிச் செயலை இறைவன் மன்னிக்க வில்லை. முதுகில் வாளைச் செலுத்திய தளபதி முகமது பின் சலீம், அதற்குப் பிறகு ஓராண்டுதான் உயிர் வாழ்ந்தான். கடுமையான தொழுநோயால் பாதிக்கப் பட்டுப் பார்வையிழந்து, உடல் முழுவதும் அழுகி எலும்பும் தோலுமாகத் துடித்து இறந்தான் அவன்.

சுல்தான் தலையைத் துண்டாடிய யக்தியாருதீனுக்கு மனநிலை பாதிக்கப் பட்டது. "ஐயோ... என்னைக் கொல்ல வருகிறார்கள்!" என்று தொடர்ந்து இரவும் பகலும் பைத்தியம் பிடித்து அலறி, பிறகு கவனிப்பாரில்லாமல் செத்துப்போனான் அவன்.

ஆரம்பத்தில் வெற்றிகள் சூழ்ந்து கொண்டாலும், கடவுளின் தண்டனை அலாவுதீன் கில்ஜிக்காகக் காத்திருந்தது. அது செயல்படச் சற்றுக் காலம் பிடித்தது என்பது தான் வித்தியாசம்!

9

அலாவுதீன் கில்ஜி..

அமலுக்கு வந்த மதுவிலக்கு!

ராணி முல்லிக் ஜஹான் எச்சரித்ததையும் அமைச்சர் அஹமது ஹபீப் வெளிப்படுத்திய கவலையையும் அலட்சியப்படுத்தினார் சுல்தான் ஜலாலுதீன் கில்ஜி. மகாராணியும் மந்திரியும் பயந்தபடியே விபரீதம் நிகழ்ந்தது. சுல்தான் பாசத்துடன் வளர்த்த கடா முதுகில் பாய்ந்து அவர் உயிரையே குடித்த கொடுமை பற்றி காஸிம் ஃபெரிஷ்டா போன்ற பல வரலாற்று ஆசிரியர்கள் வேதனையுடன் குறிப்பிடுகிறார்கள்.

சுல்தான் ஜலாலுதீன் தலை கீழே துண்டிக்கப்பட்டு வீழ்ந்தவுடன் உடனடியாக அலாவுதீன் படை டெல்லியை நோக்கி வேகமாக முன்னேறியது. செய்தி கேள்விப்பட்ட ராணி முல்லிக் ஜஹான், அவைப் பெரியவர்களிடம் ஆலோசனை செய்யாமல் தப்பாகக் காய் நகர்த்தினார். தன் மகன் ருக்னுதீன் இப்ராஹிமை அவசர அவசரமாகத் தூக்கிக் கொண்டு வந்து அரியணையில் அமர்த்தினார். ஆம், தூக்கிக் கொண்டுதான். காரணம் - இப்ராஹிம் பத்து வயது நிரம்பாத பாலகன்!

முல்தான் பிரதேசத்தின் நிர்வாகத்தை ஏற்றிருந்த மூத்த மகன் ஆர்காலிகான் நல்ல வீரர். அவரை உடனடியாக ராணி அழைத்திருந்தால் அலாவுதீனைச் சற்றேனும் சமாளித்திருக்கலாம். ஆனால், தன் செல்வாக்குப் போய்விடுமோ என்று ராணி அச்சப்பட்டாரோ என்னவோ, ஒரு குட்டிப் பையன் தலையில் அசந்தர்ப்பமான சூழ்நிலையில் மகுடம் ஏறியது. தொடர்ந்து தன் படை வீரர்களைப் பார்த்து, “அந்தத் துரோகி அலாவுதீனை விரட்டி அடியுங்கள்” என்று விஷயம் புரியாமல் ஆணை யிட்டாள் ராணி முல்லிக் ஜஹான்.

எதிர்க்கப் போகிறார்கள் என்று தகவல் வந்தவுடன் “எல்லோரையும் வெட்டித் தள்ளிவிட்டு அரண்மனைக்குள் செல்வோம் சுல்தான்” என்று அலாவுதீனின் தளபதிகள் பரபரத்தனர். “அவசரம் வேண்டாம். அரண்மனைக்குள்ளே மந்திரிப் பிரதானிகளும் வெளியே மக்களும் நம்மீது ஏகமான எரிச்சலில் இருக்கிறார்கள். இத்தனை வெறுப்புக்கு நடுவே அரண்மனைக்குள் போய் நான் நிம்மதியாகத் தூங்க முடியாது. எதற்கும் கூடாரம் அமைத்து ஓய்வெடுப்போம். வேடிக்கை பாருங்கள். வாளை உயர்த்த வேண்டிய அவசியம் இருக்காது என்றே நினைக்கிறேன்!” என்றார் அலாவுதீன் விஷமப் புன்னகையோடு.

உடனடியாகக் கூடாரங்கள் பூத்தன. அமரிக்கையாக அமர்ந்து

மற்றவர்களுடன் மதுக்கோப்பையுடன் சிறிது நேரம் ஓய்வெடுத்த அலாவுதீன், தன் மெய்க் காவலனை அழைத்து “தங்க நாணயங்கள், நகைகள், வைர, வைடூரியங்கள் கொண்ட நூற்றுக்கணக்கான மூட்டைகளில் ஒன்றில் தங்க உருண்டைகள் இருக்கும். அந்த மூட்டையைக் கொண்டுவா. கூடவே ஒரு உண்டி வில்!” என்று ஆணை பிறப்பித்ததைக் கண்டு தளபதிகள் ஒன்றும்புரியாமல் விழித்தனர். பிறகுதான் அந்த அதிசயம் நடந்தது!

ஒரு மூட்டையைத் திறக்கச் செய்த அலாவுதீன் ஒவ்வொரு தங்க உருண்டையாக எடுத்தார். அவற்றை உண்டி வில்லில் பொருத்தி அரண்மனையை நோக்கி எய்ய ஆரம்பித்தார். அரண்மனைப் படை வீரர்கள் மத்தியிலும் மக்கள் பகுதியிலும் ‘விர்’ரென்று தங்க உருண்டைகள் ஜொலித்தவாறு பறந்து சென்று விழுந்தன. சில விநாடிகளில் எதிர் தரப்பில் களேபரம்! வாட்களை வீசியெறிந்து விட்டு ராணியின் படை வீரர்கள் ஓடிவந்து தங்க உருண்டைகளைப் பொறுக்க ஆரம்பித் தார்கள். மக்களும் ஆர்வத்துடன் இந்தச் சேகரிப்பில் சேர்ந்துகொண்டனர்.

‘வந்திருப்பவர் எதிரியல்ல, வள்ளல்!’ என்ற செய்தி மின்னல் வேகத்தில் பரவியது.

பிறகென்ன?!

ஒட்டுமொத்தமாக அரண்மனைப்படை, அலாவுதீன் பக்கம் கட்சி மாறியது. நிராதரவான ராணி முல்லிக் ஜஹான், தன் மூத்த மகன் ஆர்காலிகான் தங்கியிருந்த முல்தான் பிரதேசத்துக்கு ஓட வேண்டி வந்தது.

இப்படியாக, ஒரு துளி வியர்வைகூடச் சிந்தாமல் கம்பீரமாக ஆஸ்தான மண்டபப் படிகளேறி அரியணையில் அமர்ந்தார் அலாவுதீன் கில்ஜி. முடிசூட்டு விழா நடந்தது. அக்டோபர் 3, கி.பி.1296.

அமர்ந்த கையோடு தன் நெருக்கமான வீரர்களை அழைத்த அலாவுதீன் கில்ஜி, “இப்ராஹிம் சுல்தானைக் கைவிட்டுவிட்டு நம்மிடம் வந்த முக்கிய அமைச்சர்கள், தளபதிகளை உடனே தீர்த்துக்கட்டுங்கள். இப்படி கட்சி மாறும் துரோகிகள் எப்போதுமே ஆபத்தானவர்கள்!” என்று ஆணையிட்டார். அலாவுதீன் பக்கம் ஆவலுடன் வந்து சேர்ந்த அத்தனை பேரும் பரலோகம் அனுப்பி வைக்கப்பட்டார்கள்!

முல்தான் நாட்டுக்கு ஓடிய அரச குடும்பத்தையும் சுல்தான் மறக்கவில்லை. மன்னிக்கவுமில்லை. ஜாபர்கான் என்ற தளபதியின் தலைமையில் அலாவுதீன் அனுப்பிய படை கிளம்பிச் சென்று அவர்களைச் சிறைபிடித்தது. ஆர்காலிகானும் இளம் இப்ராஹிமும் கொல்லப்பட்டனர்.

இதுபோன்ற விஷயங்களில் அலாவுதீன் உச்சக்கட்ட கொலை வெறியுடன் நடவடிக்கை எடுப்பதில் இரக்கப்பட்டதே இல்லை. மிக மிக நெருங்கிய விசுவாசிகளைத் தவிர யாரையும் அவர் நம்பியது இல்லை... விட்டுவைத்ததுமில்லை!

வஞ்சகம் மட்டுமல்ல... வீரமும் ஏராளமாக இருந்தது அலாவுதீனுக்கு. கிளர்ந்தெழுந்த பல சிற்றரசர்கள், சுல்தானின் வாள் வீச்சில் ஓட்டமெடுத்தார்கள். எனினும், மங்கோலியர் பிரச்னைதான் தொடர்ந்து தலைவலி தந்தது. இந்தியாவுக்குள் புகுந்த ஒரு பெரும் மங்கோலியப் படையை அலாவுதீனின் தளபதியான ஜாபர்கான் தலைமையில்

கிளம்பிய படை இன்றைய பஞ்சாப், ஜலந்தர் அருகில் எதிர்கொண்டு புரட்டியெடுத்து விட்டது. ஒரு வருடம் கழித்து ஆவேசத்துடன் மறுபடியும் மங்கோலியர்கள் வருகை தந்தார்கள். இம்முறையும் ஜாபர்கான் முன் தாக்குப்பிடிக்க முடியாமல் மாற்றார்கள் ஓட்டமெடுத்தார்கள்.

ஓராண்டு கழித்து கி.பி.1299-ல் குத்லூஹ் கான் என்ற பெரும் வீரன் தலைமையில் மங்கோலியர்கள் விடாப்பிடியாக டெல்லி எல்லையில் புகுந்தார்கள். எதிர்ப்பட்ட சுல்தான் படையின் தலைமையில் ஜாபர்கானைப் பார்த்தவுடன் “மறுபடியும் இந்தத் தளபதியா..?!” என்று மங்கோலியர் களுக்கு வெறுத்துவிட்டது. ஒரு ‘தனி நபர் அரணாக’ நின்று வீரப் போர் புரிந்தார் ஜாபர்கான். அவர் தலைமையில் மற்ற வீரர்களும் பிரமாதமாக வாள் சுழற்றினார்கள். அப்போது தந்திரமாக ஒளிந்திருந்த எதிரிப் படையின் இன்னொரு பகுதி, பின்புறமாக வந்து சூழ்ந்துகொள்ள... மங்கோலிய வியூகத்தில் சிக்கினார் ஜாபர்கான்.

ஒரு விநாடி திகைத்த ஜாபர்கானுக்கு நிலைமையின் விபரீதம் புரிந்தது. மறுகணம், குதிரையில் அமர்ந்திருந்த அந்த வீரரின் வாள் நாலாபுறமும் அனாயாச வேகத்தில் சுழல, ஆயிரக்கணக்கில் சூழ்ந்துகொண்ட மங்கோலியப்படை வீரர்களால் ஜாபர்கானை நெருங்க முடியவில்லை! திணறிப் போன குத்லூஹ்கான் “முதலில் அந்தக் குதிரையைக் கொன்று தள்ளுங்கள்!” என்று அலறினார். தன் எஜமானனுக்காக ஆவேசமாக ஒத்துழைத்த அந்த அற்புதமான குதிரை மீது ஏராளமான ஈட்டிகள் பாய்ந்தன. செத்து வீழ்ந்தது அந்த விசுவாசமான குதிரை. சமாளித்து எழுந்து நின்ற ஜாபர்கானின் வாளையும் ஒரு ஈட்டி வீழ்த்தியது.

வாட்போரில் மட்டுமல்ல... வில்வித்தை யிலும் தேர்ந்தவர் ஜாபர்கான். ஒரு வில்லை எடுத்துக்கொண்டு, விடாமல் போரைத் தொடர்ந்தார் அவர். அவரிடமிருந்து சீறிப் பாய்ந்த அம்புகள் மங்கோலியர்களைச் சிதற அடித்தன.

குத்லூஹ்கான் பிரமித்துப் போனான். குரலை உயர்த்தி “ஜாபர்கான்... நீ ஒரு மாவீரன். நீ இறப்பதை நான் விரும்பவில்லை. தயவு செய்து சரணடைந்துவிடு. தனிப்பட்ட முறையில் உன்னை நான் என் நண்பனாக ஏற்றுக்கொள்ளத் தயார்!” என்று அறிவித்தான்.

“தளபதி என்கிற முறையில் என் பணியைச் செய்யும்போது மரணம் நிகழ்ந்தால் அதைவிடப் பெருமை எனக்குக் கிடைக்காது!” என்று ஜாபர்கானிடமிருந்து பதில் வந்தது.

அதற்கு மேலும் பொறுக்கமாட்டாத மங்கோலியத் தளபதி குத்லூஹ்கான், லேசாகக் கலங்கிய கண்களுடன் தலை அசைக்க, நூற்றுக்கணக்கான மங்கோலிய வீரர்கள் ஏக காலத்தில் பாய்ந்து, கடைசி விநாடி வரை தன் தலைவன் அலாவுதீன் கில்ஜிக்காகப் போரிட்ட ஜாபர்கான் என்ற அந்த மாவீரரை வெட்டிச் சாய்த்தார்கள்.

ஜாபர்கானின் வீரத்தைப் பார்த்துத் திகைத்துப் போன மங்கோலியர்கள் என்ன நினைத்தார்களோ, அந்த வீரத் தளபதி வீழ்ந்த பிறகு எதிரிப்படை ஏனோ திரும்பிச் சென்றுவிட்டது. அதற்குப் பிறகு பல ஆண்டுகள் தங்கள் குதிரைகள் தடுமாறினாலோ, முரண்டு பிடித்தாலோ “ஜாபர்கான் ஆவி எதிர்ப்பட்டிருக்கும்!” என்று மங்கோலியர்கள் சொல்வது வழக்கமாக இருந்ததாகச் சரித்திர ஆசிரியர்களால் கூறப்படுகிறது.

தன்னைத் தவிர இன்னொருவர் ஹீரோவாகக் கருதப்படுவதை அலாவுதீனால் தாங்க முடியாது. ஜாபர்கான் வீரத்தை நாலு பேர் புகழ்ந்தது அலாவுதீன் மனதில் கொஞ்ச காலமாகப் பொறாமைத் தீயை மூட்டியிருந்தது. அந்த மாவீரர் தனக்காக உயிர் விட்ட செய்தி வந்தவுடன் “அப்பாடா! ஒழிந்தானா ஜாபர்கான்?!” என்ற விஷம் தோய்ந்த வார்த்தைகள் சுல்தானிடமிருந்து வந்தன!

அலாவுதீனின் கொலைவெறி தொடர்ந்து நீடித்தது. மறைந்த சுல்தான் ஜலாலுதீன் காலத்திலிருந்து இஸ்லாமிய மதம் மாறி டெல்லி அருகே வாழ்ந்து கொண்டிருந்தனர், பல்லாயிரக்கணக்கான மங்கோலியர்கள். அவர்களில் சிலர் தன்னைக் கொல்லத் திட்டம் போட்டதாகக் கேள்விப்பட்டார் சுல்தான்.

விளைவு - ‘புதிய முஸ்லிம்கள்’ என்று அழைக்கப்பட்ட அந்தப் பல்லாயிரக் கணக்கான நிராயுதபாணிகளை அலாவுதீனின் படை சூழ்ந்துகொண்டது. ஒரே நாளில் முப்பதாயிரம் பேர் ஈவு இரக்கம் இல்லாமல் வெட்டி வீழ்த்தப்பட்டனர்.

தொடர்ந்து...

பிரச்னை தந்துகொண்டிருந்த குஜராத் பிரதேசத்தை நோக்கி அலாவுதீன் படை கிளம்பியது. எவ்வளவோ வீரத்தோடு போர் புரிந்தும் ராஜபுத்திர அரசர் ராய் கர்ண தேவாவினால் சுல்தான் படையைச் சமாளிக்க முடியவில்லை. குஜராத், சுல்தான் கையில் விழுந்தது. கூடவே அழகு, கவர்ச்சி, புத்திசாலித்தனம் நிறைந்த ஓர் அடிமையும் வந்து சேர்ந்தான். ‘அலி’யான இவன் பெயர் மாலிக் கஃபூர். இந்த அடிமை ஒரு இந்து. பிறகு, முஸ்லிமாக மதம் மாறியவன். அலியாக இருந்தாலும் மாலிக் கஃபூர் ஒரு பெரும் வீரன். போர்த் தந்திரங்களில் தேர்ந்தவன். இது தெரிந்த அலாவுதீனுக்கு ஏக மகிழ்ச்சி! கஃபூரைப் பிரதம தளபதி அளவுக்குப் பதவி உயர்வு தந்து அவன் மீது எக்கச்சக்கமான நம்பிக்கை வைத்தார் சுல்தான். அதற்கேற்ப, சென்ற இடமெல்லாம் வென்று திரும்பினான் மாலிக் கஃபூர்.

ராஜஸ்தானில் உள்ள சித்தூரில் நடந்தது சரித்திரப் பிரசித்தி பெற்ற போர். முனைப்பாக நடந்த இந்த யுத்தத்தில் ராஜபுத்திரப் படை தோற்று ராணா ரத்தன் சிங் உயிரிழந்ததைக் கேள்விப்பட்ட சித்தூர் ராணி பத்மினியும் மற்ற அந்தப்புரப் பெண்களும் தீக்குளித்து உயிர்த் தியாகம் செய்தார்கள்.

சித்தூரை வெற்றிகண்ட அலாவுதீனின் படை தெற்கு நோக்கிக் கிளம்பியது. கோதாவரி நதிக்கரையில் உள்ள தேவகிரி ராஜ்யம், தெலுங்கானா பகுதி, வாரங்கல், மைசூர் பிரதேசங்களை ஆண்ட மன்னர்கள் எல்லோரும் அலாவுதீனிடம் அவரது தளபதி மாலிக் கஃபூரிடமும் தோற்றுப் போனார்கள்.

பிறகு, மாலிக் கஃபூர் படை தெற்கே மதுரையில் புகுந்தது. மாறவர்மன் குலசேகரப் பாண்டியனின் இரு மகன்களான சுந்தர பாண்டியனுக்கும் வீரபாண்டியனுக்கும் இடையே நிலவிய கோஷ்டிச் சண்டை மாலிக் கஃபூர் வேலையைச் சுலபமாக்கியது!

தெற்குப் படையெடுப்பை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு டெல்லிக்குத் திரும்பினான் மாலிக் கஃபூர். கூடவே ஏராளமான செல்வத்தோடு அறுநூறு யானைகளையும், இருபதினாயிரம் குதிரைகளையும் கைப்பற்றி சுல்தானுக்குப் பரிசாக எடுத்துச் சென்றான் இந்தத் தளபதி. தன் நம்பிக்கைக்குரிய தளபதிக்கு மேலும் பதவி உயர்வு,

பரிசுகள் தந்து பாராட்டினார் அலாவுதீன் கில்ஜி.

தொடர்ந்து போரில் வெற்றிகள் குவியக் குவிய, சுல்தான் தலை கனத்துப் போனது. அகம்பாவம் அதிகமானது. தன்னை 'இரண்டாவது அலெக்ஸாந்தர்' என்று அவ்வப்போது கர்வத்துடன் சொல்லிக் கொள்ள ஆரம்பித்தார் அலாவுதீன்.

"குதுப்மினாரைத் தூக்கிச் சாப்பிடும் உயரத்துக்கு இன்னொரு மினாரைக் கட்டுவேன்!" என்று முழங்கிய சுல்தான், அதற்கான வேலைகளைத் துவக்கினார். ஆண்டவன் சித்தம் வேறுவிதமாக இருந்தது! எத்தனையோ அரசுகளை வெற்றிகொண்ட சுல்தானால் குதுப்மினாரை வெற்றிகொள்ள முடியவில்லை. அரைகுறையாக, முதல் மாடி வரை மட்டுமே எழும்பிய ஒரு அரைகுறை 'மினாரை' இன்றும் நாம் குதுப்மினார் அருகே காணலாம்.

நினைத்திருந்தால் அலாவுதீனால் இன்னொரு பல்பனாக உருவெடுத்திருக்க முடியும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக பல்பனின் நிதானமான, தீர்க்கமான, சட்டதிட்டங்களுக்கு மதிப்பு தரும் அணுகு முறை அலாவுதீனிடம் காணப்படவில்லை. இருப்பினும், அலாவுதீன் ஆட்சியில் விலைவாசிகள் கட்டுக்குள் இருந்தன. ஒரு பஞ்சம் ஏற்பட்டபோதும் அத்தியாவசியப் பொருட்கள் மக்களுக்கு முறையாக விநியோகிக்கப்பட்டன. வியாபாரிகள் இரவு நேரத்தில்கூடப் பயமில்லாமல் தங்கள் சரக்குகளுடன் நாடு முழுவதும் பயணித்தனர். ஒரு கொள்ளைக்காரர்கூட நாட்டில் இல்லாததுதான் காரணம்!

போகப் போக, அதிகாரபோதை தலைக்கேற, 'என்னால் எதையும் சாதிக்க முடியும்!' என்ற எண்ணம் அலாவுதீன் கில்ஜி மூளையில் மேலோங்கியது. 'மது அருந்து கிறோம் பேர்வழி என்று கூட்டமாகப் பிரபுக்கள் சங்கமிக்கிறார்கள். சதித் திட்டங்கள் உருவாக இதுவும் காரணம்!' என்று முடிவெடுத்த சுல்தான், உடனே சாம்ராஜ்யத்தில் பூரண மதுவிலக்கை அமலுக்குக் கொண்டுவந்தார்! முதல் ஆளாகத் தன் மதுக்கோப்பைகளையும் ஜாடிகளையும் தர்பாருக்குக் கொண்டுவந்து கீழே போட்டு உடைத்தார். ஆனால், மதுவிலக்குத் திட்டம் தோல்வியைத் தழுவியது. டெல்லி சந்து பொந்துகளில் எல்லாம் கள்ளச்சாராயம் காய்ச்ச ஆரம்பித்ததுதான் காரணம்!

கடைசியில் அலாவுதின் கில்ஜியின் கிறுக்குத்தனம் அளவுக்கு மிஞ்சியது. யாருக்கும் தோன்றாத விபரீத எண்ணம் விஷச் செடியாக அலாவுதீன் மனதில் துளிர் விட்டது. தன்னைக் கடவுளின் ஒரு தூதர் என்று ஏன் அழைக்கக்கூடாது எனத் தனக்குத்தானே கேட்டுக்கொண்டார் சுல்தான். அலா-உல்-மூல்க் என்னும் டெல்லியில் நீதிபதி ஸ்தானத்தில் உள்ள முதிர்ந்த மரியாதைக்குரிய அறிஞரை அழைத்து இதுபற்றி கருத்துக் கேட்டார்.

திகைத்துப் போனார் பெரியவர் மூல்க். பிறகு சுதாரித்துக் கொண்டு "சுல்தான்! இந்த ஆபத்தான எண்ணத்தை உடனே விட்டு விடுங்கள். சில சமயம் கடவுளின் தூதுவர்கள் அரசரின் கடமைகளை நிறைவேற்றியது உண்டுதான். ஆனால், மன்னர்கள் எல்லாம் இறைவனின் தூதுவராகிவிட முடியாது. மன்னர்கள் இன்று வருவார்கள்... நாளை போவார்கள். ஆனால், 'அல்லாஹ்' ஆட்சி நிரந்தரமானது. முடிவு இல்லாதது!" என்று துணிவுடன் நிமிர்ந்து நின்று எடுத்துச் சொல்ல, சபையில் இருந்த அடிவருடிகள் சிலர், "முதியவரின் தலை அவ்வளவுதான்" என்று முடிவுகட்டினார்கள்.

ஆனால்...

சுல்தான், வெகுநேரம் அந்த அறிஞரின் முகத்தை ஊடுருவிப் பார்த்தார். பிறகு, மெள்ளத் தலையசைத்து “நீங்கள் சொல்வது சரிதான்... தவறு செய்துவிட்டேன்!” என்று ஒப்புக்கொண்டார் அலாவுதீன் கில்ஜி, பெரியவருக்குப் பரிசுகள் தந்து கௌரவித்து மரியாதையுடன் திருப்பி அனுப்பினார்..!

10

மாலிக் கஃபூர்.. முபாரக் கில்ஜி.. குஸ்ரூகான்..

அந்தப்புரத்து ஆண்கள்!

‘எனக்கு எல்லாம் தெரியும். நான் வைத்ததுதான் சட்டம். நான் நினைப்பது நடந்தாக வேண்டும்!’ என்கிற மமதையோடு அமைந்த அலாவுதீன் கில்ஜியின் சர்வாதிகாரத்துக்கும் முடிவு வந்து சேர்ந்தது. போகப்போக, ‘அலி’யாக வந்து சேர்ந்து சேனாதிபதியாக உயர்ந்த மாலிக் கஃபூர் நினைத்ததுதான் அரண்மனையில் நடந்தது. அவன் வைத்ததுதான் சட்டம் என்றானது. ஒரேடியாக மாலிக் கஃபூரின் கைப்பாவையானார் அலாவுதீன்!

வஞ்சகத்தையும், தேவையில்லாத கொலைவெறியையும் முக்கிய ஆயுதங்களாகப் பயன்படுத்திய அலாவுதீனின் கடைசிக் காலம் பரிதாபமானது...

திடீரென்று சுல்தானை வியாதிகள் பீடித்தன. நீர் சேர்ந்து அவர் கை கால்கள் வீங்கின. ரத்தக் கொதிப்பும் சேர்ந்து கொள்ள, படுக்கையில் வீழ்ந்தார் அலாவுதீன். மாலிக் கஃபூர், ‘ஜாலி’க் கஃபூர் ஆனான். “உங்களைக் கொல்ல மகாராணியும் தங்கள் மகன்களும் சதித்திட்டம் தீட்டுகிறார்கள் மன்னா!” என்று வஞ்சகமாக வேந்தனின் காதில் கிசுகிசுத்தான் அவன். நோயின் வேதனையில் ஏற்கெனவே மனநிலை பாதிக்கப்பட்டு எரிச்சலில் இருந்த சுல்தான், சேனாதிபதி சொன்னதைக் கேட்டுத் தன் குடும்பத்தையே சிறையில் தள்ளுவதற்கான ஆணையில் கையொப்பம் இட்டார்.

இதற்குள் சுல்தான் ஆட்சியை எதிர்த்து குஜராத்திலும் ராஜஸ்தானிலும் மகாராஷ்டிரத்திலும் போராட்டங்கள் வெடித்தன. அங்கேயெல்லாம் இருத்தி வைக்கப்பட்டிருந்த டெல்லிப் படைகள் விரட்டியடிக்கப்பட்டன. ஜாபர்கான் போன்ற விசுவாசமான வீரத் தளபதிகள் இல்லாததும் ஒரு காரணம்! இந்தத் தோல்விச் செய்திகள் படுக்கையில் வலியோடு புரண்டுகொண்டிருந்த அலாவுதீன் கில்ஜியின் காதுகளில் விழ, துவண்டுபோய் அழுதார் அலாவுதீன்.

ஒருநாள் இரவு படுக்கையில் அரற்றிக்கொண்டிருந்த அலாவுதீன் அருகே மருந்துக் குப்பியுடன் போய் நின்றான் மாலிக் கஃபூர். ‘ஒரு மருந்தும் தேவையில்லை’ என்று புரண்டு படுக்கப் பார்த்த சுல்தானைப் பலவந்தமாகத் திருப்பி, அவர் வாயில் மருந்துக் குப்பியில் இருந்த கொடிய விஷத்தை ஊற்றிக் காரியத்தை முடித்தான் அந்த நயவஞ்சகச் சேனாதிபதி.

இருபது ஆண்டு காலம் இந்தியாவையே நடுங்க வைத்துக் கொண்டிருந்த சுல்தான், இந்த வகையில் ஒரு ‘அலி’யின் கையால் கொடூரமாக உயிரிழந்தது ஜனவரி 2, கி.பி. 1316-ல்.

‘அலாவுதீனை அரவணைத்து அன்புடன் வளர்த்த மாமன் ஜலாலுதீன் கில்ஜியை நன்றியில்லாமல் கொலை செய்த பாவத்துக்கு ‘அல்லாஹ்’ அளித்த தண்டனைதான் இது...’ என்று வரலாற்றுப் பேராசிரியர்கள் அலாவுதீனின் பரிதாப மரணத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள்.

அலாவுதீன் கில்ஜி இறந்த இரண்டாவது நாள் சபையைக் கூட்டிய மாலிக் கஃபூர், சுல்தான் எழுதியதாகக் கூறப்பட்ட உயிலைப் படித்தான். பொய்யான ஒரு உயில்! அதன் படி, மறைந்த சுல்தானின் மூத்த மகன்கள் சதித்திட்டங்கள் தீட்டியதால் அவர்களுக்கு அரியணையில் எந்த உரிமையும் இல்லை என்றும் கடைசி மகன் உமர்கான் கில்ஜிதான் அலாவுதீன் வாரிசு என்றும் அறிவித்த மாலிக் கஃபூர், ஏழு வயது நிரம்பாத உமர்கானை திகைத்துப் போன சபையினர் முன்னிலையில் சிம்மாசனத்தில் அமர்த்தினான். “இளவரசருக்கு என்னைக் காப்பாளராக நியமித்திருக்கிறார் அலாவுதீன்” என்றும் கூடவே அறிவித்துக் கொண்டான்.

அலாவுதீன் கில்ஜி தொடங்கிய அரைகுறை டவர்...

அரசுக் கட்டில் ஒரு அறியாச் சிறுவனின் தொட்டிலானது. ஆட்டம் போட ஆரம்பித்தான் அலி. முதல் வேலையாக, சிறையில் தள்ளப்பட்ட அலாவுதீனின் பிள்ளைகளான கிஸிர்கான், ஷாதிகான் இருவருடைய பார்வையையும் பறிக்கச் சொல்லி ஆணையிட்டான். ‘தர்பூசணிப் பழத்தின் விதைகளைக் கத்தியால் சுழித்துச் சுரண்டி எடுப்பதைப்போல’ சிறையில் பரிதாபமாக வாடிக்கொண்டிருந்த இரு இளவரசர்களின் கண்களும் அகற்றப் பட்டதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

பட்டத்துக்கு வந்த பாலகனின் தாயை (அலாவுதீனின் மூன்றாவது மனைவி) தேவையில்லாமல் ஒரு ‘பந்தா’வுக்காக மணந்துகொண்டு,

தன் கொடூரச் செயலைக் கொண்டாடினான் மாலிக் கஃபூர் (மாலிக் கஃபூர் ‘ஒரு அலி’ என்பதை மறக்க வேண்டாம்!).

மிச்சமிருந்தது முபாரக் என்னும் ஒரு இளவரசர். அவர் அலாவுதீனின் இரண்டாம் மனைவியின் மகன். அந்த இளவரசர், மாலிக் கஃபூரின் நினைவுக்கு வர... அரண்மனையில் ஓர் அறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த முபாரக் தலையைச் சீவச்சொல்லி ஆணை பிறந்தது. சில வீரர்கள் முபாரக் தங்கியிருந்த அறையை நோக்கிக் கிளம்பிச் சென்றார்கள்.

எப்படியோ இந்த விஷயம் முபாரக் காதுக்குப் போய்விட, அந்த ஆபத்தான தருணத்திலும் அந்த இளவரசரின் மூளை வேலை செய்தது! தான் அணிந்து கொண்டிருந்த ‘நெக்லஸை’க் கழற்றி அதில் இருந்த முத்துக்களையும் வைரங்களையும் பிய்த்து எடுத்து, கதவுக்கு வெளியே கொலைகாரர்கள் காலடியோசை கேட்ட மாத்திரத்தில் உருட்டித் தள்ளினார் இளவரசர் முபாரக்!

உருண்டு வந்து பரவிய வைரங்களுக்காக வராண்டாவில் வெட்டுக் குத்து ஏற்படும் அளவுக்கு அடியாட்களுக்குள் அடிதடி நிகழ ஆரம்பித்தது. அந்தச் சமயம் பார்த்து அங்கு வந்து சேர்ந்த ஒரு மெய்க்காவலன், “நன்றி மறந்து மன்னரின் மகனைக் கொல்ல வெட்கமில்லையா உங்களுக்கு? மாலிக் கஃபூர் ஒரு துரோகி. அந்த ஈனப்பிறவிக்கு அல்லவா நாம் தண்டனை தரவேண்டும்?” என்று எடுத்துச் சொல்ல... இளவரசரைக் கொல்ல வந்த வீரர்கள் மனம் மாறினார்கள். வந்த வழியே உருவிய வாட்களுடன் திரும்பினார்கள். - இம்முறை மாலிக் கஃபூரின் படுக்கறையை நோக்கி. கூடவே, அந்த வீரர்கள் மாலிக் கஃபூருக்கு நெருக்கமான சில அந்தப்புர அலிகளையும் அழைத்துச் சென்றார்கள். அலிகள் அணிந்திருந்த வளையோசை கேட்ட மாலிக் கஃபூர் கதவைத் திறக்க... உள்ளே பாய்ந்த வீரர்கள், திடுக்கிட்டு, ஓடித் தப்பிக்கப் பார்த்த கஃபூரைக் கண்டதுண்டமாக வெட்டித் தள்ளினார்கள். அலாவுதீன் இறந்து சரியாக 35-வது நாளில்!

துக்ளகாபாத் - இன்று..

“மேன்மை தங்கிய இளவரசர் அவர்களே...!” என்ற குரல் கேட்டுத் திரும்பிய முபாரக், மாலை மரியாதைகளோடு மந்திரிப் பிரதானிகள் தன் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து நின்றதைப் பார்த்ததும், “மாலிக் கஃபூர் எங்கே?” என்று நடுங்கியவாறு கேட்டார். “அந்த ஆஸ்தான துரோகியைப் பரலோகம் அனுப்பியாகி விட்டது!” என்று பதில் வந்தது. மகிழ்ச்சியில் துள்ளிய முபாரக் தர்பாருக்கு வந்து, சிம்மாசனத்தில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் உமர் கில்ஜியைச் செல்லமாகத் தட்டிக் கொடுத்துவிட்டு, “தம்பியே ஆளட்டும்... நான் அவனுக்குப் பாதுகாப்பாக இருக்கிறேன். எனக்கு எதற்கு அரியணை?” என்றார். அந்த வார்த்தை இரண்டு மாதங்கள்தான் நீடித்தது. “நாட்டைப் பல பிரச்னைகள் சூழ்ந்திருக்கும் இச்சமயத்தில் நான் மன்னனாக அமர்ந்தால் தான் மக்களுக்குச் சற்றேனும் பயமாக இருக்கும்!” என்று அறிவிப்புச் செய்துவிட்டு சிறுவனைக் கீழே இறக்கி, மகுடத்தைத் தன் தலையில் சூட்டிக் கொண்டார் முபாரக் கில்ஜி.



இன்னொரு பரிதாபத் தோற்றம்...

மூன்று மாதங்கள் மட்டுமே ‘ஆட்சி’ செய்த குழந்தை உமர் கில்ஜியைச் சிறைச் சாலைக்கு அழைத்துச் சென்று, இரு கண்களிலும் பழுக்கக் காய்ச்சின இரும்பைப் பதித்துக் கொடுமை புரிந்தார்கள் முபாரக்கின் அடியாட்கள்.

ஆகஸ்டு 1316-ல் பட்டத்துக்கு வந்த சுல்தான் முபாரக் கில்ஜியை அரசர் என்பதைவிட, “அரியணைக்கு வந்து சேர்ந்த ஒரு அவமானச் சின்னம்” என்று அழைக் கலாம்! எடுத்த எடுப்பில், சிறையில் இருந்த 17,000 கைதிகளுக்கு ஒட்டுமொத்தமாக விடுதலை தந்து, தான் பட்டத்துக்கு வந்ததைக் கொண்டாடினார் சுல்தான் முபாரக். விடுதலையானவர்களில் பாதிக்குமேல் கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள்! பிறகு, ராணுவ வீரர்கள் எல்லோருக்கும் ஆறு மாத

போனஸ் அளிக்கச் சொல்லி சுல்தானிடமிருந்து ஆணை வந்தது. அதோடு அந்தப்புரம் சென்று அமர்ந்தவர்தான். அடியோடு நாட்டை மறந்து போனார் இந்த அரசர்! 'சுல்தானின் நான்கு ஆண்டுகால ஆட்சியில் குடிப்பது, சல்லாபிப்பது தவிர, வேறு எதுவும் அவர் செய்ததாகத் தெரிய வில்லை' என்று முபாரக் கில்ஜியின் ஆட்சியை விமரிசிக்கிறார் வரலாற்று ஆசிரியர் ஜியாவுதீன் பரானி.

இந்நேரத்தில்தான் அந்தப்புரத்தில் ஒரு அலங்கோலம் நிகழ்ந்தது. காமக்களியாட்டம் என்பது பெண்களோடுதான் என்ற நேர்வழியை மறந்தார் சுல்தான். தனக்குச் சேவகம் புரிய குஜராத்திலிருந்து கொண்டு வரப்பட்ட மல்லிக் குஸ்ரூ என்னும் இந்து இளைஞனிடம் காதல் வயப்பட்டார் முபாரக் கில்ஜி!

"அந்தப்புரம் என்பது இந்த இரு ஆண்களுக்கு மட்டும் என்ற நிலைமை தலையிலடித்துக்கொள்ளும் வகையில் தலைகீழாக மாறியது. மல்லிக் குஸ்ரூவின் புதிய சேவகத்தில் புல்லரித்துப் போன முபாரக், அவனைத் தன் பிரதம மந்திரியாக ஆக்கிக்கொண்டார்! மற்ற பிரபுக்களும் பிரதானிகளும் முகம் சுளித்ததைக் கண்டு, "என் சொந்த விஷயத்தில் யாரும் தலையிட வேண்டாம். குஸ்ரூ ஒரு இந்து என்பதால் தானே உங்களுக்கு வயிற்றெரிச்சல்?" என்று சொன்ன சுல்தான், தன் நண்பனை அழைத்துக்கொண்டு வந்து அங்கேயே குஸ்ரூவை மதம் மாறச் சொல்லி ஆணை யிட்டார். உடனே தன் பெயரை 'குஸ்ரூகான்' என்று மாற்றிக்கொண்டதாக அறிவித்தான் மல்லிக் குஸ்ரூ! இப்படித் தங்கள் தகாத நட்புக்காக இருவருமே தங்கள் உன்னதமான மதங்களைக் கொச்சைப்படுத்தினார்கள்.

பொறுத்துப் பார்த்த மந்திரிகள், "சுல்தான்! குஜராத் ராஜ்யத்தில் தங்களை எதிர்த்துக் கிளர்ச்சி பெரிதாக வெடித்துக்கொண்டு இருக்கிறது... அதையும் சற்றுக் கவனித்தால் நல்லது" என்று எடுத்துச் சொன்னார்கள். அய்ன்-உல்-மூல்க் என்ற திறமைவாய்ந்த தளபதிகள் தலைமையில் முபாரக் கில்ஜி அனுப்பிய படை குஜராத்தை வழிக்குக் கொண்டு வந்தது. பிறகு கோதாவரி நதியைச் சார்ந்த தேவகிரியை ஆண்ட மன்னர் ஹரபாலதேவர் புரட்சிக்கொடி தூக்க, முபாரக் நேரடியாக ஒரு பெரும் படையோடு கிளம்பினார். டெல்லி சுல்தானின் பெரும் படையை தேவகிரி மன்னரால் சமாளிக்க முடியவில்லை. அவரைச் சிறைப்பிடித்துக் கொண்டு வந்தார்கள். அங்கேயே எல்லோர் முன்னிலையிலும் ஹரபாலதேவரின் தோல் முழுமையாக உரிக்கப்பட்ட கொடுமை நிகழ்ந்தது. பிறகு அவர் தலையை வெட்டி எடுத்து கோட்டை முகப்பில் ஈட்டியில் பொருத்தி வைத்தார்கள் முபாரக்கின் வீரர்கள்.

இதற்குள் தெலுங்கானாவுக்குப் படையுடன் சென்ற குஸ்ரூகான் வெற்றி பெற்றுத் திரும்ப, சுல்தான் முபாரக் கில்ஜிக்குத் தலைகால் புரியவில்லை. டெல்லிக்குத் திரும்பியவுடன் நண்பன் குஸ்ரூகானை ஆரத் தழுவிக்கொண்டார் சுல்தான். ஏற்கெனவே சீரழிந்துவிட்டிருந்த டெல்லியின் மகோன்னதமான அரண்மனை, படுகேவலமாகப் போனது. மதிப்புக்குரிய பிரபுக்கள், அறிஞர்கள் யாரும் அரண்மனைப் பக்கம் தலைகாட்டுவதைத் தவிர்த்தார்கள். வந்து போனவர்கள், விரசமாகப் பாடும் இசைக் கலைஞர்களும் விபரீதமான காம விளையாட்டுகளில் தேர்ந்த விபசாரிகளும் தான்!

திறமை மிகுந்த சுல்தான்கள் வாழ்ந்த மாளிகை, ஒரு கீழ்த்தரமான கேளிக்கைக் கூடமாக மாறியது கண்டு பிரபுக்களும் மதகுருமார்களும்

குமுறினர்.

முபாரக் கில்ஜிக்குச் சிறுவயதில் ஆசிரியராக இருந்த காஜி ஜியாவுதீன் என்னும் பேரறிஞர் எப்படியோ தடைகளைச் சமாளித்துச் சுல்தானைச் சந்தித்து அறிவுரை கூற ஆரம்பித்தார். பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்த குஸ்ரூகான், அழகிய மங்கை போல உடை அணிந்துகொண்டு உதட்டுச் சாயம் பூசிக்கொண்டு ஒய்யாரமாக உள்ளே நுழைய... அந்தக் கணமே முபாரக் கில்ஜியின் அறிவு அடியோடு மழுங்கியது. ஆசிரியர் வெளியேற்றப்பட்டார். வெளியே தோட்டத்தில் அந்த நல்ல மனம் கொண்ட அறிஞரை இழுத்துச் சென்று குஸ்ரூகானின் ஆட்கள் குத்திச் சாய்த்தனர். ‘ஐயோ!’ என்று அந்த ஆசிரியர் வெளிப்படுத்திய அலறல், அந்தப்புரத்தில் இருந்த முபாரக் காதில் விழுந்தது. “என்ன சத்தம் அது?” என்று எழுந்தார் முபாரக் கில்ஜி...

வெளியே நிகழும் கொலையை நேரில் பார்த்தால் தன் சுயரூபம் வெளிப்பட்டுவிடும் என்று புரிந்துகொண்ட குஸ்ரூகான், ‘இனியும் சுல்தானை விட்டு வைக்கக்கூடாது. நான் நாடாள வேண்டிய தருணம் வந்துவிட்டது’ என்று முடிவுகட்டி முபாரக் கில்ஜியை ஓடிச் சென்று மடக்கினான். முதன்முறையாக மன்னருக்கு ‘நண்பன்’ மீது சந்தேகம் வந்து விட்டது. குஸ்ரூகானை அகற்றிவிட்டு வெளியேறப் பார்த்த சுல்தானை முடியைப் பிடித்துக் கீழே தள்ளினான் - இதுவரை நெருங்கிய நண்பனாக நடித்துவந்த அந்த நயவஞ்சக நரி. கண்களில் திகைப்போடு சுல்தான் எசகுதப்பாகக் கதவுக்கு அருகில் கோணல் மாணலாக விழ, குஸ்ரூகான் கொடுத்த குரலில் அவனுக்கு விசுவாசமான காவலாளிகள் உள்ளே புகுந்தனர்.

சுல்தானை அவர்கள் அமுக்கிப் பிடித்துக் கொள்ள, வாளை எடுத்து ஒரே வீச்சில் தன்னைச் சீராட்டிய எஜமானனின் தலையைத் துண்டாக்கினான் அந்தத் துரோகி. இந்தக் கொலை நிகழ்ந்தது மார்ச் 24, கி.பி.1321-ல்.

துண்டாக்கப்பட்ட சுல்தானின் தலையை அரண்மனை முற்றத்தில் தூக்கியெறிந்த குஸ்ரூகான், உடனே வீரர்களுடன் சிறைச் சாலைக்குச் சென்றான். அங்கே சிறையில் எலும்புக்கூடாக முடங்கிக் கிடந்த மற்ற இளவரசர்களை (சில மாதங்களே சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த சிறுவன் உமர் கில்ஜி உட்பட) வெட்டிக் கொன்றார்கள்.

பிறகு அந்த வெறிபிடித்த கும்பல் அந்தப் புரத்துக்குள் நுழைந்தது. அலாவுதீன் கில்ஜி மற்றும் முபாரக் கில்ஜியின் குடும்பப் பெண்களை மானபங்கப்படுத்தி ஆட்டம் போட்டது.

மறுநாள் காலை, அடுத்த சுல்தானாகத் தன்னைத்தானே அறிவித்துக்கொண்டு அரியணையில் அமர்ந்தார் குஸ்ரூகான். வாழ்ந்தவிதத்தால் இந்து மதத்தைக் கேவலப்படுத்திய இந்தத் திடீர் மன்னன், தான் மாறிய மதத்தையும் கேவலப் படுத்தினான். இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களை நாசப்படுத்தினான். டெல்லிவாழ் மக்கள் இந்தக் கேடுகெட்ட ஆட்சியைப் பார்த்துத் திகைத்துப் போனார்கள்.

பொறுக்க முடியாத பிரபுக்கள், டெல்லி ஆட்சியின் கீழ் இருந்த லாகூரை நிர்வகித்து வந்த கியாஸுதீன் துக்ளக் என்னும் திறமை வாய்ந்த பிரபுவுக்குத் தகவல் சொல்லி அனுப்பினார்கள். திகைத்துப்போன கியாஸுதீன் உடனடியாக ஒரு படை திரட்டிக்கொண்டு டெல்லிக்கு விரைந்தார்.

டெல்லி கோட்டைக்கு வெளியே நடந்த சுருக்கமான யுத்தத்தில்

குஸ்ரூகானின் படை சிதறி ஓடியது. தோற்றுவிட்டோம் என்று புரிந்தவுடன் ஓட்டம் பிடித்த குஸ்ரூகான், ஒளிந்துகொள்ள தேர்ந்தெடுத்த இடம் டெல்லிக்கு வெளியே உள்ள இடுகாட்டில் ஒரு கல்லறைக்கு அடியில்!

கியாஸுதீன் துக்ளக்கின் திறமையான படை வீரர்கள், குஸ்ரூகானைத் தோண்டித் துருவிப் பிடித்து இழுத்து வந்தார்கள். கோட்டைக்கு வெளியே நாற்சந்தி கூடும் இடத்தில் குஸ்ரூகானின் உடல், தலைவேறு, கைவேறு, கால் வேறாகப் பிய்த்து எடுக்கப் பட்டது.

இப்படியாக, ஒரு தனிப்பட்ட இருவரின் கீழ்த்தரமான ‘நட்பு’, கொலைவெறியில் கொண்டுவிட்டு கில்ஜி வம்சத்துக்கே முடிவு கட்டியது.

மந்திரிப் பிரதானிகளும் மக்களும் விரும்பிக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, மகுடம் சூட்டிக்கொள்ள இசைந்தார் கியாஸுதீன் துக்ளக்.

இவர்தான் சரித்திரப் பிரசித்திபெற்ற, பிரச்னைக்குரிய முகமது பின் துக்ளக்கின் தந்தை!

11

கியாஸுதீன் துக்ளக்.. முகமது பின் துக்ளக்..

‘ஹனூஸ் தில்லி தூர் அஸ்த்’!

டெல்லியில் கில்ஜி வம்சத்தை முடித்து வைத்த கியாஸுதீன் துக்ளக்கின் தந்தை ஒரு முஸ்லிம். தாய் ராஜபுத்திர இனத்தைச் சேர்ந்த இந்து. இந்தக் காதல் தம்பதிக்கு பிறந்த கியாஸுதீன், தான் ஒரு சாம்ராஜ்யத்தை ஆளப்போகிறோம் என்று கனவுகூடக் கண்டிருக்கமாட்டார். அலாவுதீன் கில்ஜி ஆட்சியில் வடக்கு எல்லையில் ஒரு திறமையான தளபதியாக மட்டுமே பணிபுரிந்து வந்த கியாஸுதீன் வாழ்க்கையில் விதி வியப்பாக விளையாடி, அவரை டெல்லிக்குக் கொண்டு சேர்த்தது.

புகழ்பெற்ற தலைநகரை அலங்கோலமாக ஆட்சி புரிந்து கேவலப்படுத்திய ‘ஆண் வைப்பாட்டி’ குஸ்ரூகான் செத்து வீழ்ந்த பிறகு, அவமானத்தால் அதுவரை தலை குனிந்திருந்த மதகுருமார்கள் மற்றும் அமைச்சர்கள் தலை நிமிர்ந்தார்கள். நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள். கியாஸுதீன் துக்ளக்கை வரவேற்கத் தயாரானார்கள். மகிழ்ச்சி ஆரவாரத்துடன் மலர் தூவ மக்கள் கூட்டம் ஏற்கெனவே வெளியே காத்திருந்தது.

வெற்றி ஊர்வலத்தின் தலைமையில், குதிரையில் அமர்ந்தபடி ஆஸ்தான மண்டபம் வரை வந்த கியாஸுதீனின் முகமோ திடீரென்று மாறியது. உள்ளே, தொலைவில் மின்னிய அரியணையைப் பார்த்ததும் அவர் கண்களில் நீர் பெருக் கெடுத்தது. குதிரையிலிருந்து தாவி இறங்கி, அங்கேயே படிக்கட்டுகளில் அமர்ந்த அவர் ‘ஓ’வென அழ ஆரம்பித்தார். ‘என்னவோ ஏதோ’ என்று அவையோரிடையே விபரீத மௌனம் நிலவியது.

பிறகு, ஒருவழியாகத் தலையை நிமிர்த்திய கியாஸுதீன் உணர்ச்சிகரமாக முழக்கமிட்டார் - “என் அன்புக்குரிய மக்கள் முன்பும் அவைப் பெரியவர்கள் முன்பும் மண்டியிட்டு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் வாளை உயர்த்தியது அரியணையில் அமர்வதற்காக அல்ல... ஒரு கொடூரமான மிருகத்தை அப்புறப்படுத்துவதற்காகத்தான்! மாமனார் அலாவுதீன் கில்ஜியிடம் சேவகம் புரிந்த நான் அவர் அமர்ந்த இடத்தில் எப்படி அமர்வது?

வேண்டாம் இந்த அவமரியாதை! அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குழந்தை இருந்தால்கூடப் போதும்... தயவு செய்து அழைத்து வாருங்கள். நாம் எல்லோரும் அந்த வாரிசுக்குக் காப்பாளர்களாக இருப்போம். இல்லை எனில், பெரியவர்கள் எல்லோரும் ஒன்றுகூடிப் பேசி யாரை வேண்டுமானாலும் மன்னராகத் தேர்ந்தெடுங்கள். நான் அவர் கீழ் பணிபுரியத் தயார்!" கியாஸுதீன் இப்படி உருக்கமாகப் பேசியதைத் தொடர்ந்து எல்லோர் கண்களும் கலங்கின.

ஊகூம்! கில்ஜி வம்சத்தைச் சேர்ந்த ஒரு வாரிசுகூட உயிரோடு இல்லாததால், எல்லோரும் ஏகமனதாக கியாஸுதீன் துக்ளக்கை ஆகஸ்ட் 22, கி.பி.1321-ல் அரியணையில் அமர்த்தி மகுடம் சூட்டினார்கள்.

'களியாட்ட சுல்தான்கள்' முபாரக் ஷாவும் குஸ்ரூகானும் கஜானாவை ஏற்கெனவே ஒரு வழி பண்ணியிருந்ததால், கியாஸுதீன் ஆட்சிக்கு வந்தபோது அரசாங்கத்தின் நிதி நிலைமை படுமோசமாக இருந்தது. அந்த நிலையிலும் மிகத் திறமையாக நிர்வாக லகானைப் பிடித்து ஆட்சியைக் கட்டுக்குள் கொண்டுவந்தார் கியாஸுதீன் துக்ளக். திட்டவட்டமான வரி வசூல், தேவைக்கேற்ற சட்ட திட்டங்கள் என்று ஒவ்வொன்றாக அமலுக்கு வந்தன.

திறமையானவர்கள் மந்திரிகளாகவும் கவர்னர்களாகவும் பதவிகளில் அமர்த்தப் பட்டனர். முந்தைய போர்களில் வீரம் காட்டியவர்கள் தளபதி ஆனார்கள். வியாபாரிகளுக்குச் சலுகைகள் கொடுக்கப் பட்டன. மக்களுக்கு உணவுப் பொருட்கள் சீரான விநியோகம் ஏற்படுத்தித் தரப்பட்டன. சீர்கெட்ட நிலையில் இருந்த அரண்மனைகள், கோட்டைகள், மாளிகைகள் பழுது பார்க்கப் பட்டதோடு புதிய கால்வாய்களும் சாலை களும் உருவாக்கப்பட்டன. இத்தனைக்கும் கியாஸுதீன் ஆட்சிக்கு வந்தது என்னவோ அறுபது வயதைக் கடந்த பிறகு!

சுல்தானுக்கு ஐந்து மகன்கள். மூத்தவர் முல்லிக் ஃபக்ருதீன் ஜூனா அடுத்த வாரிசாக உடனேயே அறிவிக்கப்பட்டார் - அலூஃப் கான் என்ற புதுப் பட்டப் பெயருடன். பிற்பாடு இந்தப் பெயரும் போய், முகமது பின் துக்ளக் என்ற பெயரில் ஆண்ட பிரச்னைக்குரிய சுல்தான் இவர்தான்!

கியாஸுதீன் துக்ளக் ஆட்சிக்கு வந்த இரண்டாவது ஆண்டிலேயே தன் படை பலத்தைக் காட்ட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. ஏற்படுத்தியவர் - தெற்கே வாரங்கல் (தெலுங்கானா) பிரதேசத்தை ஆண்டுவந்தவர்... பிரதாபருத்ரதேவர் என்னும் மன்னர். அதுவரை டெல்லிக்குக் கப்பம் கட்டிக் கொண்டிருந்த அந்த மன்னர், 'இனி கப்பம் கட்டுவது நிறுத்தப்படுகிறது. ஆனதைப் பார்க்கலாம்!' என்று டெல்லிக்குச் செய்தி அனுப்பினார்!

இளவரசர் முகமது பின் துக்ளக் தலைமையில் ஒரு பெரும் படை வாரங்கல் கிளம்பியது. எல்லாவித ஏற்பாடுகளுடனும் தயாராக இருந்த வாரங்கல் மன்னரின் படை, சுல்தான் படையைத் துரத்தியடித்து விட்டது. திடீரென்று துக்ளக் படை வீரர்கள் இடையே ஒரு தொற்றுநோய் (ப்ளேக் என்று கூறப்படுகிறது) பரவ, நோயால் அவதிப் பட்டவாறு திரும்பித் தட்டுத்தடுமாறி ஓடிக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான வீரர்களைப் பிரதாபருத்ரதேவரின் படை வீரர்கள் வெட்டித் தள்ளினார்கள்.

தோற்றுத் திரும்பிய முகமது பின் துக்ளக், தந்தையிடம் சூளுரைத்துவிட்டு இரண்டு மாதங்களில் மறுபடி வாரங்கல் நாட்டு

எல்லைக்குள் தன் படையுடன் அலை மோதினார். இந்த இரண்டாவது போரில் பழிதீர்க்கும் வீராவேசத்துடன் போர் புரிந்த டெல்லிப் படை பெரும் வெற்றி அடைந்து கோட்டையைக் கைப்பற்றி மன்னரைக் குடும்பத்துடன் சிறைப்பிடித்தது. வாரங்கல் பிரதேசத்துக்கு சுல்தான்பூர் என்று புதுப் பெயரிட்டுவிட்டு அரச கைதிகளோடு டெல்லிக்குக் கிளம்பினார் முகமது பின் துக்ளக். வாரங்கல் அரண்மனையிலிருந்த செல்வம் அடியோடு துடைக்கப் பட்டு யானைகளில் ஏற்றப்பட்டன. வெற்றியோடு தலைநகர் திரும்பிய தன் மூத்த மகனைப் பிரமாண்டமான வரவேற்பு ஏற்பாடுகளுடன் ஆரத்தழுவி வரவேற்றார் கியாஸுதீன்.

இத்தருணத்தில் ஒரு வித்தியாசமான, போர்க்களம் சம்பந்தப்படாத ஒரு உண்மை நிகழ்ச்சியையும் குறிப்பிட்டாக வேண்டும்..!

ஹஸ்ரத் நிஜாமுதீன் ஆலியா என்னும் முஸ்லிம் துறவி டெல்லியில் ஒரு மூலையில் எளிமையானதோர் ஆசிரமம் அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார். அன்பும் அறிவும் அடக்கமும் கொண்டிருந்த இந்த ஞானியிடம் மக்கள் பெரும் பக்தி வைத்திருந்தனர்.

ஆட்சிக்கு வந்த உடனேயே டெல்லிக்கு அருகாமையில் துக்ளாபாத் என்ற பெயரில் புதுத் தலைநகரைக் கட்ட ஆரம்பித்தார் சுல்தான் கியாஸுதீன் துக்ளக். எல்லோரும் வியக்கும் அளவுக்கு வேகமாக, இரண்டே ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது அந்தப் புதிய தலைநகர்.

புது அரண்மனையில் சென்று அமர்ந்த சுல்தான் கியாஸுதீன்முன் மன்னர்களும் பிரபுக்களும் கலைஞர்களும் கவிஞர்களும் க்யூவில் நின்று வாழ்த்துத் தெரிவித்தனர். போகாதது துறவி நிஜாமுதீன் மட்டுமே! ‘என்னை வந்து பார்க்காதது ஏன்?’ என்று அந்த மகானுக்குக் கேள்விக் கடிதம் அனுப்பினார் சுல்தான். “தலைநகரமா அது? இன்னும் கொஞ்ச காலத்தில் அங்கு குடியேறப்போவது வழிப்பறித் திருடர்களும் நரிகளும் குரங்குகளும் வௌவால்களும்தான். போய் உங்கள் சுல்தானிடம் நான் சொன்னதாகச் சொல்லுங்கள்!” என்று பதில் அனுப்பினார் அந்தத் துறவி. இது கேட்ட சுல்தானுக்கு ஏகக்கடுப்பு! இருப்பினும் மக்கள் பெருமதிப்பைப் பெற்றிருந்த அந்தப் பெரியவரைத் தண்டித்துக் கெட்ட பெயர் வாங்கிக்கொள்ள கியாஸுதீனுக்கு விருப்பம் இல்லை!

இதற்கிடையே, எந்த சுல்தான் டெல்லியில் ஆண்டாலும் சுணங்கி முரண்டு பிடிக்கும் வங்காளத்தில் கியாஸுதீனுக்கு எதிராகப் போராட்டம் வெடித்தது. வங்காள மன்னர் பெயரும் கியாஸுதீன் (பகதூர்)! அவரை அடக்க ஒரு படையுடன் தானே கிளம்பினார் சுல்தான். வங்காள கியாஸுதீன் படையை டெல்லி கியாஸுதீன் படை வெற்றி கொண்டது. வங்காளம் முதல் முறையாக டெல்லியின் கட்டுக்கோப்புக்குள் வந்தது!

வங்காளத்தில் வெற்றி பெற்ற கியாஸுதீன் டெல்லிக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, சில அமைச்சர்கள் “தங்களை மதிக்காமல் திரிந்து கொண்டிருக்கும் அந்தத் துறவிக்குத் தலைநகர் திரும்பியவுடன் முதல் வேலையாகப் புத்தி புகட்ட வேண்டும் சுல்தான்!” என்று தேவையில்லாமல் கோள்மூட்டி வைத்தனர். கியாஸுதீனும் சும்மா இருந்திருக்கலாம். மாறாக, “ஆம்! நான் டெல்லி திரும்புவதற்குள் அந்தத் திமிர் பிடித்த பரதேசி ஊரைவிட்டு ஓட வேண்டும் என்று முன்கூட்டியே செய்தி அனுப்புங்கள்!” என்று ஆணை பிறப்பித்தார்.

செய்தி போய்ச் சேர்ந்ததும் சீடர்களும் மக்களும் தொண்ணூறு வயது நிரம்பிய அந்த மகான்முன் ஓடிச் சென்று விஷயத்தைச் சொல்லி அழ ஆரம்பித்தார்கள். இதற்குள் ஒருவர் விரைந்து வந்து, "கடவுளின் அன்பைப் பெற்ற எங்கள் ஆசானே!... சுல்தான் படை வெகு அருகில் வந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு நாட்களில் டெல்லிக்கு வந்து சேர்ந்து விடுமாம். உங்கள் உயிருக்கு ஆபத்து" என்று எச்சரிக்க, மக்கள் கூட்டம் கதற ஆரம்பித்தது.

அமைதியாக அமர்ந்திருந்த மகான் நிஜாமுதீன் ஆலியா ஒரு பெருமூச்சுடன் எல்லோரையும் கையமர்த்திவிட்டு, "ஏன் அழுகிறீர்கள்? அதிகார போதையில் மூழ்கிய வுடன் மமதையோடு பேசும் எத்தனை மன்னர்களை நாம் பார்த்தாயிற்று?! துளிர் விட்ட ஒரே ஒரு புல்லைக்கூட இறைவன் உத்தரவு இல்லாமல் யாராலும் அழிக்க முடியாது என்பதுகூடவா உங்களுக் கெல்லாம் தெரியாது?" என்று கடிந்து கொண்டார்.

"கியாஸுதீன் படை டெல்லி எல்லைக்கு வந்து விட்டதே! இப்போது நாம் என்ன செய்ய முடியும்?" என்று ஒருவர் புலம்ப, அவரை ஏறிட்டுப் பார்த்த அந்த மகான், "கியாஸுதீன் துக்ளக் முதலில் டெல்லிக்கு வந்து சேரட்டும். பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டு 'ஹனூஸ் தில்லி தூர் அஸ்த்!' (சுல்தானுக்கு டெல்லி ரொம்ப தொலைவு!) என்று முணுமுணுத்ததை அருகில் இருந்தவர்கள் கேட்டனர்.

வங்காளத்தில் தந்தை கியாஸுதீன் வெற்றி பெற்ற செய்தி கேள்விப்பட்டவுடனேயே இளவரசர் முகமது பின் துக்ளக் "மன்னருக்கு வரவேற்பு ஏற்பாடுகள் பிரமாதமாக அமைய வேண்டும்!" என்று ஆணையிட்டார். உடனடியாக அரண்மனைக்கு ஐந்து மைல் தொலைவில் ஒரு மைதானத்தில் வண்ண மயமான பெரிய கோபுரம் ஒன்று மரத்தால் கட்டப்பட்டது. கண்ணைப் பறிக்கும் வகையில் வரவேற்பு வளைவுகள் அமைக்கப் பட்டன. தோரணங்கள் ஜொலித்தன. மைதானத்தில் ரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பட்டன. கோபுரத் துக்குக் கீழே வேலைப்பாடுகளுடன் கூடிய சிம்மாசனம் ஒன்றும் போடப்பட்டது.

கியாஸுதீன் தலைமையில் வெற்றிப்படை மைதானத்துக்குள் நுழைந்தது. முரசுகள் ஆர்ப்பரிக்க, வாத்தியங்கள் வெற்றி முழக்கமிட சுல்தானை எதிர்கொண்டு சென்று மண்டியிட்டு வரவேற்றார் முகமது பின் துக்ளக். தந்தையும் மகனும் தழுவிக் கொண்டனர். பிறகு நடுநாயகமாகப் போடப் பட்டிருந்த சிம்மாசனத்தில் சென்றமர்ந்தார் கியாஸுதீன்! அருகே போடப்பட்டிருந்த இருக்கையில், தளபதியாகப் பொறுப்பேற்று வங்காளத்துக்குத் தந்தையுடன் சென்ற கடைசி மகன் அமர... "தங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ள வேண்டும்!" என்று சுல்தானிடம் சொல்லி விட்டு முகமது பின் துக்ளக் வெளியே வர....

திடீரென்று அந்த விபரீதம் நிகழ்ந்தது..!

'சடசட'வென்று பெரும் சத்தத்துடன் வரவேற்பு கோபுரம் அடியோடு சரிந்தது. தொடர்ந்து பெரும் தூண்கள், உப்பரிகை, மாடம், ராட்சத விளக்குகள்... என்று ஒவ்வொன்றாய் விழுந்து சிம்மாசனத்தோடு சுல்தானுக்கு சமாதி கட்டியது. எங்கு நோக்கினும் பெரும் ஓலம். திகைத்துப் போன படைவீரர்கள் ஓடிவந்து, விழுந்து கிடந்த எல்லாவற்றையும் உடனே சிரமப்பட்டு அகற்றினார்கள். பள்ளத்தில் சுல்தான் கியாஸுதீன் உடல், தன் கூடவே இறந்து போன தன் கடைசி

மகனை நோக்கிக் கைநீட்டியவாறு பரிதாபமாகக் கிடந்தது.

மீர் இமார்த் என்னும் கில்லாடியான ஆஸ்தான கட்டடக் கலை வல்லுநர்தான் அந்தக் கோபுரத்தைக் கட்டியவர். “பெரியவர் அமர்ந்தவுடன் கோபுரம் சரிந்து விழ வேண்டும். இல்லையெனில் உன் தலை சரிந்து விழும்!” என்று அவரிடம் முன்கூட்டியே இளவரசர் முகமது பின் துக்ளக் சொன்னதாகவும்... மொத்தத்தில் கோபுரம் விழுந்தது எதேச்சையாக அல்ல, அது திட்டமிட்ட சதி என்றும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். ‘சதி’ என்பதற்கான முழு ஆதாரம் எதுவுமில்லை என்போரும் உண்டு. எது எப்படியோ... மன்னர் மண்ணுக்குள் உயிரோடு போன உடனேயே மகுடம் தலைமாறிவிட்டதால் கியாஸுதீன் மர்ம மரணம் பற்றி யாருமே எந்தக் கேள்வியும் கேட்கவில்லை என்பது வேறு விஷயம்!

கியாஸுதீன் துக்ளக் ஆண்டது ஐந்து ஆண்டுகளே. அவர் மரணத்துக்குப் பின் புதிதாகக் கட்டப்பட்ட தலைநகரமான துக்ளகாபாத் சீண்டுவாரற்றுப் போனது. முகம்து பின் துக்ளக்கும் அங்கிருந்து வெளியேறிவிட்டார். டெல்லியில் அமர்ந்து ஆட்சியைத் தொடர்ந்தார்.

கியாஸுதீன் கல்லறை...

ஆகமொத்தம், சில ஆண்டுகளில் முஸ்லிம் துறவியின் சாபம் பலித்தது.

சிதிலமடைந்துபோன கோட்டைச் சுவர்களுக்கு நடுவில் தரைமட்டமாகக் கிடக்கும் பரிதாபகரமான ஒரு தலைநகரைத் தான் டெல்லிக்கு அருகே இன்று காண முடியும். அங்கு இன்று குடியேறியிருப்பவை குரங்குகளும் நரிகளும் வௌவால்களும்தான்..!

ஆனால், இத்தனைக்கும் நடுவில் இன்னும் சிதையாமல் கம்பீரமாக அங்கே தோற்றம் அளிக்கிறது ஒரு கல்லறை...

அது கியாஸுதீன் துக்ளக்கின் கல்லறை...

‘முற்றுப்புள்ளி வைத்த முன்கோபம்!’

கண்டிப்புக்கு பல்பன், வஞ்சகத்துக்கு அலாவுதீன் கில்ஜி என்று ஒப்பிட்டால் கிறுக்குத்தனத்துக்கு முகமது பின் துக்ளக் என்று கூறத் தோன்றுகிறது... இருப்பினும், சற்று அலசிப் பார்த்தால் முகமது பின் துக்ளக்கைப் பொறுத்தமட்டில் எந்தவொரு சுருக்கமான அடைமொழியும் அவருக்கு முழுக்கப் பொருந்தாது என்பதே சரித்திரபூர்வமான உண்மை!

பெரும் வள்ளல், பேரறிஞர், கலைஞர், ஓவியர், கவிஞர், தத்துவஞானி, பலமொழிகள் தெரிந்தவர் மற்றும் கிறுக்குப்பிடித்த ஒரு சுல்தான் என்று வேண்டுமானால் முகமது பின் துக்ளக்கை அழைக்கலாம்!

அது மட்டுமல்ல... கணிதத்திலும் வானியலிலும் பௌதிகத்திலும்கூட அவர் மேதை. செதுக்கினாற்போல் முத்துமுத்தாக எழுதும் கலையான ‘காலி கிரஃபி’யிலும் முகமது பின் துக்ளக்கை அடித்துக்கொள்ள ஆள் கிடையாது என்று கூறப்படுகிறது. அவருக்கு சமஸ்கிருதம் தெரியும். சாணக்கியர் எழுதிய ‘அர்த்த சாஸ்திரம்’ அத்துப்படி. மருத்துவம்கூட விரல் நுனியில்! நோய்வாய்ப் பட்ட நண்பர்களுக்கு சுல்தானே மருந்து தயாரித்துத் தந்து சிகிச்சை செய்ததுண்டு. தன்னுடன் விவாதித்துவிட்டுச் செல்லும் அறிஞர்கள், கலைஞர்களுக்கு வைரம், வைடூரியம், முத்துக்கள் என்று அள்ளித் தருவதும் அவருக்கு வழக்கம்! இதெல்லாம் ஒருபுறமிருக்க, முகமது பின் துக்ளக் மிகத் திறமைவாய்ந்த போர் வீரரும்கூட!

அப்படியென்றால் சுல்தானுக்கு எதுதான் பிடிக்காது? கற்பனையாகப் புனையப்படும் (காதல் மற்றும் சோகக்) கதைகள் பிடிக்காது. ஜோக் அடிப்பதும் பிடிக்காது. சுல்தானுடைய ஆஸ்தான மண்டபத்தில் விதூஷகர்களுக்கு அனுமதி இல்லை. பிற்பாடு சுல்தானே ஒரு ‘கொடூரமான கேலிக்கூத்தாக’ இந்திய வரலாற்றில் கருதப்பட்டது விதியின் விளையாட்டுத்தான்!

தனிப்பட்ட முறையிலும் முகமது பின் துக்ளக் ஒழுக்கமாக, கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்ந்தார். அந்தப்புரத்தில் அவர் களியாட்டம் போட்டதில்லை. மது மயக்கத்தில் ஆழ்ந்து தடுமாறியதும் கிடையாது. இத்தனை திறமையும் தகுதிகளும் இருந்தும் ஏன் அலெக்ஸாந்தரைப் போலவோ, அசோகரைப் போலவோ, அக்பரைப் போலவோ அவர் வெற்றிக் கொடிகள் நாட்டிச் சரித்திரப் பிரசித்தி பெறவில்லை?

எத்தனை சிறப்புகள் அமையப்பெற்றாலும், சில குறிப்பிட்ட அடிப்படைத் தகுதிகள் இல்லாத ஆட்சியாளர்கள் வீழ்ச்சியடையத் தான் செய்கிறார்கள் என்பது பரிதாபகரமான உண்மை. முகமது பின் துக்ளக்கை அப்படி வீழ்த்தியவை இரு பெரும் ‘மைனஸ் பாயின்டுகள்’ - எல்லாவற்றிலும் அவசரப் படுதல், தேவையில்லாத கொடூரம்!

அனுபவம் வாய்ந்த அமைச்சர்களுடன் கலந்தாலோசிக்காமல், எலியைப் பிடிக்க மலையைப் பிளப்பது, பாம்பைக் கொல்ல வீட்டைக் கொளுத்துவது போன்ற கிறுக்குத் தனமான காரியங்களில் அவசரப்பட்டு இறங்குவதென்பது துக்ளக்குக்குச் சர்வ சாதாரணமான காரியம்!

சுல்தானின் கொடூரத்துக்கு வழிவகுத்த முன் கோபத்தைச் சாதாரணமாக விவரித்து விட முடியாது! சின்ன விஷயத்துக்கெல்லாம்

சீறுவதும், சிறியோர் பெரியோர் என்று பாராமல் தலைகளைச் சீவுவதும் அவருக்குச் சகஜமானதாகப் போய்விட, நல்லது கெட்டது எதையும் அவருக்கு எந்த அமைச்சரும் எடுத்துரைக்க முன்வரவில்லை. அப்படி ஒரு அசாத்திய பயம்!

“ஒரு இண்டு இடுக்குப் பாக்கியில்லாமல் இந்தியா முழுவதையும் என் கைக்குள் கொண்டுவரப்போகிறேன்!” என்று முழக்கம் செய்த முகமது பின் துக்ளக், அதற்காக ஒரு பெரும் படையை உருவாக்குவதில் இறங்கினார். குதிரை வீரர்கள் எண்ணிக்கை மட்டும் நாலு லட்சம்! இதற்காகப் பெரும் நிதி தேவைப்படுமே என்பது பற்றியெல்லாம் மன்னர் சிந்திக்கவில்லை. உடனே ஏகமாக வரிவிதிப்பில் இறங்கினார். குறிப்பாக யமுனை, கங்கை நதிகளுக்கு இடையே இருந்த தோவாப் என்னும் பிரதேசத்தில் வசித்த விவசாயிகளை வரிவசூல் என்கிற பெயரில் பிழிந்தெடுத்துவிட்டார்கள் அரசு அதிகாரிகள். அங்கேயெல்லாம் பஞ்சம் தலைவிரித்தாட, அப்போதும் சுல்தான் பின்வாங்கவில்லை. வேறுவழி தெரியாமல் நிலங்களை விட்டுவிட்டு விவசாயிகள் காடுகளுக்குள் ஓடிச் சென்று ஒளிந்து கொண்டார்கள். விளைச்சல் இல்லாததால் நாட்டு மக்கள் அரிசி, கோதுமை கிடைக்காமல் பரவலாக அவதிப்படும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. இதையெல்லாம் கேள்விப்பட்ட சுல்தானுக்குக் கோபம்தான் வெடித்தது. வெறிச்சோடிப் போயிருந்த கிராமங்களிலிருந்து வரிவசூல் எதுவும் செய்ய முடியாமல் திணறித் திரும்பிய அதிகாரிகளின் தலைகள் சீவப்பட்டதுதான் மிச்சம்!

பணம் ‘அச்சடிக்க’ ஆரம்பித்த, முதல் இந்திய மன்னர் முகமது பின் துக்ளக்தான். டோக்கன் கரன்ஸி! அதுவரை நூறு ரூபாய் வெள்ளி நாணயத்தில் நூறு ரூபாய் மதிப்புள்ள வெள்ளி இருந்தது. சீனாவிலும் பாரசீகத்திலும் காகித நோட்டுகள் அமலுக்கு வந்துவிட்டதாக கேள்விப்பட்ட முகமது பின் துக்ளக், இந்தியாவிலும் இந்த முறையைக் கொண்டுவர முடிவு செய்தார். பேப்பருக்குப் பதில் செப்பு நாணயத்தில் ‘இத்தனை ரூபாய் மதிப்பு’ என்று அச்சடித்துப் புழக்கத்தில் விட்டது டெல்லி அரசு. ஒரு கோணத்தில் பார்த்தால், பிற்பாடு இந்தியாவில் காகித ரூபாய் நோட்டுகள் வரவிருப்பதை தீர்க்க தரிசனத்துடன் சுல்தான் கண்டு பிடித்ததாகச் சொல்லலாம்தான்!

ஆனால், முகமது பின் துக்ளக்கின் இந்த ரூபாய் திட்டம் படுதோல்வியடைந்தது. காரணம், நாணயங்களைத் தயாரிக்க, ‘அச்சுப் பிச்சான’ அச்சுகளை ஆட்சி பயன்படுத் தியதால், நாடெங்கும் கள்ள நாணயங்கள் தயாரிக்கும் ‘தொழிற்சாலைகள்’ கிளம்பி விட்டன! குறிப்பாக, இந்துக்கள் இதில் தங்கள் ‘திறமையை’ப் பிரமாதமாகக் காட்டியதாகக் கேள்வி! இதன் விளைவாக நிதி நிலைமை அல்லோலகல்லோலப்பட்டுப் போய்விட்டது!

திகைத்துப் போன முகமது பின் துக்ளக் வேறு வழியில்லாமல் “இனி நாணயங்கள் செல்லாது” என்று ஆணையிட, லட்சக் கணக்கானவர்கள் (நியாயமான அரசு நாணயங்களை நம்பிச் சேகரித்தவர்கள்கூட!) உடனுக்குடனே ஓட்டாண்டியானார்கள். இதற்குப் பிராயச்சித்தமாக அரசாங்கம் தயாரித்த நேர்மையான நாணயங்களைக் கொண்டுவருபவர்களுக்கு முடிந்தமட்டும் தங்கம், வெள்ளி நாணயங்கள் தர ஏற்பாடு செய்தார் சுல்தான். விளைவு? கஜானா காலியாகும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இதைத் தொடர்ந்து இதுவரை யாருமே சிந்திக்கத் துணியாத ‘புரட்சிகரமான’ ஒரு முடிவை எடுத்தார் முகமது பின் துக்ளக்.

தலைநகரத்தை இடம் மாற்றுவது என்கிற முடிவு!

“எங்கேயோ வடக்கில் அமர்ந்துகொண்டு இந்தியா முழுவதையும் திறமையாக ஆட்சி செய்ய முடியாது. ஆகவே, தலைநகரத்தை டெல்லியிலிருந்து தெற்கே, தேவகிரிக்கு மாற்ற முடிவு செய்திருக்கிறேன்!” என்று திடீரென்று அறிவித்து எல்லோர் வயிற்றிலும் புளியைக் கரைத்தார் முகமது பின் துக்ளக். சுல்தானை எதிர்த்துப் பேச யாருக்குத் துணிவு உண்டு? ஆகவே, அமைச்சர்களும் மற்ற ஆலோசகர்களும் தங்கள் தலையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மூக்கில் விரல் வைத்து “அருமையான யோசனை!” என்று அதிசயித்தார்கள்.

தலைநகரை நிர்வாக வசதிக்காக மட்டும் மாற்றுவதோடு நிறுத்திக் கொண்டிருக்கலாம் சுல்தான். மாறாக, டெல்லி மக்கள் அத்தனை பேரும் புதிய தலைநகருக்குக் குடிபெயர வேண்டும் என்று ஒரு ஆணை பிறப்பித்தார் துக்ளக்! பரம்பரை பரம்பரையாக டெல்லியிலேயே வாழ்ந்த மக்களிடையே முணுமுணுப்பும் சலசலப்பும் புலம்பல்களும் கிளம்பின. உடனே வழக்கப்படி கோபம் தலைக்கேறிய சுல்தான், “பலவந்தமாக மக்களை அப்புறப்படுத்துங்கள்!” என்று உறுமினார். படை வீரர்கள் வாட்களை உருவிக்கொண்டு மக்களை ஊரிலிருந்து விரட்டுவதற்குக் கிளம்பினார்கள். பயந்து போன மக்கள், மூட்டை முடிச்சுகளுடன் மிகப்பெரும் பேரணியாக டெல்லியைவிட்டு நெடும்பயணம் கிளம்பினார்கள்.

பார்வையிழந்த ஒரு முதியவரைக்கூட இரக்கமில்லாமல் வீரர்கள் தரதரவென்று இழுத்துச் சென்றதாக மொராக்கோ நாட்டில் இருந்து இந்தியாவுக்குப் பயணம் வந்திருந்த இபன் பதூதாவும், ஒரு நாய், பூனையைக்கூட டெல்லியில் விட்டுவைக்கவில்லை என்று சரித்திர ஆசிரியர் ஜியாவுதீன் பரானியும் இந்தச் ‘சரித்திர பிரசித்தி பெற்ற மக்கள் வெளியேற்றம்’ பற்றிக் குறிப்பிடுகிறார்கள். ‘இவர்கள் இருவரும் எழுதியிருப்பது சற்று மிகைப்படுத்தப்பட்ட விவரிப்பு’ என்பது மற்ற வரலாற்று நூல் ஆசிரியர்களின் கருத்து.

தௌலதாபாத் என்று பெயரிடப்பட்ட தேவகிரி, டெல்லிக்குத் தெற்கே எழுநூறு மைல் தொலைவில், இன்றைய கர்நாடகத்தில் கோதாவரி நதிக்கு அருகே உள்ள ஊர். இந்த ஊருக்கு லட்சணக்கணக்கில் டெல்லி மக்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தட்டுத்தடுமாறி வந்து சேர நாற்பது நாட்கள் ஆனது.

கல்வியில் தேர்ந்த இம் மன்னருக்கு ‘தலைநகரை இடம் மாற்றிவிடுவதன் மூலம், இந்தியாவை ஆண்டுவிட முடியாது... அதற்கு ராஜதந்திரமும் நிர்வாகத் திறமையும் வேண்டும்’ என்ற அடிப்படை விஷயம்கூடத் தெரியாமல் போனது பற்றிப் பல வரலாற்று அறிஞர்கள் வியக்கிறார்கள்! தான் செய்தது தவறு என்று விரைவில் புரிந்துகொண்ட முகமது பின் துக்ளக், “மறுபடி டெல்லிக்கே திரும்புவோம்!” என்று ஆணையிட்டது கேலிக்கூத்துக்கு ‘க்ளைமாக்ஸ்’ ஆக அமைந்தது. இப்போது டெல்லி நோக்கித் திரும்பவும் மேற்கொள்ளப்பட்ட பரிதாபமான நெடும் பயணத்தில், ஏராளமானவர்கள் பாதி வழியிலேயே உயிரை விட்டனர். இந்தச் சில ஆண்டுகளில் டெல்லியும் ஆங்காங்கே பாழடைந்து போக, அதை வேறு சீரமைத்துப் புதுப்பிக்க வேண்டி வந்தது!

முதலில் தேவகிரிக்குத் தலைநகரை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் சுல்தானுக்கு எப்படித் தோன்றியது என்பதே ஒரு கொடூரமான தமாஷ்...!

தெற்கே, ஹைதராபாத் அருகில் குல்பார்கா பகுதியில் கவர்னராக ஆட்சி புரிந்து வந்த முகமது பின் துக்ளக்கின் அத்தை மகன் பஹாவுதீன் என்பவர் டெல்லி ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சியில் இறங்கினார். உடனே துக்ளக் படை ஒன்று கிளம்பிச் சென்று, பஹாவுதீனைச் சிறைப்பிடித்து, தேவகிரியில் இருந்த டெல்லி சுல்தானின்முன் நிறுத்தினார்கள். 'துக்ளக் கோபம்' பற்றிச் சொல்ல வேண்டுமா? கைதியாக நின்ற பஹாவுதீனின் உடைகள் கழற்றப்பட்டுக் கசையடிகள் தரப்பட்டன. மனிதர் ரத்த விளாறாக ஆன பிறகு, உயிரோடு பஹாவுதீனின் தோல் உரிக்கப்பட்டது. பிறகு (நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டு மேலே படிக்கவும்) அவருடைய உடலைத் துண்டாக்கி, வாணலியில் எண்ணையில் போட்டு வறுத்து எடுத்து பஹாவுதீன் மனைவி, குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருக்குப் பரிமாறப்பட்டுப் பலவந்தமாக உண்ணச் செய்தார் சுல்தான்!

உரிக்கப்பட்ட தோலையும் வீணாக்காமல் வைக்கோல் வைத்துத் தைத்துக் கோட்டை உச்சியில் தொங்கவிட்டார். "கலவரம் செய்ய நினைப்பவர்களுக்கு இது ஒரு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதனால்தான் இப்படி!" என்பது முகமது பின் துக்ளக் தந்த விளக்கம்! இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்துதான் இந்தியாவின் 'மையத்துக்கு'த் தலைநகரை மாற்றும் யோசனையும் சுல்தானுக்குத் தோன்றியதாகக் கூறப்படுகிறது!

ஆனால், கலவரங்கள் துக்ளக்கை விட்டு வைக்கவில்லை. கி.பி.1335-ல் ஆரம்பித்து தொடர்ந்து வடக்கேயும் தெற்கேயுமாக போராட்டங்கள் வெடித்தன. வங்காளத்திலும் அயோத்தியிலும் டெல்லி ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சிகள் கிளம்பின. பிறகு தெலுங்கானாவில்... தொடர்ந்து மைசூரில்..!

தெற்கே - அலாவுதீன் கில்ஜி காலத்தில் டெல்லி ஆட்சிக்கு உட்பட்ட மதுரையை ஆண்டுவந்த முஸ்லிம் கவர்னரும் சுதந்திரப் பிரகடனம் செய்தார்.

அதுவரை பதுங்கியிருந்த தெலுங்கானா மற்றும் ஹொய்சள இளவரசர்கள் ஒன்று சேர்ந்து படை திரட்டிச் சென்று வாரங்கல் பகுதியிலிருந்து டெல்லி சுல்தான் படையை வெற்றிகரமாக விரட்டியடித்தனர். இந்து மன்னர்களின் இந்த வெற்றியைத் தொடர்ந்து கி.பி.1336-ல் துங்கபத்திரை நதிக்கரையில் புதிய சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. அதுதான் பிற்பாடு 'ஹம்பி'யைத் தலைநகராகக் கொண்டு கிருஷ்ணதேவராயர் ஆட்சியில் புகழின் உச்சிக்குச் சென்று வரலாறு படைத்த விஜயநகர சாம்ராஜ்யம்!

இப்படி நாடெங்கும் பல பகுதிகளில் போராட்டங்களும் எதிர்ப்புகளும் தடபுடலாகக் கிளம்ப, சுல்தான் முகமது பின் துக்ளக் என்ன நடவடிக்கை மேற்கொண்டார் என்பதைப் படிக்கச் சற்று வியப்பாக இருக்கும்!

'வடக்கே இமயமலைத் தொடரைத் தாண்டி இருக்கும் சீன தேசம் இந்தியாவுக்கு இணையாகச் செல்வம் கொழிக்கும் ஒரு நாடு. அதை எப்படியாவது வெற்றிகொள்ள வேண்டும். இந்தியாவும் சீனாவும் மட்டும் இணைந்தால் அசுர சக்திவாய்ந்த ஒரு மாபெரும் சாம்ராஜ்யமாக அது அமையும், (சுல்தான் பூகோளத்தை படித்துத் தொலைத்ததால் தோன்றிய யோசனை!) அதன் பிறகு தானாகவே எல்லாப் பிரச்னை களும் தீரும்' என்று முடிவு செய்தார் முகமது பின் துக்ளக்!

இதுவரை பொறுத்த சில அமைச்சர்கள், "இமயமலை சாதாரண

மலை அல்ல. பல்லாயிரக்கணக்கான அடி உயரம் உள்ள ஐஸ் மலைகள் கொண்டது. அதைத் தாண்டுவதெல்லாம் நடக்காத காரியம்!" என்று (நடுங்கியவாறு) எடுத்துச் சொன்னார்கள். "முடியாதது என்பதே கிடையாது!" என்று பதில் அளித்த சுல்தான், ஒரு லட்சம் குதிரை வீரர்கள் கொண்ட படையை குஸ்ரூ முல்லிக் என்னும் திறமை வாய்ந்த தளபதியின் (துக்ளக்கின் அக்கா பிள்ளை!) தலைமையில் சீனாவை நோக்கி அனுப்பினார்.

போகிற வழியில் மலைமீது பாதைகள் போடுவதிலேயே சுல்தானின் படைக்குப் பாதி உயிர் போய்விட்டது. ஒருவழியாக குளிரில் நடுங்கித் தடுமாறி மூச்சுத் திணறியவாறு சீன எல்லையருகே போய்ச் சேர்ந்த இந்தப் படை வீரர்களை, பல்வேறு ஆயுதங்களுடன் பிரமாண்டமாக அணிவகுத்துக் காத்துக் கொண்டிருந்த சீனப் படை துவம்சம் செய்துவிட்டது. திரும்பி வரும்வழியில் ஹிமாசலப் பிரதேசத்தைச் சேர்ந்த வேறு சில உதிரிப் படைகள் திடீர்த் தாக்குதல் நடத்தி உணவுப் பண்டங்களைக்கூட விட்டுவைக்காமல் அபகரித்துக்கொண்டு போய்விட, அடையாளம் தெரியாத அளவுக்குக் குற்றுயிரும் கொலையுயிருமாகத் திரும்பிய வீரர்கள், தர்பாரில் இருந்த முகமது பின் துக்ளக்கின் முன் வந்து வீழ்ந்து, நடந்த சோகக் கதையை விவரித்தனர்.

"இவ்வளவு கேவலமாகத் தோற்றுத் திரும்பிவிட்டு ஏதோ 'பயணக் கதை' சொல்லிக் கொண்டிருக்க உங்களுக்கு வெட்கமில்லையா?" என்று கர்ஜித்த சுல்தான், பிழைத்துத் திரும்பி வந்த அத்தனை பேர் தலைகளையும் சீவச்சொல்லி ஆணை யிட்டார்!

புகழ்பெற்ற வரலாற்றுப் பேராசிரியர் ஜியாவுதீன் பரானி, முகமது பின் துக்ளக் காலத்தில் வாழ்ந்தவர். மாமன்னர் பல்பன் ஆட்சியில் ஆரம்பித்து முகமது துக்ளக்கைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பிரோஷ் ஷாவின் ஆட்சி வரை நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளை நுணுக்கமாக எழுத்தில் வடித்தவர்...

கடைசியில் இந்த அறிஞரைத் தன் பிரத்தியேக இடத்துக்கு வரவழைத்து, "ஒரு இடத்தில் கலவரத்தை அடக்கினால், இன்னொரு இடத்தில் கலவரம் வெடிக்கிறது. அதை அடக்குவதற்குள் வேறு ஒரு இடம்... இந்தப் பிரச்னையைத் தீர்க்க ஏதும் வழி இல்லையா?" என்று மிகுந்த தர்மசங்கடத்துடன் கேட்டார் முகமது பின் துக்ளக்.

அறிஞர் ஜியாவுதீன் பரானி சற்றுத் துணிவை வரவழைத்துக்கொண்டு, "சில சமயம் ஆட்சி மாறினால்கூடப் பிரச்னைகள் தீர்வதுண்டு மன்னா! தாங்கள் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை என்றால், இருபத்தேழு ஆண்டுகள் தாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாகிவிட்டது... திறமையான ஒரு வாரிசைப் பட்டத்தில் அமர்த்திவிட்டுத் தாங்கள் ஏன் பதவியிலிருந்து விலகிக்கொள்ளக் கூடாது?" என்று யோசனை சொல்ல... சுல்தான் முகம் சிவந்தது.

"என்ன பேசுகிறீர்கள் பரானி..! என்னை மிஞ்சிய திறமையான வாரிசுகூட நாட்டில் இருக்கிறாரா என்ன? என் உறவுக்காரச் சிறுவர்களின் புத்திசாலித்தனம் பற்றி எனக்குத் தெரியாதா? இப்படி ஒரு யோசனையை நீங்களாகவே என்னிடம் சொல்லியிருந்தால் இந்நேரம் தங்கள் உயிர் போயிருக்கும். நான் கேட்டு - நீங்கள் பதில் அளித்ததால் தப்பித்தீர்கள்!" என்று உறுமி விட்டு, பரானியை உடனே இடத்தைக் காலி செய்யும்படி சொல்லிக் கையசைத்தார் துக்ளக்.

அதைத் தொடர்ந்து சிந்து மாகாணத்தில் தனக்கெதிராகப் போராட்டம் வெடித்த செய்தி கேட்டுப் படையோடு கிளம்பிய முகமது பின் துக்ளக், சிந்துவுக்கு அறுபது மைல் தொலைவில் கூடாரம் அமைத்துத் தங்கி ஓய்வெடுத்தார்.

விருந்துக்கு மசாலாவுடன் ஒரு மீன் ஸ்பெஷலாகச் சமைக்கப்பட்டுப் பரிமாறப் பட்டது. அந்த மீன் கெட்டுப் போயிருந்ததோ அல்லது ஏதேனும் விஷம் கலந்திருந்ததோ... சுல்தான் திடீரென்று நோய்வாய்ப்பட்டார். காய்ச்சலில் உடல் தூக்கிக் தூக்கிப்போட, அந்த நிலையிலும் பின்வாங்காமல் முப்பது மைல் பிடிவாதமாக பயணம் செய்தார் மன்னர். ஜுரம் அதிகரித்தது...

மார்ச் 20, கி.பி.1351... சுருண்டு விழுந்த சுல்தான் முகமது பின் துக்ளக்கைக் கூடாரத்தில் படுக்க வைத்தார்கள்.

அதே தேதியில்...

இந்தக் கல்வியறிவு மிகுந்த, கொடூரமான, பிரச்னைக்குரிய, கலைத்திறமை மிகுந்த, கிறுக்குத்தனம் பிடித்த சுல்தான் வாழ்க்கைக்கு, ஆண்டவன் விருந்தோடு சேர்த்து அனுப்பிய ஒரு மீன் முற்றுப்புள்ளி வைத்தது!

12

பிரோஸ் துக்ளக்..

கடைசி டெல்லி சுல்தான்..!

யார் மீதாவது துளி சந்தேகமோ, ஆத்திரமோ வந்தால் உடனடியாக அவருடைய தலையைச் சீவச் சொல்லி ஆணையிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்த முகமது பின் துக்ளக், கடைசிவரை ஒருவர்மீது மட்டும் மிகுந்த நம்பிக்கையும் பாசமும் வைத்திருந்தார். அவர்தான் பிரோஸ் துக்ளக். முகமது பின் துக்ளக்கின் ஒன்றுவிட்ட சகோதரர் - சொந்த சித்தப்பா மகன். அதற்கேற்ப, பிரோஸ் துக்ளக்கும் சற்றும் பதவிமீது ஆசைப்படாமல், எந்த நிர்ப்பந்தத்திலும் கட்சி மாறாமல் 'என் பணி - அண்ணன் முகமது பின் துக்ளக்குக்குப் பணிசெய்து கிடப்பதே' என்று விசுவாசமாகப் பணியாற்றி வந்தார்.

முகமது பின் துக்ளக் நன்றி மறக்கவில்லை. இறப்பதற்குமுன் பிரோஸ் துக்ளக்கைச் சைகையால் அருகில் அழைத்தார். அவர் கரத்தை அன்புடன் பிடித்தவாறு படுக்கையைச் சுற்றி நின்ற அமைச்சர்களிடம், "எனக்குப் பிறகு பிரோஸ்தான் ஆட்சிக்கு வரவேண்டும்..." என்று சொல்லிவிட்டுக் கண்களை மூடினார். பிரோஸ் துக்ளக் நாற்பத்தைந்து வயதைக் கடந்த நிலையில், திடீரென்று அவருக்கு ராஜயோகம் வந்து சேர்ந்தது! திகைத்துப் போனார் பிரோஸ். அவருக்கு மன்னராவதில் உண்மையிலேயே விருப்பமில்லை! "என் மீது வைத்த அன்பின் காரணமாக மன்னர் எதையோ சொல்லிவிட்டார்" என்று கழற்றிக்கொள்ளப் பார்த்த அவரை, பிரபுக்கள் வற்புறுத்தி வாரிசாகப் பொறுப்பேற்க வைத்தார்கள். இதெல்லாம் நிகழ்ந்தது டெல்லிக்கு மிகத் தொலைவில், சிந்து மாகாணத்தில் - யுத்தகளத்தில்.

முகமது பின் துக்ளக் இறந்த செய்தியும் பிரோஸ் வாரிசாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியும் டெல்லிக்குப் போய்ச் சேர... அங்கே திடீரென்று ஒரு குட்டிச் சோதனை கிளம்பியது! மறைந்த முகமது பின் துக்ளக்கின் உறவினரான க்வாஜா ஜஹான் என்பவர் தன் தொண்ணூறாவது வயதில் சும்மாயிருக்காமல் ஒரு ஆறு வயதுப் பையனை 'முகமது பின் துக்ளக்கின் மகன்' என்று அறிவித்து அரியணையில் அமர்த்தினார்!

சிந்து நதிக்கரையில் மங்கோலியர்களைச் சமாளித்துக் கொண்டிருந்த பிரோஸ் துக்ளக் உடனே டெல்லிக்குத் திரும்ப முடியாத நிலை! அப்போதைக்கு எதிரிகளைச் சமாளித்துத் துரத்திவிட்டு டெல்லியை நோக்கிக் கிளம்பினார் பிரோஸ்.

பாதி வழியில் தூதுவர்கள் வந்து பிரோஸ் துக்ளக்கை எதிர்கொண்டனர். புதிய சுல்தான் டெல்லியில் பதவியேற்று விட்டார் என்றும் ஆகவே, பிரோஸ் துக்ளக் டெல்லிக்கு வந்து சேர்ந்த கையோடு தன் வணக்கங்களை முறைப்படி தெரிவிக்க வேண்டும் என்றும் சொல்ல... ‘சரி, போகட்டும்’ என்று அப்போதுகூட பிரோஸ் பொறுப்பிலிருந்து கழன்றுகொள்ளப் பார்த்ததாகக் கேள்வி!

ஆலோசகர்கள் விடவில்லை. “மறைந்த சுல்தானுக்கு வாரிசு எல்லாம் கிடையாது. இதெல்லாம் க்வாஜா ஜஹான் என்ற கிழம் செய்த ‘செட்டப்’!” என்று பிரோஸுக்கு எடுத்துச் சொன்னார்கள். வழிக்கு வந்த பிரோஸ் துக்ளக், ஒருவழியாகப் பெரும் படையுடன் டெல்லி எல்லையில் நுழைய... தலைநகரத்து மக்களும் அரண்மனையிலிருந்த பிரபுக்களும் கூடி நின்று கரவொலியுடன் பிரோஸ் துக்ளக்கை கோலாகலமாக வரவேற்றனர். பயந்துபோன முதியவர் க்வாஜா ஜஹான் ‘என்ன... ஏது...? என்று புரியாமல் அரியணையில் அமர்ந்திருந்த சிறுவனைக் கீழே இறக்கி விட்டு குதிரையில் இருந்து குதித்துக் கம்பீரமாக அரண்மனைக்குள் நுழைந்த பிரோஸ் காலடியில் தன் தலைப்பாகையை வைத்து மண்டியிட்டு வணங்கி மன்னிப்புக் கேட்டார்!

‘தொண்ணூறு வயது கிழவருக்கு என்னதான் தண்டனையைக் கொடுத்துத் தொலைப்பது..?’ என்று நினைத்தாரோ என்னவோ... பெரியவருக்கு மன்னிப்பு வழங்கினார் பிரோஸ் துக்ளக் (உண்மையில், சில நாட்கள் சிம்மாசனத்தில் அமர்த்தி வைக்கப்பட்ட அந்தச் சிறுவன், அந்தப் புரத்தில் இருந்த ஒரு ராணிக்கும் முகமது பின் துக்ளக்குக்கும் பிறந்த நியாயமான வாரிசுதான்’ என்று துக்ளக் காலத்தில் வாழ்ந்த சில சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடு கிறார்கள். இருப்பினும் ‘திடீர் திடீரென்று குழந்தைகளையெல்லாம் பட்டத்தில் அமர்த்தும் விளையாட்டெல்லாம் இனி வேண்டாம்!’ என்று பெரியவர்கள் முடிவு எடுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது!).

பெரியவருக்கு மன்னிப்பு வழங்கிய பிரோஸ் துக்ளக், அவரை ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்லி வெளியூருக்குச் சில வீரர்களின் துணையோடு அனுப்பி வைத்தார். போகிற வழியில் முதியவரைத் தீர்த்துக்கட்டினார்கள் அவர் கூட சென்றவர்கள். பிரோஸ் ரகசியமாக அந்த வீரர்களிடம் கண்சிமிட்டி அனுப்பினாரா, இல்லையா என்பது பற்றித் தகவல் இல்லை!

செப்டம்பர் 14, கி.பி.1351-ல் ஜொலிக்கும் வைர வைடூரியங்கள் பதிக்கப்பட்ட மகுடம் சுல்தான் பிரோஸ் துக்ளக் தலையில் ஏறி அமர்ந்தது. பழைய டெல்லி சுல்தான்களின் வீரம், சாமர்த்தியம், போர்த்திறன், வஞ்சகம், ராஜதந்திரம், கொலைவெறி எதுவும் பிரோஸ் துக்ளக்கிடம் இல்லை. இருப்பினும், இந்தச் சுல்தான் டெல்லியில் அமர்ந்து ஆண்டது முப்பத்தேழு ஆண்டுகள்!

பல மன்னர்கள் ஆட்சியில் சாம்ராஜ்யத்தை மேலும் மேலும் விஸ்தரிப்பதுண்டு. பிரோஸ் துக்ளக் ஆட்சியில் அது குறுகிக்கொண்டே போனது. டெல்லியின் பிடியிலிருந்து இந்தியாவின் தெற்குப் பகுதி அடியோடு நழுவியது. அதைத் தடுக்க பிரோஸ் துக்ளக் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்கு வங்காளத்தில் கவர்னராக இருந்த ஷாம்ஷுதீன் இலியாஸ், கிழக்கு வங்கத்தையும் கைப்பற்றி, தன்னைச் சுல்தானாக அறிவித்துக் கொண்டார். ‘இதைச் சும்மா விடக்கூடாது’ என்று எல்லோரும் எடுத்துச் சொல்லவே, வேண்டாவெறுப்பாக 70,000 குதிரை வீரர்கள் கொண்ட ஒரு படையுடன்

கிளம்பினார் பிரோஸ் துக்ளக்.

1353-ம் ஆண்டின் கடைசியில் நடந்த இந்த வங்காளப் போரில் ஷாம்ஷுதீன் தோற்றுத் திரும்பி ஓடிக் கோட்டைக்குள் பதுங்கிக் கொண்டார். கோட்டையை உடைத்துக் கொண்டு முன்னேறியிருந்தல், வங்காளம் பிரோஸ் காலடியில் துவண்டு வீழ்ந்திருக்கும். ஆனால், சுல்தான் திடீரென்று மனதை மாற்றிக்கொண்டார். “போரில் வெற்றி பெற்றாகிவிட்டது... டெல்லி திரும்பலாம்” என்று ஆணையிட்டார். படைத் தளபதிகள் திகைத்துப்போனார்கள். பிரதம தளபதியான தார்தார்கான் “இப்படி ஒரு வாய்ப்பைக் கோட்டைவிடுவதா?” என்று வெறுத்துப் போய்த் துணிச்சலோடு உரக்கவே கேட்டதாகத் தகவல். ஆனால், பிரோஸ் துக்ளக் டெல்லி திரும்புவதில் பிடிவாதமாக இருந்தார்.

பிரோஸ் துக்ளக்கின் ஆஸ்தான அரசியல் குறிப்பெழுத்தாளரான ஸிராஜ் அபீஃப் என்பவர், ‘ஷாம்ஷுதீன் இலியாஸ் தோற்றவுடன் கோட்டைக்குள்ளிருந்து பெண்களும் குழந்தைகளும் குரலெடுத்துக் கதறினார்கள். அது வெளியிலிருந்த பிரோஸ் துக்ளக் காதில் விழுந்துவிட்டது. சற்று மனக்கலக்கம் அடைந்துவிட்டார் சுல்தான். கோட்டைக்குள் டெல்லிப்படை புகுந்து விட்டால், பிறகு வீரர்களைக் கட்டுப்படுத்த முடியாது... புகுந்து விளையாடி விடுவார்கள் என்பது பிரோஸுக்குத் தெரியும்!’ என்று குறிப்பிடுகிறார். இப்படி, ஒருவித தர்மசங்க டத்துடனும், விருப்பமில்லாமலும் படைக்குத் தலைமை வகித்தால் எப்படி சாம்ராஜ்யம் குறுகாமல் போகும்...?!

ஆறு வருடங்கள் கழித்து மறுபடியும் பிரோஸ் துக்ளக் வங்காளத்தை நோக்கிப் படையெடுக்க வேண்டிவந்தது. ஷாம்ஷுதீன் இலியாஸ் இறந்தபின் பதவிக்கு வந்திருந்த அவரது மகன் சிகந்தர்ஷா - தந்தையைவிட அடாவடித்தனத்துடன், “வங்காள எல்லையை விஸ்தரிக்கப் போகிறேன்!” என்று படையைத் திரட்டிக்கொண்டு பிரச்னைகளை ஏற்படுத்தியதுதான் காரணம்!

இன்று - பிரோஷ்ஷாபாத் கோட்டை.... உச்சியில் அசோகா ஸ்தூபி!

‘டெல்லிப் படையுடன் நேருக்கு நேர் எதிர்த்து வெல்ல முடியாது. ஆகவே முழுக் கவனத்தையும் தற்காப்பு நடவடிக்கையில் செலுத்துவோம்!’ என்று முடிவெடுத்திருந்த சிகந்தர்ஷா, தன் கோட்டையிலிருந்து வெளியே வரவே இல்லை! தொடர்ந்து சில மாதங்கள் முற்றுகையிட்டும் பிரோஸ் துக்ளக் படையால் கோட்டையைக் கைப்பற்றவும் முடியவில்லை. உள்ளே நுழைய விடாமல் டெல்லி வீரர்கள் மீது வங்காள வீரர்கள் தொடர்ந்து அம்புகளையும் ஈட்டிகளையும் எய்து ஆவேசமாகத் தடுத்தார்கள். இந்த நெருக்கடியான சூழ்நிலையில், சிகந்தர்ஷா புன்முறுவலுடன் எதிர்பார்த்ததைப் போல... இயற்கையும் அவர் துணைக்கு வந்து சேர்ந்தது. திடீரென்று ஆரம்பித்தது அசுரத்தனமான புயல்... பிறகு, பயங்கர மழை! வீசிப் பாய்ந்தது வெள்ளம் (இன்றைக்கும் வங்காளத்தில் மழை, வெள்ளம் என்று ஆரம்பித்தால் அதுபற்றிச் சொல்லத் தேவையில்லை அல்லவா?!)... விளைவாக, டெல்லிப் படை சேற்றிலும் இடுப்பளவு நீரிலும் தட்டுத்தடுமாறிப் பின்வாங்க நேர்ந்தது!

‘டெல்லிக்குத் தோல்வியோடு திரும்ப வேண்டாம்’ என்று முடிவு கட்டிய பிரோஸ் துக்ளக், சுதாரித்துக்கொண்டு ஒரிஸ்ஸா நோக்கிப் படையுடன் திரும்பினார். ஒரிஸ்ஸாவை ஆண்டுவந்த இந்து அரசருக்கு அவ்வளவாகப் போர்புரிந்து பழக்கமில்லை! ஆகவே, தெலுங்கானாவுக்கு அவர் தப்பியோட... டெல்லி வீரர்களின் அத்தனை கோபமும் பூரி ஜெகந்நாதர் ஆலயத்தின் மீது திரும்பியது. கோயில் நாசமாக்கப்பட்டது. பிறகு, அமைதியடைந்த பிரோஸ் துக்ளக், ஒரிஸ்ஸா காடுகளில் வேட்டையாடிச் சில நாட்கள் பொழுதுபோக்கினார். அங்கே, டெல்லிக்குக் கொண்டுசெல்வதற்காக முப்பது யானைகள் வளைத்துப் பிடிக்கப் பட்டன. தப்பியோடப் பார்த்த இரண்டு யானைகளை, சக வீரர்களுடன் சுல்தான் துரத்திச் சென்று கொல்ல வேண்டி வந்தது!

‘பிரோஸ் துக்ளக் தலைநகரைவிட்டுக் கிளம்பி மூன்று ஆண்டுகள் ஆகியும் அங்கே சுல்தானுக்கு எதிராகச் சதித் திட்டம் ஏதும் கிளம்பவில்லையா?’ என்று இதுவரை படித்து அரசு வழிமுறைகளில் பழக்கப்பட்டு விட்ட வாசகர்கள் வியக்கலாம்! முகமது பின் துக்ளக்குக்குப் பிரோஸ் துக்ளக் ஆலோசகராக அமைந்தது போல, பிரோஸுக்கு கான்ஜஹான் மக்பூல் என்ற திறமையான - விசுவாசமான அமைச்சர் வாய்த்திருந்தார். இவர் தெலுங்கானாவைச் சேர்ந்த ஒரு இந்து. பிற்பாடு, பிரோஸுக்கு நண்பராகி இஸ்லாமிய மதம் மாறியவர். அவர் கையில் டெல்லி நிர்வாகம் கட்டுக் கோப்புடன் இருந்தது, பிரோஸ் செய்த அதிர்ஷ்டமே! ஆனால், இந்த அமைச்சருக்கு ஒரு வீக்னெஸ் மட்டும் உண்டு. அது - அழகான பெண்களைச் சேகரிப்பது! அமைச்சருடைய பிரத்தியேக அந்தப்புரத்தில் பல்வேறு நாடுகள் மற்றும் இந்திய மாநிலங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் அழகிகள் இருந்தனர். மனிதர் நிர்வாகத்தையும் திறமையாகக் கவனித்துக் கொண்டு, இத்தனை பெண்களை எப்படி முறை போட்டுச் சமாளித்தார் என்பது பற்றிச் சரித்திரக் குறிப்பு எதுவுமில்லை!

சுகமான அமைச்சரை விட்டுவிட்டுச் சுல்தானுக்கு வருவோம்...

டெல்லிக்கு வடக்கே காஷ்மீர் அருகே காங்ரா பிரதேசத்தில் நாகர்கோட் ராஜ்யத்தை ஆண்டுவந்தார் ஒரு இந்து மன்னர். கொஞ்ச காலமாகவே அவர் தன்னிச்சையாக நடந்து கொண்டு, டெல்லியின் மேலாட்சியை அலட்சியப் படுத்தியதால் அவரை வழிக்குக் கொண்டுவர பிரோஸ் துக்ளக் ஒரு படையுடன் கிளம்ப வேண்டி வந்தது. இமயமலைச் சாரலில் தொடர்ந்து ஆறு மாதங்கள் இந்து மன்னரின் கோட்டை டெல்லிப் படையின் முற்றுகைக்கு உள்ளானது. கடும் பனியிலும், ஐஸ் கட்டி மழையிலும் பிரோஸ் படை வீரர்கள் மிகவும் சிரமப்பட்டுப் போனார்கள். இருப்பினும், பிரோஸ் துக்ளக் இந்த முறை பின்வாங்காமல் உறுதியோடு நிற்க... கடைசியில், கோட்டைக்குள் உணவுப் பொருள் சப்ளை குறைந்துபோக... இந்து மன்னர் தோற்றுப் போனதாக ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டார். தொடர்ந்து டெல்லிக்குச் சமர்த்தாகக் கப்பம் கட்டி, அடக்கமாக நடந்து கொள்ளும்படி புத்திமதி சொல்லி விட்டு அந்த மன்னரை மன்னித்து அனுப்பினார் பிரோஸ் துக்ளக் (சில மன்னர்களைப் போலத் தேவையில்லாத கொலைவெறியை - எதிரி இந்துவாக இருந்தாலும் சரி, முஸ்லிமாக இருந்தாலும் சரி - காட்டியதில்லை பிரோஸ் துக்ளக் என்று பல பேராசிரியர்கள் பாராட்டு கிறார்கள்!).

அதே சமயம், மத விஷயங்களில் மிகவும் தீவிரம் காட்டினார் இந்த சுல்தான் என்பது குறிப்பிடத்தக்கது. பல இந்துக் கோயில்கள் இவர் ஆட்சியில் உடைக்கப்பட்டன என்பது மறுக்க முடியாத உண்மை!

இந்து மன்னரை மன்னித்தாலும், நாகர் கோட்டில் இருந்த ஜ்வாலாமுகி ஆலயத்தை மன்னிக்கவில்லை பிரோஸ் துக்ளக் (அந்தக் கோயிலுக்குச் சுவையான ஒரு பின்னணி உண்டு. அந்தக் கோயிலில் இருப்பது, கி.மு.327-ல் இந்தியாவுக்குப் படையெடுத்த கிரேக்க மன்னர் அலெக்ஸாந்தரின் மனைவி நௌஷாபாவின் உருவச்சிலைதான் என்றும், அலெக்ஸாந்தர் விட்டுவிட்டுப் போன அந்தச் சிலைதான் பிற்பாடு ‘ஜ்வாலாமுகி’ என்று இந்துப் பெயரில் வழிபடப்பட்டது என்றும் ஒரு வரலாற்றுக் குறிப்பு தெரிவிக் கிறது!).

டெல்லிப் படையிடம் வகையாகச் சிக்கிய ஜ்வாலாமுகி ஆலயம் உடைக்கப்பட்டது. அதற்குமுன், அந்தக் கோயிலில் பணிபுரிந்த

இந்துக்கள் அனைவரும் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டனர். கூடவே, கோயிலைச் சேர்ந்த பெரிய நூலகம் ஒன்றிலிருந்த மதம், தத்துவம், வானியல், மருத்துவம்... இப்படி அநேகமாக எல்லா 'சப்ஜெக்ட்'டுகளைப் பற்றிய சுமார் 1,300 புத்தகங்களும் ஓலைச்சுவடிகளும் பத்திரமாக அகற்றப்பட்டன. பிற்பாடு அதிலிருந்து முந்நூறு சமஸ்கிருதப் புத்தகங்களைப் பாரசீக மொழியில் மொழிபெயர்க்க ஆஸுதீன் கலீத் கானி என்னும் அறிஞரை நியமித்தார் சுல்தான்!

தவிர, மீரட் நகரிலும் வடக்கே அம்பாலாவிலும் இருந்த இரண்டு அசோக ஸ்தூபிகளை மிகுந்த செலவில் சிரமப்பட்டு டெல்லிக்குக் கொண்டுவர ஏற்பாடுகளைச் செய்தவர் பிரோஸ் துக்ளக். அதில் ஒரு ஸ்தூபியில் எழுதியிருந்த வார்த்தைகள் என்னவென்று புரியாததால் அதைத் தெரிந்துகொள்ள, மிகுந்த ஆர்வத்துடன் பல அறிஞர்களை வரவழைத்தார் துக்ளக். யாராலும் அதைப் படிக்க முடியவில்லை என்பதில் பிரோஸுக்கு மிகுந்த வருத்தம்.

சில பிராமண அறிஞர்கள் மட்டும் "இந்த ஸ்தூபிகளை நல்லபடியாகப் பேணிக்காத்தால் மிகுந்த அதிர்ஷ்டம் என்று மட்டும் ஒரு குறிப்பிலிருந்து புரிபடுகிறது" என்று ஒரு போடு போட.... அவற்றில் ஒரு ஸ்தூபி டெல்லிக்கு அருகே பிரோஸ் துக்ளக் கட்டிய 'பிரோஷ்ஷாபாத்' என்று அழைக்கப்பட்ட புதிய தலைநகரின் கோட்டை உச்சியில் பொருத்தப்பட்டது! மற்றொன்று, டெல்லிக்கு அருகே ஒரு பூங்காவில் பொருத்தப்பட்டதாகக் கேள்வி (பிற்பாடு மொகலாய மன்னர் ஷாஜஹான் ஆட்சியில் ஷாஜஹானாபாத் - அதாவது இன்றைய பழைய டெல்லி - கட்டப்பட்டபோது பிரோஷ்ஷாபாத் நகர் கோட்டையில் இருந்தும் அரண்மனையில் இருந்தும் கற்கள் பெருமளவில் பெயர்த்து எடுக்கப்பட்டுப் புதிய தலைநகரிலும் அங்கு எழுப்பிய செங்கோட்டையிலும் பயன் படுத்தப்பட்டது. ஆகவே, இன்று மிகவும் சிதிலமடைந்து குற்றுயிராகக் கிடக்கும் 'பிரோஷ்ஷாபாத்' நகரைத்தான் டெல்லிக்கு அருகே நாம் காண முடியும்!).

பொதுவாக இந்த சுல்தான் ஆட்சியில் மக்கள் நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்தனர். திரும்பத் திரும்ப டெல்லி மண் ரத்த மயமானதைக் கண்டதாலோ என்னவோ, குடிமக்கள் பிரோஸ் துக்ளக்கின் நிதானமான, ஆட்சிக்கு முழு அங்கீகாரம் தந்தனர். அதற்கேற்ப, சுல்தானும், விவசாயிகளுக்கு இருந்துவந்த வரிச்சுமையைப் பெருமளவுக்குக் குறைத்தார். கூடவே, நீர்ப்பாசன வசதிகளை ஏராளமாகச் செய்து தந்தார். பதிலுக்கு விவசாயிகள் நல்ல உழைப்பை நாட்டுக்குத் தந்து, தாங்களும் வசதியாகவே வாழ்ந்தனர்!

டெல்லியின் சுற்றுப்புறச்சூழலிலும் அக்கறை காட்டினார் மன்னர். தலைநகரைச் சுற்றிலும் அவர் உருவாக்கிய பூங்காக்களின் எண்ணிக்கை 1,200-க்கு மேல்!

முதன்முதலில் இந்தியாவில் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் (எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச்!) ஆரம்பித்தவர் பிரோஸ் துக்ளக்தான். ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதி உதவித் திட்டம், விதவைகளுக்கு மாதந்தோறும் இலவசத் தொகை தருவது, ஆதரவில்லாத குழந்தைகளுக்கு காப்பகம் மற்றும் சத்துணவு... போன்ற பல நல்ல திட்டங்கள் பிரோஸ் துக்ளக் ஆட்சியில் அமலுக்கு வந்தன.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், சுல்தான் ஆட்சியில் கட்டப்பட்ட அணைகள் (நீர்ப் பாசனத்துக்கு) 50, மசூதிகள் 40, கல்லூரிகள்

30, ஏரிகள் 30, இலவச மருத்துவமனைகள் 100, பொதுக்குளியல் கூடங்கள் 100, பாலங்கள் 150... சரி, ரொம்ப நீட்டிக்கொண்டு போகாமல் இதோடு நிறுத்திக்கொள்வோம்!

டெல்லியில் அரியணையில் அமர்ந்து உருப்படியாக ஆண்ட கடைசி சுல்தான் பிரோஸ் துக்ளக்தான்! கடைசிவரை அமைதியாக ஆட்சிபுரிய விரும்பிய மன்னரை, அவர் வாரிசுகள் நிம்மதியாக வாழ விடவில்லை. பதவிச் சண்டையில் இறங்கினார்கள். படை பிரித்துக்கொண்டு டெல்லி வீதிகளில் மோதிக்கொண்டார்கள். தொண்ணூறு வயதை நெருங்கிக்கொண்டு இருந்த பிரோஸ் துக்ளக் செய்வதறியாமல் மிகுந்த வெறுப்புடனும் கவலையுடனும் இதையெல்லாம் பார்த்தவாறு உயிரைவிட்ட தேதி செப்டம்பர் 20, கி.பி.1388!

பிரோஸ் துக்ளக் மறைவைத் தொடர்ந்து, குதுப்மினார் உயரத்துக்கு கம்பீரமாக நிமிர்ந்து நின்ற டெல்லி சுல்தான்களின் ஆட்சி மெழுகுவர்த்தி குள்ளத்துக்குக் குறுகி... பிற்பாடு வந்த சில்லறை மன்னர்களால் மேலும் உருக்குலைந்து போகும் சூழ்நிலை ஏற்பட்டது!

இப்படிப் பெரும் சாம்ராஜ்யங்கள் சிதைந்து போவதும், உதிரிகள் ஆட்சிக்கு வந்து அலங்கோலப்படுத்துவதும், பிறகு வேறு புத்தம்புதிய சாம்ராஜ்யங்கள் உருவெடுப்பதும்...

இதற்கான உதாரணங்கள் வரலாற்றுப் பக்கங்களில் நிறையவே இருக்கின்றன!

13

கிஸிர்கான்.. சிகந்தர் லோடி.. இப்ரஹீம் லோடி..

பிறகு...!

பிரோஸ் துக்ளக்கின் மூச்சு நின்ற கையோடு டெல்லி சுல்தான்களின் ஆட்சியும் இறுதிக்கட்டத்தை நெருங்கிவிட்டது. மறைந்த மன்னரின் வாரிசுகள் என்ற பெயரில் பிற்பாடு அரியணை ஏறியவர்களின் முகங்கள் மக்கள் மனதில் பதிவதற்கு முன்பே அவர்கள் காணாமல் போனார்கள்! ராஜ வம்சத்தில் பிறந்தவர்கள் என்ற ‘பெருமை’யைத் தவிர, நாடாள்வதற்கான வேறு எந்தத் தகுதியும் அவர்களுக்கு இருக்க வில்லை.

பிரோஸ் துக்ளக்குக்குப் பிறகு அவர் பேரன் துக்ளக் ஷா ஆட்சிக்கு வந்து அரண்மனையை ஒரு ‘ஜாலியான கிளப்’ போல நடத்திவிட்டு, ஐந்து மாதங்களில் அமீர்களால் மேலுலகம் அனுப்பப்பட்டார்.

பிறகு அபுபக்கர் என்னும் இன்னொரு பேரப் பிள்ளைக்குப் பிரபுக்கள் பட்டம் சூட்டினார்கள். ஆட்சிக்கு வந்து ஆண்டு விழாவைக்கூட நடத்தவிடாமல் அவருடைய மாமன் முகமது (பிரோஸ் துக்ளக் மகன்) டெல்லியைக் கைப்பற்றினார். நான்கு ஆண்டுகள் ஆட்சி என்ற பெயரில் கும்மாளம் போட்டு மக்களை வெறுப்பேற்றியவர் இவர். அவருக்குப் பிறகு, அவர் மகன் மகமது ஷா என்பவர் அரியணை ஏற... அவருடைய அங்கியைப் பிடித்து இழுத்து மல்லுக்கு நின்றார், அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர் நஸ்ரத் ஷா.

அடித்துக்கொண்ட இந்த இருவரையும் தூண்டிவிட்டு, அதில் குளிர் காய்ந்தது சுயநலம் மிகுந்த பிரபுக்கள் கூட்டம்! அதற்கேற்ப மகமது ஷா, நஸ்ரத் ஷா இருவரும் ‘நான்தான் டெல்லி சுல்தான்’ என்று பிரகடனப்படுத்திக்கொண்டு, ஏக காலத்தில் டெல்லியின் வெவ்வேறு பகுதிகளில் அமர்ந்து ‘தர்பார்’ பண்ணிய தமாஷும் நடந்தது.

செப்டம்பர் 22, ஆண்டு 1398-ல்....

இந்தத் தமாஷை முடித்து வைத்து, தரையெங்கும் ரத்தம் பாய்ச்ச வந்து சேர்ந்தான் நம் முதல் அத்தியாயக் கதாநாயகன்(!) தைமூர்!

காபூலுக்கு வடக்கேயிருந்து ஆவேசத் துடன் வந்துசேர்ந்த தைமூரைக் கொண்டு இந்தப் புத்தகத்தை ‘மங்களகரமாக’ ஆரம்பித்து

வைத்ததும், அவனுடைய கொலை வெறியாட்டத்தைப் பார்த்து நாம் கதிகலங்கி உடனே ‘ஃப்ளாஷ்பேக்’குக்கு ஓடிவிட்டதும் வாசகர்களுக்கு தெரிந்ததே!

டெல்லியில் உள்ள லோடி தோட்டத்தில் இன்றைக்கும் லோடி மன்னர்களின் கல்லறைகளைக் காணலாம். பிரிட்டிஷ் காலத்தில் இந்தக் கல்லறைத் தோட்டத்துக்கு ‘லேடி வெலிங்டன் பார்க்’ என்று பெயரிட் டார்கள். நாடு சுதந்திரமடைந்த பிறகு ‘லோடி தோட்டம்’ என்ற நியாயமான பெயரே வைக்கப்பட்டது.

இங்கே உள்ள சிகந்தர் லோடியின் கல்லறையைச் “சில நாட்களிலேயே குறைப்பிரசவமான தாஜ் மஹால் என்று அழைக்கலாம்...” என்கின்றனர் சில கட்டடக் கலை வல்லுநர்கள்.



பாரா கும்பாத்

இந்தக் கல்லறையைச் சற்று உன்னிப்பாகப் பார்த்தால் பெரிய தோட்டம்... நடுவில் கட்டடம்... அதை அடைய நீண்ட பாதை... பிறகு படிகள்... நடுநாயகாமாகக் கிண்ணத்தைக் கவிழ்த்ததைப் போல கூரை... இந்த அணுகு முறையே பிற்பாடு மொகலாயர் ஆட்சியில் எவ்வளவு பிரமாண்டமாக முழுமை பெற்றது என்பதைப் பார்க்கும்போது, மொகலாய சாம்ராஜ்யத்தில் - குறிப்பாக ஷாஜஹான் ஆட்சியில் - கட்டடக்கலை எவ்வளவு உன்னதமாக உருவெடுத்து நின்று இந்தியா வுக்குப் பெருமை சேர்த்தது என்பதைப் புரிந்துகொண்டு பிரமிக்கலாம்! ஆனால், பாபர் காலத்தில் கட்டடக்கலை பெரிதாகப் பிரகாசிக்க ஆரம்பிக்கவில்லை. லோடி ஆட்சிக் காலத்துக் கட்டடங்களைவிட ஓரளவு முன்னேறியது என்றுதான் கூற முடியும். குறிப்பாக, லோடி கார்டனில் உள்ள பாரா கும்பாத் கல்லறை (இது கல்லறைதானா என்பது பற்றியே மாறுபட்ட கருத்துக்கள் தொல்பொருள் ஆராய்ச்சி யாளர்களிடையே உண்டு என்பது வேறு விஷயம்!)... அதையொட்டி இருக்கும் மசூதி... அதன்மேல் வரிசையாக உள்ள கூரைப் பகுதிகளின் அமைப்பு... அதில்,

திடீரென்று இன்றைக்கு அரசியல் பிரசித்தி அடைந்திருக்கும் பாபர் மசூதியின் சாயலைப் பார்க்கலாம்!



சிகந்தர் லோடியின் கல்லறை...

ஆறு மாதங்கள் மட்டுமே டெல்லியில் தைமூர் தங்கியிருந்தான். டெல்லியில் கணுக்கால் அளவு ஓடிய ரத்த ஆற்றைக் கால் பதியக் கடந்து அவன் தன் சொந்த ஊரான சாமர்கண்ட் திரும்பிய பிறகு, சில மாதங்கள் டெல்லியில் நடமாட்டமே இல்லாமல் போய்விட்டது! அப்புறப் படுத்தப்படாமல் பல்லாயிரக்கணக்கில் சின்னாபின்னமான உடல்கள் கிடந்ததுதான் காரணம். பிறகு தப்பி ஓடிப் போயிருந்த மகமது ஷா திரும்பி வந்தார். டெல்லி வீதிகளை முடிந்தவரையில் சுத்தப்படுத்தி விட்டு, சில ஆண்டுகள் பெயருக்கு 'ஆட்சி' செய்தார்.

கி.பி.1412-ல் மகமது ஷா இறந்ததோடு சரித்திரம் துக்ளக் சாம்ராஜ்யத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

அதைத் தொடர்ந்து இரண்டு ஆண்டு களுக்கு அரசர் இல்லாமல், தௌலத்கான் லோடி என்ற பிரபுவின் நிர்வாகத்தில் அப்படி இப்படியென்று டெல்லி சமாளித்தது!

தைமூர் இந்திய எல்லைக்குள் நுழைந்த போது வெள்ளைக்கொடி காட்டி அவனுடன் சேர்ந்து கொண்டார் கிஸிர்கான் சையது என்ற பிரபு. அதை மனதில் வைத்துக்கொண்டு, போவதற்குமுன் கிஸிர்கானை முல்தான் மற்றும் லாகூருக்குத் தன் ஆளுநராக நியமித்தான் தைமூர்.

கி.பி.1414-ல் லாகூரிலிருந்து ஒரு சிறு படையுடன் கிளம்பி வந்த கிஸிர்கான், டெல்லியைக் கைப்பற்றிச் சிம்மாசனம் அமர்ந்தார். கிஸிர்கானும் அவரது வாரிசுகளும் வரிசையாகத் தொடர்ந்து முப்பத்தேழு ஆண்டுகள் டெல்லியில் ஆட்சி புரிந்தனர்.

அலாவுதீன் கில்ஜி காலத்தில் வடக்கே சிந்து மாகாணத்திலிருந்து கிழக்கே வங்காளம் வரையிலும் தெற்கே மதுரை வரையிலும் பரந்து விரிந்திருந்த சாம்ராஜ்யம், யானை தேய்ந்து சிற்றெறும்பு ஆன

கதையாகப் போன காலகட்டம் இது. மொத்த ராஜ்யமே டெல்லியைச் சுற்றி ஒன்பது மைல்தான் என்றால் நிலைமையைப் புரிந்துகொள்ளலாம். டெல்லி எல்லையில் உள்ள கிராமத்து ஜமீன்கள்கூட வரிகட்ட மறுத்ததால், படையனுப்பி மிரட்டி வசூல் செய்ய வேண்டிய சூழ்நிலை!

இந்த சூழ்நிலையில், லாகூரை நிர்வகித்து வந்த பலூல் லோடி என்னும் ஆளுநர் டெல்லியைக் கைப்பற்றி ‘லோடி ஆட்சி’க்கு வழிகோலினார். முதல் முறையாகச் சுத்த ஆப்கானிய ரத்தத்தில் உருவாக்கப்பட்ட அரசு டெல்லியில்!

பலூல் லோடி 37 ஆண்டுகள் டெல்லியை ஆண்டதோடு, எல்லைகளைச் சற்று விஸ்தாரமும் செய்தார்!

எளிமையும் குறும்பும் மிக்க ஒரு மன்னர் பலூல் லோடி என்கிறார்கள் சரித்திர ஆசிரியர்கள். அவர் சிம்மாசனத்தில் உட்கார்ந்ததேயில்லை. தரையில் கால் நீட்டிக்கொண்டு ஹாயாக உட்காருவதுதான் மன்னருக்குப் பிடித்தமானது. வாயிற் காப்போனைகூட, போகிறவழியில், ‘என்னப்பா.. சௌக்கியமா?’ என்று தோளைத் தட்டி விசாரித்துவிட்டுச் செல்லும் அளவுக்கு ஜாலியான டைப்!

இவருக்குப் பின் ஆட்சிக்கு வந்தவர் சிகந்தர் லோடி. இவருடைய தாய் ஒரு இந்து. பொற்கொல்லரின் மகள்! இருப்பினும், இந்துக்களிடம் மிகவும் கடுமையாக நடந்து கொண்டார் சிகந்தர் லோடி. சிறந்த வீரரான இவர் பீஹார், மால்வா போன்ற பகுதிகளை வென்று டெல்லி ராஜ்யத்தை மேலும் விரிவு படுத்தினார். பயணம் என்று கிளம்பினால், வழியில் உள்ள இந்துக் கோயில்களை இடித்துக்கொண்டே போவது இவரது வழக்கம். ‘யமுனை நதியில் இந்துக்கள் குளிக்கக்கூடாது’ என்று சட்டம் போடும் அளவுக்குப் போனார் இந்த ஆப்கானிய மன்னர்.

சிகந்தர் லோடி ஆட்சியில் நடந்த ஒரு நிகழ்ச்சியை அநேகமாக எல்லா வரலாற்று ஆசிரியர்களும் ஒரு பெட்டிச் செய்தியாகக் குறிப்பிடுகிறார்கள்.

ஒரு பொதுக்கூட்டத்தில் பிராமண குலத்தைச் சேர்ந்த பிரபு ஒருவர், “இஸ்லாமிய மதம், இந்து மதம் இரண்டும் ஒன்றுதான். இரண்டுமே கடவுளிடம் நம்மைக் கொண்டு சேர்க்கும் மேன்மையான இரு பாதைகள்’ என்று பேச... இந்தச் செய்தி சிகந்தர் லோடிக்குப் போனது. தர்பாருக்குக் கொண்டு வரப்பட்டார் பிராமணர். “இவர் இப்படிப் பேசியது சரிதானா? எனக்குச் சற்றுக் குழப்பமாக இருக்கிறது...” என்று பக்கத்தில் இருந்த மதகுருமார்களிடம் சிகந்தர் லோடி கேட்க, ஒருவர் “மன்னா! இவர்தான் இரண்டுமே ஒன்று என்கிறாரே... ஆகவே, இஸ்லாமிய மதத்தில் சேருவதில் இவருக்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும்?” என்றார்.

“அதானே!” என்று சிகந்தர் லோடி ஆமோதிக்க... “இரு மதங்களும் ஒன்று என்று தான் நான் சொன்னேன்... அதன்படி இந்து மதத்திலேயே நான் தொடர்ந்து இருப்பதில் தங்களுக்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும்?” என்றார் பிராமணர் பதிலுக்கு. “அரசர் ஒன்று சொன்னால் அதற்கு தலை வணங்காமல், இப்படி அதிகப்பிரசங்கித் தனமாகப் பதில் சொல்லிக் கொண்டிருப்பதே முதல் தவறு. இப்படிப் பட்டவர்களுக்கு நம் ராஜ்யத்தில் இடமில்லை. ஆகவே, இவரை உடனே மேலுலகம் அனுப்புங்கள்!” என்று ஆணையிட்டார் சிகந்தர் லோடி.

பொதுவாக சிகந்தர் லோடி நிர்வாகத் திறமை மிகுந்த மன்னராகத்

திகழ்ந்தார். இவர் ஆட்சி புரிந்தபோது, மாவட்ட ஆளுநர்கள் கணக்கு வழக்கையெல்லாம் சரியான முறையில் வைத்திருந்தார்கள். திடீர் திடீரென்று கணக்குக் கேட்கும் வழக்கம் சிகந்தர் லோடிக்கு இருந்ததுதான் காரணம்!

ஒவ்வோர் ஆண்டும் 'வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள ஏழை மக்கள் எத்தனை பேர்?' என்று சென்ஸஸ் ஒன்றும் இவர் ஆட்சியில் எடுக்கப்பட்டது. அவர்களுக்கு உதவித் தொகையும் இலவச உணவும் வழங்கப் பட்டன!

1504-ல் ஆக்ரா என்னும் புதிய ஊரை டெல்லிக்கு அருகே நிர்மாணித்தவர் இவர்தான்.

ஜூலை 6, கி.பி.1505...

டெல்லியையும் அதன் சுற்றுப்புறங் களையும் பயங்கரமான பூகம்பம் ஒன்று தாக்கியது. மொகலாய சாம்ராஜ்யம் துவங்கு வதற்கான வேளை வந்துவிட்டது என்பதை இயற்கை சற்றுப் பலமாகவே முரசு கொட்டித் தெரியப்படுத்தியதோ என்னவோ!

சிகந்தர் லோடி இறந்த பிறகு பட்டத்துக்கு வந்த அவரது மகன் இப்ரஹீம் லோடி, சிறந்த வீரராக இருந்தாலும் முன்கோபத்தாலேயே அழிவைத் தேடிக் கொண்டார். இவரது கொடுங்கோல் அணுகுமுறையை எதிர்த்து ஆட்சேபணைக் கொடி தூக்கிய சொந்தச் சகோதரர் ஜலால் லோடியை இரக்கம் இல்லாமல் கொலை செய்துவிட்டு, 'ஒரு கொடூர இலவச இணைப்பாக' ஹுமாயூன் என்னும் ஒன்றுவிட்ட சகோதரரையும் சிறைப்படுத்திச் சித்ரவதை செய்து சாகடித்தார் இப்ரஹீம்.

ஆப்கான் பிரபுகள் பொதுவாகவே விசுவாசமானவர்கள். அவர்களையேகூடத் தேவையில்லாத கடுமையுடன் மோசமாக நடத்தியதால் விரைவில் மன்னருக்கு எதிராக வெறுப்பு உணர்ச்சி கிளம்பி, கிளர்ச்சிகள் வெடித்தன. இதற்கு முத்தாய்ப்பாக, லாகூர் கவர்னராக இருந்த தௌலத்கான் தலைமையில் பிரபுக்கள் ரகசியக் கூட்டம் போட்டனர்.

"எதற்கும் உபயோகமில்லாத இந்த ஆட்சியை ஒழித்துக்கட்ட வேண்டிய தருணம் வந்துவிட்டது. அதை வெற்றிகரமாகச் செய்து முடிக்க ஒரு திறமையான வீரர்தான் இப்போது தேவை. அண்மையில் காபூலை வெற்றிகரமாகக் கைப்பற்றி ஆட்சியில் அமர்ந்திருக்கிறார் ஒரு துடிப்பான வீரர்... பாபர் என்று பெயர்... அவரை உதவிக்கு அழைத்தால் என்ன?" என்று தௌலத்கான் யோசனை சொல்ல... "அப்படியே செய்வோம்!" என்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறியது!

ஆப்கானிஸ்தானில், காபூல் அரியணையில் அமர்ந்த கையோடு தன் நெருங்கிய ஆலோசகர்களிடம் உரையாடிக் கொண்டு இருந்த பாபர், "எனக்கு நீண்ட நாட்களாக ஒரு கனவு... இந்தியாவை ஆளவேண்டும் என்று!" எனச் சொல்லிக்கொண்டு இருக்கும் போது... 'இந்தியாவுக்கு வர முடியுமா? தங்கள் உதவி தேவை!' என்று தௌலத்கான் தலைமையில் பிரபுக்கள் எழுதி அனுப்பிய கடிதம், பாபர் கைக்குப் போய்ச் சேர்ந்தது!

'இது எப்படியிருக்கு?' என்கிற பாணியில் வாய்விட்டுச் சிரித்தார் பாபர்...!

14

பாபர்...

சோதனைப் படிக்கட்டுகள்!

மன்னர் என்று அலச ஆரம்பித்துவிட்டால் பரம்பரையையும் சற்று ஆராய்ந்தாக வேண்டும் என்பது வரலாற்று மரபு!

ஐரோப்பாவையும் ஆசியாவையும் கதிகலங்க வைத்த துருக்கிய மன்னன் தைமூரின் பரம்பரையில் வந்த உமர்ஷேக் மிர்ஸா சிற்றரசருக்கும் மங்கோலிய மாவீரர் செங்கிஸ்கானின் நேரடிப் பரம்பரையில் வந்த குத்லூக் நிஹார் என்ற பெண்மணிக்கும் பிறந்தவர்தான் நம் பாபர். ஒருவிதத்தில் தைமூர் முன்னோர்களேகூட மங்கோலியர்கள்தான். செங்கிஸ்கான் காலத்தில் (இன்றைய) ஆப்கானிஸ்தானிலும் உஸ்பெகிஸ்தானிலும் 'செட்டில்' ஆகி, அங்கு வாழ்ந்து வந்த துருக்கிய இனத்தோடு பிற்பாடு இரண்டறக் கலந்தவர்கள்...

துருக்கியர்கள் நாகரிகத்தில் முன்னேறியவர்கள். கல்வியறிவும் புத்திசாலித்தனமும் ராஜதந்திரமும் அமையப் பெற்றவர்கள். மங்கோலியர்களோ யாருக்கும் அஞ்சாத ஆவேசமான போர் வீரர்கள். இந்த இரு இனங்களின் ரத்தமும் சரியான விகிதத்தில் கலந்து ஒருவர் உடலில் ஓடினால் கேட்க வேண்டுமா?!

பாபரின் உடலில் இந்தத் துடிப்பான வீரமும் விவேகமும் கலந்த ரத்தக் கலவை ஓடியதால்தான் அவரால் சராசரி மனிதர்களால் எண்ணிப் பார்க்க முடியாத சோதனை களையெல்லாம் கடந்து, பிற்பாடு இந்தியாவில் தீர்க்கமான ஒரு சாம்ராஜ்யத்தைத் துவக்கி உலகப் புகழ்பெற முடிந்தது!

ஆனால், ஒன்றை மட்டும் மாவீரர் பாபராலேயே தடுக்க முடியவில்லை - அவர் நிறுவிய சாம்ராஜ்யத்துக்கு 'மொகலாய சாம்ராஜ்யம்' என்று பிற்பாடு வரலாறு பெயரிட்டதை! தன்னுடைய தந்தையின், 'துருக்கியப் பரம்பரை' குறித்துத்தான் பாபர் பெருமையாகச் சொல்லிக்கொள்வது வழக்கம். தாய்மொழி வந்த மங்கோலிய இனத்தைச் சற்று இரண்டாம் பட்சமாகவே கருதினார் அவர். அப்போதெல்லாம் மங்கோலியர்கள் என்றாலே வெறும் மூர்க்கத்தனமான நாடோடிகள் என்று கருதப்பட்டதுதான் காரணம். பாரசீக மொழியில் 'மொகல்' என்றால் 'மங்கோலியர்' என்று பொருள்! பிற்பாடு, சரித்திரத்தில் பாபரும் அவருடைய வழித் தோன்றல்களும் 'மொகலாயர்கள்' என்று அழைக்கப்படப் போவது பாபருக்கு முன்பே

தெரிந்திருந்தால் அவர் மிகவும் தர்மசங்கடப் பட்டுப் போயிருப்பார்!

பாபரின் அப்பாவுக்கு வருவோம்!

தைமூரின் சாமர்கண்ட் தலைநகருக்கு கிழக்கே சில நூறு மைல் தொலைவில் உள்ள பெர்கானா என்ற பிரதேசத்தை ஆண்டுவந்த பாபரின் தந்தை உமர்ஷேக் மிர்ஸா பற்றிச் சுவையான தகவல்கள் இருக்கின்றன. ‘உமர்ஷேக் சற்றுக் குள்ளம். அகலமான மார்பு. பெரிய தொப்பை. அவர் பெருமூச்சு விடும்போதெல்லாம் அவருடைய மேலாடையை இணைத்த பொத்தான்கள் ‘பட்’டென்று அறுந்து விழுவது வழக்கம். அதுபற்றியெல்லாம் அவர் கவலைப் பட்டதில்லை. மனிதர் என்ன பரிமாறினாலும் முகம் சுளிக்காமல் நிறைய சாப்பிடுவார். பெருங்குடியர். படு ஜாலியான நண்பர். ஜமா சேர்ந்துவிட்டால் உமர்ஷேக் வித விதமான பாரசீகக் கவிதைகளை உரக்க, அனுபவித்துப் பாடுவார். கூடவே ‘ஹூம்! என்ன பிரயோஜனம்? என்னால் ஒரு கவிதை கூட இயற்ற முடியவில்லையே!’ என்று புலம்புவார். அழகான பெண்களைக் கண்டால் அவர் முகம் ஏகமாக மலரும். குறும்பான பேச்சுகள் வெடிக்கும். ஆனால், குத்துச்சண்டை என்று வந்துவிட்டால் உமர்ஷேக்கை எதிர்த்து யாரும் நிற்க முடியாது. அநேகமாக ஒரே குத்துதான் விடுவது வழக்கம். எதிராளி மல்லாந்து விழாமல் இருந்ததே கிடையாது...

ஒரு நாள், (கி.பி.1494 ஜூன் எட்டாம் தேதி) காலையில் மேல் மாடியில், தான் வளர்த்த புறாக்களுக்குத் தீனி கொடுத்துக்கொண்டு இருந்தபோது வீரம், பெருந்தன்மை, குறும்பு, ரசிப்பு எல்லாம் ஒருசேரப் பெற்ற உமர்ஷேக் மிர்ஸாவின் கால் தடுக்கியது. திகைத்துப் பறந்த புறாக்களுடன் தானும் ஒரு பருந்தைப் போல கீழே விழுந்த மறுகணம் அவர் உயிர் மேலே பறந்துவிட்டது...’

- இவ்வளவு நுணுக்கமான ரசனையோடு உமர்ஷேக்கை விவரித்திருப்பவர் அவருடைய மகன் பாபர்தான் - ‘பாபர்நாமா’ என்ற உலகப் பிரசித்திபெற்ற அவரது சுயசரிதையில்!

தந்தை மறைந்த உடனே பெர்கானா சிற்றரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பாபருக்கு வயது பதினொன்று!

தைமூர் ஆண்ட பரந்துவிரிந்த சாம்ராஜ்யம் பல சிறுசிறு பகுதிகளாகச் சிதறிப் பிரிந்து போய் ஒவ்வொரு பகுதியையும் ஒரு சிற்றரசர் ஆண்ட காலம் அது. எல்லோருமே தைமூர் வழிவந்த பங்காளிகள்தான். ‘நாமும் ஒரு தைமூர் ஆகவேண்டும்’ என்று ஒவ்வொருவரும் கனவு கண்டு வந்தவர்கள்..!

உமர்ஷேக் இறந்து அவருடைய பதினோரு வயதுச் சிறுவன் ஆட்சிக்கு வந்திருக்கும் செய்தி கேள்விப்பட்டவுடனேயே அண்டை நாட்டுச் சிற்றரசர்கள் இருவர் (மாமன்மார்கள்!) படையுடன் பெர்கானாவைக் கைப்பற்ற வந்து சேர்ந்தார்கள்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சில மாதங்களிலேயே தன் கம்பீரத்தாலும் கண்ணியத்தாலும் மக்கள் மதிப்பைப் பெற்றிருந்தார் பாபர். எல்லைக்குள் படை நுழைந்தவுடன் பதற்றமோ, பயமோ காட்டாமல் படைவீரர்களையும் மக்களையும் கூட்டி “நாம் யாரும் ஓடக்கூடாது. எதிரிகளுடன் போர்புரிந்து அவர்களைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்!” என்று கண்டிப்புடன் இந்தச் சிறுவர் முழங்கியது குறித்து எல்லோரும் பெருமைப்பட்டனர்.

பாபரின் தலைமையில் படை வீரர்களும் மக்களும் ஒன்று திரண்டு காட்டிய துடிப்பான எதிர்ப்பைக் கண்டு எதிரிகள் பின்வாங்கித் திரும்பினார்கள். அதோடு நிறுத்திக் கொள்ள வில்லை பாபர். ஆலோசகர்களையும் படைத் தளபதிகளையும் அழைத்து "நாம் வெறுமனே பெர்கானாவில் அமர்ந்து கொண்டு இருந்தால் இன்றில்லாவிட்டாலும் நாளை நாம் இதையும் இழக்க நேரிடும். ஆகவே சாமர்கண்ட் நகரை நாம் கைப்பற்றி நம் பலத்தையும் செல்வாக்கையும் கூட்டிக்கொள்ள வேண்டும். அதற்கான படையெடுப்புக்கு ஏற்பாடுகள் உடனே நடக்க வேண்டும்!" என்றார்.!

அந்தச் சமயம் பார்த்து சாமர்கண்ட் அரசர் காலமானதால் அங்கே குழப்பமான சூழ்நிலை நிலவியது. "இதுதான் தருணம்!" என்று முழங்கிய பாபர் தலைமையில் கிளம்பிய ஒரு படை சாமர்கண்ட் நகரை அடைந்தது. அப்போது பாபரின் வயது பதின்மூன்று!

சாமர்கண்ட் கோட்டை வாயிலை நெருங்கிய பாபரின் கண்களில் வியப்பு! ஏற்கெனவே அங்கே இரு படைகள் கோட்டைக் கதவை முட்டிக் கொண்டிருந்தன - பாபரைப் போலவே அண்டைப் பிரதேசங்களை ஆண்டுவந்த இரு இளவரசர்கள் தலைமையில்! அவர்களில் ஒருவர் வந்திருந்தது, அந்த ஊரில் வசித்து வந்த தன் காதலியை (செல்வாக்குள்ள அவள் பெற்றோர் ஆட்சேபணையை மீறி) தூக்கிக்கொண்டு போவதற்காக என்பதை விசாரித்துத் தெரிந்துகொண்டார் பாபர். உடனே தன் படையையும் அந்த இளவரசருக்கு அனுப்பி உதவினார் பாபர். இதனால் விரைவாக காதலர்கள் இணைந்தனர். பதிலுக்கு அந்தக் காதல் இளவரசரின் படை பாபர் படையுடன் கூட்டணி அமைத்தது. இதற்குள் குளிர்காலப் பனிப்புயல் சாமர்கண்ட் நகரைத் தாக்கவே, தாக்குதலை நிறுத்திவிட்டு பெர்கானா திரும்பினார் பாபர். சில மாதங்களில் மறுபடி ஒரு படையுடன் சாமர்கண்ட் நகரைச் சென்றடைந்த பாபர் ஏழு மாத முற்றுகைக்குப்

பிறகு அந்த நகரை, தன் 14-வது வயதில் கைப்பற்றினார்.

சாமர்கண்ட் நகர் அரியணையில் அமர்ந்த கையோடு மறக்காமல் தைமூரின் கல்லறைக்குக் கிளம்பிச் சென்று மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்திய பாபர், அதையடுத்து ஆர்வத்துடன் நுழைந்து பல மணி நேரம் செலவிட்டது நகரில் இருந்த புகழ்பெற்ற நூல்நிலையங்களில்தான். மாலை நேரத்தில் சாமர்கண்டின் புகழ்பெற்ற, விஸ்தாரமான தோட்டங்களில் 'வாக்கிங்!'

ஆனால், விதி பாபரை நிம்மதியாக இருக்க விடவில்லை. சாமர்கண்ட் நகரம் மூன்றே மாதங்கள்தான் பாபர் கைவசம் இருந்தது. கடுமையான குளிர் காலத்தைத் தொடர்ந்து ஊரில் பஞ்சம் ஏற்பட (பாபருக்கு நிதிப் பற்றாக்குறையும் ஒரு காரணம்...) 'இந்த இளைஞருடன் இருப்பதில் உடனடியான பலன் ஏதும் இருக்காது போலிருக்கிறது!' என்று எண்ணிய பல படைத் தளபதிகளும், வீரர்களும் பாபரைக் கைவிட்டுவிட்டு வெளியேறினார்கள். 'மிகவும் விசுவாசமான வர்கள் என்று நான் நினைத்து இருந்தவர்கள் கூட ஓடிவிட்டதுதான் என் நெஞ்சைத் தைத்தது...' என்று சுயசரிதையில் குறிப்பிடு கிறார் பாபர்.

சாமர்கண்ட் நகரில் பாபர் தங்கியிருந்த இத்தருணத்தில் பெர்கானாவில் உள்ள சில பிரபுக்கள் 'பாபர் பதினாலு வயதுச் சிறுவனாக நமக்கு அடங்கி ஒடுங்கி நடப்பார் என்று தோன்றவில்லை. ஆகவே அவரை ஓரங்கட்டினால்தான் நாம் செல்வாக்குடன் வாழ முடியும்!' என்று சதியாலோசனையில் இறங்கினார்கள். பாபரின் சாதுவான இளைய சகோதரர் ஒருவரை (வயது 12) பட்டத்தில் அமர்த்தத் திட்டம் போட்டார்கள். இந்தத் தகவல் வந்துசேர, கைவசம் இருந்த படை வீரர்களைத் திரட்டிக்கொண்டு சாமர்கண்டிலிருந்து பெர்கானா கிளம்பினார் பாபர். அங்கே போய்ச் சேருவதற்குள் அவருடைய தம்பிக்குப் பட்டம் சூட்டி, ஒரு புதிய படையுடன் பிரபுக்கள் பாபரை எதிர்த்து நின்றார்கள். சரிதான், திரும்பலாம் என்று பார்த்தால் சாமர்கண்ட் நகரும் பறிபோய் விட்டது. இப்படிச் சாமர்கண்ட், பெர்கானா இரண்டையும் ஏககாலத்தில் இழந்து நட்ட நடுவில் நின்றார் பாபர்!

சில நூறு பேரே கொண்ட தன் சிறு படையுடன் பாலைவனத்தின் நடுவே குஜண்ட் என்ற இடத்தில் சிறு மண் கோட்டைக்குள் புகுந்துகொண்டு குளிரில் நடுங்கியவாறு பாபர் சில மாதங்கள் கழிக்க வேண்டியதாயிற்று. 'எத்தனையோ சோதனை களைச் சந்தித்துக்கொண்டிருக்கும் ஒரு பதினாலு வயது சிறுவனை ஆண்டவன் இப்படித் தொடர்ந்து சோதிக்க வேண்டுமா என்ற எண்ணம் தோன்றியவுடன் என் நெஞ்சம் அடைத்துக்கொண்டது. மெள்ள நண்பர்களைவிட்டு விலகி ஒரு மூலைக்குச் சென்று விம்மி விம்மி அழுதேன்...!' என்று பாபரே குறிப்பிடுகிறார்.

பாலைவனத்தில் பரிதாபமாகச் சிக்கிக் கொண்ட பாபருக்கும் மற்றவர்களுக்கும் சாப்பாட்டுக்கே பிரச்னை ஏற்பட்டது. கூட இருந்த வீரர்களுடன் இரவில் கிளம்பிப் பக்கத்துக் கிராமங்கள் மீது 'கொரில்லாத் தாக்குதல்' நடத்தி உணவுப் பண்டங்களைக் கைப்பற்றிக்கொண்டு வரவேண்டியது ஆயிற்று.

சில மாதங்களில் மேலும் இளம் வீரர்களைச் சேர்த்துக்கொண்டு ஒரு படையுடன் சென்று மறுபடியும் பெர்கானாவைக் கைப்பற்றினார் பாபர். உடனே தன் சகோதரர் தலையை அவர் சீவியிருக்கலாம். மாறாக "நாம் இருவரும் பெர்கானாவைப் பிரித்துக்கொண்டு ஆளுவோம். உன் படையையும் எனக்குத் தந்து உதவு. சாமர்கண்டைக் கைப்பற்றுகிறேன்.

பிறகு பெர்கானா உனக்கு, சாமர்கண்ட் எனக்கு!” என்று தம்பியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர் பாபர்.

ஓராண்டு பெர்கானாவில் சற்று நிம்மதியான வாழ்க்கை... அப்போதுதான் 16-வது வயதில் பாபருக்கு முதல் திருமணம் நடந்தது. உறவுக்காரப் பெண். ‘எத்தனையோ லட்சியங்கள், ஏதேதோ கனவுகள்.. இல்லற வாழ்க்கையில் எனக்கு நாட்டமில்லை. என் மனைவி மீது விருப்பமும் வரவில்லை. அதற்காக அவள் மீது நான் வெறுப்பாக இருந்தேன் என்று அர்த்தமல்ல. தவிர, இந்த விஷயத்தில் எனக்குக் கூச்ச சுபாவம் இருந்தது. ஆகவே பத்துப் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறைதான் படுக்கையறையில் நுழைந்தேன் என்று சொல்லலாம். அதுவே பிறகு மாதத்துக்கு ஒருமுறை என்றானது. அதுவும் என் அம்மா என்னைக் கடிந்து கொண்டதால்தான்!’ - பாபர்.

சில ஆண்டுகளில் வெறுத்துப்போன திருமதி பாபர், ‘விட்டால் போதும்’ என்று கணவரைப் பிரிந்து சென்றுவிட்டதாக வரலாற்றுக் குறிப்புத் தெரிவிக்கிறது!

கி.பி.1500...

ஓரளவு வசதியாகப் படை சேர்ந்தவுடன் சாமர்கண்டுக்குக் கிளம்ப பாபர் தயாரான போது விதி மறுபடியும் குறுக்கே கால் நீட்டியது. தைமூர் பரம்பரையில் வந்த ஷைபானிகான் என்னும் மூர்க்கமும் போர் திறனும் கொண்ட ஒரு நாடோடி மன்னர் முந்திக்கொண்டு சாமர்கண்ட் நகரைக் கைப்பற்றினார். உஸ்பெக் நாட்டைச் சேர்ந்த ஷைபானிகானின் குதிரைப்படை திறமையும் வேகமும் கொண்டது. பெர்கானா தளபதிகள் இதை பாபரிடம் எடுத்துச் சொல்லி “சற்றுப் பொறுப்போம்!” என்றனர். “இல்லை! சாமர்கண்ட் கிளம்பிச் செல்வதுதான் நல்லது. அந்த மக்களை ஆதரவோடு நடத்தியவன் நான். இப்போது வந்து சேர்ந்திருக்கும் இந்த முரட்டு மன்னனை அவர்கள் நிச்சயம் மனதளவில் அங்கீகரிக்க மாட்டார்கள். மக்கள் ஆதரவு எனக்குத்தான் இருக்கும். ஆகவே, முதலில் நாம் அங்கே போய்ச் சேர்வோம். பிறகு ஷைபானிகானைச் சமாளிக்க ஏதாவது வழி தோன்றும்..!” என்றார் பாபர்.

இரவு பன்னிரண்டு மணி சுமாருக்கு பாபர் படை சாமர்கண்ட் நகரைச் சென்று அடைந்தது. தைமூர் ஸ்டைலில் கோட்டைக்கு வெளியே ஒரு பெரிய பூங்காவில் எந்த ஆபத்தையும் எதிர்நோக்காமல் ஷைபானி கான் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க... சத்தம் போடாமல் பாபரின் படை வீரர்கள் ஐம்பது பேர் கோட்டைச் சுவரில் ஏணிகளைப் பொருத்தி உள்ளே குதித்துக் கதவைத் திறந்து விட, பாபரின் படை சந்தடி செய்யாமல் உள்ளே புகுந்துகொண்டு கோட்டைக் கதவை மூடிக்கொண்டுவிட்டது.

இந்த இரவு நேரச் சலசலப்பைக் கேட்ட சில கடைக்காரர்கள் தூக்கம் கலைந்து எழுந்து பார்த்தனர். சில வீடுகளின் ஜன்னல்கள் வழியாக முகங்கள் எட்டிப் பார்த்தன. படைத் தலைமையில் பாபரைப் பார்த்ததும் எல்லோர் முகங்களும் மலர்ந்தன. குரலெழுப்பாமல் உற்சாகத்துடன் சைகையாலேயே பாபரை வரவேற்றார்கள்!

அதிகாலையில், கோட்டைக்குள் மையத்தில் இருந்த மாளிகை மீது கொடி ஏற்றி பாபர் கம்பீரமாகக் காட்சியளிக்க... திரண்டு வந்த ஊர்மக்கள் மகிழ்ச்சிக் குரலெழுப்பினர். பாபரின் திட்டப்படி அவருடைய படை வீரர்கள் கூட்டத்துக்குள் புகுந்து மக்களைத் தூண்டிவிட ‘பாபர் வாழ்க’ என்கிற ரீதியில் மக்களின் ஒன்றிணைந்த முழக்கம் வெளியே இருந்த ஷைபானிகான் காதுகளில் விழுந்தது. கான் கேட்ட வெற்றி முழக்கம்

அவரைச் சஞ்சலப்படுத்தியது. ஊரே திரண்டு வெளியே வந்து தங்கள்மீது பாயப்போகிறதோ என்று கற்பனை செய்து கொண்ட ஷைபானிகான் படை, நகரை விட்டே வெளியேறிவிட்டது!

ஆனால், ஷைபானிகான் லேசுப்பட்ட வீரர் அல்ல. ஒரு பெரும் படையுடன் சில மாதங்களில் திரும்பிய அவருடைய படை, சாமர்கண்ட் நகரைச் சுற்றி வளைத்துக் கொண்டது. போரில் இறங்க வேண்டிவரும் என்று பாபர் கணக்குப் போட்டால்... ஷைபானிகான் எண்ணம் வேறாக இருந்தது. நேரடி மோதலில் இறங்காமல் வலுவான, நெருக்கமான முற்றுகையில் இறங்கினார் ஷைபானிகான். சில மாதங்களில் கோட்டைக்குள் உணவுப் பண்டங்கள் தீர்ந்து விட... பாபரும் மற்றவர்களும் சாப்பாட்டுக்குக் கழுதைகளைக் கொன்று அதன் இறைச்சியைச் சுட்டுச் சாப்பிட வேண்டிய அவலமான நிலை ஏற்பட்டது.

பழையபடி நம்பிக்கையிழந்த சில படைத் தளபதிகளும் பொறுமையிழந்த வீரர்களும் சிறுசிறு கூட்டமாக இரவில் கோட்டையில் இருந்து வெளியே குதித்து ஓடிவிட, ஷைபானி கானிடம் பாபர் வெள்ளைக்கொடி காண்பித்துச் சமரசம் பேச வேண்டியதாயிற்று. அந்தச் சமாதான ஒப்பந்த அடிப்படையில் தன் சகோதரி கான்ஸாதாவை ஷைபானி கானுக்கு வேண்டாவெறுப்பாக பாபர் திருமணம் செய்து வைக்க வேண்டி வந்தது!

மறுநாள் இரவு பாபரும் அவர் தாயும் நெருங்கிய சகாக்களுடன் சந்தடி செய்யாமல் கோட்டையை விட்டுத் தப்பி வெளியேறி னார்கள்.

இப்போது பாபரிடம் மிச்சமிருந்தது எதுவுமில்லை - மன உறுதியைத் தவிர..!

இந்தியாவை நோக்கி..!

‘**வா**ழ்க்கையில் முன்னேறுவது எப்படி?... சோதனைகளை ஜெயிப்பது எப்படி?...’ என்றெல்லாம் வழிகாட்ட இன்றளவில் ஏராளமான புத்தகங்கள் வெளிவருகின்றன. அந்த வகையில் பாபரின் ‘சுயசரிதை’ புத்துணர்ச்சியும் தன்னம்பிக்கையும் தரும் ஒரு சிறந்த புத்தகம். ஆகவேதான் உலக இலக்கியத்தில், பெருமைவாய்ந்த சுயசரிதைகளில் ஒன்றாகப் ‘பாபர்நாமா’ கருதப்படுகிறது. துருக்கிய மொழியில் பாபரால் (டெல்லி பாதுஷாவாக ஆன பிறகு) எழுதப்பட்டு, பிற்பாடு பாரசீக மொழியில் தயாரிக்கப்பட்டு 1826-ம் ஆண்டு ஆங்கிலத்திலும் இந்த நூல் மொழி பெயர்க்கப் பட்டது. 1871-ல் பிரெஞ்ச் மொழி பெயர்ப்பும் வெளியானது!’

இதோ, பாபரின் சோதனைகள் தொடர் கின்றன..!

தன் தாயோடும், விசுவாசமான சில நண்பர்களுடனும் இரவோடு இரவாக சாமர்கண்ட் நகரிலிருந்து தப்பி வெளியேறிய பாபர், மிகுந்த சிரமத்துடன் ஆபத்தான - கரடுமுரடான மலைப்பகுதிகளைக் கடந்து, வசதி படைத்த மாமன்மார்கள் இருவர் வசித்து வந்த தாஷ்கண்ட் நகர் போய்த் தஞ்சமடைந்தார்.

மாமன்கள் பாபரை அன்புடன் வரவேற்றனர். சண்டையென்று வந்தால் ஆவேசமாக மோதல், விருந்தாளி என்று வந்தால் விமரிசையாக உபசரிப்பு - இது அந்த இனத்தின் வழக்கம்!

இருப்பினும், பாபர் ரொம்ப நொந்து போனார். தன் சுயசரிதையில்

‘தாஷ்கண்டில் தங்கியிருந்தபோது வறுமையும் எனக்கு ஏற்பட்ட அவமானங்களும் மனதைப் பாரமாக அழுத்தின. எனக்கென்று ஒரு நாடு இல்லை. வீடுகூட இல்லை. என் சகாக்கள் பலர் என்னைவிட்டு ஓடிவிட்டனர். இருக்கும் சிலரோ துவண்டுபோய்க் கிடக்கிறார்கள். என்ன செய்வதென்றே புரியவில்லை. இதுபோன்ற சமயங்களில் யாரைப் பார்த்தாலும் அவமான உணர்ச்சி.. தன்னந்தனியே கால்போன போக்கில் நடந்து மனிதர்களே இல்லாத இடத்துக்குப் போய் விட வேண்டும் என்று தோன்றிவிட்டது...’ என்று குறிப்பிடுகிறார் பாபர்.

ஆனால், ‘தோல்வி என்பது மாற்றி அமைக்கப்பட வேண்டிய ஒரு தற்காலிகப் பிரச்னையே!’ என்பது பாபரின் அசைக்க முடியாத கருத்து. இதற்கேற்ப பாபரின் மாமன்களும் மேலும் வந்து சேர்ந்த உறவினர்களும் நண்பர்களும் உதவிகள் ஏற்படுத்தித் தர... ஒரு படையுடன், தான் பிறந்த பெர்கானாவை மீண்டும் கைப் பற்றினார் பாபர்.

சில மாதங்கள்தான்.. ஷைபானிகான் தலைமையில் சாமர்கண்ட் படை கிளம்பி வந்து பெர்கானாவைத் துவம்சம் செய்து கோட்டையைக் கைப்பற்றியது. எந்த விதத்திலும் தயார்நிலையில் இல்லாத பாபர், மறுபடி ஊரைவிட்டுக் குடும்பத்தோடு தப்பியோட வேண்டிவந்தது!

வரலாற்று ஆசிரியர் காஸிம் ஃபெரிஷ்டா “விதியின் காலடியில் உதைபடும் கால் பந்தாக, சதுரங்க ஆட்டத்தில் ஓரத்தில் சிக்கிக்கொண்டு அங்குமிங்கும் இடம் பெறும் ‘ராஜா’வைப் போல அலைக்கழிக்கப் பட்டார் பாபர்...” என்று பரிதாப உணர்ச்சி யோடு குறிப்பிடுகிறார்.

கால்பந்தாடுவதை நிறுத்திவிட்டு, விதி மென்மையாகப் பாபரை நோக்கி புன்னகைத்தது!

வந்து சேர்ந்தது ஒரு செய்தி - ‘ஆப்கானிஸ்தானில் காபூல் அரசர் திடீரென்று இறந்துவிட்டார். சரியான வாரிசு இல்லை. நம் இனத்தைச் சேர்ந்திராத யாரோ ஒருவன் அரசைக் கைப்பற்றி யிருக்கிறான். சற்று முயற்சித்தால்... காபூல் நம் கைவசம்!’ என்று. உடனே உத்வேகமும் எங்கிருந்தோ வந்து புகுந்துகொள்ள... சுமார் இருநூறு பேர் கொண்ட படை(!)யைத் திரட்டிக்கொண்டு காபூல் நோக்கிக் கிளம்பினார் அவர்.

முன்னேற்றப் பாதையில் நடை போடுபவர்களைத்தானே உலகம் காதலிக்கிறது! காபூலை நோக்கிப் பாபர் கிளம்பிவிட்ட தகவல் பரவியதும் வழிநெடுக இருந்த பல கிராமங்களிலிருந்து வீர இளைஞர்கள் பாபருடன் சேர்ந்து கொண்டனர்! போகப் போகப் படை பரந்து விரிந்தது. பெர்கானாவுக்குக் கிழக்கே ஹிந்துகுஷ் மலைத்தொடரைப் பாதுகாப்பு அரணாகக் கொண்டதால், யாரும் அவ்வளவு சுலபத்தில் அண்ட முடியாத காபூல் நகரத்து எல்லையை அடைந்தவுடனே “பாபர் தலைமையில் ஒரு பெரும்படை நாலாகப் பிரிந்து காபூலைச் சூழ்ந்துகொள்ள வந்து கொண்டிருக்கிறது...” என்று ஒரு செய்தியை முன்கூட்டியே அனுப்பினார் பாபர். மிரண்டுபோன காபூல் மன்னன், தன் படையுடன் கோட்டைக்கு வெளியே வந்து சம்பிரதாயமாகச் சற்று நேரம் அம்புகளை எய்துவிட்டுப் பிறகு ஓட்டமெடுத்தான்.

காபூல் அரியணையில் பாபர் - பதினாறாம் நூற்றாண்டு ஓவியம்...

கி.பி.1504-ல் காபூல் அரியணையில் அமர்ந்தார் பாபர்! இத்தனை சோதனைச் சூறாவளிகளையும் கடந்து காபூலைக் கைப் பற்றியபோது பாபருக்கு வயது இருபத்திரண்டு என்பதை நினைத்துப் பார்க்கும்போது பிரமிப்பு பல மடங்காகிறது!

இந்தச் சாதனைக்கு பாபரின் மன உறுதி மட்டுமல்ல, உடல் உறுதியும் ஒரு முக்கிய காரணம். குதிரையேற்றம், மல்யுத்தம், வாட்பயிற்சி இவற்றில் பாபர் ஈடுபடாத நாளில்லை. தன் உடல் வலிமையை நிரூபிக்க, பாபர் அவ்வப்போது தன் கைகளால் இரு நண்பர்களை 'அலேக்' என்று தூக்கிக்கொண்டு கோட்டை உச்சியில் ஓடிக்காட்டுவது வழக்கம்! வழியில் குறுக்கிடும் எந்தப் பெரிய நதியிலும் இறங்கி இக்கரைக்கு அக்கரை நீச்சலடிப்பதும் பாபருக்குப் பழக்கம் (பிற்பாடு, இந்தியாவில் கங்கை நதியையும் அவர் விட்டுவைக்கவில்லை!).

தன் மகன் காபூல் அரியணையில் அமர்ந்ததைப் பார்த்த பிறகு - ஓராண்டு கழித்து, பாபரின் அன்னை காலமானார். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மார்ச் 7, கி.பி.1508-ல் பாபருக்கு மூத்த மகன் பிறக்க... ஹுமாயூன் என்று குழந்தைக்குப் பெயரிடப் பட்டது. (ஹுமாயூனைத் தொடர்ந்து, 1509-ல் ஒரு மகனும் (காம்ரான்), 1516-ல் ஒரு மகனும் (அஸ்காரி) பாபருக்குப் பிறந்தனர். 1519-ல் இந்தியாவுக்குள் பாபர் புகுந்த கையோடு பிறந்ததால், தன் கடைசி மகனுக்கு 'ஹிண்டால்' என்று பெயரிட்டார் பாபர். பாபரின் மற்ற மனைவிகள் பற்றிப் பிற்பாடு!).

காபூல் ஓர் அற்புதமான, பிஸியான நகரம். நகரை ஒரு ரவுண்ட் அடித்தவுடன் பாபர், மெய்சிலிர்த்துப் போனார். சோலைகளும் மலைகளும் நதிகளும் நீர்த்தேக்கங்களுமாக அத்தனை அழகு! சுவையான கனிகள், எங்கு பார்த்தாலும் மலர்கள், தவிர, எத்தனை விதமான மக்கள்! ஐரோப்பிய, அரேபிய, இந்திய, சீன வியாபாரிகளுக்கு ஒரு முக்கிய 'ஜங்ஷ'னாக காபூல் இருந்தது.

இதுவரை துருக்கிய மொழி மட்டுமே பாபருக்குப் பரிச்சயம்! காபூலில் பலதரப்பு மக்களால் பேசப்பட்ட மொழிகளோ பாரசீகம், இந்தி, ஆங்கிலம், சீனம் மற்றும் ஆப்பிரிக்க மொழிகள் என்று டஜனுக்கும் மேல்!

இது ஒருபுறமிருக்க, ஒவ்வோர் ஆண்டும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட குதிரைகள் ஒரு நாட்டுக்கு ஏற்றுமதி ஆனதையும் அங்கிருந்து கண்ணைப் பறிக்கும் பட்டுத்துணிகள், முத்துக்கள், உயர் ரக சர்க்கரை, ஏலக்காய் மற்றும் வாசனைத் திரவியங்கள் வந்து இறங்குவதைக் கண்டதும் பாபருக்கு வியப்பு. "எந்த நாட்டோடு இப்படி ஒரு பிரமாண்ட வியாபாரம்?" என்று ஆர்வத்துடன் விசாரித்தால், "இந்தியா" என்று பதில் வந்தது. முதல் தடவையாக 'இந்தியா' பாபரின் இதயத்தில் ஒரு மூலையில் புகுந்துகொண்டது அப்போதுதான்!

காபூலில் வசதியாக அமர்ந்து ஆட்சியைத் துவக்கிய மறுகையோடு பாபர் தன் பங்குக்கு ஒரு புதிய அழகான தோட்டத்தை உருவாக் கினார். (கடைசிவரை தான் அமைத்த அந்த அழகிய தோட்டத்தை பாபர் மறக்கவில்லை. அவர் உயிலின்படி, பாபரின் உடல் கடைசியாகக் காபூலுக்குக் கொண்டு செல்லப் பட்டு, அந்தத் தோட்டத்தில் தான் புதைக்கப் பட்டது!).

இந்தியாவுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை மனதில் ஒரு மூலையில் இருந்தாலும் பாபருக்கு சாமர்கண்ட் நகரைக் கைப்பற்ற வேண்டும் என்கிற ஆசை அகலவில்லை. சமயம் பார்த்து பாரசீக மன்னர்

ஷா இஸ்மாயீலுக்கும் பாபரின் பழைய விரோதி ஷைபானிகானுக்கும் பகை மூண்டது. தொடர்ந்து சில போர்களில் வெற்றிகளைக் குவித்துத் தலைகனத்துபோன ஷைபானிகான் நிதானம் இழந்து 'வந்துகொண்டே இருக்கிறேன்... இன்னும் சில நாட்களில் நீங்கள் பிச்சைதான் எடுக்க வேண்டிவரும்!' என்கிற அர்த்தத்தில் பெரும் மன்னரான ஷா இஸ்மாயீலுக்கு ஒரு 'பிச்சைப் பாத்திரத்தைப் பரிசாக அனுப்பிக் கிண்டல் செய்ய, இருவருக்கும் இடையே போர் மூண்டது. பாபர், பாரசீக மன்னர் பக்கம் சேர்ந்துகொள்ள... போரில் தோற்றார் ஷைபானிகான். ஒரு மாட்டுத் தொழுவத்தில் ஒளிந்துகொண்டிருந்த அவரைப் பாரசீக படை வீரர்கள் பிடித்து இழுத்துச் சென்று ஷா முன்பு நிறுத்தினார்கள். ஷைபானிகானின் உடலைத் துண்டு துண்டாக வெட்டச் செய்து, பாரசீக நாட்டில் பல முக்கிய ஊர்களில் அவருடைய உடல் பகுதிகளைக் 'கண்காட்சி'யாக வைத்தார் ஷா. மிச்சமிருந்த மண்டையோட்டின் உட்பகுதியை தங்கத்தால் இழைத்து மதுக்கிண்ணமாகப் பயன்படுத்திய பிறகுதான் மன்னரின் கோபம் தணிந்தது!

அதைத் தொடர்ந்து, மன்னர் ஷா இஸ்மாயீல் உதவியோடு சாமர்கண்ட் பாபரின் கீழ் வந்தது. ஆனால், அந்த நகரம் மட்டும் அவருக்கு ராசியே இல்லாமல் போனது. தைமூரின் வழித்தோன்றலான பாபரின் 'சாமர்கண்ட் பிரவேசம்' அந்த நகரத்துப் பெரும்பாலான சன்னி பிரிவு மக்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தாலும், கூடவே ஷையா பிரிவைச் சேர்ந்த பாரசீக மன்னர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவரைத் திருப்திபடுத்த பாபர் உடுத்தியிருந்த ஷையா உடை மற்றும் தலைப்பாகை அவர்களுக்குச் சற்று திகைப்பை ஏற்படுத்தியது. ஒரு ஷையா மன்னராகத் தோற்றமளித்த பாபரை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதுதான் சமயம் என்று உஸ்பெக் நாட்டுப் படை சாமர்கண்ட் நகரைக் கைப்பற்றியபோது, மக்கள் ஆதரவை இழுத்துவிட்டிருந்த பாபர் பழையபடி காபூலுக்குத் திரும்பினார்.

'வடக்கைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். தெற்கைக் கவனிப்போம்...!' என்று சிந்தனைவயப்பட்டார் பாபர். சில மாதங்களில் 'அடுத்த இலக்கு இந்தியாதான்!' என்கிற ஆசை அவர் மனதில் பெரிதாக வளர ஆரம்பித்தது. தன் விருப்பத்தை நண்பர்களிடமும் சொன்னார் பாபர். 'இந்தியா வர முடியுமா? என்று தௌலத்கான் எழுதி அனுப்பிய கடிதம் பாபரின் கையில் போய்ச் சேர்ந்தது அப்போதுதான்! உடனே படையோடு கிளம்பினார் பாபர்.

'உதவிக்கு வந்தோம், போனோம்' என்றில்லாமல் பாபர் இந்தியாவை நிரந்தரமாகக் கைப்பற்றித் தங்கப்போகிறார் என்று அலசல் புரசலாகக் கேள்விப்பட்ட தௌலத்கான், பாபருக்கு எதிராகப் படை திரட்டிக்கொண்டு மல்லுக்கு நின்றார். அதனாலும் ஒருமுறை பாபர் காபூல் திரும்பிப் படை வீரர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொண்டு திரும்ப வேண்டியதாக ஆயிற்று.

கடைசியாக, டிசம்பர் 15, கி.பி.1525-ல் பாபரின் படை சிந்து நதியைக் கடந்தது. எதிர்தரப்பில் தௌலத்கான் மற்றும் சில முஸ்லிம் சிற்றரசர்கள் நாற்பதாயிரம் பேர் அடங்கிய படையுடன் பாபரை வழிமறித்து மோதினார்கள். பாபர் தலைமையில் முக்கிய அங்கம் வகித்த குதிரைப் படையினரின் எண்ணிக்கை சுமார் 10,000-தான். இருப்பினும் இதற்குள் ஏகமாகப் போர் அனுபவம் பெற்றுவிட்ட பாபரின் வேகத்தை எதிரிகளால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. மற்ற சிற்றரசர்கள் தப்பி ஓட, முல்வட் என்ற ஊரில் கோட்டைக்குள்

ஒளிந்துகொண்டார் தௌலத்கான்.

முல்வட் கோட்டைக் கதவுகள் உடைக்கப் பட்டன. பாபரின் படைவீரர்கள் சூறையாடும் ஆர்வத்துடனும் ஆவேசத் துடனும் வாட்களை உருவிக்கொண்டு உள்ளே பாய்ந்தார்கள். திகைத்துப்போன பாபர் ஒரு குதிரையில் ஏறித் தன் படை வீரர்களை மின்னல் வேகத்தில் கடந்து முன்னணிக்குச் சென்று வழிமறித்தார். அதற்குள் ஒரு தளபதியின் தலைமையில் சில வீரர்கள் வீடு ஒன்றில் ஆர்ப்பாட்டமாக நுழைய முனைந்தது பாபர் கண்ணில் பட... பாபர் கையில் இருந்த வில்லிலிருந்து சீறிப் பாய்ந்து சென்ற அம்பு, அவருடைய தளபதியை வீழ்த்தியது. படைவீரர்கள் திகைத்து நின்றார்கள்.

"பெண்கள் பக்கம் யாரும் நெருங்கக்கூடாது. வீடுகளில் உள்ள மண்பாண்டங்களைக்கூட யாரும் தொடக்கூடாது!" என்று கர்ஜித்தார் பாபர்.

பாபர் மட்டும் தடுத்திராவிட்டால் தௌலத்கான் குடும்பத்தை பாபர் வீரர்கள் 'ஒருவழி' பண்ணியிருப்பார்கள்!

முல்வட் கோட்டை விழுந்ததும் தௌலத் கானைக் கைது செய்து பாபர்முன் நிறுத்தினார்கள்.

"என் எதிரிக்கு எதிரியான நீங்கள் என் நண்பர்தான்... டெல்லியில் அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருக்கும் இப்ரஹீம் லோடியின் கொடுமைகளைத் தாங்கமுடியாமல்தானே எனக்கு அழைப்பு விடுத்தீர்கள்? பிறகு ஏன் மனம் மாறி என்னைத் திடீரென நீங்கள் எதிர்க்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை! உங்களால் டெல்லியைக் கைப்பற்ற முடியாது. அது என்னால்தான் முடியும்! இப்ரஹீம் லோடியிடம் சிக்கிச் சித்ரவதைப்பட வேண்டுமா? என்னிடம் நட்பாக இருந்து கௌரவமாக வாழ வேண்டுமா? சற்று சிந்தித்துப் பாருங்கள்..!" என்று உணர்ச்சி மயமாக பாபர் பேச, தௌலத்கான் தலை குனிந்தார்.

அதையடுத்து நேரம் கடத்திக்கொண்டு இருக்கவில்லை பாபர், உடனடியாக டெல்லியை நோக்கிக் கிளம்பிய அவருடைய படை (வழியெங்கும் தன் தளபதியைத் தானே அம்பெய்து கொன்றது குறித்து பாபர் புலம்பிக் கொண்டிருந்தது வேறு விஷயம்...) டெல்லி மாநகருக்கு அருகே, சுமார் ஐம்பது மைல் தொலைவில் உள்ள பானிப்பட் என்ற கிராமத்தை அடைந்து போர்முரசு கொட்டியது.

ஏப்ரல் 21. கி.பி.1526...

டெல்லி சுல்தான் இப்ரஹீம் லோடி தலைமையில் திமுதிமுவென்று நூற்றுக் கணக்கான யானைகள் மீது அலை அலையாக வில்லேந்திய வீரர்களும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட குதிரை வீரர்களும் பாபரை நோக்கி முன்னேறி வந்தனர். பாபரின் மொத்த வீரர்களின் எண்ணிக்கை சுமார் 12,000..!

தொடர்ந்து...

வரலாற்றில் பிரசித்திபெற்ற பானிப்பட் யுத்தம் துவங்கியது...!

எட்டாவது மனைவி!

பாபரால் புறக்கணிக்கப்பட்டு வெறுத்துப் போய் விலகிக்கொண்ட ஆயேஷா பேகம் என்ற முதல் மனைவிக்குப் பின் காபூலிலும் பிறகு

இந்தியாவிலும் பாபர் மணந்துகொண்ட பெண்மணிகள் - மொத்தம் ஏழுபேர். ஆயேஷா - அவர் மனதைக் கவரவில்லையே தவிர, ஆயேஷாவின் தங்கை மஸூமா வீசிய காதல் பார்வை பாபரின் மனதில் கிளர்ச்சியூட்டியது. பாபர் - மஸூமா திருமணம் காபூலில் கி.பி.1507-ல் நடைபெற்றது. இவர் உட்பட மற்ற மனைவிகளின் மூலம் பாபருக்கு மொத்தம் பதினேழு குழந்தைகள் பிறந்தன. அவற்றில் எட்டுக் குழந்தைகள் பிறந்தவுடன் இறந்தன. பாபரின் அன்பையும் மதிப்பையும் பெற்ற மாஹிம் பேகம் என்ற மனைவிக்குப் பிறந்தவர்தான் ஹுமாயூன். இவர்களோடு, பாரசீக மன்னர் அன்பளிப்பாக அனுப்பிய பிரமிப்பூட்டும் தென் ஐரோப்பிய அழகிகள் இருவரைத் திருமணம் என்று செய்துகொள்ளவில்லையே தவிர, மனைவிக்கான முழு அந்தஸ்து அளித்து அன்புடன் வைத்துக்கொண்டு இருந்தார் பாபர்!

இன்னொரு திருமணம் பாக்கியிருந்தது...

பாபருக்கு எட்டாவது மனைவியாக ஒருவர்... மன்னிக்கவும்... ஒன்று வந்து சேர்ந்தது! கண்டவுடனேயே காதல் வயப்பட்டு, மிகுந்த அன்புடன் தன்னுடன் பாபர் வைத்துக்கொண்ட அது - துப்பாக்கி என்று அழைக்கப்பட்ட ஒரு புதிய ஆயுதம்!

துருக்கியர்கள் புத்திசாலிகள் என்று முன்பே குறிப்பிட்டோம் அல்லவா... அதற்கேற்ப, மற்ற பல நாடுகள் வில்- அம்புகளையும் ஈட்டிகளையும் யுத்தத்தில் பயன்படுத்திக் கொண்டு இருந்தபோது, துருக்கியர்கள் துப்பாக்கிகளையும் பீரங்கி களையும் போரில் பரவலாகப் பயன்படுத்திக் களேபரம் பண்ணிக் கொண்டிருந்தார்கள்! துருக்கிய நாட்டைச் சேர்ந்த உஸ்தாத் அலி என்பவர் துப்பாக்கி மற்றும் வெடிமருந்து விஷயத்தில் பெரிய வஸ்தாது!

காபூல் அரியணையில் தான் அமர்ந்த சில ஆண்டுகளில் இந்தத் துருக்கியக் கில்லாடி பற்றிக் கேள்விப்பட்ட பாபர், அவருக்குச் சொல்லியனுப்பி வரவழைத்து உபசாரங்கள் செய்து தன்னுடன் வைத்துக்கொண்டார்.

உஸ்தாத் அலியின் உதவியோடு பாபரின் தலைமையில் முதல் முறையாகத் துப்பாக்கி மற்றும் பீரங்கிப்படை உருவானது!

தென்னிந்தியாவுடன் கடல்வழித் தொடர்பு கொள்ளாத நாடுகளே அநேகமாக அப்போது கிடையாது! ஆகவே, துருக்கிய மற்றும் போர்ச்சுக்கீசிய வணிகர்கள் மூலம் தென்னிந்தியாவுக்குத் துப்பாக்கி ஏற்கெனவே பரிச்சயமான விஷயம்! வட இந்தியர்கள் துப்பாக்கியை பார்த்ததில்லை. அங்கே அரசர்கள் வாட்களையே நம்பியிருந்தார்கள்!

இந்தச் சூழ்நிலையில்தான், இப்ரஹீம் லோடியின் லட்சத்துக்கு மேற்பட்ட வில்லேந்திய குதிரைப்படையும் நூற்றுக் கணக்கில் கவசமணிந்த யானைப் படையும் தங்களை நோக்கி முன்னேறி வந்ததைக் கண்டு பாபரின் சுமார் 12,000 வீரர்கள் கொண்ட படை மிரளாமல் நின்றது!

பன்னிரண்டு வயதிலிருந்து போர் அனுபவம் என்றால் சும்மாவா! மோதல் என்று வந்துவிட்டாலே உற்சாகத்துடன் பாபர் ஒரு கைதேர்ந்த ‘ஜெனரல்’ ஆக மாறிவிடுவது வழக்கம். முந்தைய இரவிலேயே போர்த் திட்டங்களைத் தெளிவாக, நுணுக்கமாகத் தளபதிகளுக்கு விளக்கி இருந்தார் பாபர் (இந்தப் போரில் அவருடைய ஒரு முக்கிய தளபதி 17 வயது ஹுமாயூன் என்பதும் குறிப்பிடத்தக்கது!).

துப்பாக்கி வீரர்கள்... அவர்களுக்குப் பின்னால் வாட்கள் ஏந்திய குதிரை வீரர்கள் என்று பெரும் ﹀ யாக அணிவகுத்து மெள்ள முன்னேறியது பாபரின் படை. முன்னணியில் நடுநாயகமாக பாபர்!

எதிர்ப்பக்கம் அலையென வேகமாக முன்னேறி வந்த இப்ரஹீம் லோடியின் வீரர்கள் குறிபார்த்துச் செலுத்திய பல்லாயிரக் கணக்கான அம்புகள் தொடர்ந்து சீறிப் பாய, அவற்றைக் கேடயங்களால் தடுத்து முன்னேறிய பாபர் படை கொஞ்சம் கொஞ்சமாக ⊔ வடிவ அணிவகுப்பாக மாறியது. இரு படைகளும் நெருங்கிய உடனே பாபர் உயர்த்திப் பிடித்திருந்த வாள் கீழே சங்கேதமாக இறங்க... மறுவிநாடி ஏக காலத்தில் நூற்றுக்கணக்கில் துப்பாக்கிகள் இயங்கின.

வெகுதூரம் முன்னேறிவந்துவிட்ட போர் யானைகள் துப்பாக்கி எழுப்பிய ஒலி கேட்டு மிரண்டு திரும்பின. இப்ரஹீம் லோடியின் படை வீரர்கள் திகைத்துப்போய்த் தடுமாறினார்கள்.

வாட்களை உயர்த்தியவாறு முன்னேறப் பார்த்த ஆயிரக்கணக்கான டெல்லி வீரர்கள், தோட்டாக்கள் பாய்ந்து ‘தொப்’பென்று ஏகமாக மாண்டு விழுந்ததைக் கண்ட இப்ரஹீம் லோடியின் படைத் தளபதிகள் கலங்கிப் போய்த் திரும்ப முனைந்தார்கள்.

ஆனால், பாபரின் படை அதற்குள் அவர்களைச் சுற்றி வளைத்திருந்தது. அதே சமயம் துப்பாக்கிப் படையின் பின்னாலிருந்து மின்னலாக வெளிப்பட்டு, எதிரிகளிடையே ஏந்திய வாட்களோடு புயல் வேகத்தில் புகுந்த பாபரின் குதிரை வீரர்கள் ‘மங்கோலிய’ ஸ்டைலில் குதிரைகள் மீது நின்றவாறு அவற்றை வளைத்துச் செலுத்தி ஆயிரக் கணக்கான டெல்லி வீரர்களை வெட்டி வீழ்த்தினார்கள். திறமையான தலைவருக்குரிய வீரத்துடன் போரிட்ட பாபரின் வாள்வீச்சில் தனிப்பட்டுப் பறந்த தலைகள் ஏராளம்!

கொடுங்கோலராக இருந்தாலும் இப்ரஹீம் லோடியின் உடலில் ஓடியது சுத்த ஆப்கானிய ரத்தம் அல்லவா! கடைசி மூச்சு வரை வாளேந்திப் போரிட்ட இப்ரஹீம் லோடி உட்பட பானிப்பட் யுத்தத்தில் வீழ்ந்து மடிந்த டெல்லி வீரர்கள் 15,000-க்கும் அதிகம். சில வரலாற்று ஆசிரியர்கள் ‘இது குறைந்த மதிப்பீடு... உண்மையில் லட்சம் பேர் அடங்கிய படை துவம்சம் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இறந்தவர்களின் எண்ணிக்கை 50,000-க்கும் மேல்!’ என்று குறிப்பிடுகிறார்கள்.

‘எல்லாம் வல்ல ஆண்டவனின் கருணையால் - கிழக்கே ஒரு ஈட்டி உயரத் துக்குச் சூரியன் இருந்தபோது ஆரம்பித்த யுத்தம் - சூரியன் உச்சத்துக்கு போவதற்குள் முடிந்துவிட்டது..!’ என்று பாபர் சுயசரிதையில் குறிப்பிடுகிறார். கூடவே, போரில் இப்ரஹீம் லோடி செய்த தவறுகள், கைவிட்ட வாய்ப்புகள் பற்றியெல்லாம்கூட நுணுக்கமாக சுயசரிதையில் குறிப்பிட மறக்கவில்லை பாபர்!

வெற்றி ஆரவாரத்துக்கிடையே பாபரின் நேரடித் தலைமையில் அவருடைய வீரர்கள் இப்ரஹீம் லோடியைத் தேடிப் புறப்பட்டனர். யுத்தகளத்தின் நடுவே சிறு மலையாகக் குவிந்துகிடந்த வீரர்களின் உடல்களை அப்புறப்படுத்திப் பார்த்ததில், மையமாக வாளேந்திய கையோடு கிடந்த டெல்லி மன்னரின் உடல் கிடைத்தது. ஒரு மன்னருக் குரிய சகல மரியாதைகளுடன் இப்ரஹீம் லோடியின் உடல் அங்கேயே புதைக்கப் பட்டது. இப்போதும் பானிப்பட் கிராமத்தில் போர் நடந்த மைதானத்து ஓரமாக உள்ள அவருடைய பாழடைந்த கல்லறையைக்

காணலாம். (அது, இப்ரஹீம் லோடியின் கல்லறையா இல்லையா என்பது குறித்து சர்ச்சைகள் உண்டு. அவருடையது தான் என்பதற்கான ஆதாரங்கள் இல்லை என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் சிலர் கூறுகின்றனர். அதே சமயம் டெல்லி லோடி தோட்டத்தில் இப்ரஹீம் லோடியின் கல்லறை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது).

போர் முடிந்த பிறகு உடனடியாக ஹுமாயூன் தலைமையில் சிறு படையொன்றை ஆக்ரா அரண்மனையைக் கைப்பற்றச் சொல்லி அனுப்பினார் பாபர். கூடவே ஒரு கமாண்டோ படை விரைந்து சென்று டெல்லி அரண்மனையைக் கச்சிதமாகக் கையகப்படுத்தியது. இந்தப் பொறுப்புகளை யெல்லாம் மற்றவர்களிடம் கொடுத்துவிட்டு, போர் உடையைக் களைந்து குளித்த பிறகு டெல்லி மாநகரைச் சுற்றி பார்க்கக் கிளம்பினார் பாபர். ஆங்காங்கே இருந்த இஸ்லாமிய மகான்களின் கல்லறைகளுக்குச் சென்று வணங்கிய பிறகு, பெரும் ஊர்வலமாக ஏப்ரல் 26-ம் தேதி ஆக்ரா சென்றடைந்தார். அங்கே ஹுமாயூன் காவலில் வைத்திருந்த இப்ரஹீம் லோடியின் தாயாரையும் மற்ற உறவினர்களையும் விடுவித்த பாபர், டெல்லி சுல்தானின் தாயை மரியாதையோடு நடத்தியதி மட்டுமல்லாமல், அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த தங்க நாணயங்கள் மற்றும் அரண் மனைகளை அவரிடமே திருப்பித் தந்து அரண்மனையில் ஒரு பகுதியில் அவர்கள் தங்க அனுமதியும் அளித்தார்!

என்னதான் இருந்தாலும் பாபர் ஒரு அந்நிய நாட்டு மன்னர் என்ற காரணத்தால் கடைசி நிமிடத்தில் அவருக்கு எதிராக இப்ரஹீம் லோடியுடன் அணி சேர்ந்தவர் குவாலியர் மன்னர் விக்ரம்ஜித். அவரும் பானிப்பட் போரில் மடிய, விக்ரம்ஜித்தின் குடும்பம் ஆக்ரா அரண்மனையில் ஒளிந்து கொண்டிருந்தது. ஹுமாயூன் ஆக்ராவைக் கைப்பற்றியபோது, அந்தக் குடும்பத்தினர் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ள விலையாக ஹுமாயூனிடம் அற்புதமான வைரம் ஒன்றை ‘அன்பளிப்பாக’த் தந்தார்கள். அதுதான் பிற்பாடு உலகப் புகழ்பெற்ற கோஹினூர் வைரம்!

ஆக்ரா வந்து சேர்ந்த பாபரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் கோலாகலமான விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்த ஹுமாயூன் முத்தாய்ப்பாக கோஹினூர் வைரத்தை ஒரு தங்கத் தட்டில் வைத்துத் தந்தைக்கு பரிசளிக்க, அதன் மதிப்பு பற்றி விசாரித்துத் தெரிந்துகொண்ட பாபர், சற்றும் ஆர்வம் இல்லாமல் அதை மகனிடமே திருப்பித் தந்துவிட்டதாகத் தகவல்!

இதோ ‘பெட்டி’யில்லாமல் கோஹினூர் பற்றி ஒரு குட்டிச் செய்தி...

‘அதை விலைகொடுத்து வாங்கும் பணத்தில் இரண்டரை நாட்கள் உலக மக்கள் அத்தனை பேருக்கும் உணவளிக்க முடியும்’ என்று அப்போதைய சரித்திர ஆசிரியர்கள் கோஹினூர் வைரம் பற்றிக் குறிப்பிடுகிறார்கள்!

முதன்முதலில் அலாவுதீன் கில்ஜியின் சேனாதிபதி மாலிக் கஃபூரால் ஆந்திராவில் இருந்து கைப்பற்றப்பட்ட கோஹினூர் வைரம், பிற்பாடு குவாலியர் மன்னர் குடும்பத்துக்குச் சென்று, ஹுமாயூன் கைக்கு வந்து, பாரசீக மன்னர் ஷா தாமஸ்ப் கைக்குப் போய், பிறகு தட்சிணப் பீடபூமியை ஆண்ட நிஜாம் ஷாவை அடைந்தது. அதைத் தொடர்ந்து 17-ம் நூற்றாண்டில் ஷாஜஹான் கைக்குப் போன இந்த வைரத்தை டெல்லியை 1739-ல் சூறையாடிய பாரசீக மன்னர் நாதிர்ஷா கைப்பற்றிக்கொண்டு போனார். கோஹினூர் - அதாவது, ‘மலையளவு

ஒளிவீச்சு' என்று அந்த வைரத்துக்குப் பெயரிட்டதும் அவர்தான். நாதிர்ஷாவுக்குப் பிறகு, காபூலில் வசித்த அவருடைய வழித்தோன்றல்களிடம் இருந்த கோஹினூர் - பஞ்சாப் சிங்கம் ரஞ்சித்சிங் கைவசம் மாறி, ஆங்கிலேயர்களின் கீழ் பஞ்சாப் போன பிறகு சர்.ஜான் லாரென்ஸ் என்ற ஓர் உயர் அதிகாரியின் பாக்கெட்டுக்குப் போக, வைரத்துடன் தன் கோட்டைக் கழற்றி பீரோவில் வைத்து மறந்துவிட்ட லாரென்ஸ், ஆறு வாரங்களுக்குப் பிறகு தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு அதை எடுத்துச் சென்று பிரிட்டிஷ் மகாராணி விக்டோரியாவுக்குப் பரிசாகத் தந்தார். ஆக, இன்றுவரை பிரிட்டிஷ் கிரீடத்தைக் 'கப்சிப்' என்று அலங்கரித்து வருகிறது சரித்திரப் பிரசித்தி பெற்ற கோஹினூர் வைரம்!

பாபர் பாதுஷாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவரைத் தொடர்வோம்!

ஆக்ராவிலும் டெல்லியிலும் பல புகழ் பெற்ற மாளிகைகளையும் அரண்மனை களையும், உள்ளே இருந்த கஜானாக்களையும் சுற்றிப் பார்த்த பாபர், "இந்தியா இப்படி ஒரு பணக்கார நாடா?!" என்று பிரமித்தார். பிறகு, தன் வெற்றிக்குக் காரணமான தளபதிகளுக்கும் போர் வீரர்களுக்கும் தங்க நாணயங்களையும் ஆபரணங்களையும் பரிசளித்தார். பிரதம தளபதியாக இருந்த ஹுமாயூனுக்கு நாலு லட்சம் ரூபாய் அன்பளிப்பு தந்து கௌரவித்தார் (ஹுமாயூனின் முதல் சம்பளம்! சும்மா இல்லை. அப்போது இந்தப் பணத்தில் மொத்தமாக மெட்ராஸையே வாங்கலாம்!).

புனித மெக்கா, சாமர்கண்ட், தாஷ்கண்ட் மற்றும் காபூல் நகரங்களிலிருந்த மத குருமார்களுக்கும் உறவினர்களுக்கும் பெரும் தொகையும் தாய்க்குலத்துக்குத் தங்கம், வைரம், முத்துக்கள் பதித்த ஆபரணங்களும் பட்டுத்துணிகளும் பாபரிடமிருந்து பரிசாகச் சென்றன. அது மட்டுமல்ல... டெல்லி அரண்மனையில் வரிசையாகக் களஞ்சியங்களில் குவிக்கப்பட்டிருந்த வெள்ளி நாணயங்களில் பெரும்பகுதியை காபூலுக்கு அனுப்பினார் பாபர் - 'அங்கே வசிக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு வெள்ளி நாணயம் பரிசாகத் தர வேண்டும்' என்ற ஆணையுடன்! இந்தச் செல்வம் ஒரு பரிவாரமாகச் சில மாதங்கள் கழித்து காபூல் சென்றடைந்து, நாணயங்கள் விநியோகிக்கப் பட்டபோது அங்கே தெருக்களில் மக்கள் 'பாபர் வாழ்க!' என்று குதூகலமாகக் குரல் கொடுத்தவாறு ஆனந்தக்கூத்தாடினார்கள் என்கிறது சரித்திரக் குறிப்பு!

இந்தத் தருணத்தில்... இப்ரஹீம் லோடியின் தாய், தன் மகனைப் போரில் கொன்ற பாபர் மீது அடக்க முடியாத கோபத்திலும் வெறுப்பிலும் இருந்தார். போகப்போக அது கொலைவெறியாக மாறியது. கடைசியில், திகைப்பூட்டும் சதித்திட்டம் ஒன்று உருவானது..!

இந்திய உணவு வகைகளை பாபர் ருசி பார்ப்பதில் ஆர்வம் காட்டியதால் அரண்மனைச் சமையலறையில் இந்தியச் சமையற்காரர் ஒருவரும் பணியில் இருந்தார். இது தெரிந்த இப்ரஹீம் லோடியின் தாயிடமிருந்து கடுமையான ஒரு விஷம் சமையற்கட்டுக்கு ரகசியமாகக் கடத்தப் பட்டது. எந்த உணவு தயாரித்தாலும் மன்னருக்குமுன் அதை ருசிபார்க்க நியமிக்கப் பட்டிருந்த உதவி சமையற்காரர்கள் இருவருக்கு லஞ்சமாக நாலு கிராமங்கள் கொடுப்பதாக வாக்களிக்கப்பட்டன. தலைமைச் சமையற்காரருக்கும் கிராமங்களும் பெரும் செல்வமும் தருவதாக இப்ரஹீம் லோடியின்

தாய் சொல்லியனுப்ப, பாபர் உணவில் கலக்கப்பட்டது விஷம்! அன்று வெள்ளிக்கிழமை. குளித்துவிட்டு, தொழுகை முடித்த பிறகு, பகல் உணவுக்கு மந்திரிப் பிரதானிகளுடன் வந்தமர்ந்தார் பாபர். முயல்கறியும், மெதுவாக வறுத்த காரட்டும் வர, ஒருகை பார்த்தார். தொடர்ந்து இந்தியப் பிரியாணி வந்தது. அதை ஒரு வாய் சுவைத்து விழுங்கிய உடன் - சாதாரணமாகவே மிகுந்த எச்சரிக்கையாக இருக்கும் பாபருக்கு ஏதோ பொறி தட்டியது. மறுவிநாடி வயிற்றைப் புரட்டியது. இதோ, பாபரே விளக்கட்டும்! -

‘மேஜை விரிப்பு மீதே எனக்கு வாயிலெடுக்கத் தோன்றியது. ‘சுளீர்’ என்று வயிற்றில் வலி கிளம்ப, எழுந்து ஓடினேன். இதுவரை இப்படி ஒரு பிரச்னை எனக்கு நேர்ந்ததே கிடையாது. எந்தவகை உணவையும் விழுங்கி ஜீரணிக்கும் நான், முதல் முறையாகப் பயங்கரமாக வாயிலெடுத்தேன்...

மறுவிநாடி எனக்குச் சந்தேகம் தட்டியது. சமையலறையில் பணியில் இருந்த அத்தனை பேரையும் கைது செய்யச் சொன்னேன். நாய் ஒன்றை வரவழைக்கச் சொல்லி, அதற்கு அதே உணவைத் தர ஆணையிட்டேன். சற்று நேரத்தில் நாய் சுருண்டு விழுந்துவிட்டது. கற்களை எறிந்தும் அது நகரவில்லை. மூச்சும் விடவில்லை!

ஆண்டவன் கிருபையால் நான் பிழைத்திருக்கிறேன். இது எனக்கு மறுபிறப்பு, புதுவாழ்வு! மரணத்தின் வாயிலை எட்டிப் பார்க்கிறவர்களுக்குத்தான் உயிரின் மதிப்பு முழுமையாகப் புரியும். எனக்குப் புரிந்தது!

தலைமைச் சமையற்காரனைக் கொண்டு போய் சித்ரவதை செய்தார்கள். அந்தத் துரோகி உண்மையை ஒப்புக்கொண்டான். திங்கள் அன்று வழக்கப்படி சபை கூடியது. அங்கே இந்தக் கொலைகாரக் கும்பல் இழுத்துவரப்பட்டது. எல்லோரும் குற்றத்தை ஒப்புக்கொண்டு தாங்கள் தீட்டிய சதித் திட்டத்தை நடுங்கிக்கொண்டே விளக்கினார்கள்.

இந்தத் துரோகத்தை எப்படி மன்னிக்க முடியும்? உணவை ருசிபார்க்க நியமிக்கப் பட்டவர்களின் உடல்கள் துண்டு துண்டாக் கப்பட்டன. உயிரோடு சமையற்க்காரனின் தோல் உரிக்கப்பட்டது. விஷம் கடத்திக் கொண்டு வந்த பெண், ஒரு யானையின் காலால் இடறப்பட்டாள். அந்த மகாராணி?.. அவள் சாகக் கூடாது. உயிரோடு இருந்து தன் தவற்றை எண்ணி எண்ணி வருந்த வேண்டும். ஆகவே அவளைச் சிறைப்படுத்தி, சொத்துக்களைப் பறிமுதல் செய்தேன்...!’

- தான் தப்பிய கதையை இப்படியாக விவரிக்கிறார் பாபர்!

பாபரைக் கொல்வதற்காகப் போட்ட திட்டம் நிறைவேறாததால், மனம் உடைந்து காவலிலிருந்து ஒரு நாள் தப்பி அலறிக் கொண்டே ஓடிச்சென்று யமுனை நதியில் குதித்து, தன் வாழ்க்கைக்குத் தானே ஒரு முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டார் இப்ரஹீம் லோடியின் தாய்!

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து, நாளாவட்டத்தில் ஹுமாயூன் மற்றும் சில தளபதிகளின் தலைமையில் கட்டுக்கோப்பான படைகள் ஒவ்வொரு பகுதியாகக் கைப்பற்றி டெல்லியின் சாம்ராஜ்ய எல்லைகளை விஸ்தரித்தன. பல குறுநில மன்னர்கள் பாபரிடம் பணிந்துபோய்க் கப்பம் செலுத்தி னார்கள்.

ஆனால்...

ஒருவரை மட்டும் பாபரால் வழிக்குக் கொண்டு வர முடியவில்லை!

அவர் சித்தூரைத் தலைநகராகக் கொண்டு மேவார் நாட்டை ஆண்டுவந்த ராஜபுத்திர மாவீரர் ராணா சங்கா. 'நமக்குள் ஆயிரம் சண்டை இருக்கலாம். ஆனால், ஒரு அந்நியர் இந்தியாவைக் கைப்பற்றியிருப்பதை நாம் அனுமதிக்கலாமா?' என்று அவர் மற்ற பல இந்திய மன்னர்களுக்குக் கடிதங்கள் மூலம் வலியுறுத்திக்கொண்டே இருந்தது கடைசியில் பலனளித்தது!

ராணாவிடம் விசுவாசம் மிகுந்த, சந்தேரிப் பகுதியை ஆண்டு வந்த ராஜபுத்திர வீரர் மெதினிராய், ராணா சங்காவை வழி மொழிந்து மேவார் படையுடன் தன் படையை இணைத்துக்கொண்டார். அதைத் தொடர்ந்து ஹசன்கான் என்ற சிற்றரசரும் இப்ரஹீம் லோடியின் சகோதரரான முகமது லோடியும் ராணாவின் தலைமையில் கூட்டணி அமைக்க, திரண்டெழுந்த ஒரு பெரும்படை பாபருக்கு எதிராக அணிவகுத்து முரசு கொட்டியது!

பாபரின் படையில் திடீரென்று வெடித்தது ஒரு பெரும் பிரச்னை! "போரெல்லாம் போதும்... வேண்டாம் இந்தியா... தயவுசெய்து காபூல் திரும்ப அனுமதியுங்கள்!" என்று வியர்த்து விறுவிறுத்துப் போய் முடங்கிப் பயந்துப் போயிருந்த தளபதிகள் பலரும் போர் வீரர்களும் பாபர்முன் வந்து கோரஸாகப் புலம்பினார்கள்!

எத்தனையோ வீரர்களை எதிர்த்து நின்ற பாபரின் வீரர்களுக்குப் பயமேற்படுத்தியவர் - மிஸ்டர் இந்திய வெயில்!

நேரம் பார்த்து 'சம்மர்' ஆரம்பித்தது!

பிறந்ததிலிருந்து 'ஜில்'லென்ற காபூல் வாழ்க்கையை அனுபவித்த மொகலாய வீரர்களால் அந்தத் தகிக்கும் வெப்பத்தை தாங்க முடியவில்லை!

அதே சமயம்...

ராணா சங்கா தலைமையில் ராஜபுத்திரப் படை தங்கள் நாட்டைக் காக்கும் ஆவேசத் துடன் டெல்லி நோக்கி முன்னேறிக் கொண்டு இருந்தது...!

புதியதொரு சாம்ராஜ்யம்!

காபூல் நகரைச் சேர்ந்தவர் புகழ்பெற்ற ஜோதிடர் மகமுது ஷெரீஃப். டெல்லிக்கு வந்து பாபருடன் தங்கியிருந்த அவர், சற்றே தர்மசங்கடத்துடன் தன் வெண்மையான தாடியை நீவிவிட்டுக்கொண்டதைக் கவனித்த பாபர், "என்ன விஷயம்! வெளிப் படையாகச் சொல்லுங்கள்!" என்றார். தொண்டையைக் கனைத்துக் கொண்ட அந்த முதிய ஜோதிடர், "பாதுஷா! சகுனம் சரியில்லை... வானில் நாள் தோறும் மேற்கே செவ்வாய் தெரிகிறது. ஆகவே, அந்தத் திசையில் மன்னர் பயணம் மேற்கொள்வதோ போருக்குச் செல்வதோ உசிதமல்ல என்பது என் கருத்து..." என்று தயக்கத்துடன் கூற, "அப்படியா? சரி. நீங்கள் போகலாம்..." என்று உடனேயே இருக்கையை விட்டு எழுந்த பாபரின் முகத்தில் ஏக எரிச்சல் தெரிந்தது. இதற்குள் அமைச்சர்கள் நெருங்கி, "வெளியே நம் படை வீரர்கள் தங்களுக்காகக் காத்து நிற்கிறார்கள் அரசே! தவிர..." என்று இழுக்க... கேள்விக்குறியுடன் நிமிர்ந்து பார்த்தார் பாபர்.

பிரதம சேனாதிபதி தலைகுனிந்தவாறு தொடர்ந்தார். "பாதுஷா! நம்

வீரர்கள் உடனே காபூல் திரும்ப வேண்டும் என்று விரும்புகிறார்கள். டெல்லியின் பருவநிலை அவர்கள் உடம்புக்குச் சற்றும் ஒத்துக் கொள்ளவில்லை. வெயிலில் உடலெல்லாம் எரிகிறதாம்... இந்தச் சமயத்தில் இன்னொரு யுத்தம் என்ற நினைப்பே அவர்களுக்குக் கோபத்தை ஏற்படுத்துகிறது. தவிர, நம்மை நோக்கி வந்துக்கொண்டிருக்கும் ராஜ புத்திரர்கள் மாவீரர்கள். உயிரைத் துச்சமாகக் கருதுபவர்கள். யார் இப்போது போய் அவர்களிடம் மோதிக்கொண்டிருப்பது என்றெல்லாம் நம் வீரர்களிடையே புலம்பல்கள்...!”

சேனாதிபதியைக் கையமர்த்திய பாபர், நேராக தன் படை வீரர்களை நோக்கி நடந்தார். பாபரைக் கண்டவுடன் எழும்பிய ஆரவாரத்தில் அவ்வளவு உற்சாகம் இல்லை...!

அதைச் சட்டைசெய்யாத பாபரின் கம்பீரமான குரல், அணிவகுத்து நின்ற போர் வீரர்களிடையே ஒலிக்க ஆரம்பித்தது. “அருமைச் சகோதரர்களே! ஒருகாலத்தில் சாமர்கண்ட் நகரைக் கைப்பற்ற விரும்பினேன் நான். பிறகு சீனாவை வெற்றி கொள்ளும் எண்ணமும் எனக்கு ஏற்பட்டது. ஆனால், ஆண்டவன் சித்தம் வேறுவிதமாக இருந்தது. அதன்படி, எத்தனையோ சிரமங்களைக் கடந்து, அல்லாஹ் கருணையால் எதிரிகளை வென்று, இன்று இந்திய நாட்டில் காலூன்றி யிருக்கிறோம் நாம். அப்படியிருக்க, எந்தவொரு பெரிய காரணமும் இல்லாமல் நம் கடமையைக் கைவிட்டு திரும்பிப் போவது நியாயமா? ஆண்டவன் கட்டளையை மீறுவதற்கு நாம் யார்? டெல்லி சுல்தானின் பெரும் படையையே வெற்றி கண்டவர்கள் நீங்கள். வெறும் ஆவேசத்துடன் வந்து கொண்டிருக்கும் ஏதோ ஒரு ராஜபுத்திரப் படையைக் கண்டு அஞ்சுவதற்கு நாம் வெட்கப்பட வேண்டாமா? அப்படியே நாம் பயந்துகொண்டு திரும்பி ஓட்டமெடுத்தால், உலகின் பல பகுதிகளை ஆண்டுவரும் மற்ற மன்னர்கள் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள்? பிறக்கும்போதே நிச்சயமாகும் ஒரு விஷயம் மரணம் மட்டும் தான். வாழ்க்கை என்னும் பானத்தை அருந்தியே தீரவேண்டும். ஆனால், அந்த மரணம் மேன்மையாக, கௌரவமாக அல்லவா நிகழ வேண்டும்! இறந்த பிறகு ‘இவனல்லவா வீரன்’ என்றல்லவா ஊர் உலகம் நம்மைப் புகழ வேண்டும்?!

வாழும் வரை நம் கடமையைச் செய்வோம். அதுதான் ஆண்டவன் நமக்கிட்ட ஆணை! கடமையைச் செய்யும் போது வெற்றி அல்லது வீரமரணம் அடைந்தால் அதை ஏற்றுக் கொள்வோம். ஆண்டவன் ஒருவனே நிரந்தரம்! யார் வேண்டுமானாலும் காபூல் திரும்புகள்... நான் ஒருவனாக இங்கேயிருந்து வாளேந்திப் போர்புரிவேன்! அதுமட்டுமல்ல.. மது அருந்துவதில் எனக்கு எவ்வளவு ஈடுபாடு உண்டு என்பதை நீங்கள் அறிவீர்கள். இதோ, இறைவனின் கட்டளையை முழுமையாக நிறைவேற்றும் வரை மதுவை நான் தொடமாட்டேன். இது சத்தியம்!” என்று உணர்ச்சிபொங்க முழுங்கிய பாபர், தன் மதுக்கோப்பைகளையும் ஜாடிகளையும் தருவிக்கச் செய்து அவற்றை அங்கேயே - அணிவகுத்து நின்ற படைக்கு எதிரே போட்டுத் தூள்தூளாக உடைத்தெறிந்தார். ஜாடி ஜாடியாக மது ஆறாகக் கீழே மண்ணில் கொட்டப்பட்டது.

பிரமித்து நின்ற படை வீரர்களின் ரத்த நாளங்களை பாபரின் உரை முறுக்கேற்றியது. அவர்கள் உணர்ச்சிமயமாக எழுப்பிய ‘அல்லாஹு அக்பர்!’ என்ற முழக்கம் மைதானத்தில் எதிரொலித்தது.

“புனித குர்-ஆன் மீது ஆணை! கிளம்பட்டும் நம் படை! எதிரிகளைப்

புறங்காட்டச் செய்வோம்!” என்று கர்ஜித்தார் பாபர்.

ஏக காலத்தில் ஆரவாரத்தோடு உயர்த்தப் பட்ட வாட்களும் வேல்களும் வெயிலில் தகதகக்க, கோட்டைக் கதவுகள் திறக்க... பாபர் மற்றும் இளவரசர் ஹுமாயூன் தலைமையில் எதிரிகளைச் சந்திக்கப் புறப் பட்டது மொகலாயப்படை!

உடலெங்கும் எண்பது விழுப்புண்கள். ஒரு கண்ணில் பார்வையின்மை, இடது கையில் சுவாதீனம் குறைவு, சற்று விந்திய நடை... இதெல்லாமே பல போர்களில் பெற்ற வீரப் பரிசுகள்... ஆனால், குதிரையில் வாளேந்தி அமர்ந்தாலோ ஒரு பறக்கும் எரிமலை! - இதுதான் சித்தூர் அரசர் மாவீரர் ராணா சங்கா! அவர் தலைமையில் (இன்றைய போபால் அருகே உள்ள) சந்தேரி நாட்டு மன்னர் மெதினிராய், பானிப்பட் போரில் மறைந்த இப்ராஹீம் லோடியின் சகோதரர் முகமது லோடி மற்றும் சில இந்து, முஸ்லிம் குறுநில மன்னர்கள் அணிவகுக்க, அவர்கள் பின்னால் நூற்று இருபது தளபதிகள். 80,000 குதிரை வீரர்கள், 500 யானைப் படை வீரர்கள்- பாபரை எதிர்த்து மொத்தமாகக் களத்தில் நின்றனர்.

கி.பி.1527-ம் ஆண்டு, மார்ச் 16-ம் தேதி, ஆக்ராவுக்கு மேற்கே 20 மைல் தொலைவில் உள்ள கன்வா என்னும் கிராமத்தில் பானிப்பட் யுத்தத்தை அடுத்து, இப்போது இன்னொரு மாபெரும் போர் துவங்கியது.

இந்த முறை தன் பீரங்கிகளுக்கு லாகவமாகச் சுழலும் சக்கரங்களைப் பொருத்தியிருந்தார் பாபர். அங்குமிங்கும் இடம் மாறி மாறி அணிவகுத்த பீரங்கிகளில் இருந்து கிளம்பிய குண்டுகள் எதிரிகளிடையே பெருத்த சேதத்தை விளைவித்தது.

முதலில் ஹுமாயூனையும் மஹ்தி க்வாஜாவையும் (பாபரின் மைத்துனர்) முன்னணியில் தலைமை தாங்கிப் போரை நடத்த அனுப்பிய பாபர், போர் உச்சக் கட்டத்தில் இருந்த சமயம் பார்த்து ஒரு அதிரடிப்படையுடன் ‘குகையிலிருந்து புறப்பட்ட சிங்கத்தைப் போல’ எதிரி களிடையே பாய்ந்தார். இது கண்டு மேலும் உற்சாகத்துடன் போரிட்ட பாபரின் வீரர்கள் விரைவில் வெற்றிக்கோப்பையை பாபருக்கு அளித்தனர்! பானிப்பட் யுத்தத்தை விடச் சற்று ஆவேசமாக நடந்த இந்த யுத்தம் முடிய மொத்தம் பத்து மணி நேரம் ஆனது.

வட இந்தியாவில் உள்ள ஒவ்வொரு ராஜபுத்திரக் குடும்பமும் ஒரு ஆண் மகனையாவது கன்வா கிராமத்தில் நடந்த இந்த யுத்தத்தில் இழந்ததாக, வரலாற்றில் கூறப்படுகிறது. ரத்தக் காயங்களோடு யுத்த களத்திலிருந்து தப்பித்த ராணா சங்கா, மனம் உடைந்து ஓராண்டுக்குப் பிறகு எங்கோ அநாதை போல இறந்ததாகத் தகவல்...

‘புனிதப் போரில் வென்ற வீரர்’ (‘காஜி’) என்று பாபர் அழைக்கப்பட்டது இந்தப் போருக்குப் பிறகுதான்.

யுத்த களத்தில் பாபரின் படை வீரர்கள் ஒரு மேடை அமைத்து அதன்மீது கற்களையும் ராஜபுத்திர வீரர்களின் தலைகளையும் கொண்டு பெரியதொரு ‘பிரமிட்’ அமைத்து தங்கள் வெற்றியைக் கொண்டாடினார்கள். தலைநகர் திரும்பிய பாபர் முதல் வேலையாக செவ்வாய் கிரகத்தைக் காட்டிப் பயமுறுத்திய அந்த ஜோதிடரை நாடு கடத்தினார் (அப்போதும் பெருந்தன்மையோடு கிராஜுடி மாதிரி அவருக்கு பாபர் ஒரு லட்ச ரூபாய் தந்தது வேறு விஷயம்!).

போரில் வெற்றிக்கொடி நாட்டி டெல்லிக்கு பாபர் திரும்பிய பிறகு,

இளவரசர் ஹுமாயூன் காபூலுக்கு வடமேற்கே உள்ள பதாக்ஷான் பிரதேசத்தை நிர்வகிக்க அனுப்பப்பட்டார். மகன்கள் காம்ரான் - காந்தாரத்தையும், அஸ்காரி - முல்தானையும், கடைசி மகன் ஹிண்டால் - காபூலையும் நிர்வகிக்கப் படைகளுடன் அனுப்பப் பட்டார்கள்.

கன்வா யுத்தம் முடிந்து ஒன்பது மாதங்கள் கழிந்தன. மறுபடி போர் முரசுகளின் ஒலி எழும்பியது. ராணா சங்காவின் விசுவாசமான நண்பரான சந்தேரி மன்னர் மெதினிராய் சுதாரித்துக்கொண்டு, பாபரை எதிர்த்து ஆவேசத்துடன் போர் முழக்கம் செய்தார். உடனே கிளம்பிச் சென்ற பாபரின் படை, கன்வா போரில் தப்பிச்சென்ற மெதினிராயின் சந்தேரிக் கோட்டைய முற்றுகையிட... நடந்தது இன்னொரு முனைப்பான யுத்தம். இந்தியப் போர்முறைகளைப் பற்றிப் புரிந்துகொண்டுவிட்ட பாபரின் படையை ராஜபுத்திரப் படையால் வெகுநேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. கடைசியில் கோட்டைக்குள் பின்வாங்கிய ராஜபுத்திரப் படை வெகுநேரம் வெளியே வராததால், புருவங்களை உயர்த்திய பாபர் “உள்ளே நுழைந்து கோட்டையைக் கைப்பற்றுங்கள்!” என்று கர்ஜித்தபோது... பாபரைப் பிரமிப்பிலும் திகைப்பிலும் ஆழ்த்திய அந்த நிகழ்ச்சி நடந்தது..!

திடீரென்று கோட்டைக்குள்ளிலிருந்து, நெற்றியில் சிவந்த திலகங்களுடன், பிறந்த மேனியுடன் கைகளில் வாட்கள் பளீரிட ராஜபுத்திர வீரர்கள் சாரி சாரியாக வெளியே பெருங்கோஷத்துடன் ஆவேசமாகப் பாய்ந்து வந்தனர்!

‘என்ன இது?’ என்று குழம்பிய பாபரிடம், ராஜபுத்திரர்களைப் பற்றி ஓரளவு தெரிந்த தளபதி ஒருவர் பணிவோடு கீழ்க்கண்டவாறு விளக்கினார்.

“போரில் இனி தோல்வி உறுதி என்கிற நிலை ஏற்படும் மாத்திரத்தில் இந்த ராஜ புத்திரர்கள் தங்கள் குடும்பங்களின் மானத்தைக் காக்கவேண்டி தாய், மனைவி, குழந்தைகளை வாளைப் பாய்ச்சிக் கொன்று விட்டு, தங்கள் போர் உடைகளைக் களைந்து விடுவார்கள். அந்தக் கணமே உயிர்த் தியாகத் துக்கும் வீர சொர்க்கத்துக்கும் அவர்கள் தயாராகிவிட்டார்கள் என்று அர்த்தம். ராஜபுத்திர இனத்தின் சம்பிரதாயம் அது. இனி இவர்களுடைய உயிரற்ற உடல்களை மிதித்துக்கொண்டுதான் நாம் கோட்டைக்குள் நுழைய முடியும்...”



சந்தேரி அரண்மனையின் உட்பகுதி...

“இது அல்லவா வீரம்!” என்று பிரமித்துப் போனார் பாபர். அதைத் தொடர்ந்து ‘ஹோ’வென்று குரலெழுப்பியவாறு வாளைச் சுழற்றிக்கொண்டு வந்த ராஜபுத்திர வீரர்கள், வரிசையாக பாபரின் படை வீரர்களின் வாட்களுக்கும், பீரங்கிகளுக்கும் துப்பாக்கி களுக்கும் இரையாகி வீர சொர்க்கம் புகுந்தார்கள்.

ஆரவாரத்துடன் சந்தேரிக் கோட்டையைக் கைப்பற்றி வெற்றிக்கொடி ஏற்றியது பாபர் படை!

அகமது ஷா என்பவரை சந்தேரிக்கு கவர்னராக்கிவிட்டு, அங்கே நகரில் மாட்டுத் தொழுவங்களாக மாற்றப்பட்டிருந்த பல மசூதிகளைப் புதுப்பித்துத் தந்த பிறகு ஊர் திரும்பிய பாபர், ஒரு மாதம்தான் ஓய்வெடுக்க முடிந்தது. பீஹாரிலிருந்து கிளம்பிய, முந்தைய லோடி வம்சத்தைச் சேர்ந்த ஆப்கானிய குறுநில மன்னர்கள் ஒருங்கிணைந்து ஒரு படையுடன் பாபரை எதிர்த்து நின்றனர்.

கங்கையின் குறுக்கே தற்காலிகமாகப் பாலம் கட்டி நதியைக் கடந்த பாபரின் படை, அயோத்தி வரை ஆப்கானிய எதிரிகளைத் துரத்திச் சென்று முறியடித்தது (அயோத்தியில் பாபர் மசூதி கட்டப்பட்டது இந்தப் போருக்குப் பிறகுதான்!). பிறகு வங்காளமும் பாபரின் வாள்முனையில் பணிந்தது...

இதற்குப் பிறகு வட இந்தியா முழுவதிலும் ஒரு விஸ்தாரமான மொகலாய சாம்ராஜ்யம் உருப்பெற்றது!

போரில் மிகுந்த ஆவேசம் காட்டினாலும் தனிப்பட்ட வாழ்க்கையில் மென்மையான, நல்லொழுக்கம் மிகுந்த சிறந்த மன்னராகத் திகழ்ந்தார் பாபர். ஒவ்வொரு நாளும் நடந்த எல்லாச் சம்பவங்களையும் ‘டைரி’யில் நுணுக்கமாக விவரித்து எழுதுவது அவர் வழக்கம். இந்திய நாட்டின் பருவநிலை மாற்றங்கள், புவியியல், தாவரங்கள், பூக்கள், மக்களின் மத மற்றும் ஜாதிப் பிரிவுகள், இந்தியர்களின் கணிதத்திறமை, கலைத்திறன், மக்களின் நடை உடை பாவனைகள் (‘பழகுவதில் நாகரிகம் போதாது... அழுக்கு உடை அணிவது அதிகம்...’) என்று ஒன்றைக் கூட ‘டைரி’யில் குறிப்பிட மறக்கவில்லை பாபர். இதைத் தவிர, டெல்லியிலும் ஆக்ராவிலும் ஏராளமான பூங்காக்களை உருவாக்கினார் அவர். இந்தியப் பறவைகள் பற்றியும் தாவர வகைகள் பற்றியும் விலாவாரியாகக் குறிப்பிடுகிறார் பாபர். வாழைத்தோட்டம் எப்படிப் போடுவது, அதைக் கண்காணிப்பது எப்படி என்று, ஐந்து விதமான இந்தியக் கிளிகள் பற்றியும் துல்லியமான விவரிப்பு களையும் அவருடைய சுயசரிதையில் நாம் காணலாம். காண்டா மிருகங்கள் வளர்ப்பது பற்றியும் (ஓவியரை விட்டுப் படம் வரையச் சொல்லி) விளக்கி யிருக்கிறார் பாபர்!

இதோ, காபூலிலிருந்து ஹுமாயூன் எழுதிய கடிதத்துக்குப் பதில் போடுகிறார் பாபர். அதில்தான் எத்தனை நுணுக்கமான அலசல்!

'நீ எழுதிய கடிதம் படித்தேன். சுவையான விஷயங்களையே எழுதுகிறாய். அதில் எனக்கு மகிழ்ச்சியே. ஆனால், கடிதம் எழுதிய பிறகு அதை ஒருமுறை நீ படித்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் அதில் நாம் செய்த தவறுகள் புலப்படும். தெளிவாக, புரியும்படி வாக்கியங் களை நீ எழுதக் கற்றுக்கொள்ள வேண்டும். வாக்கியங்கள் விடுகதை போல அமைந்துவிடக்கூடாது. எழுத்துப் பிழைகளும் ஆங்காங்கே கண்ணில் பட்டன. இதெல்லாம் உன்னிடம் மற்றவர்களுக்கு இருக்கும் மரியாதையைக் குறைக்கும். இனியாவது சுற்றி வளைத்து எதையும் எழுதாமல் இருப்பாயாக. அப்போதுதான் கடிதம் எழுதிய உனக்கும் நல்லது. படிப்பவர்களுக்கும் தலைவலி வராது...' இப்படிச் செல்கிறது பாபரின் கடிதம்!

பாபர் எங்கு பயணித்தாலும் அவரைத் தொடர்ந்து ‘சர்வேயர்கள்’ சென்று, பாதையை அளவிட்டவாறு (மைல்) கற்களைப் பொருத்திக்கொண்டே போவது வழக்கம். இதனால் டெல்லியிலிருந்து ஒவ்வொரு ஊரும் எவ்வளவு தொலைவு என்பதைப் பிற்பாடு தெரிந்துகொள்ளலாம் அல்லவா!

பாபர் காலத்தில் கட்டடக்கலை பெரும் முன்னேற்றம் ஏதும் அடையவில்லை. இளம் வயதில், கஜினி நகரில் ஒரு இஸ்லாமிய மகானின் கல்லறைக்கு அழகிய கூரை அமைத்துத் தந்தார் பாபர். பிறகு காபூலில் ஆட்சிபுரிந்தபோது ஒரு மசூதி கட்டினார். இந்தியாவுக்கு வந்த பிறகு குவாலியர் அரண்மனையையும் சந்தேரி அரண்மனையையும் பார்த்து வியந்த பாபர், துருக்கியக் கட்டடக்கலை நிபுணர்களை வரவழைத்து ஆக்ராவில் சில மாளிகை களையும் மசூதிகளையும் இந்தியக் கட்டடக் கலையைப் பின்பற்றி உருவாக்கினார். அவை எதுவும் தற்போது இல்லை. மிஞ்சியிருப்பது பானிப்பட் கிராமத்தில் (போரில் வெற்றி பெற்ற பிறகு) கட்டிய ஒரு மசூதி மற்றும் அயோத்தியில் அவர் ஆணையின் கீழ் மீர்பாக்கி என்ற தளபதி கட்டிய ஒரு மசூதி (இதுவும் தற்போது இந்து மதத் தீவிரவாதி களால் இடிக்கப்பட்டுவிட்டது). கட்டடக் கலையைப் பொறுத்தமட்டில் இவை இரண்டுமே பிரமாதமான மசூதிகள் அல்ல. இவை பற்றி நுணுக்கமான குறிப்புகளைப் பாபரே விஸ்தாரமாகக் குறிப்பிடவில்லை.

இளம் வயதிலிருந்து கரடுமுரடான வாழ்க்கை, தொடர்ந்த யுத்தங்கள்.. சாம்ராஜ்யம் நிறுவிய பிறகு மறுபடி ஆரம்பிக்கப்பட்ட மதுப்பழக்கம் எல்லாம் சேர்ந்து, கடைசிக் காலத்தில் பாபரைப் படுக்கையில் வீழ்த்தியது.

மது!...

சுயசரிதையில், மது அருந்துவது பற்றிப் பக்கம் பக்கமாக அனுபவித்து விவரித்து இருக்கிறார் பாபர்!

‘பரவசம் தரும் ஒயின் வேண்டும்...
பூரித்த இளமையோடு
பெண்களே வருக!
இவற்றுக்கு இணை வேறு
எது உண்டு?
பாபர்! ஆசைதீர அனுபவி!
இளமை போனால் திரும்பி வராது!’

- வாலிபப் பருவத்தில் பாபர் எழுதிய கவிதை இது!

உலகப் புகழ்பெற்ற மதுவகைகளிலிருந்து, இந்திய சாராயம் வரை ஒன்றைக்கூட விட்டு வைக்கவில்லை அவர். அதேசமயம் எத்தனை ‘லார்ஜ்’கள்(!) அடித்தாலும் பாபர் நிதானம் தவறியதே கிடையாது என்கிறது வரலாறு!

பாபர் நோய்வாய்ப்பட்ட விஷயம் கேள்விப்பட்டு டெல்லிக்கு விரைந்து வந்த ஹுமாயூனை “பொறுப்பில்லாமல் ஊரை விட்டு வந்தது தவறு!” என்று கடிந்து கொண்டார் பாபர். பிறகு தந்தையின் உடல் நலம் தேறியவுடன் ஹுமாயூன் இந்தியாவின் வடக்கே ஸம்பல் பகுதிக்குத் திரும்பிச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்தபோது திடீரென்று காய்ச்சலில் வீழ்ந்தார். அசுரக் காய்ச்சல். எந்த மருந்தும் பயன்தருவதாகத் தெரியவில்லை. கூட இருந்தவர்கள் பயந்து

போனர்கள். பிறகு, யமுனை நதியில் படகில் படுக்க வைத்து சர்வ ஜாக்கிரதையாக ஹுமாயூனை ஆக்ராவுக்கு அழைத்து வந்தார்கள். இடமாறுதலும் பலனளிக்க வில்லை. ஆக்ராவில் உள்ள கைதேர்ந்த வைத்தியர்கள் போராடியும் ஜுரம் குறையாததால் தந்தை பாபர் கலங்கிப் போனார். ‘என் அருமை மகனைக் காப்பாற்றியாக வேண்டும்’ என்று மனம் உடைந்து கண்ணீர் வடித்த பாபரிடம் ஒரு முஸ்லிம் துறவி “அரசே! தங்களிடம் உள்ள பொருட்களில் மிகவும் விலைமதிப்பு உயர்ந்த ஒன்றை விட்டுக்கொடுத்தால் தங்கள் மகன் பிழைக்கலாம்!” என்று சொல்ல, வெகுநேரம் சிந்தனையில் இருந்த பாபரின் முகத்தில் தெளிவு பிறந்தது. மற்ற ஆலோசகர்கள் மனதில் ஓடியது என்னவோ கோஹினூர் வைரம்! மரியாதையுடன் அதைப்பற்றி அவர்கள் குறிப்பிடவும் செய்தார்கள் (பாபர் அந்த வைரத்தை, தனக்காக வாங்கி வைத்துக் கொள்ளவில்லை. மகனுக்கே திருப்பித் தந்து விட்டார் என்ற செய்தி இவர்களுக்குத் தெரியாது!).

எழுந்து சென்ற பாபர், ஹுமாயூனின் படுக்கை அருகில் அமர்ந்து வெகுநேரம் தியானத்தில் இருந்தார். இறைவனின் பெருமையை அவர் உதடுகள் முணுமுணுத் தவாறு இருந்தன.

பிறகு எழுந்து மூன்று முறை மகனை வலம் வந்த பாபர் இரு கைகளையும் உயர்த்தி, “எல்லாம் வல்ல இறைவனே! கருணைக் கடலே! என்னிடம் உள்ள விலைமதிப்பு மிக்க பொருள் என் உயிர்தான். இதோ, ஒரு தந்தை உன்முன் மண்டியிட்டு மன்றாடுகிறேன்! என் மகன் உயிர் பிழைக்க வேண்டும். அதற்குப் பதில் என் உயிரை எடுத்துக்கொள்ள வேண்டி இறைஞ்சுகிறேன்” என்று உணர்ச்சிகரமாக முழங்கினார்.

உடனே, அந்த ஆச்சரியம் நிகழ்ந்தது...!

பாபர் மெள்ளத் திரும்பிச் செல்ல முனைந்தபோதே அவர் கால்கள் தள்ளாடின. லேசாகக் காய்ச்சலும் ஆரம்பிக்க... அதே சமயம் ஹுமாயூனின் ஜுரம் குறைய... பாபர் கன்னங்களில் ஆனந்தக்கண்ணீர்! “மகனிடமிருந்து நோயை நான் எடுத்துக் கொண்டுவிட்டேன்!” என்றார் லேசான குரலில்!

இது எதேச்சையானதொரு சம்பவம் என்றும் இந்த ‘உணர்ச்சிகரமான க்ளைமாக்ஸ்’ சற்று மிகைப்படுத்தப்பட்ட தகவல் என்றும் பிற்பாடு சில ஆங்கிலேய மற்றும் இந்திய வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டாலும், ஹுமாயூன் குணமானதையும் பிறகு பாபர் நோய்வாய்ப்பட்டு இறந்ததையும் வரலாறு ஒப்புக்கொள்ளத்தான் செய்கிறது!

இறப்பதற்குமுன் ஹுமாயூனை அழைத்து, ‘என் வாரிசு!’ என்று எல்லோர் முன்னிலை யிலும் அறிவித்தார் பாபர். பிறகு மகனை நோக்கி “உன் சகோதரர்களை அன்புடன் நடத்து. மகுடம் தலைக்கு ஏறியவுடன் மமதை வந்துவிடக்கூடாது. அது உன்னைத் தவறான பாதையில் கொண்டு செல்லும். ஏராளமான மதங்களையும் ஜாதிகளையும் கொண்ட நாடாக இருக்கிறது இந்தியா, நீ எல்லோருக்கும் அரசன். ஆகவே, மதவெறி உனக்கு வேண்டாம். குறிப்பாக, இந்துக்களின் நம்பிக்கையைப் பெற அவர்கள் வணங்கும் பசுவை எந்தச் சூழ்நிலையிலும் கொல்லாதே. எந்த மதத்தின் ஆலயங்களையும் நாசப் படுத்தாமல் ஆட்சிசெய். இஸ்லாமிய மதத்தைக் கொடுங்கோல் ஆட்சியின் மூலம், வாள்முனையில் நிலைநிறுத்த முடியாது. அன்புவழி ஒன்றினால்தான் முடியும்!” என்று மெல்லிய குரலில் அறிவுரை கூறினார்.

பிறகு பாபருக்கு மூச்சுவாங்க ஆரம்பித்தது. நினைவும் மெள்ள அகல ஆரம்பித்தது.

டிசம்பர் 26, கி.பி.1530... அதிகாலை லேசாகக் கண்களைத் திறந்த பாபர் “இறைவா! இதோ, நான் தயார்...” என்று முணுமுணுத்தார்.

சில நிமிடங்க்ளில் அவர் உயிர் பிரிந்தது.

பாபரின் மகளும் ஹுமாயூனின் வாழ்க்கை வரலாற்றைப் பிற்பாடு எழுதியவருமான குல்பதன் பேகம் ‘அன்று இரவு முழுவதும் ஒரு மூலையில் அமர்ந்து விசும்பிக்கொண்டு இருந்த நானும் மற்றவர்களும், அப்பா இறந்துவிட்டார் என்று தெரிந்ததும், ‘ஓ’வென்று கதறி அழுதோம். எங்களைப் பொறுத்தமட்டில் அன்று காலை... இருட்டாகவே விடிந்தது...’ என்று விவரிக்கிறார். அநேகமாக யுத்த களத்திலேயே வாழ்க்கை என்பதால் சற்று முதுமையாகத் தோற்றமளித்தாலும், இறந்த போது பாபரின் வயது 48தான்! டெல்லி அரியணையில் அமர்ந்து அவர் ஆட்சி செய்தது நாலாண்டுகள்!

முதலில் பாபரின் உடல் ஆக்ராவில் - தாஜ்மஹால் பிற்பாடு கட்டப்பட்ட இடத்துக்கருகே - யமுனை நதிக்கரையில் புதைக்கப்பட்டது. ஒன்பது வருடங்களுக்குப் பிறகுதான், பாபரின் உயிலின்படி அவர் உயிரையே வைத்திருந்த காபூலுக்கு உடல் கொண்டு செல்லப்பட்டு, அங்கே அவர் முன்னொரு சமயம் அமைத்திருந்த அழகான பெரும் தோட்டத்தில் மறுபடியும் புதைக்கப் பட்டது.

பாபர் என்னும் புலி எட்டடி பாய்ந்தால் ஹுமாயூன் என்னும் குட்டி பதினாறு அடி பாய வேண்டும் என்பதுதான் பாபர் உட்பட, எல்லோருடைய விருப்பமாக இருந்திருக்க வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக ஒரு அடி தாண்டுவதற்குள்ளேயே இந்த மொகலாயக் குட்டி தடுக்கி விழுந்தது வேறு விஷயம்...!

15

ஹுமாயூன்..

கேலிக்கூத்தான மன்னிப்புகள்!

மொகலாய சரித்திரத்தில் சற்று அனுதாபத்துக்குரிய மன்னராகச் சித்தரிக்கப்படுபவர் பாபரின் மகன் ஹுமாயூன் என்பது பள்ளியில் பயிலும் சிறுவர்களுக்கும் தெரிந்த விஷயம்! ஹுமாயூன் பாதுஷாவிடம் 'ப்ளஸ் பாயின்ட்'டுகள் இல்லாமல் இல்லை. அவற்றையெல்லாம் காட்டாறாக அடித்துக்கொண்டு சென்றுவிட்டது அவருடைய 'மைனஸ் பாயின்ட்'டுகள் என்பதுதான் பரிதாபம்!

பாபர் தலைமையில், பானிப்பட் யுத்தத்தில் தன் பதினேழாவது வயதில் மிகுந்த வீரத்துடன் போர் புரிந்தவர் ஹுமாயூன். ஆனால் தந்தை இறந்த பிறகு, ஒரு மன்னராக நாட்டை ஆள நேர்ந்தபோது அவர் தடுமாறித் தவித்ததைத்தான் வரலாறு கணக்கில் எடுத்துக்கொண்டது!

ஹுமாயூனிடம் விஷயம் இல்லாமல் இல்லை. வானியல், பூகோளம், ஜோதிடம், பௌதிகம் மற்றும் ஓவியம் போன்ற நுண்கலைகளில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. பழகுவதற்கு அவர் இனிமையானவர். நல்ல கவிஞர். நிறைய நகைச்சுவை உணர்வும் ஹுமாயூனிடம் இருந்தது. அரியணையில் அமர்ந்து ஆட்சிபுரிய இவை மட்டும் போதுமா?

விஷப்பாம்புக்குப் பால் வார்த்து வளர்க்கும் அளவுக்கு மென்மையான குணம் கொண்டவராக இருந்தார் ஹுமாயூன். விளையாட்டு, போர் என்று வந்துவிட்டால் சற்றுக் கொலைவெறி - ஆவேசம் ஒரு தலைவனுக்குத் தேவை. அது ஹுமாயூனிடம் இல்லாமல் போனது. பிரச்னைகளை முழுதும் தீர்க்காமல் அந்தரத்தில் விட்டுவிட்டு கேளிக்கைகளில் ஆழ்ந்துவிடுவதும் அவரிடம் உள்ள ஒரு கெட்ட குணம்!

'வெற்றி என்ற வார்த்தை அரசல்புரசலாகக் காதில் விழுந்தால் போதும் - உடனே அதைக் கொண்டாட மது, மாது, ஓபியம் என்ற போதைப் பொருட்களில் மூழ்கிவிடும் உல்லாச மனிதர் ஹுமாயூன்!' என்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள். இதெல்லாம் போதாதென்று 'மூடநம்பிக்கை' என்ற வியாதி வேறு அவரை வாழ்நாள் பூராவும் பிடித்து அலைக்கழித்தது. காபூல் ஜோசியரையும் மீறி ராணா சங்காவைப் பாபர்

வெற்றி கொண்டதை முன்னொரு அத்தியாயத்தில் பார்த்தோம். மகன் நேர் எதிரிடை! உதாரணமாக, எங்கு கிளம்பினாலும் மிகுந்த கவனத்துடன், வலதுகாலை முன் வைத்து தான் நடக்க ஆரம்பிப்பார் ஹுமாயூன்! மற்றவர்களும் இதை மீறக்கூடாது. ஒருமுறை, தவறிப்போய் இடது காலை முன்வைத்து ஆலோசனை மண்டபத்தில் நுழைந்த அமைச்சர் ஒருவரைத் திருப்பி வெளியே அனுப்பி மறுபடி 'வலது காலை முன்வைத்து' உள்ளே வரச்சொன்னார் பாதுஷா ஹுமாயூன் என்றால் பார்த்துக் கொள்ளலாம்!

ஒவ்வொரு நாளும் அந்தக் கிழமைக்கேற்ப ஆஸ்தான மண்டபங்கள், சிம்மாசனங்கள் தயாரித்துக்கொண்டவர் ஹுமாயூன். சூரிய அரண்மனை, சந்திர அரணமனை என்று வாரம் ஏழு நாட்களுக்கு ஏழு மண்டபங்களில் மாறி மாறி அமர்ந்து ஆட்சிபுரிந்தவர் இந்த மொகலாய மன்னர். ஞாயிறன்று மஞ்சள் உடை, திங்களன்று பச்சை உடை என்று 'அதிர்ஷ்ட உடைகளை' அவர் அணிய ஆரம்பித்தது மேலும் ஒரு தமாஷ்! தன் திருமணத்துக்குத் தானே கச்சிதமாக முகூர்த்தம் பார்த்துக்கொண்டதோடு அல்லாமல், குழந்தை அக்பர் பிறந்தவுடன் மகனின் ஜாதகத்தை அறுபது பக்கம் நுணுக்கமாகக் கணித்து எழுதி ஒரு நோட்டுப் புத்தகமே தயாரித்தார் ஹுமாயூன். அதில், அக்பர் உலகப் புகழ் பெறுவார் என்பதையும் முன்கூட்டியே திட்டவட்டமாக எழுதியதை ஹுமாயூனின் சில வெற்றிகரமான சாதனை களில் ஒன்றாகக்கூடச் சொல்லலாம்!

இந்தியாவில் பாபர் அமைத்துவிட்டுப் போனது பிரமாண்டமான ஒரு சாம்ராஜ்யத் துக்கான வலுவான அஸ்திவாரம்தான். அதன் மீது எப்படிக் கட்டடம் எழுப்புவது என்பது புரிபடாமல் திணறித் தடுமாறினார் மகன் ஹுமாயூன். விளைவாக, மொகலாய சாம்ராஜ்யம் தவித்துத் தள்ளாடியது!

பாபருக்கும், பிற்பாடு அக்பருக்கும் இணையாக அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்தத் தெரியாத இந்த மன்னர், எடுத்த எடுப்பில் சந்திக்க நேர்ந்த பிரச்னைகள் சற்று அதிகம் என்பதையும் குறிப்பிட வேண்டும்..!

மால்வா மற்றும் குஜராத் பகுதிகளை ஆண்டு வந்த பகதூர் ஷா என்ற பலம் பொருந்திய ஒரு மன்னரை வழிக்குக் கொண்டு வருவதற்குள் பாபர் இறந்துவிட, பகதூர் ஷா பெரும் படையைத் திரட்டிக் கொண்டு ஹுமாயூனுக்கு எதிராகப் பரபரத்துக் கொண்டிருந்தது ஒருபுறம்..!

பீஹாரில் தங்கியிருந்த முகமது லோடி (இப்ரஹீம் லோடியின் சகோதரர்) மொகலாயர்களைப் பழிவாங்கப் படை திரட்ட, அவருடைய சகோதரியை மணந்து கொண்டிருந்த வங்காள மன்னரும் மைத்துனரோடு ஹுமாயூனுக்கு எதிராகச் சேர்ந்துகொண்டது இன்னொருபுறம்..!

பீஹாரில் கங்கை நதிக்கரையோரம் ஷெர்கான் என்னும் வீரர் (பிற்பாடு ஷெர்ஷா என்று புகழ்பெற்றவர்!) மறுபடியும் டெல்லியில் ஆப்கானியக் கொடியை ஏற்றும் லட்சியத்தோடு தன் இனத்தைச் சேர்ந்த ஆப்கானிய வீரர்களை ஒன்று சேர்த்துப் படை திரட்டிக் கொண்டிருந்தது மற்றொரு புறம்..!

இந்த எதிர்ப்பு வியூகம் முழுமை அடையாத குறையைத் தீர்த்து வைத்தவர்கள் ஹுமாயூனின் சகோதரர்களான காம்ரான், அஸ்காரி மற்றும் ஹிண்டால்! (காம்ரானும் அஸ்காரியும் ஒரு சிற்றன்னைக்கும்

ஹிண்டால் இன்னொரு சிற்றன்னைக்கும் பிறந்தவர்கள்.) குறிப்பாக, அண்ணன் ஹுமாயூன் மீது காம்ரான் கொண்டிருந்தது கொலைவெறி!

தம்பி காம்ரான், ஹுமாயூனுக்கு இழைத்த துரோகங்களைப் பட்டியலே போடலாம். ஆனால், அந்தத் துரோகங்களையெல்லாம் வரிசையாக மன்னித்து சகோதரரை அரவணைத்துக்கொண்டார் ஹுமாயூன். ‘சகோதரர்களை அன்புடன் நடத்து!’ என்று தந்தை சொல்லிவிட்டுப் போன அறிவுரை ஹுமாயூன் காதில் ரீங்காரமிட்டதுதான் இதற்குக் காரணம்! அதை இந்த அளவுக்கு மகன் பின்பற்றுவார் என்று தெரிந்திருந்தால் பாபர் அப்படிச் சொல்லியிருப்பார் என்பது சந்தேகம்தான். பழைய சில சுல்தான்களைப் போல, முன்னெச்சரிக்கை என்ற பெயரில், கூடப் பிறந்தவர்களின் தலைகளைச் சீவித் தள்ள வேண்டாம் என்ற எண்ணத்தில் தந்தை அப்படிக் குறிப்பிட்டிருப்பாரே அன்றி - கூடப் பிறந்தவர்களை - அவர்கள் துரோகிகளாக இருந்தாலும் மன்னிக்க வேண்டும் என்பது நிச்சயம் பாபரின் எண்ணமாக இருந்திருக்காது. ஆனால், மென்மையான குணம் கொண்ட ஹுமாயூன் ‘மன்னிப்பு’ என்பதையே கேலிக் கூத்தாக்கினார். அது அவர் வாழ்வில் பல சங்கடங்களை ஏற்படுத்தியது...



காபூலையும் காந்தாரத்தையும் நிர்வகித்து வந்த காம்ரான், ஹுமாயூன் சக்ரவர்த்தியின் அனுமதி இல்லாமல் பெஷாவர், லாகூரைக் கைப்பற்றினார். அவரைத் தண்டிக்க வேண்டிய ஹுமாயூன் “பரவாயில்லை. நீயே கவனி!” என்று சொல்லி அந்த நகரங்களையும் சகோதரருக்கே தந்தார். அண்ணனுக்குப் போலியாக நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதிய காம்ரான் சும்மா இருக்கவில்லை. சில மாதங்கள் கழித்து பஞ்சாபையும் கைப்பற்றினார். அப்போதும் ஹுமாயூன் வெளிப்படுத்தியது தர்மசங்கடமான புன்னகையே!

இதற்குள், இப்ரஹீம் லோடியின் சகோதரர் முகமது லோடி அலஹாபாத் அருகில் உள்ள ஜான்பூரைக் கைப்பற்ற படை திரட்டிச்செல்ல, ஹுமாயூன் படை அவரை முறியடித்தது. என்னதான்

மன்னருக்குத் திறமையும் சுறு சுறுப்பும் அவ்வளவு போதாது என்றாலும் பானிப்பட் யுத்தத்தில் இப்ரஹீம் லோடியையும் பிறகு ராணா சங்காவையும் முறியடித்த மாவீரர்களைக் கொண்ட பெரும் படை அவர் கீழ் இருந்தது என்பதை நாம் மறக்கக்கூடாது! ஆனால், பெற்ற வெற்றியை நிலைநிறுத்திக்கொள்ளவில்லை ஹுமாயூன். அதற்குப் பதிலாக, உடனே ஆக்ரா திரும்பிய மன்னர் கோலாகலமான வெற்றி விழாவுக்கு ஏற்பாடு செய்ய ஆணையிட்டார். பிரபுக் களுக்கும் அமைச்சர்களுக்கும் தளபதி களுக்கும் மாபெரும் விருந்து படைக்கப் பட்டது. 12,000 பேர் தங்க நாணயங்கள், ஆபரணங்கள் என்று மன்னரிடம் பரிசுகள் பெற்றனர். பிறகு மங்கைகள், மது என்று கேளிக்கைகளில் இறங்கினார் ஹுமாயூன். குறிப்பாக ஓபியம்! மன்னருக்கு ஓபியத்தைச் சிறுசிறு வில்லைகளாக்கிப் பன்னீரில் கரைத்து விழுங்குவது என்றால் ஏக குஷி!

மயக்கத்திலிருந்த ஹுமாயூன் பாதுஷாவைத் தட்டியெழுப்பினார்கள். “குஜராத் சுல்தான் பகதூர் ஷா ராஜஸ்தானில் நுழைந்து சித்தூரை முற்றுகையிடுகிறார்...” என்று பதற்றத்துடன் எடுத்துச் சொன்னார்கள். சுதாரித்துக்கொண்டு எழுந்த மன்னர் உடனே மொகலாயப் பெரும் படையுடன் குவாலியர் வரை சென்றார். போனவர் “என்ன அவசரம்? பகதூர் ஷாவைப் பிறகு கவனிப்போம்!” என்று முடிவு செய்தார். குவாலியர் நகரத்து அழகில் மயங்கி, பிக்னிக், வேட்டையென்று இரண்டு மாதங்கள் மன்னர் காலம் கழித்தது பாபரின் கீழ் பணியாற்றிய துடிப்பான வீரர்களுக்கு நிச்சயம் வெறுப்பேற்றியிருக்க வேண்டும்! பிறகு பொறுப்பை உணர்ந்து பகதூர் ஷாவை நோக்கி ஹுமாயூன் முன்னேறியபோது அவருக்கு வந்தது ஒரு செய்தி! ‘விக்கிரகங்களை ஆராதிக்கும் இந்து மன்னர்களுக்கு எதிராகப் புனிதப்போரில் குஜராத் சுல்தான் பகதூர் ஷா ஈடுபட்டு இருக்கும்போது அவரை எதிர்த்து மன்னர் ஹுமாயூன் போர் முரசு கொட்டுவது நியாயமா?’ என்று ஒரு ஓலை (பகதூர் ஷா அனுப்பியதுதான்!). தர்மசங்கடத்தில் ஆழ்ந்த ஹுமாயூன் கடைசியில் போரில் இறங்க வில்லை. சித்தூரை நிம்மதியாகக் கைப்பற்றிய பகதூர் ஷா, இப்போது அந்தக் கோட்டைக் குள்ளும் பாசறைகள் அமைத்து பெரும் பலத்துடன் ஹுமாயூன் பக்கம் திரும்பினார்!

இப்படித் தேவையில்லாத ஒரு கால விரயம்! அப்படியும் சமாளித்துக்கொண்ட ஹுமாயூனின் படை, குஜராத் சுல்தானைத் துரத்தியடித்தது. தெற்கே தன்வசம் இருந்த மாண்டு நகரத்தில் புகுந்துகொண்டார் பகதூர் ஷா. நல்லகாலமாக உடனே வெற்றி விழா எதற்கும் ஏற்பாடு செய்யாமல் தொடர்ந்து மாண்டு நகர் நோக்கிப் படை யுடன் முன்னேறினார் ஹுமாயூன். போர்ச்சுக்கீசியர் மேற்குக் கடற்கரையில் கோவா, டையூ, டாமனில் காலூன்றிய நேரம் அது! போர்ச்சுக்கீசிய உதவி கேட்க பகதூர் ஷா டையூ சென்றடைய... குஜராத்தில் கடலோரம் உள்ள கேம்பே நகரம் வரை பின்தொடர்ந்தார் ஹுமாயூன். (கடற்கரையை நேரில் பார்த்த முதல் மொகலாய மன்னர் என்ற பெருமையும் ஹுமாயூனுக்கு உண்டு!).

இந்தத் தருணத்தில் வடக்கே ஆப்கானிய ஷெர்கான் எழுப்பிய போர்முரசு பற்றித் தகவல் வந்தது. உடனே அவசரப்பட்டு ஆக்ரா திரும்பினார் ஹுமாயூன். குஜராத்தில் உறுதியாகக் காலூன்றாமல் பாதியில் மன்னர் இப்படி ஊர் திரும்பியதை ஹுமாயூன் செய்த பெரும் தவறாக வரலாறு குறிப்பிடுகிறது. விளைவு? பகதூர் ஷா போர்ச்சுக்கீசிய படையின் உதவியுடன், இழந்த பிரதேசங்கள் அத்தனையையும் மிகச்

சுலபமாகத் திரும்பவும் கைப்பற்றிக்கொண்டார். ஹுமாயூனின் வீரர்கள் சிந்திய ரத்தம் அத்தனையும் வீணாகப் போனது! வீரம் மிகுந்த மொகலாயப்படை உற்சாகம் இழந்ததுதான் மிச்சம். ஆனால், பகதூர் ஷாவுக்கு முடிவு வேறு வகையில் சம்பவித்தது! மறுபடியும் போர்ச்சுக்கீசியரைச் சந்தித்து எதிர்கால உறவு பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த டையூ வந்த பகதூர் ஷாவுக்கு, கப்பலில் விருந்து ஏற்பாடுகள் செய்திருந்தனர் போர்ச்சுக்கீசிய அதிகாரிகள். கப்பலை நோக்கி ஒரு படகில் சென்ற குஜராத் சுல்தான், கொந்தளித்த கடலில் கால் தவறி விழுந்தார். ஹுமாயூன் செய்யத் தவறிய வேலையை சுறாக்கள் செய்து முடித்தன!

இதற்குள் தெற்கு பீஹார் முழுவதையும் கைப்பற்றியிருந்த ஷெர்கான் வடக்கே முன்னேறி அலஹாபாத் அருகே, கங்கை நதிக்கரையில் இருந்த சுனார் கோட்டையைப் பிடித்தார்.

சுலபத்தில் நெருங்க முடியாத எசகு பிசகான இடத்தில் அமைந்திருந்த சுனார் கோட்டையை ஹுமாயூன் படை முற்றுகை யிட்டது. ‘சுனார் கோட்டையை நிர்வகிக்க யாரோ ஒரு பிரதிநிதியைத்தானே தாங்கள் நியமிக்கப் போகிறீர்கள்? அது நானாக ஏன் இருக்கக் கூடாது? மேன்மைதங்கிய மன்னருக்கு விசுவாசமான ஊழியனாக நான் பணிபுரிவேன்...!’ என்று ஷெர்கான் பசப்புக் கடிதம் எழுதியதை நம்பி ஏமாந்தார் ஹுமாயூன். இதைத் தொடர்ந்து படை பலத்தை அதிகரித்துக்கொண்ட ஷெர்கான், குபீலென்று பாய்ந்து வங்காளத்தை விழுங்கினார். கோபம் கொண்ட ஹுமாயூன், சுனார் கோட்டையைக் கைப்பற்றி காவல் போட்டுவிட்டு வங்காளம் நோக்கிக் கிளம்பினார். உடனே ‘என் எஜமானரே! தேவையில்லாமல் உங்கள் ஊழியனான என்னோடு ஏன் மோதுகிறீர்கள்? வங்காளத்தை விட்டுக்கொடுத்தால் பீஹாரைத் தங்கள்முன் வைத்துத் தங்கள் பாதங்களை முத்தமிடுவேன். வங்காள சிம்மாசனத்தை அலங்கரிக்கும் குடை, மகுடம் எல்லாவற்றையும் உங்கள் காலடியில் வைத்து ஆண்டுதோறும் ஒரு லட்சம் ரூபாய் கப்பம் அனுப்புவேன். இந்த ஏழையின் கூற்றுக்குச் செவி சாயுங்கள்!’ என்று ஷெர்கான் ஒரு கடிதம் அனுப்ப (வாசகர்கள் கரெக்டாக ஊகித்திருப்பீர்களே!) ஹுமாயூன் உடனே மகிழ்ந்துபோய் ஷெர் கானை மன்னித்து அவர் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்!

நல்லகாலமாக வங்காளத்திலிருந்து வந்த ஒரு பிரதிநிதி ஷெர்கானின் குள்ளநரித் திட்டங்களை ஹுமாயூனுக்கு விளக்க, சற்றுக் கால தாமதமாக வங்காளத்துக்குள் ஹுமாயூனின் படை புகுந்தது. அப்போது வங்காளத் தலைநகராக (கங்கை பல கிளைகளாகப் பிரியும் பகுதியில்) இருந்த கவுர் நகரைச் சுலபமாகவே கைப்பற்றியது. ஆனால், ஹுமாயூனின் சபலங்களைப் பற்றி நன்கு புரிந்து வைத்திருந்த ஷெர்கான், கவுர் நகரத்து அரண்மனையை ஒரு உல்லாச புரியாகத் தயார்நிலையில் வைத்துவிட்டே ஒரு பெரும் படையுடன் வெளியேறினார்! ஹுமாயூன் அரண்மனைக்குள் புகுந்தவுடன் அதன் ரம்மியமான அழகைப் பார்த்துக் கிறங்கிப் போனார். ஏராளமான அழகிகள் வேறு மன்னருக்குப் பணிவிடை செய்யத் தயாராக நின்றிருந்தனர். மங்கைகள் சூழ, அந்த மயக்கத்தை ஓபிய வில்லைகள் அதிகரிக்க, அந்தப்புரத்தில் காணாமல் போனார் ஹுமாயூன் பாதுஷா.

சில மாதங்கள் கழித்து, ஒருவழியாக ஹுமாயூன் மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்தால்... வந்த செய்தி பயங்கரமாக இருந்தது.

பலம்பொருந்திய ஆப்கானிய அதிரடிப்படையுடன் தப்பிச் சென்றிருந்த ஷெர்கான், சுனார் கோட்டையில் காவலில் இருந்த 700 மொகலாய வீரர்களை வெட்டித் தள்ளிக் கோட்டையை மறுபடியும் கைப்பற்றி, அதைத் தொடர்ந்து காசியைக் கபளீகரம் செய்து கன்னோசியையும் காலடியில் மண்டியிடச் செய்தார். பிறகு ஆப்கான் படை ஜான்பூரையும் ஜாலியாகவே வாரிப் போட்டுக்கொண்டது.

ஷெர்கானின் நிஜப் பெயர் ஃபரீத். ஒரு முறை மற்ற வீரர்களுடன் வேட்டையாடப் போனபோது திடீரென்று அவர்மீது பாய்ந்த கொழுத்த புலியைத் தன் கைகளாலேயே தடுத்து வீழ்த்திப் புரட்டிப் போட்டு குறுவாளால் குத்திக் கொன்றார் ஃபரீத். அதிலிருந்து புலியை வென்ற வீரர் - ‘ஷெர்கான்’ என்று அழைக்கப்பட்டார் அவர் என்பது குறிப்பிடத்தக்கது!

இப்போது ஷெர்கான்முன் அணிதிரண்டு நின்றிருந்தனர் ஆப்கான் வீரர்கள். அவர்களிடையே ஷெர்கான் செய்த முழக்கம் புலியின் உறுமலமாக இருந்ததில் வியப்பில்லை! “மாவீரர்களே! நம் கனவு நிறைவேறும் தருணம்... நம் லட்சியம் கைகூடும் வேளை- இதோ வந்துவிட்டது! போதையில் வீழ்ந்து கிடக்கும் இந்த மொகலாய மன்னரை முறியடிப்போம். டெல்லியைக் கைப்பற்றுவோம். மீண்டும் ஆப்கானிய சாம்ராஜ்யம் அமைத்து, இழந்த மானத்தை மீட்டு ஆப்கானிய இனத்தின் பெருமையை நிலைநாட்டுவோம்!” என்று அவர் கூவ, வாட்களை உயர்த்தி உணர்ச்சிகரமாக ஆரவாரம் செய்தது ஆப்கானியப்படை!

வங்காளத்தில் இருந்த ஹுமாயூன் இந்தச் செய்தி கேட்டுத் திகைத்தார். ஆனால், சோதனைகள் பாக்கியிருந்தன! ஆக்ரா திரும்பியிருந்த சகோதரர் ஹிண்டால், அண்ணன் ஹுமாயூனுக்கு எதிராகப் புரட்சிக் கொடி உயர்த்தி, தன்னை ‘பாதுஷா’ என்று அறிவித்துக்கொண்ட துரோகம் நிகழ்ந்தது.

இதுகேட்டு லாகூரிலிருந்து பத்தாயிரம் குதிரை வீரர்கள் அடங்கிய படையுடன் வந்த இன்னொரு சகோதரர் காம்ரான், ஹுமாயூனுக்கு உதவிக்குப் போவதற்குப் பதில் ஹிண்டாலைத் துரத்தியடித்துவிட்டு, “அரியணையில் அமரப் பிறந்தவன் நான்தான்!” என்று முழங்கிவிட்டு மகுடம் சூட்டிக்கொண்டார்!

மனம் வருந்திய ஹுமாயூன் அந்த நிலையிலும் இரு சகோதரர்களுக்கும் அறிவுரை கூறிக் கடிதங்கள் அனுப்பினார். ‘நமது தந்தை பாபர் பாதுஷா ரத்தம் சிந்தி உருவாக்கிய சாம்ராஜ்யத்தை கேவலம், சகோதரச் சண்டையால் சின்னாபின்னமாக்க நினைப்பது அவருக்கு நாம் செய்யும் மன்னிக்க முடியாத துரோகம்’ என்றெல்லாம் அவர் எடுத்துச் சொல்லியும் சகோதரர்கள் கேட்பதாக இல்லை. ‘எப்படியும் அண்ணனை ஷெர்கான் பரலோகம் அனுப்பப் போகிறார். பிறகு நானா நீயா என்பதுதானே பிரச்னை? (!)’ என்று இருவரும் பேராசையுடன் கணக்குப் போட்டனர்.

ஆண்டு கி.பி.1539...

சகோதரர்களை வழிக்குக் கொண்டுவர, ஆக்ராவை நோக்கிக் கோபத்துடனும் வேதனையுடனும் ஹுமாயூன் படையுடன் கிளம்பியபோது நல்ல மழைக்காலம். பாட்னாவுக்கும் காசிக்கும் நடுவே உள்ள சாஸா என்ற நகரில் பெருகிவந்த கங்கையைத் தற்காலிக பாலம் அமைத்து ஹுமாயூன் படை கடக்க நினைக்கையில், ஷெர்கானின்

ஆப்கானியப் படை இரவு நேரம் பார்த்துப் பின்னாலிருந்து பாய்ந்து மொகலாயர்களைக் குதறியது!

இந்தத் தாக்குதலில், சுமார் 8,000 மொகலாய வீரர்கள் கங்கை நதியில் மூழ்கி இறந்தனர். ஒரு ஆப்கானிய குதிரை வீரன் செலுத்திய அம்பு, ஹுமாயூன் கையை உரசிச் சென்று காயப்படுத்தியது. அப்படியும் ஒரு குதிரையில் ஏறி நதியை ஹுமாயூன் கடக்கப் பார்க்க, அவர் உயிருக்குயிரான குதிரை வெறித்த பார்வையோடு வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போனது...

பரிதாபமாக மூழ்க ஆரம்பித்தார் ஹுமாயூன் பாதுஷா...!

அப்போது, ஆண்டவன் தன் உதவிக் கரத்தை - ஒரு ஏழைக் கூலியாள் மூலம் - நீட்டிய அதிசயம் நிகழ்ந்தது!

தினந்தோறும் கூலிவேலை செய்வோர் பெரும் வெள்ளத்திலும் அலட்சியமாக கங்கையைக் கடப்பது அந்தக் காலத்தில் சர்வசாதாரணம். காற்று நிரப்பப்பட்ட தோல் பைகளை (இன்று நீச்சல் குளங்களில் நாம் பயன்படுத்துவது போல!) உதவியாக அணைத்துக்கொண்டு நீந்தி அவர்கள் நதியைக் கடப்பது வழக்கம்! மன்னர் ஆபத்தில் இருப்பதைக் கவனித்த ஒரு கூலியாள் பாய்ந்து நீந்திச் சென்று மன்னரை இழுத்து அணைத்துக்கொண்டு மறுபுறம் கரையேற்றிக் காப்பாற்றினார்! அந்தப்புர பெண்கள் பலரும், ஹுமாயூனின் ஒரு இளம் மகளும் வெள்ளத்தில் மூழ்கி இறந்த பரிதாபமும் நிகழ்ந்தது.

இந்த ஏழையின் உதவியில் உணர்ச்சிவசப் பட்டுப் போன ஹுமாயூன், “ஆக்ராவுக்கு நல்லபடியாக நாம் போய்ச் சேர்ந்ததும் உனக்குப் பதிலுதவி செய்ய என்னை அனுமதிக்க வேண்டும்!” என்று கண்கலங்கக் கூறினார்.

தட்டுத்தடுமாறி சில வீரர்களுடன் ஆக்ரா அடைந்தார் மன்னர் ஹுமாயூன். அங்கே (தற்காலிகமாக) மனம் மாறிய சகோதரர்கள் காம்ரானும் அஸ்காரியும் ஹிண்டாலும் அண்ணனை தலைகுனிந்தவாறு அன்புடன் வரவேற்று மன்னிப்புக் கேட்டனர். தோட்டத்தில், தந்தையின் கல்லறை அருகே சகோதரர்கள் கூடித் தழுவிக்கொண்டு கண்ணீர் விட்டனர். (இதைத் தொடர்ந்து சில மாதங்கள் கழித்துதான் பாபர் உடல் காபூலுக்குக் கொண்டு செல்லப்பட்டது).

பிறகு, தன்னைக் காப்பாற்றிய ஏழையை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்திய ஹுமாயூன், தொடர்ந்து சொன்னதைக் கேட்ட எல்லோரும் (அந்த ஏழை உட்பட) திகைப்பிலும் வியப்பிலும் ஆழ்ந்தனர்.

ஹுமாயூன் கம்பீரமாக முழங்கினார். “என் உயிரைக் காப்பாற்றிய இந்த நண்பரை இரு நாட்கள் ஆக்ரா சிம்மாசனத்தில் மன்னராக அமர்த்தி அவருக்கு நான் பிரத்யே கமாகப் பணிவிடை செய்ய முடிவு எடுத்திருக் கிறேன்!”

யார் எடுத்துச் சொல்லியும் பாதுஷா கேட்கவில்லை. இரண்டு நாட்கள் அந்த ஏழைக் கூலியை ஆக்ராவில் மன்னராக அமர்த்தினார் ஹுமாயூன். அந்த ‘இரண்டு நாள் மன்னர்’ தன் ஆட்சியில் சிலரை வேலையில்கூட அமர்த்தியதோடு அல்லாமல் முடிந்தவரை பல ஏழைகளுக்கு பண உதவி செய்ததாகவும் கேள்வி! ‘நடந்தது தேவை யில்லாத கூத்து!’ என்று சலித்துக்கொள்கிறார் ஹுமாயூனின் சகோதரி குல்பதன் பேகம் அவர் எழுதிய ‘ஹுமாயூன் சரிதை’யில்!

சற்று உடல்நலம் சரியில்லாமல் படுக்கையில் இருந்த காம்ரான் திகைப்புடன் ‘மன்னரின் உயிரைக் காப்பாற்றியவருக்குப் பெரும் பரிசுகள் தரலாம். ஆனால், ஒரேயடியாக மகுடம் சூட்டும் அளவுக்குப் போக வேண்டுமா? படையுடன் ஷெர்கான் ஆக்ராவை நோக்கி வந்துகொண்டிருக்கும் இந்தச் சோதனையான வேளையில், இது போன்ற விளையாட்டுகளில் மன்னர் ஈடுபடுவது எனக்குப் புரிபடவில்லை!’ என்று ஓலையனுப்ப, ‘என் உயிரையே காப்பாற்றியவர் அவர். அது எப்பேர்ப்பட்ட உதவி என்பது உனக்குப் புரியாது!’ என்று மன்னரிடமிருந்து உணர்ச்சிகரமாகப் பதில் வந்தது!

இப்படிச் சொன்ன ஹுமாயூனின் உயிருக்கு உலை வைக்க ஆவேசத்துடன் ஆக்ராவை நெருங்கி வந்து கொண்டிருந்தது ஷெர்கானின் ஆப்கானியப் படை..!

ஷெர்ஷாவின் பாய்ச்சல்!

மொகலாய சக்ரவர்த்தி ஹுமாயூனை முறியடித்து மீண்டும் டெல்லியில் ஆப்கானியக் கொடியைப் பறக்கவிட்ட மாவீரர் ஷெர்ஷா பிறந்தது ராஜ பரம்பரையில் அல்ல! அவரது பாட்டனார் குதிரை வியாபாரி. கி.பி.1486-ல் டெல்லியருகே பிறந்த ஷெர்ஷாவின் நிஜப் பெயர் ஃபரீத். பிற்பாடு அவரது குடும்பம் பீஹாருக்குக் குடிபெயர்ந்தது. இளம் வயதில் சிற்றன்னையின் கொடுமைக்கு ஆளாகி, மனம் வெறுத்து பீஹாரின் வடக்கே உள்ள ஜான்பூருக்குத் தனியே கிளம்பிச் சென்ற ஃபரீத், அங்கே கவர்னராக இருந்த ஜமால்கான் என்பவரிடம் பணிக்குச் சேர்ந்தார். ஒழுக்கமுடனும் சுறுசுறுப்புடனும் உழைத்த ஃபரீத்துக்கு ஆசிரியர் வைத்து அரேபிய, பாரசீக மொழிகளைக் கற்றுத் தந்தார் ஜமால்கான். பிறகு உலக சரித்திரத்தைப் பற்றியும் விரிவாகப் படித்தார் ஃபரீத். அருமையான கவிதைகள் எழுதும் திறமையும் அவருக்கு இருந்தது. சில ஆண்டுகள் கழித்து ஃபரீத் நலனைக் கருதி அவருடைய தந்தையை வரவழைத்து அறிவுரை கூறி இருவரையும் இணைத்து வைத்தார் ஜமால்கான்.

அதைத் தொடர்ந்து ஒரு சிறு ஜமீன்தாராக இருந்த தந்தையின் நிலபுலன்களைத் தன் இளம் வயதில் திறமையோடு நிர்வகித்து விவசாயிகளின் பெரும் ஆதரவையும் அன்பையும் ஃபரீத் பெற்றதாகக் கூறப் படுகிறது.

கூடவே, ஆப்கானியர்களுக்கு உரிய சுறுசுறுப்புடன் எல்லா வகையான சண்டைப் பயிற்சிகளிலும் தேர்ந்த ஃபரீத், பீஹாரின் குறுநில மன்னரான பஹார்கானிடம் தளபதியாகச் சேர்ந்தார். அவருடன் காட்டுக்கு வேட்டையாடப் போனபோது தான், பாய்ந்து வந்த ஒரு புலியைத் தனி ஆளாகக் கொன்று ‘ஷெர்கான்’ என்ற பெயர் பெற்றார் அவர். டெல்லியில் பாபர் ஆட்சிக்கு வந்த பிறகு கட்சி மாறி மொகலாயப் படையில் ஒரு தளபதியாகச் சேர்ந்தார் ஷெர்கான்.

சாமானியராக வாழ்க்கையைத் துவக்கிய இந்த இளைஞரிடம் அப்போதே ஒரு ‘ஆப்கானிய சாம்ராஜ்யத்தை டெல்லியில் நிறுவ வேண்டும்’ என்ற லட்சியக் கனவு கிளர்ந்தெழுந்தது என்பதை வரலாற்றில் படிக்கும்போது வியப்பாக இருக்கிறது! நெருக்கமான சில நண்பர்களிடம் “இந்த மொகலாயர்கள் பெரும் கில்லாடிகள் ஒன்றும் அல்ல. பாதி நேரத்தை மது, மங்கை என்று கழிக்கிற இவர்களுடைய போர்த் தந்திரமும் ரொம்ப சுமாரானதே. பெரியதொரு படையை

வைத்துக்கொண்டு சின்னச் சின்ன இந்திய மன்னர்களிடம் ஆர்ப்பாட்டம் பண்ணுவது பெரிய வித்தையா? மன்னரும் சரி, இளவரசர்களும் சரி, மந்திரிகள் சொல்வதை அப்படியே நம்புகிறவர்களாக இருக்கிறார்கள். மந்திரிகளோ லட்சம் கொடுத்தால் எதை வேண்டுமானாலும் செய்வார்கள். மொகலாயர்களை விரைவில் நாம் இந்தியாவிலிருந்து துரத்தியடிக்க வேண்டும்!" என்று ஷெர்கான் கூறுவதுண்டு. இதைக் கேட்கும் மற்றவர்கள் சிரிப்பதும் உண்டு!

'புரானா கிலா' - வடக்கு வாசல்

ஒருமுறை பாபர் சக்ரவர்த்தி தன் படைத் தளபதிகளுக்கு அளித்த விருந்தில் கலந்து கொண்ட ஷெர்கான், தட்டில் இருந்த சிக்கனை ஸ்பூனால் நறுக்க முடியாமல் போனதால் பந்தியைத் தாண்டிச் சென்ற சமையற்காரரிடம் "கத்தி ஒன்று வெண்டும்" என்று கேட்டார். அலட்சியமாக தலை அசைத்துவிட்டுப் போன சமையற்காரர் கத்தி கொண்டுவருவதாகத் தெரியவில்லை. சில நிமிடங்கள் பொறுத்துப் பார்த்த ஷெர்கான், எழுந்து சென்று பின்னால் சாய்த்து வைக்கப்பட்டிருந்த தன் போர்வாளை எடுத்து வந்து அமர்ந்து சர்வசாதாரணமாக சிக்கனைத் துண்டு களாக நறுக்க ஆரம்பித்ததைத் தொலைவிலிருந்து ஒரு ஜோடிக் கண்கள் வியப்போடு பார்த்தன. அவை பாபரின் விழிகள்! அப்போதே பாபர் பக்கத்தில் இருந்த ஓர் அமைச்சரிடம் "இந்த ஆப்கானியத் தளபதியிடம் யாரும் வம்பு வைத்துக்கொள்ள முடியாது என்று தோன்றுகிறது. பெரிய ஆளாக வருவார் இந்த இளைஞர்!" என்றார்!



நிறைவேறாத கனவு...

ஆட்சிக்கு வந்தவுடன் டெல்லியில் 'தின்-பானா' (இறை நம்பிக்கை உள்ளவர்களின் புகலிடம்) என்ற பெயரில் பெரிய கோட்டை ஒன்றைக் கட்டத் துவங்கியிருந்தார் ஹுமாயூன். இஸ்லாத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் - அவர்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் சரி - வந்து தங்கித் தங்கள் ஆராய்ச்சிகளையும் தத்துவங்களையும் கவிதைகளையும் உருவாக்க நிம்மதியான சூழ்நிலையை ஏற்படுத்த விரும்பினார் மன்னர் ஹுமாயூன். திட்டமிடப்பட்ட அந்தப் பெருங்கோட்டை முற்றுப்பெறுவதற்குள் ஷெர்கானிடம் ஹுமாயூன் தோற்றுப் போனார். அவர் கனவு நிறைவேற வில்லை.

இந்தக் கோட்டைக்குள் உள்ள சில மாளிகைகளைக் கட்டியது ஷெர்ஷாதான் (டெல்லி அரியணையில் அமர்ந்தவுடன் சூட்டிக்கொண்ட பட்டப்பெயர்!). தற்போது சிதிலமடைந்து கிடக்கும் இது புரானா கிலா- 'பழைய கோட்டை' என்று அழைக்கப் படுகிறது. ஒரு காலத்தில் பாண்டவர்களின் 'இந்திரப் பிரஸ்தா' அரண்மனை இங்கு இருந்ததாகவும் கூறப் படுகிறது.

ஒன்று நிச்சயம்! கிறிஸ்து பிறப்பதற்கு 1000 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்த பொருட்கள், மண்பாண்டங்களைத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் இங்கே தோண்டியெடுத்திருக்கிறார்கள். ஆகவே, டெல்லியில் உள்ள இந்த இடத்தில் சுமார் 3000 ஆண்டுகளுக்கு முன்பே மனித நடமாட்டம் இருந்திருக்க வேண்டும்!

இப்படியாக, ஷெர்கானை எதேச்சையாகப் பார்த்தவுடனேயே அவரைக் கச்சிதமாக எடை போட்டு 'அடையாளம்' கண்டுகொண்ட பாபர், தன் கணிப்பை ஹுமாயூனிடம் சொல்லி எச்சரிக்காமல் போனது

துரதிர்ஷ்ட வசமானதே!

தன் லட்சியப் பாதையில் வெற்றிகரமாகப் பாதி தூரம் வந்துவிட்ட இந்த ஷெர்கானின் பெரும்படைதான் இப்போது ஆக்ராவை நோக்கித் துரிதகதியில் முன்னேறி வந்து ஹுமாயூனுக்கு ஜுரம் ஏற்படுத்திக்கொண்டு இருந்தது..!

இந்தச் சோதனையான நேரத்தில் ஹுமாயூனின் மனக்காய்ச்சலை மேலும் அதிகப்படுத்தியது சகோதரர் காம்ரானின் துரோகம். பன்னிரண்டாயிரம் குதிரை வீரர்கள் கொண்ட தன்னுடைய படையுடன் லாகூரிலிருந்து ஆக்ரா நோக்கி வந்த காம்ரான், ஹுமாயூனுடன் இணைந்து ஷெர்ஷாவுடன் போர்புரிவதற்குப் பதிலாகச் சகோதரரிடம் வாய்ச்சண்டை மட்டும் போட்டுவிட்டு லாகூருக்குப் படையுடன் திரும்பி அண்ணன் காலை வாரினார். சகோதரர்கள் இணையவில்லை என்று செய்தி பரவியவுடன் ஹுமாயூன் படையிலும் குழப்பம் ஊடுருவியது. சில தளபதிகளும் பல வீரர்களும் நழுவினார்கள்.

ஆக்ராவுக்கு 150 மைல் தொலைவில் ஷெர்கானின் படை வந்துவிட்டது என்ற செய்தி வந்து சேர்ந்தது.

நிர்வாகத்திலும் ராஜதந்திரத்திலும்தான் ஹுமாயூன் குறைந்த மார்க் எடுப்பாரே தவிர, போருக்குப் பயந்தவர் அல்ல பாபரின் மகன்.

மே 17, 1540... ஆக்ராவிலிருந்து ஹுமாயூன் தலைமையில் கிளம்பிச் சென்ற சற்று 'வீக்'கான மொகலாயப்படை, கங்கை நதி அருகே கன்னோசி நகரில் ஷெர்கானின் ஆப்கானியப்படையுடன் நேரடியாக மோதியது. மொகலாய சாம்ராஜ்யத்துக்குச் சாவுமணி அடித்த போர் இது...!

இந்தக் கன்னோசி யுத்தத்தில் ஷெர்கானால் திட்டவட்டமாக முறியடிக்கப்பட்ட ஹுமாயூன் மறுபடியும் பழையபடி கங்கை நதியைக் கடந்து தப்பிக்க வேண்டி வந்தது. இந்த முறை மன்னரை முதுகில் சுமந்து அக்கரையில் விட்டது கூலியாள் அல்ல... ஹுமாயூனின் போர் யானை!

யாராக இருந்தாலும் தோல்வி என்பது சோகமான, மோசமான விஷயம்தானே! ஹுமாயூன் தோற்றுத் திரும்புகிறார் என்ற செய்தி பரவிய உடனே ஆக்ரா திரும்பும் வழியில் இருந்த கிராமங்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டன. ஜன்னல் கதவுகள் சாத்தப்பட்டன. சகோதரர்கள் அஸ்காரி, ஹிண்டாலுடன் தட்டுத்தடுமாறி ஆக்ரா திரும்பிய ஹுமாயூனை மேலும் அலைக் கழித்தது 'ஷெர்கான் படை தொடர்ந்து வந்துகொண்டு இருக்கிறது' என்ற செய்தி. உடனே மூட்டை முடிச்சோடு லாகூருக்குத் தப்பிச் சென்ற ஹுமாயூன் 'தோல்வியை ஒப்புக்கொள்கிறேன். லாகூர் வரை உங்கள் எல்லையை வைத்துக் கொள்ளுங்கள்!' என்று ஷெர்கானுக்குக் கடிதம் அனுப்பினார். 'காபூலிலிருந்து வந்தவர்கள் நீங்கள். காபூலுக்கே திரும்பிச் செல்ல வேண்டும்!' என்று ஷெர்கானிடமிருந்து பதில் வந்தது!

இதற்குள் காம்ரான், ஷெர்கானிடம் பேரம் பேச முனைய "ரொம்ப நன்றி! அண்ணனையே காட்டிக் கொடுக்கும் துரோகியின் உதவி எனக்குத் தேவையில்லை" என்று சொல்லியனுப்பினார் ஷெர்கான்.

இந்த நிலையிலும் காம்ரானைத் தண்டிக்கச் சொல்லிச் சில அமைச்சர்கள் ஹுமாயூனிடம் எரிச்சலுடன் எடுத்துச் சொன்னார்கள். அப்போதும் "தம்பிகளை அன்புடன் நடத்தச்சொல்லி என் தந்தை

ஆணையிட்டு இருக்கிறார். அதை நான் மீற முடியாது!” என்றார் ஹுமாயூன்! இருப்பினும், மேலும் லாகூரில் தங்குவது ஆபத்து என்பதைப் புரிந்துகொண்ட மன்னர், சிந்து மாகாணம் நோக்கித் தன் துவண்ட படையுடன் சென்றார். ஷெர்கான் முன்னேற்றத்தைக் கண்டு பயந்துபோன காம்ரான், காபூலுக்கு ஓடினார். அஸ்காரி காம்ரானுடன் சேர்ந்துகொள்ள (இருவரும் கூடப்பிறந்தவர்கள்), ஹிண்டால் ஹுமாயூனோடு தங்கினார். (ஹுமாயூனின் இன்னொரு சிற்றன்னைக்குப் பிறந்தவர் ஹிண்டால் என்றாலும், அவரைப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்தவர் ஹுமாயூனின் தாய் தான். ஆகவே, இந்த இரு சகோதரர்களுக்கு இடையே சற்றுப் பாசப்பிணைப்பு இருந்தது!)

ஆப்கானியப் படையைச் சமாளிக்க, சிந்து மாகாணத்தை ஆண்டுகொண்டிருந்த ஹுசேனிடம் உதவி கேட்டார் ஹுமாயூன். ஷெர்கான் பற்றி நிறையவே தெரிந்து வைத்திருந்த ஹுசேன், ஹுமாயூனுக்கு எந்த உதவியும் அளிக்கத் தயாராக இல்லை. சுமார் பதினெட்டு மாதங்கள் சிந்து மாகாணத்தில் தங்க இடமில்லாமல் அங்குமிங்குமாகத் தவித்தது ஹுமாயூனின் படை. காடுகளிலும் பாலைவனத்திலும் தாகத்துடன் அலைந்த வீரர்கள் தவித்துப் போனார்கள். இந்தப் பயணத்தில் குடிக்க ஒரு சொட்டு நீர்கூட இல்லாமல் தொடர்ந்து மூன்று நாட்கள் ஹுமாயூன் தவித்ததாக வரலாறு கூறுகிறது.

கடைசியில் ஒரு கிணற்றைப் பார்த்தவுடன் மன்னர் என்றுகூடப் பார்க்காமல் ஹுமாயூனைத் தள்ளிக்கொண்டு எல்லோரும் ஆவேசமாக நீர் குடிக்க ஓடி - சில வீரர்கள் ஆழமான அந்தக் கிணற்றில் விழுந்து இறந்ததும் நடந்தது!

இந்தப் பரிதாபமான சூழ்நிலையில்தான் ஒரு பாலைவனச்சோலையாக அந்த மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி நடந்தது - அது தான் ஹுமாயூனின் திருமணம்!

ஹுமாயூனின் தம்பி ஹிண்டாலுக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்த ஆசிரியரின் மகள், பதினாலு வயது நிரம்பிய ஹமீதா. சிந்து மாகாணத்தில் ஒரு கிராமத்துக்குத் தன் படையுடன் ஒருவழியாக வந்து சேர்ந்த ஹுமாயூன், அவளை ஒரு விருந்தில் பார்த்தார். பார்த்தவுடனேயே மயங்கிப் போனார். ஆனால், தான் காதல் வயப்பட்ட பெண்ணை அடைவதற்கும் ஹுமாயூன் போராட வேண்டியிருந்தது! ஹமீதாவுக்கு உண்மையில் ஈடுபாடு இருந்தது ஹிண்டாலிடம்தான் என்று சிலர் கூறு கின்றனர். ஹமீதாவைக் கவரக்கூடிய எதுவும் ஹுமாயூனிடம் அப்போது இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஹமீதாவைவிடப் பத்தொன்பது வயது மூத்தவர் ஹுமாயூன். தவிர, போரில் தோல்விகள்.. போதைப் பொருள் பழக்கம்... எந்தப் பெண் இந்த ‘ஹீரோ’வை விரும்புவாள்?

ஆனால், ஹுமாயூனோ, ஹமீதாவுக்கு ஏங்கித் தவிக்க... பெரியவர்கள் எல்லோரும் சேர்ந்து ‘எப்படியும் யாரோ ஒரு ஆண் மகனுக்கு வாழ்க்கைப்படப் போகிறாய்... அது இவராகத்தான் இருந்துவிட்டுப் போகட்டுமே... என்னதான் இருந்தாலும் ராஜ பரம்பரை!” என்று சொல்லி தொடர்ந்து ஒரு மாதம் வற்புறுத்தி ஹமீதாவை இணங்க வைத்தார்கள். முகூர்த்த நாள் குறிக்கப்பட்டது. வழக்கம்போல் கிரகநிலை, நட்சத்திரம் எல்லாம் நுணுக்கமாக பார்த்துத் திருமணத்துக்கு ‘ஆகஸ்ட் 21, 1541’ என்று ஏக மகிழ்ச்சியுடன் தேதி குறித்தவர் ஹுமாயூன்!

இந்தத் திருமணம் நடந்த கையோடு கோபத்துடன் ஹிண்டால் தன் பிரத்தியேகப் படை வீரர்களுடன் ஹுமாயூனைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டது குறிப்பிடத்தக்கது!

சுமார் ஒன்பது மாதங்கள், மற்ற பிரச்னைகளை மறந்து இல்வாழ்வில் இன்பகரமாக ஈடுபட்ட ஹுமாயூன், மே 1542-ல் ராஜபுத்திர மன்னர் மல்தேவ் அழைப்பை ஏற்று மார்வாருக்கு (தற்போது ஜோத்பூர்) தன் குடும்பத்துடனும் படை வீரர்களுடனும் கிளம்பினார். ‘மல்தேவ் ஷெர்கானை அடக்க விரும்புகிறார்’ என்ற தகவல் அவருக்கு நம்பிக்கை தந்தது. மார்வாரை ஹுமாயூன் பாதுஷா நெருங்கும் போது, அந்த நம்பிக்கையும் பொய்த்துப் போனது. ஏற்கெனவே ஷெர்கான் பேரம் பேசி எழுதி அனுப்பிய ஒரு கடிதம் கண்டு மல்தேவ் மனம் மாறிவிட்டார் என்றும், விருந்தாளியாக வரும் ஹுமாயூனைக் கைது செய்யத் திட்டம் போடப்பட்டிருக்கிறது என்றும் தகவல் வர... ராஜஸ்தானில் கொளுத்தும் வெயிலில் இருநூறு மைல் பாலைவனம் வழியாக ஹுமாயூன் உடனடியாகத் திரும்ப வேண்டி வந்தது. ராஜபுத்திரக் கிராமங்கள் வழியாகச் சென்ற ஹுமாயூனின் படைவீரர்கள் பசி தாளாமல், உணவுக்காகச் சில பசுக்களைக் கொன்றனர். கோபமடைந்த கிராமத்து இந்துக்கள், பாலைவனத்தில் வழியில் இருந்த கிணறுகளில் உப்பு மூட்டைகளைப் போட்டுக் கரைத்து, மொகலாயப் படையைத் தாகத்தில் தவிக்க வைத்துப் பழி வாங்கி னார்கள். (‘எந்தச் சூழ்நிலையிலும் பசுக் களைக் கொல்லாதே!’-ஹுமாயூனுக்கு பாபர் அறிவுரை!)

போகிறவழியில் மனைவி ஹமீதாவின் குதிரை இறந்து விழ, அவருக்கு யாரும் குதிரை தந்து உதவ முன்வராமல் போக... கலங்கிப் போன ஹுமாயூன் தன் குதிரையை மனைவிக்குத் தந்து, தன் சமையற்காரர் அமர்ந்திருந்த ஒல்லிப்பிச்சானான ஒட்டகத்தைக் ‘கடன்’ வாங்கி, அதில் தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

‘எம்பி எம்பி நடைபோட்ட ஒட்டகத்தின் மீது கோணல்மாணலாக மன்னர் அமர்ந்து வந்த உருக்கமான காட்சி, அவருடைய தோல்விகளுக்கெல்லாம் ஒரு முத்தாய்ப்பாக இருந்தது!’ என்று வரலாற்று ஆசிரியர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர். இந்த நிலையிலும் எட்டு மாதக் கர்ப்பிணியான ராணி ஹமீதாவுக்கு மசக்கை வந்தது. “மாதுளம்பழம் சாப்பிட வேண்டும் போலிருக்கிறது” என்றார் கன்னம் சிவக்கக் கணவரிடம். “பாலைவனத்தில் மாதுளம் பழமா?” என்று பாதுஷா திகைத்தபோது, தொலைவிலிருந்து ஒரு ஒட்டகத்தில் வியாபாரி ஒருவர் வந்து சேர... அவரிடம் ஒரு கூடையில் மாதுளம் பழங்கள்! அவரிடமிருந்து மாதுளம்பழங்களை வாங்கிக்கொண்டு, ஹமீதா அருகில் நெருங்கிய ஹுமாயூன் புன்னகையுடன், “ஆச்சரியமாக இருக்கிறது! உன் வயிற்றில் இருப்பது யார்? பாலைவனத்தில்கூட நீ கேட்கிற பொருள் கிடைக்கிறதே!” என்றார்.

நியாயமான கேள்வி! சிந்து மாகாண எல்லைக்குள், பாலைவனத்தின் நடுவே அமைந்திருந்த அமர்கோட் என்னும் சிற்றூருக்கு ஹுமாயூன் பரிவாரம் வந்து சேர்ந்தவுடன், ஒருவழியாக ராணா பிரதாப் என்னும் குறுநில மன்னர் மனமிரங்கி அன்புடன் வரவேற்க, அக்டோபர் 15, கி.பி.1542-ல் பதினைந்து வயதான ஹமீதாவுக்கு ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. கூடியிருந்தோர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய... தன் கவலைகளையெல்லாம் மறந்து ஆனந்தக்கண்ணீர் வடித்த ஹுமாயூன், ‘அக்பர்’ என்று குழந்தைக்குப் பெயரிட்டார்!

மீண்டும் அரியணை!

வெற்றிக்கொடி நாட்டிய ஷெர்ஷா, ‘காபூலிலிருந்து வந்த நீங்கள் அங்கேயே திரும்பிச் சென்றாக வேண்டும்!’ என்று ஹுமாயூனுக்குத் திட்டவட்டமாகக் கட்டளை பிறப்பித்துவிட்டாரே தவிர, துர் திர்ஷ்ட ஹுமாயூனுக்கு அதுவும் கைகூடி வர வில்லை! சகோதரர்கள் ரூபத்தில் சோதனைகள் மேலும் அவரைத் தொடர்ந்தன...

இந்தியா கைநழுவிப்போன பிறகாவது சகோதரர்களின் பகை விலகும் என்று எதிர்ப்பார்த்த ஹுமாயூன், நம்பிக்கையுடன் சிந்து நதியைக் கடந்து காண்டஹார் நகரம் நோக்கி முன்னேறினார். பிறகு சொந்த மண்ணான, தந்தை பாபர் முன்பு கோலோச்சிய காபூலுக்குச் செல்லலாம் என்பது திட்டம்..!

ஆனால்... வந்த செய்தி அவர் ஆர்வத்தை யெல்லாம் குலைத்தது. ‘காபூலை நிர்வகித்து வந்த காம்ரான், ஹுமாயூனைச் சிறைபிடிக்க அஸ்காரி தலைமையில் ஒரு படையை அனுப்பிக் கொண்டிருக்கிறார்’ என்பதுதான் அந்தச் செய்தி!

சகோதரர்களுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகூட நடத்த முடியாத ஹுமாயூன் வேறு வழியில்லாமல், மனைவி ஹமீதாவையும் மிகவும் விசுவாசமான நாற்பது வீரர்களையும் மட்டும் அழைத்துக்கொண்டு பாரசீகம் நோக்கிக் கிளம்பினார். அக்பர் பிறந்து பதினாறு மாதங்கள் ஆன சமயம் அது. விறைக்கும் டிசம்பர் மாதக் குளிரில் பனிமலைகளைக் குழந்தையால் கடக்க முடியாது என்று முடிவுகட்டிய ஹுமாயூன், பாரசீகம் கிளம்புவதற்குமுன் அக்பரை செவிலித்தாயார்களிடம் ஒப்படைத்தார்.

ஹுமாயூன் தப்பிச்சென்ற சில மணி நேரத்தில் அஸ்காரியின் படை அவர் தங்கியிருந்த இடத்தைச் சூழ்ந்துகொண்டது. உள்ளே நுழைந்த அஸ்காரி, அக்பரைக் கொல்லாமல் விட்டதோடு, குழந்தையை எடுத்துக் கொஞ்சிவிட்டுத் தன் மனைவியிடம் ஒப்படைத்துப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளச் சொன்னது சற்று வியப்பைத் தரும் விஷயம்தான்!

இதைத் தொடர்ந்து கரடுமுரடான பனிமலைகளின் ஊடே நிகழ்ந்த ஹுமாயூனின் பாரசீகப் பயணம் பரிதாப மானது. உணவுக்காகச் சில குதிரைகளைக் கொன்று சமையல் பாத்திரம் கூட இல்லாத நிலையில் இறைச்சியைச் சமைக்க ஹெல்மெட்டுகள் பயன்படுத்தப் பட்டன என்றால் பார்த்துக் கொள்ளலாம்!

ஜனவரி 1544-ல் பாரசீக எல்லைக்குள் நுழைந்த ஹுமாயூன் கண்முன் விரிந்த காட்சி, அவருக்கு உற்சாகத்தையும் நிம்மதிப் பெருமூச்சையும் ஏற்படுத்தியது. ஹுமாயூனை வரவேற்க பாரசீக மன்னர் ஷா தாமாஸ்ப் கோலாகலமாக ஏற்பாடுகள் செய்திருந்தார். உள்ளூர் கவர்னர் ஒரு பரிவாரத்துடன், குளிர்பானங்கள், பழங்கள், உணவு வகைகளுடன் ஹுமாயூனை அன்புடன் வரவேற்றார். பதவியிழந்த டெல்லி பாதுஷா தங்கி ஓய்வெடுக்க ஒரு மாளிகை தயாராக இருந்தது. போகும் வழியில் தெருக்கள்கூடச் சுத்தப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன.

பாரசீகத்தில் தங்கியிருந்தபோதுதான் அங்கே பெரிதும் மதிக்கப்பட்ட முதிய ஓவியர் பிஹாத் என்பவரின் பிரதான சீடர்களான அப்துஸ் சமாத், மீர் சாயிது அலி என்ற இளம் ஓவியர்களைச் சந்தித்தார் ஹுமாயூன். பிற்பாடு மன்னரின் அழைப்பை ஏற்று டெல்லி சென்று தங்கிய இந்த ஓவியர்கள்தான் ஒரு புதிய ஓவியக் கலையை இந்தியாவுக்கு அறிமுகம் செய்வித்தார்கள். இளவரசர் அக்பரும்

இவர்களிடம் ஓவியம் கற்றுக்கொண்டது வேறு வகை!

ஊரெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, நிம்மதியாக ஓய்வெடுத்துக் கொண்டு ஐந்தாறு மாதங்கள் கழித்துப் பாரசீக மன்னர் ஷாவைச் சந்தித்தார் ஹுமாயூன். பிரமாதமான விருந்தும் அதைத் தொடர்ந்து பல பரிசுகளும் தந்து ஹுமாயூனைக் கௌரவமாக நடத்தினார் ஷா. டெல்லி அரியணையில் அமர்ந்து கோலாகலமாக ஆட்சிபுரிந்த ஹுமாயூனுக்கு, தன்னால் இந்த அளவுக்குப் பதில் மரியாதை செய்ய முடியவில்லையே என்ற வருத்தம் எழ, உடனே கையோடு சுருக்குப்பையில் கொண்டு வந்திருந்த கோஹினூர் வைரத்தை எடுத்துப் பாரசீக மன்னருக்குப் பரிசாக அளித்து தன் ராஜவம்சத்தின் பெருமையைக் காப்பாற்றிக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது!

ஆனால், கோஹினூரையும் மீறிக் கிளம்பி நின்றது ஒரு பெரும் பிரச்னை! ஷையா பிரிவைச் சேர்ந்த பாரசீக மன்னர் பிரதி யுபகாரமாக ஹுமாயூனிடம் எதிர்பார்த்தது வேறு! சன்னி பிரிவைச் சேர்ந்த ஹுமாயூன், ஷையா பிரிவுக்கு மாறவேண்டும் என்பது தான் அவர் வேண்டுகோள். முன்பு பாரசீகத்தில் பாபருக்கு ஏற்பட்ட அதே பிரச்னை இப்போது மகன் முன்பு! முதுகுப்புறம் சோதனைகள் சூழ, இக்கட்டான நிலைமையில் இருந்த ஹுமாயூன், மிகுந்த தர்மசங்கடத்துடன் ஷாவின் (மிரட்டல் கலந்த) வேண்டுகோளுக்கு இணங்க வேண்டியதாயிற்று!

ஷாவும் ஹுமாயூனும் கைகோத்துக் கொண்ட செய்தி கேட்டு திகைத்துப்போன காம்ரான், ‘ஹுமாயூனை ஒப்படைத்தால் காண்டஹார் நகரம் உங்களுக்கு’ என்று கடிதம் ஒன்றைப் பாரசீக மன்னருக்கு அனுப்பினார். கொஞ்ச காலமாகவே காண்டஹாரைப் பாரசீகத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த ஷா மனதில் சற்றுச் சலனம் ஏற்பட்டாலும், ஹுமாயூனின் மென்மையான குணத்தால் கவரப்பட்ட ஷாவின் தங்கை, காம்ரான் வலையில் அண்ணன் விழாமல் தடுத்தார் என்று தகவல்!

“தேர்ந்த பன்னிரண்டாயிரம் குதிரை வீரர்கள் கொண்ட பெரும் படையைத் தங்களுடன் அனுப்புகிறேன். பதிலுக்கு, காண்டஹாரைக் கைப்பற்றி என்னிடம் தரவேண்டும்!” - இது ஷாவின் வேண்டுகோள். காண்டஹாரை ஹுமாயூன் வெற்றி கொண்டவுடன் அங்கே அரியணையில் பாரசீக மன்னரின் பிரதிநிதியாக அமர, தன் குழந்தையையும் (பெயர் - முராத்) அனுப்பி வைத்தார் ஷா!

பாரசீகப் படையுடன் ஹுமாயூன் வருவதைக் கேள்விப்பட்ட அஸ்காரி தப்பி (செப்டம்பர் 3, கி.பி.1545-ல்) ஓட்டமெடுத்தார்... அவருடைய படை ஹுமாயூன் பக்கம் சேர்ந்துகொள்ள... காண்டஹார் சுலபமாகவே வீழ்ந்தது. தான் வாக்களித்தபடி ஷாவின் குழந்தையை அரியணையில் அமர்த்தி முடி சூட்டினார் ஹுமாயூன்.

திடீரென்று ஒரு திருப்பம் நிகழ்ந்தது..! சிம்மாசனத்தில் அமர்ந்த சில நாட்களில் குழந்தை முராத் கடுமையான காய்ச்சலில் வீழ்ந்து இறக்க, கண நேரம் திகைத்தாலும், சுதாரித்துக்கொண்ட ஹுமாயூன், வியப்பேற் படுத்தும் வகையில் வேகமாகச் சிந்தித்தார். ஷையா உடைகளைக் களைந்து பழைய உடைகளை அணிந்துகொண்டு மொகலாய வீரர்களின் உதவியுடன், காண்டஹார் நகரில் சுதந்திர மன்னராக அமர்ந்தார். ஷாவின் விசுவாசமான தளபதிகள் கொல்லப் பட்டனர்.

‘இது ஷாவுக்கு ஹுமாயூன் இழைத்த துரோகம்தான்’ என்கின்றனர்

வரலாற்று ஆசிரியர்கள் சிலர். ஆனால், ‘இளவரசர் முராத் இறந்த பிறகு ஏற்பட்ட வெற்றிடத்தைத் தான் ஹுமாயூன் நிரப்பினார். எந்த மன்னரும் செய்யக்கூடியதுதான் இது. தவிர, ஷையா பிரிவுக்கு மாறச் சொல்லி ஹுமாயூனை பாரசீக மன்னர் கட்டாயப்படுத்தியதும் தவறல்லவா!’ என்கின்றனர் சிலர்.

நல்ல காலமாக ஓபியம் இது அது என்று உல்லாசத்தில் இறங்காமல் உடனே அங்கிருந்து பெரும் படையுடன் காபூலுக்குக் கிளம்பினார் ஹுமாயூன். அங்கே காம்ரானின் எதேச்சாதிகாரத்தில் வெறுப்புற்றிருந்த படைவீரர்கள் ஆயிரக்கணக்கில் கட்சி மாறி இந்தப் பக்கம் வர, ஹுமாயூனுக்கு யுத்தம் நிகழ்த்த வேண்டிய அவசியமே ஏற்படாமல் போனது. சில வீரர்களுடன் ஊரைவிட்டு தப்பியோடினார் காம்ரான்.

நவம்பர் 1545-ல் குழந்தை அக்பருடன் பெற்றோர் இணைந்ததைக் கூடியிருந்தோர் ஒரு விழாவாகவே கொண்டாடினார்கள்.

இதற்குப் பிறகும் விடாமல் காம்ரான், காபூல் மீது இருமுறை கொரில்லாத் தாக்குதல் நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது! காபூல் சிறையிலிருந்து விடுதலையான ஹிண்டால், ஹுமாயூன் சார்பில் ஒரு படையுடன் காம்ரானோடு மோத, நடந்த யுத்தத்தில் ஹிண்டால் உயிரிழந்த சோகமும் நிகழ்ந்தது.

அண்ணனை ஒழித்துக்கட்ட முடியாமல் வெறுப்பிலும் விரக்தியிலும் ஆழ்ந்த காம்ரான் டெல்லிக்குச் சென்றார். டெல்லியில் ஷெர்ஷாவின் மகன் இஸ்லாம் ஷா ஆண்ட சமயம் அது (ஷெர்ஷா மரணம் பற்றிப் பிற்பாடு!).

தன்னிடம் உதவி கேட்ட காம்ரானிடம் பிடி கொடுக்காமல் கவிதைகள் பற்றியே பொதுவாகப் பேசிக்கொண்டிருந்த டெல்லி மன்னர் இஸ்லாம் ஷா, காம்ரான் பாடிக் காட்டிய ஒரு கவிதைக்குப் பரிசாக மூவாயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயங்களைத் தந்தார். இப்படித் தன்னை ஏதோ ஒரு சாமானியக் கவிஞரைப் போல டெல்லி மன்னர் நடத்தியது கண்டு எரிச்சலடைந்த காம்ரான், பெண் வேடம் பூண்டு பஞ்சாப் பிரதேசத்துக்குத் தப்பிக்க, பஞ்சாப் குறுநில மன்னர் அதாம் காக்கார் என்பவர் அவரை வளைத்துப் பிடித்து ஹுமாயூனிடம் கைதியாகத் திருப்பியனுப்பினார்.

தன் முன்னால் விலங்குகளால் பிணைக்கப் பட்டு வந்து நின்ற காம்ரானை ஒன்றும் பேசாமல் ஹுமாயூன் ஏறிட்டுப் பார்த்தார். தம்பியிடமிருந்து பெரியதொரு விம்மல் வெளிப்பட்டது. ஓடிவந்து அண்ணன் காலடியில் விழுந்த காம்ரான், தன்னை மன்னிக்கச் சொல்லி வெளிப்படையாகவே அழ ஆரம்பிக்க... கையமர்த்திய ஹுமாயூன், தம்பியை விலங்குகளிலிருந்து விடுவித்துத் தன்னுடன் அமர்த்திக்கொண்டார். அன்று இரவு இருவரும் ஒன்றாக அமர்ந்து விருந்து உண்டனர் என்றாலும் ஹுமாயூன் வெகுவாக உரையாடாததால் காம்ரான் முகத்தில் பய ரேகைகள் அவ்வப்போது தலைதூக்கின...

ஹுமாயூனின் அமைச்சர்களுக்கோ வேறு பயம்! இரக்கம் காட்டுவதில் ஒரு உலக சாதனையே (அப்போது கின்னஸ் இல்லாமல் போனது துரதிர்ஷ்டமே!) படைத்துக் கொண்டிருந்த ஹுமாயூன் இம்முறையும் உணர்ச்சிவசப்பட்டு இளகி விடுவாரோ என்று அவர்கள் அச்சம் கொண்டனர். இரவில் ஹுமாயூனிடம் வந்த சில விசுவாசிகள் “தங்கள் தம்பியிடம் பாதுஷா இன்னமும் கருணை காட்டிக்கொண்டு

இருப்பது நியாயமா? போதும், அவரால் நமக்கு ஏற்பட்ட சோதனைகள். தங்கள் வாழ்க்கையில் விஷ முள்ளாக வந்து வாய்த்த அந்தத் துரோகியைத் தீர்த்துக்கட்ட ஆணையிடுங்கள் அரசே! இவரால் ஏற்பட்ட பிரச்னைகள் தங்களை மட்டுமா பாதித்தது? எங்கள் எல்லோருக்குமே அல்லவா பெரும் தலைவலியாகப் போய் விட்டது! தங்கள் தனிப்பட்ட பாசம், இரக்கம் எல்லாம் ஒரு நாட்டையே எத்தனை காலம் இப்படிப் பாதித்துக் கொண்டிருப்பது?" என்று துணிச்சலோடு எடுத்துச்சொல்ல, ஹுமாயூனின் புருவங்கள் கோபத்தால் சற்று உயர்ந்தாலும் சிந்தனைவயப்பட்டார் மன்னர்.

பிறகு, ஒரு பெருமூச்சுடன் "சரி... ஆனால், காம்ரானைக் கொல்ல வேண்டாம்... என் தந்தைக்கு வாக்குறுதி தந்துவிட்டேன் நான். மாறாக, அவன் பார்வையைக் கூடியமட்டும் அவனைத் துன்புறுத்தாமல் பறித்து விடுங்கள்!" என்று சொல்லிவிட்டுத் திரும்பிய ஹுமாயூனின் கண்கள் லேசாகக் கலங்கி யிருந்தன.

ஆகஸ்ட் 17, 1553 - விடியற்காலை ஹுமாயூனுக்கு விசுவாசமான சில படைத் தளபதிகள் கிளம்பிச் சென்று, உறங்கிக் கொண்டிருந்த காம்ரானை எழுப்பினர். திமிறிய காம்ரான் விலங்குகளால் பிணைக்கப் பட்டு இழுத்துச் செல்லப்பட்டார். அலறல் வெளியே கேட்கக்கூடாது என்பதற்காகச் சிறைச்சாலையின் உட்பகுதியில் ஒரு அறைக்கு அவரைக் கொண்டுசென்ற வீரர்கள் காம்ரானைப் படுக்க வைத்து அமுத்திப் பிடித்துக்கொள்ள, பழுக்கக் காய்ச்சிய கூர்வாளுடன் அவரை நெருங்கினார் ஒரு தளபதி. பல்முறை இரு கண்களிலும் கத்தி பாய, அலறிக் கொண்டிருந்த காம்ரானின் விழிகள் வெளியே வந்துவிட்டன. மயங்கி விழுந்த அவர் கண்களில் ஒரு பிடி உப்பைக் கொட்டி அதன் மீது எலுமிச்சைச்சாறு ஊற்றப்பட்டது...

மறுநாள் தர்பார் கூடியதும் முதல் வேலையாக காம்ரான் பற்றி ஹுமாயூன் விசாரிக்க... "ரொம்ப வலியில்லாமல் கச்சிதமாக கைதியின் பார்வையைப் பறித்தாகிவிட்டது மன்னா!" என்று தளபதிகள் சொல்ல, "அப்படியா..?" என்று ஹுமாயூன் லேசான சந்தேகத்துடன் கேட்க, காரியத்தை முடித்தவர்கள் தங்கள் முகங்களைச் சலனமில்லாமல் வைத்துக் கொண்டார்கள்.

(ஓராண்டு கழித்து பார்வையிழந்த தன் தம்பிக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து தந்து அவரை ஹஜ் யாத்திரை மேற்கொள்ள வைத்தார் மன்னர். நான்கு முறை மெக்கா பயணித்த காம்ரான் - அக்டோபர் 5, 1557-ல் அரேபியாவில் மரணமடைந்தார் (அதற்கு முன்பே ஹுமாயூன் இறந்தது இன்னொரு பாராவில்!). சிறைப்படுத்தப்பட்டிருந்த அஸ்காரியையும் மெக்காவுக்கு புனித யாத்திரை அனுப்பினார் ஹுமாயூன். காம்ரான் இறந்த அடுத்த ஆண்டு அஸ்காரி, டமாஸ்கஸ் நகரம் அருகே நோய்வாய்ப்பட்டு இறந்தார்.)

'பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் ஹுமாயூன் கோணத்திலேயே காம்ரானைப் பார்த்து, அவரை ஒரு பெரும் வில்லனாகச் சித்தரித்துவிட்டார்கள் என்பதையும் சொல்ல வேண்டும். 'காம்ரான் பக்கம்' என்றும் ஒன்று உண்டு என்பது பற்றி யாருமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை! பாபரைப் போல காம்ரானும் சுயசரிதை எழுதி வைத்துவிட்டுப் போயிருந்தால் அவரது மன ஓட்டங்கள் பற்றி நாம் சற்றேனும் புரிந்துகொண்டிருக்க முடியும். அவர் தன்னைப் பற்றி எந்தக் குறிப்பையும் எழுதி வைக்காமல் போனது சரித்திர ரீதியில் துரதிர்ஷ்டவசமானதே. ஆனால் ஒன்று! ஹுமாயூன்

திறமையைப் பற்றி காம்ரானுக்கு நல்ல மதிப்பீடு இருந்ததில்லை என்பது தெளிவு. தானே இந்தியாவை ஆளத் தகுதியானவர் என்று அவர் மனதார நினைத்திருக்கக்கூடும். அதில் என்ன தவறு நாம் காண முடியும்?



தடுக்கியது இங்குதான்...



ஷெர்மண்டல்

காம்ரான் விரும்பியிருந்தால் குழந்தை அக்பரைக் கொன்றிருக்கலாம்! ஆனால், அப்படி அவர் செய்யாதது குறிப்பிடத்தக்கது! தவிர, அவர் எடைபோட்டதற்கு ஏற்ப ஹுமாயூனும் தன் வாழ்க்கை பூராவும் இடம் மாறிப் பின்வாங்கித் தட்டுத்தடுமாறித் தவித்தார் என்பதை மறுக்க முடியுமா?' என்றும் வரலாற்று ஆசிரியர்கள் சிலர் காம்ரான் சார்பாக வாதாடுகிறார்கள்!

கி.பி.1554-ல் டெல்லியில் இஸ்லாம் ஷா இறக்க, மூன்று பேர் "நான்தான் வாரிசு!" என்று மோதலில் இறங்க, ஹுமாயூன் பக்கம் திரும்பிக் காலம் புன்னகைத்தது!

பைராம்கான் என்ற திறமைவாய்ந்த பிரதம தளபதியின் (பிற்பாடு அக்பரின் கார்டியனாக இருந்தவர்!) தலைமையில் இந்தியா நோக்கிப் புறப்பட்ட ஹுமாயூன் படை, பஞ்சாப் பிரதேசத்தைக் கடந்து ஜீலம் நதிக்கரையில் ரோடாஸ் என்ற இடத்தில் ஷெர்ஷா கட்டியிருந்த கோட்டையை முற்றுகையிட்டது. இஸ்லாம் ஷாவின் வாரிசு என்று பிரகடனப்படுத்திக்கொண்டு இருந்தவர்களில் ஒருவரான சிக்கந்தர் ஷா, மொகலாயப்படையுடன் மோதித் தோற்றார். தொடர்ந்து, எந்தவித எதிர்ப்பும் இல்லாமல், வெற்றிக்கொடியுடன் பயணித்த ஹுமாயூன்

படை மீண்டும் டெல்லி அடைந்தது.

வீதிகளிலெல்லாம் விளக்குகள் ஏற்றி வைத்து, வாணவேடிக்கைகளுடன் டெல்லி மக்கள் ஹுமாயூனுக்குப் பெரும் வரவேற்பு அளிக்க, ஜூலை 23, 1555-ல் ஒருவழியாக டெல்லி அரியணையில் ஏறி அமர்ந்தார் ஹுமாயூன்!

சுமார் ஆறு மாதங்கள் மட்டுமே ஹுமாயூனின் ஆட்சி நீடித்தது...

டெல்லியில் ஹுமாயூன் முன்பு அரை குறையாகக் கட்டியிருந்த 'புரானா கிலா' கோட்டைக்குள் 'ஷெர் மண்டல்' என்ற வசந்த மண்டபம் ஒன்றைக் கட்டியிருந்தார் ஷெர்ஷா. அதை ஒரு வாசகசாலையாக மாற்றியிருந்த ஹுமாயூன், தினமும் அங்கே உச்சி மண்டபத்தில் அமர்ந்து நெருங்கிய நண்பர்களோடு உரையாடுவதுண்டு.

ஜோதிடத்திலும் வானியலிலும் ஈடுபாடு இருந்ததால் அங்கிருந்து வானத்து நட்சத்திரங் களைக் கவனித்துக் குறிப்புகள் எழுதுவதும் மன்னருக்கு வழக்கமாக இருந்தது.

ஜனவரி 24, 1556 - வெள்ளிக்கிழமை.

மெக்காவிலிருந்து திரும்பிய முதிய அமைச்சர் ஒருவரிடம், அங்கு சென்றிருந்த தன் தம்பிகள் பற்றி விசாரித்த பாதுஷா, எழுந்து படிகளில் இறங்க அடியெடுத்து வைக்க... திடீரென்று, பக்கத்திலிருந்த மசூதியிலிருந்து தொழுகைக்கான அழைப்பு அவர் காதில் விழுந்தது. உடனே திரும்பி உப்பரிகைக்கு ஏறி மண்டியிட முயன்ற ஹுமாயூனின் கால் தடுக்க... நேர்குத்தாக கீழிறங்கிய படிகளில் தலைகீழாக விழுந்த மன்னரின் நெற்றிப்பொட்டு கருங்கல் சுவரின் முனையில் மோதியது. பிறகு திருப்பத்துச் சுவரில் அவருடைய பின்தலைப் பகுதியும் மோத... கண்ணிமைக்கும் நேரத்தில் அந்தக் கொடுமையான விபத்து நிகழ்ந்து, கூடியிருந்தோரைக் கதிகலங்க அடித்தது..!

மூன்று நாட்கள் கழித்து, கோமாவில் இருந்த டெல்லி சக்ரவர்த்தி ஹுமாயூனின் உடலிலிருந்து உயிர் பிரிந்தது...

வாழ்க்கையில் தொடர்ந்து பலமுறை தடுக்கி விழுந்து கொண்டிருந்த ஹுமாயூன், கடைசியிலும் அதே ரீதியில் தன் வாழ்வை முடித்துக்கொண்டது ஒரு விசித்திரமான, பரிதாபமான முற்றுப்புள்ளிதான்.

இவரும் அவரும்!

பாபருக்கும் அக்பருக்கும் இடையே உள்ள சின்னஞ்சிறு 'கமா' என்று ஹுமாயூன் பாதுஷாவைச் சில ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்கள் கேலியாக வர்ணிக்கின்றனர் - சில சமயங்களில் 'கமா' போட மறந்து போனால் வாக்கியமே மாறிப் போய்விடும் என்பதை மறந்து! அதுபோல ஹுமாயூன் இல்லாமல் போயிருந்தால் இந்திய நாட்டின் வரலாறும் மாறிப் போயிருக்கும். அக்பர் நமக்குக் கிடைத்திருக்க மாட்டார்! நாட்டுக்கு ஒரு மாமன்னரை - அக்பரை- பெற்றுத் தந்ததன் மூலம், தான் செய்த அத்தனை தவறுகளுக்கும் ஹுமாயூன் பிராயச்சித்தம் தேடிக் கொண்டுவிட்டார் என்றுகூடச் சொல்லலாம்!

கடைசிக் காலத்தில் ஹுமாயூன் தன் குறைகள் பற்றிப் புரிந்துகொண்டு வருந்தி யதாகத் தெரிகிறது. இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பு தியானத்தில் இருந்த பாதுஷாவின் கண்களிலிருந்து

நீர் பெருக்கெடுத்தது என்றும், அவர் வாய் ஒரு கவிதையை முணுமுணுத்தது என்றும் கூறப்படுகிறது.

‘இறைவா! கருணைக் கடலான நீ

என்னை உன்னுடன் இணைத்துக்கொள்!

உன் பெருமைகளையெல்லாம் அருகில் இருந்து பார்க்க விரும்புகிறேன்!

வாழ்க்கையின் பிரச்னைகளும் துக்கங்களும் என் இதயத்தை நொறுங்கச் செய்துவிட்டன...

உன்னைப் பார்க்கத் துடிக்கும் இந்த ஏழைப் பைத்தியக்காரனை எப்போது நீ அழைத்துக்கொள்ளப் போகிறாய்?’

என்கிற ரீதியில் கவிதை செல்கிறது (கவிதையை இயற்றியதும் அவரே!)...

ஹுமாயூனின் தோல்விகளுக்குக் காரணம் என்ன?

கோபம், தாபம், காமம் போன்றவற்றைத் தான் அளவுக்கு மிஞ்சிப் போய்விட்டதாகக் குறிப்பிடுவதுண்டு. மென்மை, அன்பு, இரக்கம் போன்றவற்றில் ஒருவர் மிதமிஞ்சிப் போய்விட முடியுமா? ‘வீழ்ச்சியேற்படுத்தும் அளவுக்குப் போக முடியும்!’ என்பதற்கு ஹுமாயூனை உதாரணமாகச் சொல் கிறார்கள்!

பாபருக்குப் பிறகு அக்பரும் அவருக்கு ஹுமாயூனும் பிறந்து

இந்தியாவை ஆண்டிருந்தால் ஹுமாயூன் உலகப் புகழ் பெற்றிருக்கக்கூடும் என்றும் சிலர் குறிப்பிடு கின்றனர். பாபர் அடித்தளமாக ஏற்படுத்திக் கொடுத்த ஒரு சாம்ராஜ்யத்தை நிலை நிறுத்து வதற்கு வீரமும் கண்டிப்பும் ராஜதந்திரமும் சுறுசுறுப்பும் கொண்ட ஒரு மன்னர் தேவைப் பட்டார். துரதிர்ஷ்டவசமாக ஹுமாயூனிடம் முதலாவது மட்டும்தான் இருந்தது!

சகோதரர்கள் இழைத்த துரோகங்களைத் தொடர்ந்து மன்னித்துக் கொண்டிருந்தது ஹுமாயூன் செய்த பெரும் தவறுகளில் ஒன்று என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறு கிறார்கள். விடாமல் தொல்லைகள் தந்து கொண்டிருந்த அவர்களைச் சமாளிப் பதிலேயே பல ஆண்டுகள் மன்னருக்கு வீணாகப் போனது உண்மை!

அதே சமயம், அந்தப்புரத்தில் உல்லாசமாக இருக்கும்போது ஏதாவது ஒரு ராணி மன்னரை லேசாகத் தமாஷ் பண்ணினால் போதும்... 'சுருக்'கென்று ஹுமாயூனுக்குக் கோபம் வந்துவிடும். உணவுப் பதார்த்தங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு முரண்டு பிடிப்பார். இதுபோன்ற தருணங்களில் பலமுறை விழுந்து விழுந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டாக வேண்டும். பிறகுதான் மன்னர் முகத்திலிருந்து இறுக்கம் அகலும்!

ராஜதந்திரத்திலும் பாது ஷாவுக்குக் குறைந்த மதிப்பீடே தர முடியும். குஜராத் சுல்தான் பகதூர் ஷாவுக்கு எதிராக மேவார் ராஜபுத்திரர்கள் ஹுமாயூனிடம் உதவி கேட்டனுப்பினார்கள். என்னவோ ஏதோ என்று குழம்பிய ஹுமாயூன், அதைக் கண்டு கொள்ளாமல் விட... பகதூர் ஷா அதைத் தொடர்ந்து ஹுமாயூனுக்கே பெரும் பிரச்னையாக மாறினார். ராஜபுத்திரர்களின் உதவிக்கு மட்டும் மன்னர் போயிருந்தால், அவர்களின் நம்பிக்கையை (பிற்பாடு அக்பரைப் போல!) பெற்றிருக்க முடியும். அவர்கள் உதவியோடு ஷெர்ஷாவையே ஒருகை பார்த்திருக்கலாம். இந்த 'மேவார் பரீட்சையில்' ஹுமாயூன் சைபர் வாங்கியது குறிப்பிடத்தக்க விஷயம்!

'உரையாடல்' என்று எடுத்துக் கொள்வோம்.

பேச்சுவார்த்தைகளின்போது பாபர் ரொம்ப அழுத்தம். முகம் சலனமில்லாமல் இருக்கும். கொஞ்சமாகப் பேசுவார். எல்லோரும் விவாதித்த பிறகு, முத்தாய்ப்பாகச் சாதக-பாதகங்களை அலசுவார். கடைசியில், ரத்தினச்சுருக்கமான சில வார்த்தைகளில் பாபரின் கருத்து வெளிப்படும். முடிவு எடுத்தாகிவிட்டால், பாபரை எந்தச் சக்தியாலும் மாற்ற முடியாது!

அக்பர் விஷயம் வேறு... கணீரென்று நிறையப் பேசுவார். அவர் உரையாடலில் புதிய புதிய விஷயங்கள் எல்லாம் வெளிவரும். மிகுந்த தன்னம்பிக்கையோடு வார்த்தைப் பிரயோகங்கள் வெளிப்படும். எந்த நிலை யிலும் தவறாகவோ, நிதானம் தவறியோ ஒரு வார்த்தை விடமாட்டார் அக்பர்.

அப்பாவைப் போலவோ, மகனைப் போலவோ அல்லாமல் ஹுமாயூன் 'ரெண்டுங்கெட்டானாக'ப் போய்விட்டது வருத்தமான விஷயம்!

மிகவும் நெருங்கிய நண்பர்கள் ஹுமாயூனின் பேச்சுத் திறமையையும் நகைச்சுவையையும் விநாடி நேரத்தில் கவிதை புனையும் திறமையையும் பாராட்டு கிறார்கள்தான். ஆனால், சற்று அந்நியமான சூழ்நிலையில் கட்டுக்கோப்பாகப் பேச முடியாமல்

ஹுமாயூன் தடுமாறியது உண்டு.

ஒரு சம்பவம்... பாரசீகத்தில் அடைக்கலம் புகுந்த ஹுமாயூனுக்கு மன்னர் ஷாதாமாஸ்ப் அறுசுவை விருந்தளித்தார். அப்போது, ஹுமாயூனுக்குச் சகோதரர்கள் இழைத்த துரோகங்கள் பற்றியெல்லாம் விசாரித்து அறிந்துகொண்டார் பாரசீக மன்னர். விருந்து முடிய, கையலம்பக் கிண்ணத்தில் நீர் எடுத்து வரப்பட்டது. அதில் கை கழுவியவாறு ஷா, தங்களுடைய அழகான சகோதரர்களைப் பாதுஷா எப்போதோ இதுபோலச் செய்திருக்க வேண்டும்!”- அதாவது ‘கை கழுவியிருக்க வேண்டும்’ என்று புன்னகையுடன் குறிப்பிட, ஹுமாயூன் ஒன்றும் பேசாமல் இருந்திருக்கலாம். ஆனால், மன்னர் ஏதாவது நினைத்துக் கொள்வாரோ என்று எண்ணிய ஹுமாயூன், “நியாயமான கருத்து... சகோதரர்களைப் பற்றித் தாங்கள் சொன்னது நூற்றில் ஒரு வார்த்தை!” என்று சொல்லிக்கொண்டே, தனக்கு வந்த நீர்க் கிண்ணத்தில் கையலம்பினார். இதில் விஷயம் என்னவென்றால், ஹுமாயூனிடம் வந்து கிண்ணத்தை நீட்டிய பைராம் மிர்ஸா - ஷாவின் சகோதரர்! அதிலிருந்து ஹுமாயூனிடம் முகம் கொடுத்துப் பேசுவதை நிறுத்திக்கொண்டார் பைராம் மிர்ஸா. தவிர, அவரை ‘அநாதை மன்னர்’ என்றெல்லாம் மற்றவர்களிடம் கேலியாகக் குறிப்பிட்டு அவமானப் படுத்தினார். ஹுமாயூனைப் பாரசீக நாட்டைவிட்டு வெளியேற்றவும் திட்டம் போட்டார். நல்லகாலமாக, ஷாவின் தங்கை சுல்தானா பேகம் ஹுமாயூனின் பக்கம் இருந்தாரோ, மன்னர் தப்பித்தாரோ!

ஹுமாயூனின் தோல்விகளுக்கு இன்னொரு காரணம் - ஜோதிட நம்பிக்கை! ஓபியத்தில் மூழ்குவது போல, அளவுக்கதிகமாக ஜோதிடர்களைக் கலந்தாலோசிப்பது மன்னருக்கு வழக்கமாக இருந்தது. சம்பிரதாயங்களுக்கும் விழாக் காலங்களுக்கும் புதிதாக மாளிகை ஏதேனும் கட்டும்போதும் நேரம், காலம், ராசிபலன் பார்த்தால் பரவாயில்லை... பாதுஷா ஒரு ஜோதிட வியூகத்தையே தன்னைச் சுற்றிக் கட்டிக் கொண்டது பற்றி முன்பே விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

போதாததற்கு, விதியின் அம்புகளும் கொடூரமாக ஹுமாயூனை ரணப்படுத்தியது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டி யிருக்கிறது!

பாதுஷா ஹுமாயூன் இறந்த பிறகு, புனித மெக்காவுக்கு யாத்திரை சென்ற அவருடைய சீனியர் ராணி ஹாஜி பேகம், அப்படியே பாரசீகம் பயணித்தபோது அந்த நாட்டைச் சேர்ந்த கட்டடக்கலை வல்லுநரான மீராக் மிர்ஸா கியாஸ் என்பவரைக் கையோடு இந்தியாவுக்கு அழைத்து வந்தார். அவர் உருவாக்கித் தந்ததுதான் - டெல்லியில் உள்ள அற்புதமான ஹுமாயூன் கல்லறை!

கி.பி.1564-ல் வேலை ஆரம்பித்து, மன்னரின் கல்லறையைக் கட்டி முடிக்க எட்டாண்டுகள் பிடித்தன. பாரசீகக் கலையும் இந்தியக் கலையும் சங்கமம் ஆக ஆரம்பித்தது இங்குதான் என்பது தகவல். அமைப்பில் ஹுமாயூன் கல்லறையை ‘தாஜ்மஹாலின் மிக நெருங்கிய முன்னோடி’ என்று கூறலாம். இந்தக் கட்டடத்துக்குள்ளே ஹுமாயூனைத் தவிர, மேலும் சுமார் 154 உடல்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. ஹாஜி பேகம் தவிர, மற்றவர்கள் பலர் யார் யார் என்று தெரியவில்லை.

ஹுமாயூன் இரண்டாவது முறை டெல்லியில் முடிசூட்டிக் கொண்ட பிறகு, நிர்வாகத்தில் மிகுந்த அக்கறை செலுத்த ஆரம்பித்தார். பல புதிய திட்டங்களை அமல்படுத்த ஆர்வம் கொண்டார். ஆனால், ஆறே மாதங்களில் ‘ஷெர்மண்டல் விபத்து’ அவர் உயிரைப் பறித்துவிட்டது.

இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளாவது ஹுமாயூன் உயிரோடு இருந்திருந்தால், 'நிர்வாகத்திறமை வாய்ந்த அரசர்' என்ற பெயரை ஒருவேளை அவர் பெற்றிருக்கக் கூடும்!

ஆம்! ஆப்கானிய மன்னர் ஷெர்ஷா விட்டுப் போன நிர்வாக இயந்திரம் அத்தகைய சிறப்பு வாய்ந்தது!

ஷெர்ஷா ஒரு மாவீரர் மட்டுமல்ல... அசாத்திய நிர்வாகத்திறமை கொண்ட அதி புத்திசாலி. பழைய இந்தியாவுக்கும் புதிய இந்தியாவுக்கும் இடையே ஒரு பாலமாகத் திகழ்ந்தவர் ஷெர்ஷா என்றும், நிர்வாகத்தில் இந்த ஆப்கானியர் காட்டிய 'ஒரிஜினாலிடி'யை ஆங்கிலேயர்கள்கூடக் காட்டவில்லை என்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் ஷெர்ஷாவைப் புகழ்கிறார்கள்.

மத்திய அரசு, மாநில கவர்னர்கள், விஸ்தாரமான அதிகாரி வர்க்கம் - எல்லா வற்றையும் ஆரம்பித்து வைத்தவர் ஷெர்ஷா தான் (இவையெல்லாம் அவர் காலத்தில் சிறப்பாக வேறு இயங்கியது வேறு விஷயம்!). ஷெர்ஷாவின் சாம்ராஜ்யம் 'சர்க்கார்' என்று அழைக்கப்பட்ட நாற்பத்தேழு 'யூனிட்' களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு சர்க்காரும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப் பட்டது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு அதிகாரியும் ஆடிட்டரும் நியமிக்கப் பட்டனர். அன்றாட நிர்வாகக் குறிப்புகள் ('மினிட்ஸ்') எழுத ஒரு இந்து அதிகாரியும், ஒரு முஸ்லிம் அதிகாரியும் நியமிக்கப் பட்டனர்!

அதிகாரிகள் ஒரே இடத்தில் இருந்தால் மெத்தனம் வந்துவிடும் என்பதால் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அதிகாரிகளை வெவ்வேறு பகுதிகளுக்கு மாற்றினார் ஷெர்ஷா- அதாவது டிரான்ஸ்ஃபர்!

ஷெர்ஷா காலத்தில்தான் (இன்று நடைமுறையில் இருக்கும்) பெரும்பாலான நிலச் சீர்த்திருத்தங்கள் உருவாக்கப்பட்டன. பட்டாக்கள் வழங்கப்பட்டு விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டார்கள். விவசாயிகளின் வருமானத்தில் நாலில் ஒரு பங்கு கரெக்டாக அரசுக்குப் போக வேண்டும். பஞ்ச காலங்களில் விவசாயிகளுக்கு அட்வான்ஸ் மற்றும் கடன் உதவி தரப்பட்டது. வெள்ளத் தினாலோ, பெரும் மழையினாலோ பாதிப்பு ஏற்பட்டால் கடன்கள் 'ரைட் ஆஃப்' செய்யப் பட்டன!

மிக நீண்ட விஸ்தாரமான 'கிராண்ட் ட்ரங்க் ரோடு'களால் இந்தியாவை இணைக்க ஆரம்பித்தவர் ஷெர்ஷாதான். வங்கத்தையும் பஞ்சாபையும் இணைக்கும் 2000 மைல்களுக்கு மேல் நீளமான ஷெர்ஷாவின் சாலையைத் தான் இன்றும் நாம் பயன்படுத்துகிறோம். ஆக்ராவிலிருந்து ஜோத்பூர், லாகூரிலிருந்து முல்தான் என்று ஏகமாகச் சாலைகளைப் போட்டுக் கொண்டே போனார் இந்த மன்னர்! அதுமட்டுமல்ல... சாலைகளின் இருபுறமும் நிறைய பழங்கள் (வழியில் பசித்தால் சுவைக்க) கொண்ட மரங்கள் நடப்பட்டன. இரண்டு மைலுக்கு ஒரு கிணறும் பத்து மைலுக்கு ஒரு சத்திரமும் உருவாக்கப்பட்டன. சத்திரத்தில் இந்துக்கள், முஸ்லிம்கள் தங்கவும் வழிபடவும் தனிப் பகுதிகள் இருந்தன. இந்தச் சத்திரங்கள் தபால் நிலையங்களாகவும் பயன்படுத்தப் பட்டன. குதிரையேற்றத்தில் பயிற்சி அளிக்கப்பட்ட துடிப்பான பக்கத்து ஊர் இளைஞர்கள் தபால்காரர்களாகப் பணி புரிந்தனர். கடிதங்கள் அல்லது பார்சல்களை 'ரிலே ரேஸ்' கணக்காக இந்த குதிரை வீரர்கள், போய்ச் சேரவேண்டிய இடத்துக்கு வேகமாகக் கொண்டு சேர்த்தார்கள். ஆகவே, முதல் 'கூரியர் சர்வீஸ்' ஏற்படுத்திய பெருமையும் ஷெர்ஷாவுக்குப் போகிறது!

ஒவ்வொரு மாவட்டத்திலும் போலீஸ் படையும் ஷெர்ஷா ஆட்சியில் அமைக்கப் பட்டது. குற்றப்பத்திரிகை முறையாக எழுதப்பட்டது. தண்டனை கடுமை! நெற் கதிர்களைத் திருடினால்கூட காது அறுக்கப் பட்டு திருடியவர் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டார்.



ஹுமாயூன் கல்லறை - க்ளோஸப்ஷாட்

'ஷெர்ஷா ஆட்சியில் ஒரு மூதாட்டி பானை நிறையப் பொற்காசுகளை வைத்துக் கொண்டு வனாந்திரப் பகுதிகளில்கூட இரவில் தன்னந்தனியே நிம்மதியாக உறங்கலாம். ஏனெனில், திருடர்களே அப்போது கிடையாது!' என்றார் நிஜாமுதீன் அகமது என்னும் சமகால வரலாற்று ஆசிரியர்.

சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளுக்குத் தனி நீதிமன்றங்களும் நீதிபதிகளும் நியமிக்கப் பட்டனர். பொதுப்பணத்தைச் சுருட்டப் பார்த்து மாட்டிக்கொண்ட ஷெர்ஷாவின் உறவினர்கள், நண்பர்கள் சிலர் இங்கே தண்டனை பெற்றதுண்டு. உத்தரவு அப்படி!

ஷெர்ஷாவின் படையில் 1,50,000 குதிரை வீரர்கள், 25,000 காலாட்

படையினர், ஒரு பெரும் பீரங்கிப்படை, 300 யானைகள் அடங்கிய யானைப்படை இருந்தன. படை வீரர்களுக்கு மாதச் சம்பளம் நிர்ணயிக்கப் பட்டது. மாதம் இவ்வளவு வீரர்கள் என்று வகுத்துக்கொண்டு ஷெர்ஷாவே வீரர்களுக்கு நேரடியாகச் சம்பளம் விநியோகித்தார். இதனால் ஒவ்வொரு படை வீரரையும் ஷெர்ஷாவுக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும்!

இந்து-முஸ்லிம் என்று பார்க்காமல் திறமை ஒன்றின் அடிப்படையில் பதவி உயர்வுகள் தரப்பட்டன. ஷெர்ஷாவின் பிரதம தளபதிகளில் ஒருவரான பிரம்மஜித்கௌர் என்பவர்தான் ஹுமாயூனைத் துரத்தித் துரத்தி அடித்தவர் என்பது குறிப்பிடத் தக்கது!

முதன்முதலில் சுமார் ஒரு ரூபாய் மதிப்புள்ள முழு வெள்ளி நாணயத்தை இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தியவர் ஷெர்ஷாதான்!

ஐந்து வருட ஆட்சியில் இத்தனை சாதனைகளை ஒரு ஆட்சியாளரால் செய்ய முடியுமா?! வியப்பாகத்தான் இருக்கும். ஆனால், மொகலாய ஆட்சியின் நடுவே ஓர் அற்புதமான இடைச்செருகலாக வந்துபோன இந்த ஆப்கானிய மன்னர் இத்தனையும் செய்து காட்டினார்!

பாபரின் தளபதியாக ஆரம்பித்து, தன் வாழ்நாள் பூராவும் புரட்சியாளராகவும், போர் வீரராகவும் வாழ்ந்து ஐம்பது வயது தாண்டிய நிலையில் மன்னராக அமர்ந்த ஷெர்ஷாவின் சாம்ராஜ்யம், சிந்து நதியில் இருந்து வங்காளத்தில் கங்கை டெல்டா வரையில் விஸ்தரித்திருந்தது. காஷ்மீர், நேபாளம், அஸ்ஸாம், சிந்து, ராஜபுத்னா, மால்வா பிரதேசங்கள் அவர் குடையின்கீழ் அடக்க ஒடுக்கமாக இருந்தன.

ஹுமாயூன் கல்லறை - லாங்ஷாட்

கல்லறைச் சின்னம்...

முதிர்ந்த வயதிலும் இருபது வயது இளைஞருக்குரிய வேகத்துடன் வாளைச் சுழற்றிய இந்த ஆப்கானிய வீரர், முரண்டு பிடித்த காலிஞ்சர் பிரதேச இந்து மன்னரை எதிர்த்து அலஹாபாத்துக்குத் தெற்கே சுமார் 130 மைல் தொலைவிலுள்ள காலிஞ்சர் கோட்டையை முற்றுகையிட்டார். கோட்டையைத் தகர்க்கச் சுற்றிலும் சக்தி வாய்ந்த கண்ணிவெடிகள் வைக்கப்பட்டன. சில தளபதிகளுடன் சென்று ஏற்பாடுகளை ஷெர்ஷா மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த போது... அவர் நின்றிருந்த இடத்துக்கு அருகே தோண்டப்பட்டிருந்த பள்ளத்தில் வெடிமருந்து குவியலாக மூட்டை கட்டி வைக்கப்பட்டிருக்க... அந்தப் பயங்கரம் நிகழ்ந்தது. ஏதோ ஒரு பீரங்கியிலிருந்து சீறிப்பாய்ந்து வந்த ஒரு குண்டு அந்தப் பள்ளத்தில் விழுந்தது. ஏககாலத்தில் அத்தனை வெடிகுண்டுகளும் பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதற, ஷெர்ஷா உட்பட அருகில் இருந்த தளபதிகள் அனைவரும் தூக்கி எறியப்பட்டனர். அங்கங்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் பலர் அங்கேயே உயிரிழந்தனர். விபரீதம் புரிந்து கதறிக்கொண்டு ஓடிய வீரர்கள், குற்றுயிராகக் கிடந்த மன்னரை கூடாரத் துக்குள் கொண்டுவந்து படுக்க வைத்தனர். உடலெங்கும் ரண காயங்களுடன் கடுமையான வலியில் துடித்த இந்த மாவீரர் அந்த நிலையிலும் மற்ற தளபதிகளை அழைத்து ‘கோட்டையை எப்படிக் கைப்பற்ற வேண்டும்’ என்று திட்டம் வகுத்துக் கொடுத்தார் என்று வரலாறு நமக்குத் தெரிவிக் கிறது!

அவர் போட்டுக் கொடுத்த திட்டப்படியே டெல்லி வீரர்கள் காலிஞ்சர் கோட்டையை அன்றே (மே.22, கி.பி.1545) மாலை நேரத்துக்குள் வெற்றிகரமாகக் கைப்பற்றி ஷெர்ஷாவின் கொடியை ஏற்றினார்கள்.

இந்த வெற்றிச் செய்தி வந்து சேர்ந்ததும் கடைசி மூச்சில் இருந்த ஆப்கானிய மன்னர், மெலிதான புன்னகையுடன் மிகுந்த சிரமத்துடன் தலையை அசைத்து “அப்படியா...? இறைவனுக்கு நன்றி!” என்று முணுமுணுத்த மறுகணம் - அவர் உயிர் பிரிந்தது.

பீஹாரில் பாட்னாவுக்கு அருகே சசாரம் என்னும் ஊரில், இந்தியாவை ஆண்ட மிகச் சிறந்த மன்னர்களில் ஒருவரான ஷெர்ஷாவின் கல்லறையை நாம் காணலாம்.

மிகுந்த ஒரிஜினல் புத்திசாலித்தனத்தோடு ஷெர்ஷா உருவாக்கிவிட்டுப் போன நிர்வாக இயந்திரம், மேலும் சிறப்பாக முழுவேகத்தில் விசுவரூபம் எடுத்து இயங்கக் காத்திருந்தது ஒருவருக்காக...

அவர்தான் மொகலாய சூப்பர் நட்சத்திரம் அக்பர்...!

16

அக்பர்..

பைராம்கான் பாதிப்பு!

டெல்லியில் உள்ள புரானா கிலா கோட்டைக்குள் உள்ள ஷெர்மண்டல் மாளிகையைப் பார்க்கப் போகிறவர்கள், அதனுடைய ‘கிரவுண்ட் ஃப்ளோர்’ மையப் பகுதி சுற்றிலும் சுவரெழுப்பி மூடப்பட்டிருப்பதைக் காணலாம். மாடியிலிருந்து ஹுமாயூன் தடுக்கி விழுந்து இறந்த பிறகு, அவருடைய உடல் அங்கேயே தற்காலிகமாக அடக்கம் செய்யப்பட்டது. பிற்பாடு மகாராணி ஹாஜிபேகம் கட்டிய புதிய கல்லறைக்கு ஹுமாயூன் உடல் கொண்டு செல்லப்பட்டதும், ஷெர் மண்டலில் சில ஆண்டுகள் மன்னர் உடல் இருந்த இடத்தில் யாருடைய காலடிச் சுவடுகளும் பதியக்கூடாது என்பதால், மன்னர் உடலை அப்புறப்படுத்திய கையோடு அந்தப் பகுதியைச் சுவரெழுப்பி ‘சீல்’ செய்திருக்க வேண்டும் என்று சில தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

ஹுமாயூன் இறந்த பிறகு மூன்று நாட்களுக்கு அந்தச் செய்தி மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. இளவரசர் அக்பர், தொலைவில் பஞ்சாப் பிரதேசத்தில் போர்க்களத்தில் இருந்த சமயம் அது. தடியெடுத்தவர்கள் தண்டல்காரர்களாக ஆவதும், முதுகில் குத்துபவர்கள் மன்னர்களாக ஆவதும் அப்போது சகஜம் என்பதால், தனயனுக்குத் தகவல் சொல்லியனுப்பித் தயார்ப்படுத்தும் வரை, ஹுமாயூன் போலச் சற்றுத் தோற்றமளித்த ஒரு பணியாளருக்கு அரச உடை அணிவித்து உப்பரிகையில் மங்கலான வெளிச்சத்தில் அமரச்செய்து, கீழே கவலையுடன் குழுமிய மக்களைப் பார்த்துக் கையசைக்க வைத்தார்கள்!

இறக்கும் தறுவாயில் ஹுமாயூனை என்னவெல்லாம் கவலைகள் வாட்டியதோ என்னவோ... இளவரசர் அக்பர் பற்றித் தந்தையார் கவலைப்பட்டிருக்க மாட்டார் என்று நம்பலாம்! வீரமும் விசுவாசமும் கொண்ட பிரதம தளபதி பைராம்கான் பொறுப்பில் மன்னர் தன் மகனை விட்டிருந்தது தான் காரணம்.

ஷெர்ஷாவின் வழிவந்த சிகந்தர் ஷா, ஹுமாயூனிடம் தோற்றுப் பஞ்சாபில் தஞ்சம் புகுந்து மறுபடி படை திரட்டிக் கொண்டு தொல்லை தந்துகொண்டிருந்ததால், பைராம் கானையும் அக்பரையும் பஞ்சாப் அனுப்பியிருந்தார் ஹுமாயூன். மொகலாயப் படையைத் தாக்குபிடிக்க முடியாமல் சிகந்தர் ஷா மலைப் பகுதிகளில் ஓடி ஒளிந்துகொள்ள,

அந்தச் சமயத்தில்தான் டெல்லியிலிருந்து தந்தை இறந்த சோகச் செய்தி அக்பருக்கு வந்து சேர்ந்தது.

தகவல் கேட்டதும் பைராம்கான் துரிதமாகச் செயல்பட்டார். ஒரு பெரும் மேடையும், அதன்மீது படுவேகமாக ஒரு மண்டபமும் அமைத்தார். காஷ்மீர விரிப்புகள் மீது அழகிய சிம்மாசனம் போடப்பட்டது. வைர, வைடூரியங்கள் பதிக்கப்பட்ட மகுடம் ஒன்றும் அவசரமாகத் தயாரானது. ஹுமாயூன் இறந்து சரியாக இருபது நாட்கள் கழித்து, பிப்ரவரி 14, 1556-ல் ஜொலிக்கும் உடையில் பதின்மூன்று வயது நிரம்பிய அக்பரைச் சிம்மாசனத்தில் அமர்த்தி துந்துபிகள், முரசுகள் முழங்க முடிசூட்டினார் பைராம்கான் (அந்த மேடையை இன்றும் பஞ்சாப் மாநிலத்தில் ஒரு வயல்காட்டின் நடுவே காணலாம்!).

தான் டெல்லிக்குத் திரும்பிப் பொறுப்பேற்கும் வரை தார்தி பெஹ்கான் என்னும் இன்னொரு பிரதம தளபதியை டெல்லிக்கு ஆளுநராக பைராம்கானின் ஆலோசனையின்பேரில் அக்பர் நியமித்தார்.

அதைத் தொடர்ந்து திடீரென்று டெல்லிக்கு ஆபத்து வந்தது - ஹேமு என்ற ஒரு இந்துவால்!

தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்து, ஒரு சிறு வியாபாரியாகக் காலம் தள்ளிக் கொண்டிருந்த ஹேமு, ஷெர்ஷாவுக்குப் பிறகு ஆட்சி செய்த ஆதில்ஷாவின் நண்பராகி, பிறகு அவரிடமே பிரதம அமைச்சராகப் பணிபுரிந்தவர். ஷெர்ஷாவின் வம்சம் சிதறிப்போன பிறகும் ஒரு பெரும்படையுடன் பதுங்கியிருந்த ஹேமு, 'இதுதான் தருணம்' என்று இப்போது டெல்லியை முற்றுகையிட்டார்.

ஹேமு சற்றுக் குள்ளம் மட்டுமல்ல, ஒல்லியும்கூட. தன் கடைக்கு வந்த கஸ்டமர்களோடு எப்போதாவது வாய்ச்சண்டை

போட்டதற்குமேல் ‘போர் அனுபவம்’ என்று எதுவும் கிடையாது. அப்படிப்பட்ட ஒருவர், இடையில் ஆப்கானியர்கள் டெல்லியில் ஆட்சிபுரிந்தபோது அமைச்சராகி, மிக விரைவான காலத்தில் போர்ப் பயிற்சியில் கில்லாடியாகவும் ஆனது ஓர் ஆச்சரியமான விஷயம். மன்னர் ஆதில்ஷாவுக்காகத் தொடர்ந்து இருபத்திரண்டு போர்களில் தலைமையேற்று வெற்றிக்கொடி நாட்டித் தந்தவர் ஹேமு என்பது குறிப்பிடத்தக்கது!

ஹுமாயூன் உடல், ஷெர்மண்டல் மண்ணுக்கடியில்... அக்பரோ, பஞ்சாபில் என்ற இக்கட்டான சூழ்நிலையில் மொகலாயர் வெளிக்கொணர்ந்த படையோடு ஹேமுவின் படை மோதியது. உச்சக்கட்டப் போரில் பதுங்கியிருந்த ஹேமுவின் யானைப் படை பிளிறிக்கொண்டு வெளிப்பட, மிரண்டுபோன டெல்லிப் படை (மொகலாயர் களுக்கு யானைப்பயம் கடைசிவரை முழுமையாக அகலவே இல்லை!) ஓட்டம் எடுத்துவிட்டது.

டெல்லி அரியணையில் அமர்ந்த ஹேமு, உடனடியாக ‘ராஜ விக்ரமாதித்தன்’ என்ற பட்டப் பெயருடன் முடிசூட்டிக் கொண்டதோடு, தன் பெயரில் நாணயங்களும் அச்சிட்டுக் கொண்டுவிட்டார்!

இந்தத் தகவல் போய்ச் சேர்ந்ததும்

பஞ்சாபில் அக்பர் தலைமையில் இருந்த மொகலாய வீரர்கள் சற்றுக் கலவரமடைந் தார்கள். “வேறு வழியில்லை... இளவரசர் உடனே காபூலுக்குத் தப்பிவிடுவதே நல்லது!” என்றுகூடச் சில ஆலோசகர்கள் அக்பரிடம் கவலையுடன் தெரிவித்தார்கள். இதற்கும் மறுப்புத் தெரிவித்த அக்பர், பைரம்கானை வரவழைத்து “யார் இந்த ஹேமு? நாம் உடனே டெல்லிக்குப் படையுடன் போய் ஒருகை பார்த்தாக வேண்டும்!” என்று பரபரக்க, பைராம்கான் முகத்தில் பெருமையுடன் கூடிய புன்னகை விரிந்தது. “நான் நினைத்ததையே தாங்கள் சொல் கிறீர்கள். காபூலுக்கு உங்களை அழைத்துக் கொண்டு திரும்பி ஓடுவதற்காக இந்த பைராம்கானைத் தங்கள் தந்தையார் விட்டுவிட்டுப் போகவில்லை. உடனே டெல்லி செல்வோம். எதிரியைத் துரத்தித் துரத்தி அடிப்போம்! நம் வெற்றியில் மன்னருக்குச் சந்தேகமே வேண்டாம்!” என்றார் பைராம்கான்.

உடனே போர் உடை பூண்டு பாசறைக்கு வந்த அக்பர், விசித்திரமான காரியம் ஒன்றைச் செய்தார்! ஹேமு என்று பெயரிட்டுப் பெரிய கொடும்பாவி ஒன்றைத் தயார்செய்து அதற்குள் வெடிகளை வைத்து, நடு மைதானத்தில் அதற்குத் தீ வைத்தார் அக்பர் (இந்தியாவின் முதல் கொடும்பாவி?!). கொழுந்துவிட்டெரிந்த ‘ஹேமு’வின் உருவம் வெடித்துச் சிதறியது. ஒரு மேடைமீது கம்பீரமாக ஏறி நின்ற அக்பர், அணிவகுத்து நின்ற தன் வீரர்களைப் பார்த்து “இன்னும் சில நாட்களில் அந்த ஹேமுவின் கதியும் இதுதான்! உயர்த்துங்கள் வாட்களை... புறப்படுவோம் டெல்லி நோக்கி!” என்று கர்ஜிக்க... உடனே மொகலாயப் படையினூடே உற்சாகம் மின்னலாகப் பரவியது!

நவம்பர் 5, 1556-ல், பாட்டனார் பாபர் வெற்றிக்கொடி நாட்டிய அதே பானிப்பட் கிராமத்தில் அக்பரின் படையும், ஹேமுவின் படையும் நேரடியாக மோதிக்கொண்டன.

மிகவும் ஆஜானுபாகுவான ஒரு யானை மீது அமர்ந்து, ஏதோ குதிரை போன்ற லாகவத்தோடு அதை இயக்கித் துடிப்புடன் போர்புரிந்த ஹேமுவைப் பார்த்து அக்பரே சற்றுக் கவலையில் ஆழ்ந்ததாகக்

கேள்வி. நல்லகாலமாக மொகலாய வீரர் ஒருவர் எய்த அம்பு, காற்றைக் கிழித்துக்கொண்டு பாய்ந்து சென்று ஹேமுவின் இடது கண்ணுக்குள் ஊடுருவியது. யானை மீதிருந்த அம்பாரியில் வலியால் துடித்த வண்ணம் ஹேமு சரிந்து விழ, இந்தக் காட்சியைக் கண்டு பதறிப்போன ஹேமுவின் படை கலகலத்துச் சிதறிப் பின்வாங்கியது. மறுகணம், மொகலாயர்கள் வாட்களைச் சுழற்றிக் கொண்டு புகுந்து விளையாடினார்கள்.

அப்போது அங்கு இன்னொரு ஆச்சரியம் நிகழ்ந்தது..!

கண்ணில் குத்திட்டு நின்ற அம்போடு தட்டுத் தடுமாறி யானைமீது எழுந்து நின்ற ஹேமு, தன் கைகளால் அம்பை உருவி எடுக்க... கூடவே, வழிந்தோடிய குருதியோடு இடது கண்ணே உருண்டையாக வெளிவந்து விட்டது. அதைத் தன் இடுப்பில் கட்டியிருந்த பட்டுத்துணியால் மடித்துப் பத்திரப்படுத்திக் கொண்டு நிமிர்ந்த ஹேமுவின் வில்லிலிருந்து தொடர்ந்து அம்புகள் சரமாரியாகப் பாய்ந்தன! பைராம்கானும் அக்பரும் பிரமித்துப் போனார்கள். உடனே சுதாரித்துக் கொண்ட பைராம்கானின் திட்டப்படி, மொகலாயக் குதிரை வீரர்கள் வியூகமாக யானையைச் சுற்றி வளைத்து ஹேமுவின் யானைப்பாகன் மீது அம்புகளைக் குறி வைத்தனர். திடீரென்று பயந்துபோய் யானையை மண்டியிடச் செய்து, கீழே குதித்து அக்பரின் படைவீரர்களிடம் சரணடைந்தான் அவன். உடனே ஹேமு சிறைப்பிடிக்கப் பட்டார்.

அக்பர்முன் விலங்கிட்டுக் கைதியாக ஹேமுவைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். இருக்கையிலிருந்து எழுந்த பைராம்கான், “இனி இவன் நமக்குத் தொல்லை தரக்கூடாது ஷாஹன்ஷா! ஆகவே, தாங்களே இவனுக்குச் சிரச்சேதம் செய்ய வேண்டும்!” என்று கேட்டுக்கொண்டார். நிராயுதபாணியாக நின்ற ஹேமுவைக் கொல்ல மனம் வராத அக்பர், வாளை உருவி ஹேமுவின் தலையில் சம்பிரதாயமாக வைத்துவிட்டு மீண்டும் உறையில் போட்டுக்கொள்ள, மறு விநாடி பைராம்கான் உறையிலிருந்து வெளிப்பட்ட வாள் அகலவாக்கில் சுழன்றது. ஹேமுவின் தலை தரையில் வீழ்ந்து உருண்டது (உண்மையில் பதினான்கு வயதே நிரம்பிய அக்பர் தன் ‘கார்டியன்’ பைராம்கானை மீறி எதையும் செய்யத் துணியாத காலகட்டம் அது. ஆகவே, பைராம்கான் சொன்னபடி ஹேமுவின் தலையை அக்பர்தான் துண்டித் திருக்க வேண்டும். இருப்பினும் அக்பருக்கு இந்தக் கெட்ட பெயர் வேண்டாம் என்பதற்காக அப்துல் ஃபசல் போன்ற சில வரலாற்று ஆசிரியர்கள் ஹேமுவைக் கொன்றது பைராம்கான் என்று ‘சற்றே’ வரலாற்றை மாற்றியெழுதினார்கள் என்றும் ஒரு கருத்து உண்டு!).

அதைத் தொடர்ந்து, சரணடைந்த ஹேமுவின் படைவீரர்களின் தலைகளும் ஆயிரக்கணக்கில் கீழே உருண்டன. இந்தத் தலைகள் பொருத்தப்பட்ட ‘டவர்’ ஒன்றும் வெற்றிச் சின்னமாக அமைக்கப்பட்டது.

பிறகு, ஹேமுவின் 1,500 யானைகளும் அக்பர் கைவசம் வர, வேறு எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் அக்பரின் படை டெல்லிக்குள் நுழைந்தது.

ஹேமுவின் உடல் டெல்லிக் கோட்டையின் வெளியே, மற்றவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகத் தொங்கவிடப்பட, மொகலாயக் குடும்பப் பெண்களும் உறவினர்களும் அப்போது தங்கியிருந்த காபூலுக்கு ஹேமுவின் தலை அனுப்பப்பட்டது - அக்பரின் வெற்றிக்கு ஓர் அடையாளமாக!

டெல்லிக்குள் நுழைந்ததும் பைராம்கான் செய்த முதல் வேலை, ஹேமுவின் யானை களைப் பார்த்து மிரண்டு ஓடிய டெல்லி ஆளுநர் தார்தி பெஹ்கான் தலையைச் சீவியதுதான்!

இப்படிப் பல காரியங்களைத் தன்னிச்சையாக முடிவெடுத்து நிறைவேற்ற வேண்டியது, பிறகு மன்னரிடம் தகவல் தெரிவிப்பது என்னும் வழக்கத்தை பைராம் கான் பின்பற்றுவது அக்பருக்கு அந்த இளம் வயதிலேயேகூடச் சற்றுத் தர்மசங்கடமாக இருந்தது என்று தகவல். அதேசமயம் அனுபவமும் முதிர்ச்சியும் கொண்ட பைராம்கான் அக்பருக்கு ஒரு அத்தியாவசியத் தேவையாகவும் இருந்ததால் அவரை மன்னரால் தட்டிக்கேட்கவும் முடிய வில்லை.

அக்பர் பாதுஷாவின் மனதில் ஓடிய எண்ணங்களைப் பற்றியெல்லாம் பைராம் கான் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஹுமாயூனின் சகோதரியின் மகளான சலீமா சுல்தானா பேகத்தை மணந்து கொண்ட பிறகு அவருடைய எதேச்சாதிகாரம் சில டிகிரிகள் அதிகரித்ததுதான் மிச்சம்!

ஒரு நாள் அக்பரின் யானைப்படையைச் சேர்ந்த ஒரு யானைக்கு மதம் பிடித்துவிட, அது அருகில் இருந்த பைராம்கானின் யானையை முட்டிக் குத்திக் காயப்படுத்தி விட்டது. கோபம் கொண்ட பைராம்கான், தலைமைப் பாகனைச் சிரச்சேதம் செய்துவிட ஆணையிட்டார். இது கேள்விப்பட்டவுடன் தான் அக்பர் முதல் முறையாக பைராம் கானிடம் “இது என்ன பைத்தியக்காரத்தனம்? யானைக்கு மதம் பிடித்தால் பாகன் என்ன செய்வார்? தங்களுக்கு அவ்வப்போது இப்படி மதம் பிடிப்பதை முதலில் சற்றுக் கட்டுப்படுத்திக் கொண்டால் நன்றாக இருக்கும்!” என்று கடிந்துகொள்ள, சற்றுத் திகைத்துப்போன பைராம்கான் மௌனமாக வெளியேறினார்!

திடீரென்று கிளம்பிய இந்தத் ‘தலைமுறை இடைவெளி’யைப் புரிந்துகொண்டாள் அந்தப்புரத்தில் இருந்த ஒரு பெண்மணி. பெயர் மஹாம் அங்கா. அக்பருக்குச் செவிலித் தாயாக இருந்து பாலூட்டிய இந்தப் பெண்மணி இப்போது அக்பர் மனதில் கலந்தது நஞ்சை!

பைராம்கான் ஷையா பிரிவைச் சேர்ந்தவர். அரசவையில் பெரும்பான்மை யானவர்கள் சன்னி பிரிவு. ஷேக் கடாய் என்ற ஒரு ஷையா மதகுருவை ஆஸ்தான குருவாக பைரம்கான் ஆக்கியிருப்பதையும் இந்தச் சமயத்தில் சுட்டிக்காட்டிய மஹாம், “பைராம்கான் நடத்தைகள் சரியாக இல்லை. ஷையா பிரிவின் ஆதிக்கத்தை அதிகரித்து, கடைசியில் அரியணையையே கைப்பற்றும் சதித்திட்டம் ஏதோ உருவாகிக் கொண்டிருக் கிறதோ என்று அஞ்சுகிறேன்!” என்று நைச்சியமாகச் சொல்ல, சிந்தனையில் ஆழ்ந்தார் அக்பர்.

சில நாட்கள் கழித்து பைராம்கானுக்கு ஓய்வு தரப்படுவதாகவும், அவர் மெக்காவுக்கு புனித யாத்திரை செல்ல ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் ஓர் ஆணை அக்பரிடமிருந்து பைராம்கானுக்கு வந்து சேர்ந்தது. அக்பரை நேரில் சந்தித்து விடை பெறும் சந்தர்ப்பம்கூடத் தனக்குத் தரப் படாதது குறித்து பைராம்கானுக்கு மிகுந்த வருத்தம்தான்! எனினும், அரசுக்கு சேர வேண்டிய ஆவணங்கள், குதிரைகள், போர் உடை, இருக்கை, இலச்சினைகள் எல்லா வற்றையும் அக்பருக்குத் திருப்பி அனுப்பினார் அவர். “பதவியில் இல்லை என்ற செய்தி கேள்விப்பட்ட உடனே அவரை மொய்த்துக் கொண்டிருந்த கூட்டம் ஒரே நாளில் காணாமல் போய்விட்டது!” என்கிறார் வரலாற்று ஆசிரியர் காஸிம்

ஃபெரிஷ்டா!

மிகவும் நெருங்கிய சில நண்பர்களோடு பஞ்சாப் வரை போன பைராம்கானின் மனம் மாறியது. எல்லையருகே, அவரிடம் விசுவாசம் கொண்ட வீரர்கள் சேர்ந்து கொள்ள, ‘வீரம் மிகுந்த நான் இப்படித் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு நாட்டைவிட்டே போவதா? என் போர்க் குணம் எங்கே போய்விட்டது?’ என்று நினைத்த மாத்திரத்தில் ‘அக்பருடன் மோத வேண்டியதுதான்’ என முடிவுசெய்து ஏற்பாடுகளில் இறங்கினார் பைராம். உடனே அக்பர் அனுப்பிய படை ஒன்று கிளம்பிச் சென்றது. பைராம்கான் படையைத் தோற்கடித்தது. பைராம்கான் சிறைப்படுத்தப் பட்டார். தளபதிகளால் மிகவும் கௌரவமாக நடத்தப்பட்ட பைராம்கான், அக்பர் முன்னிலையில் அழைத்து வரப்பட்டார். பல நாட்களுக்குப் பிறகு மன்னரும் - முன்னாள் கார்டியனும் சந்தித்தவுடன் இருவருமே உணர்ச்சிவசப்பட்டார்கள். எழுந்து வந்து பைராம்கானை அணைத்துக் கொண்ட அக்பர், அவரை தன்க்கு நெருக்கமாக அமரச்சொல்லி கனிவோடு கீழ்க்கண்டவாறு கேட்கலானார்.

“பைராம்! என்னைத் தூக்கி வளர்த்தவர் நீங்கள். என் தந்தையின் ஸ்தானத்தில் உள்ளவர். எனக்கெதிராகப் படையோடு நீங்கள் வருவதைக் கேள்விப்பட்டவுடன் என் மனம் மிகவும் கஷ்டப்பட்டது. என்ன வேண்டும் தங்களுக்கு? கேளுங்கள். தருகிறேன்! தங்கள் வீரத்தைக் காட்ட விருப்பமா? பெரும் படையைத் தங்களிடம் ஒப்படைக்கிறேன். வழிக்கு வர வேண்டிய அரசுகள் பல இந்தியாவில் பாக்கி இருக் கின்றன! அல்லது நிம்மதியாக ஓய்வெடுக்க வேண்டுமா? இங்கேயே என்னுடன் தங்கலாம். சகல சௌகரியங்களும் செய்து தந்து தங்கள் குடும்பத்தைக் கவனித்துக் கொள்கிறேன். அல்லது பக்தி மார்க்கத்தில் மனதைத் திருப்ப விருப்பமா? தங்கள் புனிதப் பயணத்துக்கு எல்லாவித ஏற்பாடுகளும் செய்துத் தரத் தயாராக இருக்கிறேன்! எனக்கெதிராகப் படை திரட்டும் வேலை தங்களுக்கு வேண்டாம் பைராம்!” என்றார் அக்பர்.

பதினேழு வயது நிரம்பிய அக்பரின் குரலில் இருந்த கம்பீரமும் கனிவும் அவர் உறுதியாக உட்கார்ந்திருந்த தோரணையும் தன் கண்களை ஊடுருவிய அவர் பார்வையும் ‘நான்தான் இனி இங்கு தலைவன்!’ என்பதை பைராம்கானுக்குச் சொல்லாமல் சொன்னது!

மெல்லிய குரலில் பைராம்கான் சொன்னார், “பாதுஷாவின் நம்பிக்கையை நான் இழந்த பிறகு இங்கு இருப்பதில் அர்த்தம் இல்லை என்பது என் பணிவான கருத்து. என்னைத் தாங்கள் மன்னித்ததே என் நெஞ்சை நிறையச் செய்துவிட்டது. நான் புனித மெக்காவுக்குப் போகவே விரும்புகிறேன். மன்னர் அனுமதி அளிக்க வேண்டும்!”

இதைத் தொடர்ந்து பைராம்கானுக்கு ஆண்டுக்கு 50,000 ரூபாய் ஓய்வூதியம் அளிக்க ஆணை பிறப்பித்த அக்பர், அவருடன் மெக்கா பயணிக்க உதவியாளர்கள் குழு ஒன்றையும் அனுப்பி வைத்தார். குஜராத் சென்று, பிறகு அரேபியாவுக்கு பைராம்கான் குழு கடற்பயணம் மேற்கொள்வதாகத் திட்டம்.

ஜனவரி - 1561...

குஜராத் கடற்கரையில் தன்னுடன் பயணித்தவர்களுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த பைராம்கானை ஒரு ஆப்கானிய இளைஞர் நெருங்கி வணங்கினார். பெயர் முபாரக்கான் லோஹானி. “யாரப்பா நீ?”

என்று பைராம்கான் வினவ, தன் தந்தையின் பெயரைக் குறிப்பிட்ட அந்த இளைஞர் “அக்பரோடு சிகந்தர் ஷா சார்பில் போரிட்ட என் தந்தை கைதியாக்கப்பட்ட பிறகு அவருடைய தலையைத் தாங்கள் துண்டித்தது நினைவிருக்கிறதா?” என்று கேட்ட அந்த இளைஞரின் கரம் இடையை நோக்கிச் சென்றது. குறுவாள் ஒன்று வெளிப்பட்டுப் பளிச்சிட்டது. பைராம்கான் பதைபதைப்புடன் எழுந்து தற்காத்துக் கொள்வதற்குள் அவர் மீது பாய்ந்த அந்த இளைஞர் ஆவேசத்துடன் பைராம்கான் மார்பில் பலமுறை வாளைப் பாய்ச்ச, அங்கேயே சரிந்து மணற்பரப்பில் விழுந்து இறந்தார் பைராம்கான்...

வெற்றிச் சின்னம்

ஆட்டம் போட்ட ஆதாம்கான்!

பைராம்கானின் உறவைத் துண்டித்ததில் பாட்டனார் பாபரின் கண்டிப்பைப் பேரப் பிள்ளை காட்டியது உண்மையென்றாலும் தந்தை ஹுமாயூனின் சாத்வீக குணமும் தேவையான அளவுக்கு அக்பரிடம் இருந்தது. பைராம்கான் கொலையுண்ட பிறகு, அவருடைய

குடும்பத்துக்குச் சகல வசதிகளும் செய்துத் தந்து அரண்மனையில் தன்னோடு வைத்துக்கொண்டார் மன்னர். பைராம் கானின் நாலு வயது மகன் அப்துற் ரகீமுக்கு கார்டியனாகவும் இருந்தார். பிற்பாடு அக்பரின் அரசவையை அலங்கரித்த மிகத் திறமையான பிரபுக்களில் ஒருவராக அப்துற் ரகீம் முன்னேறிப் பெருமை பெற்றது வேறு விஷயம்!

பைராம்கானின் மறைவுக்குப் பிறகு ஓராண்டு கழித்து அரண்மனைக்குள் யார் நுழைந்து பார்த்திருந்தாலும் எதிர்காலத்தில் அக்பர் ‘மாமன்னர்’ என்று உலகப் புகழ் பெறப்போகிறார் என்று சத்தியமாக ஒரு பேச்சுக்குக்கூட சொல்லியிருக்க மாட்டார்கள்! அந்த அளவுக்கு நிலைமை ‘துர்தேவதைகளின்’ கையில் சிக்கிச் சீரழிந்திருந்தது. தன்னைக் கைப்பாவையாக ஆக்கும் அரண்மனை சதித் திட்டங்களைத் திட்டவட்டமாகச் சமாளிக்க முடியாமல் அக்பர் சற்றுத் திணறியது என்னவோ நிஜம்!

‘தலைமை துர்தேவதை’யாக இருந்தவள் செவிலித்தாய் மஹாம் அங்கா! இவளுக்குப் பிறந்தது ஆதாம்கான் என்னும் ஒரு மிருகம்! பொறுப்பு உணர்ச்சி எதுவும் இல்லாமல் பேயாட்டம் மட்டுமே போடத் தெரிந்த இந்த வெறியனை, பைராம்கான் இருந்த இடத்துக்குக் கொண்டுவர விரும்பினாள் ஆதாம்கானின் தாய் மஹாம் அங்கா. ஆரம்பக் கட்டத்தில் குழப்பத்தில் இருந்த அக்பரும் ஆதாம்கானை ஒரு தளபதியாகப் பதவியில் அமர்த்தி மால்வா பிரதேசத்துக்கு ஒரு படையுடன் அனுப்பினார்.

மால்வாவை ஆண்டுவந்த பஸ்பகதூர் ஒரு உல்லாசப் பேர்வழி! அரண்மனைக்குள் ‘சர்வதேச அழகிகள் மாநாடு’ நடக்கிறதோ என்று எண்ணும் அளவுக்கு அவரது அந்தப் புரம் வடக்கே பிரசித்தி பெற்றிருந்தது! மனிதர் உச்ச ஸ்தாயியில் பிருகாக்களை உதிர்த்துப் பிரமாதமாகப் பாடுவார். இந்தியில் அருமையான கவிதைகளும் இயற்றுவார். எப்போதும் அழகிகள் அவரைச் சூழ்ந்தவண்ணம் இருந்ததால் பஸ்பகதூரிடம் இருந்து சரமாரியாக வந்தது அநேகமாகக் காதல் கவிதைகளே என்பதைச் சொல்லத் தேவையில்லை!

பகதூரின் அந்தப்புரத்தில், சொக்கவைக்கும் அழகுடன் அலங்கார தேவதையாக வளைய வந்தவள் ரூப்மதி. பார்ப்பவர்களின் நாடித் துடிப்பை உடனடியாக அதிகரிக்கச் செய்த இந்தப் பேரழகியை அங்கம் அங்கமாக வர்ணித்து மன்னர் பாடிய கிளுகிளுப்பூட்டும் கவிதைகள் இன்றளவும் மால்வா பகுதியில் பிரபலம்!

என்ன செய்ய? ஆஸ்தான கவிஞராக இருக்க வேண்டியவர் மன்னராக இருந்தது தான் பிரச்னையாகப் போய்விட்டது! அதற்கேற்ப மொகலாயப் படை ஊருக்கு வெகு அருகில் வரும் வரை பகதூருக்குத் தகவல் இல்லை! காலம் கடந்த நிலையில் சொகுசான தலையணைகளிலிருந்து வெளிப்பட்ட பஸ்பகதூர் பயந்து பதுங்க வில்லை என்பதைச் சொல்லியாக வேண்டும். ஆனால், அவசரக்கோலத்துடன் வீரர்களைத் திரட்டி மொகலாயப்படையுடன் மோத முடியுமா? போர் நீடித்தது சில மணி நேரமே. காயங்களுடன் காட்டுக்குள் தப்பி ஓடுவதற்கு முன் பஸ்பகதூர் தன் விசுவாசமான சில வீரர்களிடம் கீழ்கண்டவாறு ஆணையிட்டார்.

“அந்தப்புரத்துப் பெண்கள் யாரும் மொகலாயர்கள் கைகளில் சிக்க விடாமல் கொன்றுவிடுங்கள். குறிப்பாக என் அருமை ரூப்மதி! இந்த ஆதாம்கானைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் கையில் இவள் சிக்கினால் அலங்கோலப்படுத்தி விடுவான்... எச்சரிக்கை!”

அந்தப்புரத்தில் இருந்ததோ நூற்றுக் கணக்கில் பெண்கள். எப்படியோ மொகலாயர் கண்ணில் படாமல் உள்ளே நுழைந்த மால்வா வீரர்கள் சிலரே. இவர்களால் விரைவாகச் செயல்பட்டு தங்கள் மன்னரின் ஆணையை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியவில்லை. பல பெண்கள் நடுங்கிப்போய் அங்கும் இங்கும் ஒளிந்து கொண்டிருந்ததும் பெரும் பிரச்னையாக இருந்தது. அதற்குள் ஆதாம்கானின் படை உள்ளே நுழைந்துவிட்டது. ஒரு மூலையில் பயந்த விழிகளுடன் பதுங்கியிருந்த ரூப்மதியைக் கடைசி நிமிடத்தில் பார்த்துத் திகைத்த பகதூரின் மெய்க்காவலன் ஒருவன் (அலி) அவள்மீது அவசரத்துடன் கோணல் மாணலாக வாளை வீச, அந்த ஆரணங்கின் அங்கமெங்கும் காயங்கள் ஏற்பட்டதுதான் மிச்சம்!

ஆதாம்கானின் கொலைவெறி பற்றி மால்வா மன்னர் கேள்விப்பட்டிருப்பதைப் போலவே ரூப்மதியின் கொள்ளை அழகு பற்றியும் ஆதாம்கான் கேள்விப்பட்டிருந்தான்! தலை உருளல்கள், சூறையாடல்கள் எல்லாம் ஆசை தீர நடந்தேறிய பிறகு வெற்றிக் களிப்புடன் மஞ்சத்தில் மல்லாந்து மதுவைச் சுவைத்த ஆதாம்கான் கேட்ட முதல் கேள்வி - “அந்தப் பெண்... ரூப்மதி எங்கே?”

குருதி வழியக் கட்டியிழுத்து வந்தார்கள் காரிகையை. அந்தப் பரிதாபநிலையிலும் ஆதாம்கானை அவள் அழகு எழுந்து நிற்க வைத்தது...

ஆனால், அங்கே நடந்ததென்னவோ வேறு!

அருகில் வந்து காலடியில் வீழ்ந்த ரூப்மதியை அந்த வில்லன் அணைத்துத் தூக்கப் பார்த்தபோது... அவள் தலை தொங்கியிருந்தது. தன் உடையிலோ, ஆபரணத்திலோ ஒளித்து வைத்திருந்த கடும் விஷத்தை வரும் வழியிலேயே விழுங்கித் தன் வாழ்வைக் கனகச்சிதமாக முடித்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண்!

இதனாலோ என்னவோ, ஆவேசம் வந்தவனைப் போல ஆதாம்கான் “அந்தப் புரத்தில் அகப்பட்ட வயதான பெண்களின் தலைகளைச் சீவித் தள்ளுங்கள். இளம் பெண்கள் இருக்கட்டும். பிற்பாடு உபயோகப் படுவார்கள்!” என்று கர்ஜித்தான்.

மதுக்கிண்ணங்களை ஏந்தியவாறு ஆதாம் கானும், கொலைவெறியில் அவனுக்கு இணையான உப தளபதி ஃபிர்முகமதுவும் ஜாலியாக அமர்ந்து ஜோக்கடித்துக் கொண்டிருக்க, வரிசையாக அவர்கள்முன் தலைகள் குவிந்தன. இந்தக் காட்சியை நேரில் கண்டு தன் ஆட்சேபணையைத் தெரிவித்த (பலனில்லை!) வரலாற்று ஆசிரியர் பாதானி ‘பெண்களும், பிறகு முதியவர்களும், முல்லாக்களும் வெட்டிக் கொல்லப் பட்டார்கள். பலர், தங்கள் மார்போடு புனித குர்-ஆனை அணைத்துக் கொண்டிருந்தார்கள். ஆதாம்கான் எதைப் பற்றியும் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை!’ என்று குறிப்பிடு கிறார்.

இந்த மால்வா வெற்றியைத் தொடர்ந்து ஆதாம்கான் மனதில் மேலும் ஆசைகள் கிளம்பின. சூறையாடிய பொன்னையும் பொருளையும் பிடிபட்ட யானைகளையும் தானே வைத்துக்கொண்டான் அவன்!

உடனே அக்பருக்குச் சேதி போனது. சினம் பொங்கியது. மஹாம் அங்காவுக்குப் பயந்துகொண்டு மன்னரிடம் யாரும் முழு விவரங்களையும் கூறாத நிலையில், படையுடன் மால்வா நோக்கித் தானே கிளம்பினார் அக்பர். கூடவே தொத்திக் கொண்டாள் மஹாம் அங்கா.

மால்வா அரண்மனைக்குள் டெல்லி பாதுஷா நிகழ்த்திய திடும் பிரவேசம் கண்டு திகைத்துப்போன ஆதாம்கான், ஓடிவந்து அக்பர் முன் மண்டியிட்டான். “நானே முறையாக எல்லாவற்றையும் தங்கள் காலடியில் சமர்ப்பிக்க டெல்லி கிளம்பிக் கொண்டிருந்தேன்!” என்று பசப்பினான். தளபதியின் வார்த்தைகளை மன்னர் நம்பவில்லை என்று கேள்வி. எனினும், மஹாம் அங்கா, தன் சாமர்த்தியத்தால் ‘விசாரணை கமிஷன்’ எதுவும் நியமிக்கப் படாமல் பார்த்துக்கொண்டாள். ஆதாம்கான் அப்போதைக்குத் தப்பித்தாலும் மன்னர் ஒரு எரிச்சலுடனேயே அதற்குப் பிறகு தளபதியை நடத்தினார். (ஒரு கொடூரமான துணுக்குச் செய்தி: அந்தப்புர பெண்களையெல்லாம் கொன்றுவிட்ட ஆதாம்கான், இரண்டு அழகிகளை மட்டும் ஒளித்துவைத்துக் கொண்டிருந்தான். இரவில் மகனின் அறையில் உறங்கிக்கொண்டிருந்த அவர்களைப் பார்த்துத் திடுக்கிட்ட மஹாம் “யார் இவர்கள்?” என்று கேட்க, ஆதாம்கான் விஷயத்தைச் சொன்னான். “முட்டாள்! நாளை அக்பரிடம் இவர்கள் தப்பிச் சென்றால் நீ போட்ட வெறியாட்டமெல்லாம் சந்தி சிரிக்குமே... பிறகு, உன் கதி என்னாகும்?” என்று பதற்றப்பட்ட அவள், தூக்கத்தில் இருந்த அந்தப் பெண்களைக் கழுத்தை நெரித்துக் கொலை செய்தாள்!)

ஆதாம்கானைத் தன்னோடு வரச்சொல்லி ஆணையிட்ட அக்பர், மால்வா பிரதேசத் துக்கு ஆளுநராக உப தளபதி ஃபிர்முகமதுவை நியமித்துவிட்டு ஆக்ரா திரும்பினார். திரும்பும் வழியில் ஒரு காட்டுப் பகுதியைக் கடக்க நேரிட்டது. சற்று நேரம் அங்கு தங்கி வேட்டையாடியபோது புலி ஒன்று உறுமிக் கொண்டு வர, வாளை உருவிக்கொண்டு பாய்ந்த அக்பர், அந்தப் புலியை ஒரே வீச்சில் கொன்று சாய்க்க... அதைக் கண்டு எல்லோரும் பிரமித்துப் போனதாக அக்பரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய அப்துல் ஃபஸல் குறிப்பிடுகிறார்.

ஒருவேளை, ஆதாம்கான் மீது மன்னருக்கு இருந்த கோபமெல்லாம் புலிமீது திரும்பி யிருக்கலாம்!

ஆக்ரா வந்துசேர்ந்த அக்பர், காபூலில் வசித்துக் கொண்டிருந்த தந்தை ஹுமாயூனின் நண்பராக அட்காகான் என்ற ஓர் அறிஞரை வரவழைத்து (நவம்பர் 1561-ல்), அவரைப் பிரதம அமைச்சராக நியமித்தார். தன் ஆலோசனையைக் கேட்காமல் இந்த நியமனம் நிகழ்ந்தேறியது கண்டு மஹாம் அங்காவைக் கவலையும் பீதியும் பிடிக்க, யோசனையில் ஆழ்ந்தது அந்தப் பெண் நரி!

இதற்கிடையே, மால்வா ஆளுநராக ஆக்கப்பட்ட ஃபிர்முகமது, தன் படையுடன் சுற்றுப்புறத்து ஊர்களைச் சூறையாடு வதையும், ஒரு குட்டி செங்கிஸ்கான் கணக்கில் மக்களை வெட்டித் தள்ளுவதையும் வாடிக்கையாகக் கொள்ள, காட்டுப் பகுதியில் பதுங்கியிருந்த பஸ்பகதூருக்கு வசதியாகப் போய்விட்டது. அண்டைப் பிரதேசங்களை ஆண்டுவந்த குறுநில மன்னர்களை இணைத்துப் படையொன்றை விரைவாகத் திரட்டிக்கொண்டு வந்தார் முன்னாள் மால்வா மன்னர். நடந்த போரில் ஃபிர்முகமது தோற்றுப்போய் ஒரு குதிரையில் ஏறித் தப்பிக்கப் பார்த்தான். அவனைப் பஸ்பகதூரின் வீரர்கள் துரத்த... வழியில் குறுக்கிட்ட நர்மதா நதியைக் கடக்கப் பார்த்த ஃபிர்முகமதுவைக் குதிரையோடு சேர்த்து வெள்ளம் அடித்துக்கொண்டு போனது!

மால்வா - மறுபடி பஸ்பகதூர் கைக்குப் போய்விடவே, அக்பர் தலையிலடித்துக் கொண்டு இன்னொரு படையை அனுப்ப வேண்டியிருந்தது. போரில் தோற்றுச் சிறைப் பட்ட பகதூர், அக்பரிடம் சரணாகதி அடைய... மன்னிப்புக் கிடைத்தது. அதற்குப் பிறகு, அக்பரின் அரசவையில் ஒரு முக்கிய பிரமுகராகச் செல்வாக்குடன் பல ஆண்டுகள் வாழ்ந்து காலமானார் பஸ்பகதூர்.

1562 பிறந்தது. புத்தாண்டு அக்பரின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் மொகலாய ஆட்சியிலும் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. இந்தத் திருப்பம் ஏற்படுத்திய விளைவுகள் சரித்திரப் பிரசித்தி பெற்றவை...

ஆஜ்மீரில் இருந்த க்வாஜா மொய்தீன் சிஷ்டி என்ற ஞானியின் கல்லறைக்குச் சென்று வணங்குவதற்காக அக்பர் ஜனவரி மாதம் அந்த

ஊருக்குச் சென்றார். அப்போது, அருகில் இருந்த ஜெய்ப்பூருக்கும் மன்னர் வருகை தர, அவரை மிகுந்த மரியாதையோடு வரவேற்றார். ராஜபுத்திர மன்னர் பார்மால் (சில வரலாற்று ஆசிரியர்கள் 'பிஹாரிமால்' என்று அழைக்கிறார்கள்). அதைத் தொடர்ந்து, இந்திய மக்களுக்கு வியப்பும் மகிழ்ச்சியும் தந்த ஒரு நிகழ்ச்சி அங்கே நடந்தது!

ராஜபுத்திர மன்னரின் மகளும், மொகலாய பாதுஷாவும் கண்ணோடு கண் நோக்க... அது திருமணத்தில் முடிந்தது! ஜெய்ப்பூர் இளவரசியின் தம்பி பகவான்தாஸ், அக்பருடைய முக்கிய அமைச்சர்களில் ஒருவராகவும் நியமிக்கப்பட்டார்.

இப்படியாகத்தான் முதல் முறையாக ராஜபுத்திர - மொகலாய உறவு துளிர்விட்டது! அதுமட்டுமல்ல... இந்த ராஜபுத்திர மனைவி மூலம் அக்பருக்குப் பிறந்தவர்தான் - பிற்பாடு பட்டத்துக்கு வந்த ஜஹாங்கீர்! பாதி ராஜ புத்திரரான(!) ஜஹாங்கீரும் ராஜபுத்திரப் பெண்களை மணந்துகொண்டது பிற்பாடு!

வர வர அக்பர் தன் பிடியிலிருந்து மெள்ள நழுவுவது செவிலித்தாய் மஹாம் அங்கா வுக்குப் புரிந்தது. ஆத்திரத்தில் தூக்கமிழந்த அந்தப் பெண்மணி, புதிய பிரதம அமைச்சர் அட்காகானைத் தீர்த்துக்கட்டினால்தான் சரிப்படும்... பிறகு ஆதாம்கானை அந்தப் பதவிக்குச் சிபாரிசு செய்யலாம் என்று முடிவு கட்டினாள். ஆனால், இந்த விஷயத்தில் தாயைவிட அவசரப்பட்டான் ஆதாம்கான்!

மிகுந்த பொறுப்புடனும் நேர்மையுடனும் பணியாற்றிவந்த அட்காகான், ஒரு நாள் காலை, நெருங்கிய நண்பர்களுடன் அமர்ந்து புனித குர்-ஆன் ஓதிக் கொண்டிருந்தபோது உள்ளே வெறியோடு புகுந்த ஆதாம்கான், அந்த முதியவரின் மார்பில் பலமுறை வாளைப் பாய்ச்சிக் கொன்றான். கூடி யிருந்தோர் பதறி அலற, திரும்பி ஓடினான் அந்தக் கொலைகாரன். அப்போது பக்கத்து அறைக் கதவு திறந்தது. ஏதோ சத்தம் கேட்டு வெளியே வந்து நின்றவர்... மன்னர் அக்பர்!

தரையில் பிரதம அமைச்சர் ரத்த வெள்ளத்தில் இறந்துகிடந்த காட்சியைப் பார்த்த அக்பர் திகைத்துப் போனார். விநாடியில் விஷயத்தை யூகித்த மன்னரின் கரம் இடையிலிருந்த வாளை உருவியது - தான் அரசர் என்ற நினைப்பு வர, மறுபடி வாளை உறைக்குள் போட்டுக்கொண்ட அக்பர், கண்கள் சிவக்க நிமிர்ந்து ஆதாம் கானைப் பார்த்தார். "ஏன் இப்படி நடந்தது?" என்ற கேள்வி மன்னரிடமிருந்து உறுமலாக வெளிப்பட்டது.

"பாதுஷா! என்னை மன்னியுங்கள்... அதாவது... வந்து..." என்று நடுங்கிக் குழறிய வண்ணம் தன் கையை நீட்டியவாறு அக்பரை நெருங்கினான் ஆதாம்கான். அவனை மேலே பேசவிடாமல் மின்னல் வேகத்தில் முஷ்டியை உயர்த்தி அக்பர் வீசிய குத்து பேரிடியாக அவனைத் தாக்க, மல்லாந்து வீழ்ந்தான் மஹாம் அங்காவின் மகன். நடந்த கொடுமையைக் கூடியிருந்தோர் கலங்கிய வண்ணம் பாதுஷாவிடம் விவரித்தார்கள். உடனே காவலர்கள் அழைக்கப்பட்டனர். அக்பர் ஆணையின்படி ஆதாம்கானின் கால்களையும் கைகளையும் கயிற்றால் கட்டினார்கள். அவனை அலாக்காக உப்பரிகைக்குத் தூக்கிச் சென்றார்கள். கீழே மைதானத்தில் இருந்த சில தளபதிகளும் மற்ற வீரர்களும் திகைப்போடு அண்ணாந்து பார்க்க, "கீழே வீசியெறியுங்கள் இவனை!" என்றார் அக்பர்.

சுமார் நாற்பது அடி உயரத்திலிருந்து தூக்கியெறியப்பட்டு, எலும்புகள்

முறிந்து படுகாயப்பட்டும் ஆதாம்கானின் உயிர் போகவில்லை! மறுபடி மேலே ஆதாம் கானைத் தூக்கி வரச் செய்து இரண்டாவது முறை அவனைத் தூக்கிப் போடச் செய்தார் அக்பர். விழுந்த விநாடியில் இந்த முறை மண்டை பிளந்து செத்துப்போனான் ஆட்டம் போட்ட அந்தத் தளபதி.

மஹாம் அங்காவை அழைத்துவரச் சொன்னார் அக்பர். நடந்த கொடுமையையும் ஆதாம்கானுக்குத் தான் அளித்த தண்டனை பற்றியும் அவரே விவரித்தார். அந்தப் பெண்மணியின் கனவுக்கோட்டைகள் சரிந்தன. அதிலிருந்து பித்துப் பிடித்ததைப் போல ஒரு இருட்டறையில் முடங்கிக் கிடந்த மஹாம் அங்கா, சில வாரங்கள் கழித்து (மே 1562-ல்) இறந்து போனாள்.



அக்பரும் ஆதாம்கானும்...! (ஒரு மொகலாய ஓவியம்!)

பைராம்கானுக்கும் மன்னருக்கும் இடையே நிலவிய நல்லுறவு அகன்று, சுமார் இரண்டாண்டுகளுக்கு மஹாம் அங்காவின் செல்வாக்கு டெல்லியை அலைக்கழித்ததாகக் கூறப்படுகிறது. இந்தக் காலகட்டத்தை ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்கள் சிலர், ‘உள்பாவை ஆட்சி (Petticoat Government)’ என்று வர்ணிக்கிறார்கள். ஆனால், ஆதாம்கானுக்குக் கிடைத்த தண்டனைக்குப் பிறகு அக்பருக்கு மிக மிக

நெருங்கியவர்கள்கூட மன்னரிடம் வாலாட்டவில்லை என்பதும், பிறகே இந்த வகையான இடையூறுகள் எதுவுமில்லாமல் அக்பரின் ஆட்சி ராஜபாட்டையில் கம்பீரமாகப் பயணிக்க ஆரம்பித்தது என்பதும் உண்மை!

மன்னருடன் நேரடியாக மோதுவதற்காக ராஜபுத்திர மாவீரர்கள் சிலர் மட்டும் காத்திருந்தனர். ஒரு வீராங்கனையும்தான்...!

சாம்ராஜ்ய விஸ்தரிப்பு!

இந்திய மண்ணில் எத்தனையோ அந்நியப் படையெடுப்புகள் நிகழ்ந்தது உண்டு. ஆனால், யாராலுமே ராஜபுத்திரர்களை மட்டும் முழுமையாக வழிக்குக்கொண்டு வரவும் முடியவில்லை, பூண்டோடு அந்த இனத்தை அழிக்கவும் முடியவில்லை என்பது வரலாற்று உண்மைகளில் ஒன்று! ஒரு சராசரி ராஜபுத்திர வீரன்கூட பெருமிதம் கொண்ட 'மண்ணின் மைந்தராக' குழந்தைப் பருவத்தில் இருந்தே வளர்க்கப்பட்டதும் ஒரு காரணம். இயற்கையாகவே தன்மானம், கற்பு... இவற்றையெல்லாம் கவித்துவத்தோடு போற்றிப் பெருமைப்படும் இனமாக அது இருந்தது. சொந்த மண்ணுக்காகப் போரிடும் போதெல்லாம் 'வெற்றி அல்லது வீரமரணம்' என்னும் உத்வேகம் இந்த வீரர்களின் நாடித் துடிப்பு வரை ஊடுருவியிருந்தது!

ஆப்கானிய போர் வீரர்களைப் போலவே, ராஜபுத்திர வீரர்களும் போருக்குக் கிளம்பு வதற்குமுன் சற்று ஓபியத்தை (ஆவேசத்துக்கு!) ஏற்றிக்கொள்வதை வழக்கமாகக் கொண் டிருந்தார்கள் (ஒரு சமயம் ஏதோ காரணத்தால் ஓபியம் விளைச்சல் இல்லாமல் போய்விட, படையெடுப்பையே அரசர் ஒருவர் தள்ளிப் போட்ட நிகழ்ச்சியும் நடந்திருக்கிறது!).

பல ராஜபுத்திரப் பெண்களும் ஆண்களைப் போலப் போர்க்களங்களில் வாளேந்திப் போர்புரிந்த சம்பவங்கள் நிறையவே உண்டு. எதிரிகளிடம் சிக்க நேரும் நிலை ஏற்பட்டால் ஜப்பானிய சமுராய் வீரர்களைப் போல வயிற்றில் வாளைப் பாய்ச்சிக்கொண்டு தற்கொலை செய்துகொள்வதும் இந்த வீராங்கனைகளுக்கு வழக்கம்!

இப்படி யாருக்குமே வளைந்து கொடுக்காத ராஜபுத்திர வம்சத்தை வெற்றிகரமாக வழிக்குக் கொண்டுவந்த முதல் மொகலாய மன்னராக அக்பரைச் சொல்லலாம்! இதற்காக மன்னர் மேற்கொண்ட 'யுத்தம்' சற்று வித்தியாசமானது. அதாவது ராஜபுத்திர அரசர்களை மாமனார்களாக ஆக்கிக் கொண்டு விடுகிற 'அன்பு யுத்தம்!' இப்படித் தான் பிற்பாடு ஜெய்ஸல்மர் மன்னரின் மகளையும் பிகானீர் அரசரின் மருமகளையும் மணந்துகொண்டார் அக்பர். பிறகு இந்த 'ராஜபுத்திர மனைவி லிஸ்ட்' மேலும் மேலும் நீண்டது!

ஆனால், மத்தியப் பிரதேசத்தில் (அப்போது கோண்ட்வானா என்று அழைக்கப்பட்டது) ஆட்சி புரிந்து வந்த ராணி துர்காவதி, அக்பரைச் சட்டை செய்யவில்லை. பல யுத்தங்களில் நேரடியாகப் பங்கேற்றுப் பழக்கப்பட்ட இந்த ராணி எந்தப் போரிலும் தோற்றதில்லை என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்!

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியாவின் பெரும் பகுதியை ஆண்ட சண்டேள இனத்தில் பிறந்தவர் துர்காவதி. பிற்பாடு அந்த இனம் செல்வாக்கிழந்து நாடில்லாமல் சிரமப்பட்டபோது

துர்காவதியின் தந்தை, சற்று வேண்டா வெறுப்பாக மகளை கோண்ட்வானா அரசருக்கு மணம் செய்வித்தார். கோண்ட்வானா அரசர் ராஜபுத்திர இனத்துக்கு இணையான உயர்ந்த குலம் அல்ல என்பதுதான் காரணம். இருப்பினும் துர்காவதி ராணியான பிறகு ஒரு கட்டுக் கோப்பான, திறமையான, வீரம் மிகுந்த சிற்றரசாக கோண்ட்வானா உருவாகியது. அரசருக்குப் பிரதான ஆலோசகராக விளங்கிய துர்காவதியின் நிர்வாகத்திறமை அதற்கு முக்கியக் காரணமாக இருந்தது.

சென்ற அத்தியாயத்தில் நாம் அறிமுகப் படுத்திய, செல்வாக்கு மிகுந்த மால்வா மன்னர் பஸ்பகதூரையே ஒரு நேரடி யுத்தத்தில் முறியடித்த துர்காவதியிடம் பெரும் காலாட்படையோடு இருபதாயிரம் குதிரை வீரர்களும் ஆயிரம் போர் யானைகளும் இருந்தன. ராணிக்குக் குறி பார்த்து துப்பாக்கியை இயக்கவும் தெரியும் (ஆம்! பாபருக்கு பிறகு துப்பாக்கிப் புழக்கம் வடநாட்டுக்கும் வந்துவிட்டது). ராணியின் ‘ஹாபி’ ஓவியம் வரைவதோ, தையல் கலையோ அல்ல - காட்டில் நாட்கணக்கில் வேட்டையாடுவது! குறிப்பாக - புலியின் உறுமல் தொலைவிலிருந்து காதில் விழுந்தால் அதைத் தேடிப் பிடித்துச் சுட்டு வீழ்த்தும் வரை தண்ணீர் அருந்தாமல் இருப்பது துர்காவதியின் வழக்கம் என்கிறது ஒரு சரித்திரக் குறிப்பு!

கணவர் இறந்த பிறகு தன் ஒரே (இன்னும் வயதுக்கு வராத) மகன் வீரநாராயண் சார்பில் நாட்டை ஆண்ட துர்காவதி, இப்போது “மொகலாய சிங்கம் தாராளமாக இங்கு வரட்டும். ஒருகை பார்க்கலாம்!” என்று முழங்கினார்.

அக்பர் - இந்த முறை தான் நேரடியாகச் செல்லாமல் - ஆஸா∴ப்கான் என்ற திறமையான தளபதியின் கீழ் ஒரு பெரும் படையை கோண்ட்வானாவுக்கு அனுப்பினார்.

கி.பி.1564-ல் நிகழ்ந்த இந்த உக்கிரமான யுத்தத்தில் வில்வித்தையில் தேர்ந்த ஆஸா∴ப்கான் எய்த அம்பு, யானை மீது அமர்ந்து சரமாரியாக ஈட்டிகளையும் அம்புகளையும் செலுத்திக்கொண்டிருந்த துர்காவதியின் இடது தோள்பட்டையில் பாய்ந்து அவரைப் படுகாயப்படுத்தியது. தோல்வி நிழலாகத் தங்கள் மீது படிய ஆரம்பித்ததைப் புரிந்துகொண்ட துர்காவதி, மொகலாய வீரர்களிடம் சிறைப்படக் கூடாது என்று முடிவுகட்டினார். கையில் குறுவாள் எதுவும் இல்லாததால் முன்னால் அமர்ந்திருந்த யானைப்பாகனிடமிருந்த அங்குசத்தைப் பறித்துத் தன் வயிற்றில் அதைப் பாய்ச்சிக்கொண்டு மரணத்தைத் தழுவினார் அந்த வீராங்கனை.

கோண்ட்வானா கோட்டைக்குள் வெற்றி முழக்கத்துடன் புகுந்தது மொகலாயப்படை! ராணியின் மகன் சிறைப்படுத்தப்பட்டார். தோற்றவர்களை மன்னிப்பதை அக்பர் பாதுஷா வழக்கமாகக் கொண்டிருந்தது தளபதி ஆஸா∴ப்கானுக்குத் தெரியாதது அல்ல. என்றாலும் இந்த முறை மன்னருக்கு வாய்ப்புத் தரவில்லை அந்தத் தளபதி. மைதானத்தின் நடுவே இளவரசரைப் படுக்க வைத்து இரக்கமில்லாமல் நூற்றுக்கணக்கான குதிரைகளை விட்டு இடறச்செய்து கொன்றான் ஆஸா∴ப்கான். தொடர்ந்து அரண்மனை சூறையாடப்பட்டது. ஒரு வாரம் செலவிட்டும் அபகரிக்கப்பட்ட பெரும் செல்வத்தில் பத்தில் ஒரு பங்குதான் எண்ண முடிந்ததாம்!

ஆஸா∴ப்கான் மனதில் ஆசை புகுந்தது. சம்பிரதாயத்துக்குப் பதினைந்தே யானை களை மட்டும் அக்பருக்கு அனுப்பினான் அவன் (தளபதிகள் முதல் வேலையாக, கைப்பற்றப்பட்ட யானைகளை

மன்னரிடம் சேர்த்தாக வேண்டும் என்று ஒரு சட்டம் அந்தக் காலத்தில் உண்டு. அப்படிச் செய்யாதது பெரும் ஒழுங்கீனமாக கருதப் பட்டது). ஆஸா∴ப்கானின் நடத்தை கண்டு கோபமுற்ற அக்பர், தளபதியைக் கைதுசெய்ய ஒரு படையை அனுப்ப, காடுகளில் ஓடிப் பதுங்கிக்கொண்டான் அவன். அங்கிருந்து பாதுஷாவுக்கு ஒரு மன்னிப்புக் கடிதம் எழுதிவிட்டு, ரகசியமாக நெடும் பயணம் மேற்கொண்டு எப்படியோ பிறகு அக்பரைச் சந்தித்தான். காலில் விழுந்து அழுதுபுரண்டு உயிர்ப்பிச்சை கேட்க, மன்னரும் தளபதியின் போர்த் திறமையை மனதில் கொண்டு மன்னித்தார்.இதற்கிடையே டெல்லியின் பிரதிநிதியாக காபூலை ஆண்டு வந்த அக்பரின் ஒன்றுவிட்ட சகோதரர் மிர்ஸா முகமது ஹகீமும் கிழக்கே ஜான்பூரில் கவர்னராக இருந்த கான் ஜமானும் அக்பரை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்த, இருவருடைய கொட்டத்தையும் அடக்கி வழிக்குக் கொண்டுவர வேண்டியதாயிற்று.

அக்பர் புகழின் உச்சிக்குப் போக நடை பயின்றது மலர்ப் பாதையில் அல்ல... போர்க் களத்திலேயே அவரது பாதி வாழ்க்கை கழிந்தது என்பதே உண்மை! 'ஓய்வெடுக்கப் பிறந்தவன் அல்ல... நாட்டு மக்களின் நன்மைக்காகத் தொடர்ந்து போர் புரிந்து சாம்ராஜ்ய எல்லைகளை விஸ்தரிப்பதுதான் அரசரின் கடமை! அப்போதுதான் ராஜ்யத்தின் நிதி இருப்பு பெருகும். மக்கள் வசதியாக வாழ முடியும்!' என்று அக்பர் அவ்வப்போது குறிப்பிடுவதுண்டு என்கிறார் அப்போது வாழ்ந்த வரலாற்று ஆசிரியர் அப்துல் ∴பஸல்.

யுத்தம் நடக்காத சமயங்களில் காட்டுக்குச் சென்று வேட்டையாடுவது அக்பருக்குப் பிடித்தமான ஒன்று! மன்னர் வேட்டை யாடுவது, பார்க்கப் பிரமிப்பூட்டும் காட்சியாக இருந்திருக்க வேண்டும்!

அக்பர் வேட்டைக்குப் புறப்பட்டால் ஏதோ ஊரையே ஒழித்துக்கொண்டு கிளம்பு கிறாரோ என்ற சந்தேகம் வருமாம்! சுமார் ஐம்பதாயிரம் வீரர்கள் முன்கூட்டியே புறப்படுவார்கள், ஆயிரக்கணக்கில் தோல் வாத்தியங்களோடு! இப்படிக் கிளம்பும் 'வேட்டைப் படை' முதற்கட்டமாக அறுபது மைல் சுற்றளவு காட்டுப் பகுதியை வியூகமாக வளைத்துக்கொள்ளும். பிறகு ஏககாலத்தில் வாத்தியங்களால் பெரும் ஒலி ஏற்படுத்திக் கொண்டு வீரர்கள் முன்னேறுவார்கள். இந்த வட்ட வடிவமான மனிதக் கோட்டை போகப் போக சுருங்கிக்கொண்டே வரும். மிருகங்களைத் தேடி காடு முழுவதும் அலையவே வேண்டாம். நாலு மைல் சுற்றளவுக்குள் நூற்றுக்கணக்கில் புலிகள், சிறுத்தைகள், யானைகள், மான்கள், காட்டுப் பன்றிகள்... என்று ஒரு கலவரமான 'சபாரி'யே உருவாகும்! இதற்கே சுமார் ஒரு மாதம் பிடிக்கும்! சொல்லியனுப்பிய பிறகு அக்பர் ஆர்வத்துடன் வந்து சேர்வார். க்ளைமாக்ஸில் வட்டத்துக்குள் சக்ரவர்த்தியின் குதிரை பிரவேசிக்கும்.

வேட்டையின்போது வில், வாள், ஈட்டி, துப்பாக்கி... இப்படியாக அத்தனை ஆயுதங்களையும் மாற்றி மாற்றி உபயோகித்து மிருகங்களை வீழ்த்துவார் அக்பர். தொடர்ந்து ஐந்து நாட்கள் வட்டத்தைவிட்டு வெளியே வராமல் அக்பர் வேட்டையாடியதுண்டு! மன்னர் வேட்டையாடும் வரை வேறு யாரும் உள்ளே செல்லக்கூடாது. பிறகு அவர் கை உயர்த்தியதும் மற்ற தளபதிகள் புகுந்து தங்கள் பங்குக்கு வேட்டையில் ஈடுபடுவார்கள். வி.ஐ.பி-க்கள் முடிந்த பிறகு கடைநிலை ஊழியர்களுக்கும் சான்ஸ் உண்டு!

பழக்கப்பட்ட சிறுத்தைகள் நூற்றுக் கணக்கில் அக்பர் அரண்மனையில் இருந்தன. தந்தை ஹுமாயூன் இரண்டாவது

முறையாக டெல்லியைக் கைப்பற்றியபோது முதன் முறையாக ஒரு சிறுத்தையை, குறுநில மன்னர் ஒருவர் இளவரசர் அக்பருக்குப் பரிசாகத் தந்தார். பார்த்த கணத்திலேயே அக்பருக்குச் சிறுத்தையை மிகவும் பிடித்துப் போய்விட்டது. அராபியர்கள் வேட்டைக்காக வல்லூறுகளைப் பழக்கப்படுத்திப் பயன் படுத்தியது போல அக்பர் சிறுத்தைகளைப் பழக்கியிருந்தார்! திறமைக்கேற்ப சிறுத்தைகள் கழுத்தில் அணிய ஆபரணங்கள் உண்டு!

இந்த வகை வேட்டையில் சிறுத்தைகளின் கண்கள் துணியால் கட்டப்பட்டிருக்கும் (மானைப் பார்த்தவுடன் துரத்தாமல் இருக்க!). அவை உட்காருவதற்காக விலையுயர்ந்த கம்பள விரிப்புகள் போடப் படும்! பிறகு ஒரே சமயத்தில் அத்தனை சிறுத்தைகளின் கண் மறைப்புகளும் அவிழ்த்து விடப்படும். எந்தச் சிறுத்தை மிக அதிக எண்ணிக்கை இரைகளைக் கொல்கிறது என்று 'பெட்' கட்டப்படுவதும் உண்டு!

ஒருமுறை, மன்னரின் சிறுத்தையொன்று மானைப் பிடிக்க, விஸ்தாரமான ஒரு கிடுகிடு பள்ளத்தை ஒரே பாய்ச்சலில் தாவிச் சாதனை புரிய, அதற்கு மலர் மாலையோடு வைரங்கள் பதித்த நெக்லஸ் ஒன்றையும் கழுத்தில் அணிவித்து ஊர்வலமாக டெல்லி வீதிகளில் அழைத்துச் சென்றார் பாதுஷா! "மனிதர்களுக்கு மட்டுமல்ல, சில மிருகங் களுக்கும் சற்று அதிக அளவு திறமை உண்டு. அதை நாம் மதிக்க வேண்டும்!" என்பது அக்பரின் விளக்கம்! (காடுகளுக்குச் சென்று வேட்டையாடுதல் அக்பரின் வாழ்நாள் முழுவதும் ஹாபியாக இருந்தது. தன்னுடைய ஐம்பத்து நாலாவது வயதில்கூட, பௌர்ணமி நாளன்று இரவு வேட்டைக்குச் சென்ற மன்னர், கட்டுமஸ்தான கலைமான் ஒன்றைத் துரத்திக்கொண்டு ஓடி "கையாலே பிடித்துக் காட்டுகிறேன் பாருங்கள்!" என்று சொல்லி விட்டு முயற்சிக்க, மன்னரின் கைப்பிடியில் சிக்கி 'வணங்கிய' மான், திடீரென்று திமிறிப் பாய்ந்தபோது அக்பர் பாதுஷாவுக்கு வயிற்றுக்குக் கீழ் விரைப்பகுதியில் கொம்பு ஊடுருவி காயப்படுத்திவிட்டது. இரண்டு மாதங்கள் சிகிச்சையில் இருந்தார் அரசர். 'சக்ரவர்த்தியின் பிரத்யேகமான அந்தக் காயத்துக்குத் தினமும் மருந்து பூசும் பெரும் பேறு எனக்குக் கிடைத்தது!' என்று உணர்ச்சிகரமாகக் குறிப்பிடுகிறார் 'அக்பரின் வாழ்க்கை வரலாற்றை' எழுதிய அப்துல் ஃபஸல்!)

களத்திலும் சரி, காட்டிலும் சரி - வெற்றிகள் அடுக்கடுக்காக வந்து சேர்ந்தாலும், ராஜபுத்திர வம்சத்தின் பெருமையையும் வீரத்தையும் பறைசாற்றிக் கொண்டிருந்த ஒரு கோட்டை இன்னும் அக்பரிடம் வழிக்கு வராமல் இருந்தது. அதுதான் மேவார் ராஜயத்தில் உள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற சித்தூர் கோட்டை.

அங்கே ஆண்டுவந்த மன்னர் ராணா உதய்சிங், டெல்லி பாதுஷாவிடம் மண்டியிட மறுத்தது மட்டுமல்லாமல் ஜெய்ப்பூர் மன்னர், மகளை அக்பருக்கு மணமுடித்தது குறித்து 'அருமையாகப் பெற்ற மகளைப் போயும் போயும் மொகலாய மன்னனின் அந்தப்புரத்துக்கு அனுப்பிய இவனெல்லாம ராஜபுத்திரனா?!' என்று இகழ்ச்சியுடன் குறிப்பிட்ட தகவல் டெல்லிக்குப் போய்ச் சேர்ந்தது..!

வீழ்ந்தது சித்தூர் கோட்டை!

அக்டோபர் 24, 1567...

மேவாரில் உள்ள புகழ்பெற்ற சித்தூர் கோட்டையை

முற்றுகையிட்டது அக்பர் தலைமையில் வந்துசேர்ந்த மொகலாயப் படை. சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு ராஜபுத்திர இனத்தின் வீரத்தின் உச்சக்கட்ட சின்னமாக விளங்கிவந்த அந்தக் கோட்டை அமைந்திருந்தது ஏடாகூடமான ஒரு மலையுச்சியில். கோட்டை வாயிலை அடையச் சுமார் இரண்டு மைல் சரிவான, கரடுமுரடான மலைமீது ஏற வேண்டும். மேலிருந்து அம்பு மழை பொழியும்போது இதைச் சாதிப்பதில் உள்ள சிரமங்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை! ஆனால், அக்பர் பாதுஷா, இந்தக் கோட்டையைக் கைப்பற்றியாக வேண்டும் என்பதில் முடிவாக இருந்தார். சித்தூர் கோட்டை ராஜபுத்திர இனத்தின் சுதந்திர உணர்ச்சியைக் காலங்காலமாக பறைசாற்றிக்கொண்டு இருந்ததுதான் முக்கியக் காரணம். ராஜபுத்திரர்களின் லட்சியத் தலைவராக விளங்கிவந்தார் அதன் அரசர் ராணா உதய்சிங். அக்பரோ மொகலாய வம்சத்தின் உன்னதமான தலைவர். இந்த இருபெரும் 'தலை'களும் மோதியாக வேண்டியது காலத்தின் கட்டாயமாகப் போய்விட்டது..!

ஆனால்...

நடந்தது என்னவோ ஆன்ட்டி க்ளைமாக்ஸ்!

எல்லாவற்றையும் இழந்து கடைசி ஆளாக நிற்கும் நிலை ஏற்பட்டாலும், சண்டை என்று இறங்கிவிட்டால் பிறகு பின்வாங்காமல் வாளைச் சுழற்றிப் போரிட்டு வீரசொர்க்கம் புகுந்தாக வேண்டும் என்பதே ராஜபுத்திரர்கள் வழக்கமாகக் கொள்ளும் வீர சபதம்! ராணா உதய்சிங்கோ சுமார் ஏழாயிரம் வீரர்களை மட்டும் கோட்டையைக் காக்கும் பணியில் அமர்த்திவிட்டுக் கோட்டையைவிட்டுத் தப்பிச் சென்று, தான் பிறந்த வீர இனத்துக்கு வரலாறு காணாத களங்கத்தைத் தேடிக் கொண்டார்.

சித்தூருக்குத் தென்மேற்கே எழுபது மைல் தொலைவில் ஒரு பெரும் ஏரி ஒன்றை உருவாக்கி அதன் நடுவே ஒரு அரண்மனையை ஏற்கெனவே கட்டி முடித்திருந்தார் ராணா. அங்கே தப்பிச் சென்றது ராணாவின் குடும்பம் (இந்த ஊர்தான் பிற்பாடு மேவாரின் தலைநகராகி உதய்பூர் என்று அழைக்கப் பட்டது).

சித்தூர் கோட்டையைப் பாதுகாக்கப் பணியிலமர்த்தப்பட்டிருந்த தளபதிகள் ஜெய்மால் மற்றும் பத்தாசிங். இந்த தளபதிகள் தலைமையில் ராஜபுத்திரப் படை நான்கு மாதங்களுக்கு மொகலாயப்படையைக் கோட்டைக்குள் நுழையவிடாமல் மலையடிவாரத்திலேயே தடுத்து நிறுத்தியது. கடைசியில் அவர்கள் வீரத்தை அக்பரின் நிதானமான சிந்தனையும் போர்த் தந்திரமும் வெற்றிகொண்டது.

எதிர்ப்படும் தாக்குதலை மீறி மலையேறு வதற்காகவே 'சபாத்' என்று அழைக்கப்படும் ஒரு 'நகரும் கோட்டை'யைத் தயாரிக்கச் செய்தார் அக்பர்! கற்கள், மரங்கள், இவற்றை இணைக்க உறுதியான தோல்கள் மற்றும் வரிசையாக ஜன்னல்களோடு கூடிய இந்தச் 'சுவருக்கு'ப் பின்னாலிருந்து துப்பாக்கி களையும் பீரங்கிகளையும் இயக்கியவாறு முன்னேறியது மொகலாயப்படை. அவர்களுக்கு முன்னால் ஏதோ பக்கவாட்டில், நகரும் மலைப்பாம்பு போல 'சபாத்'தை மேலும் மேலும் நகர்த்திக் கொண்டே சென்றனர், ஆயிரக்கணக்கான மொகலாய வீரர்கள்!

இரவு சூழ்ந்த வேளை...

திடீரென்று அக்பருக்கு அதிர்ஷ்டம் அடித்தது. ராஜபுத்திர வீரர்களோடு

ஆலோசனை செய்வதற்காகக் கையில் தீப் பந்தத்துடன் கோட்டை உச்சியில் வந்து நின்றார் தளபதி ஜெய்மால். பாதி மலையைக் கடந்த நிலையில், யானைமீது அமர்ந்திருந்த மொகலாய மன்னரின் கூர்மையான கண்களில் ஜெய்மால் பட, துப்பாக்கி சுடுவதில் ஏகமாகத் தேர்ச்சி பெற்றிருந்த அக்பர், குறிபார்த்து இயக்கினார் தன் துப்பாக்கியை. சீறிப்பாய்ந்து சென்ற ரவை, ஜெய்மாலின் நெற்றிப்பொட்டைத் துளைத்து அவர் மூளையைச் சிதற அடித்துவிட்டது. கோட்டை உச்சியிலிருந்து வீழ்ந்தார் அந்த வீரத் தளபதி.

இதுகண்ட ராஜபுத்திரப் படையைத் திகைப்பும் சோகமும் தாக்க... செயலிழந்து நின்றார்கள் சித்தூர் வீரர்கள். அதற்குள் கோட்டைக் கதவுகளை உடைத்துக்கொண்டு நுழைந்துவிட்டது அக்பரின் படை. கோட்டை வாயிலில் வாளைச் சுழற்றிக் கொண்டு வழிமறித்த மற்றொரு தளபதி பத்தாசிங்கும் ஆயிரக்கணக்கான ராஜபுத்திர வீரர்களும் கடைசி வரை போர்புரிந்து வீரமரணம் புகுந்தார்கள்.

அன்று சூரியன் உதித்தது மொகலாயப் படையின் சார்பில்! சரியாக விடியற் காலையில் வீழ்ந்தது சரித்திரப் பிரசித்தி பெற்ற சித்தூர் கோட்டை!

கோட்டைக்குள் நுழைந்தால்... மையத்தில் இருந்த அரண்மனையைச் சுற்றிலும் ஊர்ப் பகுதியில் ஈ, காக்கையைக்கூட காணாமல் திகைப்பில் ஆழ்ந்தார் அக்பர். ராஜபுத்திர மக்கள் கோயில்களுக்குள் பதுங்கிக் கொண்டிருப்பதாகத் தகவல் வந்தது. யானை மீது அமர்ந்திருந்த மன்னர் முகத்தில் கோபம் பரவ, குறிப்பறிந்த மொகலாயப்படை முன்னேறிப் பாய்ந்தது. கையில் அகப்பட்ட ஆயுதங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு வெளியே வந்த அக்பரின் வீரர்களோடு மோதிய ஆயிரக்கணக்கான ராஜபுத்திரர்கள் விண்ணுலகுக்கு அனுப்பப்பட்டார்கள். சுமார் பத்தாயிரம் பேர் என்று கேள்வி. முழுமையாகத் தோல்வியடைந்துவிட்ட செய்தி கேட்ட மாத்திரத்தில் கோட்டைக்குள் இருந்த அத்தனை ராஜபுத்திரப் பெண்களும் ஒருசேரத் தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்தனர்.

நகருகிறது சபாத்...

"பிற்பாடு ரத்னம்போர் கோட்டையையும் கலிஞ்சர் கோட்டையையும் அக்பர் கைப்பற்றியபோது காட்டிய நிதானத்தைச் சித்தூரை வெற்றி கொண்டபோது அவர் காட்டவில்லை. மொகலாய வீரர்கள், ஈவிரக்கம் இல்லாமல் மக்களை வெட்டித் தள்ளினார்கள். ஒருவேளை நாலு மாதங் களுக்கு அக்பர் பாதுஷாவை ராஜபுத்திர வீரர்கள் அலைக்கழித்தது அவருடைய கோபத்துக்கு ஒரு காரணமாக இருக்கலாம். தவிர, ஏதாவது நிகழ்ந்து சரித்திரப் பிரசித்தி பெற்ற சித்தூர் கோட்டை தன் கையில் சிக்காமல் போய்விடுமோ என்ற அவசரமும் கவலையும் அக்பருக்கு ஏற்பட்டிருக்கலாம்..." என்கின்றனர் வரலாற்று ஆசிரியர்கள்.

பிப்ரவரி 1569-ல் ரத்னம்போர் ராஜா சுர்ஜானாஹரனும், அதைத் தொடர்ந்து கலிஞ்சர் மன்னர் ராஜாராம்சந்தும் அக்பருடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு நண்பர்களாக ஆனார்கள். பிறகு பிகானீர் மன்னரும் ஜெய்சல்மர் அரசரும் அக்பரின் பெரும்பலத்தைப் புரிந்து கொண்டு, புத்திசாலித்தனமாகச் செயல்பட்டு மாமனார்களாக மாறினார்கள்!

ஆனால், போர் முரசு கொட்டிவிட்டுத் தப்பியோடிய ராணா உதய்சிங்கை ராஜ புத்திர இனம் மன்னிக்கத் தயாராக இல்லை. பிற்காலத்தில் 'ராஜபுத்திர மாவீரர்கள் பதிவேட்டிலிருந்து' உதய்சிங் பெயர் நீக்கப் பட்டது. அதற்குப் பிறகு எந்த ராஜபுத்திர மன்னரும் சித்தூர் கோட்டைக்குள் நுழைந்து வசிக்கவும் மறுக்கவே... சித்தூர் பொலிவிழந்து போனது 'தேவையான தருணத்தில் வீரம் காட்டத் தவறிய அவமானச் சின்னமாகப் போனவர் உதய்சிங்!' என்று

கூச்சத்தோடும் இகழ்ச்சியோடும் ராஜபுத்திர வரலாற்றில் அந்த மன்னர் குறிப்பிடப்பட்டார்.

அதே சமயம், ஆங்கிலேய வரலாற்று நூலாசிரியர்கள் 'ராணா உதய்சிங் குறித்து ராஜபுத்திரர்கள் சற்று அதிகமாக - ஓவர் ரியாக்ட் செய்கிறார்கள். ஒரு படையைக் கோட்டையில் இருத்திவிட்டுப் பின்வாங்கிப் பதுங்குவது எந்தத் தளபதியும் செய்யகூடிய ஒன்றுதான். தன் இனம் பூண்டோடு அழிவதைத் தடுக்கவேண்டி ராணா அப்படியொரு முடிவை எடுத்திருக்கக்கூடும். தவிர, சித்தூர் கோட்டை 'ஆகா.. ஓகோ..' என்று புகழப்பட்டாலும், அது ஒன்றும் கைப்பற்றவே முடியாத கோட்டை அல்ல - முன்பு அலாவுதீன் கில்ஜியும், பிறகு குஜராத் அரசர் பகதூர் ஷாவும் சித்தூர் கோட்டையை வெற்றிகரமாகத் தன்னகப்படுத்தியதை நாம் மறக்கக் கூடாது!' என்று மாற்றுக் கருத்தைத் தெரிவிக்கின்றனர்.

முன்பு மத்தியப் பிரதேச ராணி துர்காவதியுடன் மோதி, பிறகு அக்பரோடே தகராறு செய்து மன்னிப்புப் பெற்ற ஆஸா..ப் கானை சித்தூர் கவர்னராக்கிவிட்டு ஆக்ரா திரும்பினார் அக்பர். வந்த கையோடு, தான் மேற்கொண்ட ஒரு பிரார்த்தனையை நிறைவேற்ற ஆஜ்மீர் பயணித்து, அங்குள்ள க்வாஜா மொய்னுதீன் சிஷ்டி என்னும் மகானின் கல்லறைக்குச் சென்று வணங்கினார் மன்னர்.

சில காலமாகவே ஆண்டுதோறும் அந்த மகானின் கல்லறைக்குச் சென்று பிரார்த்தனை செய்வது அக்பருக்கு வழக்கமாயிருந்தது. அதைத் தொடர்ந்து, ஆக்ரா அருகே உள்ள ஸிக்ரி என்னும் கிராமத்தில் வசித்து வந்த ஷேக் சலீம் சிஷ்டி என்னும் மகானைத் தரிசிக்கப் பாதயாத்திரையாகச் சென்றார் அக்பர். பல பெண்களோடு திருமணம் நடந்து, ஆண்டுகள் ஓடியும் வாரிசு இல்லாத குறை மன்னர் மனதை வாட்டிக்கொண்டு இருந்தது (வயது 27தான்!). குறிப்பாகப் பிரச்னை ஏதுமில்லை. மனைவிகள் பல முறை கர்ப்பம் தரித்தும் எல்லாமே குறைப் பிரசவம். சில குழந்தைகள் பிறந்து இறந்தன. எதிலும் தோல்வி அடையாமல் வாழ்ந்த அக்பர், இந்தக் 'குறைப் பிரசவ'ப் பிரச்னையை வெல்ல முடியாமல் தவித்தார்!...

பல நிமிடங்கள் தியானத்தில் இருந்த மகான் சலீம் சிஷ்டி, கண்களைத் திறந்து எதிரே மண்டியிட்டுக் கவலையுடன் அமர்ந்திருந்த அக்பரைப் பார்த்துக் கீழ்க் கண்டவாறு சொன்னார். "பாதுஷா அவர்கள் கவலைப்பட வேண்டாம். யாரேனும் ராணி கர்ப்பம் தரித்தவுடன், குழந்தை பிறப்பதற்குச் சில மாதங்களுக்குமுன் அவர் இந்தக் கிராமத்துக்கு வந்து தங்க வேண்டும். பிரசவம் இங்கேயே நிகழும். மன்னருக்குப் பெருமை சேர்க்கும் வகையில், நீண்ட ஆயுளுடன் கூடிய வாரிசு பிறக்கும்!"

அதேபோல, ஆகஸ்ட் 30, 1569-ல் அக்பரின் ஒரு மனைவிக்கு (ஜெய்ப்பூர் மன்னரின் மகள்) ஓர் அழகான குழந்தை ஸிக்ரி கிராமத்தில் பிறந்தது. மகானின் நினைவாக 'சலீம்' என்று பெயரிடப்பட்ட இந்த மகன் தான் பிற்பாடு 'ஜஹாங்கீர்' என்ற பெயரோடு அக்பருக்குப் பிறகு மகுடம் சூட்டிக் கொண்டவர்.

அதேபோல, ஸிக்ரி கிராமத்துக்கு 1570-ம் ஆண்டு இன்னொரு ராணி வந்து தங்கி, அக்பரின் இரண்டாவது மகனைப் பெற்றெடுத்தார் (முராத்). மறுபடியும் அதே கிராமத்தில் 1572-ல் மூன்றாவது மகன் தானியேல் பிறந்தார்.

முதல் மகன் சலீம் பிறந்தவுடனேயே மகிழ்ச்சியில் பூரித்துப்போன

அக்பர், 1569-ல் ஆக்ரா அருகே ஸிக்ரி கிராமத்தில் ஒரு புதிய, அற்புதமான நகரை உருவாக்கினார். ஃபதேபூர் - அதாவது, ‘வெற்றி நகரம்’ என்று அழைக்கப்பட்ட இது, அக்பரின் மொகலாய சாம்ராஜ்யத்தின் தலைநகராக ஆனது (ஃபதேபூர் அரண்மனை பற்றிப் பிற்பாடு..!).

முன்பே, 1563-ம் ஆண்டில் மதுரா நகருக்கு ஒரு முறை அக்பர் வருகை தந்தபோது, அங்கே கிருஷ்ணர் கோயிலுக்கு வெளியூர் களிலிருந்து வரும் பக்தர்களுக்குக் குறிப்பிட்ட தொகை வரியாக விதிக்கப்படுகிறது என்று கேள்விப்பட்டுத் திகைத்து உடனே அந்த வரிவிதிப்பை நீக்கினார் அக்பர். நாட்டில் முஸ்லிம்கள் அல்லாதவர்களுக்கு விதிக்கப் பட்டு வந்த ‘ஜிஸியா’ என்னும் வரியையும் ரத்து செய்ய ஆணை பிறப்பித்தார் அக்பர். “நான் எல்லோருக்கும் பொது. இந்து-முஸ்லிம் யாவரும் என் குடிமக்களே!” என்று அறிக்கையும் விட்டார் மன்னர். அதோடு, நாட்டில் மற்ற மதங்கள் சம்பந்தமான பண்டிகைகள் கோலாகலமாகக் கொண்டாடவும் அனுமதி வழங்கப்பட்டது. அரண்மனையில் இந்து ராணிகள் தீபாவளியையும், மற்ற இந்துப் பண்டிகை களையும் உற்சாகமாகக் கொண்டாட ஆரம்பித்தனர். அரசர் அணிந்த விதவிதமான தலைப்பாகைகளில் இந்து டர்பன்களும் இடம் பெற்றன. சில சமயம், பண்டிகை சமயங்களில் நெற்றியில் இந்துக்கள் இட்ட குங்குமத்தைக்கூட அழிக்காமல் வளையவந்து, இஸ்லாமியக் குருமார்களுக்குத் தர்மசங்கட மேற்படுத்தினார் அக்பர்! “இது என்ன... இஸ்லாமியக் கோட்பாடுகளையெல்லாம் மன்னர் அடியோடு கைவிட்டு விட்டாரா என்ன?!” என்று பெரியவர்கள் கவலையுடன் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

அக்பர் நினைத்ததோ வேறு! இந்த விஷயத்தில் ‘ப்ராக்டிகலாக’ இருக்க வேண்டும் என்று விரும்பினார் அவர். மொகலாய ஆட்சிக்கு முன்பு விதவிதமன, ஒன்பது இஸ்லாமிய ஆட்சிகள் வந்து போயாகிவிட்டது. ஒவ்வொன்றும் முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளே தாக்குப் பிடித்தது. ஏன்? இந்துக்கள் பெரும் பான்மையாக இருக்கும் இந்திய நாட்டை, அவர்கள் ஆதரவு இல்லாமல் யாராலும் நிரந்தரமாக ஆள முடியாது. அச்சமேற்படுத்தி அவர்களை மாற்றி விடவும் முடியாது. அன்பு ஒன்றால் மட்டுமே ஆட்கொள்ள முடியும்! - இதுவே அக்பர் தரப்பு விளக்கம்!

இந்தக் கோட்பாட்டை வெற்றிகரமாகப் பின்பற்றுவதற்கான துணிவும் பலமும் செல்வாக்கும் அக்பர் பாதுஷாவுக்கு இருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். போலித்தனம் இல்லாமல் சக்ரவர்த்தி கடைப்பிடித்த இந்த அணுகுமுறை காரணமாகப் பல ராஜபுத்திர வீரர்களும், அறிஞர்களும் மன்னருக்கு நெருக்கமானார்கள். தோடர்மால், பகவன்தாஸ், பீர்பால், மான்சிங் போன்ற அமைச்சர்களும் தளபதி களும் மிகுந்த விசுவாசத்துடன் பாதுஷாவிடம் பணியாற்றிச் சாம்ராஜ்யத்துக்குப் பெருமையும் புகழும் கம்பீரமும் சேர்த்தார்கள்!

இதெல்லாம் ஒருபுறம் நல்லபடியாக நடந்தாலும்...

தப்பியோடிய சித்தூர் மன்னர் உதய்சிங், அக்பரைச் சக்ரவர்த்தியாக ஏற்றுக் கொள்வதாக இல்லை! தன் தலைநகரை இழந்து அவமானப்பட்டாலும், அக்பர் பாதுஷாவுக்கு மன்னிப்புக் கடிதம்கூட அனுப்பாமலேயே சில ஆண்டுகள் கழித்து இறந்தார் அவர் (மார்ச் 3, 1572-ல்!).

இந்தச் சித்தூர் மன்னருக்கு வாரிசாகப் பிறந்த ராணா பிரதாப்சிங், அக்பருக்கு ஏற்படுத்திய பிரச்னைகள் சொல்லி மாளாதவை!

“என் தந்தைக்கு ஏற்பட்ட களங்கத்தைப் போக்குவேன். ராஜபுத்திர மானத்தைக் காக்கக் கடைசி மூச்சுவரை போராடுவேன். என் வீரம் கண்டு என் தாயின் மார்பகத்தில் மறுபடியும் பால் பெருமிதத்துடன் பூரித்துக் கொப்பளிக்க வேண்டும்!” என்று உணர்ச்சிகரமாக முழங்கிய ராணா பிரதாப் சிங், அக்பருக்கு எதிராக ஓர் அதிரடிப் படையைத் திரட்டிக்கொண்டு களத்தில் குதித்தார்.

இந்தப் புரட்சி வீரருக்கு அப்போது நாடு என்று சொல்லிக்கொள்ள ஒன்றுமே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அப்படியும் ராணா பிரதாப் நிகழ்த்திய கொரில்லாப் போர், மொகலாயர்களுக்குப் பெரும் மைக்ரேயன் தலைவலியாக அமைந்தது! உச்சக்கட்டமாக, ஏப்ரல் 1576-ல் மான்சிங் தலைமையில் வந்துசேர்ந்த பெரும் மொகலாயப் படையோடு நேரடியாக மோதினார் ராணா பிரதாப் சிங். அக்பரின் பிரதான தளபதியான மான்சிங் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. காயங்களோடு மயங்கிய நிலையில் இருந்த ராணாவை, அவருடைய அருமைக் குதிரை ‘சாய்டக்’ சுமந்துகொண்டு காட்டுப் பிரதேசத்தில் தப்பித்துப் புகுந்து எஜமானரைக் காப்பாற்றியது. உதவியது குதிரை மட்டுமல்ல... ஒரு நண்பரும்கூட! ஜாலா என்னும் பகுதியை ஆண்டுவந்த சிற்றரச நண்பர், ராணா பிரதாப் போலவே அவசரமாக உடையணிந்து கொண்டு தொடர்ந்து போர் புரிந்து, மொகலாயப் படையை மேலும் சில மணி நேரம் போக்குக் காட்டியது ராணா பிரதாப்சிங் தப்புவதற்கு வசதியாக இருந்தது. ஜாலா சிற்றரசரை வெட்டித் தள்ளிய பிறகே, ‘அது ராணா பிரதாப்சிங் அல்ல’ என்பதைப் புரிந்து கொண்டு வெறுத்துப் போனார்கள் மொகலாய வீரர்கள்!



சித்தூர் கோட்டையில் ஒரு தடாகம்...

பிரதாப்சிங் மலைப் பகுதிகளில் தன் குடும்பத்தோடு பதுங்கி வாழ்ந்து, தொடர்ந்து அக்பருக்கு எதிராக கொரில்லா யுத்தத்தைத் தொடர்ந்தார். உண்ண உணவு கிடைக்காமல், காட்டுப் பழங்களைச் சாப்பிட்டே ராணாவும், அவரது வீரர்களும் சமாளித்தது வியப்புக்குரியது!

விடாமல் முனைப்பாக மொகலாயப்படை துரத்தத் துரத்த, இடம் மாறி மாறித் தன்னம்பிக்கை இழக்காமல் மோதிக் கொண்டிருந்த பிரதாப்சிங் மேவார் பிரதேசத்தில் பல பகுதிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக மீட்டுக்காட்டியது ஆச்சரியமான விஷயம்! பிரச்னைப் பாதாளத்தில் வீழ்ந்தவர்களுக்கு நம்பிக்கை தரும் பாடம்!

கடைசி மூச்சு வரை தன் போராட்டத்தை கைவிடாத ராணா பிரதாப்சிங், ஜனவரி 19, 1597-ல் தன் ஐம்பத்தேழாவது வயதில் காலமானார். இறக்கும் தறுவாயிலும் தன் சகாக்களிடம் “மொகலாயர்கள் முன் மண்டியிடக்கூடாது” என்று சத்தியம்

வாங்கிக்கொண்ட பிறகே அவர் தலை தொங்கியது.

ராஜபுத்திர மாவீரர்கள் எத்தனையோ பேர் இறந்து, அந்த மண்ணுக்குப் பெருமை தேடித் தந்ததுண்டு. ஆனால், அந்த இனத்தில் வரலாற்றில் இன்றளவும் ராணா பிரதாப் சிங்குக்குத் தனியிடம் ஒதுக்கப்படுகிறது! அவரது வீரம் பற்றிய பாடல்களை இப்போதும் ராஜஸ்தான் பகுதிகளில் பெருமையுடன் பாடுகிறார்கள். அந்த வீரரின் நினைவாக 'பிரதாப்' என்று குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும் வழக்கம் இன்றும் அங்கு தொடர்கிறது!

ராணா பிரதாப்சிங்குக்குப் பிறகும், அவர் மகன் அமர்சிங்கும் தந்தையின் ஆணையை மேற்கொண்டு அக்பருக்கு எதிராகப் போரைத் தொடர்ந்தார். திறமை மிகுந்த மான்சிங் படையோடு 1599-ல் மோதியபோது நடந்த கடும் போரில் வீரமரணம் அடைந்தார் அமர்சிங்.

பிற்பாடு அக்பரே, இந்த வீரர்கள் பற்றியெல்லாம் வியப்போடும் மரியாதை யோடும் குறிப்பிட்டுப் பேசுவதுண்டு. தவிர, சித்தூர் கோட்டையைப் பாதுகாத்து வீழ்ந்த தளபதிகள் ஜெய்மால், பத்தாசிங் இருவருடைய நினைவாக - யானைமீது அவர்கள் அமர்ந்திருப்பது போலச் சிலைகள் செய்து ஆக்ராவில் நிறுவினார் அக்பர் பாதுஷா. அதுதான் அக்பர்!

வெற்றி நகரம்!

திடீரென்று பரபரப்படைந்தது ஆக்ராவி லிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அமைதியான ஸிக்ரி கிராமம். ஆயிரக்கணக்கான சிற்பிகளும் கட்டட வேலையாட்களும் அங்கே வந்து குவிந்தனர். நூற்றுக்கணக்கில் கட்டடக் கலைஞர்கள் வந்து சேர்ந்தனர். அக்பரின் நேரடியான மேற்பார்வையில் ஒரு வித்தியாசமான, அழகுமிக்க புதிய தலைநகரம் ஸிக்ரியில் பிரமாண்டமாக உருப்பெற்றது.

இந்தப் புதிய தலைநகரத்துக்கான வேலைகள் மளமளவென்று தொடங்கிய இரண்டாண்டுகளில் குஜராத்தில் குழப்ப நிலை வெடிக்கவே, அக்பர் ஒரு படையுடன் வெகுவேகமாக குஜராத் எல்லைக்குள் புகுந்து அதை முடிவாக மொகலாய ஆட்சிக்கு உட்படுத்திவிட்டுத் திரும்பினார். குஜராத் வெற்றியைக் கொண்டாடும் வகையில் புதிய தலைநகருக்கு ஃபதேபூர் (வெற்றி நகரம்) என்று பெயரிட்டார் பாதுஷா.

வளம் பொருந்திய குஜராத் மாநிலம், மொகலாய சாம்ராஜ்யத்தின் நிதி நிலைமையைப் பல மடங்கு பெருக்கியது. அக்பரின் பிரதம அமைச்சரான தோடர்மால் குஜராத்தில் தங்கி, நிலங்களை அளந்து பங்கிட்டு, வரிகளை நிர்ணயித்ததன் மூலம், தொடர்ந்து ஆண்டுதோறும் ஐம்பது லட்ச ரூபாய்க்குக் குறையாமல் கஜானாவுக்கு வரவு! புதிய தலைநகரம் வேகமாக கட்டி முடிக்கப்படுவதற்கு, குஜராத்திலிருந்து மூட்டை மூட்டையாக வந்த பணம் பெரிதும் பயன்பட்டிருக்க வேண்டும்!

ஆக்ராவுக்குப் பத்து கிலோ மீட்டர் தொலைவில் ஒரு 'உல்லாச நகரம்' ஒன்றையும் கட்டினார் அக்பர் என்று வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அங்கே உருவான அக்பரின் மாளிகையை ஒட்டி ஒரு விளையாட்டு அரங்கம்கூட இருந்ததாகவும் அதில் 'குதிரை ரேஸ்' போல அராபிய நாய் ரேஸ், மல்யுத்தம், போலோ (குதிரையில் அமர்ந்து 'ஹாக்கி'!) போன்ற பல விளையாட்டு களை மன்னர் நடத்தியதாகக்

கூறப் படுகிறது.

‘போலோ’ விளையாட்டில் குதிரைகளின் கழுத்துப் பகுதியில் நீண்ட மரக்கட்டையில் தீப்பந்தங்களை இணைத்து (ஃப்ளட் லைட் மேட்ச்!) இரவு நேர போலோ போட்டியையும் அக்பர் நடத்தியதுண்டு! நாகர்ஸின் என்று அழைக்கப்பட்ட அந்த உல்லாச நகரம் இருந்ததற்கான சுவடே இன்று இல்லை. பிற்பாடு ஜஹாங்கீர், ஷாஜஹான் கட்டிய கோட்டைகளுக்காக நாகர்ஸின் அரண்மனை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்தெடுக்கப் பட்டிருக்க வேண்டும்!

ஆனால், ஃபதேபூர் ஸிக்ரி கச்சிதமாக, விட்டது விட்டபடியே இன்றளவும் காட்சி தருகிறது. இந்தத் தலைநகரம் உருவாகும் முன்பு இடத்தைப் பார்வையிட வந்த அக்பர், மகான் சலீம் சிஷ்டியின் ஆசி பெறச் சென்றபோது அந்த ஞானி, தன் குடிலுக்கு வெளியே ஒரு பாறையில் அமர்ந்திருந்ததாகவும் அது கண்ட அக்பர் முழு அரண்மனையையும் Red Sand Stone என்று அழைக்கப்படும் அந்த வகைப் பாறைகளை உபயோகித்தே கட்ட முடிவெடுத்ததாகவும் கேள்வி.

ஜெய்ப்பூர், குவாலியர் அரண்மனைகளைப் பார்த்துக் கவரப்பட்ட அக்பர், அதே ஸ்டைலில் சிற்பிகளைக்கொண்டு தன் அரண்மனைப் பகுதியில் பல மாளிகைகளை உருவாக்கினார். அங்குள்ள ராணி ஜோத்பாய் மாளிகை, பீர்பால் இல்லம், பஞ்சமஹால் போன்றவற்றில் இந்தியக் கட்டடக்கலைதான் தலைதூக்கி நிற்கிறது. இங்குள்ள திவானீகாஸ் மாளிகையில்தான் அக்பர் தினந்தோறும் தர்பார் நடத்துவது வழக்கம். மாளிகைக்குள் மையத்தில் உயர்ந்து நிற்கும் தூண் மீது அமைக்கப்பட்ட வட்டவடிவமான பிளாட்பாரத்தில் பாதுஷா அமர்வார். ஒவ்வொரு மூலையிலிருந்தும் வெவ்வேறு இலாகா அமைச்சர்கள், பால்கனிகள் வழியே நடந்து வந்து மன்னரிடம் அன்று விவாதிக்கப்பட வேண்டிய விஷயங்கள் பற்றித் தெரிவிப்பார்கள். கீழே கூடி நிற்பவர்களின் மனுக்களைப் பரிசீலித்து மன்னர் ஆணைகள் பிறப்பிப்பதும் உண்டு. மற்றபடி கலை, மதம், தத்துவம் சம்பந்தமான சுவையான விவாதங்களும் பட்டிமன்றங்களும் அங்கே நடைபெறும்!

அக்பரின் கவனமான மேற்பார்வையில் ஆயிரக்கணக்கானவர்கள் பத்து ஆண்டுகள் உழைத்து உருவாக்கிய இந்த அழகிய நகரம், மொகலாய சாம்ராஜ்யத்தின் தலைநகராக இருந்தது பதினைந்தே வருஷங்களுக்குத்தான் என்பது வரலாற்று ஆச்சரியங்களில் ஒன்றாகும்! திடீரென்று அக்பர் ஆக்ராவுக்கே தன் தலைநகரை மாற்றிக் கொண்டதற்கான உண்மையான காரணத்தை இன்றுவரை யாராலும் சொல்ல முடியவில்லை. சில வரலாற்று ஆசிரியர்கள் ‘தண்ணீர்ப் பற்றாக்குறை’ என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால், இன்றளவும் ஸிக்ரி கிராமத்தில் ஏராளமான நீர் ஊற்றுகளும் கிணறுகளும் உள்ளதால் மன்னர் வெளியேற வேறு ஏதோ தனிப்பட்ட காரணம் இருந்திருக்க வேண்டும் என்கின்றனர் சிலர்.

“மகான் சலீம் சிஷ்டி காலமான சில ஆண்டுகள் கழித்து, கல்லறையில் உறங்கிக் கொண்டிருந்த அந்த மகானைத் தொந்தரவு செய்யாமல், மெள்ள அடிமேல் அடி எடுத்து வைத்து அரண்மனையை விட்டு ஒரு நாள் விடிவதற்கு முன்பு வெளியேறினார் பாதுஷா!” என்று ஒரு நூலாசிரியர் சற்றுக் கற்பனை நயத்துடன் அக்பர் ஆக்ராவுக்கு இடம் மாறியதை விவரிக்கிறார்!

ஆனால், ஃபதேபூர் ஸிக்ரி அரண்மனையில் தான் அக்பர் வாழ்க்கையில் ஒரு முக்கிய நிகழ்ச்சி நடந்தது - அப்துல் ஃபஸல் என்ற

அறிஞரை மன்னர் சந்தித்த நிகழ்ச்சி! பிற்பாடு மன்னருக்கு மிக நெருக்கமாக - பிரதம அமைச்சருக்கும் ஒரு படி மேலாக - ஆன அப்துல் ஃபஸல்தான் ‘அக்பர் நாமா’ என்னும் அக்பரின் வாழ்க்கை வரலாற்றை (ஆங்கில மொழி பெயர்ப்பு 2,506 பக்கங்கள்) எழுதினார். கூடவே, அக்பர் ஆட்சியமைப்புப் பற்றிய நுணுக்கமான விவரங்கள் அடங்கிய ‘அயன்-இ-அக்பரி’ நூலை (1,482 பக்கங்கள்) எழுதியவரும் அவரே!

நாள்தோறும் நேரம் ஒதுக்கித் தன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை மன்னர் நுணுக்கமாக விவரிக்க, அப்துல் ஃபஸல் ‘நோட்ஸ்’ எடுத்துக்கொள்வது அரண்மனையின் வழக்கமான காட்சியாக ஆனது!

வாசகர்களுக்கு ஒரு முக்கிய தகவல் -

அக்பர் விரும்பியிருந்தாலும், தன் வாழ்க்கைச் சம்பவங்களை ஒரு ‘சுயசரிதை’யாக எழுதியிருக்க முடியாது. காரணம் - மன்னருக்கு எழுத, படிக்கத் தெரியாது!

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, இந்தத் தகவல் வியப்பையும் திகைப்பையும் ஏற்படுத்தினாலும் உண்மையில் அக்பரின் மாபெரும் வெற்றிக்கு இதுவும் ஒரு காரணம் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்...!

குழந்தையாக இருந்தபோது ஓரிரு ஆண்டுகள் அக்பருக்கு ஆரம்பக் கல்வி போதிக்கப்பட்டது என்றும், பிறகு இளவரசர் ‘படிப்பதை’ விட்டுவிட்டார் என்றும் தகவல்!

பிற்பாடு எல்லா பிரச்னைகளையும் குழப்பமில்லாமல் தெளிவாக எடை போடவும் பிரதிநிதிகளைக் கொண்டு ப்ராக்டிகலாகச் செயல்படவும் அக்பரால் முடிந்தது என்றால் அதற்கு அக்பர் படிக்காததே காரணம் எனவும் கூறப் படுகிறது.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிஞர்கள் - கலை, கவிதை, தத்துவம் என்று எடுத்துக் கொண்டு விவாதிப்பதைக் கூர்ந்துகேட்டு, ஒரு வரி விடாமல் கிரகித்துக்கொள்ளும் திறமையும் பிரமிப்பூட்டும் அளவு ஞாபக சக்தியும் அவருக்கு வந்து சேர்ந்தது. எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் பல்வேறு கருத்துகளை உடனுக்குடனே கேட்டதால், ஒரு முடிவுக்கு வருவதும் மன்னருக்குச் சுலபமாக இருந்தது.

ஆக மொத்தம் ‘கல்லாமை’ எந்த விதத்திலும் அக்பர் பாதுஷாவுக்கு ஒரு பிரச்னையாகவே அமையவில்லை என்று கூறலாம். இத்தனைக்கும் அக்பரைப் படிக்க வைக்க முயற்சிகள் ஹுமாயூன் எடுக்காமலில்லை. பல டியூஷன் மாஸ்டர்கள் வந்து போனதுதான் மிச்சம். அக்பருக்குப் ‘புறா வளர்த்துப் பழக்குவது எப்படி?’ என்று சொல்லிக் கொடுத்ததாகக் குற்றம்சாட்டி ஒரு ஆசிரியரை வேலையைவிட்டு நீக்கினார் ஹுமாயூன். உண்மையில், ஆசிரியருக்குப் புறாக்களிடம் ஈடுபாடு ஏற்படுத்தியவர் இளவரசர் அக்பர்தான் என்பது பிற்பாடு தான் ஹுமாயூனுக்குத் தெரியவந்தது!

ஒட்டகம் மீது அமர்ந்து வெகுவேகமாக ஓட்டுவது, இரண்டு யானைகளை மைதானத்தில் மோத விட்டு ஒரு யானைக்கும் இன்னொரு யானைக்குமாகத் தாவித் தாவிப் பாய்வது, உப்பரிகையிலிருந்து குதிரை மீது குதித்தமர்ந்து சவாரி செய்வது, ஏக காலத்தில் இரு கைகளிலும் வாட்களை ஏந்திப் போரிடுவது... இப்படிப்பட்ட விளையாட்டு களிலேயே இளம் பருவத்தைக் கழித்தவர்

அக்பர். “நான் ஒரு போர் வீரன். போரிட்டு சாம்ராஜ்யத்தை விஸ்தரிப்பது மட்டுமே என் வேலை. அதற்கு ஏன் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்?” என்று கண் சிமிட்டியவாறு அக்பர் பாதுஷா சில சமயங்களில் குறிப்பிடுவதுண்டு!

ஆனால், புத்தகங்கள் என்றால் சக்ரவர்த்திக்கு உயிர். அவர் லைப்ரரியில் இருந்த புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை 24,000! பல அறிஞர்களின் கையெழுத்துப் பிரதிகளுக்கு ஓவியர்களை விட்டுப் படங்கள் வரையச் செய்தார் அக்பர். வேற்றுமொழி நூல்களை மொழிபெயர்க்கவும் அவற்றுக்கு டிஸைன், ஓவியம் வரைந்து கச்சிதமாக பைண்டு செய்யவும் நூற்றுக்கணக்கான வர்களைப் பணியிலமர்த்தியிருந்தார் மன்னர். ஃபதேபூர் ஸிக்ரியில் இதற்காக ஒரு பெரிய அலுவலகமே இயங்கியது! அங்கேதான் அறிஞர் பாதானி ராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்களைப் பாரசீகத்துக்கு மொழிபெயர்த்தார். இப்ரஹிம் சிர்ஹிண்டி என்ற அறிஞர் அதர்வண வேதத்தைக்கூடப் பாரசீக மொழியில் தயாரித்தார் என்றால் பார்த்துக் கொள்ளலாம்!

இத்தனைக்கும் நடுவில், ‘பாதுஷா இன்று குடித்த பானங்கள் என்ன? சுவைத்த விருந்து என்ன? அந்தப்புரத்தில் மன்னர் செலவிட்ட நேரம், செய்த உடற்பயிற்சிகள், யார் யார் வந்தார்கள் - போனார்கள்... சதுரங்க விளையாட்டில் வென்றவர் யார்? மன்னர் படிக்கச் சொல்லிக் கேட்ட புத்தகம், ரசித்த ஓவியம்..’ இப்படி சின்னச் சின்னத் தகவல்களைக்கூட ‘அக்பர் நாமா’வில் விடவில்லை அப்துல் ஃபஸல்!

அதேபோல, ‘அக்பர் ஒருவேளைதான் சாப்பிடுவது வழக்கம்... இரவில் பலகாரம்தான்... சமையலறையிலிருந்து டைனிங் டேபிளுக்கு வருவதற்குள் மூன்று இடங்களில் சக்ரவர்த்தியின் மெய்க்காவலர்கள் உணவை ருசி பார்ப்பார்கள் (விஷம் ஏதேனும் கலந்திருந்தால்...?!).. காஷ்மீரிலிருந்து தினமும் படகுகளில் பிரமாண்டமான ஐஸ் கட்டிகள் அரண்மனைக்கு வந்தன... அக்பர் குடிநீராகப் பயன்படுத்தியது கங்கை நீரைத்தான்...’ போன்ற குட்டிக் குட்டித் தகவல்கள்கூட ‘அயன்-இ-அக்பரி’யில் உண்டு!

அக்பர் பாதுஷா பார்ப்பதற்கு எப்படித் தோற்றமளித்தார்?

அக்பர் மற்றும் ராணிகள் உபயோகித்த நீச்சல் குளம் (பின்னால் பஞ்சமஹால்)!





தூண்மீது தர்பார்!

சராசரி உயரம், கோதுமை நிறம், கருவிழிகள், சற்று அடர்த்தியான - கம்பீரமான புருவங்கள் கொண்டவர் சக்ரவர்த்தி. அவருக்கு அழகான முகம் என்று சொல்ல முடியாது. ஆனால், மொத்தமான ஒரு அழகு அவரிடம் குடி கொண்டிருந்தது. பரந்து விரிந்த மார்பும், நீண்ட கரங்களும்

கொண்டிருந்தார் அவர். மன்னரின் மூக்கின் கீழே இடது நாசித் துவாரத்துக்கு வெகு அருகில் பளிச்சென்று ஒரு மச்சம் உண்டு. இது ரொம்ப அதிர்ஷ்டம் என்றார்கள் ஜோதிடர்கள். உரத்த குரலில் பேசுவார் பாதுஷா. பேசும்போது முகத்தில் மிகுந்த ஆர்வம் தெரியும். உரையாடும் போதும் எதையேனும் விவரிக்கும்போதும் கைகள் அங்குமிங்கும் அலைபாயும். ஜாலி மூடில் இருக்கும்போது நிறைய ஜோக் அடிப்பார் அக்பர் பாதுஷா. உள்ளே நுழையும் அமைச்சர்களையெல்லாம் தமாஷ் செய்தவாறு வரவேற்பார்...’



ஃபதேபூர் தலைநகரத்தின் நுழைவாயில்.

மகான் சலீம் சிஷ்டியின் கல்லறை...

- மேற்கண்டவாறு சக்ரவர்த்தியை விவரிப்பவர் அப்துல் ஃபஸல் அல்ல - அவரது மகனும் வாரிசுமான ஜஹாங்கீர்!

இவ்வளவு பொறுமையாகத் தந்தையின் 'பர்சனாலிடி'யை வர்ணிக்கும் ஜஹாங்கீர், அக்பர் தன்னிடம் பொறுமையிழந்து வாழ்க்கையே வெறுத்துப் போகுமளவுக்கு நடந்துகொண்டது தனிக்கதை..!

'தீன்-இலாஹி... இந்தியாவின் தேவை!'

இன்றளவும் இந்தியக் குழந்தைகளுக்கு மிகவும் பரிச்சயமான பீர்பால், அக்பரின் அரசவையை அலங்கரித்த மிக முக்கிய பிரமுகர்களில் ஒருவர். ஏழ்மையான பிராமணக் குடும்பத்தில் பிறந்த இவருடைய நிஜப்பெயர் மகேஷ்தாஸ். 'பீர்பால்' பிற்பாடு வந்து நிலைத்துப்போன புனைப்பெயரே. பீர்பால் நட்பு அக்பருக்குக் கிடைத்தது எதேச்சையானது என்று கூறப்படுகிறது. நிஜமோ, பொய்யோ... இருவருக்குமிடையே நிகழ்ந்த முதல் சந்திப்பு படிக்கச் சுவையானது!

பட்டத்துக்கு வந்து சில ஆண்டுகள் ஆன சமயம்... ஒரு நாள் அக்பர் பாதுஷா தன் மெய்க்காவலர்களுடன் காட்டில் வேட்டையாடிவிட்டுத் திரும்பும்போது இரவு சூழ்ந்துவிட, திரும்பிச் செல்ல வழி தெரியாமல் காட்டில் அக்பர் சற்று அலையும் படியாக நேர்ந்துவிட்டது. குதிரையில் அமர்ந்து குழப்பத்தோடு போய்க்கொண்டு இருந்த அக்பரின் பார்வையில் ஒருவழியாகப் பாதை ஒன்று புலப்பட்டது... அது வழியே உரக்கப் பாடிக்கொண்டு வந்தார் ஒடிசலான ஓர் இளைஞர். அவரை மெய்க்காவலர்கள் நிறுத்த, அக்பர் "உங்கள் பெயர் என்ன?" என்று விசாரித்தார்."மகேஷ்தாஸ்! தங்கள் பெயர்?" என்று இளைஞர் பதிலுக்குக் கேட்க... பாதுஷாவுடன் இருந்தவர்கள், "சக்ரவர்த்தியுடன் பேசிக்கொண்டு இருக்கிறாய்..." என்று இளைஞரின் அருகே சென்று பரபரக்க... கையமர்த்திய பாதுஷா, "என் பெயர் அக்பர்.. இந்துஸ்தானின்

அரசர் நான்... காட்டில் எங்களுக்கு வழி தவறி விட்டது.. ஆக்ரா போக வேண்டும்... இந்தப் பாதை எங்கு போகிறது?" என்று வினவினார்.

மகேஷ்தாஸ்... அதான் பீர்பால் ஒரு புன்னகையுடன், "பாதை எங்கும் போகாது! அது இருக்கிற இடத்தில்தான் இருக்கும். சக்ரவர்த்தியாகவே இருந்தால்கூட... போக வேண்டிய இடத்துக்கு நாம்தான் போயாக வேண்டும்!" என்றார். (இந்தியாவின் முதல் 'கடி' ஜோக் அடித்தவர் பீர்பாலாக இருக்குமோ என்று சந்தேகமாக இருக்கிறது!)... அக்பர், டென்ஷன் முழுதும் விலகி வாய் விட்டுச் சிரித்தார். விசிட்டிங் கார்டு அப்போது புழக்கத்தில் இல்லாததால், இலச்சினை மோதிரத்தைப் பீர்பாலுக்கு அளித்து, தன்னை ஆக்ரா வந்து பார்க்குமாறு சொல்லிவிட்டுச் சென்றார் சக்ரவர்த்தி. அதன்படியே பிற்பாடு ஆக்ரா சென்ற பீர்பால், கடைசிவரை அரசரின் உயிர்த் தோழராகவும், ஆலோசகராகவும் வாழ்ந்தார். பிரதம தளபதிகளில் ஒருவராகவும் உயர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரண்மனைக்குள் வெற்றிலை, பாக்கு, புகையிலை மெல்லும் பழக்கத்தைக் கொண்டு வந்தவர் பீர்பால் என்று சொல்லப்படுகிறது. வெற்றிலையைச் சுண்ணாம்பு விரலோடு மெள்ள நெருடியவண்ணம் அவர் சொல்லும் சுவையான கதைகளையும் தமாஷாகப் புனையும் கவிதைகளையும் அக்பர் பாதுஷா உற்சாகத்துடன் ரசிப்பார்.

ஒருமுறை அக்பர், "இது என்ன பழக்கம் பீர்பால்? இந்த வெற்றிலையையும் புகையிலையையும் கழுதைகள்கூடத் தொடுவதில்லை என்பது உமக்குத் தெரியுமா?" என்று கிண்டலடிக்க... "கழுதைகள்தான் தொடுவதில்லை!" என்று பீர்பாலிடமிருந்து பளிச்சென்று பதில் வந்தது.

ஓர் ஏழைத் தொழிலாளியை பீர்பால் காப்பாற்றிய சுவையான நிகழ்ச்சியும் உண்டு. அதிகாலை ஒரு நாள் படுக்கையிலிருந்து எழுந்த சக்ரவர்த்தி, சோம்பல் முறித்தவாறு உப்பரிகைக்கு வந்து நிற்க... கீழே யமுனை நதிக்கரையோரமாகத் துணி துவைத்துக் கொண்டிருந்த சலவைத் தொழிலாளி ஒருவர் அண்ணாந்து பாத்தார். பார்த்தவர் துணிகளை அப்படியே கீழே போட்டுவிட்டுப் பரவசத்துடன் கைகளை உயர்த்திக் கும்பிட்டு, "பாதுஷா!" என்று குரல் கொடுத்தார். ஒரு புன்னகையுடன் தலையசைத்த... அக்பர் பிறகு குளித்துவிட்டு, தொழுகை முடிந்து தர்பாருக்குச் செல்லும் போது வாயிற்படிகளில் கால் தடுக்க, கட்டை விரல் நகம் லேசாகப் பிய்ந்து சற்று ரத்தம்!

கூட இருந்தவர்கள் பதைபதைத்துப் போனார்கள். "நம் உயிரினும் மேலான மன்னருக்கு இப்படி ஒரு விபத்தா? இன்று காலை பாதுஷா யார் முகத்தில் விழித்தார் களோ?" என்று பதறியவண்ணம் சில பிரமுகர்கள் பாய்ந்து மண்டியிட்டுத் தங்கள் உடையிலிருந்து பட்டுத் துணிகளைகூடக் கிழிக்கத் துவங்கினார்கள் - விரலுக்கு பாண்டேஜ் கட்ட! சலவைத் தொழிலாளியின் முகத்தில் விழித்ததைப் பேச்சுவாக்கில் அக்பர் சொல்ல, அரசவை ஜால்ராக்கள் சிலர் "அந்த துரதிர்ஷ்டம் பிடித்த ஆளுக்குக் குறைந்தபட்சம் ஐம்பது கசையடிகளாவது தந்தால்தான் மனம் ஆறும்!" என்று கோரஸாகக் குரல் கொடுத்தார்கள்.

விரைந்து சென்ற மெய்க்காவலர்கள் சிலர், 'என்ன.. ஏது' என்று புரியாமல் விழித்த அந்த ஏழையை இழுத்துக்கொண்டும் வந்து விட்டனர். கண நேரத்தில் இவையெல்லாம் நிகழ்ந்துவிட, மன்னருக்கே ஒரு நிமிடம் என்ன செய்வது என்று புரியவில்லை. கதறிக் கொண்டிருந்த அந்த தொழிலாளியின் மனைவியிடம் யாரோ "உடனே

பீர்பாலைப் போய்ப் பார்... அவரால்தான் உன் கணவரைக் காப்பாற்ற முடியும்!” என்றனர். ஓடிச் சென்று பீர்பால் காலில் விழுந்து அழுதார் அந்தப் பெண்மணி. விஷயம் கேட்டுத் திகைத்துப்போன பீர்பால், அரசவைக்கு விரைந்தார். அங்கே நடுங்கி, அழுதவாறு அந்த ஏழை நின்று கொண்டிருக்க.. அக்பர் பாதுஷாவின் அருகில் சென்று நின்ற பீர்பால், ‘க்ளுக்’ என்று சிரித்தார். “எதற்குச் சிரிப்பு பீர்பால்?” என்று புருவம் உயர்த்திக் கேட்டார் அரசர்.

“ஒன்றுமில்லை மன்னா! இந்த ஏழைச் சலவைத் தொழிலாளியின் முகத்தை அதிகாலையில் பார்த்த பாதுஷாவுக்குக் கால்விரலில்தான் லேசான காயம். விடிந்தவுடன் தங்கள் முகத்தைப் பார்த்த அவருக்குக் கிடைக்கப் போவதோ ஐம்பது கசையடிகள்! யாருடைய முகம் அதிக துரதிர்ஷ்டம் பிடித்தது என்று நாளை மக்களிடையே விவாதம் கிளம்பினால்...?” என்று இழுத்தார் பீர்பால், மெல்லிய குரலில்....

குபீரென்று சிரித்த அக்பர் “இந்த அசட்டுத்தனத்தை நிறுத்துங்கள்!” என்று குரலை உயர்த்தி ஆணையிட்டதோடு நிறுத்திக்கொள்ளாமல், விடியற்காலையில் தன் முகத்தைப் பார்ப்பவர்கள் அதிர்ஷ்டம் செய்தவர்கள்தான் என்பதை நிரூபிக்க, ஏழைக்குத் தங்க நாணயங்களும் அளித்து அனுப்பினார் என்பது கதை!

மகா புத்திசாலியான அக்பர் பாதுஷாவின் ‘ஐக்யூ’வையே குறைத்து மதிப்பிடும் அளவுக்கு ‘பீர்பால் கதைகள்’ இருப்பதை, ‘பீர்பாலின் நகைச்சுவைக்கு இந்தியா தந்த கௌரவம்’ என்கிற அளவில் மட்டும் எடுத்துக்கொண்டு ரசிப்போமாக!

கி.பி.1586-ம் ஆண்டு...

வடமேற்கு எல்லையில், ஆப்கானியர்கள் அக்பரின் தலைமையை ஏற்க மறுத்து தகராறு செய்யவே பீர்பால் தலைமையில் ஒரு படை அவர்களை அடக்கக் கிளம்பிச் சென்றது. அங்கே மலைகளுக்கு நடுவே குறுகலான ஒரு பாதையைக் கடந்து கொண்டிருந்தபோது, மலை மீதிருந்து சுற்றிலும் சூழ்ந்துகொண்ட ஆயிரக்கணக்கான ஆப்கானிய வீரர்களிடம் வஞ்சகமாகச் சிக்கிக்கொண்டது மொகலாயப்படை.

‘பீர்பாலைப் பேசவிட்டால் அவர் நகைச்சுவைக்கு நாமும் மயங்கிப் போய்விடுவோம்!’ என்று அஞ்சினார்களோ என்னவோ, ஒளிந்திருந்து ஆப்கானிய வீரர்கள் வீசிய ஈட்டிகளில் ஒன்று பீர்பாலின் மார்பை ஊடுருவி அவரை வீழ்த்தியது. ‘நையாண்டிக் கவிதைகளின் இளவரசர்’ என்று மொகலாய தர்பாரில் எல்லோராலும் புகழப்பட்ட இந்த மேதையின் தலையை ஒரு ஆப்கானிய வீரன் சீவியெறிந்தான்.

பீர்பால் கொல்லப்பட்ட தகவல் வந்து சேர்ந்தவுடன் இடிந்து போனார் அரசர். இரண்டு நாட்கள் உணவு, தண்ணீர் அருந்தவில்லை. “என் அரசவை களையிழந்து விட்டதே... எப்படி இந்த இழப்பை ஈடுகட்டப் போகிறேன்..?” என்று புலம்பிக் கொண்டிருந் தாராம் அக்பர்.

‘இதற்குமுன் எவர் இறந்தபோதும் இந்த அளவுக்கு மன்னர் சோகத்தில் ஆழ்ந்து யாரும் பார்த்ததில்லை..’ என்கிற ரீதியில் வரலாற்று நூலாசிரியர்கள் பாதானியும் அப்துல் ஃபஸலும் குறிப்பிடுகிறார்கள்.

ஒருவழியாகச் சுதாரித்துக்கொண்ட சக்ரவர்த்தி, மாவீரர் மான்சிங்கை ஓர் அதிரடிப்படையுடன் அனுப்பி ஆப்கானியர்களைப் புகுந்து விளையாடித் தன் கோபத்தைத் தணித்துக்கொண்டது வேறு விஷயம்!

(ஃபதேபூர் ஸிக்ரி அரண்மனை வளாகத்துக்குள், தன் அரண்மனைகு மிக அருகில் அக்பர் சக்ரவர்த்தி தன் அருமை நண்பர் பீர்பாலுக்காகக் கட்டித் தந்த மாளிகையை இன்றும் நாம் காணலாம். நாலாபுறமும் உப்பரிகைகளோடு கூடிய இந்த நான்கு பெட்ரூம் வீடு, அக்பரை மணந்துகொண்ட பீர்பாலின் மகளுக்காகத் தந்தை கட்டித் தந்த வீடு என்றெல்லாம் மாறுபட்ட கருத்துகள் உண்டு!.

பீர்பாலுக்கும் ஒரு படி மேலாக மன்னருக்கு நெருக்கமாக இருந்தவர் அக்பரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய அப்துல் ஃபஸல். இஸ்லாத்திலிருந்து உருவான 'ஸுஃபியிஸம்' என்கிற - எதிலும் சாராத, மிகுந்த சுதந்திர மனப்பான்மை கொண்ட பிரிவைச் சேர்ந்த அப்துல் ஃபஸல் பெரும் அறிஞர் மட்டுமல்ல, அக்பரிடம் மிகவும் துணிவாகத் தன் கருத்துகளை எடுத்துச் சொல்லும் ஒரு விசுவாசி.

கொஞ்ச காலமாகவே, ஏராளமான மதங்களும் ஜாதிகளும் இந்தியாவில் வேரூன்றியிருப்பது அக்பரைச் சிந்தனை யிலாழ்த்திக் கொண்டிருந்தது. இந்து மதத்தில் துளிசிதாஸ், கபீர், வல்லபாச்சார்யா, சைதன்யர் போன்றவர்களின் பக்தி இயக்கம், குருநானக் ஸ்தாபித்த சீக்கிய மதக் கோட்பாடுகள், யூத மற்றும் ஜைன மத வழிபாட்டு முறைகள்... இவை எல்லாமே மொகலாய அரசரின் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைந்தன. எல்லா மதங்களைப் பற்றியும் முழுமையாகத் தெரிந்துகொண்டு ஒரு 'முடிவுக்கு' வர விரும்பினார் அக்பர். அதற்காக இபாதத் - கானா (வழிபாட்டு இல்லம்) ஒன்றை ஃபதேபூர் ஸிக்ரியில் அமைத்தார் அரசர். சர்வமத அறிஞர்களும் தத்துவ மேதைகளும் அங்கே அழைக்கப்பட்டனர்.

பாபர் ஆட்சியின்போதே 1526-ம் ஆண்டிலேயே கோவாவில் காலூன்றியிருந்த போர்ச்சுக்கீசிய கிறிஸ்தவப் பாதிரியார்களும் ஸ்பெஷலாக வரவழைக்கப்பட்டனர். ஃபதேபூர் 'வழிபாட்டு இல்லத்தில்' தொடர்ந்து மத சம்பந்தமான விவாதங்கள் நடந்தன. ஆனால், சக்ரவர்த்தியின் குழப்பங்களைத் தீர்த்துத் தெளிவு ஏற்படுத்த இந்தப் பட்டிமன்றங்கள் உதவியதாகத் தெரியவில்லை! காரணம்?!

பெரும்பாலான சமயங்களில் விவாதம் தொடங்கிய கொஞ்ச நேரத்திலேயே மத அறிஞர்களின் 'பிளட் பிரஷர்' அதிகரித்து ஒருவரையொருவர் 'முட்டாள்கள்... மடையர்கள்...' என்றெல்லாம் அக்பர் முன்னிலையிலேயே திட்டிக்கொள்ள ஆரம்பித்தார்கள். திகைத்துப்போன அரசர், அவ்வப்போது குரலை உயர்த்தி அதட்டி எல்லோரையும் அமைதிப்படுத்த வேண்டி வந்தது!

குறிப்பாக, கிறிஸ்தவ மதம் பற்றி நிறையத் தெரிந்துக்கொள்ள விரும்பினார் அக்பர். 1580-ல் ஃபதேபூர் ஸிக்ரி வந்து சில ஆண்டுகள் தங்கிய ஃபாதர் அக்வாவிவா, ஃபாதர் மான்ஸரேட், ஃபாதர் ஹென்ரிக்ஸ் போன்றவர்கள் மன்னருக்கு நெருக்கமான வர்களாக ஆனார்கள். அவர்களோடு அமர்ந்து சாப்பிடுவது, தோளில் கைபோட்டு நடப்பது, போர்த்துக்கீசிய மொழியில் 'காலை வணக்கம், நாளை சந்திப்போம்' போன்ற வார்த்தைகளை (வட இந்தியத் தலைவர்கள் தமிழ்நாட்டுக்கு வரும்போது 'வண்க்கம்' சொல்வது போல!) பயன் படுத்துவது... மன்னர் ஆர்வத்துடன் இதையெல்லாம் செய்யச் செய்ய, பூரித்துப் போன கிறிஸ்தவ பாதிரியார்களுக்கு 'சரிதான்... பாதுஷா கிறிஸ்தவ மதத்துக்கு மாறிவிடுவார்!' என்ற நம்பிக்கை விசுவ ரூபமெடுத்தது!

அதைத் தொடர்ந்து அரசவையில் இந்து மற்றும் முஸ்லிம் அறிஞர்கள் இருக்கிறார்களே என்றெல்லாம் பார்க்காமல், துணிவோடு

பிற மதங்களில் உள்ள ‘குறைபாடுகள்’ பற்றிச் சூடாகவே உரையாற்றினார்கள் அந்தப் பாதிரியார்கள். இது கேட்டு மற்ற மதத்தினர் முகங்கள் சிவக்க ஆரம்பிக்க, கவலையில் ஆழ்ந்த அரசர், கிறிஸ்தவ மதகுருமார்களை ஓரமாகத் தள்ளிக் கொண்டுபோய், “என்ன இது? சற்று அடக்கி வாசியுங்கள்...” என்று சொல்ல வேண்டி வந்தது என்றால் பார்த்துக் கொள்ளலாம்!

ஒருமுறை அக்பரிடம் ஃபாதர் அக்வாவியா, “மன்னருக்கு இத்தனை ராணிகள் தேவைதானா?” என்று கேட்கும் அளவுக்கு உரிமையெடுத்துக் கொள்ள... மெலிதான ஒரு புன்னகையோடு கூடிய தலையசைப்பைப் பதிலாகத் தந்தார் பாதுஷா.

கடைசியில் என்ன ஆனது?!

எல்லா மதகுருமார்களையும் ஏமாற்றி விட்டு, புதிய மதம் ஒன்றைத் துவக்க முடிவு செய்தார் அக்பர் பாதுஷா. புதிய மதத்துக்கு ‘தீன்-இலாஹி - கடவுளின் மதம்’ என்று பெயரிட்டார் மன்னர்.

‘சன்னி’ பிரிவைச் சேர்ந்த மொகலாய சக்ரவர்த்தி இப்படி வழிமாறிச் செல்வது குறித்து இஸ்லாமியப் பெரியவர்கள் கவலையில் ஆழ்ந்தார்கள். அக்பரோ, ‘இந்தியா ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் உலகின் பெரும் சக்தியாக விளங்க தீன்-இலாஹி என்கிற புதிய மதம் அத்தியாவசியத் தேவை’ என்று நம்பினார். அதைத் தொடர்ந்து நாணயங்களில் ‘அல்லாஹு - அக்பர்’ என்று வாசகங்கள் பொறிக்கப்பட்டன! இது முஸ்லிம் மத குருமார்களைத் திகைக்க வைத்தன. ‘எல்லாம் வல்ல இறைவன் என்று இதற்கு அர்த்தமா அல்லது அக்பரே இறைவன் என்று மன்னர் சொல்ல நினைக்கிறாரா?’ என்று முல்லாக்கள் பதறினார்கள்.

‘வழிபாட்டு இல்லத்தில்’ அக்பர் (இடதுகோடியில் ஃபாதர் அக்வாவிவாவும் ஃபாதர் ஹென்ரிக்ஸும்)

நெருக்கமானவர்களிடம் பேசும்போது மன்னர், “நான் இஸ்லாமியக் கோட்பாடுகளை மறந்துவிடவில்லை. அதன் கடுமையான சில சட்டதிட்டங்களைத் தளர்த்திவிட விரும்புகிறேன். அதோடு மற்ற மதங்களில் உள்ள சில நல்ல விஷயங்களையும் சேர்த்துக் கொள்ள விரும்புகிறேன். இது இந்திய நாட்டின் உடனடித் தேவை என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும்!” என்றார் அக்பர்.



பீர்பால் இல்லம்...

அதே சமயம், ‘தீன்-இலாஹி’யை மக்களிடையே வலுக்கட்டாயமாகத் திணிக்க யாரும் முயற்சி எடுக்கக் கூடாதென்றும் ஆணையிட்டார் அரசர்.

நடந்ததென்னவோ... அக்பரின் ‘புதிய மதத்தை’ இந்து, முஸ்லிம், ஜைன, யூத, கிறிஸ்தவ.. என்று எந்த மதத்தினரும் ஏற்றுக்கொள்ளவில்லை. மன்னர் வாழ்ந்த வரையிலும் அவர் புகழ்பாட மற்றவர்களுக்கு வசதியாக ஒப்புக்கு இருந்துவிட்டு, அக்பர் பாதுஷாவுடன் தானும் உயிரை விட்ட மென்மையான ஓர் இயக்கமே ‘தீன்-இலாஹி’!

தந்தையும் மகனும்!

பல்வேறு மதங்களையெல்லாம் கடந்து நின்று பரந்த நோக்குடன் இந்தியாவை ஆட்சிபுரிந்த தனிப்பெரும் சக்ரவர்த்தி என்றும், அசோக சக்ரவர்த்திக்கு இணையானவர் என்றும் அக்பரை வரலாற்று அறிஞர்கள் பலர் பாராட்டினாலும் ‘கடவுளுக்கு இணையாகத் தன்னை நினைத்துக்கொண்டு, அந்தச் சுயநலம் காரணமாக இஸ்லாத்தின் நெறிமுறைகளை விட்டு வெகு தூரம் விலகிச் சென்ற ஒரு மன்னர் அக்பர்...’ என்று அவர் காலத்திய வரலாற்று ஆசிரியர் பாதானி குற்றம் சாட்டுகிறார். மேலும்...

‘இந்துக்கள் சந்தோஷப்பட வேண்டும் என்பதற்காக ‘சிவராத்திரி’ என்கிற ஒரு பண்டிகையின்போது நூற்றுக்கணக்கான சாமியார்களை அரண்மனைக்கு வரவழைத்து அவர்களோடு சேர்ந்துகொண்டு தானும் இந்துக்களைப் போல விரதம் இருந்தார் பாதுஷா. சமஸ்கிருத மொழியில் அமைந்துள்ள ஏதோ ஆயிரத்தோரு சுலோகங்களை ஜபித்தவாறு தினமும் சூரிய நமஸ்காரம் செய்யும் பழக்கமும் சக்ரவர்த்தியைத் தொற்றிக்கொண்டது. அதற்கேற்ப அரசரைச் சந்திக்கும் பிராமணர்களும் சாமியார்களும் ‘ராமர், கிருஷ்ணர் போல சக்ரவர்த்தியும் ஒரு அவதாரம்’ என்று நைச்சியமாகச் சொல்லி அவரை ஏமாற்றினார்கள். ‘இப்படி ஒரு அவதார புருஷர் தோன்றுவார் என்று ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டிருக்கிறது’ என்று சொல்லிப் பசப்பினார்கள் இவர்கள். அதற்கென்று சில பொய்யான ஓலைச் சுவடிகளை வேறு தயாரித்து பாதுஷாவிடம் காட்டினார்கள் இந்த ஏமாற்றுப் பேர்வழிகள். மன்னரும் இவர்கள் சொன்னதையெல்லாம் நம்பினார். போகப் போக இறைச்சி உண்ணுவதைக்கூட நிறுத்திவிட்டார் பாதுஷா. தாடி வைத்துக்கொள்வதைக்கூட தவிர்த்தார்!’ என்று அக்பரை ஒரு வாங்கு வாங்குகிறார் பாதானி!

‘அக்பர் ஆட்சிக்கு வருவதற்குமுன் ஐந்நூறு ஆண்டுகளாக எத்தனையோ சுல்தான்கள் ஆட்சி புரிந்தும் யாராலும் இந்தியாவை ஒரு முஸ்லிம் நாடாக மாற்ற முடியவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். அக்பர் மட்டுமே இந்துக்களை அரவணைத்துக்கொள்வதன் மூலம்தான் நிலையான, கட்டுப்பாடான ஓர் ஆட்சியைத் தர முடியும் என்பதைத் துல்லியமாகப் புரிந்துகொண்ட புத்திசாலி!’ என்று பல வரலாற்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக் கிறார்கள். அக்பரின் மகன் சலீம் ‘எல்லா மதங்களிலும் இனங்களிலும் உள்ள நல்ல விஷயங்களையெல்லாம் மென்மையாக மதித்து ஏற்றுக்கொண்டவர்தான் என் தந்தை. அதேசமயம் மனதளவில் உண்மையான இஸ்லாமியராகவே கடைசிவரை வாழ்ந்தார்’ என்று தன்

சுயசரிதையில் குறிப்பிடுகிறார். ஆனால், அக்பர் பாதுஷாவைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு எந்தக் காலத்திலும் மகன் சலீம் அவரோடு நெருக்கமாக இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது!

‘பலவிதங்களில் தனக்குத் துரோகம் இழைத்தவர் தந்தை’ என்று சலீமும், ‘தனக்குப் பிறகு ஆட்சிக்கு வர எந்தத் தகுதியும் இல்லாதவன் மகன்’ என்று அக்பரும் வெளிப்படையாகவே நெருங்கியவர்களிடம் சொல்லிக் கொள்வதுண்டு!

சலீமை ஒரேயடியாகக் குற்றம் சொல்லவும் முடியாது. ‘தந்தையின் காலம் முடிந்து, தான் பட்டத்துக்கு வரலாம்’ என்று பார்த்தால்... நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்த பிறகும் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் மன்னர் அலுக்காமல் வளைய வந்தது கண்டு முப்பது வயது நிரம்பிவிட்ட சலீமுக்கு ஒரு சுயப்பச்சாதாபமே வந்துவிட்டது! சில ஜோதிடர்களை அழைத்து “பாதுஷாவை அவதாரம் என்றெல்லாம்வேறு சொல் கிறார்கள்... ஒருவேளை அப்பா இறக்கவே மாட்டாரோ...?!” என்று கவலையுடன் மகன் விசாரித்ததாகக்கூடத் தகவல்!

அக்பரைப் பொறுத்தவரை அவருடைய மூன்று மகன்களுமே ‘உருப்படாத கேஸ்’தான்!

(1593-ல் மொகலாயப்படை தட்சிண பீடபூமியில் இருந்தபோது அக்பரின் முதல் மகன் சலீமுக்கு - வயது 24, இரண்டாம் மகன் முராத்துக்கு - வயது 23, தானியேலுக்கு - வயது 21).

தெற்கே அக்பரின் படை வெற்றிகளைக் குவிக்காமல் சற்றுத் தடுமாறியதற்கு ஒரு முக்கிய காரணம் - படைக்குத் தலைமை வகித்த முராத், பாதி நேரம் குடித்துவிட்டு மயங்கிக் கிடந்ததுதான். வெறுத்துப் போன அக்பர் மகனைப் பதவியிலிருந்து அகற்றி, தனக்கு நெருக்கமான அமைச்சர் அப்துல் ஃபஸலை அனுப்பித் தலைமைப் பொறுப்பை ஏற்கச் சொல்ல வேண்டி வந்தது. இதனால் கோபப்பட்ட மொடாக்குடியரான முதார் புலம்பித் தள்ளிவிட்டு, அளவுக்கு மிஞ்சிக் குடித்துவிட்டு விழுந்தார். மறுநாள் கூடாரத்தில் அவருடைய உயிரற்ற உடலைத்தான் மற்றவர்கள் பார்த்தனர்.

மற்ற இரு மகன்கள் சலீமும் தானியேலும் குடி விஷயத்தில் முராத்துக்குச் சற்றும் சளைத்தவர்கள் அல்ல. ஓபியம், மது இரண்டு விஷயங்களிலும் புகுந்து விளையாடினார்கள் இருவரும். தானியேலைவிட சலீம் சற்றுத் தேவலை எனலாம். சில சமயங்களில் அவர் சற்று நிதானத்துடன் இருப்பதுண்டு. இப்படி ‘நிதானமான’ ஒரு சூழ்நிலையில்தான் (கி.பி.1600-ல்) சலீம் மூளைக்குள் கொப்பளித்துக் கொண்டிருந்த பட்டத்து ஆசை ஒரேயடியாக வெடித்தது...!

வங்காளத்தில் உஸ்மான்கான் என்ற ஆப்கானிய தளபதி ஒருவர் அக்பருக்கு எதிராகப் புரட்சியில் இறங்க, அந்தச் சமயத்தில் தெற்கே மொகலாய சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்கப் படையுடன் கிளம்பிச் சென்றிருந்த அக்பர், ‘உடனே வங்காளம் சென்று புரட்சியை அடக்கச் சொல்லி’ சலீமுக்கு ஓர் ஆணையனுப்பினார்.

அலஹாபாத்தில் ஒரு படையுடன் இருந்த சலீமுக்குக் கோபம் வந்துவிட்டது. ‘வாழ்நாள் பூராவும் பாதுஷாவுக்கு எடுபிடியாகவே நான் காலம் தள்ள வேண்டுமா... இவர் சொல்லி நான் என்ன கேட்பது?’ என்று குமுறிய சலீம், அக்பரின் ஆணையைப் புறக்கணித்ததோடு விடாமல் பீஹார் மாநிலத்திலிருந்து பாதுஷாவுக்கு வந்து சேர்ந்த சுமார் முப்பது

லட்ச ரூபாய் வரிப் பணத்தைத் தானே எடுத்துக் கொண்டார். அதோடு, தன் சகாக்கள் சிலருக்கு பீஹாரின் சில பகுதிகளை ‘பட்டா’வாகப் பிரித்துத் தந்தார். இதையெல்லாம்விட அவர் செய்த பெருங்குற்றம் - தன் பெயரில் நாணயங்கள் அச்சிட்டுக்கொண்டது! சக்ரவர்த்தி மட்டுமே இதைச் செய்யலாம்!

மாதிரிக்குச் சில நாணயங்களை மன்னருக்கே மகன் அனுப்பியது உச்சக் கட்டம்!

இதனாலெல்லாம் கடுங்கோபம் கொண்ட அக்பர் ஆக்ரா திரும்ப, சலீம் முப்பதாயிரம் குதிரை வீரர்களுடன் தன்னைச் சந்திக்க வந்து கொண்டிருப்பதாகச் செய்தி வந்து சேர்ந்தது. ‘உடனடியாக அலஹாபாத் திரும்பிச் செல். இல்லையேல் கடும் விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும்!’ என்று மகனுக்குச் சொல்லியனுப்பினார் அக்பர்.

சற்றுக் கலவரப்பட்டுப்போன சலீம், ‘மன்னரின் கட்டளையை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், என் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது’ என்று கேட்டுக்கொண்டு வாபஸ் வாங்கினார்!

சலீமின் ஏடாகூடமான செயல்களைக் கண்ட அக்பர் அலுப்புடன் ‘பிரச்னை பண்ணும் இந்த மகனை நான் என்னதான் செய்வது?’ என்று கேட்டு, தெற்கே படைத் தளபதியாக பணியில் இருந்த அப்துல் ஃபஸலுக்கு ஒரு கடிதம் அனுப்பினார்.

‘மகன் என்றெல்லாம் பார்க்க வேண்டாம். இளவரசர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதே சரி. சக்ரவர்த்தி ஆணையிட்டால் நானே சலீமைக் கைதுசெய்து தங்கள்முன் கொண்டு வந்து நிறுத்துகிறேன்!’ என்று அப்துல் ஃபஸலிடமிருந்து அக்பருக்குப் பதில் வந்தது!

அதைத் தொடர்ந்து அப்துல் ஃபஸலை பாதுஷா டெல்லிக்கு வரச் சொல்ல, அவரும் கிளம்ப, செய்தி சலீமுக்கு ஒற்றர் மூலமாகப் போய்ச் சேர்ந்தது. ஏற்கெனவே அப்துல் ஃபஸல் தன் தந்தையுடன் ரொம்பவும் நெருக்கமாக இருந்ததைச் சற்றும் விரும்பாத சலீம் ‘இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்!’ என்று தீர்மானித்தார்.

அக்பர் - ஆஸ்தான ஓவியர் ஒருவர் நேரில் பார்த்து வரைந்தது!

ஜான்ஸிக்கு அருகே உள்ள பிரதேசத்தை நிர்வகித்து வந்த தன் நண்பர் வீர்தேவ் சிங் என்ற ராஜபுத்திர வீரருக்கு 'கோள்மூட்டும் இந்தக் கிழவன் அப்துல் ஃபஸல் டெல்லி போய்ச் சேரக்கூடாது. வழியிலேயே தீர்த்துக் கட்டவும். இதை வெற்றிகரமாகச் செய்தால் பிற்காலத்தில் என் முழு அன்பும் ஆதரவும் தங்களுக்குக் கிடைக்கும்!' என்று கடிதம் அனுப்பினார்.

ஆகஸ்ட் 12, 1602... வீர்தேவ் சிங் அனுப்பிய ஒரு கொலைப்படை அப்துல் ஃபஸலை வழிமறித்து வெட்டிக் கொன்றது. அந்தப் பெருமகனின் தலை அலஹாபாத்தில் இருந்த சலீமுக்கு அனுப்பப்பட்டது. தட்டில் வைத்து கொண்டுவரப்பட்ட அப்துல் ஃபஸல் தலையைப் பார்த்து ஏக திருப்தியுடன் வாய்விட்டுச் சிரித்த சலீம், அதை எடுத்துக் குப்பைத் தொட்டியில் தூக்கியெறிந்து கேவலமாக நடந்துகொண்டதாக வரலாறு தெரிவிக்கிறது. தான் முன்னின்று நடத்திய இந்தக் கொலை பற்றி சுயசரிதையில் சற்றும் தர்மசங்கடப்படாமல் விவரமாகக் குறிப்பிடும் சலீம் 'அவரைக் கொல்ல வேண்டியது காலத்தில் கட்டாயமாகப் போனது!' என்று வலியுறுத்தவும் செய்கிறார்.

அப்துல் ஃபஸலுக்கு நேர்ந்த கொடுமையான முடிவு பற்றிக் கேள்விப்பட்ட அக்பர் பாதுஷா கலங்கிப் போனார். மூன்று நாட்கள் மன்னர் யாரையும் சந்திக்கவில்லை. "சலீம் என்னைக் கொலை செய்துவிட்டு அவரை விட்டிருக்கலாமே...!" என்று அழுது அரற்றிக் கொண்டிருந்ததாகத் தகவல்.

எட்டு மாதங்கள் கழித்து, அக்பரின் வயது முதிர்ந்த அத்தை குல்பதன் பேகம் மற்றும் அரண்மனைப் பெண்கள் ஒருவழியாக அக்பரையும்

மகனையும் சந்திக்க வைத்துச் சமாதானம் செய்வித்தார்கள்.

சும்மா இருப்பாரா தந்தை? மன்னனாகும் தகுதி பெறவேண்டுமெனில் தளராமல் தன் கடமைகளைச் செவ்வனே செய்தாக வேண்டும் என்ற கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்த பாதுஷா, இளவரசர் சலீமுக்கு இன்னொரு பொறுப்பைத் தந்தார்...

ராணா பிரதாப்சிங் மறைந்த பிறகு அவருடைய மகன் அமர்சிங் ஒரு கொரில்லாப் படையுடன் அக்பரை எதிர்த்து புரட்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். ஒரு படையுடன் மேவார் பகுதிக்குச் சென்று அமர்சிங்கை அடக்கச் சொல்லி சலீமுக்கு ஆணையிட்டார் பாதுஷா. கிளம்பிய இளவரசருக்குக் கொஞ்சம் தொலைவு போனதும் கிறுக்குப் பிடித்து விட்டது. ‘என் தந்தைக்கு வேறு வேலையில்லை. இப்படி ஏதாவது என்னை வேலை வாங்கிக் கொண்டிருப்பார்!’ என்று நண்பர்களிடம் அலட்சியமாகச் சொல்லி விட்டு அலஹாபாத் திரும்பியவர் ஓபியம், மது என்று ஜமாய்த்துவிட்டு சுருண்டு படுத்துக்கொண்டுவிட, தகவல் கேட்ட அக்பரின் கண்கள் சிவந்தன. ‘இவனை ஒருவழி பண்ணினால்தான் சரிப்படும்!’ என்று கர்ஜித்த மன்னர் அலஹாபாத்துக்குக் கிளம்ப, அந்தச் சமயம் பார்த்து அக்பரின் சிற்றன்னை உயிரை விட்டுவைக்க, தப்பித்தார் சலீம்!

அதற்குப் பிறகு நான்கு மாதங்கள் கழித்து தான் சலீம் தலைநகருக்குத் திரும்பினார். இந்த முறையும் பாட்டி, அத்தை போன்ற அரசகுலப் பெண்மணிகள் சலீமை அந்தப் புரத்தில் ஒளித்து வைத்துவிட்டு அக்பர் வருகை தந்தபோது மெள்ள மகனை அவர்முன் அனுப்பினார்கள். காலில் விழுந்து அழுத சலீமைத் தூக்கி அணைத்துக் கொண்டு ஒரு அறைக்குள் அழைத்துச் சென்று கதவை உள்ளே தாழிட்டு விட்ட அக்பர், தன் மகனைப் பிரம்பால் விளாசித் தள்ளியதாக அநேகமாக எல்லா வரலாற்று ஆசிரியர்களும் (சற்று மகிழ்ச்சியுடனேயே?!) குறிப்பிடுகின்றனர். அதோடு, ஓபியம் மற்றும் மதுவகைகளின் அருகே நெருங்க விடாமல் அறைக்குள் சலீமைப் பூட்டி வைக்க, இளவரசரின் கை விரல்கள் நடுங்க ஆரம்பித்தன. கண்களில் நீர் வழிய அலறினால் சலீம் (மது இல்லாததன் விளைவுகள்!). ஒழிந்து போகட்டும் என்று அன்றைய டோஸ் ஓபியத்தையும் மதுவையும் உள்ளே அனுப்பினார் தந்தை. இந்த மோதலுக்குப் பிறகு தந்தையின் கடைசி மூச்சு வரை சலீம் அடங்கி ஒடுங்கி இருந்ததாகக் கூறப்படுகிறது. இதற்கிடையே மூன்றாம் மகன் தானியேலும் மது அரக்கனுக்குப் பலியாக, சலீமை விட்டால் வாரிசு இல்லை என்ற நிலை அக்பருக்கு ஏற்பட்டுவிட்டது.

தனக்குப் பிறகு சலீம் பட்டத்துக்கு வருவது குறித்து அக்பருக்குத் திருப்தியே இல்லை. அவருடைய பிரதம அமைச்சர் மான்சிங்கூட சலீமின் மகன் குஸ்ரூதான் (17 வயது) அக்பருக்குப் பிறகு அரியணை ஏறத் தகுதி பெற்றவர் என்று கருதினார். பேரப்பிள்ளைக்கு ஆதரவாக அவசர அவசரமாக ஆள் திரட்ட முயன்று அதில் தோல்வியடைந்தார் மான்சிங். இனியும் டெல்லியில் இருந்தால் ஆபத்து என்று முடிவு செய்து குஸ்ரூவை ரகசியமாகத் தன்னுடன் அழைத்துக்கொண்டு வங்காளம் சென்றார் அந்த அமைச்சர்.

திடீரென்று ஒரு நாள் சக்ரவர்த்திக்கு (63 வயதில்) வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. சிகிச்சை அளித்தும் பலனில்லை. நிலைமை சீரியஸானது. வயிற்றுப்போக்குடன் ரத்தமும் நிறைய வெளியேற, மூன்று வாரங்கள் படுக்கையில் துவண்டுபோய்க் கிடந்தார் அக்பர்.

அக்டோபர் 15, 1605.

பாதுஷா பிழைக்கமாட்டார் என்று புரிந்துகொண்ட அரசவைப் பெரியோர்கள், சலீமை மெள்ள அழைத்துக் கொண்டுவர, மன்னரின் காலடியில் மண்டியிட்டார் மகன். தன் கண்களாலேயே சலீமை அருகில் அழைத்த சக்ரவர்த்தி, அமைச்சர்களைப் பார்த்து தலையசைக்க... அரச உடையும் மகுடமும் கொண்டுவரப்பட்டன. பெரியோர்கள் சலீமுக்கு அவற்றை அங்கேயே அணிவித்தனர். ஹுமாயூன் பாதுஷாவும், அவருக்குப் பிறகு தானும் உபயோகித்த பிரத்தியேக குறுவாளை எடுத்து சலீமுக்குத் தரச்சொல்லி சைகை செய்தார் அக்பர். கட்டிலில் ஒரு ஓரமாகச் சாய்த்து வைக்கப்பட்டிருந்த அந்த வாளை மூத்த அமைச்சர் ஒருவர் எடுத்து வந்து மரியாதையுடன் நீட்ட... சலீம் அதைக் கண்களில் ஒற்றிக்கொண்டு இடையில் அணிந்து கொண்டார். அடக்கமான குரலில் அங்கே வாழ்த்தொலி கிளம்பியது. மறுகணம் எல்லோரும் மண்டியிட்டு சலீமை வணங்கினர்.

ராஜ உடையுடன் தந்தையை வணங்கு வதற்காகக் கட்டில் அருகே சென்றார் - ‘ஜஹாங்கீர்’ என்ற பட்டப் பெயருடன் பட்டத்துக்கு வந்த சலீம்.

அக்பர் பாதுஷாவின் உயிர் பிரிந்திருந்தது.

17

ஜஹாங்கீர்..

கலையும் காதலும்!

அக்பரின் ஆட்சியில் மொகலாய சாம்ராஜ்யம் மேற்கே ஆப்கானிஸ்தானிலிருந்து கிழக்கே வங்காளம் வரையிலும் வடக்கே காஷ்மீரிலிருந்து தெற்கே கோதாவரி நதி வரையிலும் கட்டுப்பாடாக விரிந்து பரந்திருந்தது...

வாள் முனையில் ஒரு இஸ்லாமிய ஆட்சியை இந்திய மண்ணில் திணிக்க முயல்வதற்குப் பதிலாக, அடிப்படையில் இந்தியா இந்துக்களின் நாடு என்பதைப் புரிந்துகொண்டு, பெரும்பான்மையினரின் நன்மதிப்பைப் பெற, வாளைவிடக் கூர்மையான அன்பு என்னும் ஆயுதத்தைக் கையிலெடுத்தார் அக்பர். அந்த அணுகுமுறை அவருக்குப் பெரும் வெற்றியைத் தேடித்தந்தது. சொல் வேறு - செயல் வேறு என்று நாடகமும் போடவில்லை அவர். இந்து, முஸ்லிம் என்றெல்லாம் பார்க்காமல், திறமையின் அடிப்படையிலேயே மற்றவர் களுக்குப் பெரும் பதவிகள் தந்தார் சக்ரவர்த்தி. அதற்கேற்ப பல ராஜபுத்திர தளபதிகள் போர்க்களங்களில் மன்னருக்கு வெற்றிகளை ஈட்டித்தந்தனர்.

ராணுவம் என்றில்லை - அக்பரின் ஆஸ்தான ஓவியர்கள் பதினேழு பேரில் பதின்மூன்று பேர் இந்துக்கள். இந்தப் பதின்மூன்று பேரில், அரண்மனையில் குப்பை கூட்டும் பணியாளரின் மகனும் ஒருவர். அந்தச் சிறுவனிடம் இருந்த ஓவியத் திறமையை எதேச்சையாகக் கண்டுபிடித்து பயிற்சி தரச்செய்து கைதேர்ந்த ஓவியராக்கினார் அக்பர் பாதுஷா. மொகலாய சாம்ராஜ்யத்தின் பிரதம அமைச்சரான தோடர்மால் ஒரு இந்து. ஆஸ்தான தலைமை இசைக் கலைஞரான தான்ஸேனும் இந்துக் குடும்பத்தில் பிறந்தவரே (பிற்பாடு தானாகவே இஸ்லாத்துக்கு மதம் மாறினார்...)!

தன் வாழ்க்கையின் பிற்பகுதியில் இறைச்சி உண்ணுவதை தவிர்த்தார் அக்பர். அவருடைய இந்து ராணிகளின் கொஞ்சலான வற்புறுத்தல்தான் இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. ‘அப்படியா?’ என்று கேட்டால் வீம்பாகப் பதில் வராது பாதுஷாவிடமிருந்து. மாறாக “நானே எடுத்த முடிவுதான் அது. காரணம் - என் வயிற்றை விலங்குகளைப் புதைக்கும் சுடுகாடு ஆக்குவதற்கு விரும்பவில்லை நான்!” என்று மென்மையான புன்னகையுடன் பதில் வரும்!

இந்துக்களிடம் நிலவிய சில காட்டு மிராண்டித்தனமான

வழக்கங்களையும் கடுமையாகச் சாடினார் அக்பர். ஒருமுறை வேட்டையாடிவிட்டுத் திரும்பும்போது, சுடுகாடு ஒன்றில் கூடியிருந்த கூட்டம் அக்பர் கவனத்தைக் கவர்ந்தது. அங்கே ஒரு இளம் இந்து விதவையை உடன்கட்டை ஏற்ற அழைத்து வந்திருப்பது தெரிந்த மன்னர் குதிரையிலிருந்து குதித்து ஓடிச் சென்று, அழுதுகொண்டிருந்த அந்தப் பெண்ணைப் பிணைத்திருந்த கயிறுகளைத் தானே அவிழ்த்துவிட்டார். கூடியிருந்தோரைக் கடுமையாக எச்சரித்தார். கூட்டம் நடுங்கிப் போனது. அதோடு விடாமல் பிற்பாடு "எங்கேனும் கட்டாயமாக உடன்கட்டை ஏற்ற முயற்சிகள் நடந்தால் சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் சிறையிலடைக்கப் படுவார்கள்" என்று ஆணையும் பிறப்பித்தார். இந்த விஷயத்தில் ராஜாராம் மோகன்ராய்க்கு முன்னோடி அக்பர் என்றுகூடச் சொல்லலாம்!

மத ஒற்றுமை சம்பந்தமாக எல்லாத் தரப்பினருக்கும் ஒட்டுமொத்தமாக அக்பர் சொன்ன அற்புதமான அறிவுரை இதுதான் - 'இந்தியா மற்ற நாடுகளைப் போல அல்ல. இங்கே மதத்தின் பெயரால் மோதிக் கொண்டிருந்தால் உருப்படியாக எதையும் சாதிக்க முடியாது. நீங்கள் இந்துவாக இருந்தால் போய் முஸ்லிம்களிடம் பழகுங்கள். முஸ்லிம்களாக இருந்தால் இந்துக்களை நண்பர்களாக வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் மதத்து மக்களோடயே உழன்று கொண்டிராமல் மற்றவர்களிடம் பழகுவதன் மூலம்தான் நட்பு உணர்வு வளரும். பிற மதத்தினரின் மாற்றுக் கருத்துக்களைச் சற்றும் கோபப்படாமல் கேட்டுப் பழகி அவற்றை மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அப்போதுதான் பரந்த மனப்பான்மை வரும்!'

அப்படியும் சக்ரவர்த்தி கடைசி மூச்சுகளில் இருந்தபோது அல்லாஹ் திருநாமத்தை உச்சரிக்கிறாரா என்று இஸ்லாமியப் பெரியவர்களும் ஏதேனும் இந்துக் கடவுளின் பெயரை உச்சரிக்கிறாரா என்று இந்துப் பெரியவர்களும் குனிந்து ஆர்வத்துடன் காது கொடுத்துக் கேட்டனர் என்றும் தகவல்! இது சம்பந்தமாக பாதுஷாவின் அருகில் கடைசி நிமிடங்களின் போது இருக்க கிறிஸ்துவப் பாதிரிமார்களும் அனுமதி கேட்டு அது மறுக்கப்பட்டது. கடைசியில் அக்பர் உதடுகள் எதையோ முணுமுணுக்கத்தான் செய்தன. என்னவென்று தான் யாருக்கும் புரியவில்லை. இப்படியாக எல்லோரையும் குழப்பத்தில் வைத்துவிட்டுத் தான் பாதுஷா கண்ணை மூடினார்!

ஒருவேளை... மிகவும் 'பிராக்டிகலான' மனிதர் என்பதால் மன்னரின் உதடுகள் 'கடவுள் விஷயத்தையெல்லாம் கண்ணை மூடிய பிறகு பார்த்துக்கொள்ளலாம். இந்த சலீம் பட்டத்துக்கு வந்து எப்படிக் குப்பை கொட்டப் போகிறான் என்று கவலையாக இருக்கிறதே...!' என்று முணுமுணுத்திருக்கக் கூடும்!

இந்த ஒரு விஷயத்தில் அக்பரின் கணிப்பு மகிழ்ச்சிகரமாக பொய்த்தது! காரணம் - தந்தை இருந்தவரை அவருடைய நிழலில் சிக்கித் தடுமாறி எந்த விதத்திலும் ஒளிவீசாமல் இருந்துவிட்டு, அரியணை ஏறிய பிறகு தந்தையின் நிர்வாக முறைகளை மிகவும் கவனமாகப் பின்பற்றிக் கட்டுக்கோப்பாக ஆட்சிபுரிந்தார் ஜஹாங்கீர் என்பதுதான் வியப்பான உண்மை! போனஸாக ஜஹாங்கீர் ஆட்சியில்தான் இந்திய மண்ணில் கலைவளம் பெருமிதத்தோடு பூத்துக்குலுங்கி 'கலைஞர்களுக்கு ஒரு தந்தை' என்ற பெயரை மன்னருக்குப் பெற்றுத் தந்தது!

அக்பர் இறந்த பிறகு ஒரு வாரம் துக்கம் அனுஷ்டித்துவிட்டு,

அக்டோபர் 24, 1605-ல் ஆக்ரா அரண்மனையில் அரியணை ஏறி அமர்ந்தார் ஜஹாங்கீர். துருக்கிய மன்னர் பெயரும் சலீம் என்று கேள்விப்பட்டதால் ஜஹாங்கீர் என்ற புதிய பட்டப் பெயருடன் மகுடம் சூட்டிக்கொண்டார் அக்பரின் மூத்த மகன். ஜஹாங்கீர் என்றால் ‘உலகைக் கைப்பற்றுபவர்’ என்று பொருள்.

தந்தையின் ஓவியத்தை ஏந்தியபடி ஜஹாங்கீர்...

ஷேக் சலீம் சிஷ்டி என்ற மகானிடம் அக்பர் மகப்பேறுக்காக வேண்டிக் கொண்டதும் அதைத் தொடர்ந்து சக்ரவர்த்திக்கும் ஆம்பர் நாட்டு ராஜபுத்திர மன்னர் பீர்மால்சிங் மகளுக்கும் ஆகஸ்ட் 30, 1569-ம் சலீம் பிறந்ததும், ‘மகான் சிஷ்டியிடம் ஏன் வேண்டிக்கொண்டோம்’ என்று பிற்பாடு அக்பர் வெறுத்துப்போகும் அளவுக்கு தந்தையிடமே மகன் மோதி யதையும் ‘அக்பர் அத்தியாயங்களில்’ நாம் பார்த்தாகிவிட்டது!

தன் முப்பத்தாறாவது வயதில் அரியணை ஏறிய ஜஹாங்கீர் எடுத்த எடுப்பிலேயே புத்திசாலித்தனத்துடனும் ராஜதந்திரத் துடனும் தன் நடவடிக்கைகளைத் தொடங்கினார். முதல் வேலையாக முக்கியமான அமைச்சர்கள், தளபதிகள் எல்லோருக்கும் பதவி உயர்வும் சம்பளமும் அதிகரிக்கப்பட்டன. அவர்களின் சேவையைப் பாராட்டி விருதுகளும் பதக்கங்களும் வழங்கிக் கௌரவித்தார் புதிய சக்ரவர்த்தி. இதனால் விரைவிலேயே மன்னரின் இமேஜ் உயர்ந்தது! சந்தடிசாக்கில் தனக்காக அக்பரின் நம்பிக்கைகுரிய வீர்தேவ்சிங்கையும் நன்றி மறவாமல் பிரதான தளபதிகளில் ஒருவராகப் பதவியில் அமர்த்தினார் ஜஹாங்கீர். இதனால் முகம் சுளித்த சில அரசவைப் பெரியவர்களைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை பாதுஷா. கூடவே அப்துல் ஃபஸலின் மகன் அப்துல் ரஹ்மானுக்கும் முக்கிய தளபதியாக பதவி

உயர்வு கிடைத்தது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்!

அக்பருக்கும் ஜஹாங்கீருக்கும் அடிப்படையில் சில வித்தியாசங்கள் உண்டு. தந்தையிடம் உறுதியான, நிலை தடுமாறாத மனப்பாங்கு இருந்தது. மகனோ பல்வேறு குணநலன்களின் ‘கலவை’யாகத் திகழ்ந்தார். அக்பருக்கு இணையான சிறந்த நிர்வாகி என்று பெயர் வாங்கினாலும் தன் புலன்களைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்தார் ஜஹாங்கீர். மது மற்றும் போதைப்பொருட்கள் பழக்கம் தொடர்ந்தது. பெண் விஷயத்திலும் மன்னர் சற்று ‘வீக்!’

ஜஹாங்கீரின் முதல் திருமணம் பிப்ரவரி 13-ம் தேதி, 1585-ம் ஆண்டு நடந்தேறியது. மணமகள் பிரதம தளபதிகளில் ஒருவரான ஆம்பர் சிற்றரசரும் ஏற்கெனவே அக்பரின் மைத்துனருமான பகவன்தாஸ் மகள் மான்பாய்! முஸ்லிம், இந்து - இரு சம்பிரதாயங்களுடன் நடந்த திருமணம் இது! அதில் தொடங்கி பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் இருபது பெண்களை மணம் புரிந்துகொண்டார் ஜஹாங்கீர். பிற்பாடு அந்தப்புரத்து ராணிகளின் எண்ணிக்கை முந்நூறைத் தொட்டது. ‘அட்டெண்டென்ஸ்’ என்று ஒன்று வழக்கத்தில் இருந்திருந்தால் தினமும் பிற்பகலில்தான் மன்னர் தர்பாரைக் கூட்டியிருக்க முடியும்!

மன்னர் ஏராளமான பறவைகளும் மிருகங்களும் கொண்ட ஒரு ‘ஜூ’வையும் பராமரித்து வந்தார். மன்சூர் போன்ற அவருடைய ஆஸ்தான ஓவியர்கள் பறவைகளையும், மிருகங்களையும் அற்புதமான ஓவியங்களாக வரைந்து தள்ளினார்கள்.

குறிப்பாகப் பறவைகளின் வாழ்க்கை முறை பற்றி அறிந்துகொள்வதில் ஏகமாக ஆர்வம் காட்டினார் ஜஹாங்கீர். அவர் வளர்த்த பறவைகளின் ஓவியங்கள் அடங்கிய ஒரு ஆல்பமே இன்றளவும் இருக்கிறது. பறவைகளின் குண இயல்புகள் பற்றி நுணுக்கமாக ஒரு ‘தீஸிஸ்’ அளவுக்குத் தன் டைரியில் குறிப்புகள் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார் பாதுஷா!

லைலா, மஜ்னு என்று ஜஹாங்கீரால் செல்லமாகப் பெயரிட்டு வளர்க்கப்பட்ட கொக்குகள், மன்னர் எங்கு சென்றாலும் கூடவே செல்லும். பாதுஷாதான் அவற்றுக்கு உணவு தருவார். அதற்காக மன்னருடைய கூடாரத்துக்கு அருகில் அந்தக் காதல் ஜோடிக்கும் தனிக் கூடாரம் போட்டார்கள்!

அந்த கொக்கு ஜோடி உடலுறவு கொள்வது பற்றிய குறிப்புகள் மட்டும் டைரியில் எழுதப்படாததால் மன்னர், ‘ஜூ’ காப்பாளர்களிடம் சொல்லி வைத்திருந்தார். அதன்படி ஒருநாள் இரவு, திடீரென்று மன்னருக்கு அந்த உல்லாசமான செய்தி வர, படுக்கையில் தன்னைத் தழுவியிருந்த ராணியை உதறிவிட்டு எழுந்து டைரியுடன் ஓடினார் பாதுஷா!

‘... பெண் கொக்கு கால்களை சற்றே மடக்கிக் குனிகிறது. ஆண் தன் ஒரு காலை பெண் முதுகில் வைத்து அழுத்தி, விநாடியில் மற்றொரு காலையும் பெண் முதுகில் படிய வைக்கிறது. பிறகு நிலை தடுமாறாமல் இருக்க, இறக்கைகளை விரித்தவாறு உடலுறவில் ஈடுபடுகிறது... (பிறகு எத்தனை நேரம் போன்ற குறிப்புகள்)... கடைசியில் ஆண் கீழிறிங்கிக் கழுத்தை நீட்டி அலகால் ஓரிருமுறை தரையை மெள்ளக் குத்திய பிறகு ஒருதரம் பெண்ணை வலம் வருகிறது...’ இப்படி நுணுக்கமாகப் போகிறது ஜஹாங்கீரின் டைரிக் குறிப்புகள்! அதைத் தொடர்ந்து அவை கூடு அமைத்ததும் இரு முட்டைகள் இட்ட பிறகு மாறி மாறி கணவனும் மனைவியும் முட்டைகளை அடைகாத்ததும் குஞ்சுகள் பொரித்தது

பற்றியும் விவரிக்கிறார் ஜஹாங்கீர் பாதுஷா!



மேலே: வல்லூறு... கீழே: வான்கோழி ஜஹாங்கீரின் ஆஸ்தான ஓவியர் வரைந்தது...

இயற்கை சம்பந்தமாக (அழகிகள் உட்பட!) எதையும் விடவில்லை ஜஹாங்கீர். இதோ! விண்வெளியிலிருந்து சூடாக வந்து விழுந்த எரிகல்லைச் செதுக்கி வாளின் கைப்பிடியாகப் பொருத்திக்கொள்கிறார் பாதுஷா. அதோ! மலைப்பாம்பின் வயிற்றில் பாதி ஜீரணமாகிய நிலையில் முயல் இருக்க, பாம்பின் வயிறு பிளக்கப்பட்டு அது ஓவியமாக வரையப் படுகிறது (ஆராய்ச்சிக்காக!).



ஆக்ராவிலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவிலுள்ள அக்பரின் கல்லறை...

ஒருபுறம் சயாமீஸ் இரட்டையர் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் மன்னருக்காகத் தயாரிக்கப்படுகின்றன. இன்னொருபுறம் மிருகங்கள் மற்றும் பறவை இனங்களில் வெள்ளை வெளேரென்று ‘அல்பினோ’ வகைகள் எப்படி ஏற்படுகின்றன என்ற விவாதங்கள் வல்லுநர்களோடு நடத்தப் படுகிறது. கூடவே, யானைகளின் பிரசவம் பற்றி மன்னர் விஸ்தாரமாகக் குறிப்புகள் எழுதுகிறார். ‘செம்மறியாடுகள் ஏன் தலையால் முட்டிக்கொள்கின்றன? அவற்றின் கொம்புகளின் அடிப்பாகத்தைச் சுற்றி ஒருவிதக் குட்டிப் புழுக்கள் உள்ளதால் ஏற்படும் குறுகுறுப்புதான் காரணம்’ என்கின்றனர் சிலர். ‘கொம்புகள் இல்லாத பெண் ஆடுகளின் தலையிலும் அதே வகைப் புழுக்களைக் கண்டுபிடித்துவிட்டேன். பெண் ஆடுகள் தலையால் முட்டிக் கொள்வதில்லையே! அவற்றுக்குமல்லவா குறுகுறுப்பு இருந்தாக வேண்டும்?!’ இதுவும் ஜஹாங்கீரின் டைரியிலிருந்து ஒரு குறிப்பு!

உச்சக்கட்டமாக, அரண்மனையைச் சேர்ந்த இனாயத்கான் என்ற முதியவர் இறக்கும் தறுவாயில் இருக்கிறார் என்று கேள்விப்பட்ட ஜஹாங்கீர், உடனே ஆஸ்தான ஓவியர் ஒருவரை அழைத்து ‘உயிர் பிரிவதற்குமுன் ஒரு மனிதன் எப்படித் தோற்றமளிக்கிறார் என்பதையும் ஒரு ஓவியமாகத் தீட்ட வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்’ என்று சொல்லி அனுப்ப, பணியை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு திரும்பினார் அந்த ஓவியர்!

இவ்வளவு கலைப்பித்துப் பிடித்த இந்த மொகலாய மன்னரிடம் ஈவு இரகம் காட்டாத கொடூரமான குணமும் ஒருபுறம் இருந்தது. ‘சாடிஸ்ட்’ என்று சில வரலாற்று ஆசிரியர்கள் விவரிக்கும் அளவுக்குக் குற்றவாளிகளுக்கும் தனக்கு வேண்டாதவர் களுக்கும் விதவிதமான சித்ரவதைகளை வழங்கியவர் பாதுஷா. யானைகளை விட்டுப் பல்வேறு முறைகளில் மிதித்துக் கொல்வது.. நூற்றுக்கணக்கான விஷப்பாம்புகள் உள்ள தொட்டியில் குற்றவாளியைத் தூக்கிப்போட்டு ரசிப்பது - இப்படி ஏராளமான முறைகளை ‘தண்டனை’ என்ற பெயரில் வழங்கினார் ஜஹாங்கீர். ஒருமுறை சமையற்காரர் ஒருவர் சீனாவில்

தயாரிக்கப்பட்ட ஒரு பீங்கான் கோப்பையைக் கீழே போட்டு உடைக்க, சீனாவுக்கே சென்று வேறொரு கோப்பையை வாங்கி வரச்சொல்லி சமையற்காரருக்குத் தண்டனை வழங்கினார் பாதுஷா!



இறப்பதற்குச் சில நிமிடங்களுக்குமுன் இனாயத்கான்!

ஜஹாங்கீருக்கும் அவருடைய முதல் மனைவி மான்பாய்க்கும் பிறந்த இளவரசர் குஸ்ரூவை, அக்பருக்குப் பிறகு பட்டத்துக்குக் கொண்டுவர பிரதம அமைச்சர் மான்சிங் முயற்சி செய்தது பற்றி சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டோம்...

ஜஹாங்கீர் பாதுஷாவின் குரூரமான சாடிஸத்துக்கும் கொடூரமான தண்டனைக்கும் அந்தப் பதினேழு வயது நிரம்பிய இளவரசர் குஸ்ரூவே இரையாக வேண்டி வந்ததுதான் வேதனையான விஷயம்!

மகனுக்குத் தண்டனை!

அக்பர் உயிரோடு இருந்தபோதே ஜஹாங்கீருக்கும் பேரப்பிள்ளை குஸ்ரூவுக்கும் இடையே மோதல் ஆரம்பித்தாகிவிட்டது. வாழ்க்கையை ஒரு களியாட்டமாக ஜஹாங்கீர் கடத்திக்கொண்டிருந்தது கண்டு கடுப்பில் இருந்த அக்பர் பாதுஷா, பேரப் பிள்ளைகளான குஸ்ரூ, குர்ரம் மீது சற்று அதிகமாகவே பாசம் காட்டினார். குறிப்பாக ஜஹாங்கீரின் மூத்த மகனான குஸ்ரூவுக்கு அக்பர் தந்த முக்கியத்துவத்தை கண்ட பலர் ஜஹாங்கீரால் பட்டத்துக்கு வர முடியுமா என்றுகூடச் சந்தேகப்பட்டார்கள். உச்சக் கட்டமாக, அக்பரின் கடைசி காலத்தில் அவருக்கு எதிரிலேயே ஜஹாங்கீரும் குஸ்ரூவும் மோதிக்கொண்ட ஒரு நிகழ்ச்சியும் நடந்தது!

ஒருநாள், அரண்மனை மைதானத்தில் நடந்த விளையாட்டுப் போட்டிகளை உப்பரிகையில் அமர்ந்தவாறு ரசித்துக் கொண்டிருந்தார் அக்பர் பாதுஷா. திடீரென என்ன தோன்றியதோ, “சலீமின் (ஜஹாங்கீர்) பிரத்யேக யானையும் குஸ்ரூவின் யானையும் சண்டையிடட்டும்... எது ஜெயிக்கிறது என்று பார்ப்போம்!” என்று ஆணையிட்டார் அரசர். மைதானத்துக்குள் வரவழைக்கப்பட்ட இரு யானைகளும் பிளிறிக்கொண்டு பயங்கரமாக மோதின. யார் கண்டது? ஜஹாங்கீர் யானை தோற்றிருந்தால் இதுதான் சாக்கு என்று “எதுவுமே சரிப்படவில்லை! உன் யானைக்கூடத் தோற்றுவிட்டது. உனக்கு எதற்கு

மகுடம் வேண்டிக் கிடக்கிறது?” என்று சொல்லிவிட்டு குஸ்ரூவை அழைத்து “இந்தா அரியணை!” என்று ஒருவழியாக அறிவித்துவிட நினைத்தாரோ என்னவோ! ஆனால், விதியின் விளையாட்டு வேறு விதமாக அமைந்துவிட்டது. ஜஹாங்கீரின் யானை மோதிய மோதலில் தடுமாறிக் காயத்துடன் விழுந்தது குஸ்ரூவின் யானை. அதைத் தொடர்ந்து நடந்ததுதான் யாரும் எதிர்பாராத நிகழ்ச்சி!

வாளை உருவிக்கொண்டு ஜஹாங்கீரும் 17 வயது நிரம்பிய குஸ்ரூவும் நேரடியாகச் சண்டையிட ஆரம்பித்தனர். உடனே ஆவேசமாகக் குரலெழுப்பிக்கொண்டு மைதானத்துக்குள் புகுந்த இருதரப்பு ஆதரவாளர்களும் ஏதோ இந்தக் கால அரசியல் கட்சிகளுக்கு இணையாக, அடிதடியில் இறங்கினார்கள். வயதான காலத்தில் தன் முன்னிலையிலேயே நடந்த இந்தக் கோஷ்டிச் சண்டையைப் பார்த்துத் திகைத்துப்போன அக்பர் பாதுஷா தன் அருகில் அமர்ந்திருந்த இன்னொரு பேரப் பிள்ளை குர்ரத்தைப் பார்த்து “ஊரே சிரிக்கப் போகிறது. போய் உன் அப்பாவையும் அண்ணனையும் பார்த்து சண்டையை நிறுத்தச் சொல்!” என்று ஆணையிட, உப்பரிகையிலிருந்து குதித்த பதின்மூன்று வயது குர்ரம் ஓடிச் சென்று ஜஹாங்கீரையும் குஸ்ரூவையும் தடுத்ததோடு நில்லாமல், கடுமையாக ஒரு ‘லெக்சரும்’ கொடுத்துவிட்டுத் திரும்பினார்! இந்தக் குர்ரம்தான் பிற்பாடு ஷாஜஹான் என்ற பெயரோடு ஜஹாங்கீருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்து உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹாலை உருவாக்கப் போகிறவர்!

அக்பர் இறந்த பிறகு பதினேழு ஆண்டு களுக்குப் பெரிதாக ஒரு கலவரமோ பிரச்னையோ நாட்டில் வெடிக்கவில்லை என்பதையும் ஜஹாங்கீர் பாதுஷாவும் தன் பெரும்பாலான நேரத்தை ஓவியர்களோடும் பறவைகளோடும் செலவிட முடிந்தது என்பதையும் பார்க்கும்போது எந்த அளவுக்குக் கச்சிதமான ஒரு சாம்ராஜ்யத்தை அக்பர் விட்டுவிட்டுப் போனார் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது! இந்த அமைதியான சூழ்நிலைக்குக் களங்கம் ஏற்படுத்திய ஒரே விவகாரம் ஜஹாங்கீர் - குஸ்ரூ மோதல் மட்டும்தான்!

ஆட்சிக்கு வந்த உடனேயே மகன் குஸ்ரூவுக்கு ஆதரவாகச் செயல்பட்ட பிரதம அமைச்சர் மான்சிங்கை வங்காளத்துக்கு கவர்னராக அனுப்பினார் ஜஹாங்கீர் பாதுஷா. வீட்டுச் சிறையில் எச்சரிக்கையாக வைக்கப்பட்டார் குஸ்ரூ.

தந்தையை மனதளவில் வெறுத்த குஸ்ரூ தப்பிக்கச் சமயம் பார்த்தார். அக்பர் பாதுஷாவின் நினைவு நாள் வந்தது. ‘தாத்தாவின் கல்லறைக்குச் சென்று வணங்கி விட்டு வருகிறேன்’ என்று அனுமதி கோரிய குஸ்ரூவை ‘பாதுகாப்பாக’ அனுப்பி வைத்தார் ஜஹாங்கீர். போன இடத்தில் எப்படியோ கூட வந்தவர்களுக்கு டிமிக்கி தந்துவிட்டுத் தப்பித்த இளவரசர், தன் குதிரையை ஒரே மூச்சில் ஓட்டிகொண்டு பஞ்சாப் பிரதேசம் போய்ப் பதுங்கிக் கொண்டார். குறுகிய காலத்தில் ஒரு படையையும் திரட்டிக்கொண்டு தந்தையை எதிர்த்துப் போர் முழக்கம் செய்தார். முகம் சிவந்து போன ஜஹாங்கீர், மகனின் புரட்சியை அடக்க ஒரு பெரும் படையுடன் கிளம்பினார். கோபத்திலும் அவசரத்திலும் தன் ஓபியம் ‘ஸ்டாக்’கைக்கூட எடுத்துக் கொண்டு செல்ல மறந்து, போன இடத்தில் ஆட்களை அனுப்பி எங்கிருந்தோ ஓபியம் வரவழைத்துக்கொண்டதாகச் செய்தி!

ஜலந்தர் அருகே சில மணி நேரமே நடந்த போரில் மொகலாயப் பெரும்படையிடம் ஈடுகொடுக்க முடியாமல் தோற்றுப்போனார் குஸ்ரூ.

காபூலுக்குத் தப்பிக்க முடிவெடுத்து விசுவாசமான சகாக்களான ஹுசேன்பெக் மற்றும் அப்துல் அஸீஸுடன் ஒரு ஓட்டைப் படகில் ஏறி செனாப் நதியைக் கடக்கப் பார்க்க, பாதியில் படகு கவிழ்ந்தது. நீந்திச் சென்று நதியின் நடுவில் இருந்த ஒரு திட்டின் மீது வெடவெடத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த இந்த மூவரையும் கைது செய்தது மொகலாயப் படை. குஸ்ரூவின் கைகளையும் கால்களையும் சங்கிலிகளால் பிணைந்து இழுத்துக்கொண்டு ஜஹாங்கீரின்முன் நிறுத்தினார்கள். தந்தையின் காலில் விழுந்து அழுத குஸ்ரூவைத் தூக்கி நிறுத்தி அணைத்துக் கொண்டாலும் உடனடியாக மனம் கலங்கி மன்னிப்பதற்கு ஜஹாங்கீர் என்ன ஹுமாயூனா?!

பாதுஷாவின் ஆணைப்படி, குஸ்ரூவின் சகாக்கள் இருவருக்கும் முழுசாக மாட்டுத் தோலை ஈரப்படுத்தி அணிவித்து, மூக்கு, கண்ணுக்கு மட்டும் சற்று இடைவெளி விட்டு இறுகத் தைத்தார்கள். பிறகு இருவரையும் கழுதைகள் மீது பின்புறம் பார்க்கும்படி அமர்த்தி ஊர் வீதிகளில் தொடர்ந்து ஊர்வலமாகக் கொண்டு சென்றார்கள். கொளுத்தும் வெயிலில் மாட்டுத்தோல் உலர்ந்து மேலும் உடல்களை இறுக்கியது. மாலையில் பாதுஷா முன் தோலைக் கத்தரித்துக் கழற்றிப் பார்த்ததில் குஸ்ரூவின் நண்பர்கள் இருவருமே அலறக்கூட முடியாமல் மூச்சுத் திணறி இறந்திருந்தார்கள்.

அதைத் தொடர்ந்து, கடை வீதியின் இருபுறமும் கூர்மையான முனையோடு வரிசையாகப் பொருத்தி வைக்கப்பட்ட மூங்கில் கம்பங்களில், குஸ்ரூவுக்கு ஆதரவாகப் போரிட்ட வீரர்களை உயிரோடு கழுவிலேற்றினார் ஜஹாங்கீர். முத்தாய்ப்பாக, குஸ்ரூவை ஒரு யானை மீது அமர்த்தி அந்த வீதியில் நாள் முழுவதும் குறுக்கும் நெடுக்குமாக அழைத்துச் செல்லச் சொன்னார். பிறகுதான் பாதுஷாவுக்கு அமைதி திரும்பியது!

இது நடந்தது ஜஹாங்கீர் ஆட்சிப் பீடம் ஏறி ஆறு மாதங்களுக்குள். பிறகு ஓராண்டு காலத்துக்கு விலங்குகளால் பிணைக்கப்பட்டு வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டிருந்தார் குஸ்ரூ. மகனின் மனதுக்குள் தகித்துக் கொண்டிருந்த புரட்சிக் கனல் அணைந்திருக்கும் என்று தப்புக்கணக்குப் போட்ட ஜஹாங்கீர், சங்கிலிகளிலிருந்து குஸ்ரூவை விடுவித்ததோடு நில்லாமல் ஒரு முறை வேட்டைக்கும் அழைத்துக்கொண்டு போக, போன இடத்தில் தந்தையைக் கொல்ல குஸ்ரூ போட்டிருந்த திட்டம் பாதுஷாவுக்குத் தெரிய வந்தது. அரண் மனையில் உள்ள சுமார் நானூறு பிரபுக்களுக்கும் சில பல தளபதிகளுக்கும் இந்தச் சதித்திட்டத்தில் பங்குண்டு என்றும் மன்னருக்குத் தகவல் வந்தது.

“இந்தத் துரோகிகள் அத்தனை பேருக்கும் ஒட்டுமொத்தமாக நான் தண்டனை வழங்கினால் தேவையில்லாமல் ஊரெங்கும் பேச்சுக் கிளம்பும். ஆகவே, அவர்கள் மீது ஒரு கண் வைத்தால் போதும். மற்றபடி எதுவும் பெரிதாகக் கண்டுகொள்ள வேண்டாம். சதித்திட்டத்தில் முன்னணியில் நின்றவர்களை மட்டும் (நாலு பேர்) பொறுக்கியெடுத்துப் பரலோகம் அனுப்புங்கள்!” என்று ரகசியமாக ஆணை யிட்டார் ஜஹாங்கீர் பாதுஷா.

இதற்குப் பிறகும் மகனை முழு ஆளாக உலவ விடுவது ஆபத்து என்று முடிவெடுத்த ஜஹாங்கீர் குஸ்ரூவின் கண்களைப் பறித்து விடும்படி தன் மெய்க்காவல் படையினரிடம் சொல்லி அனுப்பினார்.

சிறைப்பட்டிருந்த குஸ்ரூவின் கண்கள், பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் ஊடுவப்பட்டன. (‘... மிகவும் வீறிட்டு அலறியதாகக்

கேள்விப்பட்டேன்.. என்ன செய்வது...?!' - என்று சுயசரிதையில் குறிப்பிடுகிறார் ஜஹாங்கீர்!).

குஸ்ரூவின் பார்வையைப் பறிக்கப் போன மெய்க்காவல்படையிலும் குஸ்ரூ மீது பரிதாபப்பட்ட யாரோ ஓரிருவர் இருந்து வைக்க, இளவரசரின் ஒரு கண் மட்டும் அவ்வளவாகச் சேதப்படுத்தப்படாமல் இரக்கத்தோடு விடப்பட்டது.

நூர்ஜஹான்... ஒரு ஓவியம்!

பிற்பாடு மகன் நிலை கண்டு சற்றே நெகிழ்ந்த ஜஹாங்கீர், வைத்தியத்துக்கு ஏற்பாடு செய்தார். பாரசீகத்திலிருந்து இதற்காகவே வந்த பிரபல கண் வைத்தியரான ஹகீம் ஸாத்ரா தந்த சிகிச்சையில் குஸ்ரூவுக்கு ஒரு கண்ணில் பார்வை சற்றேறக்குறையத் திரும்பி வந்துவிட்டது என்று கேள்வி. இருப்பினும், நடந்து முடிந்த இந்தப் பயங்கரங்களுக்குப் பிறகு துவண்டு போயிருந்த இளவரசர், அப்பாவுக்கு எதிராகத் தலையே தூக்கவில்லை.

ஜஹாங்கீர் காலத்து வரலாற்று பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும்போது, பொதுவாகவே இளவரசர் குஸ்ரூவுக்கு நாட்டில் நிறைய ஆதரவாளர்கள் இருந்திருக் கின்றனர் என்பது புரிகிறது. அந்த அளவுக்கு நல்ல பெயர் எடுத்திருந்த மென்மையான இந்த இளைஞர், படிப்பறிவு மிக்கவர் மட்டுமல்ல... ஏகபத்தினி விரதம் காத்தவர் என்பதும் வியப்பான ஒரு செய்தி! எவ்வளவோ தகுதிகள் இருந்தும் விதி வசத்தாலோ, வேறு சில காரணங்களாலோ இலக்கை அடையாமல் அல்பாயுசில் இறந்தவர்கள் ஒவ்வொரு நாட்டிலும் உண்டு. வரலாற்று மூலையில் உள்ள அந்த ‘வாய்ப்பிழந்தவர்கள் பட்டியலில்’ குஸ்ரூவின் பெயரும் இடம் பெறுகிறது!

குஸ்ரூ சம்பந்தமாக வேறொரு துயரமான நிகழ்ச்சியும் நடந்தது...

மென்மையும் மூர்க்கத்தனமும் மாறி மாறி ஜஹாங்கீர் பாதுஷாவை ஆட்டிப்படைக்கும் என்று முன்பே குறிப்பிட்டோம் அல்லவா? முன்பு குஸ்ரூ பஞ்சாபுக்குத் தப்பிச் சென்றபோது அவருக்குச் சீக்கிய மதகுருவான அர்ஜுன்சிங் உதவியதாகக் கேள்விப்பட்ட ஜஹாங்கீர், ‘ராஜதுரோகம்’ என்று குற்றம் சாட்டி அந்த முதியவரைக் கைதுசெய்து ஆக்ராவுக்கு இழுத்து வரச் செய்தார். குரு அர்ஜுன்சிங் செய்த ஒரே குற்றம் - குஸ்ரூவுக்கு ஐந்தாயிரம் ரூபாய் தந்து உதவியது. விசாரணையில் அந்தப் பெருமகனார், “அரசரே! உங்கள் தந்தையார் அக்பர் பாதுஷா எங்களுக்கு எத்தனையோ உதவிகள் செய்திருக்கிறார். கையில் காசில்லாமல் அவருடைய பேரப்பிள்ளை தவித்தது கண்டு மனம் சங்கடப்பட்டது. ஆகவே என்னிடம் இருந்த பணத்தைத் தந்து உதவினேன். மனிதாபிமான அடிப்படையில் செய்த உதவி அது. உங்களுக்கு எதிரான காரியம் என்று தயவுசெய்து தவறாக எடுத்துக்கொள்ளாதீர்கள்...” என்று மென்மையாக வாதிட, போகட்டும் என்று இரண்டு லட்ச ரூபாய் அபராதம் விதித்துத் தண்டனை வழங்கினார் ஜஹாங்கீர்.

பெரியவரோ, “மன்னிக்க வேண்டும் சக்ரவர்த்தி! தவறு செய்தவர்களுக்குத்தான் அபராதம் விதிக்கப்படுவது வழக்கம். சிரமத்தில் இருந்த தங்கள் மகனுக்கு உதவி செய்ததை நான் குற்றமாக எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?” என்று ஆட்சேபிக்க, ஜஹாங்கீருக்குக் கோபம் ஏறியது...

சீக்கிய மக்களின் பெருமதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரிய குரு அர்ஜுன்சிங்குக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

‘பொதுவில் ஒரு நல்ல மன்னர்’ என்று பெயரெடுத்து வந்த ஜஹாங்கீர், ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்திய நிகழ்ச்சி இது. ‘அதுவரையில் மிகவும் அமைதியாகவும் சாதுவாகவும் வாழ்ந்து வந்த சீக்கிய மக்கள், உத்வேகம் கொண்ட ஒரு போர் இனமாக மாறியது இந்தக் கொலைக்குப் பிறகுதான்...!’ என்கிறது வரலாறு.

ஜஹாங்கீரின் ‘மற்றொரு பக்கம்’ போவோம்!

பாரசீகத்தில் ஓரளவு வசதியான குடும்பத்தைச் சேர்ந்த கியாஸ்பெக் என்பவர் வாழ்க்கையில் மேலும் முன்னேற நினைத்துக் குடும்பத்தோடு இந்தியாவுக்குக் கிளம்பி வந்தார். அக்பர் பாதுஷாவிடம் பணிபுரிய வேண்டும் என்ற இவர் விருப்பம் நிறைவேறியது. நிர்வாகத்தில் திறமை காட்டிப் படிப்படியாக உயர்ந்து ஜஹாங்கீர் ஆட்சியில் ‘இதி மத்-உத்-தௌலா’ (அரசாங்கத்தின் தூண்!) என்ற விருது பெயர் பெற்று ஓர் அமைச்சர் அளவுக்கு அந்தஸ்தில் உயர்ந்தார் இவர். அற்புதமான அழகு

ஜொலிக்கும் ஒரு மகளைப் பெற்ற திறமையும் இவருக்கு இருந்தது. அவள்தான் மெகருனிஸா!

அரண்மனையில் இருந்த பிரதான பாரசீகத் தளபதிகளில் ஒருவரான ஷெர் அஃப்கன் என்பவரை மகளுக்குத் திருமணமும் செய்வித்தார் தந்தை.

ஆகஸ்ட் 1607-ல், வங்காளத்தில் தங்கியிருந்த மொகலாயப்படைக்குத் தளபதியாகப் போன ஷெர் அஃப்கன், அங்கு எதிரிகளால் கொல்லப்பட, இளம் விதவை மெகருனிஸாவையும் அவளுடைய பெண் குழந்தையையும் சோகப்பட்டுப் போன தந்தை இதி மத்-உத்-தௌலா அரண்மனைக்கு வரவழைத்தார். மறைந்த அக்பர் பாதுஷாவின் ராணிகளின் மேற்பார்வையில் பத்திரமாக மகள் இருக்கட்டும் என்பது அவர் விருப்பம்.

ஜஹாங்கீரின் ஆஸ்தான ஓவியர்கள் போட்டி போட்டுக்கொண்டு பாதுஷாவை விதவிதமாக வரைந்து தள்ளினார்கள். மன்னரின் பிரதம ஓவியர் அபுல்ஹசன் வரைந்த இந்த ஓவியத்தில் ஜஹாங்கீர் உலகத்தின் உச்சியில் நிற்கிறார். 'போனால் போகட்டும்' என்று அவர் அணைத்துக் கொண்டிருப்பது பாரசீக மன்னர் ஷா அப்பாஸ்!

நாலாண்டுகள் கழிந்தன. ஒரு நாள் அரண்மனையில் உள்ள பெண்கள் எல்லோரும் சேர்ந்து 'லேடீஸ் கிளப்' பாணியில் விற்பனைக் கண்காட்சி

ஒன்றை ஜாலியாக நடத்தினர். பொழுதுபோக அரச குலப் பெண்கள் இப்படி விதவிதமாக விழாக்கள் நடத்துவது அப்போது வழக்கமாக இருந்தது. தவிர, பெரிய இடத்து இளைஞர்களும் பெண்களும் ஜாலியாகக் கலந்துபேசவும் குறும்பான சேஷ்டைகளில் ஈடுபடவும் இப்படிப்பட்ட 'சந்தை'கள் உதவியாக இருந்ததுண்டு! மாலை மங்கிய குதூகலமான சூழ்நிலையில், பரிவாரத்துடன் கண்காட்சிக்கு சக்ரவர்த்தி ஜஹாங்கீர் வருகை தர, உற்சாக ஆரவாரம்! நண்பர் களிடம் தமாஷாக பேசியவாறு நடந்து கொண்டிருந்த ஜஹாங்கீரின் பார்வை எதேச்சையாக ஒரு ஸ்டாலுக்குள் திரும்ப - அங்கே மேற்பார்வையில் இருந்தது மெகருனிஸா! அந்தப் பெண்ணின் அழகில் உடனடியாகத் திக்குமுக்காடிப் போன ஜஹாங்கீரின் கால்கள் அதற்குமேல் நகர மறுத்ததாகக் கேள்வி! மனதைப் பறிகொடுத்து விட்டபின் மன்னர் மாதக்கணக்கிலா காத்திருப்பார்? விரைவிலேயே ஜஹாங்கீர் - மெகருனிஸா திருமணம் நடந்தது.

மகாராணியாக ஆன மெகருனிஸாவுக்குப் புதுப் பெயர் ஒன்றைப் பரவசத்துடன் சூட்டி மகிழ்ந்தார் ஜஹாங்கீர் - 'நூர்மஹால்' என்று! நூர்மஹால் என்றால் 'அரண்மனையில் ஒளி' என்று பொருள். அதோடு திருப்தி யடையாத பாதுஷா, 'நூர்ஜஹான்' (உலகின் ஒளி!) என்று மனைவியின் பெயரில் ஒரு திருத்தம் கொண்டு வந்தார்!



ரம்ஸான் பண்டிகையில் ஜஹாங்கீர்...

அழகிலும் அறிவிலும் கிரேக்க கிளியோ பாட்ராவுக்கு இணையான நூர்ஜஹான், ஜஹாங்கீரின் இதயத்தில் மட்டுமல்ல... வரலாற்றிலும் தனியிடம் பிடித்த வித்தியாசமான ஒரு பெண்மணி!

அந்தப்புரத்தில் ஓர் அரியணை!

நூர்ஜஹான் விதவையானதற்குப் பின்னணியில் மர்மம் ஏதேனும் உண்டா?

'நூர்ஜஹானை மணம் செய்து கொள்வதற்காக அவருடைய கணவரான ஷெர் அ∴ப்கனைத் தீர்த்துக்கட்டியவர் ஜஹாங்கீர்' என்று சில வரலாற்று ஆசிரியர் களும் 'விதவையான நூர்ஜஹானைத் திருமணம் செய்துகொண்ட ஒரே காரணத் துக்காக ஜஹாங்கீர் மீது இப்படி ஒரு பழி சுமத்துவது அபாண்டம்' என்று சிலரும் ஷெர் அ∴ப்கன் மரணம் பற்றி வெவ்வேறு கருத்துகள் தெரிவிக்கின்றனர்.

வங்காள கவர்னராக நியமிக்கப்பட்ட ஷெர் அ∴ப்கன், தான்தோன்றித்தனமாகவும், முரட்டுத்தனமாகவும் செயல்பட்டது ஜஹாங்கீருக்குத் தெரியவர, அதுபற்றி விசாரிக்க குத்ப்-உதீன் என்ற பிரமுகரை டெல்லியிலிருந்து வங்காளத்துக்கு அனுப்பினார் பாதுஷா.

விசாரணையின்போது வாக்குவாதம் வெடித்தது. சக்ரவர்த்தியை ஷெர் அ∴ப்கன் தரக்குறைவாகப் பேசியதைக் கண்ட குத்ப்-உதீன், அவரைக் கைது செய்ய முனைய... கோபம் கொண்ட ஷெர் அ∴ப்கன்,

உறையிலிருந்து வாளை உருவி அதை குத்ப்-உதீன் வயிற்றில் செலுத்திக் கொன்றுவிட்டார். இதைக் கண்டு குத்ப்-உதீனுடன் வந்த மெய்க்காவலர்கள் திகைக்க, அவர்களில் ஃபிர்கான் என்பவர் வாளைச் சுழற்றிக் கொண்டு ஷெர் அஃப்கன் மீது பாய்ந்தார். வாட்போரில் வல்லவரான ஷெர் அஃப்கன் அவரையும் வெட்டிச் சாய்க்க, வெறியாகிப் போன அத்தனை பேரும் சூழ்ந்துகொண்டு நூர்ஜஹானின் கணவரை அங்கேயே சின்னாபின்னமாக வெட்டிக் கொன்று போட்டனர்.

இந்தக் கொலைச் சம்பவத்துக்குப் பிறகுதான் நூர்ஜஹான் தன் பெண் குழந்தையுடன் அரண்மனைக்குப் போய்த் தங்கியதும், பிற்பாடு ஜஹாங்கீர் அவரை மணந்துகொண்டதும் நடந்தேறியது!

மொத்தத்தில் ஷெர் அஃப்கன் கொலை ஜஹாங்கீர் பாதுஷாவுக்கு வசதியாகப் போய்விட்டது என்னவோ உண்மை. அதற்காகக் கொலைத் திட்டத்தையே மன்னர்தான் தீட்டினார் என்பதற்குத் திட்டவட்டமான சரித்திர ஆதாரம் எதுவும் இல்லை என்பதுதான் உண்மை.

சரி, போனது போகட்டும்! புதுவாழ்வு வந்த பிறகும் பேரழகி நூர்ஜஹானின் பழைய வாழ்க்கை பற்றி நாம் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பது சற்றுத் தர்மசங்கடமான விஷயம் என்பதால், மகாராணியின் பெருமைகள் மற்றும் திறமைகள் பக்கம் சற்றுத் திரும்புவோம்..!

முக்காடு போட்டுக்கொண்டாலும், முகத்திரை அணிந்துகொண்டாலும் பெண்கள் மட்டும் மனது வைத்தால், அவர்களுக்கு வானமே எல்லை என்பதற்கு நூர்ஜஹான் பேகம் கச்சிதமான ஓர் உதாரணம். சகல கலைகளும் ராணிக்கு அத்துப்படி. ஏராளமான அழகும் ஏகமான சுறுசுறுப்பும் கொண்ட அவரை ஒரு நிமிடம் சோம்பி அமர்ந்து யாரும் அரண்மனையில் பார்த்ததில்லையாம். மன்னருக்கும் முக்கிய ராணிகளுக்கும் புதுப்புது வகையான உடைகளை டிஸைன் செய்தவர் நூர்ஜஹான் தான். ஆபரணங்களானாலும் சரி, ராணி வரைந்து காட்ட, பொற்கொல்லர்கள் அவற்றை நேர்த்தியாக உருவாக்குவார்கள். மன்னரின் பிரத்யேக அறையில் இருந்த பிரதான கம்பள விரிப்புகளும் நூர்ஜஹானின் தயாரிப்பே. கவிதை புனைவதிலும் ராணிக்கு ஏகத் திறமை உண்டு. ஜஹாங்கீர் காதல் உணர்வோடு தலைப்புக் கொடுக்க, குறும்போடுகூடிய கவிதை வரிகள் மின்னலாக மனைவியிடமிருந்து வந்து விழும். வேட்டையிலும் மிகுந்த தேர்ச்சி நூர்ஜஹானுக்கு உண்டு. ஒரு முறை 'இன்று நான் நாலு புலிகளை வீழ்த்தாமல் திரும்ப மாட்டேன் - அதற்கு நான் உபயோகப்படுத்தப் போவது நாலு துப்பாக்கி ரவைகளைத்தான்!' என்று யானைமீது ஏறிக் காட்டுக்குக் கிளம்பிய பேகம், நாலு புலிகளை வீழ்த்திவிட்டுத் திரும்பினார். ஒரு புலிக்கு மட்டும் அதிகப்படியாக ஒரே ஒரு ரவை தேவைப்பட்டுவிட்டது குறித்து பிற்பாடு கணவரிடம் ரொம்பவும் வருத்தப்பட்டார். அந்த அளவுக்கு ஒரு பர்ஃபெக்ஷனிஸ்ட் நூர்ஜஹான்!

வேட்டையாடிவிட்டு அரண்மனைக்குத் திரும்பியவுடனே, புதுப்புது வாசனைத் திரவியங்கள் தயாரிக்க அமர்ந்துவிடுவார் மகாராணி. இன்றளவும் புகழ் பெற்ற 'அத்தர்' எனும் வாசனைத் திரவியத்தை முதன் முதலில் கண்டுபிடித்து உருவாக்கியவர் நூர்ஜஹான்தான். அதை முகர்ந்துவிட்டுப் பிரமித்துப்போன பாதுஷா மனைவிக்குப் பரிசாக அளித்தது ஓர் அற்புதமான முத்து மாலை...!

இத்தனை ஜோலிகளுக்கும் நடுவே சுமார் ஐந்நூறு அநாதைப் பெண்களுக்குத் திருமணமும் நிதியுதவியும் இரக்க உணர்வோடு செய்து

மறுவாழ்வு தந்தவர் ஜஹாங்கீரின் மகாராணி!

பேச்சுக்கலை, காதல்கலை, ராஜதந்திரம் - இப்படி அனைத்திலும் கொடிகட்டிப் பறந்த நூர்ஜஹானிடம் மன்னர் மதிமயங்கிப் போய் அடியோடு தன்னை இழந்ததை யார்தான் ஆட்சேபிக்க முடியும்! ஆகவே, சாம்ராஜ்யத்தில் நூர்ஜஹானின் செல்வாக்குப் பொங்கிப் பரவியதில் வியப்படைய ஒன்றுமில்லை. போகப் போக, ராணியின் தலையசைப்பு இல்லாமல் எதுவுமே அசையாத நிலை ஏற்பட்டுவிட்டது. “பேகம் ஒன்று சொன்னால் அதுதான் சட்டம். எல்லாமே இனி அவள்தான். தினமும் எனக்கு அருந்த ஒயினும் உண்ண உணவும் அவள் தன் கையால் தந்தால் அது ஒன்றே எனக்குப் போதும்!” என்று வெளிப்படையாகவே அறிவித்த ஜஹாங்கீர் சக்ரவர்த்தி, தங்க நாணயங்களிலும் ராணியின் பெயரைப் பதிக்கச் செய்தார் - ‘ஜஹாங்கீர் பாதுஷாவின் ஆணைப்படி, மகாராணி நூர்ஜஹான் பேகத்தின் பெயர் பொறிக்கப்பட்ட இந்தத் தங்க நாணயம் நூறு மடங்கு மேலும் ஒளிபெறுகிறது’ என்ற வார்த்தைகளுடன்!

ஜஹாங்கீரும் ஷாஜஹானும்...

பிறகு என்ன? தனியாகவே பால்கனியில் ஒரு சிம்மாசனம் போட்டுக்கொண்டு ராணி அமர்வதும்... கீழே மந்திரிப் பிரதானிகள் மனுக்களோடு க்யூவில் நிற்பதும் அன்றாடக் காட்சியானது.

அதேசமயம் நூர்ஜஹானும் கணவரின் தேவைகளை ஒரு தாய்க்குரிய நேசத்துடனும் அக்கறையுடனும் கவனித்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

நூர்ஜஹானின் தந்தை இதி மத்-உத்- தௌலாவும் சகோதரர் அஸ்ஃப்கானும்கூட சாம்ராஜ்யத்தில் அசாதாரண செல்வாக்குடன் விளங்கினார்கள் (அஸ்ஃப்கானின் மகள்தான் பிற்பாடு ஷாஜஹானை

மணம் செய்து கொண்ட மும்தாஜ்!). மொத்தத்தில் இவர்கள் அடங்கிய ஓர் உச்சக்கட்ட 'கிச்சன் காபினெட்'டே அரண்மனையில் உருவானது.

மூத்த மகன் குஸ்ரூவை எந்த அளவுக்கு ஜஹாங்கீர் பாதுஷா வெறுத்தாரோ அந்த அளவுக்கு இளைய மகன் குர்ரத்தை நேசித்தார் மன்னர். இளவரசருக்குத் தனிப்பட்ட செல்வாக்கு நிறையவே இருந்தது. நூர்ஜஹானிடமும் புத்திசாலியான இளவரசர் நல்ல பெயர் எடுத்திருந்தார். பெரும் வீரராகத் திகழ்ந்த இளவரசருக்கு தந்தை பெருமிதப்படும் அளவுக்குத் தன் போர்த்திறமையைக் காட்டும் சந்தர்ப்பமும் கிடைத்தது...

மேவாரைச் சேர்ந்த ராஜபுத்திர புரட்சி வீரர் ராணா பிரதாப் இறந்த பிறகு அவர் மகன் அமர்சிங் மொகலாய ஆதிக்கத்துக்கு எதிராகத் தொடர்ந்து கொரில்லாப் போரில் ஈடுபட்டு வந்தது குறித்து முன்னொரு அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தோம். மேவார் முழுமையாக டெல்லி ஆதிக்கத்தில் வர மறுத்து கண்ணாமூச்சி ஆடியதால் நிர்வாக ரீதியில் பல பிரச்னைகள் ஏற்பட்டன. ராஜபுத்திரர்களை வழிக்குக் கொண்டுவர ஜஹாங்கீர் மூன்று முறை படைகளை அனுப்பினார். தொடர்ந்து பல யுத்தங்கள் நடந்தும் (கி.பி.1606-லிருந்து 1614 வரை) திட்டவட்டமான முடிவு ஏற்பட வில்லை. எல்லாமே 'டிரா'வில் முடிந்தது! கடைசியில், தெற்கே - தட்சிணப் பிரதேசத்தில் இருந்த இளவரசர் குர்ரம், வரவழைக்கப்பட்டு அவர் தலைமையில் பெரும்படை ஒன்று மேவார் நோக்கிப் பாய்ந்து சென்றது. குர்ரத்தின் வேகமான, திறமையான தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் சரணடைந்த அமர்சிங், மொகலாய இளவரசருடன் சமாதானம் பேசினார். தோற்றுப்போன தன்னைப் பெருந் தன்மையோடு குர்ரம் நடத்தவே, நிம்மதி யடைந்த அமர்சிங் தன் மகன் கரன்சிங்கை மொகலாய இளவரசரோடு ஆக்ரா அனுப்பினார். வயதாகிவிட்டதால் நேரில் தான் வர முடியவில்லை என்ற மன்னிப்புக் கடிதத்தோடு. அங்கே அரண்மனையில் கரன்சிங் மிகுந்த மரியாதையோடும் கண்ணியத்தோடும் நடந்துகொண்டது கண்டு முகம் மலர்ந்த ஜஹாங்கீர், மேவார் இளவரசரைத் தன்னருகில் அன்புடன் அமர்த்திகொள்ள - நட்பு மலர்ந்தது. "எமக்குத் தலைவணங்கித் தனிப்பட்ட மரியாதையெல்லாம்கூட ராணா தர வேண்டியதில்லை. நம் குடையின்கீழ் இணக்கமாக நடந்துகொண்டால் அதுவே போதும்!" என்று எடுத்துச் சொன்ன ஜஹாங்கீர், கரன்சிங் ஊர் திரும்பியபோது யானை, குதிரை, முத்துமாலைகள், சரிகை உடைகள், வைரங்கள் பதிக்கப்பட்ட குறுவாள், தங்கக்கோப்பைகள் என்று சுமார் இரண்டு லட்ச ரூபாய் மதிப்புக்குப் பரிசுகள் கொடுத்தனுப்பினார். அதற்குப் பிறகு மேவார் ராஜபுத்திரர்கள் மொகலாய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சியில் இறங்க வில்லை - பிற்பாடு ஔரங்கசீப் ஆட்சியில் அவர்கள் மீண்டும் சீண்டப்படும் வரை!

இதைத் தொடர்ந்து தட்சிணப் பிரதேசத்தில் அக்பர் காலத்திலிருந்தே வழிக்கு வராமல் இருந்த நிஜாம் ஷாஹி வம்சத்தைச் சேர்ந்த வீரர் மாலிக் ஆம்பர், மராட்டியர்களோடு சேர்ந்துகொண்டு கூட்டணி அமைக்க... இளவரசர் குர்ரம் தலைமையில் ஒரு பெரும்படை 1617-ல் தெற்கு நோக்கிச் சென்றது. இளவரசரின் வீரத்தைச் சமாளிக்க முடியாத மாலிக் ஆம்பர், டெல்லிக்குக் கப்பம் கட்ட ஒப்புக்கொண்டு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார். இப்படி மேவாரைத் தொடர்ந்து இங்கேயும் வெற்றிக்கொடி நாட்டிவிட்டு ஏராளமான நகைகளோடும் வைர - வைடூரியங்களோடும், பரிசுப் பொருட்களோடும் ஆக்ராவுக்குத் திரும்பிய இளவரசரைத் தன் அரியணையிலிருந்து இறங்கி வந்து

ஜஹாங்கீர் ஆரத் தழுவிக் கொண்டார். கூடவே, மகிழ்ச்சி ஆரவாரத்துக் கிடையே மகனின் தலைமீது தங்க நாணயங்களையும் வைர நகைகளையும் அருவியாகக் கவிழ்த்து அபிஷேகமும் செய்து பரவசப்பட்டார் பாதுஷா. ‘ஷாஜஹான்’ (உலகத்தை ஆள்பவர்!’) என்ற பட்டப் பெயரை இளவரசருக்கு ஜஹாங்கீர் சூட்டியது அப்போதுதான்!

மொகலாய சாம்ராஜ்யத்துக்குப் பெருமை சேர்ந்த இளவரசருக்காக அந்தப்புரத்தில், வரலாறு காணாத வகையில் ஒரு கோலா கலமான விருந்துக்கு ஏற்பாடு செய்தார் மகிழ்ச்சியின் உச்சியில் இருந்த நூர்ஜஹான் பேகம்.

ஆனால், நூர்ஜஹான் - ஷாஜஹான் நட்பு வெகுநாட்கள் நீடிக்கவில்லை.

பின்னே...?

ஒரே உறையில் எப்படி இரு கத்திகள் இருக்க முடியும்!

அதிர்ஷ்டக்காற்று இளவரசர் பக்கம்...!

பிற்காலத்தில் இந்திய மண்ணில் பெரிதாக வாலை ஆட்டப்போகும் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி, லேசாகத் தலையெடுத்த நேரம் அது! கம்பெனி சார்பில் இந்தியாவுடன் ஒரு ‘வர்த்தக உடன்படிக்கை’ செய்து கொள்வதற்காக இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் அனுப்பி, 1615-ம் ஆண்டு வந்து சேர்ந்தார் சர் தாமஸ் ரோ என்னும் பிரபு. ஜஹாங்கீர் பாதுஷாவின் உள்ளுணர்ச்சி ஏதேனும் எச்சரித்ததோ என்னவோ... “ஒப்பந்தம் என்றெல்லாம் எதுவும் தேவையில்லை. மற்றபடி இந்தியாவுக்கு வருகை தரும் ஒரு வெளிநாட்டவருக்குத் தரப்படும் எல்லாச் சலுகைகளும் தங்களுக்கும் கிடைக்கும்!” என்று சக்ரவர்த்தி சொல்லிவிட்டார். “சொந்தமாகக் கட்டடம் ஏதும் கட்டவோ, வாங்கவோ கூடாது. வாடகைக்கு வேண்டுமானால் வைத்துக் கொள்ளுங்கள்...” என்பதும் ஜஹாங்கீரின் கண்டிஷன்! ரோவுக்குச் சற்று ஏமாற்றம் தான்.

இருப்பினும், ஆங்கிலேயர்கள் நீட்டிய ‘நட்புக் கரத்தை’ ஒரேயடியாகத் தட்டித் தள்ளி விடவில்லை பேரரசர் ஜஹாங்கீர். அரபிக்கடலில் போர்ச்சுக்கீசிய கப்பற் படையுடன் பிரிட்டிஷ் கப்பற்படை இருமுறை மோதலில் இறங்கி வெற்றி பெற்ற விஷயம் பாதுஷாவுக்குத் தெரியும். இந்தியாவிலிருந்து கப்பலில் ஹஜ் புனிதப் பயணம் செல்பவர்களுக்குப் ‘பிரச்னை’ ஏதும் பிரிட்டிஷ் கப்பல்களால் வரக்கூடாது என்று நினைப்பும் ஜஹாங்கீர் மனதில் ஓடியிருக்க வேண்டும். ஆகவே, நம்பிக்கை யூட்டும் வகையில் மிகுந்த அன்புடனும் நட்புறவோடும் சர் தாமஸ் ரோவை நடத்தினார் சக்ரவர்த்தி. ரோவும் சுமார் மூன்று ஆண்டுகள் தன் உதவியாளர் எட்வர்ட் டெர்ரியுடன் அரண்மனையில் தங்கினார். ஜஹாங்கீர் சக்ரவர்த்தியின் அன்றாட அலுவல்களை நுணுக்கமாக விவரிக்கும் ரோ மற்றும் டெர்ரியுடைய டைரிக் குறிப்புகள் வரலாற்றுக்குக் கிடைத்த பொக்கிஷங்களுள் ஒன்று என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.



சர் தாமஸ் ரோ

அரண்மனைக்கு வந்து சேர்ந்த தாமஸ் ரோ, பாதுஷாவுடன் சற்றுச் சீக்கிரமாகவே சந்திப்பு வேண்டி வெளிநாட்டு மது வகைகளை ஜஹாங்கீருக்குப் பரிசாக அனுப்பித் தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக்கொண்ட தமாஷ் நிகழ்ச்சி ஒன்றும் நடந்தது. ரோவைச் சந்திப்பதற்குப் பதில் வெளிநாட்டுச் சரக்கில் புகுந்து விளையாடிச் சில நாட்கள் தொடர்ந்து மயக்க நிலையில் மன்னர் ஜஹாங்கீர் இருந்ததால், பாதுஷாவின் தரிசனம் கிடைக்க ரோ சில நாட்கள் ‘கடனே’ என்று காத்திருக்க வேண்டி வந்தது!

இங்கிலாந்திலிருந்து பொம்மைகள் உட்படப் பல பரிசுப் பொருட்களையும் வரவழைத்து மொகலாய ராஜ குடும்பத்தில் விநியோகித்தார் ரோ. சில சமயம் சீமையி லிருந்து சீப்பான பொருட்கள் அனுப்பப் பட்டது கண்டு தர்மசங்கடப்பட்டுப் போன இந்தத் தூதர், ‘என் மானம் போகிறது. ஓரத்தில் உடைந்த பொருட்களையெல்லாம் அனுப்ப வேண்டாம். தங்கமும் வைரமும் சுற்றிலும் கொட்டிக் கிடக்க, ரொம்பவும் செல்வாக்குடன் ஆட்சிபுரியும் மன்னர் இந்துஸ்தானின் பாதுஷா...’ என்கிற ரீதியில் பிரிட்டிஷ் அரசு அதிகாரிகளுக்குக் கோபத்துடன் கடிதம் ஒன்றை அனுப்பினார். ஆனால், ஜஹாங்கீரோ ஒரு குழந்தைக்குரிய ஆர்வத்துடன் வெளிநாட்டுப் பொருட்களைத் தோண்டித் துருவிப் பார்வையிட்டார். வெளிப்படையாகவே “உங்கள் ஊரிலிருந்து ஏதாவது வந்ததா?” என்றும் அவ்வப்போது ரோவிடம் மன்னர் கேட்டதுண்டு!

கடிதம் எழுதி அனுப்பிய பிறகும் இங்கிலாந்திலிருந்து வந்த ஒரு கோச் வண்டி சற்றே பழசாக இருந்தது குறித்து ரோ தர்மசங்கடப்பட்டாரே தவிர, பாதுஷா கவலைப்படவில்லை. அதன் ‘ஸீட்’டை அகற்றித் தங்க இழைகள் பதித்த வெல்வெட் இருக்கை ஒன்றைப் பொருத்திய சக்ரவர்த்தி, வண்டியின் பித்தளைப் பகுதிகள் அனைத்தையும் பிரித்து எடுத்து எறிந்துவிட்டு வெள்ளியாக மாற்றிக்கொண்டார் - ஆணிகள் உட்பட! மன்னரைப் பொறுத்த வரையில்

அது ஒரு ‘இம்ப்போர்டட் கோச்’ என்பதே போதுமானதாக இருந்தது!

குறிப்பாக, ஜஹாங்கீரை ரொம்பவும் கவர்ந்தது ரோ பரிசளித்த குட்டிக்குட்டி (மினியேச்சர்) ஓவியங்கள். இயேசு, மேரி மாதா உருவங்களைத் தாங்கிய இந்த ஓவியங்களைத் தன் பிரத்தியேக அறையில் மாட்டிக்கொண்ட சக்ரவர்த்தி, இனி தன் உருவத்தை வரையும் போதும் தலைக்குப் பின்புறம் ஒரு ஒளிவட்டம் சேர்க்கச் சொல்லி ஆஸ்தான ஓவியர்களுக்கு ஆணையிட்டார்!

மொகலாய மன்னர்களில் ஜஹாங்கீர் ஓவியத்திலிருந்துதான் நாம் இந்த ‘ஒளிவட்ட’த்தைக் காண முடியும்!

இந்தியாவில் வசிக்கும்வரையில் ஜஹாங்கீரோடு அநேகமாக இணை பிரியாமல் இருந்த தாமஸ் ரோ, பாதுஷாவின் மொடாக்குடிப் பழக்கம் பற்றியும் குறிப்பிடுகிறார்.

‘ஒரு நாள் மாலை நேரம்... உரையாடிக் கொண்டிருந்தபோது ஒரு கோப்பை மதுவைப் புன்னகையோடு நீட்டினார் பாதுஷா. ஒரு வாய்தான் குடித்தேன். நெஞ்சு தீப்பற்றிக் கொண்டாற்போல் உள்ளே பகபகவென்று எரிந்தது. இருமிக் கண்கள் சிவந்து நீர் கொட்டியது. அடேங்கப்பா, செமத்தியான சரக்கு! ஜஹாங்கீருக்குச் சிரிப்பு வந்துவிட்டது. பாதுஷா ஆணையிட.. ஊழியர்கள் ஓடிச்சென்று பாதாம் பருப்பு வகை, திராட்சை மற்றும் இனிப்புகள் எல்லாம் தங்கத் தட்டில் கொண்டுவந்தனர். ‘சாப்பிடுங்கள்.. பிறகு முடிந்த வரை குடியுங்கள், போதும்!’ என்றார் ஜஹாங்கீர் ஆதரவாக. மேன்மைமிகுந்த சக்ரவர்த்தி கபளீகரம் செய்ததோ, தொடர்ந்து இருபது கோப்பைகளுக்கு மேல்!’ என்கிறார் தன் டைரியில் ரோ!

வந்த காரியம் பெரிய அளவில் முடியவில்லை என்றாலும், பிற்பாடு ஆங்கிலேயர் இந்தியாவுக்குள் பெரிய அளவில் காலடி எடுத்து வைக்க முதன் முதலில் பாலம் அமைத்தவர் சர் தாமஸ் ரோ. பிறகு ஜஹாங்கீரிடம் பிரியாவிடை பெற்று பிப்ரவரி 17-ம் தேதி, 1619-ல் இங்கிலாந்துக்குத் திரும்பினார் அந்த ஆங்கிலேயர். கடைசிவரை நூர்ஜஹான் பேகம் தரிசனம் மட்டும் ரோவுக்குக் கிடைக்கவில்லை. இது பற்றி இங்கிலாந்து மன்னருக்கும் கிழக்கிந்திய கம்பெனியின் தலைமை அதிகாரிக்கும் ரோ எழுதிய ஒரு கடிதத்தில் ‘ஜஹாங்கீர் பாதுஷாவை முழுக்க முழுக்க ஆட்சி செய்வது மகாராணிதான். மன்னரைத் தன் சுண்டுவிரலில் சுற்றித் தன் ஆசைக்கேற்ப ஆட்டி வைக்கிறார் நூர்ஜஹான் பேகம்.... இங்கே உள்ள எந்த இந்தியக் கடவுளையும் சுலபத்தில் பார்த்து விடலாம் போலிருக்கிறது - மகாராணி என்ற கடவுளைத் தவிர!...’ என்று குறிப்பிடுகிறார். அதற்கேற்ப, ராணி நூர்ஜஹானின் சிவந்த - மென்மையான கைப்பிடிக்குள் சாம்ராஜ்யம் ‘கப்சிப்’பென்று இருந்தது என்பது உண்மை!

முதன்முதலில் துணிந்து இதை ஆட்சேபித்தவர் ஒரு சீனியர் அமைச்சர் - பெயர் மஹபத்கான். ஜஹாங்கீருடன் சிறுவயதிலிருந்தே நெருங்கிப் பழகிய இவருக்கு, நாடே ராணியிடம் சிக்கியிருந்தது எரிச்சலைத் தந்துகொண்டிருந்தது.

‘மேன்மை தங்கிய பாதுஷாவுக்கு இந்த எளிமையான, விசுவாசமான ஊழியன் எழுதிக்கொண்டது... எல்லோராலும் புகழப்படும் அளவுக்கு அறிவும் ஆற்றலும் உள்ள பாதுஷாவை, கடைசியில் ஒரு பெண்மணி ஆட்டுவிக்கும் நிலை சரியாகப்படுகிறதா? இதைத் தாங்கள் அனுமதித்திருப்பது கண்டு உலகமே ஆச்சரியப்படுகிறது...’ என்று

‘தில்’லாக சக்ரவர்த்திக்குக் கடிதம் எழுதிய ஒரே நபர் மஹபத்கான்! கூடவே, சிறையில் வாடும் ஜஹாங்கீரின் மூத்த மகன் குஸ்ரூவை விடுதலை செய்ய வேண்டும் என்றும் கோரினார் இந்த மூத்த அமைச்சர்.

காஷ்மீருக்கு ஓய்வெடுக்கச் சென்று கொண்டிருந்த ஜஹாங்கீர் இந்தக் கடிதத்தைப் படித்துவிட்டுச் சற்றே சிந்தனையிலாழ்ந்தார் எனக் கூறப்படுகிறது. ஆனால்... நூர்ஜஹான் வந்து சேர்ந்ததும் மறுபடியும் சிந்தனை மழுங்கி மதியிழந்தார் மன்னர். ‘பேகத்திடம் பேரரசர் கொண்டிருந்த ஆசை அப்படி! இருநூறு மஹபத்கான்கள் வந்தாலும் மன்னரை மகாராணியிடமிருந்து பிரித்துவிட முடியாது!’ என்கிறார் வரலாற்று ஆசிரியர் ஒருவர்!

பார்வை பாதிக்கப்பட்டிருந்தாலும் மூத்த இளவரசர் குஸ்ரூவுக்கு இன்னமும் நாட்டில் மதிப்பு இருப்பதும், மகனை மன்னர் சிறையில் வைத்து இப்படிச் சித்ரவதை செய்து கொண்டிருப்பது தவறு என்று மஹபத்கான் கோபமாக நண்பர்களிடம் பேசுவதும் ‘நூர்ஜஹானின் கிச்சன் காபினெட்’டுக்கு ஒற்றர்கள் மூலம் தெரியாமல் போகுமா? வேண்டப்படாத அதிகாரிகளை இன்று தண்ணியில்லாக் காட்டுக்கு மாற்றுவது போல மஹபத்கானை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பியது இந்தச் சக்தி வாய்ந்த குழு. இளையவர் ஷாஜஹான் மனதிலும் விஷம் பாய்ச்சப்பட்டது. ஒரு சதித் திட்டம் துளிர் விட்டது. தெற்கே ஷாஜஹான் படையோடு சென்றபோது கூடவே தன் அண்ணன் குஸ்ரூவையும் பிடிவாதமாக தன்னுடன் அழைத்துச் சென்றார். பர்ஹான்பூரில் தங்கியிருந்தபோது, அண்ணனை வீட்டுச் சிறையில் இருத்திவிட்டு வேட்டைக்குக் கிளம்பினார் ஷாஜஹான். போவதற்குமுன் விசுவாசமான அடிமை ரேஸாவுக்கு ரகசியமாக ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது!

ஷாஜஹான் வேட்டையில் இருந்தபோது, அரண்மனைக்குள் மனித வேட்டை நடந்தது. இரவு... குஸ்ரூவின் படுக்கையறைக்குள் நடுநிசியில் சில வீரர்களுடன் ஆஜானு பாகுவான ரேஸா நுழைந்தான். சத்தம் கேட்டு விழித்துக்கொண்ட குஸ்ரூ “யார் அது?” என்று கேட்க, “இளவரசே... சத்தம் போடாதீர்கள்... ஜஹாங்கீர் பாதுஷா தங்களை விடுதலை செய்து அழைத்துவரச் சொல்லி எங்களை அனுப்பியிருக்கிறார்...” என்று வந்தவர்கள் சொல்ல, குஸ்ரூ சந்தேகத்துடன்... “என் தந்தையா?!... இருக்காதே..!” என்று சொல்லிக்கொண்டே எழ முயற்சிக்க... பாய்ந்த இரு வீரர்கள் அவரைப் படுக்கையில் அமுக்கிப் பிடித்துக் கொண்டனர். அடிமை ரேஸா, தன் வலுவான கரங்களால் பரிதாபத்துக்குரிய அந்த மூத்த இளவரசரின் கழுத்தை நெரித்துக் கொடூரமாகக் கொன்றான். சில நாட்கள் கழித்து வேட்டையிலிருந்து திரும்பிய ஷாஜஹான் கொஞ்ச நேரம் ‘அழுது புலம்பினார்’. பிறகு ‘வந்த இடத்தில் நோய்வாய்ப்பட்டு குஸ்ரூ திடீரென்று மரணமடைந்ததாக’த் தந்தைக்கு ஒரு கடிதம் அனுப்பிவிட்டு, அங்கேயே குஸ்ரூவின் உடலைப் புதைக்கவும் ஏற்பாடுகளைச் செய்தார். சில நாட்கள் கழிந்து கொலைகாரனும் ஒரு ‘விபத்தில்’ மேலுலகம் சென்றான்!

மகன் குஸ்ரூ வாழ்ந்தபோது அவரைக் குரூரமாக நடத்திய ஜஹாங்கீரை இப்போது ஒட்டுமொத்தமாகச் சோகம் தாக்கியது. மூத்த மகனை நினைத்து ரொம்பவும் பாதுஷா புலம்பியதாகத் தகவல். குஸ்ரூ இறந்த அடுத்த மாதம் அவருடைய உடலை பர்ஹான்பூரிலிருந்து அகற்றி ஆக்ராவில், இளவரசரின் தாயின் கல்லறைக்குப் பக்கத்தில் மீண்டும் புதைத்தார் - கலங்கிப் போயிருந்த ஜஹாங்கீர். இன்றைய

விஞ்ஞான அறிவோடு கூடிய டாக்டர்கள் அன்று இருந்திருந்து குஸ்ரூவின் உடலைப் பரிசோதித்திருந்தால் இளவரசர் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொல்லப்பட்ட விஷயம் வெளிவந்திருக்கும்!

வாட்டசாட்டமான மன்னராக இருந்தாலும் தொடர்ந்து மதுவும் ஓபியமும் உள்ளே போய்க் கொண்டிருந்தால் எப்படி?!

ஆகஸ்ட் 1618-லேயே ஜஹாங்கீர் உடல்நிலை சற்று பாதிக்கப்பட்டு, சில ஆண்டுகளுக்குப் பிறகு மோசமானது...

பாதுஷா இறந்துவிட்டால்... சுதந்திரமாகத் திரியும் ஷாஜஹானிடம் ஆட்சி மாறிவிட்டால்... பிறகு தன் கதி? - முதல் முறையாகச் சற்றுப் பயந்தார் மகாராணி.

தன் நலனில் பெரும் அக்கறை கொண்டவரும் நெருக்கமான ஆலோசகரும் ஆன தந்தை இதி மத்-உத்-தௌலா திடீரென இறந்தது (1622-ல்) நூர்ஜஹான் பேகத்துக்குப் பேரிடியாக அமைந்தது. கொஞ்ச காலமாகவே சகோதரர் அஸ்ஃப்கான் வேறு ஒட்டுதல் இல்லாமல் பழகிக் கொண்டிருந்தார். தன் மகளை ஷாஜஹானுக்குத் திருமணம் செய்திருந்ததால் அஸ்ஃப்கானின் அக்கறையெல்லாம் மாப்பிள்ளையின் பக்கம் திரும்பியிருந்தது. கலவரப்பட்டுப் போன நூர்ஜஹான், தன் முதல் கணவர் ஷெர் அஃப்கன் மூலம் பிறந்த மகளை (நினைவிருக்கிறதா?!) ஜஹாங்கீரின் கடைசி மகன் ஷாரியாருக்கு அவசரமாகத் திருமணம் செய்வித்தார். பதினாறு வயதே நிரம்பிய இந்தக் கடைக்குட்டிச் சிறுவயதிலேயே சிற்றின்பங்களில் சிக்கிச் சீரழிந்தவர் என்பதைப் பற்றியெல்லாம் பேகம் கவலைப் படவில்லை. எதிர்காலத்தில் தான் சொன்ன படி கேட்க ஒரு பொம்மை மன்னர் வேண்டும். அவ்வளவே!

ஷாரியார் திருமணச் செய்தி ஒரு எரியீட்டியாகப் பாய்ந்து சென்று தெற்கே இருந்த ஷாஜஹானின் மனதில் தைத்தது. அதைத் தொடர்ந்து, 'ஆப்கானிஸ்தானில் படையோடு நுழைந்த பாரசீக மன்னரை எதிர்கொள்வதற்காக உடனே எல்லைக்குச் செல்ல வேண்டும்' என்று ஜஹாங்கீரிடமிருந்து (நூர்ஜஹான் சொல்லி) வந்து சேர்ந்த கடிதம் ஷாஜஹானை மேலும் கொதிப்படையச் செய்ய... இளவரசர் தந்தையை எதிர்த்துப் புரட்சியில் இறங்கினார். ஆப்கானிஸ்தான் போக மறுத்ததோடு நில்லாமல், தன் படையுடன் ஒரு சுற்று அடித்து நூர்ஜஹான் பேகத்தின் உறவினர்களின்கீழ் இருந்த சில ஊர்களையும் ஷாஜஹான் கைப்பற்றவே, ஜஹாங்கீர் பாதுஷாவிடமிருந்து கடுமையான எச்சரிக்கைக் கடிதம் வந்து சேர்ந்தது. அதுவரை 'உலகத்தை ஆளப்பிறந்த மகன்' என்று ஷாஜஹான் பற்றித் தன் டைரியில் பெருமிதத்தோடு குறிப்பிட்டுக் கொண்டிருந்த பாதுஷா, திடீரென்று 'கேவலமானவன், துரோகி, ஈனப்பிறவி' என்று 'ரூட்' மாறுவது நமக்குப் புன்னகையை வரவழைக்கிறது!

என்னதான் இருந்தாலும் இளவரசர் ஷாஜஹானின் வீரம் பிரபலமாகப் பேசப் பட்ட ஒன்று. தவிர, இளவரசருக்கு 'ஜெயிக்கிற ராசி'யும் உண்டு என்று பலர் பாராட்டிக் கொண்டிருந்ததால், இதுவரை தனக்கு எதிர்ப்பாளராக விளங்கிய மஹபத்கான் உதவி நூர்ஜஹானுக்கு இப்போது தேவைப் பட்டது! கணநேரத்தில் கட்சி மாறிய பேகம் உடனே மஹபத்கானுக்குக் கடிதம் போட்டு வரவழைத்தார். மிகுந்த மரியாதையோடு கச்சிதமாகப் பேசி, அவரைத் தன் பக்கம் மாறச் செய்தார்!

1623-ல் டெல்லி அருகே பிலோச்பூரில் நடந்த யுத்தத்தில்

மஹபத்கான் படையிடம் தோற்ற ஷாஜஹான், தெற்கே மாண்டு நகருக்குத் தப்பிச் செல்ல, படையுடன் தொடர்ந்தார் ஜஹாங்கீரிடம் அப்போதும் விசுவாசமாக இருந்த மஹபத்கான். ஒரிஸ்ஸா, வங்காளம், பீஹார் என்று படையுடன் இடம் மாறிய ஷாஜஹான், கடைசியில் தந்தைக்கு மன்னிப்புக் கடிதம் அனுப்பினார். என்னதான் இருந்தாலும் மஹபத்கானைவிட ஷாஜஹான் மேல் என்று எடை போட்ட நூர்ஜஹான், இளவரசரின் மன்னிப்பை ஜஹாங்கீர் ஏற்றுக்கொள்ள வைக்க... இப்போது திகைப்பு மஹபத்கான் முகத்தில்!

ஷாஜஹானுக்கு இதற்கிடையே இரு மகன்கள் (தாரா, ஔரங்கசீப்) பிறந்தாகி விட்டது. தான் சமாதானமாகப் போய் விட்டதற்கு அறிகுறியாகத் தன் இரு குழந்தைகளையும் டெல்லிக்கு அனுப்பினார் ஷாஜஹான்.

‘சமாதானம்’ என்று ஷாஜஹான் அறிவித்து விட்டுப் பதுங்கிய உடனேயே ஷாஜஹானின் இன்னொரு சகோதரர் பர்வீஸ் பக்கம் ஆதரவு திரட்டக் கிளம்பிய மஹபத்கானை இம்முறை வங்காளத்துக்கு ‘டிரான்ஸ்ஃபர்’ செய்தார் நூர்ஜஹான். அதைத் தொடர்ந்து ‘பதவி துஷ்பிரயோகம், பணம் சுருட்டல்’ என்று குற்றச்சாட்டுகள் அந்த வீரர் மீது சுமத்தப்பட்டன. தன்னை ஒரு வழி செய்து விடப்போகிறார்கள் என்று முடிவுகட்டிய மஹபத்கான், அதிரடியாக ஒரு காரியத்தில் இறங்கினார்...

1626-ல் காஷ்மீரிலிருந்து லாகூருக்கு வந்து காபூலுக்குக் கிளம்பிய அரச குடும்பம் ஜீலம் நதியைக் கடந்தபோது, மஹபத்கான் ஒரு படையுடன் சென்று ஜஹாங்கீரை (மிகுந்த மரியாதையோடுதான்!) சிறைப்படுத்தினார். நடந்த குழப்பத்தில் நூர்ஜஹான் தப்பியது குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே நோய்வாய்ப்பட்டு சற்றுத் துவண்டுபோயிருந்த ஜஹாங்கீர், இப்போது மஹபத்கான் சொன்னபடி கேட்க வேண்டிய தாயிற்று. மாறுதலுக்கு நூர்ஜஹான் பதுங்கிச் செயல்பட வேண்டி வந்தது! பணத்தையும் வாக்குறுதிகளையும் வாரி வீசி, மஹபத்கான் பக்கம் இருந்தவர்களைப் படிப்படியாக, வேகமாகத் தன் பக்கம் இழுத்துக்கொண்டது மகாராணியின் உச்சக்கட்ட ராஜதந்திரம். ஷெர்ஷாவுக்கு இருந்த நாடாளும் ஆசையும் உத்வேகமும் லட்சிய வெறியும் மஹபத் கானுக்கு இல்லை. அவரைப் பொறுத்தவரை ‘பாதுஷாவை ராணியிடமிருந்து எப்படியாவது மீட்டாக வேண்டும்’ - அவ்வளவுதான்! மஹபத்கான் பிடியை நழுவிவிட, தராசு நூர்ஜஹான் பக்கம் சாய்ந்தது!

தன்னை அரியணை ஏறவிடமாட்டார் நூர்ஜஹான் என்று வெறுத்துப் போய் முடிவுகட்டிய ஷாஜஹான், பாரசீக மன்னரிடம் உதவி கேட்க முடிவு செய்து பயணம் தொடங்கினார். வழியில் கடுமையான இன்ஃப்ளுயன்சா காய்ச்சல் அவரைப் பீடித்தது. ஜுரத்தில் களைத்துப் போன அந்த நிலையில், இளவரசருக்கு வந்த ஒரே நற்செய்தி - போட்டியாக இருந்த சகோதரர் பர்வீஸின் மரணச் செய்திதான்! இருப்பினும் நோயிலிருந்து மீண்டு சுறுசுறுப்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில் இருந்த ஷாஜஹான், கொஞ்ச காலம் ஓய்வெடுக்கத் தட்சிணப் பிரதேசத்துக்கே தன் ஆதரவாளர்களுடன் திரும்பினார். இதுதான் தருணம் என்று நினைத்த நூர்ஜஹான், ஷாஜஹானைச் சிறைப்பிடிக்க பழையபடி மஹபத்கான் (அது ஏனோ - ஷாஜஹானுடன் மோதச் சரியானவர் மஹபத்கான் மட்டுமே என்று

நம்பினார் மகாராணி!) அனுப்ப, இப்போதுதான் மஹபத்கானின் மூளை சற்று வீரத்தைவிட்டு விலகி, விவேகத்துடன் சிந்திக்க ஆரம்பித்தது!

சிந்தனையின் விளைவு - மகாராணியின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் மேவாருக்குத் தப்பிச்சென்ற மஹபத்கான், ஷாஜஹானுக்குச் சமாதான ஓலை ஒன்றை அனுப்பி நட்புக்கரம் நீட்டினார். ஒருவழியாக கோஷ்டி சண்டை முடிந்தது. இந்த இரண்டு சிங்கங்களும் கைகுலுகிக்கிக் கொள்ள, பெண்புலியின் வயிறு பகீரென்றது!

கடைசியில், தந்தை ஜஹாங்கீர் மூச்சுக்காற்றோ மெள்ள அடங்க ஆரம்பிக்க... ஒரு வழியாக இளவரசர் ஷாஜஹான் பக்கம் அதிர்ஷ்டக்காற்று வீச ஆரம்பித்தது!

கணவரின் உயிரைக் காப்பாற்ற வைத்தியர்களைக் கொண்டு போராடினார் நூர்ஜஹான் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். படுக்கையில் விழுந்த பாதுஷாவால் எதையும் சாப்பிட முடியவில்லை - நாற்பதாண்டு காலம் இணைபிரியாத மது, ஓபியம் உட்பட! மன்னரால் சிரமப்பட்டு விழுங்க முடிந்தது சில துளிகள் திராட்சை ரசம் மட்டுமே.

ஆக்ராவுக்குத் திரும்புவதற்காக, பல்லக்கில் ஜஹாங்கீர் பாதுஷாவைப் படுக்க வைத்து அலுங்காமல் நலுங்காமல் கொண்டு வந்தார்கள். லாகூர் அருகே இரவில் ஓய்வெடுக்கத் தங்கியபோது மெள்ளக் கண்களைத் திறந்து பார்த்த ஜஹாங்கீர், தன்னருகில் அமர்ந்து விம்மிக் கொண்டிருந்த மனைவியை நோக்கிச் “சற்று... ஒரு வாய் ஒயின் கிடைக்குமா நூர்ஜஹான்..?” என்று முணுமுணுத்தார்.

தங்கக்கோப்பையில் உடனே கொஞ்சம் ஒயின் கொண்டுவரப்பட்டது. சக்ரவர்த்தியால் துளிகூட விழுங்க முடிய வில்லை. கண்கள் செருகிய நிலையில் மன்னர் ‘கோமா’வுக்குப் போய்விட, கதறினார் நூர்ஜஹான் பேகம்.

மறுநாள் அதிகாலை - தேதி 28. அக்டோபர் 1627 - தன் 36-வது வயதில் அரியணை ஏறி இருபத்திரண்டு ஆண்டுகள் இந்தியாவை ஆண்ட கலா ரசிகர் ஜஹாங்கீர் பாதுஷாவின் உயிர் சத்தம் போடாமல் பிரிந்தது.

18

ஷாஜஹான்..

ரத்தமயமான ஆட்சி மாற்றம்!

மொத்தத்தில் ஜஹாங்கீர் எப்படிப்பட்டவர்?

மற்ற பல அரசர்களைப் போல இந்த மொகலாய சக்ரவர்த்தியை அவ்வளவு சுலபமாகவோ, சுருக்கமாகவோ வர்ணித்துவிட முடியாது என்று அநேகமாக எல்லா வரலாற்று நூலாசிரியர்களுமே கருத்துத் தெரிவிக்கின்றனர்...!

ஒருவிதமாக விவரிக்க வேண்டுமெனில் கோபம், மென்மை, கொடூரம், இரக்கம், நிதானமின்மை, நீதியுணர்வு, குழந்தைத்தனம், கலையுணர்ச்சி, கொலைவெறி... இவற்றின் களேபரமான கலவைதான் ஜஹாங்கீர் பாதுஷா! அரண்மனையில் திடீரென்று நோய்வாய்ப்பட்டு இறந்த ஒரு பேரக்குழந்தைக்காக நாள் முழுவதும் ஜஹாங்கீர் அழுததுண்டு. அதேசமயம் மகன் குஸ்ரூவின் கண்களைத் தோண்டியெடுக்கும் ஆணையையும் பிறப்பித்தார் அவர். காஷ்மீர் சென்றிருந்தபோது ஒரு மலர்த் தோட்டத்தில் மணிக்கணக்கில் மௌனமாக அமர்ந்து இயற்கைக் காட்சியை மெய்மறந்து ரசித்துவிட்டுப் பிற்பாடு தன் டைரியில் ‘அந்த மலர்களின் கொள்ளை அழகு... வைத்த கண் எடுக்க முடியவில்லை!’ என்று குறிப்பெழுதினார் மன்னர். வேறொரு சமயம் குற்றவாளிகளுக்காக விதவிதமான சித்ரவதைகளைக் கண்டுபிடித்துப் பிரயோகிக்கச் சொல்லி ரசித்துப் பார்த்ததும் உண்டு!

முதல் நாள் இரவு ஜாலியாக நண்பர்களுடன் தோளில் கைபோட்டுக்கொண்டு மதுவில் மூழ்கியதும் உண்டு. மறுநாள் ‘குடித்துவிட்டு உளறியதற்காக’ அவர்களுக்குச் சவுக்கடி தந்ததும் உண்டு!

ஆற அமர அமர்ந்து மொத்தமாக வரவு செலவுக் கணக்குப் போட்டுப் பார்த்தால் ஜஹாங்கீரின் ப்ளஸ் பாயிண்டுக்களே முன்னணியில் நிற்கின்றன. ‘அவரைப் பற்றிக் குறை சொல்பவர்கள், ஒரு சூப்பர் நட்சத்திரமாக ஜொலித்த சக்ரவர்த்தி அக்பரைத் தங்கள் நினைவிலிருந்து அகற்ற முடியாமல் தவிப்பவர்கள்’ என்று ஒரு நூலாசிரியர் குறிப்பிடுவது சரியென்றே படுகிறது!

அக்பருடைய சுயகட்டுப்பாடு மட்டும் ஜஹாங்கீருக்கு இருந்திருந்தால் தந்தையை மிஞ்சியிருக்க முடியும். மது மற்றும்

ஓபியப் பழக்கம் ஒரு பெரும் தடைச் சக்தியாக ஜஹாங்கீருக்கு அமைந்து தொலைந்தது. உதாரணமாக, நாள் முழுவதும் ஒரு லட்சியத் தலைவனுக்குரிய சுறுசுறுப்புடனும் கவனத்துடனும் அக்பர் பாதுஷா செயல் பட்டதால் அதிகாரிகள் பொறுப்போடும் பயத்தோடும் நடந்து கொண்டார்கள். குடித்துவிட்டு ஜஹாங்கீர் பாதி நேரம் மயங்கிக் கிடந்ததால் அதிகாரிகள் லஞ்ச ஊழலில் திளைத்து விளையாடினார்கள்.

தன் பதினேழாவது வயதில் ஒயின் அருந்த ஆரம்பித்தார் ஜஹாங்கீர். போகப்போக அது ‘வேலை’ செய்யாததால் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட சாராயத்தில் இறங்கினார். ‘இன்று (38 வயது) வரை

தொடர்ந்து தினமும் குடித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு நாளைக்கு இருபது கோப்பைகளுக்குக் குறைவில்லாமல் தேவைப்படுகிறது. சில சமயம் மாலையில் ஆரம்பித்துப் பின்னிரவு வரை குடிக்கிறேன். முப்பது வயதானபோது, இனி இரவு நேரத்தில்தான் குடிப்பது என்று முடிவு கட்டினேன்...' என்று தன் சுயசரிதையில் வெளிப்படையாகத் தெரிவிக்கிறார் ஜஹாங்கீர். மருத்துவர்கள் 'இந்த ரீதியில் இன்னும் சில மாதங்கள்தான் பாதுஷா உயிரோடு இருக்க முடியும்!' என்று பயமுறுத்திய பிறகு இரண்டு கிண்ணம் ஒயின் - ஒரு கிண்ணம் சாராயம் என்று ஒருவித காக்டெயிலில் இறங்கினார் மன்னர்! நாற்பது வயதுக்குமேல் மதுவின் அளவு ஓரளவு குறைந்ததென்றால் அதற்கு நூர்ஜஹானின் கண்ணீர் கலந்த வற்புறுத்தல் தான் காரணம். மதுவைத் தவிர ஒவ்வொரு நாளும் ஓபியம் 'ஒரு கை நிறைய' பாதுஷா வுக்குத் தேவைப்படும்! இது இப்படியிருக்க, புகையிலையை எந்த விதத்திலும் பயன்படுத்தக் கூடாது என்று ஒரு சட்டம் இயற்றினார் ஜஹாங்கீர்! 'உடம்புக்கும் சரி, மூளைக்கும் சரி - அது மிகவும் கெடுதலான பழகம். நானும் சகோதரர் ஷா அப்பாஸும் (பாரசீக மன்னர்!) இரு நாடுகளிலும் புகையிலைப் பழக்கத்தை, புகைபிடிப்பதைத் தடை செய்ய வேண்டும் என்று ஒருசேர முடிவுக்கு வந்திருக்கிறோம்!' என்று தன் டைரியில் குறிப்பிடுகிறார் ஜஹாங்கீர்.

பொதுவில், சக்ரவர்த்தி ஜஹாங்கீர் ஆட்சியில் மக்கள் துன்பப்படவில்லை. எல்லா மதத்தினரும் நிம்மதியாகவே வாழ்ந்தனர். மகன் குஸ்ரூவுக்கு உதவிய சீக்கிய குருவுக்குத் தேவையில்லாமல் மன்னர் மரண தண்டனை வழங்கினாரே தவிர, மற்றபடி சீக்கியர்களை அல்லல்படுத்தியதாகத் தகவல் இல்லை. அதேசமயம் தன்னைப் பற்றித் தவறான கருத்துக்களைப் பரப்பிய இரு முஸ்லிம் மதகுருமார்களைச் சிறையிலடைத்தார் ஜஹாங்கீர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரே ஒரு முறை இந்துக்கள் வருந்தும்படி பாதுஷா நடந்துகொண்டதுண்டு. புஷ்கர் சென்றிருக்கும்போது, அங்கே ஏரிக்கரையில் இருந்த சிறு கோயிலில் இந்துக்கள் வழி பட்டுக் கொண்டிருந்த 'மனித உடலும் பன்றித் தலையும்' கொண்ட ஒரு விக்கிரகத்தை (வராகப் பெருமான்!) கண்டு திடுகிட்டார் ஜஹாங்கீர். "என்ன சிலை இது?" என்று கோபப்பட்ட மன்னர், தன்னுடன் இருந்த வீரர்களை அழைத்து அந்தச் சிலையைச் சுக்குநூறாக உடைத்து புஷ்கர் ஏரியில் தூக்கி எறியச் செய்தார்! கூடவே "இந்த ஏரி முடிவில்லாத ஆழம் கொண்டது... பாதாளம் வரை போகிறது!" என்று இந்துக்கள் நம்புவது பற்றிக் கேள்விப்பட்ட ஜஹாங்கீர் "அதெல்லாம் வெறும் மூடநம்பிக்கை..." என்று சொல்லிவிட்டு, நீண்ட ஒரு குச்சியைக் கொண்டுவரச் செய்து, அதை நீரில் விட்டு "ஏரி இவ்வளவு ஆழம்தான்..." என்று நிரூபித்துவிட்டு ஆக்ராவுக்குத் திரும்பினார்!

ஓவியர்களும் இசைக் கலைஞர்களும் கவிஞர்களும் படு சுறுசுறுப்போடு இயங்கிய கலாசாரப் பொற்காலம் ஜஹாங்கீருடையது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏன்? துளசிதாஸ் வாழ்ந்து ராமாயணம் எழுதியது இந்த மொகலாய சக்ரவர்த்தியின் காலத்தில் தான்!

ஜஹாங்கீர் கண்ணை மூடியதும் நாட்டில் கோஷ்டிப் பூசல் வெளிப்படையாக வெடித்தது. தன் பதவி, செல்வாக்கு எல்லாமே கணநேரத்தில் கைநழுவிப் போய் விடுமோ என்று பரபரத்த நூர்ஜஹான், ஜஹாங்கீரின் இளைய மகன் ஷாரியாருக்கு (நூர்ஜஹானுக்கும்

அவருடைய முதல் கணவருக்கும் பிறந்த மகளை மணந்து கொண்டவர்!) 'உடனே வரவும்' என்று அவசரத் தகவல் அனுப்பினார்.

சிறுவயதிலேயே கும்மாளம் போட்டுச் சீரழிந்து போயிருந்த ஷாரியாரை ஒரு விதமான 'பெருநோய்' தாக்கியிருந்தது. அதன் விளைவாகத் தலைமுடி மட்டுமல்ல.. மீசை, புருவம் என்று அடியோடு முடி கொட்டி, உடல் ஒருவிதமாக வெளுத்து, பரிதாபமாகப் போயிருந்தது அந்த இளவரசரின் தோற்றம். ஆகவே, வெளியில் ரொம்பத் தலைகாட்டாமல் லாகூர் சென்று அங்கே ஜஹாங்கீரின் அரண்மனையில் தங்கியிருந்தார் அவர். நூர்ஜஹானிடமிருந்து தகவல் போனதும், அந்த நிலையிலும் லாகூர் அரண்மனைக் கஜானாவிலிருந்த பணத்தையெல்லாம் எடுத்து (சுமார் எழுபது லட்ச ரூபாய்!) கூடியிருந்த பிரபுக்கள், தளபதிகளுக்கு விநியோகித்து வழிக்குக் கொண்டுவந்து ஒரு படை திரட்டினார் ஷாரியார்.

மகாராணியின் சகோதரர் அஸஃப்கானின் மாப்பிள்ளை ஷாஜஹான். விடுவாரா சகோதரர்? நூர்ஜஹானிடமிருந்த ஷாஜஹானின் குழந்தைகள் தாரா ஷூகோ, ஷாஷூஜா, ஔரங்கசீப் மூவரையும் தன்னுடன் உடனடியாக அழைத்துக்கொண்ட அஸஃப்கான், நூர்ஜஹானைச் சகல வசதிகளுடன் வீட்டுச் சிறையில் இருந்தினார். அதைத் தொடர்ந்து, தெற்கே தட்சிணப் பிரதேசத்திலிருந்து ஷாஜஹான் வந்து சேரும் வரை அரியணையில் வெற்றிடம் இருக்கக் கூடாது என்பதற்காக, ஷாஜஹானின் அண்ணனான மறைந்த குஸ்ரூவின் மகன் தவார் பக்ஷ் என்ற அப்பாவி இளைஞருக்குப் பட்டம் சூட்டினார் அவர்!

இனி படையுடன் ஷாரியார் லாகூரிலிருந்து கிளம்பினால் அது ராஜதுரோகமாக ஆகும். மொகலாயப்படை அதிகாரப்பூர்வமாக ஷாரியாரை எதிர்த்துப் போரிட முடியும் என்பதுதான் அஸஃப்கானின் புத்திசாலித் தனமான திட்டம். அது வெற்றிகரமாகவே நிறைவேறியது!

ஷாரியார் லாகூரிலிருந்து கிளம்பிய செய்தி வந்தவுடனே அஸஃப்கான் ஆணையிட, நிலைமையைப் புரிந்துகொண்ட மொகலாயப்படை லாகூருக்கு மூன்று மைல் தொலைவில் ஷாரியாரின் படையை எதிர்கொண்டது. ஷாரியார் வெளியே எங்காவது தப்பி ஓடியிருக்கலாம். தன் தோற்றம் நினைவுக்கு வந்ததோ என்னவோ, லாகூர் அரண்மனை அந்தப்புரத்துக்குத் திரும்பி ஓடிச்சென்று ஒளிந்துகொண்டார் அந்தப் பரிதாப இளவரசர்.

மறுநாள் அஸஃப்கான் அனுப்பிய படை அரண்மனையைச் சூழ்ந்துகொண்டது. படையோடு சென்ற பிரபுக்களும் தளபதிகளும் உள்ளே நுழைந்தனர். அங்கே அந்தப்புரத்தில் பணியிலிருந்த ஒரு அலி, அஸஃப்கானின் விசுவாசி. கதறிக் கொண்டிருந்த ஷாரியாரைப் பரபரவென்று இழுத்து வந்து வெளியே போட்டான் அந்த அடிமை. அஸஃப்கான் தளபதிகள் சிறையில் தள்ளினார்கள் அந்த இளவரசரை. இரண்டு நாட்கள் கழித்து அஸஃப்கான் சொல்லியனுப்ப, ஷாரியார் கண்களை - வழக்கமான மொகலாயச் சம்பிரதாயப்படி தோண்டியெடுத்து விட்டார்கள்!

'வெற்றி!' என்று அஸஃப்கான் செய்தி அனுப்பினார் ஷாஜஹானுக்கு. ஆக்ராவை நோக்கி வேகமாக முன்னேறிக்கொண்டிருந்த ஷாஜஹான், 'நம்முடைய புதிய ஆட்சி மலரப்போகிறது... தம்பி, அண்ணனின் மகன், சித்தப்பா மகன்கள்.. இவர்கள் தற்போது வெறும் நெருஞ்சி முட்களாக இருந்தாலும் எதிர்காலப் பிரச்னைகளாகவும் உருவாகக்கூடும்... இவர்களை உயிரோடு விட்டுவைக்க வேண்டியது அவசியம்தானா?'

என்று ஒரு கடிதம் எழுதி, அதை வீரர் ஒருவரிடம் தந்து, விரைவாக - முன்னதாகவே ஆக்ராவுக்கு அனுப்பினார். அதைப் படித்த உடனே அரியணையில் இருந்த தற்காலிக பொம்மை தவார் பக்ஷ், நோயாளி இளவரசர் ஷாரியார், மற்றும் ஷாஜஹானின் சித்தப்பா மகன்கள் எல்லோரையும் கூண்டோடு மேலுலகம் அனுப்பி வைத்துவிட்டு, ஷாஜஹான் அரியணைக்கு நிம்மதியாக நடந்து செல்ல ரத்த(ன)க் கம்பளம் விரித்து வைத்தார் அஸ்ஃப்கான்!

பிப்ரவரி 4-ம் தேதி, ஆகஸ்ட் 1628..! ஆக்ராவில் ஷாஜஹான் முடிசூட்டு விழா கோலாகலமாக நடந்தது. சாம்ராஜ்யத்தின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் தகவல் அனுப்பப்பட்டு, எல்லா ஊர்களிலும் பிரமாதமாக விழாக்கள் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எங்கெங்கு காணினும் கலை நிகழ்ச்சிகள், ஊர்வலங்கள், பேரணிகள்! நாட்டின் எல்லாப் பகுதிகளி லிருந்தும் கலைஞர்களும் கவிஞர்களும் அறிஞர்களும் ஜோதிடர்களும் ஆக்ராவுக்கு வரவழைக்கப்பட்டுப் பரிசுகள் தந்து கௌரவிக்கப்பட்டனர் என்றால் பார்த்துக் கொள்ளலாம்!

அரண்மனை வி.ஐ.பி-க்கள் பற்றிக் கேட்கவே வேண்டாம்... மகாராணி மும்தாஜுக்கு ஆறு லட்ச ரூபாய் ‘விழா போனஸாக’த் தரப்பட்டது! ராஜ குடும்பத்தைச் சேர்ந்த எல்லாக் குழந்தைகளுக்கும் மொத்தமாக எட்டு லட்ச ரூபாய் செலவிடப் பட்டது. (இந்தக் கால மதிப்பு சில கோடிகள்!). வெற்றிகரமாகச் செயல்பட்ட அஸ்ஃப்கான் (மும்தாஜின் தந்தை), பிரதான அமைச்சராகப் பதவி உயர்வு பெற்றார்!

ஆரம்பத்திலிருந்தே நூர்ஜஹானுக்கு எதிர்க் கோஷ்டியில் இருந்த மஹபத்கான், சகல வசதிகளும் கொண்ட ஆஜ்மீருக்கு அவர் கேட்டுக் கொண்டபடி கவர்னராகப் பட்டார்!

நூர்ஜஹான்...?

பெரும் அரசியல் சக்தியாக விளங்கி, மிகுந்த செல்வாக்குடன் வாழ்ந்து விதவையாகிப் போன அந்த மகாராணியின் பொதுவாழ்வு அதோடு நிறைவு பெற்றது! அநாவசியமாக அந்தச் சிற்றன்னையை அவமானப்படுத்தவில்லை புதிய சக்ரவர்த்தி ஷாஜஹான்! ஆண்டுக்கு இரண்டு லட்ச ரூபாய் ‘பென்ஷன்’ தந்ததோடு, அந்தப்புரத்தில் நூர்ஜஹானும் அவருடைய விதவை மகளும் தொடர்ந்து தங்க இடமும் வசதியும் செய்து தந்தார் மன்னர்!

தன் நிலைமையைப் புரிந்துகொண்ட நூர்ஜஹானும் குரலெழுப்பாமல் அடக்க ஒடுக்கமாக நடந்துகொண்டார். கணவர் ஜஹாங்கீர் மறைந்து பதினெட்டு ஆண்டுகள் வாழ்ந்த நூர்ஜஹான், தனக்கென்று லாகூரில் தன் கணவரின் கல்லறைக்குப் பக்கத்தில் நிலம் வாங்கி, அங்கு சற்றே சிறிய கல்லறை ஒன்றைக் கட்டிக்கொண்டார். பிற்பாடு நூர்ஜஹான் இறந்த பிறகு அரசு மரியாதைகளுடன் அவர் உடல் அங்கே புதைக்கப்பட்டது.

சிலருடைய ராசி - தோல்வியடைந்தால் எல்லாமே ஏடாகூடமாகப் போகும் என்று கூறுவதுண்டு. அதற்கேற்ப, ஜஹாங்கீர்- நூர்ஜஹான் தம்பதி மண்ணுக்குள் போன சில நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் விதி அந்தத் தம்பதியை விட்டுவைக்கவில்லை... இன்று, அந்த இரு கல்லறைகளுக்கும் இடையே சற்றே அசந்தர்ப்பமாகப் போகிறது ஒரு ரயில்பாதை!

எதிர்ப்பு முட்கள்!

ரத்தக் கோலங்கள் போடப்பட்ட படிக்கட்டுகளில் ஏறிச்சென்று அரியணையில் அமர்ந்த ஷாஜஹானால் சில மாதங்களே நிம்மதியாக அமர முடிந்தது. உறையில் போட்ட வாளின் ஈரம் உலர்வதற்குள் புதிய சக்ரவர்த்தியை எதிர்த்து வெவ்வேறு இடங்களிலிருந்து வெடித்தது இரு புரட்சிகள் - இம்முறை வெளியிலிருந்து. எதிர்த்தவர்களில் ஒருவர் இந்து. மற்றொருவர் முஸ்லிம்..!

ஜஹாங்கீர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அக்பரின் அருமைத் தோழர் அப்துல் ஃபஸலை வஞ்சகமாக வழிமறித்துக் கொன்ற ராஜபுத்திரத் தலைவர் வீரதேவ்சிங்கை நினைவிருக்கிறதா? ஜஹாங்கீர் இறப்பதற்கு ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பே வீரதேவ்சிங் காலமானார். சற்றே அபரிமிதமான ஆசைகள் கொண்ட அவருடைய மகன் ஜஜ்ஹார்சிங்தேவ் இப்போது குறிவைத்தது ஜஹாங்கீரின் மகனுக்கு!

ஆக்ராவுக்கு சுமார் நூறு மைல் தொலைவில் உள்ள ஓர்ச்சா ராஜ்யத்தை ஆண்டுகொண்டிருந்த ஜஜ்ஹார் (ஆண்டு 1628-ல்) படை திரட்டிக்கொண்டு புரட்சியில் இறங்கினார். அவரை வழிக்குக் கொண்டு வர, படையுடன் கிளம்பினார் ஷாஜஹானின் பதினாறு வயது நிரம்பிய மகன் ஔரங்கசீப். அவர் தலைமையில் 20,000 வீரர்களுடன் அலையென முன்னேறி வந்த மொகலாயப்படையைக் கண்டு கலங்கிப் போனார் ஜஜ்ஹார். காட்டுக்குள் அவர் தப்பி ஓட, மாட்டிக்கொண்ட அவருடைய மகன்கள் சிறைப்படுத்தப்பட்டார்கள்.

ஜஜ்ஹாரின் ஒரு மகன் சிறுவன் துர்காபன் மொகலாயர்களால் மதமாற்றம் செய்யப் பட்டார். அரண்மனைப் பெண்கள், ஷாஜஹானின் அந்தப்புரத்துக்குப் பணிப்பெண்களாக அனுப்பப்பட்டனர். ஜஜ்ஹாரின் மற்ற இரு மகன்கள் சிறையில் தள்ளப்பட்டார்கள். சில நாட்கள் கழித்து, “அந்த இளைஞர்கள் மதம் மாறப் போகிறார்களா, மரணத்தைத் தழுவப் போகிறார்களா?” என்று கேட்டனுப்பினார் ஷாஜஹான். இரு இளம் கைதிகளும் இரண்டாவதைத் தேர்ந்தெடுத்தார்கள்.

இப்படியாக, அக்பர் மெனக்கெட்டுக் கட்டி வைத்த மத ஒற்றுமைக் கோட்டையில் ஷாஜஹான் ஆட்சியில் விரிசல்கள் கிளம்பியது சற்றே விபரீதமான நிகழ்ச்சிதான். (பிற்பாடு ஔரங்கசீப் காலத்தில் கோட்டையே சரிந்தது வேறு விஷயம்!).

மத்தியப் பிரதேசக் காட்டுப் பகுதியில் ஒளிந்து கொண்டிருந்த ஜஜ்ஹார், அங்கே வசித்த காட்டுவாசிகளுடன் ஏதோ தகராறில் ஈடுபட... கொடூரமாக அவர்களால் கொல்லப் பட்டார் அவர். காட்டுக்குள் கிடந்த ஜஜ்ஹாரின் உடலைக் கண்டெடுத்த ஒரு மொகலாயத் தளபதி, இறந்தவரின் தலையை ஏக மகிழ்ச்சியுடன் வெட்டியெடுத்து ஷாஜஹானுக்கு அனுப்பினார். மக்கள் பார்வைக்காகச் சில நாட்கள் கோட்டை வாசலில் கூர்மைப்படுத்தப்பட்ட ஒரு மூங்கில் கம்பத்தில் செருகி வைக்கப்பட்டது, அந்த இந்து மன்னரின் தலை!

இஸ்லாமிய வீரர் கான்ஜஹான் லோடி ஷாஜஹானுக்கு ஏற்படுத்தியது சற்றே தீவிரமான தலைவலி!

மொகலாய சக்ரவர்த்தியின்கீழ் பல ஆப்கானிய வீரர்கள் அடக்க ஒடுக்கமாகப் பணியாற்றி வந்தாலும், ‘ஒரு காலத்தில் டெல்லியில் அமர்ந்து ஆட்சிபுரிந்தவர்கள் அல்லவா நாம்!’ என்ற எண்ணம் பல

ஆப்கானிய வீரர்களின் மனதில் புரட்சிக் கனலாகக் கதகதத்துக் கொண்டிருக்கத்தான் செய்தது. கான்ஜஹான் லோடியும் மொகலாய அரசின்கீழ் குஜராத் பிரதேசத்திலும் பிறகு தட்சிணப் பகுதியிலும் கவர்னராக இருந்தவர் தான். மனதுக்குள் 'மொகலாய ஆக்கிரமிப்பை' வெறுத்தார் அவர். ஜஹாங்கீர் இறந்ததைத் தொடர்ந்து நிகழ்ந்த குறுகிய காலக் குழப்பத்தைக் கண்ட அவர், இதுவே தருணம் என்று முடிவுகட்டி புரட்சிக்கொடியைக் கையில் தூக்கினார். 'குறைந்தபட்சம் தென்னிந்தியாவையாவது கைப்பற்றிப் புதிய சாம்ராஜ்யம் அமைக்க வேண்டும்' என்பது அவர் கனவு!

ஆஸ்தான ஓவியர் அபுல்ஹாசன் வரைந்த ஷாஜஹான் ஓவியம்... 'என்னுடைய இருபத்தைந்தாவது வயதில் வரையப்பட்ட இந்த தத்ரூபமான ஓவியம் எனக்கு மிகவும் திருப்தி அளித்த ஒன்று' என இந்த ஓவியத்தின் மூலையில் தன் கைப்பட எழுதினார் ஷாஜஹான்

பிரச்னை பண்ணிய கான்ஜஹான் லோடி மீது ஏற்பட்ட கோபத்தை அடக்கிக்கொண்ட ஷாஜஹான், லோடியை ஆக்ராவுக்கு வரவழைத்துப் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்தினார். ஆனால், தலைநகரில் லோடி அவ்வளவு மரியாதையாக நடத்தப் படவில்லை. ஷாஜஹானை அவர் நம்பவும் இல்லை. தவிர, கவர்னராக இருந்தபோது அரசுப் பணத்தில் புகுந்து விளையாடியதாகக் குற்றச்சாட்டுகளும் அவர் மீது இருந்தன. நடக்கவிருந்த இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் டெல்லி மேலிடம் 'பிடியை இறுக்கி' ஊழல் பட்டியல் படிக்குமோ, ஒருவேளை தான் சிறைப்படுத்தப் படுவோமோ என்று ஏதேதோ கற்பனை செய்துகொண்டு கலக்கமுற்ற கான்ஜஹான், ஒரு நாள் இரவு ஆக்ரா அரண்மனையிலிருந்து தப்பி ஓடிவிட்டார்!

மும்தாஜ்

ஷாஜஹான்



பால்கனியுடன் கூடிய ஷாஜஹானின் பிரத்தியேக அறை (வெளிப்புறத் தோற்றம்)...



தாஜ்மஹால் அருகில் நெருங்கினால் கூரை தெரியாது..!

உடனே மொகலாயப்படை அவரைத் துரத்த, ஓர்ச்சா மன்னர் ஜஜ்ஹார் ராஜ்யத்துக்குள் தஞ்சமடைந்தார் லோடி. ஜஜ்ஹாரின் மூத்த மகன் விக்ரம்ஜித், யாராலும் சுலபத்தில் தொடர முடியாத மலைப்பாதைகள் வழியாக லோடியை அனுப்பித் தப்பிக்க வைத்தும் பலனிக்காமல் போனது. காட்டிலும் மேட்டிலும் அந்த ஆப்கானிய வீரர் அலைய, மொகலாயப்படை சற்றும் தளராமல் துரத்தியது. வேறு வழியாகத் தப்பப் பார்த்த லோடியின் மகன்களும் நெருங்கிய நண்பர்களும் அடங்கிய ஒரு குழு மொகலாயப்படையிடம் சிக்கிக்கொண்டு எல்லோருடைய தலையும் சீவப்பட்டது என்ற தகவல் வந்து சேர்ந்ததும் கான்ஜஹான் நம்பிக்கையிழந்து துவண்டு போனார். தன் கூடவே வந்த தன் வீரர்களைப் பார்த்து “எங்கேயாவது சென்று தப்பித்துக் கொள்ளுங்கள். என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நடப்பது நடக்கட்டும்” என்று அவர் விரக்தியுடன் சொல்ல, பலர் பிரிந்து சென்றார்கள். சிலர் அந்தச் சோதனையான நேரத்திலும் தங்கள் தலைவனுக்கு அரணாக நின்றார்கள். கடைசியில், அவர்களைச் சூழ்ந்துகொண்ட மொகலாய வீரர்கள் செலுத்திய ஈட்டிகள், அந்த ஆப்கானிய வீரரின் உடலைக் குத்திக் கிழித்தன. கடைசிவரை போரிட்டு வீர மரணம் அடைந்தார்கள் கான்ஜஹானின் வீரர்கள். துண்டிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட தலைகளோடு ஆக்ரா திரும்பியது ஷாஜஹானின் படை. கோட்டை வாசலில் தலைகளைத் தாங்கத் தயாரானது நூற்றுக்கு மேற்பட்ட மூங்கில்கள்..!

உறவினர் எதிர்ப்பு, உள்நாட்டுப் புரட்சிகள்... அடுத்தபடி வாலாட்டியவர்கள் இந்திய மண்ணில் வியாபாரம் செய்ய வந்த வெளிநாட்டினர்!

வங்காளத்தில் சில ஆண்டுகளாகவே ஏராளமான போர்ச்சுக்கீசியர்கள் தங்கி உப்பு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். ஜஹாங்கீர் காலத்திலிருந்தே வங்காளத்தில் உப்பு வியாபாரம் செய்ய போர்ச்சுக்கீசியர் களுக்கு லைசென்ஸ் தரப்பட்டிருந்தது. திறமையான அந்த வியாபாரிகளிடமிருந்து டெல்லி கஜானாவுக்குப் பல ஆயிரக்கணக்கில் வரிப் பணம் வந்ததால், ஷாஜஹான் அரசு அவர்களின் நடவடிக்கைகளில் தலையிடாமல் இருந்தது. இதனால் குளிர் விட்டுப் போன போர்ச்சுக்கீசியர்கள், ஏதோ கொள்ளைக்காரர்கள் ஸ்டைலில் சுற்றுப்புற ஊர்களில் திடீர்ப் பிரவேசம் செய்வதும் அப்பாவி மக்களை மிரட்டித் தண்டல் வசூலிப்பதிலும் ஈடுபட்டனர். அதோடு நிறுத்திக்கொள்ளாமல் நூற்றுக்கணக்கில் ஏழை மக்களை அடிமைகளாக வசப் படுத்தினர். கிறிஸ்துவப் பாதிரிகளை வைத்து அவர்களை வலுக்கட்டாயமாக மதம் மாற்றி னார்கள். போகப்போக, கொழுத்துப்போன அவர்களின் அராஜகம் அதிகரித்தது. வங்காள ஊர்களில் துப்பாக்கி ஏந்திய போர்ச்சுக்கீசியர்கள் கும்பல் கும்பலாக நுழைவதும் பெண்களையும் வயதானவர் களையும் பணயக் கைதிகளாகப் பிடிப்பதும் அவர்களுடைய வீட்டு முன்னாலேயே அவர்களைச் சவுக்கால் அடித்துத் துன்புறுத்துவதும் சகஜமான காட்சிகளாக ஆனது. அழுதுகொண்டே பல இளைஞர்கள் பணம் சேகரித்துக் கொடுத்துத் தங்கள் பெற்றோர்களைத் திரும்ப அழைத்துக் கொண்ட பரிதாப நிகழ்ச்சிகளும் நடந்தன. ஒரு வழியாக, ஷாஜஹான் காதுகளை இந்தத் தகவல்கள் சென்றடைய கொதித்துப் போனார் பாதுஷா.

உடனடியாக டெல்லியிலிருந்து கிளம்பியது ஒரு அதிரடிப்படை. மூன்று மாதங்கள் வங்காளத்தில் தங்கி போர்ச்சுக்கீசியர்களைப் புரட்டியெடுத் தார்கள் மொகலாய வீரர்கள். நிலைமை தலைகீழானது. போர்ச்சுக்கீசியர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள மொகலாயத் தளபதிகளுக்கு லட்சணக்கணக்கில் லஞ்சமாகத் தர முயன்று அதில் தோல்வி அடைந்தனர்.

டெல்லிப்படையின் வாட்கள் சுழன்றன. துப்பாக்கிகள் தொடர்ந்து இயங்கின. மொத்தம் இறந்த போர்ச்சுக்கீசியர்கள் 10,000 பேருக்குமேல். ஆண், பெண் என்று சுமார் ஐயாயிரம் பேர் சிறைப் பிடிக்கப்பட்டனர். இந்தியாவில் கிறிஸ்துவ மதத்தைப் பரப்புவதற்காக அவர்கள் கொண்டுவந்திருந்த நூற்றுக்கணகான விக்கிரகங்கள் பிற்பாடு மொகலாயர்களால் சுக்குநூறாக உடைக்கப் பட்டு யமுனை நதியில் வீசப்பட்டன.

இந்த ஒட்டுமொத்த அதிரடி தண்டனைக்குப் பிறகு போர்ச்சுக்கீசியர்கள் கப்சிப் என்று அடங்கிப் போனார்கள்.

இதற்கிடையே டெல்லிக்கு அடங்காமல் சுதந்திரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த அகமத்நகர், பீஜப்பூர், கோல்கொண்டா அரசுகளை வழிக்குக் கொண்டுவர பலம் பொருந்திய பெரும்படையுடன் இந்தியாவின் தெற்குப் பகுதிக்குள் பிரவேசித்தார் ஷாஜஹான்.

ஆண்டு 1631....

ஷாஜஹானை நிலைகுலைய வைத்த அந்தக் கொடுமையான

சோகம் நிகழ்ந்தது.

அவளுக்காக...

தந்தை ஜஹாங்கீர், நூர்ஜஹானைச் சந்தித்துக் காதல் வயப்பட்ட மென்மையான அனுபவம், போன்றதொரு சூழ்நிலை மகன் ஷாஜஹானுக்கும் நிகழ்ந்தது!

ஆக்ரா அரண்மனை வளாகத்துக்குள் ஆண்டுதோறும் அரசகுலப் பெண்கள் ஏற்பாடு செய்யும் ஒரு 'சந்தை'யில் கண்ணாடிப் பொருட்கள் அடங்கிய ஒரு 'ஸ்டாலில்' பணியிலிருந்தார் பேரழகி அர்ஜுமான் பானு பேகம். ஒரு மாலை நேரம், நெருங்கிய நண்பர்களுடன் ஷாஜஹான் அங்கே வருகை தர, அர்ஜுமான் பானுவைப் பார்த்த விநாடியில் இளவரசரின் இதயம் மெல்லிசை பாடியது. கால்கள் 'ஷாம்பெய்ன்' அருந்தியதைப் போலத் தள்ளாடின. சமாளித்துக்கொண்டு, கடைசியில் இருந்த ஒரு சிறு கண்ணாடிக் கோப்பையைச் சுட்டிக்காட்டி விலை என்னவென்று வினவினார் ஷாஜஹான். அது வெறும் வினா அல்ல - வியூகம் என்பதைப் புரிந்துகொண்ட அர்ஜுமான் பேகம், வேண்டுமென்றே குறும்பாக "இது கண்ணாடி அல்ல... வைரத்தால் செய்யப் பட்டது. விலை பல்லாயிரக்கணக்கில் ஆகுமே... சமாளிக்க முடியுமா?" என்றவாறு தன் பார்வையை மின்னலாகச் செலுத்தினார். "உன்னைப் போன்ற ஒரு பேரழகியின் கைபட்டுவிட்ட பிறகு அது எப்படி வெறும் கண்ணாடியாக இருக்க முடியும்? இந்நேரம் வைரமாக மாறியிருக்கும்!" என்ற ஷாஜஹான், புன்சிரிப்போடு உடனே பணத்தைத் தந்து விட்டுக் கோப்பையை எடுத்துக்கொண்டார். பணத்தோடு இளவரசரின் இதயமும் பறிபோனது!

திருமணம் என்று ஒன்று ஆன பிறகு, அரசர்கள் நிதானமாக அந்தப்புரத்தில் ஆரணங்குகளின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்வது வேறு விஷயம். ஆனால், ஒரு பட்டத்து இளவரசருக்கு முதலாவதாக நிகழும் திருமணம் முன் கூட்டியே சிந்திக்கப்பட வேண்டிய விஷயமாக அப்போது இருந்தது. சில சமயங்களில் ஒரு திருமணத்தின் பின்னணியில் சாம்ராஜ்ய எல்லைகளை விஸ்தரிக்கும் திட்டமும் பின்னிப் பிணைந்திருக்கும். ஆனால், ஜஹாங்கீரிடம் சென்று வெளிப்படையாக ஷாஜஹான் தன் காதலைத் தெரிவித்தவுடன் பாதுஷா ஒரு மறுப்பும் சொல்லாமல் கையை உயர்த்தி அனுமதி தந்தார் - மகாராணி நூர்ஜஹானின் சொந்தச் சகோதரரும் முதலமைச்சருமான அஸஃப்கானின் மகள் அர்ஜுமான் பானு என்பது குறிப்பிடத் தக்கது!

1612-ம் ஆண்டு... ஷாஜஹான்-அர்ஜுமான் பானு பேகம் திருமணம் நடந்தது. மணமகள் பேரரசர் ஜஹாங்கீரை வணங்கி எழுந்தவுடன், "இன்றிலிருந்து நீ மும்தாஜ் (அரண்மனையில் முதன்மையானவள்) என்று அழைக்கப் படுவாய்!" என்று அறிவித்தார் பாதுஷா.

'காதலின் முடிவு திருமணம் எனில் அதோடு காதலும் முடிவு பெறுகிறது...' என்று சொல்லப்படுவது உண்டு. உலகரீதியில் இன்றளவும் உன்னதமாக உயர்ந்து நிற்கும் காதல் காவியங்கள் மணப்பந்தலில் முடியாதவை என்பதை நாம் மறுக்க முடியாது. இதை அடியோடு பொய்ப்பித்துக் காட்டினார் ஷாஜஹான். இளவரசரின் பதினெட்டு வருட இல்லற வாழ்க்கை பிரமிப்பூட்டும் ஒரு காதல் காவியத்தின் இரண்டாம் பாகமாகத் தொடர்ந்தது.

வயதில்கூட வித்தியாசம் இல்லாமல் இருவரும் ஒரே வயது வேறு! மும்தாஜிடம் ஷாஜஹான் உள்ளத்தாலும் உடலாலும் வயப்பட்டுக் கிடந்தார் எனலாம். அதற்கேற்ப, தம்பதிக்குப் பிறந்த குழந்தைகள் மொத்தம் பதினாலு (அவற்றில் ஏழு குழந்தைகள் பிற்பாடு இறந்துவிட்டன.)!

உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹால் உருவாகக் காரணமாக இருந்த காதல் ராணியைச் சற்றேனும் உணர்ச்சிகரமாக நாம் வர்ணிக்கா விட்டால் எப்படி...?!

மிகச்சிறந்த ஒரு லட்சிய மனைவியாகத் திகழ்ந்தவர் மும்தாஜ் என்பதில் யாதொரு கருத்து வேறுபாடும் இல்லை. ராஜதந்திரி அஸஃப்கானின் மகள் என்பதாலோ என்னவோ, மும்தாஜுக்கு மதிநுட்பம் நிறையவே இருந்தது. அதற்காக நூர்ஜஹான் போலத் தன் கணவனை ‘டாமினேட்’ செய்ய முயன்றதில்லை மும்தாஜ். தன் அன்பு வியூகத்துக்குள் அந்தப் பேரரசரை இருத்தி வைத்துக்கொண்டார் அவர். ‘கணவருக்கு நல்ல மனைவியாய், நண்பராய், மந்திரியாய்,

நல்லாசிரியனுமாய்' கடைசிவரை வாழ்ந்தவர் மும்தாஜ் பேகம்!

அரசாங்கச் சட்டங்களோ, அறிவிப்புகளோ, கடிதங்களோ... எதுவானாலும் அவை தயாரான பிறகு அந்தப்புரத்துக்கு அனுப்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் ஷாஜஹான். மகாராணியும் அவற்றை ஆங்காங்கே கச்சிதமாக 'எடிட்' செய்து குறிப்புகளும் எழுதுவதுண்டு! பொதுவாக, எவ்வளவுதான் ஆசையென்றாலும் வேலைக்காக வெளியூர் போகும்போதாவது கணவன்மார்கள் மனைவிகளை வீட்டில் விட்டுச் செல்வதுதானே வழக்கம்? ஷாஜஹான், தான் போகும் இடத்துக் கெல்லாம் தன் பிரிய மனைவியையும் கூடவே அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் - போர்க்களங்கள் உட்பட!

சில ஆங்கிலேய நூலாசிரியர்கள் 'அந்தப்புரத்தில் நிம்மதியாக இருக்கவேண்டிய மனைவியைப் போர் நடக்கும் இடத்துக் கெல்லாம் தன் கூடவே இழுத்துச் சென்று சிரமப்படுத்துவது அப்படி எந்த வகையில் பெரிய காதலோ...?!' என்று அலுப்புடன் குறிப்பிடுகிறார்கள்.

'அரசர் இருக்குமிடமே ஆக்ரா!' என்று மும்தாஜ் பரவசத்துடன் முடிவெடுத்தால் நாமென்ன செய்ய!

ஜூன் 1631, ஏழாம் தேதி...

அகமத் நகர், பீஜப்பூர் சுல்தான்களையும் வழிக்குக் கொண்டுவருவதற்காக மத்திய இந்தியாவுக்குப் படையோடு ஷாஜஹான் சென்றிருந்தபோது, மும்தாஜ் பதினாலாவது குழந்தையைப் பெற்றெடுத்தார். பிரசவம் முடிந்த கையோடு மும்தாஜுக்குத் திடீரென்று ஜன்னி பிறந்தது. உடல் தூக்கிப் போட்டது. வெளியே தளபதிகளுடன் ஆலோசனையில் இருந்தார் ஷாஜஹான். தகவல் வந்தவுடனே பதறிப் போய்க் கூடாரத்துக்கு ஓடிவந்த மன்னர், அருமை மனைவியை 'ஹோ'வென்று அழுதுகொண்டே வாரி மடியில் இருத்திக்கொண்டார். சில நிமிடங்கள் கணவரின் கரத்தை இறுகப் பற்றிக்கொண்டிருந்த மும்தாஜின் தலை சாய்ந்தது. பிரமை பிடித்தவர் போலத் துவண்டு சரிந்து வீழ்ந்து கதறினார் ஷாஜஹான். சில நாட்களில் திகைப்பூட்டும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது - அதுவரை மன்னரின் தலையிலும் முகத்திலும் கம்பீரமாகக் கருமையாக இருந்த ஷாஜஹானின் முடி, திடீரென்று வெள்ளைவெளேர் என்று நரைத்துப் போனது!

அன்பு மனைவியின் அகால மரணம் ஏற்படுத்திய அதிர்ச்சியிலிருந்து ஓரளவு மீளவே ஷாஜஹானுக்கு இரண்டாண்டுகள் பிடித்ததாகக் கூறப்படுகிறது. அதற்குள் மன்னருக்கு முதுமையான தோற்றம் வந்துவிட்டதாகத் தகவல்! இரண்டாண்டு களுக்கு மன்னர் புத்தாடையும் அணிய வில்லை. அலங்காரம், வாசனைத் திரவியம், அறுசுவை விருந்து எல்லாவற்றையும் தவிர்த்தார். அவ்வப்போது திடீரென்று மணிக்கணக்கில் மௌனமாகிப் போனார். மன்னர் என்கிற முறையில் அத்தியாவசியக் கடமைகளில் மட்டுமே ஷாஜஹான் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

ஒரு நாள் நெருங்கிய ஆலோசகர்களுடன் அரசர் இருந்தபோது மனைவி பற்றிப் பேச்சு திரும்பியது. அப்போது காதலும் துக்கமும் ஆவேசமும் பொங்க... "அவளுக்காக ஒரு நினைவு மண்டபம் கட்டவேண்டும்!" என்று சொல்லிக் கலங்கினார் ஷாஜஹான்.

தான் காதலித்த ஒரு பெண்ணுக்கென அற்புதமான ஒரு கல்லறை கட்டவேண்டும் என்ற எண்ணம் மனதில் விஸ்வரூபமெடுக்க

ஆரம்பிக்கவே, காரியத்தில் இறங்கினார் ஷாஜஹான்.

மும்தாஜ் இறந்தது தட்சிணப் பிரதேசத்தில், பர்ஹான்பூர் என்னும் ஊரில், அங்கே தற்காலிகமாகப் புதைக்கப்பட்ட அவருடைய உடல் ஆறு மாதங்கள் கழித்து ஆக்ராவுக்கு - இன்று தாஜ்மஹால் அமைந்துள்ள இடத்துக்கு - பெரும் ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டது. ராணி இறந்து சரியாக ஓராண்டு கழித்து தாஜ்மஹால் கட்டடப் பணிகள் துவங்கின.

அதற்கென யமுனைக் கரையில் ஒரு அழகான இடம் மன்னரால் தேர்ந்தெடுக்கப் பட்டது. அங்கே இருந்த மிகப்பெரிய தோட்டம் ராஜபுத்திர மன்னர் ஜெய்சிங்குக்குச் சொந்தமானது. அந்தத் தோட்டத்தைக் கல்லறைக்காக வாங்க விரும்பினார் சக்ரவர்த்தி. முதலில் இரண்டு கோடி ரூபாய் விலையாகத் தர நினைத்த பாதுஷா, பணமாகத் தந்தால் நண்பர் ஜெய்சிங் தர்மசங்கடப்படுவாரோ என்று எண்ணி, நான்கு அழகான அரண்மனைகளை ஜெய்சிங்குக்குத் தந்து தோட்டத்தைப் ‘பண்டமாற்றம்’ செய்துகொண்டார்!

உடனே ராஜவேகத்தில் பணிகள் தொடங்கின. சில நாட்களுக்குள் இருபதாயிரம் வேலையாட்கள் வந்திறங்கினர். கூடவே, தேர்ந்த சிற்பிகள், கட்டடக்கலைக் கலைஞர்கள் மற்றும் தோட்டக்கலை நிபுணர்கள்...

தாஜ்மஹாலுக்கு ‘வரைபடம்’ தயாரித்துத் தந்தவர் யார்..? வெனிஸ் நகரப் பொற் கொல்லர் மற்றும் சிற்பியான வெரோனியோ, துருக்கியக் கட்டடக் கலைக் கலைஞர் உஸ்தாத் இஸா அஃபாண்டி. லாகூரைச் சேர்ந்த உஸ்தாத் அஹமத்... என்று ஆளுக்கு ஆள் ஒரு பெயரைச் சொன்னாலும், தாஜ்மஹால் தனிப்பட்ட எந்த ஒருவராலும் கற்பனை செய்யப் படவில்லை என்பதே உண்மை. ஷாஜஹானின் மனதில் பனிப்படலமாக இருந்த அந்தக் கல்லறைக்கு வடிவம் தந்தது, உண்மையில் பல மேதைகளின் கூட்டு முயற்சியே! ஆனால், ஒவ்வொரு டிஸைனையும் நேரடியாகப் பார்த்து ‘ஓகே’ சொன்னார் ஷாஜஹான் என்பது உண்மை.

‘கல்லறையாக மட்டுமல்ல, ஏராளமான மக்கள் வருகை தரும் ஒரு புனித இடமாகவும் தாஜ்மஹால் அமைய வேண்டும்’ என்று விரும்பினார் ஷாஜஹான். அதற்கேற்ப தோட்டம், தங்குமிடங்கள், இசை மேடைகள், கடைவீதி... போன்ற எல்லா வசதிகளையும் உருவாக்க ஆணையிட்டார். மொகலாய ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் மட்டுமே தாஜ்மஹாலில் அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1632-ல் வேலை துவங்கி, தாஜ்மஹால் கட்டி முடிக்க இருபது ஆண்டுகள் பிடித்தன. வெளிப்புறத்தில் சிறுசிறு வேலைகள் 1653 வரை தொடர்ந்தது.

வெளிப்புற வாயிலுக்குள் நுழைந்தவுடன் தொலைவில் தெரியும் தாஜ்மஹாலைப் பார்த்தால் ‘இவ்வளவு சிறியதா?’ என்று கேட்கத் தோன்றும்... போகப் போகப் பெரிதாகிக்கொண்டே போய், மிக அருகில் சென்று அண்ணாந்து பார்த்தால் கூரை தெரியாத அளவு விஸ்வரூபமெடுக்க வேண்டும் என்கிற ரீதியில் திட்டப்படி கட்டப்பட்டது தாஜ்மஹால்!

தாஜ்மஹாலைச் சுற்றி நாற்பத்திரண்டு மீட்டர் உயரத்துக்கு நிமிர்ந்து நிற்கும் நான்கு மினார்களையும் லேசாக வெளிப்புறமாகச் சாய்த்துக்கட்டினார்கள் கட்டடக்கலை வல்லுநர்கள். அதாவது, ஏதேனும்

விபத்தில் அவை விழ நேர்ந்தாலும் தாஜ்மஹால் மீது விழாது!

மஹாலில் வெளிப்புறக் கதவுகள் மீதும் சுவர்கள் மீதும் பதிக்க இந்தியாவைத் தவிர ரஷ்யா, திபெத், பாரசீகம் என்று பல நாடுகளிலிருந்து வைரம், வைடூரியம், நீலம், கோமேதகம், முத்து, பவளம்... என்று வரவழைத்து ஒன்றுவிடாமல் பயன் படுத்தி னார்கள் (பிற்பாடு ஆங்கிலேயர் ஆட்சியில் அதிகாரிகள் அவற்றைச் சுரண்டியெடுத்துச் சூறையாடியது வேறு விஷயம்!).

“கல்லறையைச் சுற்றிலும் சுவர்களில் புனித குர்-ஆனிலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகளை எழுத்தோவியமாகச் செதுக்குவதில் உலகிலேயே திறமை வாய்ந்தவரை அழைத்து வாருங்கள்...” என்று ஷாஜஹான் ஆணையிட, பாரசீகத்திலிருந்து அமானாத்கான் என்ற கலைஞரின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டது. அந்த மேதையோ, “நான் எங்கு, எதில் என் கலைத்திறனைக் காட்டினாலும் கீழே என் கையெழுத்தைப் போட்டு (செதுக்கி) கொள்வது வழக்கம். அதற்கு அனுமதித்தால் தான் வர முடியும்...” என்று பதில் அனுப்பினார். ஷாஜஹானும் ஒப்புக் கொண்டார். இன்றைக்கும் தாஜ்மஹாலில் செதுக்கப்பட்டிருக்கும் ஒரே கையெழுத்து அந்தக் கலைஞருடையது தான்!

தாஜ்மஹால் பற்றி ஷாஜஹான் சுருக்கமாக எழுதி வைத்த குறிப்பு - ‘இந்தக் கல்லறையைக் கற்பனை செய்தவர் எப்படிப் பூமியில் பிறந்தவராக இருக்க முடியும்? சொர்க்கத்தில் இருந்து வந்து சேர்ந்தது இதற்கான வரைபடம் என்பதற்குச் சாட்சியம் தேவையா...?!’

அற்புதமான, தெய்வீகமான இந்தக் கல்லறை பிற்பாடு வந்த சில பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குப் பொறாமையைத் தந்தது! லார்டு வில்லியம் பென்டிக் என்பவர் ‘தாஜ்மஹாலை இடித்துவிடலாம்’ என்று யோசனை சொன்னார். இதைக் கேட்டு மற்ற ஆங்கிலேய பிரபுக்களே திகைத்துப் போனார்கள். பிறகு ‘ஒவ்வொரு கல்லாக அகற்றிக் கப்பலில் ஏற்றி இங்கிலாந்துக்கு அனுப்பலாம். அங்கே ஒரு பெரும் தோட்டத்தில் மீண்டும் பொருத்திக் கண்காட்சியாக வைக்கலாம்’ என்றும் ஆங்கிலேயர்கள் ஆலோசித்தார்கள். நல்ல வேளையாக, கலையுள்ளம் கொண்ட வைஸ்ராய் கர்ஸன் பிரபு, மேற்கண்ட அபத்த யோசனைகளையெல்லாம் நிராகரித்து தாஜ்மஹாலை நல்ல முறையில் பராமரிக்க ஏற்பாடுகள் செய்து, அதற்காக சட்டமியற்ற வழிசெய்தார். கூடவே, கெய்ரோவிலிருந்து பெரிய அழகான தொங்கும் பித்தளை விளக்கு ஒன்றைத் தன் காணிக்கையாக வாங்கிக் கொண்டு வந்து ஷாஜஹான் - மும்தாஜ் ஜோடிக் கல்லறைகளுக்குமேல் தொங்கவும் விட்டார்!

அற்புதத்துக்கும் கச்சிதத்துக்கும் மறுபெயரான தாஜ்மஹாலில் எசகுபிசகாக, நெருக்கியடித்துக்கொண்டு ஒரு மூலையில் இருப்பது - அதைக் கட்டிய மாமன்னர் ஷாஜஹானுடைய கல்லறை மட்டுமே என்பது விசித்திரமான விஷயம்.

ஏன் இப்படி...?

அதன் பின்னணியிலும் ஒரு சோகம் உண்டு...!

வேண்டாத மகன்...!

டெல்லியில் அமர்ந்து ஆட்சிபுரிந்த பல மன்னர்கள் வட

இந்தியாவையே முழு இந்தியாவாகக் கருதினார்கள்! கோதாவரி நதிக்குமேலே உள்ள இந்தியப் பகுதியே பிரமாண்டமாகப் பரந்து விரிந்த ஒன்று என்பதால் அதைக் கட்டிக்காப்பதே அவர்களுக்குப் பெரும் வேலையாக இருந்தது.

சாம்ராஜ்யத்தை மேலும் விஸ்தரிக்க நினைத்தபோதெல்லாம் மொகலாய மன்னர்கள் மனதில் ஆப்கானிஸ்தானும் மத்திய ஆசியாவும் மங்கோலியாவும்தான் கண்முன் நிழலாடின. குறிப்பாக, மொகலாயர்களின் முன்னோடியான தைமூர் அரியணையில் அமர்ந்து ஆர்ப்பாட்டமாகக் கோலோச்சிய (காபூல்) சாமர்கண்ட் நகரை மொகலாய பாதுஷாக்களால் சுலபத்தில் நினைவிலிருந்து அகற்ற முடியவில்லை. ‘என்றைக்காவது சாமர்கண்டைக் கைப்பற்ற வேண்டும்’ என்பது அவர்களின் உச்சக்கட்ட ஆசையாக, லட்சியமாக இருந்தது. ஆகவே, தென்னிந்தியப் பிரதேசங்களைப் பற்றி டெல்லி பாதுஷாக்கள் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. தென்னிந்தியாவில் காலூன்ற நினைத்த சில சுல்தான்கள் பதிலுக்கு வட இந்தியாவைக் கோட்டை விட்டார்கள் என்பது வேறு விஷயம்! ஆனால், கற்பனைத் திறன் கொண்டிருந்த ஷாஜஹான் கனவுகள் காண ஆரம்பித்தார். காபூல் மட்டுமல்ல, தென்னிந்தியாவையும் தன் குடையின்கீழ் கொண்டுவர வேண்டும், பாட்டனார் அக்பரை மிஞ்சிய பேரரசராகத் தான் ஆக வேண்டும் என்று விரும்பினார். முன்னொருமுறை தந்தை ஜஹாங்கீர் கோதாவரிக்கரையில் சற்றுத் தள்ளி அமைந்திருக்கும் அகமத்நகர் ராஜ்யத்தை வளைத்துப்போட முயற்சித்ததுண்டு. முத்தாய்ப்பான வெற்றி கிட்டவில்லை.

விஜயநகர சாம்ராஜ்யத்தில் பணிபுரிந்த பிராமண அமைச்சர் ஒருவருக்கு மகனாகப் பிறந்து பிற்பாடு மதம் மாறிய அகமது நிஜாம் ஷா பஹ்ரி என்பவரால் 1490-ல் ஸ்தாபிக்கப்பட்ட ராஜ்யம் அகமத்நகர். அதுவும் அண்டைப்புறத்து பீஜப்பூரும் கோல்கொண்டாவும் (இன்றைய ஹைதராபாத் பகுதி) தெற்கே பல ஆண்டு காலமாக சுதந்திரமாக இயங்கிய ராஜ்யங்கள்!

மொகலாயப்படையை ஜஹாங்கீர் காலத்தில் ஆட்டிப்படைத்த அகமத்நகர் தளபதியான மாவீரர் மாலிக் ஆம்பர் 1626-ல் இறந்ததைத் தொடர்ந்து, அந்த ராஜ்யம் சற்றுத் தடுமாறிக்கொண்டிருந்தது. கொஞ்ச காலமாகவே தென்னிந்தியா பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்த ஷாஜஹான், இதுதான் தருணம் என்று முடிவெடுத்தார். ஷாஜஹான் தலைமையில் ஆக்ராவிலிருந்து பெரும்படை தெற்கு நோக்கிக் கிளம்பியது.

அகமத்நகர் ராஜ குடும்பத்துக்குப் பணிபுரிய அபிஸீனியாவிலிருந்து அடிமையாக வந்து விசுவாசம் மிகுந்த தளபதியாகப் பதவி உயர்வு பெற்றவர் மறைந்த மாலிக் ஆம்பர். அவருடைய பதவிக்கு வந்த மகன் பதேகான், அப்பாவின் பெயரைக் கெடுக்கப் பிறந்தான். மொகலாயர் களுடன் ரகசியத் தொடர்பு வைத்துக்கொண்டு தன் எஜமானருக்குக் குழிதோண்டினான் அவன். டெல்லியின் வேண்டுகோள்படி அகமத்நகர் மன்னரான நிஜாம் உல் முல்க்கைத் தீர்த்துக்கட்டி விட்டு அவருடைய பத்து வயது மகன் ஹுசேன் ஷாவை ‘பொம்மை அரசராக’ப் பட்டத்தில் அமர்த்தினான் பதேகான். பிறகு டெல்லியிலிருந்து பத்து லட்ச ரூபாய் லஞ்சமும் பெற்றுக்கொண்டு கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட்டான். இந்தத் துரோகத்தின் விளைவு - அகமத்நகர் சுலபமாகவே ஷாஜஹான் மடியில் விழுந்தது. சிறுவன் ஹுசேன்ஷா குவாலியர் சிறையில்

தள்ளப்பட்டார் - வாழ்நாள் முழுவதும்!

ஷாஜஹான் டெல்லியில் கட்டிய உலகப் புகழ்பெற்ற ஜும்மா மசூதி..

அகமத்நகர் அப்படியும் சற்றுத் திமிறியது. அந்த ராஜ்யத்தின் பிரதான (மராட்டிய) அமைச்சர்களில் ஒருவரான ஷாஜி போன்ஸ்லே என்பவர் இன்னொரு நிஜாம் அரச குடும்பத்துச் சிறுவனைப் பிடித்து அரசராக முன்னணியில் நிறுத்தி மொகலாயர் களுக்கு எதிரான போராட்டத்தைத் தொடர முயன்றார். அண்டைப் பிரதேசங்களில் ஆட்சிபுரிந்து வந்த பீஜப்பூர் மற்றும் கோல்கொண்டா சுல்தான்கள் (இவர்கள் ஷையா பிரிவு மன்னர்கள் என்பது குறிப்பிடத் தக்கது) ‘அடுத்த இலக்கு நாம்தான்’ என்று புரிந்துகொண்டு ஷாஜி போன்ஸ்லேக்கு உதவ முயன்றார்கள். (ஒரு நிமிடம் வாசகர்களே! - மராட்டிய வீரர் ஷாஜி போன்ஸ்லேக்கு ஆறு வயதில் ஒரு மகன் இருக்கிறான். சிவாஜி என்று பெயர்!)

‘ஷாஜிக்கு உதவக்கூடாது’ என்று பீஜப்பூருக்கும் கோல்கொண்டாவுக்கும் ஷாஜஹானிடமிருந்து எச்சரிக்கை போனது. கூடவே வந்து சேர்ந்த டெல்லிப்படை, இந்த தட்சிண ராஜ்யங்களை முற்றுகையிட்டது. மொகலாயப்படையின் பிரமாண்டத்தைப் பார்த்த உடனேயே கோல்கொண்டா சுல்தான் கலவரமடைந்து ஷாஜஹானிடம் சரணடைந்தார்! ஆனால், பீஜப்பூர் சுல்தான் ஆதில்ஷாவுக்குப் பெயருக்கேற்ப சற்று ‘தில்’ அதிகம் போலும்! அவர் வெள்ளைக் கொடி காட்ட மறுக்கவே, ஷாஜஹானின் படை பீஜப்பூரைச் சூழ்ந்துகொண்டு சுற்றுப் பகுதிகளைத் துவம்சம் செய்தது. அலையென முன்னேறிய டெல்லி வீரர்களை ஆதில்ஷாவின் வீரர்கள் மிகுந்த தீரத்துடன் சமாளித்துக் கடைசியில் துவண்டார்கள். பீஜப்பூரும் ஒருவழியாகச் சரணாகதி அடைய... சற்றே நிம்மதியுடன் ஷாஜஹான் தன்னுடன் வந்த மூன்றாவது மகன் ஔரங்கசீப்பைத் தெற்குப் பகுதிக்கு (பேரார், தெலுங்கானா, தௌலதாபாத் உட்பட) வைஸ்ராயாக நியமித்துவிட்டு ஜூலை 11-ம் தேதி 1636-ல் ஆக்ராவுக்குத் திரும்பினார்.

நேர்மையும் கண்டிப்பும் மிகுந்த சிறந்த நிர்வாகி என்று ஔரங்கசீப் முதன்முறையாகப் பெயரெடுத்தது தெற்கே அவர் வைஸ்ராயாக இருந்தபோதுதான். அவர் நிர்வாகத்தில் தெற்கிலிருந்து டெல்லிக்குப்

போன வரிப் பணம் ஐந்து கோடி ரூபாய்க்குமேல்! யுத்த முஸ்தீபுகளையும் இந்த மொகலாய இளவரசர் விடவில்லை. கொரில்லாப் போரில் இறங்கிய ஷாஜியுடன் தொடர்ந்து அவர் படைகள் மோதின. மலைகளில் அமைந்திருந்த பல கோட்டைகள் தொடர்ந்து ஷாஜியின் பிடியில் இருந்தது குறிப்பிடத் தக்கது. இருப்பினும், அரைகுறை ஏற்பாடு களுடனும் சிறிய எண்ணிக்கையுடன்கூடிய படையுடனும் இயங்கிய ஷாஜியால் தொடர்ந்து ஔரங்கசீப்பின் பெரும் பலத்தைச் சமாளிக்க முடியவில்லை. மொகலாய பீரங்கிகளுக்குப் பணிந்து சில பல கோட்டைகளை ஷாஜி விட்டுக் கொடுக்கவும் நேர்ந்தது...

இந்தச் சமயத்தில்தான் ஔரங்கசீப்புக்கு 'ஆக்ராவில் பெண் பார்த்து வைத்திருப்பதாக' ஷாஜஹானிடமிருந்து கடிதம் வர, ஆக்ராவுக்கு திரும்பினார் இளவரசர். மணமகள் ஷாஜஹானிடம் பணியில் இருந்த பாரசீகப் பிரபு ஒருவரின் மகள் தில்ரஸ் பானு பேகம். திருமணம் முடிந்தவுடன் தெற்குப் பகுதிக்குத் திரும்பினார் ஔரங்கசீப். நான்கு ஆண்டுகள் கழித்து அவர் திரும்பவும் ஆக்ரா விரைய வேண்டி வந்தது. இந்த முறை வந்த செய்தி இளவரசர் எதிர்பாராதது, சோகமானது..!

மும்தாஜ் இறந்ததிலிருந்து தந்தை ஷாஜஹானுக்கு அரண்மனையின் முதன்மைப் பெண்மணியாக (ஜவஹர்லால் நேருவுக்கு இந்திரா காந்தி உதவியாக இருந்ததைப்போல!) பணியாற்றி வந்தவர் மூத்த மகள் ஜஹனாரா பேகம். ஒரு நாள் அந்தப்புரத்தில் அவர் நடந்து சென்றபோது மூலையில் எரிந்துகொண்டிருந்த மெழுகு வர்த்தியின் மீது அவர் மஸ்லின் உடை பட்டுத் தீப்பற்றிக்கொள்ள... உடலெங்கும் தீக்காயங்கள் ஏற்பட்டு மயங்கி விழுந்தார் பேகம். ஜஹனாராவின் மீது பாய்ந்து தீயை அணைக்க முயன்றனர் இரு பணிப்பெண்கள். ஆபத்து அவர்களையும் தொற்றிக்கொள்ள... அந்த இருவரும் பிற்பாடு தீக்காயங்களால் மரணமடைந்தனர். ஜஹனாராவின் உயிர் ஊசலாடியது. மகளின் நிலை கண்டு கலங்கிப்போனார் ஷாஜஹான். தொடர்ந்து சில நாட்கள் கட்டிலோரமாக அமர்ந்து 'மகள் உயிர் பிழைக்க வேண்டும்' என்று கண்ணீருடன் பிரார்த்தனை செய்தார் பாதுஷா. ஒரு வழியாக உயிர் பிழைத்து ஜஹனாரா எழுந்து நடமாட எட்டு மாதங்கள் பிடித்தன. (பிற்பாடு சில ஆங்கிலேய ஆசிரியர்கள் ஜஹனாரா பிழைத்ததற்குக் காரணம் - ஒரு பிரிட்டிஷ் மருத்துவரின் சிகிச்சைதான் என்று இடைச்செருகலாக ஒரு கட்டுக்கதையைக் கட்டிவிட்டனர். உண்மையில் அரீஃப் என்ற ஒரு அடிமை, பச்சிலைகளைக் கொண்டு தயாரித்த களிம்புப்பூச்சுதான் இளவரசியின் உயிரைக் காப்பாற்றியது. இந்தத் தகவலைக் கண்டுபிடித்து வரலாற்றில் 'கரெக்ஷன்' செய்ததும் வேறு சில நேர்மையான ஆங்கில வரலாற்று ஆசிரியர்களே என்பது குறிப்பிடத்தக்கது!).

இந்த விபத்தைத் தொடர்ந்து வெடித்தது ராஜ குடும்பத்தில் ஒரு பிளவு - தந்தை ஷாஜஹானுக்கும் மகன் ஔரங்கசீப்புக்கும் இடையே! படுக்கையில் தீக்காயங்களுடன் தவித்துக்கொண்டிருந்த அருமைத் தமக்கையைப் பார்க்க ஆக்ராவுக்கு வந்த ஔரங்கசீப்பைத் திடீரென்று வைஸ்ராய் பதவியிலிருந்து நியாயமான காரணம் எதுவுமின்றி 'வேலைநீக்கம்' செய்தார் ஷாஜஹான்! 'வைஸ்ராய்' என்ற முறையில் இளவரசருக்குத் தரப்பட்டு வந்த பெரும் தொகையையும் நிறுத்தி அவமானப் படுத்தினார்கள்.

செல்லமகன் தாராவுடன் ஷாஜஹான் ஆலோசனை...

சொல்லாமல் கொள்ளாமல் ஷாஜஹான் மகனைப் பதவியிலிருந்து தூக்கியெறிந்தது ஏன்? திட்டவட்டமாகக் காரணம் தெரிய வில்லை. ஆனால், பல ஊகங்கள் சொல்லப் படுகின்றன. இந்தக் கசப்பான நிகழ்ச்சிக்குப் பின்னணியில் ஒருவர் உண்டு என்பது மட்டும் உண்மை! - அவர்தான் ஷாஜஹானின் மூத்த மகன் தாரா ஷூகோ!

பல விதங்களில் மென்மையானவரும் படிப்பாளியுமான தாராவுக்குத் தம்பி ஔரங்கசீப்பிடம் மட்டும் அப்படி ஒரு வெறுப்பு. இளையவரும் அண்ணனைச் சற்றும் மதித்ததாகத் தெரியவில்லை. ஷாஜஹானோ தன் மூத்த மகனிடம் மட்டும் மிகுந்த பாசம் காட்டினார். பட்டத்துக்கு வர வேண்டிய இளவரசர் என்கிற முறையில் பல விஷயங்களைத் தாராவுடன் பாதுஷா கலந்தாலோசித்தார். அதுகூடப் பரவாயில்லை. கூடவே மற்ற மகன்களை, குறிப்பாக ஔரங்கசீப்பை, பாதுஷா அலட்சியப் படுத்தியதுதான் புதிர்!

மன்னர் வெளிப்படையாகக் காட்டிய இந்தப் பாரபட்சம் பற்றி

ஆட்சேபித்து ஔரங்கசீப் ஷாஜஹானுக்குப் பல கடிதங்கள் எழுதியும் கோபத்துடன் பல தடவை முறையிட்டும் பலனில்லை. வெறுப்பு வளர்ந்ததுதான் மிச்சம்.

முதிர்ச்சி பெற்ற மன்னரான ஷாஜஹான் ஏன் இப்படிக் குடும்ப விஷயத்தில் ராஜதந்திரமில்லாமல் நடந்து கொண்டார்? ஒட்டுமொத்தமாக சேகரிக்கப்பட்ட சில ஊகங்கள்...

முன்பு தந்தை ஜஹாங்கீருக்கு எதிராகத் தான் கிளர்ச்சியில் இறங்கியதை ஷாஜஹான் மறக்கவில்லை. அதே கதை தன் விஷயத்திலும் திரும்பப் படிக்கப்படலாம் என்ற கவலை சக்ரவர்த்தியின் ஆழ்மனதில் இருந்திருக்கலாம். ஒருவேளை மூத்த மகன் தாராவைத் தன்னருகிலேயே அமர்த்திக்கொண்டு மிகுந்த அன்புடனும் ராஜமரியாதையுடனும் நடத்தினால் பிற்பாடு பிரச்னை ஏதுமின்றி மென்மையான முறையில் ஆட்சி மாற்றம் நிகழும் என்று பாதுஷா நினைத்திருக்கக்கூடும். ஆனால், தாராவோ தம்பி ஔரங்கசீப் போர்க்களங்களில் தொடர்ந்து வெற்றிகளைக் குவித்துக்கொண்டிருந்தது குறித்துக் கவலையில் ஆழ்ந்தார். அந்தக் கவலை ஏற்படுத்திய அச்சம் - தம்பியைப் பற்றி மன்னரிடம் தொடர்ந்து கோள்சொல்ல வைத்தது. பாசம் ஷாஜஹானின் அறிவுக் கண்ணை அடியோடு மறைக்க, ஒரு விஷயத்தைப் பாதுஷா மறந்துவிட்டார்!

நடந்தது என்னவென்றால், சக்ரவர்த்தி செல்லமாக 'அரண்மனையோடு' வைத்துக் கொண்டிருந்த தாராவுக்கு வெளி உலகத்தின் கரடுமுரடுகள் தெரியாமல் போனது. அதே சமயம் நாட்டின் பல மூலைகளுக்குப் பந்தாடப்பட்ட இளைய மகன் ஔரங்கசீப்பின் உடலில் உரம் பாய்ந்தது. உள்ளத்தில் உறுதி பிறந்தது. அதோடு அனுபவமும் சேர்ந்தது. இவையெல்லாம் ஒருசேரக் கிளர்ந்தெழுந்து.... அதுவே ஷாஜஹானுக்குக் கடைசியில் எமனாக வந்து வாய்த்தது...!

போர்க்களங்கள்... பொல்லாப்பு...!

மனைவி மும்தாஜ் மறைந்ததிலிருந்தே மன்னர் ஷாஜஹானுக்குச் சற்றுப் போதாத காலம் தொடங்கியது என்றுதான் சொல்ல வேண்டும். ஏன்..? இயற்கையும் முகம் திருப்பிக்கொண்டது. 1632-ம் ஆண்டில் தட்சிணப் பிரதேசங்களையும் குஜராத்தையும் பயங்கரமான பஞ்சம் பீடித்தது. அப்துல் ஹமீது லாஹோரி என்பவர் (அக்பருக்கு அபுல் ஃபஸல் மாதிரி ஷாஜஹானுக்கு லாஹோரி!) அப்போது தலைவிரித்தாடிய பஞ்சத்தைப் பற்றி விவரமாகக் குறிப்பிடு கிறார்....

'... பசி தாளாமல் மக்கள் உச்சக்கட்ட வேதனையை அனுபவித்தார்கள். துண்டு ரொட்டிக்காகக் குடிமக்கள் எதையும் தரத் தயாராக இருந்தார்கள். ஆனால், ரொட்டி கொடுப்பார்தான் இல்லை. ஒரு வாய் சோறுக்காக தங்கள் பதவிகளையே பலர் தர முன் வந்தும் சீண்டுவாரில்லை. எங்கு பார்த்தாலும் பிச்சை கேட்டு நீட்டிய கைகள்... குழிவிழுந்த கண்கள்.. மக்கள் நாய்களைக் கொன்று தின்ன ஆரம்பித்தார்கள். இறந்த மனிதர்களின் எலும்புகளைத் தோண்டி எடுத்துப் பொடியாக அரைத்துக் கோதுமை மாவுடன் கலந்து, கொள்ளை லாபத்துக்கு விற்றவர்கள் உண்டு. இப்படிச் செய்த பல வியாபாரிகள் கைது செய்யப் பட்டனர். கடைசியில், சில இடங்களில் வலுவிழந்த மனிதர்கள்கூடக் கொல்லப் பட்டதாகத் தகவல் - உணவுக்காகத்தான்! தெருவெங்கும் எலும்புக்கூடுகள் போன்ற உடல்கள், உயிரில்லாமல்

குறுக்கும் நெடுக்குமாக கிடந்தன. சில ‘எலும்புக்கூடுகள்’ வெறித்த பார்வையுடன் மெள்ள நடந்து கொண்டிருந்ததையும் கண்டேன்...!’

அந்தச் சமயம் ஒரு பிஸினஸ் விஷயமாக சூரத் நகரிலிருந்து ஆக்ராவுக்குப் பயணித்த பிரிட்டிஷ் வணிகர் பீட்டர் முண்டீ என்பவரும் அப்போது நாடு அனுபவித்த வேதனையைக் கண்டு திகைத்து விவரமான குறிப்புகளை விட்டுச் சென்றிருக்கிறார்.

பஞ்சத்தால் குற்றுயிராக வீழ்த்தப்பட்ட பிரதேசங்களை மீட்டுக்கொண்டு வர டெல்லி ஆட்சிக்கு ஓராண்டுக்குமேல் பிடித்தது.

அதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானையும் மத்திய ஆசியாவையும் கைப்பற்ற வேண்டும் என்ற ஷாஜஹானின் கனவும் பொல பொலத்தது. காபூலுக்கு வடகிழக்கே 200 மைல் தொலைவில் உள்ள படாக்ஷான் நகரத்தைக் கைப்பற்ற முடிவெடுத்தார் பாதுஷா. 1646-ல் இளைய மகன் முராத் தலைமையில் 50,000 வீரர்கள் கொண்ட குதிரைப்படையும் ஒரு லட்சம் பேர் கொண்ட காலாட்படையும் வடக்கு நோக்கிப் பயணித்தது. ஆனால், பயங்கரமான மலைத்தொடர்களைத் தாண்டிப்போய்ச் சேருவதற்குள் செத்துச் சுண்ணாம்பாகியது முராத்தின் படை. அப்படியும் ஆப்கானிஸ்தான் மண்ணில் சில வெற்றிகளைக் குவித்தனர் மொகலாய வீரர்கள். ஆனால், தலைமைத் தளபதியாக இருந்த முராத் உற்சாகமிழந்தார். ‘ஊர் திரும்புகிறேன்’ என்று தந்தை ஷாஜஹானுக்குத் தகவல் அனுப்பினார். கோபம் கொண்ட பாதுஷா, “முழு வெற்றி கிட்டும்வரை அந்த இடத்தைவிட்டு நகரக் கூடாது” என்று ஆணையிட்டார். ‘சரிதான் போங்கப்பா’ என்கிறரீதியில் படையை முராத் அம்போவென்று விட்டுவிட்டு லாகூருக்குத் தனியாகப் போய்விடவே, “முராத் டெல்லிக்கு வரக்கூடாது. என் முகத்தில் விழிக்கக்கூடாது” என்று ஆக்ராவில் ஷாஜஹான் கண்சிவக்கக் கர்ஜித்துக் கொண்டிருந்தார்!

பிறகு குஜராத்திலிருந்த இளவரசர் ஔரங்கசீப்புக்கு ‘உடனே ஒரு படையுடன் படாக்ஷன் செல்லவும்...’ என்று அவசர ஆணை போனது. ஆனால், ஔரங்கசீப் விரைந்து சென்று எவ்வளவோ முயற்சித்தும் அங்கே வெற்றி கிட்டவில்லை. நிலைமை கைமீறிப் போயிருந்தது. கடுங்குளிரில் மலைகளைத் தட்டுத்தடுமாறிக் கடந்துவந்த மொகலாயப்படையை படாக்ஷான் நாட்டைச் சேர்ந்த உஸ்பெக் வீரர்கள் கட்டுக் கோப்புடன் அணிசேர்ந்து எதிர் கொண்டார்கள். அவர்களின் கொரில்லாத் தாக்குதல் வீரியம் மிகுந்ததாக இருந்தது. வருடக் கடைசி வேறு! தோலை உரிக்கும் கடும் பனி! நிலைமையைப் புரிந்துகொண்ட ஷாஜஹான், ‘இப்போதைக்குப் போரை நிறுத்திவிட்டுத் திரும்பலாம்’ என்று ஆக்ராவிலிருந்து செய்தி அனுப்பினார். மொகலாயப்படை போர் நிறுத்தம் செய்து விட்டு படாக்ஷானிலிருந்து வெளியேறியது. அதற்குள் மலைத்தொடர்கள் ஐஸ் போர்வையைப் போர்த்திக்கொண்டு இருந்ததால், திரும்பும்போது வெடவெடத்துச் செத்து வீழ்ந்த மொகலாய வீரர்கள் மட்டும் ஐயாயிரத்துக்குமேல்! இதே எண்ணிக்கையில் குதிரைகள், யானைகளும் காலி!

ஒரு விஷயம் - மொகலாயப்படை திரும்பிச் சென்ற பிறகும் உஸ்பெக் வீரர்கள், இளவரசர் ஔரங்கசீப்பின் வீரத்தைப் பற்றியும் உறுதிபடைத்த நெஞ்சம் பற்றியும் கொஞ்ச நாட்கள் வியந்துபேசிக் கொண்டார்கள். காரணம் - படாக்ஷானில் ஒரு நாள் மாலை நேரம், போர் உச்சக் கட்டத்தில் இருந்தபோது தொழுகை நேரம் வந்தது. உடனே குதிரையிலிருந்து குதித்த ஔரங்கசீப், மிகவும் சாவதானமாகக் கம்பள

விரிப்பை யுத்தகளத்தின் நடுவே விரித்து, மண்டியிட்டு அமர்ந்து தொழுகை புரிய ஆரம்பித்தார். அவருடைய நெஞ்சுறுதி கண்டு பிரமித்துப்போன எதிரி நாட்டுப் பிரதம தளபதி, ‘இடையூறு செய்ய வேண்டாம்’ என்று சைகையால் தன் படை வீரர்களுக்கு ஆணையிட்டார்! பிறகு அமைதியாக நடந்து சென்று குதிரை மீது ஏறிய இளவரசர் ஔரங்கசீப், வாளை உருவிக்கொண்டு தொடர்ந்து ஆவேசமாகப் போரில் ஈடுபட்டார் என்ற வரலாற்றுத் தகவலைப் படிக்கும்போது வியப்பு மூள்கிறது!

‘சரி, படாக்ஷன் போகட்டும்... டெல்லிக்கு வடமேற்கே உள்ள காண்டஹார் நகரைக் கைப்பற்றிப் பிறகு காபூலை வளைத்துப் போடலாம்’ என்று திட்டம் போட்டார் ஷாஜஹான். பாரசீகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட காண்டஹாரில் எதிர்பாராத விதத்தில் ஷாஜஹானின் படைக்கு வெற்றி கிட்டியது. தனிப்பட்ட ஒரு ஆளின் துரோகத்தால் பாரசீகம் அந்த முக்கியமான நகரை மொகலாயர்களுக்கு இழக்க நேர்ந்தது....



செங்கோட்டை



அந்தப்புரத்துக்குச் செல்லும் வழி

காண்டஹாரை நிர்வகித்து வந்த கவர்னர் அலி மர்தான்கான். கொஞ்ச காலமாகவே பாரசீக ஷாவுக்குத் தெரியாமல் ஏகப்பட்ட பணத்தைச் சுருட்டிக் கையாடல் செய்து கொண்டிருந்தார். இதுபற்றி விரைவில் ஷா 'விசாரணை கமிஷன்' நியமிக்கப் போகிறார் என்ற தகவல்வர, கலவரமடைந்த கவர்னர் மொகலாயர் பக்கம் கட்சி மாறி காண்டஹார் நகரக் கோட்டைக் கதவுகளைத் திறந்து விட்டார்... ஷாஜஹான் படை குபுக்கென்று உள்ளே நுழைந்துவிட்டது! ஆனால், தற்காலிகமாகத்தான்! சில ஆண்டுகள் கழித்து, தன் தந்தை இறந்தவுடன் இரண்டாம் ஷா அப்பாஸ் என்னும் துடிப்புமிக்க பாரசீக இளவரசர் பாரசீக அரியணையில் ஏறி அமர்ந்தார். உடனடியாக காண்டஹாரை மீட்கும் நடவடிக்கையில் இறங்கினார்.

ஷா அப்பாஸ் தலைமை தாங்கிய பாரசீகப் படை பிப்ரவரி 11-ம் தேதி, 1649-ம் ஆண்டு காண்டஹாரைச் சூழ்ந்துகொண்டது. அங்கே 'நிர்வாகம்' என்ற பெயரில் சொகுசாக வாழ்ந்து கொண்டிருந்த தௌலத்கான் என்னும் மொகலாய கவர்னர் சுதாரித்துக் கொண்டு எழுவதற்குள்... காண்டஹார் மறுபடி பாரசீகத்திடம் போய்விட்டது!

உடனே ஷாஜஹான் ஆணைப்படி, லட்சத்துக்கும் மேற்பட்ட வீர்களுடன் ஔரங்கசீப் காண்டஹாரைக் காப்பாற்ற போய்ச் சேர்ந்தார். சக்திவாய்ந்த பாரசீகப் பீரங்கிகளை மீறி மொகலாயப்படையால் ஒன்றும் செய்ய முடியவில்லை!

மறுபடியும் மொகலாயப்படை, 1652-ல் ஔரங்கசீப் தலைமையில் காண்டஹார் கோட்டைக் கதவுகளை முனைப்பாக முட்டியது. இந்த முறையும் பலனில்ல. நேரம் பார்த்துப் பனிக்காலம் ஆரம்பிக்க, இந்திய சீதோஷ்ண நிலைக்குப் பழகிவிட்டிருந்த மொகலாயப் படையினர் ஐஸ்கட்டி மழையில் திணறினார்கள். திரும்ப அழைக்கப்பட்ட ஔரங்கசீப், பழையபடி தட்சிணப் பிரதேசத்துக்கு அனுப்பப்பட்டார். அண்ணன் தாரா ஷுகோ கோஷ்டிக்கு ஏக குஷி. விடுவார்களா

அவருடைய ஜால்ராக்கள்? “இதுதான் சமயம் இளவரசே! இப்போது நீங்கள் பெரும் படை ஒன்றுடன் சென்று ஆப்கானிஸ்தானில் வெற்றிக்கொடி நாட்டினால் போதும்... ஔரங்கசீப்ப்பின் ‘இமேஜ்’ அதோடு காலி!” என்றனர்.

உடனே பாதுஷாவைச் சந்தித்த தாரா, “அரசே! காண்டஹாரை ஒரே வாரத்தில் கைப்பற்றிக் காட்டுகிறேன்... அனுமதி தாருங்கள்!” என்று கோரினார்.

மகிழ்ந்துபோன ஷாஜஹான், பிரமாண்டமான படையை அணிவகுக்கச் செய்தார். அவ்வளவாகப் போர்களில் ஈடுபட்டிராத மூத்த மகன் தாரா இப்போது படைத் தலைமையில்! இந்த முறை ஸ்பெஷலாக ஐரோப்பிய துப்பாக்கிப்படைப் பிரிவு கூடச் சேர்க்கப்பட்டது!

தாரா ஷூகோவின் வீரத்தை மெச்சலாம் தான்... ஆனால், அவரிடம் போர்த்திறமைதான் இழுபறி! தவிர, பல யுத்த பூமிகளைக் கண்ட ஔரங்கசீப்பையே வெற்றிகரமாக எதிர் கொண்ட எதிரிநாட்டுப் படையோடு வேறு மோதியாக வேண்டும்!

தொடர்ந்து தாரா முற்றுகையிட்டும் பாரசீகர்களிடமிருந்து காண்டஹாரை வசப்படுத்த முடியவில்லை. படையைத் திரும்பச் சொல்லி அலுப்புடன் ஆணை போனது ஷாஜஹானிடமிருந்து!

பிற்பாடு, ஆப்கானிஸ்தானை தாரா முற்றுகையிட்டதையே ‘வெற்றி’யாக கொண்டாடினார் ஷாஜஹான்! ஊர் திரும்பிய தாராவுக்கு, ஆக்ராவில் கோலாகலமான வரவேற்பு தரப்பட்டது. மகனுக்கு வைரங்கள் பதித்த தங்க பெல்ட் ஒன்றைக் குறுவாளுடன் பரிசளித்தார் ஷாஜஹான். தவிர, இரண்டு லட்ச ரூபாய் மதிப்புள்ள மரகதம் மற்றும்

முத்துமாலைகள் வேறு.

தர்பாரில், பாதுஷாவுக்கு நெருக்கமாக தங்கச் சிங்காதனம் ஒன்றும் தாராவுக்குப் போடப்பட்டிருந்தது. ஆகமொத்தம் ‘தாராதான் என் வாரிசு!’ என்று சொல்லாமல் சொன்னார் சக்ரவர்த்தி. இந்தச் செய்தி யெல்லாம் கேள்விப்பட்ட ஔரங்கசீப்புக்கு எவ்வளவு எரிச்சல் ஏற்பட்டிருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை!

உண்மையில் தோல்விகரமாக நடந்தேறிய காண்டஹார் படையெடுப்புகள் மூன்றிலும் மொகலாய அரசுக்கு ஆன செலவு பன்னிரண்டு கோடி ரூபாய் என்பதுதான் முக்கியமான விஷயம். அதாவது மொகலாய அரசின் வருடாந்திர வருமானத்தில் பாதிக்குமேல்! இந்தப் படையெடுப்புகளுக்குப் பிறகு நாட்டின் நிதி நிலைமையே கொஞ்ச காலத்துக்கு சிக்கலாகப் போய்விட்டது.

ஒருவழியாக மொகலாயர்கள் வடக்குப் பக்கம் செல்லும் திட்டங்களை முடிவாக மூட்டைகட்டி வைத்தார்கள். பிற்பாடு ஆட்சிக்கு வந்த ஔரங்கசீப்கூட இந்தியாவின் தெற்குப் பக்கத்தில்தான் பார்வையையும் படையையும் செலுத்தினார்!

ஷாஜஹான் கட்டளைப்படி தட்சிணப் பிரதேசத்துக்கு இரண்டாம் முறை வைஸ்ராயாக ஔரங்கசீப் பதவியேற்ற பிறகு அவருக்கும் தந்தைக்கும் உறவு ரொம்பவும் சீர்குலைந்து போனது. பாதுஷாவை நெருக்கமாகச் சூழ்ந்திருந்த தாராவின் கோஷ்டி ஔரங்கசீப் பற்றிச் சமயம் கிடைத்தபோதெல்லாம் கோள்மூட்ட, இளவரசர் பேரைச் சொன்னாலே எரிச்சலடைய ஆரம்பித்தார் ஷாஜஹான். அதைத் தொடர்ந்து, நிர்வாகரீதியில் ஔரங்கசீப் எடுத்த பல நடவடிக்கைகளையும் குறைகூறிக் கடிதங்கள் ஆக்ராவிலிருந்து வர ஆரம்பித்தன. நிதியுதவி கேட்டு இளவரசர் தந்தைக்கு அனுப்பிய கடிதங்கள் குப்பைத் தொட்டிக்குப் போயின. ஏதேனும் பணியில் ஒருவரை ஔரங்கசீப் அமர்த்தினால் சில மாதங்கள் கழித்து அவரை வேலைநீக்கம் செய்தது மத்திய அரசு. ஆக்ரா அரண் மனையில் நடந்த விழாக்களுக்கும் விருந்து வைபவங்களுக்கும் சம்பிரதாய அழைப்புக் கடிதம்கூட ஔரங்கசீப் தம்பதிக்கு அனுப்பப் படவில்லை!

தந்தை - மகன் உறவு எந்த அளவுக்குப் பாதாளத்தில் வீழ்த்தப்பட்டது என்பதற்கு ஷாஜஹானிடமிருந்து மகனுக்குப் போன கீழ்க்கண்ட ஒரு கடிதமே உதாரணம்! -

‘ஆக்ராவுக்கு அனுப்ப வேண்டிய பரிசுப் பொருட்களை அனுப்பாமல் தாங்களே வைத்துக்கொள்வதாகக் கேள்விப்படுகிறோம். பாதுஷாவுக்கு அனுப்ப வேண்டிய உயர்ந்த வகை மாம்பழங்களில் நல்ல மாம்பழங்களை இளவரசர் பொறுக்கியெடுத்து தனக்காக வைத்துக்கொள்வதாகவும் ஒரு செய்தி வந்திருக்கிறது...’

இத்தனை சோதனைகளுக்கும் நடுவே தெற்கே ஔரங்காபாத் என்று புதிய நகரம் ஒன்றை உருவாக்கி அங்கே அமர்ந்தவாறு தட்சிணப் பிரதேசத்தை மிகத் திறமையாக நிர்வகித்தவர் ஔரங்கசீப். நிர்வாகத்திலும் அவர் காட்டிய ஒழுக்கமும் கண்டிப்பும் சுறுசுறுப்புடன் அவர் அமல்படுத்திய சீரமைப்புத் திட்டங்களும் விவசாயிகளின் பிரச்னைகளைப் புரிந்துகொண்டு தரப்பட்ட உதவியும் சலுகைகளும் மக்களின் நன்மதிப்பை ஔரங்கசீப்புக்குப் பெற்றுத் தந்தன.

இதற்கிடையே, சில பல ஆண்டுகளாக மொகலாய ஆட்சிக்குப் பணிந்திருந்த கோல்கொண்டா அரசும் பீஜப்பூர் அரசும் கப்பம் கட்டுவது

போன்ற விஷயங்களில் சற்றுப் பின்வாங்கவே, ஒட்டுமொத்தமாக அந்த இரு ராஜ்யங்களையும் கைப்பற்ற முடிவெடுத்தார் ஔரங்கசீப். எடுத்த காரியத்தைச் சுலபமாகவே முடித்திருப்பார் இளவரசர். ஆனால், கனிகள் மடியில் விழும் சமயம் பார்த்து ஆக்ராவிலிருந்து உருவான தடைக்கற்கள் ஔரங்கசீப்பின் வழியை மறிக்க... பொறுமையிழந்தார் ஷாஜஹானின் இந்த மூன்றாவது மகன்...!

புது நகர்ப்பிரவேசம்!

தன்னுடைய நாற்பத்து ஏழாவது வயதில் (1639-ம் ஆண்டில்) ஆக்ராவிலிருந்து டெல்லிக்கு மொகலாய சாம்ராஜ்யத்தின் தலைநகரை மாற்ற முடிவெடுத்தார் ஷாஜஹான். அதற்குமுன் ஆட்சிபுரிந்த எவருக்கும் இல்லாத அளவுக்குக் கற்பனா சக்தி வாய்க்கப்பெற்றிருந்த சக்ரவர்த்திக்கு ஆக்ரா நகரம் பிடிக்கவில்லை. “பெரிய அளவில் ஓர் ஊர்வலம் செல்வதற்கு வசதியாக அகலமான வீதிகள்கூட இங்கு இல்லையே...!” என்று அரசர் அவ்வப்போது அலுப்புடன் சொல்வதுண்டு. தவிர, ஆக்ரா கோட்டையும் அரண்மனையும் மன்னரின் கண்களுக்குச் சிறியதாகத் தெரிந்தன. இந்தியாவின் தலைநகராக இயங்கத் தகுதி பெற்றது - தொன்றுதொட்டு சிறப்புவாய்ந்த டெல்லிதான் என்று கருதினார் ஷாஜஹான். டெல்லிக்குப் போய்ப் பார்த்தாலோ ஹுமாயூனும் ஷெர்ஷாவும் கட்டிப் பழசாகிப் போயிருந்த கோட்டைகளும் மாளிகைகளும் பாதுஷாவின் முகத்தைச் சுளிக்க வைத்தன.

“வேறு வழியில்லை. டெல்லியில் யமுனை நதி கரையில் ஒரு புத்தம் புதிய தலைநகரை உருவாக்குங்கள்!” என்று ஆணையிட்டார் ஷாஜஹான். உடனே பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் களத்தில் குதிக்க, ஒன்பதே ஆண்டுகளில் கம்பீரமாக உயிர்பெற்றெழுந்தது ஷாஜஹானாபாத் - இன்றைய (பழைய) டெல்லி!

ஷாஜஹான் புதிய தலைநகரை உருவாக்கத் தேர்ந்தெடுத்த இடம் - நதியோரமாக இருந்த பிரமாண்டமான காட்டுப் பகுதி. 1639-ம் ஆண்டு ஏப்ரல் 29-ம் தேதி - ஆஸ்தான ஜோதிடர்களால் நல்ல நாளாகத் தேர்ந் தெடுக்கப்பட, டெல்லி கவர்னர் கைராத்கான் ‘ஆரம்பிக்கலாம்!’ என்று ஆணையிட, கரகோஷம் விண்ணைப் பிளந்தது. உஸ்தாத் ஹீரா, உஸ்தாத் ஹமீத் என்னும் இரு கட்டடத் தொழிலாளிகள் புதிய கோட்டைக்காக நிலத்தைத் தோண்டு வதற்காக மண் வெட்டியை உயர்த்திக் கீழே இறக்கினார்கள் (குடிசைகள் அமைத்து அந்த இரு தொழிலாளிகள் தங்கியிருந்த இடத்தில் பிற்பாடு உருவான இரு தெருக்கள் இன்றளவும் அவர்கள் பெயரில் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது!).

இரு வாரங்கள் கழித்து ஷாஜஹான் தன் கைகளால் புதிய அரண்மனைக்கான அடிக்கல்லை நாட்டினார். கூடவே அஸ்திவாரத்துக்கான பெரும் பள்ளத்தில், மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் சிலர் கொண்டு வரப்பட்டு, அவர்கள் தலைகள் சீவப்பட்டு உடல்கள் பள்ளத்தில் வீசப்பட்டன. சம்பிரதாயமாகத் தரப்பட்ட இந்தப் பலிகளைத் தொடர்ந்து மளமளவென்று வேலை துவங்கியது. புதிய நகரின் வெளிப்புறக் கோட்டைச் சுவரும் (சுமார் நாலு மைல் நீளம்) உள்ளே 124 ஏக்கரில் அரண்மனையும் ஏக காலத்தில் உயரத் தொடங்கின.

நகரின் பிரமாண்டமான கடைவீதியான சாந்தினி சௌக், ஷாஜஹானின் அருமை மகள் ஜஹனாராவின் நேரடி மேற்பார்வையில் உருவான ஒன்று. ஷாஜஹான் காலத்தில் சாந்தினி சௌக் கடைவீதியில் அமைக்கப் பட்ட விதவிதமான கடைகளின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து ஐந்நூற்று அறுபது.

1648, ஏப்ரல் 19-ம் தேதியன்று ஷாஜஹான் யமுனை நதியில் படகில் பயணித்து, கிழக்குப் பக்கமாக செங்கோட்டையின் பின்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த முழு வெள்ளியால் ஆன கதவைத் திறந்துகொண்டு அரண் மனைக்குள் பிரவேசித்தபோது நகரெங்கும் ஆரவாரம், வாணவேடிக்கைகள்! தர்பாரில் மெல்லிய தங்க இழைகளில் தங்கத்தினால் ஆன நட்சத்திரங்களைத் தொங்கவிட்டு ஒரு சொர்க்கலோகத்தையே உருவாக்கி யிருந் தார்கள். பீரங்கிகளும் அதைத் தொடர்ந்து வாத்தியங்களும் முழங்க, சக்ரவர்த்தி கம்பீரமாக நடந்து சென்று ஆயிரக்கணக்கான வைரக்கற்களால் இணைத்து உருவாக்கப் பட்ட, பிற்பாடு உலகப் புகழ்பெற்ற மயிலாசனத்தில் அமர்ந்தார்.

கோமேதகம், முத்துக்கள், வைரம், நீலம் போன்ற கற்களைக் கொண்டு செய்யப்பட்ட அழகிய மயில் பொம்மை ஒன்றைச் சிற்பிகள் அரியணையின் உச்சியில் பொருத்தியிருந் தார்கள். (பிற்பாடு ஆஸ்தான ஓவியர்கள் இரண்டு மயில்களாக வரைந்தது வேறு விஷயம்!).

புதிய அரண்மனையில் சக்ரவர்த்தி குடிபெயர்ந்ததை மக்கள் தொடர்ந்து பத்து நாட்கள் பெரும் விழாவாகக் கொண்டாடி னார்கள். ஊர்வலம், நாடகம், இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகள் என்று டெல்லி அல்லோலகல்லோலப்பட்டது.

ஆனால்...

நாம் சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டதைப் போல இரண்டாம் முறையாக தட்சிணப் பிரதேசத்துக்கு வைஸ்ராயாகச் சென்றிருந்த ஔரங்க சீப்புக்குப் புதிய தலைநகரம் - ஷாஜஹான் ஆட்சியில் இருந்தவரைக்கும் - ராசியில்லாமல் போனது. 1653-லிருந்து 1658 வரை செங்கோட்டையிலிருந்து தெற்கு நோக்கிச் சென்ற பல கடிதங்கள் இளவரசரை அவமானப்படுத்தும்படியாகவே அமைந்தன. அவ்வப்போது அன்னையின் கல்லறையை வணங்கப் போய்விட்டு அங்கே தாராவும் நண்பர்களும் கூடித் திட்டங்கள் போடும் செய்தியும் வந்து கொண்டிருந்தது. பொங்கியெழுந்த எரிச்சலை வெளிக் காட்டாமல் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமைகாத்தார் ஔரங்கசீப்.

மீர்ஜும்லா - கில்லாடியான ஒரு பாரசீக வைர வியாபாரி. இந்தியாவுக்கு வந்த அவர், தெற்கே கோல்கொண்டாவில் (ஹைதராபாத்) குடியேறினார். கோல்கொண்டாவின் மன்னர் குதுப் ஷாவுக்கு நெருக்கமான நண்பராகி தளபதியாகவும் பிறகு பிரதம அமைச்சராகவும் உயர்ந்தார் அவர். தனிப் பட்ட அரண்மனை, பரிவாரம், குதிரைப்படை என்றெல்லாம் வைத்துக்கொள்ளும் அளவுக்கு மீர் ஜும்லாவின் செல்வாக்கு உயர்ந்தது.

சுல்தானுக்காகப் படை திரட்டிக்கொண்டு சென்று கர்நாடகத்தின் பல பகுதிகளைக் கைப்பற்றிய ஜும்லா “நானே ஏன் மன்னராகக் கூடாது... எனக்கு என்ன குறைச்சல்?” என்று சொல்லிக்கொண்டார். தான் வசப்படுத்திய கர்நாடகப் பகுதிகளைக் கொண்டு ஒரு தனி ராஜ்யம் அமைக்கும் அளவுக்குப் போய்விட்டார்! விழித்துக் கொண்டு கலவரத்துக்குள்ளான கோல்கொண்டா சுல்தான், மீர்ஜும்லாவைச்

சரணடையச் சொல்லி ஆணையனுப்பினார். கூடவே கோல்கொண்டாவில் இருந்த ஜும்லாவின் குடும்பத்தைப் பிணைக் கைதிகளாகச் சிறைப்பிடித்து வைத்தார்.

‘இதென்ன கலாட்டா?!’ என்று திகைத்த ஜும்லா, உடனே ஔரங்கசீப்பிடம் உதவி கோரினார். இதற்காகவே காத்திருந்ததைப் போல மகிழ்ந்துபோன மொகலாய இளவரசர், டெல்லியிடம் சம்பிரதாயமாக அனுமதி கோரிவிட்டு முகமது சுல்தான் (ஔரங்கசீப்பின் மகன்) தலைமையில் ஒரு படையை அனுப்பி கோல்கொண்டாவை முற்றுகையிட்டார். பிற்பாடு ஔரங்கசீப் படையும் ஹைதராபாத் நகரில் புகுந்து சூறையாடியது.

ஔரங்கசீப் காலடியில் கோல்கொண்டா சுலபமாகவே விழுந்திருக்கும். அதற்குள் டெல்லிக்கு விரைந்து சென்றிருந்த சுல்தான் குதுப் ஷாவின் ஆட்கள், தாரா ஷூகோவைப் பார்த்துப் பேசினார்கள். என்ன நடந்தது என்று தெரியவில்லை. மூட்டையாகத் தங்கம், வைரம் என்று கைமாறியதாகவும் ஒரு தகவல் உண்டு! அதைத் தொடர்ந்து சக்ரவர்த்தியிடம் தாரா கிசுகிசுக்க, ‘உடனே வாபஸ் வாங்கவும்’ என்று ஷாஜஹானிட மிருந்து ஔரங்கசீப்புக்கு அவசர ஆணை போனது! கோல்கொண்டா சுல்தான் மன்னிக்கப்பட்டார். அவரிடம் பெரும் அபராதத் தொகை மட்டும் வசூலிக்கப் பட்டது.

தன்னை மீறி இதெல்லாம் நடக்க, ஔரங்கசீப்புக்கு ஏகத் திகைப்பு! வந்ததற்கு வெறும் கையோடு திரும்புவானேன் என்று எண்ணிய அவர், கோல்கொண்டா மன்னரின் மகளுக்குத் தன் மகன் முகமது சுல்தானை ரகசியமாகத் திருமணம் செய்வித்து, எதிர்காலத்தில் தன் மகன் ஹைதராபாத்துக்கு மன்னராக வேண்டும் என்று உறுதிமொழியையும் வாங்கிக்கொண்டு ஔரங்காபாத் திரும்பினார். டெல்லிக்கு வரவழைக்கப்பட்ட மீர்ஜும்லாவைப் பிரமாதமாக கௌரவித்து பிறகு அவரைப் பிரதம அமைச்சராகவும் ஆக்கினார் ஷாஜஹான்.



தர்பாரில் ஷாஜஹானின் இருக்கை...

திறமைவாய்ந்த இந்த கோல்கொண்டா வீரரின் தலைமையில் ஒரு படையை அனுப்பி ஆப்கானிஸ்தானைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஆசைகூட ஷாஜஹானுக்கு இருந்ததாகக் கேள்வி. ஆனால், ஆந்திராவில் இருந்து மீர்ஜும்லா கொண்டுவந்து காலடியில் குவித்த அற்புதமான வைர, தங்க ஆபரணங்களைப் பார்த்துப் பிரமித்துப்போன ஷாஜஹான் "தெற்கே இப்படி ஒரு வைரக் குவியல் இருக்கும்போது நான் எதற்காக அசட்டுத்தனமாக ஆப்கானிஸ்தான் அது இது என்று புலம்பிக்கொண்டிருக்கிறேன்..?" என்று கூறினாராம்.

1656 நவம்பர்....

பீஜப்பூர் சுல்தான் ஆதில்ஷா காலமாகவே, அதைத் தொடர்ந்து அங்கே சற்றுக் குழப்பம் நிலவியது. பீஜப்பூர் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த பதினெட்டு வயது நிரம்பிய ஒரு இளைஞர், சுல்தானின் வாரிசாக அரியணையில் அமர்த்தப்பட்ட செய்தி வந்து சேர்ந்தது. ஔரங்கசீப்புக்கு அங்கே படையெடுக்க ஒரு காரணமும் கிடைத்தது!

"இந்த இளைஞன் அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்ல. இது என்ன அலங்கோலம்?!" என்று முழங்கினார் டெல்லி இளவரசர். டெல்லியிலிருந்து ஒரு படையுடன் வந்த மீர்ஜும்லாவும் சேர்ந்து கொள்ள, ஔரங்கசீப் தலைமையில் மொகலாயப் படை பீஜப்பூரைச் சூழ்ந்து கொண்டது. வெற்றிக்கனியைப் பறிக்கும் வேளையில் ஔரங்கசீப் தன் தலையில் கைவைத்துக்கொண்டு அமர வேண்டி

வந்தது! ஷாஜஹானிடமிருந்து (தாரா சொல்படி) ஆணை - 'பீஜப்பூரைக் கைப்பற்ற வேண்டாம். போர் நிறுத்தம் செய்க. பீஜப்பூர் கட்ட வேண்டிய அபராதத் தொகையை டெல்லி நிர்ணயிக்கும்!' என்று! வெறுத்துப் போனார் ஔரங்கசீப்.

தலைநகரிலிருந்து தந்தை தொடர்ந்து ஏற்படுத்தி வரும் தடங்கல்களையும் அண்ணனின் தொல்லைகளையும் இனியும் அனுமதித்துக் கொண்டிருக்கக் கூடாது என்று குமுறிய ஔரங்கசீப்பைப் பார்த்து ஒருவழியாக விதி கண்சிமிட்டியது!

'சக்ரவர்த்தி ஷாஜஹான் திடீரென்று நோய்வாய்ப்பட்டுக் கவலைக்கிடமான நிலைமையில் இருக்கிறார்' என்று ஒரு தகவல் வந்தது டெல்லியிலிருந்து.

தூதுவர் இந்த விஷயத்தைச் சொன்ன மாத்திரத்தில் குதித்து எழுந்து நின்ற ஔரங்கசீப்பின் இதழோரத்தில் குரூரமான மகிழ்ச்சிப் புன்னகை தவழ்ந்தது. இடையில் இருந்த வாளை அவருடைய கை மெள்ள வருடிக்கொடுத்தது. "பாதுஷா படுக்கையில் இருக்கிறாரா அல்லது பரலோகம் போய் விட்டு அதை அண்ணன் என்னும் இந்த அயோக்கியன் மறைக்கப் பார்க்கிறானா?" என்றார் ஔரங்கசீப் இளக்காரமாக...!

சகோதரப் போர்!

உரைநடை, கவிதை, இசை, நாட்டியம், ஓவியம் மட்டுமல்ல - வானியல், கணிதம், மருத்துவம் போன்ற விஷயங்களும் சக்ரவர்த்தி ஷாஜஹான் ஆட்சியில் உன்னதமான நிலைக்குக் கொண்டு செல்லப் பட்டன. கட்டடக்கலை பற்றிச் சொல்லவே வேண்டாம்! ஆகவேதான் ஷாஜஹானின் ஆட்சிக்காலத்தை 'மொகலாயர்களின் பொற்காலம்' என்று வரலாற்று ஆய்வாளர்கள் வர்ணிக்கிறார்கள். 'இது மிகைப்படுத்தப்பட்ட பெயர் சூட்டல்!' என்று குறிப்பிடுபவர்களும் உண்டு. 'ஷாஜஹான் ஆட்சியில் குறைகள் நிறையவே உண்டு. ஆனால், தாஜ்மஹாலும் செங்கோட்டையும் ஆர்ப்பாட்டமான ராஜ தர்பாரும் தகதகவென்று ஒளி வீசிய மயிலாசனமும் மற்ற குறைகளையெல்லாம் மறக்கடித்துவிட்டன!' என்பது இவர்கள் வாதம். அப்படிப் பார்த்தால் வரலாற்று மைதானத்தில் பிரவேசித்து வெளியேறிய எந்தவொரு அரசன்தான் குற்றச்சாட்டு களிலிருந்து தப்பித்துவிட முடியும்?!

இந்தி மொழியில் இலக்கியம் கிடுகிடு வளர்ச்சி கண்டது ஷாஜஹான் காலத்தில் தான். பாதுஷா பிரமாதமாக இந்தியில் உரையாடுவார். அந்த மொழிக் கவிஞர்களிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தார் அவர். சுந்தர்தாஸ், சிந்தாமணி, கவீந்திர ஆச்சார்யா போன்ற கவிஞர்கள் சக்ரவர்த்தியால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டவர்கள். ஜகந்நாத் என்னும் இந்துஸ்தானி இசைக் கலைஞருக்கு 'மகா கவிராய்' என்ற பட்டம் ஷாஜஹான் தர்பாரில் வழங்கப்பட்டது. "பெரும்பான்மையாக இந்துக்கள் வசிக்கும் இடங்களில் பசுக்களைக் கொல்லக்கூடாது" என்றும் ஒரு ஆணை பிறப்பித்தார் ஷாஜஹான்!

ஒருபுறம் இந்துக்களின் இலக்கியம், கவித்திறன் போன்றவற்றுக்கு மதிப்பும் அங்கீகாரமும் தந்தாலும், இன்னொருபுறம் இந்துக்களுக்குப் பலவிதங்களில் சிரமங்களையும் ஏற்படுத்தினார் ஷாஜஹான். 'முஸ்லிம்கள் அணியும் பாணியில் எந்த உடைகளையும் ஆபரணங்களையும் இந்துக்கள் அணியக்கூடாது. பொது இடங் களில் மது அருந்தக்கூடாது. முஸ்லிம்களைப் பணியாட்களாக

வைத்துக்கொள்ளக்கூடாது' போன்ற ஷாஜஹானின் சட்டங்கள், அக்பர் காலத்திலிருந்தே சற்றே நிம்மதியான வாழ்க்கையை அனுபவித்து வந்த இந்துக் களிடையே, சலசலப்பை ஏற்படுத்தியது.

அக்பர் ஆட்சி புரிந்தபோது தங்களுக்குத் தரப்பட்ட சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்துக்கள் ஏராளமான கோயில்களைக் கட்டத் துவங்கியிருந்தனர். "புதிதாகக் கட்டப்பட்ட இந்துக் கோயில்கள் இடிக்கப்படும்" என்று ஒரு நாள் ஒட்டு மொத்தமான ஆணையிட்டார் ஷாஜஹான்! இந்தத் திடீர் நடவடிக்கைக்குக் குறிப்பான காரணம் புரியாமல் வரலாற்று ஆய்வாளர்கள் இன்றளவும் விழிக்கிறார்கள்! உதாரணமாக, காசியில் மட்டும் பாதுஷாவின் ஆணையின் பேரில் அறுபத்துமூன்று இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டன. இந்துக்களின் வெறுப்பைச் சம்பாதித்துத் தந்த இந்த நடவடிக்கைகளுக்கு நிச்சயமாக மூத்த மகன் தாரா ஷூகோ காரணமாக இருந்திருக்க முடியாது.

தாரா பற்றியும் சற்றுச் சொல்லியாக வேண்டும்...!

இந்து, இஸ்லாமிய, கிறிஸ்துவ மதங்களைப் பற்றிய புத்தகங்களையெல்லாம் கரைத்துக் குடித்து 'அறிஞர்' என்று போற்றப்பட்டவர் தாரா. இந்து - இஸ்லாம் மதங்களை ஒப்பிட்டு, 'சங்கமிக்கும் இரு கடல்கள்' என்ற தலைப்பில் பெரிய புத்தகம் ஒன்றை எழுதினார் அவர். வேதாந்தம், உபநிஷத்துக்கள், பைபிள் எல்லாம் தாராவுக்கு அத்துப்படி. அதர்வண வேதத்தையும் 52 உபநிஷத்துக்களையும் பாரசீகத்தில் தன் மேற்பார்வையில் மொழி பெயர்க்கச் செய்தார் இந்த மூத்த இளவரசர்!

அக்பருக்கும் தாராவுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு! அக்பரைப் போல ஒரு புதிய மதத்தையே துவக்க முற்படவில்லை தாரா. எல்லா மதங்களுமே மேன்மையானவை என்பதில் முழு நம்பிக்கை கொண்டிருந்தார் இவர். எல்லா மதங்களைச் சேர்ந்த அறிஞர்களும் அன்றாடம் இளவரசரைச் சந்தித்து உஷ்ணம் கலக்காமல் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர். அதேசமயம் அடிப்படையில் இஸ்லாமியராகவே வாழ்ந்தவர் தாரா ஷூகோ என்பதையும் பலர் ஒப்புக்கொள்கின்றனர்.

ஷாஜஹான்

தாரா ஷுகோவின் வாழ்க்கையை விவரமாக எழுதியுள்ள கானுங்கோ என்னும் வரலாற்று ஆசிரியர், 'இந்தியாவில் மத ஒற்றுமையை நிலைநிறுத்த நினைப்பவர்கள் வேறொன்றும் செய்ய வேண்டாம் - தாரா ஷுகோ அரம்பித்து வைத்த இடத்திலிருந்து பணியைத் துவங்கினால் போதும்!' என்று குறிப்பிடுகிறார்.

ஷாஜஹான் மிகவும் செல்லம் கொடுத்து மூத்த மகனைத் தன்னுடனேயே அரண் மனையில் வைத்துக்கொண்டது ஒரு பெரும் தவறாகப் போனது. அதனால் தேவையான போர் அனுபவம் தாராவுக்கு இல்லாமல் போய்விட்டது. தவிர, ஏராளமான புத்தகங்களைப் படித்ததால் இளவரசருக்குச் சற்றே கர்வமும் வந்து சேர்ந்தது. சில சமயங்களில் வயது முதிர்ந்த அறிஞர்களைக் கூட மட்டம் தட்டிப் பேசினார் தாரா. புத்தகங்களைத் தாண்டியும் ஒரு உலகம் உண்டு என்பதை அவர் புரிந்து கொள்ளத் தவறினார். கடைசியில் ஷாஜஹானின் அன்புக்குப் பாத்திரமான இந்த மூத்த மகனின் வீழ்ச்சியை அவருடைய எண்ணி லடங்காத புத்தகங்கள் பரிதாபமாகப் பார்த்துக்கொண்டிருந்தன!

சக்ரவர்த்தி ஷாஜஹானுக்கு உடல்நலக் குறைவு என்று சென்ற அத்தியாயத்தில் சொல்லிவிட்டு, சம்பிரதாயமாகக்கூட நாம் விசாரிக்காமல் இருந்தால் எப்படி?!

உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டு மூன்று நாட்கள் சிறுநீர் கழிக்க முடியாமல் தவித்தாலும் நல்லகாலமாக (பிற்பாடு நிகழ்ந்தேறிய சம்பவங்களைப் பார்த்தால் 'கெட்ட காலம்' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது!) ஷாஜஹான் பிழைத்துக் கொண்டார். மன்னரின் உடல்நலம் இப்படித் திடீரென்று பாதிக்கப்பட்டதற்குப் பல காரணங்கள் அப்போது டெல்லியில் கிசுகிசுக்கப்பட்டன.

'அந்தப்புரத்தில் தன் ஆண்மையைச் சற்று அதிகபட்சம் நிலைநிறுத்திக்காட்ட விரும்பிய அரசர் (மூத்த மகனுக்கு வயது 40-க்குமேல்!) ஏதோ லேகியங்களை விழுங்கி வைக்க... கடைசியில் சக்ரவர்த்தியின் சிறுநீர் போகும் வழித்தடம் அடைத்துக்கொண்டு விபரீதத்துக்கு வழிவகுத்துவிட்டது' என்பதும் கிசுகிசுக்கப்பட்ட காரணங்களில் ஒன்று!

இதைத் தொடர்ந்து, ஷாஜஹான் தாராவிடம் தற்காலிகமாக நிர்வாகப் பொறுப்பைத் தந்துவிட்டு ஆக்ராவுக்கு இடம் மாறி ஓய்வெடுத்துக்கொண்டார்.

பாதுஷா பற்றிய இந்தச் செய்திகள் மற்ற மகன்களுக்கு எட்டவில்லை. தேவையில்லை என்று கருதினார் தாரா. இந்த அலட்சியமே மற்றவர்களை உசுப்பிவிடக் காரணமாகிப் போய்விட்டது. 'அரசர் அமரராகிவிட்ட தகவலை அண்ணன் மறைக்கிறார்' என்று முடிவுகட்டிய மற்ற சகோதரர்கள் கலவரத்தில் ஆழ, கலகம் வெடித்தது.

செப்டம்பர் 1657-ல் ஷாஜஹான் படுக்கையில் வீழ்ந்த சமயம் தாரா, ஷுஜா, ஔரங்கசீப், முராத் சகோதரர்களுக்கு வயது முறையே 43, 41, 39, 33.

வங்காளத்தில் கவர்னராக இருந்த ஷுஜா, தானாகவே அங்கே ஒரு முடிசூட்டு விழாவை நடத்திக்கொண்டு, ஒரு படையுடன் டெல்லி நோக்கி முன்னேறினார். ஷுஜா ஷையா பிரிவுக்கு மாறியவர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஷூஜாவைத் தொடர்ந்து, குஜராத்தில் நிர்வாகம் செய்து கொண்டிருந்த முராத், அவசர அவசரமாகத் தன்னை மன்னராக அறிவித்துக்கொண்டு ஒரு படையுடன் தலைநகர் நோக்கிக் கிளம்ப... தெற்கே வைஸ்ராயாக இருந்த ஔரங்கசீப் தன் குள்ளநரிச் சாதுரியத்தைக் காட்டினார். 'நாம் இருவரும் ஒன்று சேர்ந்து தாராவுக்கு முடிவு கட்டுவோம். ஆப்கானிஸ்தான், பஞ்சாப், காஷ்மீர், சிந்து உனக்கு. மிச்சம் எனக்கு!' என்று தம்பிக்குச் செய்தி அனுப்பினார் ஔரங்கசீப். 'அதுவும் நல்லதுதான். காரியத்தைச் சுலபமாக முடிக்கலாம். பிறகு ஔரங்கசீப் கதையை முடிக்கலாம்!' என்று முராத்தும் 'தாராவை வீழ்த்திய பிறகு முராத்தின் மூச்சை நிறுத்திக்கொள்ளலாம்' என்று ஔரங்கசீப்பும் மனதுக்குள் கணக்குப் போட்டனர். பிறகு ஔரங்கசீப் முராத்தைச் சந்தித்தபோது, "எனக்கு நாடே தேவையில்லை. நம் மதத்தின் கோட்பாடுகளுக்கு எதிரிகளான தாராவும் ஷூஜாவும் அழிந்தால், அதுவே போதும். நான் சந்நியாசியாக எஞ்சிய நாட்களைக் கழிப்பேன்!" என்று சொல்லியதாகவும் அதிலிருந்து முராத்தை ஔரங்கசீப் 'பாதுஷாஜி' என்றும், அண்ணனைத் துறவிகளுக்கு உரிய அடைமொழியில் 'ஹஸ்ரத்ஜி' என்று தம்பியும் அழைத்துக் கொள்ள ஆரம்பித்ததாகவும் ஒரு தகவல் உண்டு!

தனியே அரைகுறையாகப் படை திரட்டிக்கொண்டு சென்ற ஷூஜாவை டெல்லிப் பெரும்படை (பிரதம தளபதி - தாராவின் மகன் சுலைமான் ஷூகோ) காசி அருகே மடக்கி விரட்டியடித்தது. அதைத் தொடர்ந்து ஔரங்கசீப் - முராத் கூட்டணிப் படையைச் சமாளிக்க, ஜோத்பூர் ராஜா ஜஸ்வந்த்சிங் மற்றும் தளபதி காசிம்கான் தலைமையில் ஒரு படை டெல்லியிலிருந்து அனுப்பப்பட்டது. 1658-ம் ஆண்டு ஏப்ரல் 15-ம் தேதியன்று உஜ்ஜயினி நகருக்கு 14 மைல் தொலைவில் நடந்த யுத்தத்தில் ஔரங்கசீப் பக்கம் வெற்றி.

ஜஸ்வந்த்சிங், காசிம்கான் தலைமையில் இந்து முஸ்லிம் படை வீரர்களுக்கிடையே துளிர்விட ஆரம்பித்துவிட்ட வேற்றுமைகளும் ஷாஜஹான் படையின் தோல்விக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

போர்க்களத்திலிருந்து தன் கணவர் ஜஸ்வந்த்சிங் ஓடி வந்ததால் அவமானப்பட்டுப் போன ஜோத்பூர் ராணி, அரண்மனைக் கதவுகளை மூடச் செய்து கணவரை உள்ளேவிட மறுத்தது உணர்ச்சிகரமான ஒரு நிகழ்ச்சி.

போரில் வெற்றியடைந்து அதனால் உற்சாகமும் அடைந்த ஔரங்கசீப் - முராத் கூட்டணிப் படை, சம்பல் நதியைக் கடந்து ஆக்ராவுக்குக் கிழக்கே எட்டு மைல் தொலைவுக்கு வந்து சேர்ந்தது.

வாட்கள் உருவப்பட்ட கையோடு நான்கு மகன்களும் ஆக்ராவிலிருந்து ஷாஜஹானுக்கு 'எல்லாமே நாட்டின் நன்மைக்குத்தான். தந்தையார் கவலை கொள்ள வேண்டாம்!' என்று கடிதங்களை அனுப்பி பாதுஷாவின் கவலையை அதிகப்படுத்தினார்கள்!

மகன்களை ஆக்ராவுக்கு அழைத்துச் சமாதானம் பேச விரும்பினார் சக்ரவர்த்தி. ஆனால், நிலைமை கைமீறிப் போயிருந்தது. "நானா, ஔரங்கசீப்பா என்று முடிவாக வேண்டிய தருணம் வந்துவிட்டது. நேரடியாக யுத்தகளத்தில் நாங்கள் மோதியாக வேண்டும் என்பது விதிக்கப்பட்ட ஒன்று!" என்று முழங்கினார் தாரா ஷூகோ. அதையடுத்து போர் உடை தரித்து 50,000 வீரர்கள் அடங்கிய படையோடு டெல்லிக் கோட்டையைவிட்டுக் கிளம்பினார் தாரா. 'பார்ப்பதற்கு உணர்ச்சிகரமான பேரணியாக இருந்தாலும் தாராவின் படையில் பாதிப்

பேருக்குப் போர் அனுபவம் கிடையாது. அகப்பட்டவர்களுக்கெல்லாம் போர் உடை அணிவித்து படையில் சேர்த்துக் கொண்டார்கள். ஔரங்கசீப் படையோ, ஏற்கெனவே பல மோதல்களைக் கண்டு உரம் பெற்றதாக இருந்தது. முடிவில் என்ன நடக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?!' என்கிறார் வரலாற்று ஆசிரியர் ஒருவர்.

29, மே 1658-ம் ஆண்டு ஆக்ரா அருகே நடந்தது பயங்கர யுத்தம். தாராவின் வீரர்கள் வீரத்துடனும் விசுவாசத்துடனும் ஔரங்கசீப்-முராத் வீரர்களுடன் மோதினார்கள். யுத்தத்தில் முராத் உயிர் தப்பியதே பெரிய விஷயம் என்று கூறப் படுகிறது. யானை மீது அமர்ந்திருந்த அவர் உடம்பின் பல இடங்களில் அம்புகள் ஏற்படுத்திய காயங்கள்!

அப்போதுதான் திகைப்பூட்டும் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. தாரா ஷூகோவின் யானை ஈட்டிகளால் குத்தப்பட்டுப் பட்டு காயப்பட, அதிலிருந்து குதித்த தாரா ஒரு குதிரை மீது தாவி ஏறினார். யானை வீழ்ந்ததையும் அதன்மேல் இளவரசர் இல்லாமலிருந்ததையும் மட்டுமே கண நேரத்தில் பார்த்த டெல்லி வீரர்கள், தாரா இறந்துவிட்டதாகத் தவறாக நினைத்துப் பீதியில் ஆழ்ந்தார்கள். கலவரப்பட்டுப் பின்வாங்கினார்கள். அதிர்ஷ்டதேவதை ஔரங்கசீப் பக்கம் பார்த்துக் கை உயர்த்திக் காட்டினாள். அதோடு சரி! ஔரங்கசீப் படை உத்வேகத்துடன் பாய்ந்து டெல்லிப் படையைப் பந்தாடிவிட்டது!

எல்லாவற்றையும் இழந்து, தோல்வியோடு இரவு ஒன்பது மணி சுமாருக்குத் தடுமாறிய வண்ணம் ஆக்ரா அரண்மனைக்குத் திரும்பிய தாரா, தன் பிரத்யேக அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டார். விஷயம் கேள்விப்பட்டுக் கலங்கிப் போயிருந்த மன்னர் ஷாஜஹான் அன்புடன் அழைப்பு விடுத்தும், அவமானம் காரணமாகத் தந்தையை மகன் சந்திக்கவில்லை!

மறுநாள் அதிகாலை தன் குடும்பத்துடனும் விசுவாசமான வீரர்களுடனும் ஆக்ராவில் இருந்து தப்பி வெளியேறி வடக்குப் பக்கம் ஓடினார் தாரா. அவர் செய்தது நல்லதாகவே போயிற்று. ஏனெனில், தாரா தப்பித்த சில மணி நேரத்தில் ஔரங்கசீப் படை ஆவேசமாக ஆக்ரா கோட்டையைச் சூழ்ந்து கொண்டுவிட்டது. ஔரங்கசீப்பின் சீற்றம் கண்டு பீதியிலாழ்ந்தார் பாதுஷா. உடனே 'நல்வரவு ஆகுக!' என்று கடிதத்துடன், 'ஆலம்கீர்' என்று அழைக்கப்பட்ட தன் புகழ்பெற்ற வாளையும் பரிசாக மகனுக்கு அனுப்பி வைத்தார். (பிற்பாடு 'ஆலம்கீர்' என்ற பட்டத்தைத் தன் பெயருக்கு முன்னால் இணைத்துக் கொண்டார் ஔரங்கசீப். ஆலம்கீர் எனில், 'அகண்ட வெளியைக் கைப்பற்றி ஆட்சி புரிபவர்' என்று பொருள். 'ஜஹாங்கீர்' என்றால் (வெறும்!) உலகைக் கைப்பற்றியவர் என்று அர்த்தம்!)

'சக்ரவர்த்தி நலமா? விரைவில் வந்து சந்திக்கிறேன்!' என்று பதில் கடிதம் அனுப்பிய ஔரங்கசீப், கூடவே 'தாரா இஸ்லாத்துக்கு முதல் எதிரி. அவனுக்குப் போய்த் தாங்கள் ஆதரவு தந்தீர்கள்! நாட்டையும் என் மதத்தையும் காப்பாற்ற நான் வாளெடுக்க வேண்டி வந்தது காலத்தில் கட்டாயமாகப் போய்விட்டது. சரி, நடந்தது நடந்துவிட்டது. ஆக்ரா கோட்டையை உடனே என் தளபதிகளிடம் ஒப்படைக்க வழியைப் பாருங்கள்!' என்றும் சொல்லி அனுப்பினார்.

'நான் இன்னும் பாதுஷா என்பதை நினைவில் கொள்! கோட்டையை ஒப்படைக்க முடியாது. அது எனக்கு அவமானம்!' என்று கோபத்துடன் ஷாஜஹானிடமிருந்து பதில் வந்தது. என்ன இருந்தாலும் உள்ளே இருப்பது தந்தையார்! வாயிற்புறத்தில் நாம் ரத்தக் கோலம் போட

வேண்டாம். தாரா என்னை வீழ்த்திவிட்டு வெற்றிக்கொடியோடு திரும்புவான் என்றே பாசத்தால் சித்தம் கலங்கிப்போன என் தந்தை பகல் கனவு கண்டிருப்பார். ஆகவே, அரண்மனைக்குள் முன்னேற்பாடுகள்கூட எதுவும் செய்திருக்க மாட்டார்கள். உள்ளே குடிநீரைச் சேகரித்து இருப்பார்களா என்பது கூடச் சந்தேகம்! உடனே யமுனை நீர் அரண்மனைக்குள் செல்லும் வழிகளை மூடுங்கள். என்ன ஆகிறதென்று பார்ப்போம்!” என்று ஆணையிட்டார் ஒளரங்கசீப்.

அவர் ஊகித்தது போலவே அரண்மனைக்குள் குடிநீர் இல்லை. உபயோகப்படுத்தப்படாத, சேறும் சகதியுமாக இருந்த சில கிணறுகளிலிருந்த நீரை உபயோகிக்க வேண்டிய கட்டாயம் பாதுஷாவுக்கு ஏற்பட்டது. தாகத்தால் தவித்துக் கலங்கிப்போன ஷாஜஹான், நாற்றமெடுத்த அந்த நீரை அவருவருப்புடன் குடிக்க வேண்டி வந்தது. மூன்று நாட்களுக்கு மேல் இந்தக் கொடுமையான அனுபவத்தைத் தாங்க முடியவில்லை ஷாஜஹானால்!

‘இந்துக்களிடையே இறந்தவர்களுக்குக் கூடக் குடிநீர் தரும் சம்பிரதாயம் உண்டு. நீ ஒரு சிறந்த முஸ்லிம். உயிரோடு இருக்கும் உன் தந்தைக்குக் குடிக்க நீர் தர மறுக்கலாமா?’ என்கிற அளவுக்கு வெறுத்துப்போய் ஒளரங்கசீப்புக்கு ஒரு கடிதம் அனுப்பினார் அவர். ‘யார் சிறந்த முஸ்லிம் என்பதை எல்லாம் முடிவுசெய்யும் அருகதை உங்களுக்குக் கிடையாது!’ என்று பதில் போனது ஒளரங்கசீப்பிடமிருந்து!

‘ஒருவழியாகத் தந்தை - மகன் உறவையெல்லாம் கடந்த கொடுமையான நிலைமை உருவாகிவிட்டதைப் புரிந்து கொண்ட ஷாஜஹான், தவிர்க்க முடியாமல் தலைவணங்க வேண்டி வந்தது. விரும்பியது கிடைக்காமல் அழுது அழுது, பிறகு மெள்ளத் தூங்கிப்போன குழந்தையின் நிலைக்குப் போனார் சக்ரவர்த்தி’ என்று சோகம் இழையோடும் நயத்தோடு பளிங்குச் சிறையில் கைதியாகச் சிக்கிக் கொண்ட ஷாஜஹானின் பரிதாப நிலையை விவரிக் கிறார் வரலாற்று ஆசிரியர் ஒருவர்!

19

ஔரங்கசீப்..

உருண்டன தலைகள்...

ஆக்ரா கோட்டையை ஔரங்கசீப் வசப்படுத்தி மூன்று நாட்கள் கழிந்தன. வீட்டுச்சிறைக் கைதியாக உள்ளே ஓரங்கட்டப்பட்டுவிட்ட ‘சக்ரவர்த்தி’ ஷாஜஹானை நேரில் சென்று சந்திக்க முடிவுசெய்த இளவரசர், “யானைமீது நான் அமர்ந்து பெரிய ஊர்வலமாகப் போய் அப்பாவைச் சந்திக்க வேண்டும்” என்றார் கூடியிருந்தோரிடம். வேண்டாத மகன் வெற்றி வீரராகிவிட்டதை, கைதியாகிப் போன தந்தை கண்ணாரப் பார்க்க வேண்டும் என்று இளவரசர் விரும்பினாரோ என்னவோ... ஆனால், அந்தச் சந்திப்பு நிகழவில்லை. கடைசி நிமிடத்தில் வந்த ஒரு தகவல்தான் காரணம்!

உள்ளே ஷாஜஹானோடு இருந்த மெய்க்காவலர்கள் எல்லோரும் அப்புறப்படுத்தப்பட்டுவிட்ட நிலையில் பாதுஷாவுக்குக் காவல் இருந்தவர்கள், அங்கிருந்த அடிமைப் பெண்களே! ‘தந்தையைச் சந்திக்க ஔரங்கசீப் வரும்போது, வாட்டசாட்டமான இந்தப் பணிப்பெண்கள் குறுவாட்களுடன் பாய்ந்து இளவரசரைத் தீர்த்துக்கட்ட முடிவு செய்திருக்கிறார்கள்’ என்பதுதான் ஔரங்கசீப்புக்கு வந்த ரகசியத் தகவல்! சற்று அதிகமாகவே எச்சரிக்கை உணர்வு கொண்ட இளவரசர், அந்தக் கணமே தந்தையைச் சந்திக்கும் முடிவை மாற்றிக் கொண்டார். கூடவே, “எத்தனையோ போர்க்களங்களைப் பார்த்த நான், சில பாவாடைகளுக்குப் பயப்படுவதா...?” என்றும் நண்பர்களிடம் அலுத்துக்கொண்டார்.

அந்தச் சமயம் பார்த்து அவர் கையில் வகையாகச் சிக்கியது, தாராவுக்கு ஷாஜஹான் எழுதிய ஒரு கடிதம். ‘தாரா, நலமாக இருக்கிறாயா?’ என்று ஆரம்பித்து, தன் ஆதரவு தாரா ஷூகோவுக்குத்தான் என்று முடிக்கப்பட்டிருந்தது அந்தக் கடிதம்.

இதையே ஒரு காரணமாகக் காட்டி, “இந்த நிலையிலும் வஞ்சகமாக நடந்துகொள்ளும் தந்தையை நான் பார்க்க விரும்பவில்லை!” என்று கோபத்துடன் அறிவித்த ஔரங்கசீப், டெல்லிக்கு ஊர்வலமாகக் கிளம்பினார்.

அண்ணனுடன் கூட்டணி அமைத்துச் செயல்பட்ட முராத்தின் மூளை ஒருவழியாக வேலைசெய்ய ஆரம்பித்தது. தன்னைப் ‘பாதுஷாஜி’ என்று ஔரங்கசீப் அழைத்ததெல்லாம் வெறும் கிண்டல்தான் என்பது மெள்ள மெள்ள அவருக்குப் புரிந்தது. போகிறபோக்கைப் பார்த்தால்,

பணியாளுக்குத் தரும் மரியாதையைக்கூட ஔரங்கசீப் தனக்குத் தரப்போவதில்லை என்பதைப் புரிந்துகொண்ட முராத், தன் சகாக்களை ஆலோசனைக்கு அழைத்தார். "சமயம் பார்த்து ஔரங்கசீப்பைத் தீர்த்துக்கட்ட வேண்டியதுதான்" என்றார்கள் நண்பர்கள். ஓரிரு நாட்கள் அந்தத் திட்டத்தை முராத் தள்ளிப்போட்டதுதான் பெரும் தவறாகப் போயிற்று. அதற்குமுன் அவருக்கு அழைப்பு வந்துவிட்டது ஔரங்கசீப் பிடமிருந்து - விருந்துக்கு வரச்சொல்லி!

அன்று ஜூன் 25-ம் தேதி, ஆண்டு 1658. அண்ணனுக்குத் தான் சந்தேகப்படுவது தெரியக்கூடாது என்பதற்காக ஷாபாஸ் என்னும் ஒரே ஒரு மெய்க்காவலரோடு டெல்லிக்கு அருகே மதுராவில் அமைக்கப் பட்டிருந்த ஔரங்கசீப்பின் பாசறைக்கு இயல்பான புன்னகையுடன் வந்து சேர்ந்த முராத்தை, ஔரங்கசீப் ஆரத்தழுவி வரவேற்றார். ஔரங்கசீப்புக்கு மது அருந்தும் பழக்கம் கிடையாது (ஒரே ஒரு முறை மதுக் கோப்பை வாயருகே போய்விட்ட 'ரொமான்டிக்'கான நிகழ்ச்சி பிறபாடு!).

முராத் செய்த தவறுகள் இரண்டு. போட்ட திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தாமல் தள்ளிப் போட்டது. சமய சந்தர்ப்பம் தெரியாமல் மது அனுபவிக்க அமர்ந்தது!

கஞ்சத்தனத்துக்குப் பேர்போனவர் ஔரங்கசீப் என்று சொல்வார்கள். அன்று தம்பிக்கு மதுவைத் தாராளமாகவே வழங்கினார் அவர். எழுந்து நிற்கப் பார்த்த முராத்தின் கால்கள் தள்ளாடின. தம்பியை அங்கேயே படுக்கச் சொல்லிவிட்டுக் கிளம்பிய அண்ணன், கால் பிடித்துவிடத் தம்பிக்காக ஒரு பணிப்பெண்ணையும் அனுப்பினார்!



மெய்க்காவலர் ஷாபாஸ் கையில் நீண்ட வாளுடன் மிகுந்த எச்சரிக்கையுடன் எஜமானர் முராத்தைக் காவல் காக்க... திடீரென்று வெளியே ஏதோ கலவரமான சத்தம். அது வெறும் சத்தமல்ல, சதித் திட்டம் என்பது புரியாத ஷாபாஸ், வாளோடு வெளியே பாய... 'அலேக்' என்று நாலைந்து வீரர்கள் அவரைத் தூக்கிச்சென்று கழுத்தை நெரித்துக் கொன்றுபோட்டனர். சில மணி நேரம் கழித்து லேசாகக் கண் விழித்த முராத்தின் சப்தநாடியும் ஒடுங்கிப் போனது. சுற்றி நின்றுகொண்டிருந்த ஔரங்கசீப் வீரர்களின் வாள் முனைகள் முராத்தின் மார்பருகே பளிச்சிட்டன.

சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட முராத்தைக் கொண்டுவந்து டெல்லி அருகே யமுனை நதியில் உள்ள சிறு தீவு ஒன்றில் இருக்கும் கோட்டைக்குள் தள்ளினார்கள்.

ஜோதிடர்கள் நல்ல நாள், நேரம் பார்த்துச் சொல்ல, ஜூலை 21, 1658-ல் டெல்லி செங்கோட்டைக்குள் பரந்து விரிந்திருந்த தோட்டத்தில் எளிமையாக 'ஆலம்கீர்' என்ற பட்டப்பெயருடன் முடிசூட்டிக்கொண்ட ஔரங்கசீப் விழா, வாணவேடிக்கை என்றெல்லாம் சற்றும் நேரத்தை வீணாக்க வில்லை. படையைத் திரட்டிக்கொண்டு மற்ற அண்ணன்மார்களை ஒரு கைபார்க்கக் கிளம்பிவிட்டார். அதுதான் ஔரங்கசீப்!

லாகூருக்குத் தப்பி சென்றிருந்த தாரா, இவ்வளவு விரைவாக - ஒரே மாதத்தில் - படையுடன் ஔரங்கசீப் ஒரு பெரும் அலையைப் போல

வந்து சேர்வார் என்று எதிர்பார்க்காததால், ‘தப்பித்தோம்... பிழைத்தோம்...’ என்று ஸட்லெஜ் நதியைக் கடந்து முல்தான் பிரதேசத்துக்கு ஓடவேண்டி வந்தது. முன்னொரு சமயம் ஷெர்ஷா துரத்த... ஹுமாயூன் தப்பி ஓடிய அதே பாதை! ஆனால், ஹுமாயூனுக்குக் கடைசி காலத்தில் வந்து சேர்ந்த அதிர்ஷ்டம்தான் தாராவுக்கு அடிக்கவில்லை!

இதற்கிடையே ஷூஜா ஒரு படையுடன் வங்காளத்திலிருந்து டெல்லிக்குக் கிளம்பி விட்ட செய்தி ஔரங்கசீப்புக்கு வந்து சேர்ந்தது. “ஒரு இடத்தில் நின்று போர் புரியாமல் ஓடிக்கொண்டிருக்கும் தாராவுடன் நான் கண்ணாமூச்சி ஆடிக்கொண்டிருக்க முடியாது. நீங்கள் தொடர்ந்து துரத்திச் செல்லுங்கள். நான் வங்காளத்திலிருந்து கிளம்பிவிட்ட விஷ வண்டை நசுக்கிவிட்டு வருகிறேன்” என்று தளபதிகளிடம் சொல்லி விட்டு கிழக்கு நோக்கித் தன் போர்ப் படையைத் திருப்பினார் ஔரங்கசீப். அவருடன் பயணித்தது - தளபதிகள் கோல்கொண்டா புகழ் மீர்ஜும்லா மற்றும் ராஜபுத்திரர் ஜஸ்வந்த்சிங்.

மும்தாஜ் கல்லறை... பின்னால் தெரிவது ஷாஜஹான் கல்லறை... (உண்மையில் தாஜ்மஹாலின் அடித்தளத்தில் இவற்றுக்கு நேர்கீழ்ப் பகுதியில்தான் இருவரும் அடக்கம் செய்யப்பட்ட இடங்கள் உள்ளன...)

தாராவிடமிருந்து ஔரங்கசீப் பக்கம் கட்சி மாறியிருந்த ராஜா ஜஸ்வந்த்சிங் (போரில் புறமுதுகு காட்டியதற்காக ஜோத்பூர் கோட்டைக் கதவுகளை இவர் மனைவி மூடச்சொன்னது நினைவிருக்கும்!), ஷூஜாவுக்கு ஒரு ரகசியக் கடிதம் அனுப்பி யிருந்தார் - ‘கடைசி நிமிடத்தில் நான் பின்னாலிருந்து ஔரங்கசீப் படையைத் தாக்குகிறேன். அதே நேரத்தில் முன்னாலிருந்து தாங்கள் தாக்குதலை ஆரம்பியுங்கள்!’ என்று. ஜஸ்வந்த்சிங் சொன்னது உண்மை. ஆனால், ஏற்கெனவே ஒரு முறை தாராவிடமிருந்து கட்சி மாறியவரை எப்படி நம்புவது? ‘என்னவோ ஏதோ’ என்று சந்தேகப்பட்ட ஷூஜா, கடிதத்தில் எழுதியபடி ஜஸ்வந்த்சிங் செயல்பட்டபோது, தன் பங்கைச் செய்யாமல் பின்வாங்க... நிலைமை ஔரங்கசீப்புக்குச் சாதகமாகப் போனது. தலையிலடித்துக் கொண்ட ஜஸ்வந்த்சிங், தன் படைப்பிரிவுடன் அரைகுறையாக

ஔரங்கசீப் படை வீரர்களைத் தாக்கிவிட்டு ராஜஸ்தானுக்கு ஓடிப்போனார். ஔரங்கசீப்பைச் சமாளிக்க முடியாமல் ஷூஜா டாக்கா நகருக்கு ஓட வேண்டி வந்தது. ஔரங்கசீப் ஆணைப்படி மீர் ஜும்லா அவரை விடாமல் துரத்த, ஷூஜா அஸ்ஸாம் வழியே பர்மா எல்லைக்குள் புகுந்து அராக்கான் காட்டுப் பகுதிக்குள் ஒளிந்துகொண்டார். அதற்குப் பிறகு ஷூஜா குடும்பத்தினரும் கூடச் சென்ற விசுவாசமான வீரர்களும் என்னவானார்கள் என்று வரலாற்றில் எந்தக் குறிப்பும் இல்லை. அராக்கான் காட்டில் வசித்த, மனித இறைச்சி உண்ணும் காட்டுவாசிகள் ஷூஜா குழுவை ஒட்டுமொத்தமாகத் தீர்த்துக்கட்டி விருந்து பண்ணிவிட்டதாக ஒரு ஊகம் உண்டு! ஆனால், ரொம்ப காலத்துக்கு ஔரங்கசீப் "ஷூஜாவுக்கு என்ன நேர்ந்தது என்று யாருக்கும் தெரியாது என்றால் எப்படி? அப்படியென்றால் எப்போது வேண்டு மானாலும் திடீரென்று ஒரு படையோடு ஷூஜா இங்கு வந்து தொலைக்கலாம் என்றுதானே அர்த்தம்?" என்று அலுத்துக் கொண்டிருந்ததாகக் கேள்வி!

தாரா ஷூகோவின் கதியைப் பர்ப்போம்!...

சிந்து மாகாணத்தில் இருந்த தாரா, தன் படையுடன் அங்கிருந்து கிளம்பி பயங்கரமான கட்ச் பாலைவனத்தைச் சிரமப்பட்டுக் கடந்து குஜராத் வந்து சேர்ந்தார். அங்கிருந்து தெற்கு நோக்கிச் சென்று கோல்கொண்டா, பீஜப்பூர் சுல்தான்களின் உதவியைப் பெறலாம் என்பது தாராவின் திட்டம். அதேசமயம், அங்கு படையுடன் வந்து சேர்ந்த ஜஸ்வந்த்சிங், "நாம் இருவரும் இணைந்து சென்று டெல்லியைக் கைப்பற்றுவோம்!" என்று யோசனை சொல்ல... அவருடன் சேர்ந்து கொண்டார் தாரா. ஆனால், ஔரங்கசீப்பின் தந்திரம் இங்கும் வேலை செய்தது. 'நீங்கள் செய்த தவறையெல்லாம் மன்னித்துவிட்டேன். தாராவிடமிருந்து விலகினால் உங்களுக்கு பெரும் பதவி காத்திருக்கிறது!' என்று ஜஸ்வந்த்சிங்குக்கு ஒரு கடிதம் அனுப்பினார் ஔரங்கசீப். கடைசி நேரத்தில் (இன்றைய எம்.எல்.ஏ-க்களுக்குச் செமத்தியான முன்னோடி போலிருக்கிறது!), தாராவின் காலை வாரிவிட்டு ஔரங்கசீப்பின் பக்கம் சேர்ந்துகொண்டார் ஜஸ்வந்த்சிங்.

ஆண்டு 1659... ஏப்ரல் மாதம் 12-ம் தேதியில் ஆரம்பித்து, மூன்று நாட்களுக்குத் தாராவின் படை முடிந்தவரை வீராவேசமாக ஔரங்கசீப் படையோடு மோதிப் பார்த்தது. போரில் பெரும் தோல்வி அடைந்த தாரா, தன் இளைய மகன் ஸிஃபிர்ஷூகோ மற்றும் ஒரு டஜன் மெய்க்காவலர்களோடு மறுபடியும் தப்பி ஓடினார். குடும்பத்தை வேறொரு வழியில் வரச்செய்து, பிறகு சேர்ந்துகொள்வதாக ஏற்பாடு. அதற்கும் குறித்த நேரத்தில் தாராவால் வர முடிய வில்லை. கலவரப்பட்டுப்போன தாராவின் குடும்பம், தட்டுத்தடுமாறி அஹமதாபாத் வந்து சேர்ந்தது. பிறகு, ஒருவழியாக தாராவும் வந்து சேர, இவர்கள் யாரையும் உள்ளே விடாமல் கோட்டைக் கதவை மூடிக் கொண்டார் அஹமதாபாத் கவர்னர். ஔரங்கசீப்பிடம் பயம்தான் காரணம்!

பித்துப்பிடித்தவரைப்போல வெறித்த பார்வையுடன் தாரா ஷூகோ, அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்க... எந்நேரமும் ஔரங்கசீப் படை வீரர்கள் வந்து விடுவார்களோ என்று கதிகலங்கிப் போய் கோட்டைக்கு வெளியே பரிதாபமாக நின்று கொண்டு, கூச்சத்தைவிட்டு 'ஓ'வென தாராவின் மனைவியும் மற்ற ராஜவம்சப் பெண்மணிகளும் 'கதவுகளைத் திறக்கச் சொல்லி'க் கதறி அழுதுகொண்டிருந்ததாகக்

குறிப்பிடுகிறார் அந்தப் பரிதாபக் காட்சியை நேரில் பார்த்த பிரெஞ்சு நாட்டுப் பயணி பெர்னியர்.

ஔரங்கசீப் டெல்லிக்குத் திரும்பிவிட, பிரதான தளபதி ஜெய்சிங் தலைமையில் டெல்லிப்படை விடாமல் தாராவைத் துரத்தியது. குடிக்க நீர்கூட இல்லாமல் கட்ச் பாலைவனத்தை மறுபடியும் தாரா கடக்க வேண்டி வந்தது. ஔரங்கசீப்பிடம் இருந்த அச்சம் காரணமாக இந்தியாவில் எந்த வாயிற்கதவும் தாராவுக்குத் திறக்கப் படவில்லை!

பாரசீகம் போய்விடலாம் என்று நினைத்த தாராவின் குழு, போலன் கணவாய் அருகே சற்று ஓய்வெடுத்தது. பாவம், தாராவின் தலையில் மேலும் ஒரு இடி! அவரது அருமை மனைவி - சோதனையான நேரத்திலும் கணவனை நிழலாகத் தொடர்ந்த நாதிரா பேகத்துக்குக் கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. ஜன்னி பிறந்து... திடீரென்று இறந்துபோனார் நாதியா. மார்பில் அடித்துக் கொண்டு புரண்டு கதறினார் தாரா. ‘சுற்றிலும் உள்ள மாபெரும் மலைகளைப் போலத் துன்பங்கள் தாரா ஷூகோவைச் சூழ்ந்து நெருக்கின...!’ என்று இந்த இளவரசரின் பரிதாபநிலை வரலாற்றில் வர்ணிக்கப் படுகிறது.

போலன் கணவாய்க்குச் சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் இருந்த தாதார் என்ற ஊரைச் சேர்ந்த ஆப்கானியத் தலைவன் மாலிக் ஜீவான். அவன் உதவியை நாடினார் தாரா. மாலிக் ஜீவான் முன்பு ஒருமுறை ஏதோ ஒரு குற்றம் செய்துவிட, அவனுக்கு ஷாஜஹானால் மரண தண்டனை விதிக்கப் பட்டது. அப்போது குறுக்கிட்டு அவனைக் காப்பாற்றியவர் இளவரசர் தாரா ஷூகோ. அந்த நன்றியை அவன் மறந்திருக்க மாட்டான் என்று நினைத்தார் தாரா. ஆனால், அவனோ செய்நன்றி கொன்று தாராவையும் அவர் மகன் ஸிஃபிர் ஷூகோவையும் சிறைப்படுத்தி ஔரங்கசீப்பிடம் கொண்டு சேர்ப்பித்து விட்டான்!

விலங்குகளால் பிணைக்கப்பட்ட தாராவும் ஸிஃபிரும் (ஆகஸ்டு 23, 1659 அன்று) டெல்லிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

தாரா வந்து சேர்ந்த தகவல் சொல்லப் பட்டதும் ஔரங்கசீப் முகத்தில் இகழ்ச்சிப் புன்முறுவல் படர்ந்தது. “எனக்கு இவ்வளவு பிரச்னையேற்படுத்திய இந்தக் கைதியை முதலில் தெருத்தெருவாக ஊர்வலமாக விடுங்கள்!” என்று ஆணையிட்டார் பாதுஷா.

ஒரு குட்டி யானையைச் சேற்றில் புரள வைத்து, மேலே எந்த விரிப்போ, இருக்கையோ போடாமல், அதன்மேல் கிழிந்த உடைகளுடன் மோசமான நிலையில் இருந்த தாராவைச் சங்கிலிகளால் பிணைத்து ஏற்றி உட்கார வைத்தார்கள். கூடவே, வாளை உருவிய நிலையில் காவலுக்கு ஒரு வீரர், கொளுத்தும் ஆகஸ்ட் வெயிலில், நாள் முழுவதும் டெல்லி நகர வீதிகளில் தாராவைக் கொண்டு சென்றார்கள்.

பளீரென்று ஒளி வீசும் ஆபரணங்களுடன், பட்டு உடை அணிந்து, தகதகக்கும் தலைப் பாகையுடன் கம்பீரமான ஒரு தாராவைப் பார்த்தே டெல்லி மக்களுக்குப் பழக்கம்! இப்போதைய நிலையில் அவரைப் பார்த்த மக்கள் திகைத்துப் போனார்கள். தலையைச் சற்றும் நிமிர்த்திப் பார்க்காமல் துவண்டு போய், கசக்கி எறியப்பட்ட பூவைப்போல யானை மீது தாரா செல்ல, ஆயிரக்கணக்கில் கூடிவிட்ட டெல்லி மக்கள் அவருடைய கோலத்தைப் பார்த்து ‘ஓ’வென்று கதறினார்கள் என்கிறார் பெர்னியர் (தாரா கைது செய்யப் பட்டதிலிருந்து கூடவே பயணித்தார் இவர் என்பது குறிப்பிடத் தக்கது!). “எக்கச்சக்கமாகக் கூட்டம். எங்கு பார்த்தாலும் கீறிச்சிட்ட அழுகைக் குரல். பெண்களும் ஏன் குழந்தை

களும்கூட ‘ஓ’வென இளவரசரைப் பார்த்துக் கதறி அழுதார்கள். யானையைச் சுற்றி வாளேந்திய ஒரு வியூகமே அணிவகுத்துச் சென்றதால் யாராலும் தாராவுக்கு உதவிக் கரம் நீட்ட முடியவில்லை. மொத்தத்தில், ரொம்ப பரிதாபமான காட்சி!” என்கிறார் பெர்னியர்.

மறுநாள் மக்களின் கோபம், தாராவைக் காட்டிக் கொடுத்த மாலிக் ஜீவான் மீது திரும்பியது. குதிரையில் வந்த அவன்மீது மக்கள் கற்களை வீசினார்கள். தாராவுக்கு மக்களிடையே இருந்த இந்தச் செல்வாக்கைக் கண்டு சற்றே திகைத்துப்போன ஔரங்கசீப், உடனடியாக ‘ஒரு விசாரணை கமிஷன்’ நியமித்தார். மதத்துக்கும் நாட்டுக்கும் எதிராக தாரா செய்த துரோகத்தையெல்லாம் வரிசைப்படுத்தி ஒரு நீண்ட குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்டது. குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டுத் தாராவுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது!

ஆகஸ்டு 30-ம் தேதி அதிகாலை... ஔரங்கசீப் அனுப்பிய டெல்லி வீரர்கள் சிறைச்சாலைக்குள் நுழைந்தார்கள். தாராவை அணைத்துக்கொண்டு கதறிய அவருடைய இரண்டாவது மகன் ஸிஃபிர் பலவந்தமாகத் தந்தையிடமிருந்து பிரிக்கப் பட்டார்...

ஒரே வீச்சில் தாரா ஷூகோவின் தலை கரடுமுரடான அந்தச் கருங்கல் தரையில் உருண்டது.

‘தாராவின் கதை தீர்ந்துவிட்டது. ஆர்ப்பாட்டம் வேண்டாம்!’ என்று மக்களை எச்சரிக்க வேண்டி மறுபடியும் தாராவின் தலையற்ற உடலை யானை மீது ஏற்றி ஊர்வலமாக டெல்லிக்குக் கொண்டு சென்றார்கள். தலையை ஒரு தட்டில் வைத்து ஔரங்கசீப் முன் கொண்டு சென்று காட்டினார்கள். ‘ஔரங்கசீப் தன் வாளை உருவி, தட்டில் இருந்த தாராவின் தலையோடு ஓரிரு முறை விளையாடிவிட்டு, பிறகு தலையை ஷாஜஹானுக்குப் பரிசாக அனுப்பியதாகவும், அதைப் பார்த்தவுடன் முதியவர் மயக்கம் போட்டு விழுந்ததாகவும் கோபத்துடனும் திகைப்போடும் டெல்லி மக்கள் சற்று அதிகமாகக் கற்பனை செய்து கொண்டு பேசிக்கொண்டதாக வரலாற்றுத் தகவல்கள்!

அண்ணனின் தலை கொண்டுவரப்பட்ட போது ஔரங்கசீப் அதைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை என்பதே உண்மை. “உயிரோடு இருந்தபோதே இவன் முகத்தை நான் ஏறிட்டுப் பார்க்க விரும்பியதில்லை. இப்போது மட்டும் எதற்கு?” என்றாராம் ஔரங்கசீப்!

பிற்பாடு தாரா ஷூகோவின் தலையும் உடலும் ஹுமாயூன் கல்லறையில் ஒரு பகுதியில் அடக்கம் செய்யப்பட்டன.

தாராவின் மூத்த மகன் சுலைமான் ஷூகோவின் கதியும் பரிதாபம். கார்வார் மலையில் உள்ள ஒரு ராஜபுத்திர அரசரின் கோட்டையில் ஒளிந்துகொண்டிருந்த சுலைமானையும் அவர் மனைவியையும் சில உறவினர்களையும் அந்த இந்து அரசரின் மகன் ஔரங்கசீப்புக்குக் காட்டிக் கொடுத்தார். விலங்கிடப்பட்டு பாதுஷாமுன் கொண்டுவரப்பட்ட சுலைமான் ஷூகோ, அரியணையில் அமர்ந்திருந்த சித்தப்பாவிடம் “உடனடியாக எனக்கு மரண தண்டனை தந்துவிடுங்கள். ஓபியம் விதைகள் வேண்டாம்!” என்று கெஞ்சினார் (உணவுக்கு முன் ஓபியம் விதைகளைக் கைதிகளுக்கு அரைத்துத் தரும் ஒரு தண்டனை அப்போது உண்டு. இதன்மூலம் பார்வை மங்கி, இளைத்துப்போய் எலும்பும் தோலுமாகச் சித்தப்பிரமை பிடித்து நரகவேதனை ஏற்படும். வெகுநாட்களுக்குப் பிறகு மரணம் சம்பவிக்கும்...).

“கவலைப்பட வேண்டாம். அதெல்லாம் செய்ய மாட்டார்கள்!”

என்றார் ஔரங்கசீப். ஆனால், அந்த வாக்குறுதி காப்பாற்றப்பட வில்லை. அந்தத் துடிப்பான இளைஞருக்குத் தினமும் ஓபியம் தந்தார்கள். பலவந்தமாக விழுங்க வைத்தார்கள். இரண்டாண்டு காலம், எலும்புக்கூடாகப் போய் சித்ரவதை அனுபவித்த சுலைமானைக் கடைசியில் இரக்கப்பட்டு சில காவலாளிகள் மேலுலகம் அனுப்பி வைத்தனர்.

தப்பியது தாராவின் இளைய மகன் ஸிஃபிர் ஷூகோ மட்டுமே! பிற்பாடு மனமிரங்கி, அவரைத் தன் மகள்களில் ஒருவருக்குத் திருமணமும் செய்வித்தார் பாதுஷா!

ஔரங்கசீப்பின் இன்னொரு சகோதரர் முராத், குவாலியர் சிறைக்குக் கொண்டுவரப் பட்டிருந்தார். ‘குஜராத்தில் இருந்தபோது அமைச்சராக இருந்த என் தந்தை திவான் அலி நாகியைக் கொலை செய்தார் முராத்!’ என்று நாகியின் மகன் மூலம் ஒரு புகார் செய்விக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ‘கோர்ட்’ முராத்துக்கு மரண தண்டனை விதிக்க, 1661-டிசம்பர் 4-ம் தேதி அதிகாலை முராத் தலை துண்டிக்கப்பட்டது!

தன் மூத்த மகன் முகமதையும் விட்டுவைக்க வில்லை ஔரங்கசீப். மீர் ஜும்லாவுடன் தகராறு செய்துகொண்டு ஷூஜா பக்கம் கட்சி மாறிய முகமதைச் சிறைப்படுத்தி தந்தை ஔரங்கசீப் முன்னிலையில் நிறுத்தினார்கள். துளியும் யோசிக்காமல் மகனுக்கு ஆயுள் தண்டனை விதித்துச் சிறையில் தள்ளச் செய்தார் பாதுஷா!

ஆக்ரா கோட்டையில் எட்டு ஆண்டுகள் சிறைப்பட்டிருந்தார் ஷாஜஹான். எழுது வதற்கான உபகரணங்கள், மாற்று உடைகள் கூட அவருக்கு மறுக்கப்பட்டன. அவர் அணிந்திருந்த ஆபரணங்கள் அகற்றப்பட்டன. பிற்பாடு அங்கு அனுப்பப்பட்ட காவலாளி கள்கூட ஷாஜஹானை மரியாதைக் குறைவாக நடத்தினார்கள். பாலைவனச் சோலையாக இருந்தது, அவருடைய மூத்த மகள் ஜஹனாராதான். கடைசிவரை தந்தைக்கு மிகவும் நெருக்கமாக, அவரை விட்டுப் பிரியாமல் ஜஹனாரா பணிவிடை செய்ய... பெரும்பாலான பொழுதை ஜன்னல் வழியாகத் தொலைவில் தெரிந்த தாஜ்மஹாலையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கழித்தார் ஷாஜஹான். மிச்ச நேரம் புனித குர்-ஆன் படித்தார். ஔரங்கசீப் அனுமதித்தது அவ்வளவே!

கடைசிக் காலத்தில் மறுபடியும் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் விழுந்த ஷாஜஹானால் எழுந்து உட்கார முடிய வில்லை. அந்த நிலையிலும் தாஜ்மாஹாலைப் பார்க்க வசதியாக அவர் அருகே ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி வைக்கப்பட்டது.

எழுபத்துநாலாவது வயதில் - ஜனவரி 22, 1666 அன்று கைதியாகத் தந்தை இருந்த அறைக்குள் ஜஹனாரா பேகம் நுழைந்து பார்த்தபோது... ஷாஜஹானின் மூச்சு நின்றிருந்தது.

அப்போதும் ஷாஜஹானின் தலை, அருகில் இருந்த கண்ணாடியின் பக்கம் திரும்பியிருந்தது! தாஜ்மஹாலைப் பார்த்துக் கொண்டே உயிரை விட்டிருந்தார் பாதுஷா!

முழுக்க முழுக்க கறுப்புநிறச் சலவைக் கற்களைக் கொண்டு, தாஜ்மஹாலையே அச்சு வார்த்ததைப் போல யமுனை நதியின் மறுகரையில் தனக்காக ஒரு கல்லறை கட்டப்பட வேண்டும் என்று ஷாஜஹான் விரும்பியதாகவும் சிக்கனத்தைப் பெரிதும் மதித்த ஔரங்கசீப் “அந்த வீண் செலவு எல்லாம் தேவையில்லை... தாஜ்மஹாலிலேயே இடம் இருக்கிறது” என்று சுருக்கமாகச்

சொல்லிவிட்டதாகவும் ஒரு தகவல் உண்டு.



கைதியாக இருந்த நாட்களில் ஷாஜஹான் பார்வையில்...

அதன்படியே ஷாஜஹானின் உடல் நதியோரமாக தாஜ்மஹாலுக்குக் கொண்டு செல்லப்பட்டு, மும்தாஜ் கல்லறைக்குப் பக்கத்தில் ஓரமாக அடக்கம் செய்யப் பட்டது.

இன்றளவும் உலகப் புகழ் பெற்றுள்ளதாக ஒரே ஒரு தாஜ்மஹால்தான் கம்பீரமாக இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் ஔரங்கசீப்தான் என்றும் சொல்லலாம்.!

வெறுப்பும் எதிர்ப்பும்!

ஆக்ராவையும் டெல்லியையும் கைப்பற்றிய கையோடு, ஜூலை 1658-ல் அவசரமாக, எளிமையாக ஔரங்கசீப் முடிசூட்டிக்கொண்டது நினைவிருக்கும். ஓராண்டு கழித்து, தன்னை எதிர்த்த உடன் பிறப்புக்களெல்லாம் திட்டவட்டமாகப் பரலோகம் போய்விட்டதைத் தொடர்ந்து, இரண்டாவது முறையாக முடிசூட்டு விழா நடத்திக்கொண்டார் பாதுஷா. நல்ல நாளாக ஆஸ்தான ஜோதிடர்கள் தேர்ந்தெடுத்தது ஞாயிற்றுக்கிழமை, ஜூன் 5-ம் தேதி, வருடம் 1659.

முகூர்த்த நேரத்தின் உச்சக்கட்டத்தைக் குறிப்பாகப் பார்த்துச்சொல்ல வேண்டும் என்று ஆணையிட்டிருந்தார் ஔரங்கசீப். இதிலெல்லாம்

மிகுந்த நம்பிக்கையுண்டு மன்னருக்கு. ஆகவே, அரியணைக்கு அருகில் தொங்கவிடப்பட்டிருந்த ஒரு பட்டுத் திரைக்குப் பின் பாதுஷா தயார் நிலையில் நின்றுகொண்டிருக்க, குறித்த நேரம் வந்த விநாடியில் ஜோதிடர்கள் கோரஸாகக் குரலெழுப்பினார்கள். டக்கென்று வெளிப் பட்டு வந்து மயிலாசனத்தில் அமர்ந்தார் ஔரங்கசீப் - அப்துல் முஸா ஃபர் முஹி உத்தீன் முகமத் ஔரங்கசீப் பகதூர் ஆலம்கீர் பாதுஷா அல்காஜி என்னும் பட்டப் பெயருடன்!

அக்பருக்கு இணையாக ஐம்பது ஆண்டுகள் கோலோச்சிய ஔரங்கசீப் வித்தியாசமான, பிரச்னைக்குரிய சக்ரவர்த்தியாக வரலாற்றில் கருதப்படுபவர். நட்சத்திர அந்தஸ்தைப் பெறும் கடைசி மொகலாய பாதுஷாவும் இவரே. அக்பரைப் போலவே அஞ்சாநெஞ்சம் படைத்த மாவீரராகத் திகழ்ந்தார் ஔரங்கசீப். இருவருமே மகாபுத்திசாலிகள். ஒற்றுமைகள் இதோடு சரி. மற்றபடி இவரும் அவரும் நேர் இரு துருவங்களே! அடிப்படையில் இருவருக்கும் உள்ள வித்தியாசத்தைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில் - இந்தியா இஸ்லாமிய நாடு அல்ல. அப்படி மாற்றவும் முடியாது என்று தெளிவான ஒரு கருத்தைக் கொண்டவர் அக்பர். சர்வமதக் கோட்பாடுகளைச் சங்கமிக்கச் செய்து ‘தீன் - இலாஹி_ என்னும் புதிய மதத்தைத் துவக்கும் அளவுக்குப் போனவர் பெரியவர். ஔரங்கசீப்போ இந்தியாவைப் பிடிவாதத் துடன் ஒரு இஸ்லாமிய நாடாகவே நடத்தப் பார்த்தார். இதிலும் இருவருக்குமிடையே ஒரு ஒற்றுமை - ‘தீன் - இலாஹி’யும் ‘ரெண்டுங்கெட்டா’னாகப் போய்த் தோல்வி யடைந்தது. ஔரங்கசீப்பின் ‘இந்தியாவை இஸ்லாமிய நாடாக்கும்’ முயற்சியும் தோல்வி யடைந்தது மொகலாய ஆட்சியின் வீழ்ச்சிக்கே வழிவகுத்தது!

ஔரங்கசீப்பின் அணுகுமுறை பற்றிய காரண காரியங்களை விலாவாரியாக விவரிக்கும் புத்தகங்களையும் விவாதக் கட்டுரைகளையும் நூற்றுக்கணக்கில் அடுக்க முடியும்! மன்னரின் மனதுக்குள்ளேயெல்லாம் புகுந்து அவர் எண்ண ஓட்டங்களை அலசிப் பார்க்க முயன்ற வரலாற்று ஆசிரியர்களும் நிறையவே உண்டு. நம்மைப் பொறுத்த வரையில் ஔரங்கசீப் எடுத்த நடவடிக்கை களையும் அதன் விளைவுகளையும் மட்டும் எடுத்துக்கொண்டு எல்லோராலும் ஏக மனதாக ஒப்புக்கொள்ளப்பட்ட வரலாற்றுத் தகவல்களோடு நிறுத்திக்கொள்வோம்!

அக்டோபர் 24-ம் தேதி, ஆண்டு 1618-ல் ஷாஜஹானுக்கும் மும்தாஜுக்கும் ஆறாவது குழந்தையாகப் பிறந்தவர் ஔரங்கசீப். பதினைந்து வயதிலேயே இளவரசர் ஒரு சந்தர்ப்பத்தில் காட்டிய வீரம் பற்றி டெல்லி மக்கள் அப்போது பிரமிப்புடன் பேசிக் கொண்டனர்.

ஒரு சமயம், உப்பரிகையில் ஷாஜஹான் அமர்ந்திருக்க, மைதானத்தில் ‘யானைகள் சண்டை நிகழ்ச்சி’ ஒன்று நடந்தது. அப்போது யானை ஒன்று, காதருகே ஈட்டி பாய்ந்ததால் கோபம் கொண்டது. அந்தச் சமயம் பார்த்து மைதானத்தில் குறுக்கே இளவரசர் ஔரங்கசீப் போய் வைத்தார். வலி தாங்காமல் பிளிறிக்கொண்டு வெறியோடு திரும்பிய யானை, நேராக இளவரசரை நோக்கிப் பயங்கரமாக ஓடிவர, நேருக்கு நேர் யானையை எதிர்கொண்ட ஔரங்கசீப் துளியும் அச்சம் காட்டாமல், ஒரு அங்குலம் கூடப் பின்வாங்காமல் முன்னேறிச் சென்று கையிலிருந்த ஈட்டியை யானையின் நெற்றிப் பகுதியில் செலுத்தினார். கடைசி விநாடியில் பாய்ந்து வந்த மெய்க்காவலர்கள் இளவரசரை அலாக்காக அப்புறப்படுத்திக் காப்பாற்றியது வேறு விஷயம்.

கூடியிருந்த மக்கள் கூட்டம் பிரமித்துபோய் ஆரவாரிக்க, உப்பரிகையில் இருந்த ஷாஜஹான் மகனைக் கூப்பிட்டனுப்பி “என்ன இது விபரீத விளையாட்டு. ஏதாவது நடந்திருந்தால்...?” என்று கடிந்துகொண்டார் (மகனிடம் பாதுஷா ஆசையோடிருந்த காலம் அது!). பதினைந்து வயதான ஔரங்கசீப்பிடமிருந்து வந்த பதில் - “தந்தையே... எப்பேர்ப்பட்ட சக்ரவர்த்தியாக இருந்தாலும் மரணம் என்கிற திரை விழாமலா இருக்கப்போகிறது? என் வீரத்தைக் காட்டும்போது நான் மரணமடைந்தால் அது பெருமையான விஷயம்தானே...!” இதற்குப் பதிலளிக்க முடியாமல் திகைத்துப்போன சக்ரவர்த்தி ஷாஜஹான், அடுத்த ஆண்டே பத்தாயிரம் வீரர்கள் அடங்கிய குதிரைப் படைக்கு ஔரங்கசீப்பைத் தளபதியாக நியமித்துவிட்டார்.

எந்த நேரத்தில் தளபதியானாரோ, வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து ஔரங்கசீப் போர் உடை தரிக்க வேண்டி வந்தது. சகோதரர்களைக் காலி செய்ததோடு பிரச்னைகள் தீர்ந்துவிடவில்லை. வெளியில், நாலாபுறத்திலும் எதிர்ப்புகள் வெடித்தன. பல ஆண்டுகளாக அடக்கமாக இருந்த அஸ்ஸாமியர்கள், மொகலாய அரசரை எதிர்த்துக் கிளர்ச்சியில் இறங்கினார்கள். ஒரு காலத்தில் வடக்கு பர்மாவில் வசித்து பிற்பாடு 13-ம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த பிரம்மபுத்திரா நதியோரமாக நிரந்தரமாகத் தங்கியிருந்த எஹோம்ஸ் என்னும் இந்த அஸ்ஸாமிய மலைப்பிரிவினர், படை திரட்டிக்கொண்டு சென்று கௌஹாத்தி நகரை அதிரடியாகக் கைப் பற்றினர். வீராவேசமாகப் போர் புரியக்கூடிய இவர்களை அடக்க ஔரங்கசீப் போர்த் திறமை வாய்ந்த மீர்ஜும்லாவை அனுப்ப வேண்டி வந்தது. 30,000 காலாட்படையினர், 12,000 குதிரைப்படையினருடன் அஸ்ஸாமுக்குச் சென்ற மீர்ஜும்லா, அங்கே புரிந்த வீரப்போர் குறிப்பிடத்தக்கது. அஸ்ஸாமையும் (இன்றைய) பங்களாதேஷ் பகுதிகளையும் மறுபடியும் கைப்பற்றினார் மீர்ஜும்லா. அப்படியும் நிரந்தரமாக இந்தியாவுடன் அந்தப் பகுதியை டெல்லியால் தக்கவைத்துக்கொள்ள முடியாமல் போனது. மழைக்காலம் தொடங்க, புயலும் வெள்ளமும் (பங்களாதேஷ் அல்லவா!) சேர்ந்துகொள்ள, மொகலாயப்படை பட்டினியில் தவிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டிருந்த மீர்ஜும்லா தொடர்ந்து இரண்டாண்டு காலம் மிகுந்த சிரமங் களுக்கிடையே தனக்கிடப்பட்ட பணிகளை முடிந்தவரையிலும் தர முடியாமல் திடீரென்று ப்ளூரஸியாலும் ஜுரத்தாலும் படுக்கையில் வீழ்ந்து 1663-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதி மரணமடைந்தார்.



கோல்கொண்டாவில் ஒரு வியாபாரியாக வாழ்க்கையை ஆரம்பித்து செல்வாக்கு மிகுந்த சேனாதிபதியாக மொகலாய் ஆட்சியில் உயர்ந்த பதவிக்குப்போன மீர்ஜும்லாவின் மரணம், ஔரங்கசீப்புக்கு ஒரு பெரிய இழப்பு என்றே சொல்ல வேண்டும். மீர்ஜும்லாவிடம் ஔரங்கசீப்புக்குச் சற்று பயமே உண்டு என்று கூறப்படுகிறது. ஜும்லா இறந்த பிறகு அவர் மகளிடம் ஔரங்கசீப் வெளிப்படையாக "நீ உன் தந்தையை இழந்து தவிக்கிறாய். ஆபத்தான நண்பர் என்று நானே எச்சரிக்கை யாகவும் மரியாதையாகவும் நடத்திய ஒரு மாவீரரை இழந்து நிற்கிறேன்!" என்று குறிப்பிட்டார் ஔரங்கசீப்.

அஸ்ஸாமியர்கள் ஓட்டமெடுத் திருந்தார்களே தவிர, ஒழிக்கப்படவில்லை. மீர்ஜும்லா மரணத்துக்குப் பிறகு 1667-ம் ஆண்டு மறுபடியும் கௌஹாத்தி நகர் அவர்கள் வசம் போய்விட்டது! அதற்குள் வடக்கே ஆப்கானிஸ்தானியர்கள் டெல்லியை எதிர்த்துக் களத்தில் குதித்தார்கள். சில தோல்விகளுக்குப் பிறகு ஆப்கானிஸ்தானை வழிக்கு கொண்டுவந்தது மொகலாயப்படை. நிறையப் பணம், பதவிகள் தந்து ஆப்கானிய தளபதிகள் பலரை ஔரங்கசீப் கட்சி மாறச் செய்ததும் மொகலாய வெற்றிக்கு ஒரு காரணம் என்பதைச் சொல்ல வேண்டும்!

'ஆலம்கீர்' ஆக முடிசூட்டிக்கொண்டதைத் தொடர்ந்து இந்துக்களுக்கு எதிராக ஏராளமான சட்டங்களைக் கொண்டுவந்து, அக்பர் சிரமப்பட்டுச் சேகரித்து வைத்திருந்த இந்து மக்களின் பெருவாரியான ஆதரவை ஒட்டுமொத்தமாகக் குழிதோண்டிப் புதைத்து விபரீதத்துக்கு வழிவகுத்துக்கொண்டவர் ஔரங்கசீப்.

1659-ம் ஆண்டிலேயே 'இந்துக்கள் புதிதாக எந்தக் கோயிலும் கட்டக்கூடாது' என்று சட்டம் போட்டார் பாதுஷா. 'பழைய கோயில்களில் ரிப்பேர் வேலைகள் எதுவும் மேற்கொள்ளக்கூடாது' என்ற சட்டம் தொடர்ந்தது. 'கடந்த பத்து ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட

எல்லாக் கோயில்களும் இடிக்கப்பட வேண்டும்' என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. 'கவர்னர்கள் தங்கள் நிர்வாகத்தின்கீழ் உள்ள கோயில்களை இடித்துத் தள்ள வேண்டும்' என்று 1669-ம் ஆண்டு பொதுவான ஆணை வந்தது. காசி, மதுரா, சோம்நாத் கோயில்கள் இந்தச் சட்டத்துக்குப் பலியானவற்றில் முக்கியமானவை. தொடர்ந்து வங்காளம், உதய்ப்பூர், ஜோத்பூர், உஜ்ஜயினி, மகாராஷ்டிரம்... இப்படிப் பல பகுதிகளிலும் உள்ள கோயில்கள் தரைமட்டமாக்கப் பட்டன.

அடுத்த கட்டமாக - தீபாவளி, ஹோலி பண்டிகைகளுக்குத் தடை விதிக்கப்பட்டது. 'இனி இந்து பஞ்சாங்கம் தயாரிக்கக்கூடாது' என்று ஆணையிட்ட ஔரங்கசீப், அரசவைக்கு வரும் இந்துக்கள், தங்கள் வழக்கப்படி வணக்கம் கூறுவதற்குத் தடை விதித்தார்.

ஒரு காலத்தில் முஸ்லிம்கள் அல்லாதவர் களுக்கு விதிக்கப்பட்டிருந்த, பிற்பாடு அக்பரால் ஒழிக்கப்பட்ட 'ஜிஸியா' எனும் வரி மீண்டும் கொண்டுவரப்பட்டது. இந்துக்களுக்கு மட்டும் கஸ்டம்ஸ் வரி இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டது. முஸ்லிம்களைத் தவிர, 'ராஜபுத்திரர்கள் மட்டுமே பல்லக்கில் மற்றும் குதிரையில் செல்லலாம். வாள் வைத்துக்கொள்ளலாம்' என்று முழங்கினார் பாதுஷா. ஆங்காங்கே இந்துக்களை மதம் மாற்றும் முயற்சிகள் பெருமளவு எடுக்கப்பட்டன. மதம் மாறுபவர்களுக்குச் சலுகைகள் வழங்கப் பட்டன. பல்வேறு குற்றங்களுக்காக - சிறைத் தண்டனை பெற்றவர்களில் முஸ்லிமாக மாற ஒப்புக்கொண்டவர்களுக்குத் தண்டனை குறைக்கப்பட்டது!

'மனதளவில் இந்துக்களிடம் வெறுப்பை வளர்த்துக்கொண்டிருந்தவர் என்று ஔரங்கசீப்பைச் சொல்ல முடியாது. ஒரு தீவிரமான, உண்மையான முஸ்லிம் என்கிற முறையில் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பாதுஷா கண்டிப்பாக நடந்து கொண்டதன் விளைவுகள்தான் இத்தனையும்...' என்று ஒரு கோணத்திலிருந்து தர்க்கம் புரிபவர்களும் உண்டு.

'ஔரங்கசீப்பின் உடலில் ஓடும் ரத்தத்தை எடுத்துக்கொண்டால், அவரையே முழுமையான ஒரு முஸ்லிம் என்று கூற முடியாது! அவருடைய தந்தையான ஷாஜஹானின் தாய் ஒரு இந்துப் பெண். தாத்தா ஜஹாங்கீரின் தாயும் ஒரு இந்துப் பெண்தான்!

ஏன்? ஔரங்கசீப்பின் முக்கிய மனைவிகளில் ஒருவரான நவாப்பாய் (ஔரங்கசீப்புக்குப் பிறகு அரியணை ஏறிய பகதூர் ஷாவின் தாய்!) காஷ்மீர் இந்து அரசரின் மகள். ஔரங்கசீப்பின் ஒரே காதலி என்று கூறப்படும் தென்னிந்தியப் பெண் ஹீராபாய் ஒரு இந்துப் பெண்தான்!' என்பதும் ஔரங்கசீப் சார்பில் சிலர் முன்வைக்கும் வாதங்கள்!

ஆனால் ஒன்று! தன்னையும் சட்டங்களின் பிடியிலிருந்து விட்டு வைத்துக் கொள்ள வில்லை சக்கரவர்த்தி. ஷாஜஹான் பின் பற்றிய 'உப்பரிகையிலிருந்து மக்களுக்குத் தரிசனம் தரும் வழக்கத்தை' அடியோடு நிறுத்திக்கொண்ட பாதுஷா, தன்னைப்பற்றிக் கவிதைகள் புனைவது, ஓவியங்கள் வரைவது எல்லாவற்றுக்கும் தடைவிதித்தார். பொது இடங்களில் ஆபாசமாக பேசுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சிகளுக்கு மூடுவிழா நடத்தப்பட்டது. பெண்மைத்தனம் பொருந்திய ஆபரணங்கள் மற்றும் அலங்கார உடைகள் ஆண்கள் அணியக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது (மாக்ஸி போல ஒரு பட்டாடை உடுத்திக்கொண்டு வந்து சக்ரவர்த்தியின் கவனத்தைக் கவர்ந்து தொலைத்தார் ஒரு பிரபு. உடனே நடு தர்பாரில் கத்திரிக்கோல் கொண்டுவரப்பட்டு,

வந்தவருடைய நீண்ட அங்கி பதவிசாக, குட்டையாகக் கத்தரிக்கப்பட்டது!). கஞ்சா உபயோகிப்பது, பொது இடங்களில் மது அருந்துவது போன்ற பழக்கங்களைப் பெரும் குற்றங்களாக அறிவித்தார் அரசர். மொத்தத்தில், உச்சக்கட்ட ஆசாரத்தோடு ஆட்சி நடத்தி, குடிமக்கள் பலரின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டார் 'ஆலம்கீர்' என்பதில் சந்தேகமில்லை.

பிறகென்ன? தொடர்ந்து கிளர்ச்சிகள் வெடித்தன. 'ஜிஸியா' வரியை எதிர்த்து விவசாயிகளும் பொதுமக்களும் டெல்லியில் பேரணி நடத்தினார்கள். 'ஒரு மணி நேரம் தருகிறேன். கலைந்து போய்விடுங்கள்...' என்று எச்சரித்தார் பாதுஷா. அதைத் தொடர்ந்து பேரணிக்குள் யானைகள் ஏவப் பட்டன. பலர் கொல்லப்பட்டனர்.

டெல்லிக்குத் தென்மேற்கே எழுபத்தைந்து மைல் தொலைவில் வசித்துவந்த சத்நாமிக்கள் என்ற இந்துப் பிரிவினர் பொறுமையிழந்து, நேரடியாக மொகலாயப்படை வீரர்களோடு மோதினார்கள். மழுங்கச் சிரைக்கப்பட்ட தலைகளோடு துறவிகளாகவும் வாழ்ந்து கொண்டு விவசாயத்திலும் ஈடுபட்டு வந்த இவர்களின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் டெல்லிப்படை திணறியது. எதிர்பாராத வகையில் பிரமாதமாகச் சண்டையிட்ட சத்நாமிக்கள், இருமுறை மொகலாயப்படையைத் தோற்கடித்தனர். டெல்லி நகரின் எல்லை வரை சத்நாமிக்களின் படை முன்னேறி வந்துவிட, "இவர்கள் போரில் மந்திர தந்திரங்களை உபயோகிக் கிறார்கள். ஈட்டிகள் பாய்ந்தாலும் இந்த மனிதர்கள் இறப்பதில்லை. திடீரென்று இறக்கைகள் வைத்துக்கொண்டு பறந்தவாறு போர் புரிகிறார்கள். ஒன்றுமே புரியவில்லை!" என்று பாதுஷாவிடம் கலவரத்துடன் தளபதிகள் சொல்ல, "என்ன இது கதை? உங்களுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது?" என்று எரிச்சலைடந்த ஔரங்கசீப், ஒரு செமத்தியான பெரும்படையை அனுப்பி சத்நாமிப் புரட்சியை முரட்டுத்தனமாக அடக்க வேண்டி வந்தது. ஆயிரக்கணக்கான சத்நாமிக்களின் தலைகள் தரையில் உருண்டன.

இதேசமயம், மதுராவில் வசித்துவந்த 'ஜாட்' இனத்து மக்கள் டெல்லி ஆட்சிக்கு எதிராகப் போர்க்கொடி ஏற்றினார்கள். உத்தவ் பைராகி என்கிற துறவியைச் சிறைப் படுத்தினார், அப்துல் முகாரம் எனும் அதிகாரி. கோபம் கொண்ட பைராகியின் சிஷ்யர்கள், அந்த அதிகாரியைப் படுகொலை செய்ய.. துறவி உட்பட சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் உடனடியாக மரண தண்டனை விதித்தார் சக்ரவர்த்தி. அதிலிருந்து கொரில்லாப் போரில் இறங்கிவிட்ட 'ஜாட்' இன மக்களை ஔரங்கசீப் கடைசிவரை முழுமையாக வெற்றி கொள்ள முடியவில்லை!

ஆக மொத்தத்தில், இந்தியச் சூழ்நிலைக்குச் சற்றும் ஒத்துவராத ஒரு எதேச்சாதிகாரத்தைத் தேவையில்லாமல் ஔரங்கசீப் கட்டவிழ்த்து விட, அவரை எதிர்கொள்ளக் கிளம்பிய புரட்சிக்கனல், காட்டுத்தீயாகப் பரவியது. அக்பர் காலத்திலிருந்து உறையில் போட்டிருந்த வாட்களைக் கடைசியில் சீக்கியர்களும் ராஜபுத்திரர்களும் உயர்த்திப் பிடிக்க நேர்ந்தது.

இதெல்லாம் போதாதென்று, மராட்டியத் திலிருந்து சிவாஜி எனும் இளைஞரின் தலைமையில் ஒருங்கிணைந்து பாய்ந்த ஓர் அதிரடிப்படை மொகலாய சாம்ராஜ்யத்துக்குப் பெரும் தலைவலியாகப் போனது!

சீக்கிய சிங்கங்கள்!

திருமண விஷயத்தில்கூட, வரையறுக்கப் பட்ட இஸ்லாமியக் கோட்பாட்டை மீறவில்லை ஔரங்கசீப். பாதுஷாவுக்கு வாழ்க்கைப்பட்டவர்கள் நான்கு பேர் - தில்ரஸ் பானு பேகம், நவாப்பாய், ஔரங்கபாதி மஹல், உதய்பூரி மஹல். இவர்களுக்குப் பிறந்த மொத்தக் குழந்தைகள் பத்து பேர். ஐந்து மகன்கள், ஐந்து பெண்கள். எண்ணிக்கையிலும்கூட மன்னர் கச்சிதம்!

ஆனால், கட்டுப்பாடுகள் மிகுந்த ஔரங்கசீப் வாழ்க்கையிலும் ஒரு குறுகிய காலக் காதல் புயல் வீசிய நிகழ்ச்சி உண்டு. ஆண்டு 1653-ல் தட்சிணப் பிரதேசத்தில் வைஸ்ராயாக இருந்த சமயம், தபதி நதிக் கரையோரம் இருந்த பர்ஹான்பூருக்கு விஜயம் செய்தார் இளவரசர் ஔரங்கசீப். மொகலாய நிர்வாகத்தில் இருந்த பர்ஹான்பூரின் கவர்னர் மீர் கலீல், ஷாஜஹானின் சகோதரியின் கணவர். ஒரு மாலை நேரம் அரண்மனைக்கு அருகே இருந்த மான் பூங்காவில் அத்தையைச் சந்திக்கச் சென்றார் ஔரங்கசீப். அந்தப் புரத்துப் பெண்கள் பலர் அங்கே ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர்தான் ஹீராபாய் - இந்துப் பெண். மற்ற சில பாதுஷாக்களைப் போல அழகிய பெண்களைப் பார்த்தவுடன் கிறங்கிப்போகிற வகையறா இல்லை ஔரங்கசீப். ஆனால், ஹீராபாய் விஷயத்தில் அவர் தோற்றுப்போக நேர்ந்தது. அத்தையோடு மருமகன் பேசிக்கொண்டிருந்தபோது அங்கே வந்த ஹீராபாய், அருகே இருந்த மாமரத்தில் சற்றே கைக்கெட்டும் தூரத்தில் இருந்த கனி ஒன்றைப் பறிப்பதற்காக, பட்டுப்பாவடை குதியாட்டம் போட ஒய்யாரமாகத் தாவிக் குதித்தாள். அந்தப் பெண்ணழகின் முன்னழகும் பின்னழகும் இளவரசரின் இதயத்தில் ஓர் இன்ப பூகம்பத்தை ஏற்படுத்தியது. ஒரு வியப்பான விஷயம் என்னவென்றால் இந்தப் புதிய அனுபவத்தால் உடல்நிலையே சில விநாடிகள் பாதிக்கப்பட்டு மயங்கி விழுந்துவிட்டார் ஔரங்கசீப்!

இது கண்டு எல்லோரும் பதறிப் போனார்கள். பிறகு ஒரு மாதிரி சுதாரித்து எழுந்த இளவரசரிடம் அவர் அத்தை "என்ன உடம்புக்கு.. ஏதாவது சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யட்டுமா?" என்று கவலையோடும் பரிவோடும் விசாரிக்க, 'ஆம்!' என்று மெள்ளத் தலையசைத்த ஔரங்கசீப், தன் நோய்க்கு மருந்தான - பேரழகி ஹீராபாயைச் சுட்டிக் காட்டினார். சக்ரவர்த்தி ஷாஜஹானின் மகன் விருப்பத்தை யாரால் மறுக்க முடியும்?

இந்தக் காதல் (நிஜ) மயக்கம் நிகழ்ந்தபோது ஔரங்கசீப்புக்கு வயது 35. ஏற்கெனவே ஆறு குழந்தைகளுக்கு அப்பா!

ஸயினாபதி என்று அழைக்கப்பட்ட ஹீராபாய் பேரழகி மட்டுமல்ல - இசையிலும் நடனத்திலும் தேர்ந்தவள். சில காலம் இந்தப் பேரழகியிடம் வசமிழந்து மயங்கிக்கிடந்தார் ஔரங்கசீப் என்றே சொல்ல வேண்டும். இந்த நெருக்கத்தின்போதுதான் ஒருமுறை ஹீராபாய் (முன்பு ஒரு அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தோம்!) ஒயின் கோப்பையை இளவரசரிடம் நீட்டிய நிகழ்ச்சி நடந்தது. மதுவை அதுவரை தொட்டிராத ஔரங்கசீப் காதலுக்குத் தலைவணங்கி, மிகுந்த தர்மசங்கடத்துடன் ஒயின் கோப்பையைத் தன் உதடுகளுக்கு அருகே எடுத்துச் சென்ற போது, அதைத் தட்டியும்விட்ட ஹீராபாய் "என் மீது தாங்கள் கொண்டுள்ள அன்பைச் சோதித்துப்பார்க்கவே மதுவை நீட்டினேன். இதுவே போதும். இந்தக் கேவலமான பானத்தை ஒழுக்கத்தில் சிறந்த தாங்கள் குடிக்க வேண்டிய அவசியமில்லை!" என்றாள் உணர்ச்சிகரமாக!

கொடுமை! இளவரசர் ஔரங்கசீப்புடன் பழக ஆரம்பித்த ஓரிரு ஆண்டுகளில், திடீரென்று நோய்வாய்ப்பட்டு அல்பாயுசில் இறந்து போனாள் ஹீராபாய்.

மனம் கவர்ந்த மங்கை தன் மடியில் தலை வைத்தவாறு மடிந்து போனதைக் கண்ணெதிரே கண்ட ஔரங்கசீப், பைத்தியம் பிடித்தவரைப் போல ஆனார். காதலி இறந்த நாள் முழுவதும் கதறி அரற்றிய இளவரசர், வேதனையை மறப்பதற்காகக் குதிரையேறி காட்டுக்குள் வேட்டையாடப் போனார். அன்று வேட்டையில் அவர் காட்டிய ஆவேசம் கண்டு விலங்குகள் கதிகலங்கிச் சிதறி ஓடியதாகக் கூறப்படுகிறது. ஔரங்கசீப் காட்டிய வெறி கண்டு திகைத்துப்போன தளபதி மீர் அஸ்காரி "இளவரசே... நிதானத் துடன் இருக்கும்போதுதான் வேட்டையாடச் செல்ல வேண்டும்... தாங்கள் தற்போது இருக்கும் நிலையில் நாம் அரண்மனைக்குத் திரும்பிப் போவதே நல்லது...!" என்று சொல்லியும் இளவரசர் கேட்பதாக இல்லை.

"நான் என்ன செய்வேன்... அரண் மனைக்குச் சென்றால் துக்கம் தாளாமல் என் இதயம் வெடித்துவிடும் போலிருக்கிறதே..!" என்று புலம்பினார் ஔரங்கசீப்.

தன்னுடைய காதல் அனுபவம் பற்றி பிற்பாடு வயதான காலத்தில் குறிப்பிட்ட ஆலம்கீர் "அவள் இறந்தது நல்லதுக்குத்தான். எனக்கு எத்தனையோ கடமைகள் காத்திருந்தபோது காதலில் நான் சிக்கிப் பாதை மாறக்கூடாது என்பதற்காக இறைவனே அவளை அழைத்துக் கொண்டார் என்றே நான் நினைக்கிறேன்...!" என்று பெருமூச்சுடன் கூறியது உண்டு!

சீக்கியர்களையும் ராஜபுத்திரர்களையும் ஆலம்கீர் பகைத்துக்கொண்டது பற்றி முன்பே குறிப்பிட்டோம் அல்லவா? இந்த இரண்டு மோதல்களுமே இந்திய வரலாற்றில் முக்கியமான திருப்பங்களாக அமைந்தன...!

சீக்கிய மதம், பாபர் காலத்தில் வாழ்ந்த குருநானக் ஸ்தாபித்த மென்மையான மதம். இதன் இரண்டாவது குருவான அங்கத் என்பவர் ஹுமாயூன் காலத்தில் வாழ்ந்தவர். ஜஹாங்கீர் காலத்திலிருந்துதான் சிக்கல் ஆரம்பித்தது! குஸ்ரூவுக்கு உதவி செய்ததற்காக ஐந்தாவது குரு அர்ஜுன் என்பவருக்கு ஜஹாங்கீர் மரணதண்டனை வழங்கியது நினைவிருக்கும். அவருக்குப் பிறகு மதத் தலைவராகப் பதவியேற்ற ஹர்கோவிந்த் பன்னிரண்டு ஆண்டு காலம் குவாலியர் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். முந்தைய குரு அர்ஜுன் கட்டவேண்டிய அபராதத் தொகையைச் செலுத்த மறுத்ததால் இந்தத் தண்டனை!

குரு ஹர்கோவிந்த் விடுதலை ஆன பிறகு, ஷாஜஹான் காலத்தில் சீக்கியப் படைக்கும் மொகலாயப்படைக்கும் நேரடியாகவே ஒரு யுத்தம் பஞ்சாப்பில், அமிர்தசரஸ் அருகே நடந்ததுண்டு. அப்போதே ஏகமாக வீரம் காட்டிய சீக்கியர்கள், ஷாஜஹான் படையைத் துரத்தியடித்தார்கள். பிறகு மொகலாயர்களின் தொடர்ந்த தாக்குதல்களைத் தாங்க முடியாமல் காஷ்மீரில் அடைக்கலம் புகுந்த குரு ஹர்கோவிந்த் அங்கே 1645-ம் ஆண்டில் காலமானார். ஏழாவது குருவான ஹர்ராய் என்பவரிடம் தாரா ஷூகோ அதீத மதிப்பு வைத்திருந்தார். பலமுறை தாரா அந்த மகானைச் சந்தித்து ஆசி பெற்றதுண்டு.

ஔரங்கசீப் பட்டத்துக்கு வந்து கையோடு தாரா - குரு ஹர்ராய் நட்பு பற்றிக் கேள்விப் பட்டு கோபமடைந்து "டெல்லி வந்து தன்னை ஹர்ராய்

சந்திக்க வேண்டும்” என்று ஆணையிட்டார். ஹர்ராய் தன் மகன் ராம்ராய் என்பவரை டெல்லிக்கு அனுப்ப, ஔரங்கசீப் விரித்த வலையில் விழுந்து பாதுஷா பக்கம் மகன் சாய்ந்துவிடவே, வருத்தமடைந்த ஹர்ராய் தன் இரண்டாவது மகன் ஹர்கிஷன் என்பவரை தன் வாரிசாக, அடுத்த சீக்கிய மதத் தலைவராக அறிவித்தார். ஹர்கிஷன் இளம் வயதிலேயே இறந்துவிடவே, ஹர்கோவிந்த் (குவாலியர் சிறையில் இருந்தவர்) மகனான தெஹ் பகதூர் சீக்கிய மதத் தலைவரானார். புகழ்பெற்ற இந்தக் குருவின்கீழ் ஏராளமான இளைஞர்கள் சீக்கிய மதத்தைத் தழுவினார்கள்.

பொற்கோயில் - அமிர்தசரஸ்

மொகலாய ஆட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்ட குற்றத்துக்காக குரு தெஹ் பகதூர் கைது செய்யப்பட்டு டெல்லி தர்பாருக்குக் கொண்டு வரப்பட்டார். ஆத்திரத்தின் உச்சியில் இருந்த ஆலம்கீர் “கடைசியாக ஒரு வாய்ப்புத் தருகிறேன். மதம் மாறுங்கள். இல்லையெனில் மரணத்தைத் தழுவுங்கள்!” என்று அவரை எச்சரிக்க, “நான் தேர்ந்தெடுப்பது மரணத்தை!” என்று குரு தெஹ் பகதூரிடமிருந்து பதில் வந்தது. ஐந்து நாட்கள் சித்ரவதைக்குப் பிறகு அவரை மண்ணில் புதைத்து யானையின் காலால் இடறச் செய்தார் ஔரங்கசீப். இந்தக் கொடுமையான நிகழ்ச்சி, சீக்கிய மக்களின் ஒட்டுமொத்தமான கோபத்தையும் எதிர்ப்பையும் ஔரங்கசீப்புக்குப் பெற்றுத் தந்துவிட்டது. உயிர்த் தியாகம் செய்வதற்கு முன் “விரைவில் உங்கள் சாம்ராஜ்யம் அழியப்போகிறது. உங்களை ஒழித்துக்கட்டப் போகிறவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்து கொண்டிருக்கிறார்கள்!” என்று குரு தெஹ் பகதூர் ஆவேசமாகக் குரல் கொடுத்ததாகத் தகவல் உண்டு!

தெஹ் பகதூர் டெல்லிக்குக் கிளம்புவதற்கு முன்பே தன் மகன் கோவிந்த்சிங்கை அடுத்த குருவாக நியமித்து “நான் என் மரணத்தைச் சந்திக்கச் சென்று கொண்டிருக்கிறேன். உன்னால் முடிந்தவரை சீக்கிய மதத்தை வீரம் மிகுந்த மதமாக உருவாக்கு!” என்று சொல்லிவிட்டே விடை பெற்றுக்கொண்டார். அப்போது கோவிந்த்சிங்குக்கு வயது பதினைந்து.

முதல் பாதுஷாவான பாபர் காலத்தில் குருநானக் என்று தொடங்கி கடைசி சக்ரவர்த்தியான ஔரங்கசீப் ஆட்சியில் குரு கோவிந்த்சிங் வரை பத்து குருக்கள் மதத் தலைவர்களாக அமைந்து ஒரு உன்னதமான புதிய மதத்தை ஸ்தாபித்து வெற்றிகரமாக வளர்த்துவிட்டுப் போனது சற்று ஆச்சரியமான விஷயம்தான்!

மொகலாயர்களுக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கியவர் கடைசி குருவான கோவிந்த்சிங். 'நரிகளைப் புலிகளாகவும் குருவிகளைப் பருந்துகளாகவும் மாற்றக்கூடிய சக்தி பெற்றவர்' என்று புகழப்படுகிறவர் இந்த மகான். ஜாதி வேறுபாடுகளையெல்லாம் அறவே ஒதுக்கித்தள்ளி எல்லாப் பிரிவு இளைஞர்களையும் வசீகரித்து ஆட் கொண்டவர் அவர், "இனி ஜாதிகள் கிடையாது. சிங்கங்கள் என்ற ஒரே பிரிவுதான் உண்டு!" என்று முழங்கினார் அவர்.

"பொற்கோவில் தடாகத்து நீரை தலையில் தெளித்து ஞானஸ்நானம் செய்யும்போதுகூட இனி நாம் குறுவாளையே பயன்படுத்த வேண்டும்" என்று அறிவித்தார் இந்தக் குரு. இன்றுவரை தொடரும் இந்தச் சம்பிரதாயத்தை ஆரம்பித்து வைத்தவர் இவர்தான். சீக்கியர்கள் 'சிங்' (சிங்கம்) என்று அழைக்கப் பட ஆரம்பித்ததும் இவர் காலத்தில்தான்! குரு கோவிந்த்சிங்கின் கீழ் 80,000 பேர் அடங்கிய வீராவேசமான சீக்கியப்படை கிளர்ந்தெழுந்து மொகலாயர்களை எதிர்த்து நின்றது. ஔரங்கசீப்பின் படையோடு மோதியதில் இந்த மகானின் இரு மகன்கள் கொல்லப்பட்டனர். மற்ற இரு மகன்கள் சிறைப்பட்டு மதம் மாற மறுத்து மரணத்தைத் தழுவினார்கள்.

மகன்களைப் பலிகொடுத்த குரு கோவிந்த் சிங், சலனமில்லாமல் சாணக்கியர் பாணியில் ஒரு சிறு செடியை வேரோடு பறித்து எறிந்து விட்டு "என் மகன்களைப் போல பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் தோன்றுவார்கள். இந்தச் செடியைப் போல வேரோடு மொகலாயர்கள் அழிந்து போவார்கள். இது உறுதி!" என்று சபதம் செய்தார்.

குரு கோவிந்த்சிங் தலைமையில் கொந்தளித்த புரட்சியைக் கண்டு கலவரமும் கோபமும் கொண்ட ஔரங்கசீப் 'டெல்லிக்கு வந்து தன்னைப் பார்க்கச் சொல்லி' ஒரு கடிதம் அனுப்பினார். குரு கோவிந்த் சிங்கிடமிருந்து பதிலுக்கு ஒரு கடிதம் பாதுஷாவுக்குப் போனது -

'தங்கள் மீது எனக்குத் துளியும் நம்பிக்கை கிடையாது. ராஜதந்திரம், பேச்சுவார்த்தை களையெல்லாம் தாண்டி நிலைமை கைமீறிப் போய்விட்டது என்பதைத் தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். வேண்டுமென்றால் நீங்கள் இங்கு வந்து என்னைத் தாராளமாகச் சந்திக்கலாம். உங்கள் உயிருக்கு நான் உத்தரவாதம் தருகிறேன். என் வீரர்கள் உங்களுக்குப் பாதுகாப்புத் தருவார்கள். நான் கடவுளின் எளிமையான அடிமை. அவர் எனக்கிட்ட பணியை நிறைவேற்றுவது ஒன்றே என் லட்சியம். எல்லோரையும் மிஞ்சிய சக்ரவர்த்தி என்று தங்களைப் பற்றித் தவறாக நினைத்துக்கொண்டிருக் கிறீர்கள். எல்லா உலகங்களையும் ஆளும் இறைவன் ஒருவனே உண்மையான சக்ரவர்த்தி. மற்றவர்களைத் துன்புறுத்த வேண்டும் என்று கடவுள் தங்களுக்குக் கட்டளையிட்டாரா என்ன? அதிகாரம் இருக்கிறது என்பதற்காக அப்பாவிகளைச் சிறைப்பிடித்துத் தலையை வெட்டிச் சாய்ப்பது எந்தவகையில் வீரம்? உங்களை எதிர்க்கப் பிறந்தவன் நான். தங்களோடு ஒருபோதும் ஒரே பாதையில் பயணிப்பேன் என்று கனவுக்கூடக் காணாதீர்கள்.

வாழ்க்கை என்று விதிக்கப்பட்ட இந்த யாத்திரை கொஞ்ச காலத்துக்குத்தான் நிகழும். இன்றோ, நாளையோ எல்லோரும் ஒரு சமயம் விடைபெற்றேயாக வேண்டும். இதெல்லாம் புரியாமல் தாங்கள் நடந்து கொள்வதைப் பார்த்தால் 'ஐயோ, பாவம்!' என்றுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது. ஒருமுறை அல்ல நூறு முறை! இனியாவது, தங்களுக்குப் பலம் இருக்கிறது என்பதற்காக மற்றவர்களைத் துன்புறுத்தாதீர்கள். உங்கள் சாம்ராஜ்யத்துக்கு நீங்களே குழிதோண்டிக் கொள்ளாதீர்கள்...'

- வந்த இந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு கோபத்தில் நிலைகொள்ளாமல் தவித்த பாதுஷாவால் கடைசிவரை குரு கோவிந்த் சிங்கை வெற்றிகொள்ள முடியவில்லை.

பிற்பாடு பாதுஷாவின் மகன்கள் அரியணையைக் கைப்பற்ற மோதிக்கொண்ட போது ஔரங்கசீப் மகன் பகதூர்ஷாவுடன் நட்பாக இருந்த குரு கோவிந்த்சிங், அவருக்குச் சில ஆயிரம் பேர் கொண்ட சீக்கியக் குதிரைப் படையை அனுப்பி உதவினார். முடிசூட்டிக்கொண்ட பகதூர்ஷா அந்த நன்றியை மறக்கவில்லை. குரு கோவிந்த் சிங்கை மிகுந்த வணக்கத்துடன் நடத்தி மரியாதையுடன் உறவு கொண்டிருந்தார் புதிய பாதுஷா.

ஔரங்கசீப் இறந்த பிறகு, சில ஆண்டுகள் வாழ்ந்த குரு கோவிந்த்சிங் 1708-ம் ஆண்டு தட்சிணப் பிரதேசத்தில் ஹைதராபாத்துக்கு 150 மைல் தொலைவில் கோதாவரி நதி ஓரமாகப் பயணம் வந்தபோது, ஏதோ பழைய வன்மம் காரணமாக ஒரு ஆப்கானிய வீரன் அந்த மகானைக் கொலை செய்தான். சீக்கியர்களின் கடைசி குரு இவரே.

அன்றிலிருந்து சீக்கிய குருக்களின் அருள் உரைகள் அடங்கிய கிரந்த்சாஹிப் சீக்கியர் களுக்குக் குருவாக இன்றளவும் வழிகாட்டிக்

கொண்டிருக்கிறது!

நாலாவது சீக்கிய குருவான ராம்தாஸ் காலத்தில், அழகான சூழ்நிலையில் அமிர்தசரஸ் ஊரில் அமைந்துள்ள ஒரு ஏரியையும் அதையொட்டிய நிலத்தையும் சீக்கியர்களுக்கு அன்பளிப்பாகத் தந்தார் ஒரு மன்னர். அங்கே கட்டப்பட்ட கோயில் தான் புனிதத் தலமாக விளங்கும் பொற் கோயில். அதற்கான நிலத்தையும் ஏரியையும் தந்து உதவிய மன்னரின் பெயரைக் குறிப்பிட மறந்து விட்டோமே... வேறு யார்? அக்பர் பாதுஷாதான்!

‘விடாக்கண்டர்’ துர்காதாஸ்!

போர்த் தந்திரத்தைப் பொறுத்தவரையில் எவரையும் மிஞ்சக்கூடிய அளவுக்குத் திறமை பெற்றிருந்தவர் ஔரங்கசீப். அரசியல் சதுரங்கத்தில் காய்களை வெற்றிகரமாக நகர்த்தத் தேவையான சாணக்கியத்தனமும் பாதுஷாவிடம் நிறையவே இருந்தது. ஒரு மிகச் சிறந்த பேரரசருக்குப் பெருமை சேர்க்கக்கூடிய தொலைநோக்குதான் அவரிடம் இல்லாமல் போனது.

அதற்கேற்ப, நியாயமான ஒரு காரணம் எதுவும் இல்லாமல், அமைதியாக இருந்த ராஜபுத்திரத் தேன்கூட்டில் வாளைப் பாய்ச்சினார் ஔரங்கசீப்!

அக்பர் காலத்தில் - நட்பு உணர்வோடு அரவணைக்கப்பட்ட ராஜபுத்திரர்கள், மொகலாய ஆட்சியில் செல்வாக்கோடுகூடிய பெரும் பதவிகளில் இருந்து வந்தார்கள். டெல்லியில் விசுவாசமாகப் பணியாற்றிய ராஜபுத்திர அமைச்சர்களும் தளபதிகளும் இதில் அடக்கம். மார்வார் மன்னரும் (ஜோத்பூர்) மேவார் மன்னரும் (சித்தூர்) டெல்லி ஆளுகைக்கு உட்பட்டிருந்தும் கூட சுயாட்சியுடன் செயல்பட்டனர். இந்த மன்னர்கள் அக்பர், ஜஹாங்கீர் மற்றும் ஷாஜஹான் ஆட்சிக் காலங்களில் கௌரவத்தோடு நடத்தப்பட்டனர். அனைத்தையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கினார் ஔரங்கசீப் பாதுஷா!

பலமுறை கட்சி மாறிக் கடைசியில் தாரா ஷூகோ பக்கம் போன ஜோத்பூர் மன்னர் ஜஸ்வந்த்சிங்கை ஔரங்கசீப் தன் பக்கம் இழுத்துக்கொண்டது நினைவிருக்கிறதா? தற்போது, நினைத்த மாத்திரத்தில் கட்சி மாறும் சில அரசியல்வாதிகளிடம் மற்றபடி மேன்மையான பல திறமைகளும் இருப்பது போல ஜஸ்வந்த்சிங்கும் திறமையும் வீரமும் மிகுந்த மன்னர்தான். மொகலாய ஆட்சியின் வீழ்ச்சிக்கு வழிகாணும் நோக்கத்தோடு இந்த மன்னர் முன்னொரு சமயம் அங்குமிங்கும் இடம் மாறினாலும் பிற்பாடு ஔரங்கசீப்பின் கீழ் மொகலாய ராணுவத்தின் பிரதான தளபதிகளில் ஒருவராக விசுவாசமாகப் பணியாற்றி வந்தார். ஆனால், சக்ரவர்த்திக்கு மனதளவில் ஜஸ்வந்த்சிங்கின் விசுவாசம் பற்றிச் சந்தேகம் தொடர்ந்து இருந்து வந்தது. வேண்டுமென்றே இந்த ராஜபுத்திர வீரரை ஒரு படைக்குத் தலைமையேற்கச் சொல்லி ஆப்கானிஸ்தானம் அனுப்பினார் பாதுஷா. ஆப்கானியர்களின் எதிர்ப்பு இன்னமும் நீடித்ததால், அவர்களை அடக்கினாலும் லாபம், போரில் ஜஸ்வந்த்சிங் கொல்லப் பட்டாலும் லாபம்தான் என்று கணக்குப் போட்டார் ஔரங்கசீப். அவர் போட்ட கணக்குப் பலித்தது. பெஷாவர் அருகே, கைபர் கணவாயை ஒட்டி 1678-ம் ஆண்டில் நடந்த ஒரு போரில் தன் இரு மகன்களை இழந்த ஜஸ்வந்த்சிங் மனம் உடைந்து போனார். தொடர்ந்து, பல போர்களில்

பங்கேற்றதால் அவர் உடல்நிலையும் பாதிக்கப்பட்டது. அதே ஆண்டு டிசம்பர் 10-ம் தேதி இரவு கூடாரத்தில் வந்து படுத்த ஜஸ்வந்த்சிங் மாரடைப்பில் காலமானார்.



ஜோத்பூர் கோட்டை



உதய்பூர் அரண்மனை

சித்தூர் கோட்டை

பொதுவாகவே ராஜபுத்திர அரசர்கள் யானைகள் மீது அமர்ந்து, துந்துபிகளும் முரசுகளும் முழங்க வந்து போய்க் கொண்டிருப்பதும் மகுடம் தரித்துத் தத்தம் அரியணையில் கம்பீரமாக அமர்ந்து கொண்டிருப்பதும் அதுபற்றி மக்கள் பெருமிதம் காட்டுவதும் ஔரங்கசீப் மனதில் எரிச்சலையும் சஞ்சலத்தையும் கொஞ்ச காலமாகவே ஏற்படுத்தி வந்தன. ஆகவே, ஜஸ்வந்த்சிங் மரணச் செய்தி கேட்டவுடனே பாதுஷா முகத்தில் முறுவல் விரிந்ததில் வியப்பில்லை. கூடவே, ஜோத்பூர் அரசு வாரிசு இல்லாமல் பிரச்னையில் தவிக்கும் செய்தியும் வரவே 'இதுதான் சமயம்' என்று குள்ளநரித்தனத்தோடு திட்டம் போட்டு விரைவாகச் செயல்பட்டார் ஔரங்கசீப்! உடனடியாக மார்வாரின் தலைநகரான ஜோத்பூருக்கு ஒரு படை அனுப்பப்பட்டது. கவர்னர் போன்ற பெரும் பதவிகளில் ஔரங்கசீப்பின் ஆட்கள் அவசர அவசரமாக அமர்த்தப்பட்டனர்.

தன்னுடைய இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புக் கிளம்பலாம் என்று நினைத்த பாதுஷா, மக்களைப் பயமுறுத்த வேண்டி, தானே நேரடியாக ஆஜ்மீர் நகர் வரை சென்று முகாம் போட்டார். கையோடு ஜஸ்வந்த்சிங்கின் தூரத்து உறவினரான இந்திரசிங் என்பவரைப் பெயருக்குத் தற்காலிக மன்னராக்கினார். தன்னைப் பதவியில் அமர்த்தியதற்காக ஏதோ 'டொனேஷன்' போல ஔரங்கசீப்புக்கு இந்திரசிங் முப்பது லட்ச ரூபாய் செலுத்த வேண்டி வந்ததும் குறிப்பிடத்தக்கது. ஓரிரு மாதங்கள் கழித்து கான் - இ - ஜஹான் என்னும் ஆளுநரின் தலைமையில் ஜோத்பூர் சென்ற மொகலாய அதிகாரிகளின் படை அங்கே முழு நிர்வாகத்தையும் தங்கள் கையில் எடுத்துக்கொண்டது.

1679, ஏப்ரல் இரண்டாம் தேதி டெல்லிக்கு மகிழ்ச்சியோடு திரும்பிய ஔரங்கசீப், அதுவரை ராஜபுத்திரர்களுக்கு விதிக்கப் படாமல் இருந்த 'ஜிஸியா' வரியையும் அமலுக்குக் கொண்டுவந்தார்.

ஜோத்பூரில் இருந்த ஏராளமான இந்துக் கோயில்கள் தரைமட்டமாக்கப்பட்டு அங்கிருந்து கொண்டுவரப்பட்ட சிலைகள்

டெல்லி அரண்மனையில் படிக்கட்டுக்களாகப் போடப்பட்டன. மார்வார் மக்கள் மதித்து வணங்கிய மன்னரின் அரியணையை ஒரு சாதாரண ஜமீன்தாருக்கு 36 லட்ச ரூபாய்க்கு விலை பேசி விற்றார் ஔரங்கசீப். இதனாலெல்லாம் ராஜபுத்திர மக்கள் பெரும் கொதிப்பில் ஆழ்ந்தார்கள்.

ஒரு திருப்பம்! - ஜஸ்வந்த்சிங் இறந்தபோது அவருடைய இரு ராணிகள் கர்ப்பமாக இருந்தனர். இருவரும் ஆண் குழந்தைகளைப் பெற்றெடுக்க, அதில் ஒன்று இறக்க, ஒரே ஒரு வாரிசு உருவானது! இந்த நேரத்தில் தனிப் பெரும் ராஜபுத்திர அமைச்சரான துர்காதாஸ் பற்றிக் கூறியாக வேண்டும்...

மறைந்த ஜஸ்வந்த்சிங்கின் பிரதம அமைச்சரான அஸ்கரன் என்பவரின் மகன் துர்காதாஸ். ஜஸ்வந்த்சிங்குக்குப் பிறந்த வாரிசைத் தன் பொறுப்பில் துர்காதாஸ் எடுத்து சகல மரியாதையுடன் வளர்க்க, ஔரங்கசீப்புக்குத் தகவல் போனது. குழந்தையையும் அழைத்துக்கொண்டு டெல்லிக்கு வரும்படி துர்காதாஸுக்கு ஆணையிட்டார் பாதுஷா. விதவையாகிப் போன இரு ராணிகளுடன், ஒரு பரிவாரமாக டெல்லிக்குச் சென்றார் துர்காதாஸ். அஜித்சிங் என்று பெயரிடப்பட்ட அந்தக் குழந்தையை ‘மார்வார் ராஜ்யத்தின் வாரிசாக ஏற்றுக்கொண்டு அங்கீகாரம் தரவேண்டும்’ என்று கேட்பதற்காக, பாதுஷாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதே துர்காதாஸின் நோக்கம். ஒரு வேண்டுகோளாக இதை அவர் சக்ரவர்த்தி முன் வைக்க, அலட்சியமாகக் குழந்தையை ஏறிட்டுப் பார்த்த ஔரங்கசீப் “குழந்தையை விட்டு விட்டுப் போங்கள். அது என் அந்தப்புரத்தில் நல்லபடியாக வளரும்!” என்றார் கண்டிப்பான குரலில்!

“ஜோத்பூர் வாரிசாக இந்தக் குழந்தையை நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அதை ‘முஸ்லிமாக மதமாற்றம் செய்ய ஒப்புக்கொள்ள வேண்டும்!” என்று ஔரங்கசீப் சொன்னதாகவும் ஒரு வரலாற்றுக் குறிப்பு உண்டு. மனம் புண்பட்டுப் போன துர்காதாஸும் மற்ற ராஜபுத்திர பிரதிநிதிகளும் வந்த காரியம் பலிக்காமல் டெல்லியில் விருந்தினர் மாளிகையில் தங்க, அங்கேயும் ஓர் அதிர்ச்சி காத்துக்கொண்டு இருந்தது. துர்காதாஸும் மற்றவர்களும் தங்கிய மாளிகைமுன் திடீரென்று மொகலாய வீரர்கள் வாட்களோடும் ஈட்டிகளோடும் வந்து காவல் காக்க ஆரம்பித்தார்கள்!

சோதனையான நேரம்தான்! மொகலாய சிங்கத்தின் குகைக்குள் சிக்கிவிட்ட நிலையிலும் துர்காதாஸ் நிலைதடுமாறிக் கலங்கவில்லை. தன் கவனத்தைச் சிதற விடாமல் புத்திக்கூர்மையுடன் அவர் செயல்படுத்திய திட்டம் இன்றளவும் ராஜபுத்திர பூமியில் பெருமிதத்துடன் பேசப்படும் ஒன்று!

எப்படியோ, ஏதோ ஒரு குழந்தையைப் பிடித்து அதற்கு இளவரசரின் உடையை அணிவித்தார் துர்காதாஸ். கூடவே, பணிப் பெண்கள் சிலர் ராணிகளாக வேடமிட்டு உப்பரிகையில் ‘டூப்’ இளவரசரை அணைத்துத் தூக்கிக்கொண்டு நடமாட, நிஜ ராணிகள் துப்புரவுப் பணியாட்களைப் போல வேடம் தரித்துக்கொண்டு இளவரசரோடு நைஸாக வெளியேறித் தப்பினர்.

‘ராணிகளும் குழந்தையும் அதோ மாடியில்தான் இருக்கிறார்கள்...’ என்று நினைத்து மெத்தனமாகவும் அலட்சியமாகவும் இருந்த மொகலாயக் காவல் அதிகாரிகள் ஏமாந்துபோனார்கள்! பிறகு, விஷயம் புரிந்து கோபத்துடன் உள்ளே பாய்ந்தது மொகலாயப் படை. தங்கள் ‘ராணி’ வேடங்களைக் களைந்துவிட்டு வாளெடுத்துக்கொண்ட

பெண்களும் ராஜபுத்திரப் பணியாளர்களும் மொகலாய வீரர்களோடு ஆவேசத்துடன் போரிட்டு வீர சொர்க்கம் புகுந்தனர்.

நடந்த விஷயங்களைக் கேட்ட ஔரங்கசீப், வெறுத்துப்போய் தலையில் கைவைத்துக் கொண்டு அமர்ந்துவிட்டார். பிறகு, “தப்பிப் போனவர்களை எப்படியாவது துரத்திச் சென்று பிடியுங்கள்!” என்று கர்ஜித்தார் பாதுஷா. ஆனால், கிளம்பிச் சென்ற பாதுஷாவின் படையை முன்னேறவிடாமல் ஒவ்வொரு கட்டத்திலும் ஆங்காங்கே ராஜபுத்திர வீரர்கள் தடுத்து நிறுத்திப் போரிட்டு உயிரை விட்டார்கள். அதற்குள் முன்னேற்பாடாகக் காட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குதிரையில் ஏறி ஜஸ்வந்த் சிங்கின் வாரிசான குழந்தை அஜித்சிங்கைத் தூக்கிக்கொண்டு ஜோத்பூர் பறந்துவிட்டார் துர்காதாஸ்!

ஔரங்கசீப் அசருவதாக இல்லை. அரண்மனைக்குப் பால் கொண்டுவரும் பணியாளரின் குழந்தை ஒன்றைக் கொண்டுவந்து “ஜஸ்வந்த்சிங்கின் வாரிசு தப்பிக்கவேயில்லை. இதோ, இதுதான் அந்தக் குழந்தை!” என்று ஒரு போடு போட்டார். அந்தக் குழந்தைக்கு முகமதியராஜ் என்று பெயர் வேறு வைக்கப்பட்டது! பிறகு, பெரும் படை ஒன்று டெல்லியிலிருந்து கிளம்பி ஜோத்பூருக்குள் புகுந்தது. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ராஜபுத்திரர்கள் வெளிக் கிளம்பி டெல்லி வீரர்களுடன் வீராவேசமாகப் போரிட்டனர். கடைசியில், மொகலாயப்படையின் பிரமாண்டத்தைத் தாக்குப்பிடிக்க முடியாமல் ஆயிரக் கணக்கானவர்கள் இறந்து வீழ்ந்தனர். ஜோத்பூரை ஆசைதீர சூறையாடினார்கள் ஔரங்கசீப் வீரர்கள்.

ஜோத்பூர் சென்ற மொகலாயப்படைக்குத் தலைமை தளபதியாக ஔரங்கசீப் தன் மகன் அக்பரை நியமித்தார்.

1679-ல் ஆலம்கீரே ஆஜ்மீர் வந்து இறங்கினார். அதைத் தொடர்ந்து ஜோத்பூரில் இருந்த நூற்றுக்கணக்கான இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டன. படுவேகமாக மசூதிகள் கட்டப்பட்டன. ஆனால், தப்பித்துச் சென்றுவிட்ட பறவைகளைத்தான் மீண்டும் சிறைப்பிடிக்க முடியவில்லை!

மார்வாரில் நடந்ததையெல்லாம் கேட்டுத் திகைத்துப் போனார்கள் மேவார் (சித்தூர்) மக்கள். ‘இன்று மார்வார்... நாளை மேவார்!’ என்பதைப் புரிந்துகொண்டு படையைத் திரட்டிக்கொண்ட மகாராஜா ராஜ்சிங், “மார்வார் படையோடு எங்கள் படை இணைந்து போரிடும்!” என்று அறிவித்தார். இப்படியாக, தங்களுக்குள் அவ்வப்போது பங்காளிச் சண்டை போட்டுக்கொண்டிருந்த மார்வார்-மேவார் படைகளை ஓர் அணியில் ஒற்றுமையாக இணைத்த ‘பெருமை’ ஔரங்கசீப்புக்கு உண்டு!

பாதுஷாவும் சளைக்காமல் ஒரு படையுடன் கிளம்பிச் சென்று சித்தூர் அருகேயுள்ள உதய்ப்பூரை முற்றுகையிட்டுக் கைப்பற்றினார். உதய்ப்பூர் சூறையாடப்பட்டது. அங்கே இருந்த சுமார் 173 கோயில்களும், பிறகு சித்தூரில் 63 கோயில்களும் தரைமட்டமாக்கப் பட்டன.

ஔரங்கசீப்பின் அனுபவம் மிகுந்த ஆலோசனைகளைப் பின்பற்றித் திறமையோடு போர்புரிந்த மொகலாயப் படையிடம் சித்தூர் படை கடைசியில் தோற்றது. மன்னர் ராஜ்சிங் தன் படையோடு மலைப் பகுதிக்குள் தப்பிச் சென்று ஒளிந்து கொண்டார். திருப்தியடைந்த ஔரங்கசீப், தன் மகன் அக்பரை வரவழைத்து சித்தூரில் தளபதியாக நியமித்துவிட்டு ஆஜ்மீர் திரும்பினார். இதுதான் பெரும் தவறாகப்

போனது...

மலைப் பகுதியிலிருந்து சுதாரித்துக் கொண்டு கிளம்பிய ராஜபுத்திரர்கள் கொரில்லாத் தாக்குதலுக்கு மாறினார்கள். திடீர் திடீரென அவர்கள் நிகழ்த்திய அதிரடித் தாக்குதல்களில் பல மொகலாய தளபதிகளும் வீரர்களும் உயிரிழந்தனர். மொகலாயர்களுக்காகச் சுமார் 10,000 மாட்டு வண்டிகளில் வந்த உணவுப் பண்டங்களை அலாக்காக ராஜபுத்திரர்கள் கடத்திக் கொண்டு போக, பட்டினியால் தவிக்கும் நிலை டெல்லிப்படைக்கு ஏற்பட்டுவிட்டது. இளவரசர் அக்பரே “இருக்கிற இடத்தைவிட்டு நகராமல் பீதியில் சிக்கித் தவிக்கிறது நம் படை!” என்று வெளிப்படையாகக் குறிப்பிடும் அளவுக்கு நிலைமை மோசம். ‘நீ எதற்கும் லாயக்கில்லை’ என்று மகனைக் கண்டபடி திட்டிக் கடிதம் எழுதிய ஔரங்கசீப், அக்பரை பழையபடி ஜோத்பூருக்கு மாற்றினார். ஆஸாம் என்னும் இன்னொரு மகனைத் தளபதியாக நியமித்தார்.

இந்தச் சூழ்நிலையில்தான் யாரும் எதிர்பாராத, ஔரங்கசீப்பின் மூளையை மிஞ்சிய ஒரு திருப்பம் நிகழ்ந்தது!

தந்தை தன்னை நடத்தியவிதம் கண்டு குமுறியவாறு ஜோத்பூர் போய்ச் சேர்ந்த இளவரசர் அக்பரைச் சாமர்த்தியம் மிகுந்த துர்காதாஸ் தலைமையில், ராஜபுத்திரக் குழு ஒன்று சந்தித்தது. வந்தவர்களை வியப்போடு அக்பர் நிமிர்ந்து பார்க்க, துர்காதாஸ் மென்மையான குரலில் பேச ஆரம்பித்தார் - “இளவரசே! நாங்கள் சமாதானம் செய்து கொள்ள வந்திருக்கிறோம். தங்கள் தந்தையோடு அல்ல. தங்களோடு! சொல்ல வேண்டியதைச் சுருக்கமாகவே கூறுகிறேன்... - யோசித்து ஒரு முடிவு எடுங்கள். தங்கள் தந்தை ஔரங்கசீப் பாதுஷா தன் கொள்கையாலும் அணுகுமுறையாலும் மொகலாய சாம்ராஜ்யத்தை வீழ்ச்சிக்குக் கொண்டுசென்று கொண்டிருக்கிறார். அவர் வெறியாட்டம் தாங்காமல் இன்று அத்தனை ராஜபுத்திரர்களும் எதிரணியில் தோளோடு தோளாக நிற்கின்றனர். தெற்கே மராட்டியர்கள் வாளெடுத்தாகிவிட்டது. தங்கள் பெரும் பாட்டனார் பேரரசர் அக்பர் (உண்மையில் எள்ளுத் தாத்தா!) பெயரை வைத்துக்கொண்டிருக்கும் தாங்கள் இதையெல்லாம் அனுமதிக்கலாமா? நாட்டுக்கு இப்போதைய தேவை - தேசிய எண்ணம் கொண்ட நிதானமான ஒரு சக்ரவர்த்தி. அது தாங்களாகத்தான் இருக்க முடியும்! இளவரசர் ஒப்புதல் அளித்தால் 70,000 பேர் அடங்கிய ராஜபுத்திரப் படை தங்கள் பின் பக்கபலமாக நிற்கும். வேறு வழியில்லை. தங்கள் தந்தையைப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு டெல்லி அரியணையில் சென்று அமருங்கள். நாட்டு மக்களின் ஒருமித்த விருப்பம் இது!”

1681-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி ஜோத்பூரில் சக்ரவர்த்திக்கான உடை தரித்துக்கொண்டு நான்கு முல்லாக்கள் ஆசியுடன் முடிசூட்டிக் கொண்டார் அக்பர். ‘தந்தை ஔரங்கசீப் பாதுஷா பதவியிறக்கம் செய்யப்படுகிறார்!’ என்று அறிக்கை ஒன்றையும் விடுத்தார் அவர்! ராஜபுத்திரர்கள் இந்த நிகழ்ச்சியைக் கோலாகலமாக வாண வேடிக்கைகளுடன் கொண்டாடினார்கள். ஒரு பெரிய திருப்பம் நிகழப்போகிறது என்கிற மகிழ்ச்சிதான் காரணம். ‘க்ளைமாக்’ஸில் மேலும் ஒரு திருப்பம் மிச்சமிருக்கிறது என்பது பாவம், அவர்களுக்குத் தெரியாது!

அக்பர் தலைமையில் ராஜபுத்திர - மொகலாயப் படை ஆஜ்மீருக்குச் சில மைல் தொலைவில் பாசறை அமைத்துத் தங்கியது. உடனடியாக நேரத்தை வீணாக்காமல் சுமார் 20,000 படை வீரர்களோடு மட்டும்

ஆஜ்மீரில் தங்கியிருந்த ஔரங்கசீப்புடன் மோதியிருந்தால் இளவரசர் ஒரு கை பார்த் திருக்கலாம்! ஔரங்கசீப் கதை முடிந்திருக்கும் தான்! ஆனால், தேவையில்லாமல் யுத்தத்தை ஒரு நாள் தள்ளிப்போட்டார் அக்பர். இந்தச் சிறு தாமதத்தைக் கில்லாடித்தனமாக (ஆலம்கீர் மன்னித்தருள வேண்டும். வேறு வார்த்தை தோன்றவில்லை!) பயன்படுத்திக் கொண்டார் ஔரங்கசீப்.

'அன்பு மகன் அக்பருக்கு, திட்டப்படி ராஜபுத்திரர்களை மொத்தமாக நம் வலையில் விழ வைத்ததற்கு என் மனமார்ந்த பாராட்டுகள். இவ்வளவு நுண்ணறிவுடன் நீ திட்டத்தைச் செயல்படுத்துவாய் என்று நானே எதிர்ப்பார்க்கவில்லை. நான் சொல்லியனுப்பும்போது நம் இருபடைகளும் இணையலாம்' என்று ஒரு கடிதம் அனுப்பினார் ஔரங்கசீப். கடிதத்தை எடுத்துச் சென்ற தூதுவரிடம் "ராஜபுத்திர தளபதிகள் கையில் நீ சிக்கிக்கொள்ள வேண்டும்" என்று சொல்லியனுப்பினார். பாதுஷா நினைத்தது நடந்தது. கடிதத்தை வழிமறித்துப் படித்துப் பார்த்த ராஜபுத்திர தளபதிகள் 'என்ன இது துரோகம்?' என்று திகைத்துப் போனார்கள்.

மறுநாள் காலை அக்பர் விழித்தெழுந்த போது ராஜபுத்திரப் படையே அங்கு காணோம்! இரவோடு இரவாக அக்பரை 'அம்போ'வென்று விட்டுவிட்டுப் போயே போய்விட்டார்கள்.

வல்லவனுக்கு வல்லவனாக ஔரங்கசீப் செயல்பட்டிருப்பதைப் புரிந்துகொண்டவர் துர்காதாஸ் மட்டுமே. பாதுஷாவின் தந்திரத்தை அவர் மற்றவர்களுக்கு எடுத்து விளக்கிச் சொல்லக்கூட நேரமில்லாமல் போனது. மனம் உடைந்துபோன அக்பர் ஓட்டமெடுக்க வேண்டி வந்தது. மராட்டிய மண்ணில் சில காலம் புகலிடம் தேடி, பிறகு பாரசீகம் சென்று உதவி கேட்கப்போன இந்த இளவரசர், அங்கு போய்ச் சேருவதற்குள் நம்பிக்கையிழந்து, துவண்டுபோய் மரணமடைந்தார்.

பிற்பாடு சித்தூர், ஔரங்கசீப்பிடம் சமாதானமாகப் போனாலும் பாதுஷாவை ஜோத்பூர் விடுவதாக இல்லை. அந்த மண்ணைச் சேர்ந்த ராஜபுத்திர வீரர்கள் தொடர்ந்து கொரில்லாத் தாக்குதல்கள் நிகழ்த்தி மொகலாயர்களைத் துன்புறுத் தினார்கள். டெல்லியால் அவர்களை வழிக்குக் கொண்டுவர முடியாமலே போனது. அவ்வப்போது ஏற்பட்ட சில தோல்விகளும் ராஜபுத்திரர்களைச் சோர்வடையச் செய்ய வில்லை.

கடைசியில், துர்காதாஸின் விசுவாசம், வீரம், விடாமுயற்சி பலனைத் தந்தன. ஔரங்கசீப் இறந்த நாலாவது நாள் மார்வார் ராஜ்யத்தின் தலைநகரான ஜோத்பூரை துர்காதாஸ் தலைமையில் ராஜபுத்திரப் படை கைப்பற்றியது. மறைந்த ஜஸ்வந்த்சிங்கின் வாரிசான அஜித்சிங்கை அரியணையில் அமர்த்தி முடிசூட்டிக் காட்டினார் துர்காதாஸ்!

வடக்கே சீக்கியர்களும் ராஜபுத்திரர்களும் டெல்லி ஆட்சிக்குப் பிரச்னையாகிப் போன சமகாலத்தில் தெற்கேயும் பாதுஷாவுக்கு எதிராகக் கிளர்ச்சி ஆரம்பித்துவிட்டிருந்தது...

'சிவாஜி' என்கிற பெயரில் மராட்டியத் திலிருந்து மின்னலாகக் கிளம்பிய அந்தத் தாங்கமுடியாத 'தலைவலி'யால் ஔரங்கசீப் பாதுஷா தடுமாறித் தவித்தது தனிக் கதை...!

மராட்டிய வேங்கையும் மொகலாய பீதியும்...!

மராட்டியர்கள் தனக்கு ஒரு பெரும் பிரச்னையாக வந்து வாய்க்கப்போகிறார்கள் என்று ஔரங்கசீப் சற்றும் எதிர்பார்க்க வில்லை. ஆரம்பத்தில், சிவாஜி என்னும் மராட்டிய இளைஞர் ஒரு குதிரைப் படையின் உதவியோடு சில கிராமங்களையும் ஓரிரு கோட்டைகளையும் கைப்பற்றிய செய்தி வந்தபோது ‘கிராமங்களில் புகுந்து கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் ஏதோ ஒரு கூட்டத்தின் தலைவன்...’ என்று பாதுஷா தப்புக்கணக்குப் போட்டு அலட்சியப் படுத்தினார். கடைசியில், மராட்டியர்களின் உத்வேகப் பாய்ச்சல் பிரமாண்டமாக உருவெடுத்துவிட்டது...!

இத்தனைக்கும் சிவாஜியின் பிரவேசம்தான் மராட்டிய வீர உணர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தது என்று சொல்ல முடியாது. மொகலாயர்களுக்கு எதிரான புரட்சிக்கனல் அந்த மாநிலமெங்கும் ஏற்கெனவே நெருப்புத் துண்டுகளாக விதைக்கப்பட்டுக் காத்துக் கொண்டிருந்தது. மலைகள் சூழப்பட்ட பிரதேசம் மராட்டிய மாநிலம். விவசாயத் துக்கான நிலப்பரப்பு குறைச்சல். பற்றாக்குறை இல்லாமல் வாழ அந்த மக்கள் சோம்ப லில்லாமல் கடுமையாக உழைக்க வேண்டி யிருந்தது. இந்த உழைப்பினூடே பெருமிதமும் தன்மானமும் ஊடுருவியது. கொஞ்ச காலமாகவே ஏக்நாத், துக்காராம், ராமதாஸ், வாமன் பண்டிட் போன்ற மகான்கள் தங்கள் போதனைகளாலும் பக்திப் பாடல்களாலும் ஒரு மறுமலர்ச்சி இயக்கத்தைப் பரப்பிக் கொண்டிருந்தனர். ஏராளமான மராட்டி யர்கள் (சிவாஜியின் தந்தை உட்பட) அகமதுநகர், பீஜப்பூர், கோல்கொண்டா ராஜ்யங்களில் பணிபுரிந்து நிர்வாக - ராணுவ அனுபவமும் பெற்றுக்கொண்டிருந்தார்கள். இப்படி எல்லாக் கட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்ட நிலையில் தங்களை ஒன்றுபடுத்தி வழி நடத்திச் செல்லக்கூடிய ஒரு தலைவன் மட்டுமே இப்போது மராட்டியர்களுக்குத் தேவை. அந்தத் தேவையைக் கச்சிதமாகப் பூர்த்திசெய்தார் சிவாஜி!

மேவார் ராஜபுத்திர வம்சத்தினரை முன்னோர்களாகக் கொண்டு வந்த ஷாஜி போன்ஸ்லேக்கும் விஜயநகர யாதவர்கள் வம்சத்தில் வந்த ஜீஜாபாய்க்கும் 1630-ம் ஆண்டில் (1627 என்றும் ஒரு கருத்து உண்டு) பிறந்தவர் சிவாஜி.



சிவாஜி குழந்தையாக இருந்தபோதே தந்தை ஷாஜி, மனைவியைக் கைவிட்டுப் பிரிந்து இன்னொரு திருமணம் செய்து கொண்டு போய்விட்டார். மனதைத் தளர விடாமல் சிவாஜிக்கு ஒழுக்கத்தையும் வீரத்தையும் ஊட்டி வளர்த்தார் ஜீஜாபாய். தந்தையின் ஆதரவு இல்லாவிட்டாலும்கூட, ஒரு தாய் மனது வைத்தால் தன் குழந்தையை எந்த அளவுக்குச் சிறந்த மனிதனாக வளர்க்க முடியும் என்பதற்கு உச்சக்கட்ட உதாரணம் ஜீஜாபாய் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

சிவாஜியின் இளம் வயதில், தாதாஜி கோண்ட்தேவ் என்னும் பிராமணர் அவருக்குக் குருவாகவும் காப்பாளராகவும் இருந்தார். தாதாஜி மூலம் கல்வியறிவும் வெளியுலக அனுபவமும் சிவாஜிக்குக் கிடைத்தது. அப்போதே சிவாஜி மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வசித்து வந்த போர்த்திறமை பெற்ற 'மாவல்லி' மலைவாசி களுடன் நெருங்கிப் பழகியதாகவும் வித்தியாசமான பல போர்ப் பயிற்சிகளை அவர்களிடம் கற்றுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் தன்னுடைய பதினேழாவது வயதில் ஒரு குதிரைப்படையைத் திரட்டிக்கொண்டு, அருகாமையில் இருந்த தோர்னா என்னும் கோட்டையைக் கைப்பற்றினார் சிவாஜி. இதுபற்றி ஜீஜாபாய் என்ன சொன்னார் என்று தெரியவில்லை. ஆனால், தாதாஜி கோண்ட்தேவ் ரொம்பவும் கவலைப்பட்டுப் போய் சிவாஜியைக் கடிந்துகொன்டதாகக் கூறப்படுகிறது. வாழ்க்கையில் சில படிக்கட்டுகளைக் கடக்க மட்டுமே குருவின் உதவி தேவை... பிற்பாடு சுதந்திரமாகவும் முடிவெடுத்து இயங்கத் தெரியவேண்டும் என்று சிவாஜி நினைத்திருக்கலாம். தாதாஜியின் ஆட்சேபணைகளை அவர் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. தொடர்ந்து மலைப் பகுதிகளில் இருந்த பல கோட்டைகளை லஞ்சம் கொடுத்தும் மிரட்டியும் தந்திரமாகவும் பீஜப்பூர் அதிகாரி களிடமிருந்தும் வேறு சில

நிலச்சுவான்தார் களிடமிருந்தும் தன்வசப்படுத்திக்கொண்டார் சிவாஜி.

சிவாஜியின் தந்தை பீஜப்பூர் அரண் மனையில் ஒரு அதிகாரியாகப் பணிபுரிந்து வந்தார். அவரைக் கைது செய்தது பீஜப்பூர் அரசு. 'கோட்டைகளைக் கைப் பற்றுகிற வேலையெல்லாம் நிறுத்தாவிட்டால் தந்தைக்கு விடுதலை கிடைக்காது' என்று எச்சரிக்கைக் கடிதம் போனது. கைவிட்ட தந்தையாக இருந்தாலும் அவர் விடுதலைக்காக சிவாஜி ஐந்தாண்டுகளுக்கு 'நல்ல பிள்ளை'யாக இருந்தார். அதே சமயம் நேரத்தை வீணாக்கவு மில்லை. கோட்டைகளைப் பலப்படுத்துவது, மராட்டிய இளைஞர்களை ஒன்றுதிரட்டுவது போன்ற பல பணிகளில் இறங்கினார் அவர்!

பிறகு, தன்னோடு ஒத்துப்போகாத ஜாவ்லி ஜமீனை ஆட்சி செய்து வந்த சந்திரராவ் மோரே என்ற இளவரசரை ஒரு ஆளை அனுப்பி வஞ்சகமாகத் தீர்த்துக்கட்டிவிட்டு, அந்தச் சிறு ராஜ்யத்தையும் கையகப்படுத்திக் கொண்டார் சிவாஜி.

முதன்முதலாக மொகலாயர்களோடு சிவாஜி மோதியது 1657-ல் தான். ஔரங்கசீப்பின் படை பீஜப்பூரை முற்றுகை யிட்டிருந்த தருணம் அது. திடீரென்று மராட்டிய அதிரடிப்படை மொகலாய ஆட்சிக்குட்பட்ட அகமதுநகர் மற்றும் ஜுன்னார் ஊர்களில் புகுந்து தூள் கிளப்பியது. ஜுன்னார் சூறையாடப்பட்டது.

'யார் இந்தப் புது ஆசாமி?' என்று கர்ஜித்து விட்டு ஔரங்கசீப் அனுப்பிய ஒரு படை சிவாஜியைச் சுலபமாகவே துரத்தியடித்தது. சற்றுப் பதுங்கிய சிவாஜி, மீண்டும் வெளிப்பட்டு வட கொங்கணப் பிரதேசத்தைச் சேர்ந்த கல்யாண், பிவாண்டி, மஹுலி பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார்.

சிவாஜி பெரும் சக்தியாக வளர்ந்து வருவது ஔரங்கசீப்பைவிட பீஜப்பூர் சுல்தானுக்கு நன்கு புரிந்திருந்தது. மொகலாயர்களுடன் சமாதானம் செய்துகொண்டு விட்ட பீஜப்பூர் சுல்தான் 1659-ல், சிவாஜியை 'ஒருகைபார்க்க' பெரும் படை ஒன்றை அனுப்பினார். அந்தப் படைக்குத் தளபதியாக நியமிக்கப்பட்டவர் தான் பல யுத்தங்களில் வெற்றி கண்டு அனுபவப்பட்ட பெரும் வீரர் அ∴ப்ஸல்கான்! "சிவாஜியை எப்படியாவது தீர்த்துக் கட்டுங்கள். புரட்சியில் இறங்கியிருக்கும் அந்த இளைஞரை உயிருடனோ அல்லது உயிரற்ற உடலாகவோ கொண்டுவந்தாக வேண்டும்!" என்பதே பீஜப்பூர் சுல்தானின் ஆணை.

அ∴ப்ஸல்கான் படை பூனே அருகே, சதாராவுக்கு 20 கிலோமீட்டர் அருகே தங்கிப் பாசறை அமைத்தது. மகாபலேஷ்வரில் - 'பிரதாப்கர்' மலைக் கோட்டையில் தங்கியிருந்த சிவாஜியிடம் கிருஷ்ணாஜி பாஸ்கர் என்ற மராத்தியப் பிராமணரைத் தேர்ந்தெடுத்துத் தூதுவராக அனுப்பினார் அ∴ப்ஸல்கான். "சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காகத் தங்களைச் சந்திக்க விரும்புகிறார் பீஜப்பூர் தளபதி" என்று வந்து சொன்ன தூதுவரைப் பூஜை அறைக்குள் அழைத்துச் சென்ற சிவாஜி, "இதோ நம் தெய்வங்களுக்குமுன் சூடமேற்றிச் சத்தியம் செய்யுங்கள். அ∴ப்ஸல்கானின் உண்மையான திட்டம் என்ன?" என்று நேருக்கு நேர் பார்த்துக் கேட்க, "தங்கள் கதையை முடிக்கும் ஒரு திட்டம் போடப் பட்டிருப்பதாகத்தான் தெரிகிறது" என்றார் தூதுவர் அழுதுகொண்டே. சற்று மௌனமாக இருந்த சிவாஜி, "சரி, நீங்கள் திரும்பிச் செல்லுங்கள். பேச்சுவார்த்தைகளுக்கு நான் வரத் தயார். ஆனால், ஒரு நிபந்தனை - இரு பக்கமும் ஆயுதங்கள் ஏந்திய மெய்காவலர்கள் யாரும் இருக்கக்கூடாது. நான் தனியாகத்தான் பீஜப்பூர்

தளபதியைச் சந்திப்பேன்...!” என்றார்.

அதைத் தொடர்ந்து, பிரதாப்நகர் மலைக் கோட்டைக்குக் கீழே சமவெளியில் அமைக்கப்பட்ட ஒரு வரவேற்புக் கூடாரத்தில் சிவாஜி - அஃப்ஸல்கான் சந்திப்பு நிகழ்ந்தது. தொலைதூரத்தில் பீஜப்பூர் படை அணிவகுப்பில் இருக்க, கூடாரத்துக்குள் சிவாஜி நுழைந்தவுடன் “வருக... வருக!” என்று கூறியவாறு இருக்கையிலிருந்து கம்பீரமாக எழுந்து வந்த பீஜப்பூர் தளபதி அஃப்ஸல்கான் இரு கரங்களையும் நீட்ட, இருவரும் அணைத்துக்கொண்டனர். திடீரென்று சிவாஜியின் கழுத்தை அணைத்துக் கொண்டிருந்த அஃப்ஸல்கானின் கரம் இறுக ஆரம்பித்தது. அதேசமயம் அஃப்ஸல்கானின் வலது கரத்தில் பளிச்சிட்ட ஒரு குறுவாள் மின்னலாக சிவாஜியின் மார்பில் இறங்க... ஏமாற்றம்! இப்படி ஏதாவது நடக்கலாம் என்பதால் தயாராகவே மேலாடைக்கு உள்ளே இரும்புக்கவசம் ஒன்றை அணிந்துகொண்டு வந்திருந்தார் சிவாஜி!

கொலைத் திட்டம் தோல்வியடைந்தது கண்டு அஃப்ஸல்கான் ஒரு விநாடி திகைத்துப் பின்வாங்கிச் சுதாரிப்பதற்குள் சிவாஜியின் இடது கரம் காற்றைக் கிழித்துக்கொண்டு இயங்கியது. அவர் கையில் பயங்கரமாகக் காட்சியளித்தது இரும்பினால் செய்யப்பட்ட ‘வாக்நாக்’ (புலி நகங்கள்) என்று அழைக்கப்படும் கூர்மையான ஆயுதம்! (பார்க்க படம்! இருமுனைகளிலும் பொருத்தப்பட்ட ‘மோதிரங்களை’ ஆள்காட்டி விரலிலும் சுண்டு விரலிலும் அணிந்துக்கொண்டு குத்துவது போல கையை மூடிக்கொள்ள வேண்டும். அவ்வளவே!) பீஜப்பூர் தளபதி மீது வேங்கையாக பாய்ந்து, அவர் வயிற்றைக் கிழித்துக் குடலை உருவிப் போட்டுவிட்டார் சிவாஜி. அஃப்ஸல்கான் செத்து விழ, மறுகணம் பாசறை அல்லோலகல்லோலப் பட்டது. மலையில் பதுங்கியிருந்த மராட்டிய வீரர்கள் புயலாகக் கீழே இறங்கி, திகைத்துப் போய் நின்றிருந்த பீஜப்பூர் சுல்தான் படையைத் துவம்சம் செய்துவிட்டார்கள்.

‘நடந்தது அநியாயம். அஃப்ஸல்கான் நட்பு உணர்வோடுதான் எழுந்து வந்தார். சிவாஜிதான் வஞ்சகமாக அவரைத் தீர்த்துக் கட்டினார்’ என்று ஒரு மாற்றுக் கருத்து உண்டு. ஆனால், பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் ‘சிவாஜியைக் கொல்லும் திட்டம் இருந்தது உண்மை. நிகழ்ந்தேறியது ஒரு தற்காப்புக் கொலைதான்!’ என்கிறார்கள்.

எது எப்படியோ, இதைத் தொடர்ந்து மராட்டியப் பகுதிகளில் சிவாஜியின் ‘இமேஜ்’ ஏகமாக உயர்ந்தது என்னவோ உண்மை! பிறகு தென்கொங்கணப் பகுதியையும் கோலாப்பூர் மாவட்டத்தையும் மராட்டியப் படை கைப்பற்றியது.

இத்தனை விஷயங்களையும் கேள்விப்பட்ட பிறகு விழித்துக்கொண்டார் ஔரங்கசீப். சிவாஜியின் ‘கொட்டத்தை’ அடக்க ஷாயிஸ்தாகான் என்ற திறமைவாய்ந்த தளபதியைத் தட்சிணப் பிரதேசத்துக்கு கவர்னராக அனுப்பினார்.

ஷாயிஸ்தாகான் தலைமையில் கிளம்பி வந்த பெரும் படை பூனே நகருக்குள் வெற்றிகரமாக நுழைந்து, அங்கேயிருந்த சிவாஜியின் கோட்டையைக் கைப்பற்றி, கல்யாண் மாவட்டத்திலிருந்த மராட்டியப் படையை விரட்டியடித்தது.

உடனே பீஜப்பூரில் நல்லதொரு பதவி வகித்து வந்த தன் தந்தையின் உதவி கோரினார் சிவாஜி. அவர் மூலம் பீஜப்பூருடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார் (மொகலாயர்களிடம் அச்சம் கொண்டிருந்த ஷையா ராஜ்யமான பீஜப்பூருக்கும் சிவாஜி

தேவைப்பட்டது வேறு விஷயம்!).

இதைத் தொடர்ந்து தன் முழுப் பலத்தையும் மொகலாயர்கள் பக்கம் திருப்பினார் சிவாஜி.

1663- ஏப்ரல் 15-ம் தேதியன்று சிவாஜியின் 'அதிரடி நடவடிக்கை நம்பர்-2' வெற்றிகரமாக நிறைவேறியது...

நடுநிசி... பூனே கோட்டைக்குள் ஷாயிஸ்தாகான் ஏகப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் தங்கியிருக்க... வெளியே பூனைகளைப் போலச் சத்தம் போடாமல் வந்த சிவாஜியும் அவரது வீரர்களும் சுவரில் துவாரம் ஏற்படுத்தி நுழைந்தார்கள். உப்பரிகை வழியாக அரண்மனைக்குள் குதித்து ஷாயிஸ்தாகான் படுக்கை அறைக்குள் புகுந்து மொகலாய கவர்னரின் மகனான அபுல்ஃபத் என்ற இளைஞரையும் மற்றும் ஏராளமான மெய்க்காவலர்களையும் தீர்த்துக்கட்டினார்கள்.

ஷாயிஸ்தாகான் தலை(யணை)க்குமேல் வந்த ஆபத்து, அவருடைய வலதுகைக் கட்டைவிரலோடு போயிற்று (வந்த மராட்டியர்கள் அவருடைய கட்டைவிரலை வெட்டிக்கொண்டு போய் விட்டார்கள்.)!

இந்தியாவின் பல பகுதிகளில் மக்கள் 'அட!' என்று சிவாஜி பற்றிப் பேச ஆரம்பித்து விட்டது இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான்!

எட்டு மாதங்கள் கழிந்தன. திடீரென்று சிவாஜியின் படை மொகலாய ஆளுகைக்கு உட்பட்ட, மிக முக்கியத் துறைமுகங்களில் ஒன்றான சூரத் நகரைக் கபளீகரம் செய்தது. மராட்டியப்படை உள்ளே நுழைந்த உடனேயே பீதியடைந்த மொகலாய வைஸ்ராய் இனாயத்கான் ஓட்டமெடுத்தார். சூரத் நகரை சிவாஜியின் வீரர்கள் சூறையாடி னார்கள். ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள செல்வம் சிவாஜியின் வசம் வந்தது.

சதாரா மியூஸியத்தில் உள்ள புலிநகம்!

'மொகலாயர்களின் நேரடி ஆதிக்கத்தி லிருக்கும் முக்கியமான ஒரு நகரைக் கைப் பற்றிக் காட்டினால்தான் ஔரங்கசீப்பின் சக்தி, படைபலம் எதுவும் தனக்கு ஒரு பொருட்டல்ல என்பதை வடக்கே எல்லோரும் தெரிந்துகொள்வார்கள்... நினைத்த மாத்திரத்தில் ஆட்டுக் கூட்டத்துக்குள் நுழையும் புலியைப் போல எதையும் மராட்டியப்படையால் சாதிக்க முடியும் என்பதையும் மொகலாய அரசு

புரிந்துகொண்டு ஒவ்வொரு நிமிடமும் பீதியோடு வாழ வேண்டும் என்பதுதான் சிவாஜியின் நோக்கமாக இருந்தது!' என்கிறார் வரலாற்று ஆசிரியர் ஒருவர்.

எத்தனையோ தேர்ந்த எதிரிகளைச் சமாளித்து வெற்றி கண்டவரான ஆலம்கீர், சிவாஜியின் பாய்ச்சலைக் கண்டு கலங்கிப் போய்விடவில்லை. மராட்டியப் புலியைப் பிடிக்க ராஜதந்திரத்திலும் போர்த் தந்திரத்திலும் தேர்ந்த, நீண்ட அனுபவம் வாய்ந்த ஜெய்சிங் என்ற முதிர்ந்த சிங்கத்தை அனுப்பினார்!

மொகலாயப்படையின் பிரதம சேனாதிபதியான இந்த ராஜபுத்திர வீரர் எச்சரிக்கையோடும் கவனத்தோடும் வகுத்த வியூகம் வெற்றிகரமாகச் செயல்பட்டது. சிவாஜியின் புரந்தர் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றினார் ஜெய்சிங். மொகலாயத் தாக்குதலில் கோட்டைத் தளபதி பாஜி தேஷ்பாண்டேயும் முந்நூறு 'மாவல்லி' வீரர்களும் உயிரிழந்தனர். டெல்லிப்படையின் இன்னொரு பகுதி, ஆங்காங்கே பாதைகளை மறித்து, தொடர்ந்து தாக்குதல்கள் நிகழ்த்தி சிவாஜியின் நிர்வாகமே இயங்காமல் செய்தது.

1665 ஜூன் 22-ம் தேதி ஜெய்சிங்கும் சிவாஜியும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள். 'புரந்தர் உடன்படிக்கை'யில் இருவரும் கையெழுத்திட்டனர். இதன்படி, சிவாஜி தன்னுடைய இருபத்து மூன்று கோட்டைகளை டெல்லி பாதுஷாவுக்கு விட்டுக்கொடுக்க நேர்ந்தது. சிவாஜியிடம் மிச்சமிருந்தது பன்னிரண்டு கோட்டைகள் தான்!

ஔரங்கசீப்புடன் சிவாஜி நட்பாகப் போக வேண்டும், டெல்லிக்கு வந்து பாதுஷாவைச் சந்திக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தித் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார் ஜெய்சிங். 'டெல்லியில் உங்கள் உயிருக்கு நான் உத்தரவாதம்....' என்று வாக்குறுதியும் தந்தார். கடைசியில், டெல்லிக்குச் சென்று பாதுஷாவைச் சந்திக்க ஒப்புக்கொண்டார் சிவாஜி!

டெல்லிக்குச் சென்று பாதுஷாவைச் சந்திக்க வேண்டிய அத்தியாவசியம் எதுவும் சிவாஜிக்குக் கிடையாது. பிறகு ஏன் ஒப்புக் கொள்ள வேண்டும் என்பது குறித்து வரலாற்று ஆசிரியர்கள் வியக்கிறார்கள். 'ஒரு ஆர்வம் காரணமாகத் தலைநகரையும் ஔரங்கசீப் தர்பாரையும் சக்ரவர்த்தியின் செல்வாக்கையும் பலத்தையும் நேரடியாகப் பார்க்க சிவாஜி விரும்பியிருக்கலாம்!' என்கிறார் ஒருவர்.

தன் ஒன்பது வயது மகன் சாம்பாஜியுடன் ஆக்ராவுக்கு சிவாஜி சென்றபோது, பாதுஷாவின் பிறந்த நாள்! தர்பாரில் ஏகக் கூட்டம். சிற்றரசர்களும் வெளிநாட்டுத் தூதுவர்களுமாக அரசவை ஏக ஆர்ப்பாட் டமாகக் காணப்பட்டது. ஒரு மூலையில் நிற்க வைக்கப்பட்ட சிவாஜியை யாரும் கண்டுகொள்ளவில்லை. சிவாஜி வந்திருக்கும் தகவலை பாதுஷாவிடம் தெரிவிக்கப் பட்டபோது, பாதுஷா லேசாகத் தலை யசைத்ததோடு சரி!

மராட்டியத் தலைவரின் ரத்தம் சூடாகிக் கொண்டிருந்தது. பிறகு கோபம் வெடித்தது. கூட்டத்திலிருந்து வெளிப்பட்டார் சிவாஜி. பாதுஷாவை நேரடியாகப் பார்த்து "நான் இங்கு நடத்தப்படும் விதம் எனக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது. நான் யார் என்பது உங்களுக்கெல்லாம் தெரிந்தும் என்னை வெகுநேரமாக நிற்க வைத்து

அவமானப் படுத்திக்கொண்டிருக்கிறீர்கள். இதை என்னால் சகித்துக்கொள்ள முடியாது!” என்று சிவந்து கலங்கிப் போன கண்களுடன் உணர்ச்சிவயப்பட்டு உரத்த குரலில் அவர் ஆட்சேபிக்க, அத்தனை பேர் கவனமும் அவர் பக்கம் திரும்பியது!

தர்பாருக்கு வரும் சிற்றரசர்களுக்குப் பாதுஷாவால் சம்பிரதாயப்படி போர்த்தப் படும் பொன்னாடை எடுத்துவரப்பட, “தேவையில்லை” என்று மறுத்துவிட்டு, “என்னைக் கொல்லுங்கள். என் தலையைச் சீவித் தள்ளுங்கள். கவலையில்லை... நான் உயிர்விடத் தயார்..!” என்றெல்லாம் குரலெழுப்பிக் கொண்டே அரசவையிலிருந்து வெளியேறினார் சிவாஜி. எல்லோரும் திகைத்துப்போய் காட்சியளித்தனர்.

ஔரங்கசீப் முகத்தில் கோபம் லேசாகத் தெரிந்தது. மற்றபடி எந்த உணர்ச்சியையும் வெளிப்படையாகக் காட்டவில்லை பாதுஷா. நினைத்திருந்தால் ஆலம்கீர் அங்கேயே சிவாஜியைக் கைப்பற்றித் தலையைச் சீவியிருக்க முடியும்தான். ஆனால், சில அரசர்களைப் போல விசாரணை என்றெல்லாம் எதுவும் நடத்தாமல் கொள்ளாமல் யார் தலையும் சீவியதில்லை ஔரங்கசீப் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். போர்க்களம், பட்டத்து விரோதிகள் என்பது வேறு விஷயம். மற்றபடி எதுவும் சட்டப்படி நடந்தாக வேண்டும் சக்ரவர்த்திக்கு!

கூடியிருந்த பல பிரபுக்கள் பதை பதைப்புடன் அரியணை அருகே நெருங்கி, “இந்த மராட்டிய வீரர் செய்தது மிகவும் அநாகரிகமான செயல். தாங்கள் எத்தனை பெருந்தன்மையோடு நடந்து கொண்டீர்கள்! அந்தக் காட்டு மிருகத்துக்குத் தாங்கள் தண்டனை வழங்காவிட்டால், நாளைக்கு யார் எதை வேண்டுமானாலும் தர்பாரில் பேசலாம் என்று துணிச்சல் வந்துவிடும்... பாதுஷா இதை இப்படியே விட்டு விடக் கூடாது!” என்று தூபம் போட்டார்கள்.

‘சரி’யென்று சக்ரவர்த்தி விரல் சொடுக்க, மறுகணம் சிவாஜியைத் தூக்கி ஆக்ரா கோட்டையில் சிறையிலடைத்து விட்டார்கள்!

ஆக்ரா சிறையில்..!

முக்கியமான அரசியல் நிகழ்ச்சி என்பதால் சிவாஜியின் டெல்லிப் பிரவேசம் பற்றி விவரமான குறிப்புகள் வரலாற்றிலிருந்து தெரிய வருகின்றன.

சிவாஜி, மகன் சம்பாஜியுடன் இருநூறு பேர் அடங்கிய குழு ஒன்றும் டெல்லிக்குச் சென்றது - மெய்க்காவலர்களான நூறு பேர் குதிரைகளில் அணிவகுத்துச் செல்ல, அவர்கள் பின்னால் ஒரு காலாட்படை பிரிவினர் துருக்கிய வீரர்கள் அணியும் தொப்பிகள் அணிந்து (ஒரு நட்பு உணர்வுக்காக?!) சென்றனர். அவர்கள் கைகளில் ஆரஞ்சு வண்ணக் கொடிகள் தகதகத்தன.

அழகிய ஒரு பல்லக்கில் சிவாஜி, அவரைத் தொடர்ந்து பல்லக்குகளில் அவர் மகனும் சில பிரபுக்களும் சென்றனர். சிவாஜி பயணித்த பல்லக்குக்கு முன்னால் கொடி பறக்க, கம்பீரமாகச் சென்றது ஓர் அலங்கார ஆண் யானை. பல்லக்குகளின் பின்னால் இரு யானைகள் ஒளி வீசும் அம்பாரிகளோடு சென்றன.

சிவாஜி அவ்வளவு உயரமில்லை. அப்படி ஒன்றும் கட்டுமஸ்தான

தோற்றமும் கிடையாது. மெலிதான, சிறுத்தை போன்ற உடற்கட்டு கொண்டிருந்தார் அவர். நல்ல சிவந்த நிறம். எதிராளியின் உடலைச் சிலிர்க்க வைக்கும் தீட்சண்யம் மிக்க பார்வை. அரச உடை எதுவும் அணியத் தேவையில்லை - பார்த்த மாத்திரத்தில் ராஜவம்சத்தைச் சேர்ந்த பெரும் தலைவர் என்று யாராலும் சொல்ல முடியும்..! வரலாற்றுப் பக்கங்கள் சிவாஜியையும் அவர் பயணத்தையும் இவ்வண்ணம் விவரிக் கின்றன!



பிரதாப் கர் கோட்டை

ஆகவே, 'தான் நாடாளப் பிறந்தவன்' என்ற திட்டவட்டமான எண்ணம் கொண்டிருந்த இந்த மராட்டிய வீரர், டெல்லி தர்பாரில் தன்னை அலட்சியப் படுத்திய உடனே கோபத்துடன் வெடித்ததில் வியப்பில்லைதான்!

மராட்டிய கோட்டைகளில் ஒன்று...

ஆக்ரா சிறையில் மகன் சாம்பாஜியோடு அடைக்கப்பட்டாலும் கலவரப்படாமல் ஒவ்வொரு காயையும் கச்சிதமாக நகர்த்தினார் சிவாஜி. முதல் கட்டமாகத் தன்னுடன் வந்தவர்களைப் பரிவாரத்தோடு ஊர் திரும்பச் சொன்னார். அதற்கு முன்பு சிறையிலிருந்து சற்று வெளியே அழைத்துக் கொண்டு வரப்பட்ட ஒரு சமயத்தில் உரத்த குரலில் “எனக்கு உதவியாக யாரும் வேண்டாம். எல்லோரும் ஊர் திரும்புகள். நான் தனியாக இங்கு சிறையில் உயிர் விடத் தயார்” என்று உணர்ச்சிகரமாக ஓர் உரையும் நிகழ்த்தினார். பிறகு பாதுஷாவுக்கும் ‘மற்றவர்கள் ஊர் திரும்ப அனுமதி கேட்டு’ ஒரு கடிதம் எழுதினார். ‘பரிவாரம் என்ன இங்கே வேண்டிக்கிடக்கிறது... தனியாகவே சிவாஜி தவிக்கட்டும்!’ என்று ஔரங்கசீப் நினைத்தாரோ என்னவோ, உடனே அனுமதி வழங்கினார்.

சிறைப்பட்ட விநாடியிலிருந்தே ‘இங்கிருந்து எப்படியாவது தப்பிக்க வேண்டும்’ என்று முடிவு கட்டிவிட்டார் சிவாஜி. ‘பரிவாரத்தைத் திருப்பி அனுப்பி விட்டுத் தனியாகத் தப்பிப்பதுதான் சுலபம். தான் மட்டும் தப்பிப்பது வேறு விஷயம்... மற்றவர்கள் பணயக் கைதிகளாகப் பாதுஷாவிடம் மாட்டிக்கொண்டால் ஆபத்து...’ - இப்படி ஓடியது சிவாஜியின் சிந்தனை.

மறுபடியும் பாதுஷாவுக்கு ஒரு கடிதம் அனுப்பினார் சிவாஜி - ‘என்னை விடுதலை செய்தால் காசிக்குச் சென்று எஞ்சிய வாழ்நாளை சந்நியாசியாகக் கழிக்கிறேன்’ என்று! ‘முஸ்லிம் சந்நியாசியாக மாறி இங்கேயே நீங்கள் தங்கலாமே. உங்கள் வசதிகளைக் கவனித்துக்கொள்ள ஆட்கள் போடுகிறேன்!’ என்று பாதுஷாவிடமிருந்து பதில் வந்தது!

‘என் கோட்டைகளையெல்லாம் தங்களுக்கு விட்டுத் தந்துவிடுகிறேன். சக்ரவர்த்திக்கு அடங்கி நடக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால், நான் சென்று ஆணையிடாமல் என் தளபதிகள் கோட்டைகளை மொகலாய அதிகாரிகளிடம் ஒப்படைக்கமாட்டார்கள். நான் ஊருக்குத் திரும்பி அவர்களிடம் நேரடியாக விளக்கினால்தான் எல்லாம் நடக்கும்....’ என்று ஔரங்கசீப்புக்கு சிவாஜியிடமிருந்து ஒரு கடிதம் போனது!

சக்ரவர்த்தி ஏமாறத் தயாராக இல்லை. ‘ஏன் இவர் மெனக்கெட்டு ஊருக்கு போக வேண்டும்... கைப்பட கடிதம் எழுதி அனுப்பினால் தளபதிகள் கேட்க மாட்டார்களா?’ என்று மறுத்துவிட்டார் ஔரங்கசீப்.

மூன்று மாதங்கள் ஆக்ரா சிறையில் இருந்த சிவாஜி, திடீரென்று ஒரு வாரம் வயிற்றுவலியால் பீடிக்கப்பட்டதுபோல நடித்தார். பிறகு உடல்நிலை சற்றுத் ‘தேறியவுடன்’ ஏழை சந்நியாசிகளுக்குப் பழங்கள் விநியோகிக்க வேண்டிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். அனுமதி தரப்பட்டது!

ஒரு வாரத்துக்கு ஒவ்வொரு நாளும் மாலை நேரம் கூடைகளில் பழங்கள் வெளியே சென்றன. ஆரம்பத்தில் கூடைகளைச் சோதனையிட்ட காவலர்கள் பிறகு “சரி, சரி.. போ!” என்று அமர்ந்த இடத்திலிருந்துகொண்டே குரல் கொடுக்க... ஒரு மாலைப் பொழுது வெளியே போன கூடைகளில் பழங்களுக்குப் பதில் சிவாஜியும் மகனும் உட்கார்ந்துகொண்டு தப்பிவிட்டது அவர்களுக்கு தெரியாது!

திட்டம் போட்டுப் பறவைகள் பறந்து விட்ட செய்தி கேட்ட ஔரங்கசீப், சற்று ஆடித்தான் போய்விட்டார். தன் கடைசிக் காலத்தில், இந்த நிகழ்ச்சி பற்றி ‘ஒரு கணம் கவனக்குறைவால் - அலட்சியத்தால் நேர்ந்த தவறு, வாழ்நாள் பூராவும் என்னைப் பாதித்தது. அந்த மோசமான பேர்வழி சிவாஜி தப்பியதற்கு நான்தான் - என் அலட்சியம்தான் - காரணம். அதனால் இந்த மராட்டியர்களோடு கடைசிவரை போராடும் படியாக நேர்ந்துவிட்டது...’ என்று மிகவும் வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கிறார் பாதுஷா.

சிவாஜி தப்பிய உடனேயே நாடெங்கும் மொகலாய காவல் அதிகாரிகள் உஷார் படுத்தப்பட்டனர். சிவாஜியைப் பிடிப்பதற்குக் குதிரைப்படையினர் அனுப்பப்பட்டனர். ஆனால், காவி உடை அணிந்து, விரித்த தலைமுடியுடன் உடலில் சாம்பலைப் பூசிக் கொண்டு ஒரு சந்நியாசி போன்ற ‘மேக்கப்’புடன் போய்க்கொண்டிருந்த சிவாஜியை யாருக்கும் அடையாளம் தெரியவில்லை.

வழியெங்கும் மொகலாய காவல் அதிகாரிகள் தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்று கணக்குப் போட்ட சிவாஜி, நேரடியாக மகாராஷ்டிரம் செல்லும் ‘ரூட்’டைத் தவிர்த்து, அலஹாபாத், காசி, கயா, தெலுங்கானா என்று சுற்றி வளைத்துக் கொண்டு ஆந்திரம் வழியாக பூனேவுக்கு வெற்றிகரமாகத் திரும்பினார். அவரைப் பார்த்தவுடன் மராட்டிய மக்கள் குதூகலத்தின் உச்சிக்குப் போய் மகிழ்ச்சியுடன் கூத்தாடினார்கள்.

சிவாஜி வெற்றிகரமாக இயங்கிய, மொகலாயர்கள் திணறிய மராட்டிய மலைப்பகுதிகள்

தன் பயண வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாத மகன் சாம்பாஜியை, மதுராவில் ஒரு மராட்டிய பிராமணரிடம் ஒப்படைத்து விட்டு சிவாஜி வர வேண்டி வந்தது. மகன் பூனேக்கு வந்து சேர்ந்தது பிறபாடுதான்!

தான் தப்பித்தது குறித்து ஔரங்கசீப் எக்கச்சக்கமான கோபத்தில்

இருப்பார் என்பதைப் புரிந்துகொண்ட சிவாஜி, மூன்று ஆண்டுகள் மொகலாயர்களிடம் எந்த வம்புக்கும் போகவில்லை! கோபம் குறைந்து சற்று அமைதியடைந்த ஔரங்கசீப், சிவாஜி ‘ராஜா’ என்று அழைக்கப்படுவதை அங்கீகரிக்கவும் செய்தார் என்றால் பார்த்துக் கொள்ளலாம்!

1669-ம் ஆண்டில் ஔரங்கசீப் ‘இந்து கோயில்கள் இடிப்பு’த் திட்டத்தை முழு மூச்சோடு செயல்படுத்தவே, மீண்டும் போர்க்கொடி உயர்த்தினார் சிவாஜி. 1670-ல் சூரத் நகரம் கைப்பற்றப்பட்டு இரண்டாவது முறை மராட்டியப்படையால் சூறையாடப் பட்டது (இந்த முறை கிடைத்தது 132 லட்ச ரூபாய் மதிப்புள்ள செல்வம்!).

அதைத் தொடர்ந்து, திரும்பத் திரும்பத் தாக்குதல் நடத்தி மொகலாயர் வசம் போயிருந்த தன் கோட்டைகள் எல்லாவற்றையும் மீண்டும் கைப்பற்றிக் கொண்டார் சிவாஜி.

வடக்கே மொகலாய ஆட்சிக்குட்ப்பட்ட எல்லைகளுக்குள்ளும் மராட்டியப்படைகள் புகுந்து கொரில்லாத் தாக்குதல்கள் நிகழ்த்தின. ‘இனி மராட்டிய அரசுக்குச் சூரத் நகரம் கப்பம் கட்ட வேண்டும்’ என்று சிவாஜி (1672-ல்) ஆணை பிறப்பிக்கும் அளவுக்கு நிலைமை (மொகலாயர்களுக்கு) மோசமானது!

தொடர்ந்து இருதரப்புக்கும் சில நேரடி யுத்தங்களும் நடந்தன. வல்லமை படைத்த மொகலாய தளபதிகள், சிவாஜியிடம் தொடர்ந்து தோற்றுப் போனார்கள்.

இதற்கெல்லாம் நடுவில் வடமேற்கே, ஆப்கானியர்களின் தொல்லையும் ஔரங்கசீப்பைச் சிரமப்படுத்தி வந்தது. மொகலாயப்படையின் ஒரு பெரும்பகுதியை ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அனுப்ப வேண்டி வந்தது. மொத்தப் படையாலேயே சிவாஜியைச் சமாளிக்க முடியாமல் போக, மிச்சப் படையை பாதுஷா அனுப்பி என்ன செய்ய?!

1674-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் தேதி மந்திரங்கள் முழங்க, வாணவேடிக்கைகள் ஒளிகூட்ட, கோலாகலமான விழாவில் ‘சத்ரபதி’ என்ற பெயருடன் முடிசூட்டிக் கொண்டார் சிவாஜி. விழாவுக்கு ஆங்கிலேய, பிரெஞ்சுப் பிரதிநிதிகள்கூட வருகை தந்து பரிசளித்துவிட்டுச் சென்றார்கள் (சிவாஜி தரித்த ராஜ உடையும் போர்வாளும் அஃப்ஸல்கானைக் கொல்லப் பயன்படுத்திய ‘புலி நகமும்’ பூனேயில், சதாரா மியூஸியத்தில் இருப்பதை இன்றைக்கும் காணலாம்). இதற்கெல்லாம் பிறகும் ‘சிவாஜி தலைவலி’ ஔரங்கசீப்புக்கு நீடித்தது...!

கரடியும் தேனீக்களும்..!

இந்திய வரலாற்றில் சிவாஜியின் வருகைக்கு முன் ஆங்காங்கே ஆட்சி புரிந்த இந்து மன்னர்கள் (ராஜபுத்திரர்கள் உட்பட) சிற்றரசர்களாகக் காலம் கழித்துவிட்டுப் போவதிலேயே திருப்திப்பட்டுக் கொண்டிருந் தார்கள். பெரியதொரு சாம்ராஜ்யம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்கிற விசாலமான எண்ணமெல்லாம் அவர்களுக்கு ஏற்பட வில்லை. துகள்களாகச் சிதறிக்கிடந்த மராட்டிய மக்களைப் பெரும் சக்தியாக ஒன்றுபடுத்தி ஒரு வலுவான சாம்ராஜ்யத்தை நிறுவ முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியவர் சத்ரபதி சிவாஜிதான். பல ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்கள் சிவாஜியை அலெக்ஸாந்தரோடும் ஜூலியஸ்

சீசரோடும் ஒப்பிட்டு வியக்கிறார்கள். ‘குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டாமல் இந்து மன்னர்கள் வலிமைபொருந்திய பெரும் எதிரிகளைக்கூடப் போரில் தோற்கடிக்க முடியும், அதேசமயம் கலை வளர்ச்சிக்கும் வழிகாட்ட முடியும், வெளிநாடுகளுடன் வாணிகத் தொடர்புகள் வைத்துக்கொள்ள முடியும், மொத்தத்தில் உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய பெரும் சாம்ராஜ்யத்தைத் தோற்றுவிக்க முடியும்’ என்கிற கனவை மக்கள் மனதில் விதைத்ததோடு நிறுத்திக்கொள்ளாமல் தானே அதைப் பெருமளவு செயல்படுத்தியும் காட்டியவர் சிவாஜி.

‘சத்ரபதி’ என்று பட்டம் சூட்டிக்கொண்ட கையோடு சிவாஜி, ஔரங்கசீப்புக்கு எழுதிய கடிதத்தில் அவருடைய எதிர்ப்பு உணர்ச்சியும் அச்சமின்மையும் வெளிப்பட்டு நிற்பது குறிப்பிடத்தக்கது...

‘மேன்மைதங்கிய சக்ரவர்த்தி ஆலம்கீர் அவர்களுக்கு, தங்கள் பெரிய பாட்டனார் அக்பர் பாதுஷா 52 ஆண்டுகள் ஆட்சிபுரிந்து வல்லமை பொருந்திய, கட்டுக்கோப்பான ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கிக் காட்டினார். மனித நேயத்தையும், நாட்டின் ஒற்றுமையையும் மதித்து நடந்துகொண்டார் அவர். இந்துக்கள், கிறிஸ்துவர்கள், யூதர்கள், சீக்கியர்கள், ஜைனர்கள், நாத்திகவாதிகள்... எல்லோரையும் தன் குடிமக்களாக, சரிசமமாகப் பாவித்து நடத்தினார். எல்லோரையும் காத்து ரட்சிக்க வேண்டியது தன் கடமை என்பதை அக்பர் பாதுஷாவின் பரந்த இதயம் புரிந்துகொண்டிருந்தது. ஆகவேதான் அவரை மக்கள் ‘ஜகத்குரு’ என்று பாராட்டினார்கள். அவருக்குப் பின் வந்து 22 ஆண்டுகள் கோலோச்சிய ஜஹாங்கீர் பாதுஷாவும் சரி.. பிறகு 32 ஆண்டுகள் நாட்டைப் பரிபாலித்த ஷாஜஹானும் சரி, பெருமளவு அக்பர் பாதுஷாவைப் பின்பற்றி நல்ல முறையில் ஆட்சி புரிந்தார்கள். தாங்களோ இந்த விஷயத்தில் கவனத்தைச் சிதறவிட்டுத் தோல்வியடைந்தீர்கள். ‘ஜிஸியா’ வரி விதிப்பதற்கான பலமும் துணிவும் அதிகாரமும் அவர்களுக்கெல்லாம் இல்லாமலா இருந்தது? ஆனால், அவர்கள் அந்தக் காரியத்தில் இறங்கவில்லை. தேவையில்லாமல் அந்தப் பாரபட்சமான வரி விதிப்பை ஓர் ஆயுதமாகக் கையில் எடுத்துக்கொண்டவர் தாங்கள்தான். எல்லா மதங்களும் நம்மை அழைத்துச்செல்லும் இலக்கு ஒன்றுதான் என்பதைத் தாங்கள் புரிந்து கொள்ளவில்லை. அதிகாரம் இருக்கிறது என்பதற்காக எறும்புகளையும் ஈக்களையும் துன்புறுத்துவது எந்த வகையில் வீரம்? தங்களுடைய (இந்து எதிர்ப்பு) கொள்கை விளைவித்திருக்கும் விபரீதங்களைப் பற்றிய முழு விவரங்களைத் தங்களிடம் எடுத்துச் சொல்லாத அதிகாரிகளின் ‘விசுவாசம்’ பற்றி என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை! ஆகவேதான் ஏராளமான பிரதேசங்களும் கோட்டைகளும் தங்கள் கையை விட்டுச் சென்றுவிட்டன. மிச்சம் இருப்பவையும் போகத்தான் போகிறது. என்னைப் பொறுத்தமட்டில் என் கடைசி மூச்சு இருக்கும் வரையில் தங்களை எதிர்ப்பதில் நான் ஓயமாட்டேன். தொடர்ந்து தங்கள் சாம்ராஜ்யப் பகுதிகளை அழிப்பேன். கோட்டைகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றுவேன். நாட்டில் நிலவும் உண்மை நிலவரத்தைத் தங்கள் அதிகாரிகள் பாதுஷாவுக்குத் தெரியப்படுத்தாமல் இருப்பது மட்டுமல்ல, கொழுந்துவிட்டெரியும் எதிர்ப்புத் தீயை வைக்கோல் கட்டுகளைப் போட்டு அவர்கள் அணைக்கப் பார்ப்பதுதான் பரிதாபம்...!’

கிறுக்குப்பிடித்த மராட்டியக் கொள்ளைக் கூட்டத் தலைவனின் அதிகப்பிரசங்கித்தனம் மிகுந்த கிறுக்கலாகப் பாவித்து, சிவாஜியின் கடிதத்தை அலட்சியத்துடன் ஒதுக்கித் தள்ளினார் ஔரங்கசீப் பாதுஷா.

உடனடியாக கோல்கொண்டாவுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார் சிவாஜி. 1677-ல் பூனேயிலிருந்து கிளம்பி ஹைதராபாத்துக்குப் பெரும் படையுடன் வருகை தந்த அவருக்குக் கோலாகலமாக வரவேற்புத் தரப்பட்டது. அங்கிருந்து கர்நூல் பகுதி வழியாகப் பயணித்த சிவாஜியின் மராட்டியப்படை திடீரென்று தமிழகத்தில், சென்னைக்குச் சுமார் 100 மைல் தொலைவில் உள்ள (பீஜப்பூர் ஆளுகையில் இருந்த) செஞ்சியை மின்னல் வேகத்தில் புகுந்து இடியெனத் தாக்கிக் கைப்பற்றியது. தொடர்ந்து வேலூரையும் முற்றுகையிட்டுக் கைப்பற்றிய சிவாஜி, பீஜப்பூர் வசமிருந்த திருச்சியின் ஆளுநரான ஷெர்கானைக் கடலூர் அருகே நடந்த யுத்தத்தில் முறியடித்தார். பிறகு, சிதம்பரம் அருகே உள்ள புவனகிரி, மராட்டியர்களால் கைப்பற்றப்பட்டது. தஞ்சாவூரும் திருச்சியும் சுதந்திரப் பகுதிகளாக சிவாஜியின் ஒன்று விட்ட சகோதரர் வெங்காஜியின் (சிவாஜியின் எதிரியும்கூட!) ஆட்சியில் இருந்தன.

தஞ்சாவூர் அருகே திருமாலவாடி என்னும் ஊரில் பாசறை அமைத்த சிவாஜியின் படை தஞ்சாவூரையும் திருச்சியையும் கபளீகரம் செய்தது. இப்படியாக, தென்பகுதியில் சிவாஜி கைப்பற்றிய கோட்டைகளின் எண்ணிக்கை ‘செஞ்சுரி’ போட்டது!

மராட்டிய சூறாவளிப் போர்ப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு, தன் தந்தையின் இன்னொரு மனைவிக்குப் பிறந்த சாந்தாஜியைச் செஞ்சிக்கு வைஸ்ராய் ஆக நியமித்துவிட்டு ஊர் திரும்பிய சிவாஜி திடீரென்று வயிற்றுப் போக்கால் பாதிக்கப் பட்டு படுக்கையில் விழுந்து 1680-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் காலமானார். அப்போது அவருக்கு வயது ஐம்பது (53 என்றும் சிலர் கூறுகின்றனர்.).

இறப்பதற்குச் சில நிமிடங்களுக்குமுன் சிவாஜி விடுத்த வேண்டுகோள் - “என் மூச்சு அடங்கும்போது, ஒரு பசுவின் வாலை என் உள்ளங்கை மீது வைக்க வேண்டும். என் உயிர் பசுவின் வால் வழியே அதன் கர்ப்பப்பைக்குள் முதலில் புகுந்து புனிதம் அடைய வேண்டும். பாரசீகப் பன்னீரால் என் உடலைக் குளிப்பாட்டிச் சந்தனம் பூசுங்கள். நெய்யில் தோய்த்தெடுக்கப்பட்ட சந்தன மரங்களைக் கொண்டு என்னை எரித்துவிடுங்கள். என் சாம்பலைக் கங்கை நதியில் கரைக்கவும்.”

சிவாஜிக்குப் பிறகு மராட்டிய அரியணை ஏறி அமர்ந்தார் அவர் வாரிசு சாம்பாஜி. அவரிடம் வீரத்துக்குக் குறைவில்லா விட்டாலும் ஒழுக்கம் சற்றுப் பின்தங்கி இருந்தது. சாம்பாஜியும் அவருடைய பிரதம அமைச்சர் கவிகைலாஷ் என்னும் பிராமணரும் அடித்த கும்மாளம் கண்டு மராட்டிய மக்கள் முகம் சுளித்தார்கள். சற்றுக் கிறுக்குப் பிடித்த சாம்பாஜி, தந்தை சிவாஜி இறப்பதற்கு முன்பு தன்னை வேகமாக அரண்மனைக்குக் கொண்டு சேர்க்கவில்லை என்ற காரணத்துக்காகச் தன்னைச் சுமந்து வந்த ஒட்டகத்தின் மீது கோபம் கொண்டு அதன் தலையைச் சீவித் தள்ளியது ஒரு விபரீதமான தமாஷ் செய்தி!

அதேசமயம், மொகலாய ஆட்சியை எதிர்ப்பதில் முனைப்புக் காட்டாமல் இல்லை சாம்பாஜி. ஏற்கெனவே சிவாஜி பிரமாண்டமாக உருவாக்கி வைத்திருந்த மராட்டிய எதிர்ப்புச் சக்தி துடிப்பாகக் கிளர்ந்தெழுந்து தயாராக நின்றதால் அதற்குத் தலைமை தாங்கிய சாம்பாஜியும் ஔரங்கசீப்புக்குப் பிரச்னையாகவே விளங்கினார்.

கடைசியில், சாம்பாஜி முக்கியத்துவம் தந்த கேளிக்கையே அவர் உயிருக்கு எமனாக வந்து வாய்த்தது...

1689- பிப்ரவரி 11-ம் தேதியன்று மகாராஷ்டிரத்தில், கோலாப்பூருக்கு அருகாமையில் உள்ள ரத்தினகிரிக்கு 22 மைல் தொலைவில் சங்கமேஷ்வர் என்னும் ஊரில் உல்லாசத்தில் மூழ்கியிருந்த சாம்பாஜியையும் கவிகைலாஷையும் மற்றும் 25 மெய்க்காவலர்களையும் ஒரு மொகலாய அதிரடிப்படை சிறைப்பிடித்தது. (கோகலேயும் திலகரும் பிறந்த ஊர் ரத்தினகிரி. கடைசி மொகலாய மன்னரை பர்மாவுக்கு நாடு கடத்தியதைப் போல கடைசி பர்மிய மன்னரை ரத்தினகிரிக்கு நாடு கடத்திக்கொண்டு வந்து சிறையில் அடைத்து வைத்திருந்தது பிரிட்டிஷ் ஆட்சி. 1916-ல் ரத்தினகிரியில் அவர் காலமானது வேறு கதை!)

சாம்பாஜியையும் அவரது பிரதம அமைச்சரையும் சங்கிலிகளால் பிணைத்து அவர்கள் தலைமுடியைப் பிடித்து இழுத்து வந்து தட்சிணப் பிரதேசத்தில் பகதூர்கர் என்னும் ஊரில் பாசறை அமைத்திருந்த ஔரங்கசீப்பின் முன் போட்டார்கள். இருவரையும் கழுதைகள் மீது அமர்த்திக் கோமாளிக் குல்லாய் அணிவித்து ஊர்வலமாக விடச் செய்தார் பாதுஷா. பிறகு, சக்ரவர்த்திமுன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டபோது சாம்பாஜி கெட்ட வார்த்தைகளைச் சரமாரியாகப் பிரயோகித்துப் பாதுஷாவை ஏச, அமைச்சர் கவிகைலாஷும் தன் பங்குக்குக் கேவலமாகவும் கிண்டலாகவும் ஔரங்கசீப் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல, திகைத்துப்போய் முகம் சிவந்த பாதுஷா, இருவரின் நாக்குகளையும் உடனே துண்டிக்கச் சொல்லி ஆணையிட்டார். அதன் பிறகு கைதிகளை ஒரு வார காலம் சிறையில் தள்ளி விதவிதமாகச் சித்ரவதைகள் செய்தார்கள்.

சாம்பாஜியின் கண்கள் ஆணிகளால் ஊடுருவப்பட்டன. பார்வை இழந்து குரூரமாக உடல் சிதைந்துபோன நிலையிலும் காறி உமிழ்ந்து எதிர்ப்பைக் காட்டிய சாம்பாஜியின் உடலைத் துண்டு துண்டுகளாக வெட்டி வீழ்த்துமாறு ஆணை அனுப்பினார் ஔரங்கசீப். சாம்பாஜியின் அங்கங்களை, ஒவ்வொன்றாக வெட்டித் தள்ளி நாய்களுக்கு உணவாகப் போட்டனர் மொகலாய வீரர்கள். அவருடைய தலையைச் சீவி வைக்கோல் அடைத்து தாரை தப்பட்டை முழங்க ஊர்வலமாகக் கொண்டு சென்றார்கள். பிறகு, சாம்பாஜியின் தலையை டெல்லிக்குக் கொண்டுபோய்க் கோட்டை வாசலில் காட்சிப் பொருளாகப் பல வாரங்கள் வைத்திருந்தார்கள்.

சாம்பாஜியின் வீழ்ச்சிக்குப் பிறகு பாதுஷாவின் படை பெரும்பாலான மராட்டியக் கோட்டைகளை மீண்டும் கைப் பற்றியது. ரெய்ச்சூர், அதோனி, பெங்களூர், வந்தவாசி, காஞ்சிபுரம், பெல்காம் ஊர்களில் மராட்டியர்கள் வசமிருந்த கோட்டைகள் மொகலாயர் கைகளில் வீழ்ந்தன.

உச்சகட்டமாக பூனேயில் உள்ள பிரதான மராட்டியக் கோட்டையான ராய்கர், ஔரங்கசீப் படையால் சூழ்ந்துகொள்ளப் பட்டது. சாம்பாஜிக்குப் பிறகு பட்டம் சூட்டிக்கொண்ட சிவாஜியின் இன்னொரு மகன் ராஜாராம் அங்கிருந்து மாறுவேடம் பூண்டு செஞ்சிக் கோட்டைக்குத் தன் படையுடன் தப்பிச் சென்றார்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, மராட்டிய எதிர்ப்பை ஔரங்கசீப் தீர்த்துக் கட்டிவிட்டதாகத் தோன்றினாலும் உண்மை அதுவல்ல. சிவாஜி பரவலாகத் தூண்டி விட்டிருந்த எதிர்ப்பு உணர்ச்சி

நெருப்பாக பூமிக்கடியில் தகித்துக் கொண்டிருந்ததால் மொகலாயர்களால் எங்கும் அழுந்தக் காலூன்ற முடியவில்லை.

சிவாஜி எனப்படும் ஒரு தனி மனிதனின் வீரத்தைக் கடந்து மக்கள் போராட்டமாக எதிர்ப்பு விசுவரூபமெடுத்துவிட்டதால் தெற்கே எந்தப் பகுதியையும் ஔரங்கசீப் தன் நிச்சயமான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. ஷையா ராஜ்யங்களான பீஜப்பூரையும் கோல்கொண்டாவையும் ஔரங்கசீப் கைப்பற்றியிருந்தும் பலனில்லை.

சாம்பாஜிக்குப் பாதுஷா அளித்த தண்டனையைத் தவறான அணுகுமுறை என்று வரலாற்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். தன் ஒழுக்கக் கேட்டினால் மக்கள் அன்பைப் பெருமளவு இழந்திருந்த சாம்பாஜி, இறப்பதற்குமுன் கொடுமைகளை அனுபவித்ததும், அந்த நிலையிலும் ஔரங்கசீப்பை நேரடியாக ஏசியதும் மராட்டிய மக்கள் காதுகளுக்கு எட்டியது. உடனே சாம்பாஜியின் குறைகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு அவரை ஒரு புரட்சி வீரராக, பெரும் தியாகியாக மராட்டிய மக்கள் ஏற்றுக்கொண்டனர்!

பிற்பாடு, சாந்தாஜி கோர்ப்படே, தானாஜி தானவா போன்ற பல மராட்டியத் தளபதிகள் தனித்தனி அதிரடிப்படைகளுக்குத் தலைமை தாங்கி மொகலாயர்களை நாலாபுறத்திலும் தாக்கினார்கள். உலகில் உள்ள அற்புதமான கோட்டைகளில் ஒன்று என்று ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்களால் புகழப்பட்ட செஞ்சிக்கோட்டையை எட்டாண்டு காலம் மொகலாயப்படை முற்றுகையிட்டும் வெற்றிகாண முடியவில்லை (நீண்ட பெரும் கோட்டைச் சுவரால் ஒருங்கிணைக்கப்பட்ட மூன்று மலைக்கோட்டைகள் கொண்டது செஞ்சிக்கோட்டைப் பகுதி. 1442-ல் விஜயநகர ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட இந்தக் கோட்டைகள் பிற்பாடு பீஜப்பூர் வசம் வீழ்ந்தது.).

“செஞ்சிக்கோட்டை என்னவாயிற்று?” என்று கர்ஜித்தார் ஔரங்கசீப். 1698-ல் மொகலாயத் தளபதி ஜுல்பிகர்கான் பாதுஷாவுக்குத் தெரியாமல் (இதற்குள் ஓரளவு நண்பராகிவிட்ட!) ராஜாராமுடன் ரகசிய உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி ராஜாராம், சதாராவுக்கு மொகலாயத் தளபதியின் உதவியோடு தப்பிச் சென்றார். செஞ்சி ஒருவழியாக வீழ்ந்தது. பூனேயில் உள்ள சதாரா கோட்டைக்குச் சென்ற ராஜாராம் பெரும் படை திரட்டிக்கொண்டு மொகலாயர்களை மீண்டும் எதிர்த்தார். ஔரங்கசீப் அவசர அவசரமாக அனுப்பிய படை மிகவும் சிரமப்பட்டு சதாராவைக் கைப்பற்றியது.

மொகலாயப்படை ஒவ்வொரு கோட்டையாகக் கைப்பற்றுவதும் அதை அதிரடியாக ஏதாவது ஒரு மராட்டியப்படை மறுபடி தாக்கிப் பறித்துக்கொள்வதும் வாடிக்கையாகிப் போனது. மொத்தத்தில், இந்தத் தென்னக படையெடுப்பால் கோடிக்கணக்கில் பணம் செலவழிந்து பாதுஷாவின் டெல்லி கஜானா ஏறக்குறையக் காலியாகும் நிலை ஏற்பட்டுவிட்டது எனலாம்!

1700-ல் ராஜாராம் இறந்த பிறகு ‘அப்பாடா!’ என்று ஔரங்கசீப் எழுந்து நிற்பதற்குள் ராஜாராம் மனைவி தாராபாய், சிவாஜிக்கு இணையான புத்திக்கூர்மையுடன் மராட்டியப்படைக்குத் தலைமை தாங்கி டெல்லிப்படையைத் துன்புறுத்தினார். போர்க்களத்தில் படைவீரர்களுடன் சரிசமமாகப் பழகி ஒரு சராசரி வீரரைப் போல பாசறையிலேயே உண்டு உறங்கி எதிரிகளுடன் வெற்றிகரமாக மோதினார் தாராபாய். (இன்றளவும் மராட்டியர்கள் அதிக அளவில்

தாராபாய் என்று குழந்தை களுக்குப் பெயரிடுவதைப் பார்க்கலாம்!)

தாராபாய் தலைமையில் மராட்டியர்கள் வடக்கே மால்வாவைக்கூடக் கைப் பற்றினார்கள். அஹமதாபாத், உஜ்ஜயினி நகர்களில்கூட இந்த வீராங்கனையின் படை புகுந்து தூள் கிளப்பியது.

தெற்கே, மொகலாயர்களின் முக்கிய நகரமான அகமதுநகரையும் தாராபாயின் படை ஆர்ப்பாட்டமாக முற்றுகையிட்டது. மொகலாயப் படை அவர்களைத் துரத்தியடிக்க மிகவும் சிரமப்பட வேண்டி யிருந்தது. அகமதுநகரில் தங்கியிருந்த ஔரங்கசீப் தப்பித்ததே பெரிய விஷயம் என்றால் பார்த்துக்கொள்ளலாம்!

'இப்படியாக, மக்கள் எதிர்ப்பை வீரியத்துடன் பிரதிபலிக்கும் வகையில் மொகலாயர்கள் மீது ஆங்காங்கே பாய்ந்து தாக்கிய மராட்டியக் கொரில்லாப் படைகளைக் காணும்போது, இப்படியும் அப்படியுமாகத் திரும்பித் திகைத்துத் தடுமாறிக் கொண்டிருக்கும் வயதான கரடி ஒன்றைத் தேனீக் கூட்டம் சூழ்ந்து ஆவேசமாகத் தாக்குவது போல இருந்தது' என்று நிலைமையை வர்ணிக்கிறார் ஒரு வரலாற்று ஆசிரியர்.

இந்த யுத்தமயமான சூழ்நிலையில் இங்கிலாந்து மன்னர் மூன்றாம் வில்லியம் ஒரு தூதுவரை இந்தியாவுக்கு அனுப்பினார். சர் வில்லியம் நாரிஸ் என்னும் அந்தத் தூதுவர் வந்த காரணம் - கிழக்கிந்திய கம்பெனி மொகலாய ஆட்சியுடன் வர்த்தக உடன்படிக்கை செய்துகொள்வதற்கும் சலுகைகள் பெறுவதற்கும்! இதில் ஆங்கிலேயர்கள் எதிர்பார்த்த அளவு வெற்றி கிட்டவில்லை.

பாதுஷாவுக்குத் தரச் சொல்லி தூதுவர் நாரிஸ் மூலம் ஏராளமான பரிசுகள் அனுப்பியிருந்தார் மன்னர் வில்லியம். நாரிஸ் வந்துசேர்ந்த சமயம் ஔரங்கசீப்பின் நேரடித் தலைமையில் பூனே அருகே உள்ள பன்ஹாலா என்னும் மலைக்கோட்டையை மொகலாயப்படை ஆறு மாதங்களாக முற்றுகையிட்டுக் கொண்டிருந்தது. 'டாய்லெட் வசதிகள் சரியாக இல்லை. பாதுஷாவின் படை தங்கியிருந்த இடம் சேறும் சகதியுமாக மோசமான நிலையில் இருந்தது. படை வீரர்களுக்கும் ஒரு வருட சம்பளம் பாக்கி!' என்று விவரிக்கிறார் நாரிஸ். மேலும் 'வயது 82 ஆனபோதும் சுறு சுறுப்பாகவும் கம்பீரமாகவும் காட்சியளித்தார் ஔரங்கசீப் பாதுஷா. ஒவ்வொரு நாளும் அணிவகுப்பைப் பார்வையிட்டு, எடுக்க வேண்டிய போர் நடவடிக்கைகள் பற்றி விளக்கிவிட்டு பாசறைக்கு திரும்பினார் ஔரங்கசீப். திறந்த பல்லக்கு ஒன்றில் பயணித்தார் இந்த வயது முதிர்ந்த பாதுஷா. உடை, டர்பன், நீண்ட தாடி எல்லாமே வெண்மையாக, தூய்மையாகக் காட்சி தந்தன. போர்க்களத்திலிருந்து பாசறைக்கு அவர் பல்லக்கு பயணித்தபோது மக்கள் ஆர்வத்துடன் நெருங்கி அவரைப் பார்க்க அலைமோதினார்கள். ஆனால், பாதுஷா யாரையும் நிமிர்ந்து பார்க்கவில்லை. வழியெங்கும் தன் கையில் வைத்திருந்த புனித குர்-ஆன் புத்தகத்தைப் படிப்பதிலேயே அவர் கவனம் இருந்தது. எப்போதாவது தலைநிமிர்ந்தபோது லேசாக ஒரு தலையசைப்போடு சரி!'

- பாதுஷாவின் பல்லக்கின் அருகே நடந்து சென்ற இந்த ஆங்கிலேயத் தூதுவரின் விவரிப்பு இப்படி....

ஆலம்கீர் - ஒரு அலசல்!

இன்றளவும் ஔரங்கசீப் என்னும் தனி மனிதரை ஒரு வட்டத்துக்குள் அடக்கி முத்தாய்ப்பாக விளக்க முடியவில்லை என்று பல வரலாற்று ஆசிரியர்கள் ஒப்புக் கொள்கின்றனர். இருந்தபோதும் சரி, இறந்த பிறகும் சரி - ஒரு புரிபடாத, விடுவிக்க முடியாத பெரும் புதிராகவே விளங்கினார் ஔரங்கசீப்!

பாதுஷாவின் குறைகளை மட்டும் வரிசைப்படுத்தி 'மிக மோசமானதொரு அரசர்' என்று முத்திரை குத்தும் சரித்திர ஆசிரியர்கள் உண்டு. 'இவரை மிஞ்சிய சிறந்த ஆட்சியாளர் எவருமில்லை' என்று புகழ்பாடுபவர்களும் உண்டு. இரு தரப்பினருக்குமே எடுத்துக் கையாள ஏராளமான வாதங்கள் வரலாற்றின் கைவசம் உண்டு என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது!

'ஔரங்கசீப் ஒரு சரியான கொலைகார ஆசாமி' என்று பொதுவாக ஒரு கருத்து உண்டு. 'மற்ற பல மன்னர்களைவிட அப்படி ஒன்றும் ரத்தம் சிந்துவதில் ஔரங்கசீப் ஆர்வம் காட்டியதாகச் சொல்ல முடியாது. தைமூரைப் போலவோ, அலாவுதீன் கில்ஜியைப் போலவோ, முகமது பின் துக்ளக்கைப் போலவோ கண நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டு யார் தலையையும் சீவியதில்லை பாதுஷா. ஒவ்வொரு சுல்தான் ஆட்சியிலும் அரியணைக்காக வாரிசுகள் வாளெடுத்து மோதிக்கொண்டதுண்டு. ஷாஜஹான் தனக்குப் போட்டியாக இருந்த 'உடன்பிறப்புகளை'யெல்லாம் தீர்த்துக் கட்டச் செய்த பிறகே ரத்தப்படிக்கட்டுகளில் ஏறி மகுடம் சூட்டிக்கொண்டார் என்பது நமக்குத் தெரிந்த விஷயம். ஆகவே, இந்த விஷயத்தில் ஔரங்கசீப்பை மட்டும் தனிமைப்படுத்தி 'கொலைகாரர்' என்று குற்றஞ்சாட்டுவது எந்த வகையில் நியாயம்?' என்கின்றனர் சில சரித்திர ஆசிரியர்கள்.

பாதுஷாவின் அண்ணன் தாரா ஷூகோ ஓர் அறிஞராகவும் மென்மை மிகுந்தவர் என்ற இமேஜ் கொண்டவருமாக இருந்ததால் அவர் மரணம் உணர்ச்சிகரமாக அமைந்து அதிக அளவு கவனத்தைக் கவர்ந்தது. தந்தையார் ஷாஜஹானை ஔரங்கசீப் நடத்திய விதம் மோசமானதே. பெரும் புகழுடன் கோலாகலமாக ஆட்சிபுரிந்த சக்ரவர்த்தியை நிராதரவாக வீட்டுச்சிறையில் தள்ளி, கேவலமாக மகன் நடத்தியது குறித்து யாராலும் பொருமாமல் இருக்க முடியாது.

தங்கள் முன்னேற்றத்துக்கு இடையூறாக அமைந்த தந்தையையும் வளர்த்து ஆளாக்கிய பெரியவர்களையும் வெட்டிச் சாய்த்துவிட்டு அரியணைக்குச் சென்றவர்கள், இந்திய மற்றும் உலக வரலாற்றுப் பக்கங்களில் நிறையவே பவனி வருகிறார்கள். ஏதோ, ஔரங்கசீப் தந்தையை உயிருடனாவது விட்டார்!

'புதிரால் சுற்றப்பட்ட முரண்பாடுகளின் மொத்த உருவம்' என்று ஔரங்கசீப் வர்ணிக்கப்பட்டாலும் அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை எளிமை, கட்டுப்பாடு, கண்டிப்பு மிகுந்ததாக அமைந்தது. உணர்ச்சிகளுக்கு அவர் கடைசிவரை அடிமையானதில்லை (ஹீராபாய் விஷயத்தில் சற்றே பாதுஷா தடுமாறியதை மறப்போம்!). குடிப்பழக்கம் அவருக்கு இருந்ததில்லை. உணவு மற்றும் உடை விஷயத்தில் ஆடம்பரத்தை அவர் அனுமதித்ததில்லை. பேரக்குழந்தைகளுடன் எப்போதாவது நேரம் கழித்தபோதும் அவர்களை மடியில் அமர்த்தி இறைவனின் பெருமைகளைத் தெளிவாகவும், சுவையாகவும் சொல்வதுதான் தாத்தா ஔரங்கசீப்பின் வழக்கம். அர்த்தமில்லாத விளையாட்டுகள், வெட்டிப் பேச்சுகள்... மூச்!

ராஜாங்க விஷயங்களிலும் ஆஸ்தான சபையிலும் மரபுகளும், சம்பிரதாயங்களும் சட்டதிட்டங்களும் துளிகூட மீறப்படக் கூடாது என்பதில் மிகவும் கண்டிப்புக் காட்டினார் ஆலம்கீர். பாதுஷாவின் சமகாலத்தில் வாழ்ந்த ஒரு வரலாற்று குறிப்பாளர் விவரிக்கிறார்... 'பாதுஷா ஆஸ்தான மண்டபத்தில் அமர்ந்திருக்கும் போது சபையில் ஒரு கௌரவமான அமைதி நிலவும். யாரும் தப்பும் தவறுமாக எதையும் பேசி நான் பார்த்ததில்லை. சபையில் இல்லாத ஒருவரைப் பற்றிக் கேலியாகப் பேசுவது பெரும் குற்றமாக பாதுஷாவால் கருதப்பட்டது. யாராக இருந்தாலும் சரி, மிகவும் மரியாதையான, அடக்கமான வார்த்தைகளையே பேச்சில் உபயோகிக்க வேண்டும். சொல்வதைத் தெளிவாக, தீர்க்கமாகச் சொல்ல வேண்டும். தினமும் இரண்டு அல்லது மூன்று முறை ஆஸ்தான மண்டபத்தில் அமர்ந்து மக்கள் குறைகளைக் கேட்பார் ஔரங்கசீப். அப்போது யார் வேண்டுமானாலும் நேரடியாகத் தங்கள் பிரச்னைகளை மன்னரிடம் கூறலாம். சாமானியராக இருந்தாலும் அவர் சொல்வதை சக்ரவர்த்தி மிகுந்த கவனத்துடன் கேட்டு உடனே தீர்ப்பு வழங்குவார். அவமரியாதையாகப் பேசுபவர்கள், அகம்பாவமாக நடந்துகொள்கிறவர்கள் டெல்லி நகரை விட்டே அதிகாரிகளால் அப்புறப்படுத்தப்பட்டார்கள்...!'

சபையில் தன்னிடம் தரப்பட்ட மனுக்களை உடனுக்குடனே படித்து அதில் குறிப்புகள் எழுதுவது பாதுஷா கடைசி வரை கடைப்பிடித்த ஒரு வழக்கம்.

'இந்த டெல்லி மன்னரின் பார்வை கூர்மையானதாக இருந்தது. மூக்குக்கண்ணாடி உதவி எதுவுமின்றி அலுப்புத் தட்டாத முகபாவத்துடன் விறுவிறுவென்று மனுக்களைத் தானே படித்து அதில் உடனுக்குடன் குறிப்புகளை சக்ரவர்த்தி எழுதுவதைப் பார்த்தபோது வியப்புதான் மேலிட்டது!' என்று 1695-ம் ஆண்டு இத்தாலியிலிருந்து டெல்லிக்கு வந்து சில காலம் அரண்மனையில் தங்கியிருந்த கேரேரி என்னும் மருத்துவர் குறிப்பிடுகிறார். ('மூக்குக்கண்ணாடி?!' என்று புருவத்தை உயர்த்துபவர்களுக்கு: கி.பி.700-ம் ஆண்டு வாக்கிலேயே சீனாவிலும் இந்தியாவிலும் மூக்குக்கண்ணாடிகள் புழக்கத்தில் வந்துவிட்டன. இம்போர்ட்டட் என்பதால் விலைதான் சற்று அதிகம்!)

வெகுதொலைவில் முகாமிட்டிருக்கும் தளபதிகளுக்கும் அமைச்சர்களுக்கும் கவர்னர்களுக்கும்கூட பாதுஷாவிடமிருந்து 'ரெகுலராக'க் கடிதங்கள் போகும். அவற்றில் பல நூற்றுக்கணக்கான கடிதங்கள் தொலைந்து போனாலும் இரண்டாயிரத் துக்கும் மேற்பட்ட (பாதுஷா எழுதிய மற்றும் 'டிக்டேட்' செய்த) கடிதங்களே இன்றளவும் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் உள்ளன! ஔரங்கசீப்பின் குணநலன்கள் பற்றி ஓரளவு புரிந்துகொள்ள இவை உதவுகின்றன...

தந்தையோடு தகராறு செய்து கொண்டிருந்த சமயம் ஔரங்கசீப் அவருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் சில வரிகள் -

'ஓநாயாகப் பிறந்துவிட்டு ஆடுமேய்க்கும் வேலை பார்க்க விரும்பக்கூடாது! ஒரு மன்னருடைய கடமை, குடிமக்களைக் கட்டிக்காப்பது, உல்லாசமாக வாழ்வதிலும் கேளிக்கைகளில் ஆர்வம் காட்டுவதிலும் அல்ல...'

'உடல்நலம் கருதி ஆலம்கீர் சற்று ஓய்வெடுக்க வேண்டும்...' என்று ஒரு தளபதி பாதுஷாவுக்கு கடிதம் எழுதினார் - அதற்கு

'இறைவன் கருணையால் நான் நாடாள அனுப்பப்பட்டிருக்கிறேன்.

கடைசிவரை உழைக்க வேண்டியது என் கடமை. எனக்காக அல்ல. குடிமக்கள் நலனுக்காக. மக்கள் மகிழ்ச்சியோடு பின்னிப் பிணைந்தாலே ஒழிய எனக்கு என்று தனிப்பட்ட மகிழ்ச்சி எதுவும் கிடையாது...' என்று ஔரங்கசீப் பிடமிருந்து பதில் போனது!

தன் சாம்ராஜ்ய வெற்றிகளைப் பற்றி ஷாஜஹான் பெருமையுடன் ஔரங்கசீப்புக்குச் சுட்டிக்காட்டி ஒரு கடிதம் எழுதினார். ஔரங்கசீப்பின் பதில் கடிதம் இப்படியாக முடிந்திருந்தது.

'.... பெரும் வெற்றி கண்ட மன்னர்கள் எல்லாம் சிறந்த மன்னர்கள் என்று அர்த்தமல்ல. நாகரிகம் இல்லாத காட்டுமிராண்டி மன்னர்கள் கூடப் பல நாடுகளை வெற்றி கண்டிருக்கின்றனர். அவர்கள் சிறப்புமிக்க மன்னர்கள் என்று பொருளா என்ன? அதேபோல மிகப்பெரிய வெற்றிகள் எல்லாம் சில ஆண்டுகளில் உதிர்ந்து துகள்களாகப் போன நிகழ்ச்சிகளும் உண்டு. ஆகவே, ஒரு மன்னன் நாட்டை எப்படி ஆள்கிறான் என்பதுதான் முக்கியம்...'

ஒரு சமயம் வரிகட்ட முடியாமல் விவசாயிகள் சிரமப்பட, அதுகுறித்து பாதுஷாவின் யோசனை கேட்டு கவர்னர் கடிதம் எழுதினார். பாதுஷாவின் பதில் - 'நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டாலோ அல்லது மழையே இல்லாமல் போனாலோ அல்லது இயற்கையின் எதிர்பாராத ஏதேனும் சதியால் விவசாயம் ஒட்டுமொத்தமாகப் பாதிக்கப்பட்டாலோ, அதற்காக விவசாய மக்களைப் பிரச்னைக்குள்ளாக்க வேண்டாம். வரியைத் தள்ளுபடி செய்துவிடவும்.' கூடவே 'வரிகட்ட முடியாமலிருப்பது உண்மைதானா என்பதை நன்கு விசாரிக்க வேண்டும்' என்றும் எச்சரிக்கையுடன் குறிப்பிடுகிறார் பாதுஷா!

சோம்பிச் சாய்ந்த நிலையில் ஔரங்கசீப்பை யாரும் கண்டதில்லை. உடல்நலக்குறைவாக இருந்தபோதும் ராணுவ அணிவகுப்பைப் பார்வையிடுவது, மனுக்கள் வாங்குவது... எதையும் தள்ளிப் போட்டதில்லை சக்ரவர்த்தி.

தன் இரண்டாவது மகனுக்கு ஔரங்கசீப் சொல்லிய அறிவுரை (கடிதம் மூலமாகத் தான்!) -

'ஓய்வெடுப்பது, உல்லாசமாக விடுமுறை எடுப்பது... இதிலெல்லாம் ஆளப்பிறந்தவர்கள் நாட்டம் செலுத்தக்கூடாது. மக்களுக்காகத் தொடர்ந்து உழைப்பது ஒன்றே ஆட்சியாளர்களின் கடமை. அரசரும் சரி, தண்ணீரும் சரி - ஒரே இடத்தில் தேங்கக் கூடாது. தண்ணீர் கெட்டுப்போய்விடும். அரசரும் மதிப்பிழந்து போய்விடுவார்..!'

அதற்கேற்ப, ஔரங்கசீப் தெற்கே படைக்குத் தலைமைதாங்கிச் சென்றபோது அவருக்கு வயது 65-ஐக் கடந்துவிட்டது. வழியில் நதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது. மலைகள் குறுக்கிட்டன. நோய்களால் வீரர்கள் பாதிப்பு, குடிநீர்ப் பற்றாக்குறை, கொதிக்கும் வெயில், பஞ்சம்... எதற்கும் முகம் சுளிக்காமல் ஓர் இளம் வீரனுக்குரிய சுறுசுறுப்புடன் இயங்கினார் ஔரங்கசீப். இத்தனைக்கும் நடுவில் போர்த்திட்டங்கள் பற்றிய ஆலோசனைகள், அடுத்த தாக்குதல் எப்படித் திகழ வேண்டும் என்று படம் வரைந்து காட்டுதல், தளபதிகளை மாற்றுதல், புதிய தளபதிகளை நியமித்தல், ஒற்றர்களுக்கு ஆணைகள் பிறப்பித்தல்... அத்தனையையும் தளராமல், துவளாமல் கவனித்தார் பாதுஷா.

இப்படியாக, நிர்வாகம் சம்பந்தமாக எல்லாவற்றையும் பாதுஷா

தானே இழுத்துப்போட்டுக் கொண்டு ஆணைகள் பிறப்பித்ததன் விளைவு - தலைமைப் பொறுப்பில் இருந்த மற்றவர்களுக்குச் சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் திறமையே போய்விட்டது எனலாம்! பாதுஷாவின் ஆணை வரும்வரை எந்தவொரு அவசர விஷயத்திலும்கூட முடிவெடுக்காமல் குழப்பத்தில் தவித்தனர் அதிகாரிகள்.

‘ஒரு தனி மனிதர் என்கிற முறையில் பக்தி, எளிமை, நீதி, வீரம், அறிவு, ஒழுக்கம் எல்லாவற்றிலும் மிகச் சிறந்து விளங்கினார் ஔரங்கசீப் பாதுஷா. ஆனால், ஒரு நாடாளும் சக்ரவர்த்தி என்று பார்க்கும்போது பாதுஷா தோல்வியடைந்ததாகத்தான் சொல்ல வேண்டும்...’ என்று கைஃபிகான் என்னும் ஔரங்கசீப் காலத்திய வரலாற்றுக் குறிப்பெழுத்தாளர் கருத்து தெரிவிக்கிறார்.

‘அதற்கு மிக முக்கிய காரணம், இந்தியாவில் பெரும்பான்மையாக வாழ்ந்த இந்துக்களைப் பாதுஷா பாரபட்சமாக நடத்தினார். ஜிஸியா வரியை அவர்கள் மீது விதித்தார். சீக்கியர்களையும் மராட்டியர்களையும் பகைத்துக்கொண்டார். குறிப்பாக, தன் கீழ் பணிபுரிந்த எல்லோர் மீதும் இருந்த சந்தேகம் காரணமாகச் சின்னச் சின்ன விஷயங்களில் கூடத் தானே முடிவெடுத்ததும் அவர் தோல்விக்கு வழி வகுத்தது’ என்று பல வரலாற்று ஆசிரியர்கள் ஒருமித்த கருத்து தெரிவிக்கின்றனர்.

தவிர, சட்டத்தை ‘ஓவர் டோஸாக’ மக்கள் மீது பிரயோகித்த தவறையும் செய்தார் ஆலம்கீர். ‘ஒரு சிறு விதியை மீற அனுமதித்தால் அதுபோதும் - எல்லா விதிகளும் மீறப்படும்’ என்று ஔரங்கசீப் ஒரு சமயம் சொன்னது கேட்பதற்கு நன்றாக இருந்தாலும் நடைமுறையில் அவர் பெருமைக்கு அந்த அணுகுமுறை பாதகம் ஏற்படுத்தியது. ஏனெனில், இந்தக் கண்டிப்பின் காலடியில் நசுங்கி மடிந்தது எந்தவொரு சக்ரவர்த்திக்கும் இருக்க வேண்டிய கருணை என்னும் குண நலன்! மதக் கோட்பாடுகளுக்கு அத்தனை முக்கியத்துவம் தந்த இந்த மன்னர், ‘எல்லையில்லாத கருணை கொண்டவன் இறைவன்’ என்ற ஒரு முக்கிய விஷயத்தை மறந்துவிட்டது துரதிர்ஷ்டவசமான விஷயம்!

ஔரங்கசீப்பின் சாம்ராஜ்ய எல்லை 1690-க்குள் அக்பர் காலத்தையும் மிஞ்சி மேற்கே காபூலிலிருந்து கிழக்கே சிட்டகாங் வரையிலும், வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே காவிரி நதி வரையிலும் பரந்து விரிந்திருந்தது. எவ்வளவுதான் சாமர்த்தியம் கொண்டிருந்தாலும் யாரையும் நம்பாத ஒரு தனி மனிதரால் எப்படி இத்தகைய பெரும் சாம்ராஜ்யத்தைக் கட்டுக்கோப்பாக நிர்வகிக்க முடியும்?!

ஆப்கானியர், மராட்டியர்கள், சீக்கியர்கள், ஜாட் இனத்தினர்... என்று நாலாபுறமும் கிளம்பிய எதிர்ப்புச் சக்திகளைத் தற்காலிகமாகப் பாதுஷாவால் அடக்க முடிந்ததே தவிர, அடியோடு ஒழிக்கக் கடைசி வரையில் முடியவில்லை.

செங்கோட்டையில் முத்து மசூதி

செஞ்சி - ராஜகிரி கோட்டை

டெல்லிக்கு வெகு தொலைவில், தட்சிணப் பிரதேசத்தில் சக்ரவர்த்தி முகாம் அமைத்துத் தங்கியிருந்ததில் வடக்கே நிர்வாகம் சீரழிய ஆரம்பித்தது. ஒழுக்கத்தை மதித்த பாதுஷாவின் ஆட்சியில் டெல்லியில் லஞ்ச லாவண்யம் தலைவிரித்தாடியது. கலை விஷயங்களில் நாட்டின் முன்னேற்றம் அடியோடு நின்றுபோய்விட்டிருந்தது. குறிப்பாக, மனித வாழ்க்கைக்கு அழகும் அர்த்தமும் ஏற்படுத்தும் இசையின் மீது மன்னருக்கு ஏக வெறுப்பு என்பதால் இசை நிகழ்ச்சிகளுக்கு அடியோடு தடை விதிகப் பட்டிருந்தது. இசைக் கலைஞர்கள் (பாட) வாயைத் திறந்தால் அவர்களைக் காவலதிகாரிகள் சிறையில் தள்ளினார்கள். இறைவணக்கத்துக்குரிய இறைப் பாடல் களைத் தவிர, மனிதன் பொழுதுபோக்குக்காகப் பாடுவதை அநாகரிகம் என்று தீர்மானமாகக் கருதினார் ஔரங்கசீப்!

இசை மீது ஔரங்கசீப்புக்கு இருந்த வெறுப்பு பற்றி சுவையான ஒரு கதைகூட உண்டு! -

ஒருமுறை டெல்லியில் இருந்தபோது ஔரங்கசீப் யானை மீது அமர்ந்து ஆக்ராவுக்குக் கிளம்பினார். அப்போது செங்கோட்டைக்கு வெளியே, ஜும்மா மசூதி அருகில் கூட்டமாகப் பலர் ‘ஓ’ வென்று வாய்விட்டு அழுதவண்ணம் நிற்பதைக் கண்டு ஆர்வமிகுதியால் யானையைவிட்டுக் கீழே இறங்கி அங்கே சென்றார் பாதுஷா. கொடும்பாவி ஒன்று பிணம் போல மலர்கள் தூவப்பட்டுக் கீழே இருத்தப்பட்டிருந்தது. நகரத்தின் இசைக் கலைஞர்கள் பலர் அங்கே கூடியிருந்தனர்.

“என்ன இது ஏன் அழுகிறீர்கள்?” என்று பாதுஷா வினவ, “சக்ரவர்த்தி! நாங்கள் எல்லாரும் இசைக் கலைஞர்கள். இதோ, கீழே கிடப்பது இசை.

தாங்கள் ஆட்சியில் அதன் உயிர் போய்விட்டதால் அதை நல்லடக்கம் செய்யக் கிளம்பிக் கொண்டிருக் கிறோம்!” என்று போடு போட்டார்கள்.

வந்த புன்னகையை அடக்கிக்கொண்ட ஔரங்கசீப், முகத்தில் துளியும் சலனம் காட்டாமல் “ஓ! இசை இறந்துவிட்டதா? அதில் எனக்குச் சற்று சந்தேகம் இருந்தது. இறந்தது உண்மை என்பது மகிழ்ச்சியான செய்தி. அதன் ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும் இறைவனை வேண்டிக் கொள்வோம்!” என்று சொல்லிவிட்டுச் சென்ற சக்ரவர்த்தி திரும்பிப் பார்த்து “மறுபடியும் உயிர் வந்து தொலைக்கப் போகிறது. ஆகவே எதற்கும் சற்று ஆழமாகவே அடக்கம் செய்யுங்கள்!” என்றார். இசைக் கலைஞர்கள் வெறுத்துப்போய் உட்கார்ந்து விட்டார்கள்!

இவை தவிர, இலக்கியம், ஓவியம் எதுவும் வளரவில்லை ஔரங்கசீப் ஆட்சியில். கட்டடக்கலையில் ஓரளவு நாட்டம் செலுத்தினார் ஔரங்கசீப். அவர் மனைவி தில்ரஸ் பானு பேகம் கல்லறையைத் தெற்கே ஔரங்காபாத் நகரில் தாஜ்மஹால் பாணியில் கட்டினார் பாதுஷா. கட்டடக்கலை வல்லுநர்கள் அதை அழகான ஒன்றாகவே கருதுகிறார்கள். இருப்பினும், எல்லோரும் தாஜ்மஹாலுடன் அதை ஒப்பிட்டுப்பார்த்துத் தாழ்த்திப் பேசியே ஒருவழியாக்கி விட்டனர்.

செங்கோட்டைக்குள் பாதுஷா கட்டிய முத்து மசூதி கச்சிதமான, அழகான ஒரு படைப்பு என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறையும் ஜும்மா மசூதிக்கு ஷாஜஹான் ஊர்வலமாகச் சென்றபோது ‘டிராஃபிக் ஜாம் ஏற்படுவது வழக்கம். மக்களுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்று எண்ணிய ஔரங்கசீப், ஜும்மா மசூதியை மக்களுக்குத் தொழுகைக்காக விட்டுக்கொடுத்துவிட்டு தனக்காகக் கோட்டைக்குள் கட்டிக்கொண்ட சிறு மசூதிதான் முத்து மசூதி!

லாகூரில் சக்ரவர்த்தி கட்டிய பாதுஷாஹி மசூதி அழகிய, எளிமையான சதுர டிசைன்களுடன் நவீன அழகுடன் கட்டப் பட்டாலும் அதையும் சில வரலாற்று ஆசிரியர்கள் டெல்லி ஜும்மா மசூதியுடன் ஒப்பிட்டு ‘இரண்டாம் பட்சம்‘ என்று உதட்டைச் சுழிக்கின்றனர்!

ஷாஜஹான் படைத்த தாஜ்மஹால் காதலையும் கனிவையும் சோகத்தையும் ஒரு கலைஞனுக்குரிய உணர்ச்சிப் பிரவாகத்தையும், இனம் புரியாமல் பிரதிபலிக்கிறது. ‘மகா சீரியஸ்’ மன்னரான ஔரங்கசீப் படைப்புகளில் இதுபோன்ற உணர்ச்சிகள், எதுவும் பார்ப்பவர்களின் இதயத்தைத் தொட்டு சிலிர்ப்பு ஏற்படுத்தாததாலோ என்னவோ பாதுஷாவின் படைப்புகளுக்கு வரலாற்றில் அவ்வளவு முக்கியத்துவம் இல்லாமல் போய்விட்டது!

கடைசிக் கால கவலைகள்!

தோல்வி என்பது விநாடியில் எரிக்கும் மின்னலைப் போலவோ, கண நேரத்தில் பெருக்கெடுத்து மூழ்கடிக்கும் வெள்ளத்தைப் போலவோ வந்து சேரும் என்பது நியதி அல்ல. வறட்சி சூழ்ந்த, முடிவில்லாத பாலை வனமாக ஒருவரை அது படிப்படியாகச் சூழ்ந்துகொள்வதும் உண்டு...

ஔரங்கசீப் அனுபவித்தது இரண்டாவது வகைதான்!

சுருக்கமாகச் சொன்னால், ஆலம்கீர் கடைசிக் காலம் சோகம்

மிகுந்தது. தன் ஐம்பதாண்டு கால ஆட்சியின் முடிவில் மொகலாய சாம்ராஜ்யம் பொலபொல வென்று சரியத் தொடங்கிவிட்டது சக்ரவர்த்திக்குப் புரிந்துபோனது. அரசியல் சூழ்நிலை ஏற்படுத்திய கவலை ஒருபுறமும் குடும்பச் சூழ்நிலை ஏற்படுத்திய வேதனை இன்னொருபுறமும் ஒளரங்கசீப்பை வாட்டி வதைத்தன.

நாட்டிலும் சரி, வீட்டிலும் சரி... வீழ்ச்சியை மெனக்கெட்டு வரவழைத்துக்கொண்டார் இந்தச் சக்ரவர்த்தி என்பதையும் சொல்ல வேண்டும்!

கடைசிக் காலத்தில் அன்பு, பாசம் எதற்கும் இடமில்லாமல் ஒளரங்கசீப்பின் தனிப்பட்ட வாழ்க்கையும் வெறிச்சென்று போனது. யாரையும் அருகே நெருங்கவிடாமல் தனிமையில் தவித்தார் பாதுஷா.

அக்டோபர் 1657-ல், முதல் மனைவி தில்ரஸ்பானு பேகம் என்று ஆரம்பித்து வரிசையாகச் சக்ரவர்த்தியின் மூன்று மனைவிகள் மரணமடைந்தனர் (சில காலமே நெருக்கமாக வாழ்ந்த ஹீராபாயைச் சேர்த்தால் நான்கு!).

கடைசி நாட்களில் தந்தையின் அத்தியாவசியத் தேவைகளைக் கவனித்துக் கொள்ள வயது முதிர்ந்த ஒரு மகள் ஜீனத் உன்னிஸா, பேச்சுத் துணைக்குக் கடைசி மனைவி உதய்பூரி பேகம் - இவர்களே அறைக்குள் அனுமதிக்கப்பட்டார்கள். (காஷ்மீரைச் சேர்ந்த இந்துப் பெண்மணி உதய்பூரி. முன்பு தாரா ஷூகோவின் அந்தப் புரத்தில் இருந்த அவரைப் பிற்பாடு ஒளரங்கசீப் மணம் புரிந்துகொண்டார் என்று சொல்லப்படுகிறது!)

ஒளரங்கசீப்பின் மூத்த மகன் முகமது சுல்தான் தந்தையிடமிருந்து பிரிந்து ஷையா பிரிவைத் தழுவிய சித்தப்பா ஷூஜாவுடன் சேர்ந்துகொண்டு, அதனால் சக்ரவர்த்தியின் கடுங்கோபத்துக்கு ஆளானது பற்றி முன்பே குறிப்பிட்டிருந்தோம். இருபது வயது நிரம்பிய இந்த மகனுக்கு ஆயுள் தண்டனை விதித்துச் சிறையில் தள்ளினார் ஒளரங்கசீப். கடைசிவரை மன்னிப்புக் கேட்காமல் 16 ஆண்டுகள் சிறையில் வாடிய இந்த மூத்த இளவரசர் டிசம்பர் 1676-ல் சிறையிலேயே இறந்துபோனார்.

ஷா ஆலம் என்று அழைக்கப்பட்ட இரண்டாவது மகன் முஆஸம் (ஒளரங்கசீப் புக்குப் பிறகு பகதூர்ஷா என்ற பட்டப் பெயருடன் முடிசூட்டிக் கொண்டவர்!), பீஜப்பூர் மற்றும் கோல்கொண்டா சுல்தான்களுடன் ரகசிய உடன்படிக்கை செய்துகொண்டதாகவும், கஜானா பணத்தில் கைவைத்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டார். கைது செய்யப்பட்டு ஒளரங்கசீப் முன் கொண்டுவந்து நிறுத்தப் பட்ட அவருக்குக் கிடைத்தது எட்டாண்டுகள் சிறைவாசம். விடுதலையான பிறகும் தந்தை காலடியோசை கேட்டாலே உடல் நடுங்கும் அளவுக்கு பயந்துபோய் வாழ்ந்தார் இந்த இரண்டாம் இளவரசர்.

மூன்றாம் மகனான ஆஸாம் தந்தையிடம் தண்டனை என்று எதுவும் பெறாமல் தப்பித்தாலும், இவராவது சற்றுத் தலையெடுப்பார், திறமை காட்டுவார் என்ற ஒளரங்கசீப்பின் நம்பிக்கை கடைசியில் பொய்த்தது. முன்கோபம், ஆத்திரம், அகம்பாவம் போன்ற சகல வேண்டத்தகாத குணநலன்களும் கொண்ட இளவரசர் ஆஸாம், ஒளரங்கசீப்பின் மறைவுக்குப் பிறகு நடந்த வாரிசுப் போரில் கொல்லப் பட்டார்.

ஔரங்காபாத்தில் உள்ள தில்ரஸ்பானு பேகத்தின் கல்லறை...

நாலாவது மகன்தான் துர்காதாஸுடன் கூட்டுச் சேர்ந்து 'புகழ்பெற்ற' அக்பர். ராஜபுத்திரர்கள் உதவியோடு தந்தைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி, பிறகு ஆப்கானிஸ்தானுக்குத் தப்பியோடி நிராதரவாக உயிர் விட்டவர் இவர்.

சற்று வயதான காலத்தில் சக்ரவர்த்திக்குக் கடைசியாகப் பிறந்த காம் பக்ஷ் என்னும் மகனும் உருப்படவில்லை. அந்தப்புரத்தில் செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்டுச் சீரழிந்துபோனவர் இந்த இளவரசர். சிவாஜியின் வாரிசு ராஜாராமை வழிக்குக் கொண்டுவர செஞ்சிக்கு அனுப்பப்பட்ட டெல்லிப்படைக்குத் தலைமைதாங்கிச் சென்ற காம் பக்ஷ், அங்கே தன் வீரத்தைக் காட்டுவதற்குப் பதில் தந்தையின் அனுமதி இல்லாமல் எதிரியுடன் ரகசியமாகச் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள முயன்று அந்தக் குற்றத்துக்காக ஔரங்கசீப்பால் சில ஆண்டுகள் சிறைக்கு அனுப்பப்பட்டார். இவரும் பிற்பாடு வாரிசுப் போரில் கொல்லப்பட்டார்.

ஷாஜஹான் தன் மகன் தாராவுக்குச் சோதனைகளைச் சந்திக்கும் நெஞ்சுறுதிகளைப் புகட்டாமல் அளவுக்கு அதிகமாக அரவணைப்பும், பாசமும் காட்டியதால் அந்த மகன் வீழ்ச்சியடைந்தார் என்பது பொதுவான கருத்து. ஔரங்கசீப் விஷயம் வேறு! மகன்களுக்கு எந்தவிதமான சுதந்திரமும் தராமல் அவர்களுடைய சுயமரியாதையைப் பற்றித் துளியும் கவலைப் படாமல் அவமரியாதையாக அவர்களை நடத்தினார் சக்ரவர்த்தி. ஔரங்கசீப்பின் இந்த அணுகுமுறையும் தோல்விதான் அடைந்தது!

ஔரங்கசீப்பின் மூத்த மகளான ஸெபுன்னிஸாவும் பாதுஷாவின் கோபத்திலிருந்து தப்பவில்லை. புகழ்பெற்ற கவிஞரான இந்த மகள், தந்தைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய தம்பி அக்பருக்குப் பாசத்துடன் எழுதிய கடிதம் ஔரங்கசீப் கையில் சிக்க, மகளுக்கு

இருபத்தோரு ஆண்டுகள் சிறைத் தண்டனை தந்தையால் வழங்கப்பட்டது!

இதெல்லாம் ஒருபுறமிருக்க, ஒருவேளை தன் தந்தை ஷாஜஹானுக்கு நேர்ந்த கதி தனக்கும் மகன்களால் ஏற்படுமோ என்ற லேசான பீதியும் பாதுஷாவுக்குக் கடைசிக் காலத்தில் வந்துசேர்ந்தது. மகன்கள் யாரேனும் சக்ரவர்த்தியைப் பார்க்க அவரது பிரத்தியேக அறைக்குள் எட்டிப் பார்த்தாலே அவர்கள் பாதுஷாவால் விரட்டியடிக்கப் பட்டனர்.

அதே சமயம் கவலைகளுக்கு மத்தியில் கடமைகள் தொடர்ந்தன..!

இதோ... கிருஷ்ணா நதிக்கும், பீமா நதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தை ஆண்டுவந்த கன்னட சிற்றரசர் பிடியநாயக்கர், மொகலாய பாதுஷாவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கும் செய்தி வருகிறது. கடும் மழையையும் பொருட் படுத்தாமல் ஔரங்கசீப் தலைமையில் ஒரு படை அந்தச் சிற்றரசரைத் தண்டிக்கக் கிளம்புகிறது. சக்ரவர்த்திக்கு வயது என்ன தெரியுமா? எண்பத்தாறு! “நாடாளப் பிறந்தவர்களுக்கு ஓய்வு கிடையாது!” என்று பாதுஷா முன்னொரு சமயம் சொன்னது நம் காதில் ஒலிக்கிறது!

பிடியநாயக்கருக்கு மராட்டியர்கள் உதவி அனுப்பியதால் மொகலாயர் முற்றுகை மூன்று மாதங்கள் நீடிக்கின்றன. ஒருவழியாக ஏப்ரல் 1705-ல் எதிரியின் கோட்டை வீழ்கிறது.

அங்கிருந்து கிளம்பி, அருகேயுள்ள தேவபூர் கோட்டையில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று காய்ச்சலால் பீடிக்கப்படுகிறார் பாதுஷா. அந்த நிலையிலும் தட்டுத்தடுமாறித் தொழுகைக்குச் செல்கிறார். தவிர, மனுக்கள் படிப்பது, விருந்தாளிகளையும் தூதர்களையும் சந்திப்பது போன்ற கடமைகளையும் விடவில்லை சக்ரவர்த்தி. கூட இருந்தவர்கள் கவலையில் ஆழ்ந்தனர். அதோடு பயமும் அவர்களைத் தொற்றிக்கொண்டது. ‘சுற்றிலும் பரம எதிரிகளான மராட்டியர்கள் வாழும் மலைப் பகுதிகள்... திடீரென்று மன்னர் இங்கு போய்த் தலையைச் சாய்த்து விட்டால் நம் கதி..?’ என்கிற எண்ணம் அவர்களை நடுங்க வைத்தது. என்ன செய்ய..? அந்த அளவுக்கு மன்னரின் ஆணைகளையும் ஆலோசனைகளையும் நம்பியே எல்லோரும் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்!

ஜுரத்தால் பீடிக்கப்பட்ட பாதுஷாவை, அகமது நகர் அழைத்துச் செல்ல பல்லக்குக் கொண்டுவந்தார்கள். கைத்தாங்கலாக அழைத்து வரப்பட்டுப் பல்லக்கில் ஏறி அமர்ந்த சக்ரவர்த்தியின் உதடுகள், “ஒரே ஒரு முறை மூச்சை விடுவதற்குள்... கண்ணைச் சிமிட்டுவதற்குள்... விநாடியில் உலகமே மாறிப்போகிறது...” என்று முணுமுணுக் கின்றன!

அகமதுநகர் சென்றடைந்தவுடன், உடலும் உள்ளமும் துவண்டுபோன நிலையிலும் மகன்களுக்குக் கடிதங்கள் ‘டிக்டேட்” செய்தார் ஔரங்கசீப்!



‘வானத்தைப் பார்த்தவாறு இருக்க வேண்டும்... மண்ணால் மூடப்பட்டிருக்கட்டும்...’

ஆளுக்கொரு படையுடன் அரியணைக்காக வாரிசுகள் தயாராகிக்கொண்டிருக்கும் செய்தி அவரைத் திகைக்க வைக்க, “எனக்குப் பிறகு அழிவுதான்!” என்று தொடர்ந்து புலம்பினார் சக்ரவர்த்தி. “வேண்டுமானால் நாட்டைப் பிரித்துக்கொள்ளுங்கள். தலைகள் உருள வேண்டாம். ரத்த ஆறு ஓட வழி வகுக்காதீர்கள்...” என்று மகன்களுக்குக் கெஞ்சல் கடிதங்கள் அனுப்பினார் பாதுஷா.

மகன்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்கும் ஒரு திட்டத்தைக் காகிதத்தில் எழுதி தலையணைக்கு அடியில் வைத்துக் கொண்டிருந்தார் மன்னர் என்று கூறப்படு கிறது. ஆனால், தந்தையின் அறிவுரைகளைக் கேட்கும் 'மூடில்' இல்லை மகன்கள்!

குறிப்பாக, தன் மகன் ஆஸாமுக்கு பாதுஷா கடைசியாக எழுதிய கடிதம் சோகமயமானது. அதிலிருந்து சில பகுதிகள்...

'அன்புள்ள ஆஸாம்,

அமைதி நிலவுக. என் கடைசிக் காலம் நெருங்கி விட்டது. தள்ளாமை வாட்டுகிறது. என் கைகளிலும் கால்களிலும் சக்தி அகன்றுவிட்டது. தன்னந்தனியாக இந்த உலகுக்கு வந்தேன். தனியாகத் திரும்பச் செல்லப்போகிறேன். நான் யார் என்பதோ, எதற்காக பிறந்தேன் என்பதோ எனக்குப் புரியாத புதிர்...

... இறைவன் நெருங்கி வருவது என் கண்முன் நிழலாடுகிறது. பாவங்களால் இருண்டுபோன என் விழிகள் இறைவன் என்னும் ஒளிவீசும் அற்புதத்தைக் காண முடியாமல் தவிக்கிறது....

... உலகுக்கு எதையும் நான் கொண்டுவரவில்லை. திரும்பும்போதோ என் பாவங்களைச் சுமந்து கொண்டு செல்லப்போகிறேன். எனக்கு என்ன தண்டனை கிடைக்கும்? புரியவில்லை. இறைவனின் எல்லையில்லா கருணை பற்றி எனக்குத் தெரியும் தான். இருப்பினும், ஏதேதோ கவலைகளும் பயமும் என்னைத் தவிக்கச் செய்கின்றன...

... இதோ, நான் தன்னந்தனியாகப் படகில் ஏறி என் நீண்ட பயணத்தைத் துவக்கக் கிளம்புகிறேன். மகன்களாகிய உங்கள் கடமைகளை மறக்காதீர்கள். கடவுளின் குழந்தைகளான மக்களைக் காப்பாற்றுங்கள். முஸ்லிம் வீரர்கள் பிரிந்து நின்று வெட்டிக் கொன்றுகொள்ள வழிவகுக்காதீர்கள். என் பேரன் பகதூருக்கு (ஆஸாம் குழந்தை) இந்தத் தாத்தாவின் ஆசிகள். நான் இறப்பதற்குள் அவனைப் பார்க்க வேண்டும் என்ற ஆசைதான் நிறைவேறவில்லை. பரவாயில்லை. எல்லாவற்றையும் இயக்குபவர் இறைவனே!

மகனே! வருகிறேன்... வருகிறேன்... வருகிறேன்..!'

1707-ம் ஆண்டு பிப்ரவரி 20-ம் தேதி வெள்ளிக்கிழமையன்று காலையில் தொழுகை முடித்துவிட்டுத் தட்டுத்தடுமாறி மெள்ளத் திரும்பி, வந்து படுக்கையில் சாய்ந்துகொண்ட ஆலம்கீர் ஔரங்கசீப் பாதுஷாவின் உதடுகள் தொடர்ந்து இறைவனின் பெருமையை முணுமுணுத் தவாறு இருந்தன. விரல்கள் ஜெபமாலையை உருட்டிக் கொண்டிருந்தன. திடீரென்று சக்ரவர்த்தியின் மூச்சு கடைசி முறையாக வெளிப்பட்டு முடிவாக நின்று போனது.

ஔரங்கசீப் இறந்தபோது அவருக்கு வயது 91-ம் சில மாதங்களும்.

சக்ரவர்த்தியின் உயிலின்படி.. 'என் கைகளால் தைக்கப்பட்ட குல்லாய்களை விற்ற பணம் நான்கு ரூபாய் இரண்டு அணாக்கள் தலையணைக்கடியில் இருக்கிறது. உடலைப் போர்த்துவதற்குத் துணி வாங்க அதைப் பயன்படுத்துங்கள். புனித குர்-ஆனிலிருந்து நான் எடுத்த நகல்களுக்காக எனக்குக் கிடைத்த சம்பளப் பணம் முந்நூற்றைந்து ரூபாய் என் பிரத்தியேக கைப்பையில் இருக்கிறது. அதை நான் இறந்த நாளன்று ஏழைகளுக்கு (ஃபக்கீர்களுக்கு) விநியோகிக்கவும்.

இந்த நாடோடியின் கல்லறை மிகவும் எளிமையாக வானத்தைப் பார்த்தவாறு இருக்க வேண்டும். எந்தவிதமான அழகோ, ஆடம்பரமோ செய்யக்கூடாது. ஊர்வலம், இசை எதுவும் இருக்கக்கூடாது, என் கல்லறை மண்ணால் மூடப்பட்டிருக்கட்டும். அங்கே பசுமையாகச் செடிகள் வளரட்டும்...'

மறைந்த பாதுஷாவின் விருப்பப்படியே எல்லாம் நிறைவேறியது. தௌலதாபாத் அருகே ஆறு மைல் தொலைவில் உள்ள குல்தாபாத்தில் உள்ள ஷேக் ஜைனுதீன் போன்ற மகான்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில், முற்றத்தில் ஓரமாக எளிமையாக அடக்கம் செய்யப்பட்டார் இந்தக் கடைசி மொகலாய நட்சத்திரம்.

ஔரங்கசீப் இறந்த உடனேயே அவர் எதிர்பார்த்தபடி வாரிசுகளின் வாட்கள் ரத்தப் பசியோடு உறைகளிலிருந்து கீறீச்சிட்டு உயர்ந்தன...!

20

மற்றவர்கள்..

பாரசீகப் பேராபத்து!

வரலாற்றில் சில விதிவிலக்குகள் இருந்தாலும், பொதுவாகப் பேரரசர்கள் ‘பொட்’டென்று போய்விடுவதில்லை. கோமா நிலை என்பது சாம்ராஜ்யங்களுக்கும் உண்டு. அந்தப் பரிதாபநிலைதான் ஔரங்கசீப் மறைவைத் தொடர்ந்து மொகலாய ஆட்சிக்கு நேர்ந்தது.

ஆலம்கீருக்குப் பிறகு வரிசையாக அரியணையில் அமர்ந்தவர்களில் நட்சத்திர அந்தஸ்து பெறக்கூடியவர்கள் யாரும் இல்லை எனலாம். சிலர் சில ஆண்டுகள் ஆண்டார்கள். சிலர், நிமிடமே காட்சி தந்து எரிந்து மறையும் எரிகற்களைப் போல அல்லது கண் சிமிட்டும் நேரத்தில் தலைகாட்டி மறையும் நீர்க் கொப்பளங்களாக வந்து போனார்கள். ஆக மொத்தத்தில் ‘பருந்துகள் வசித்த இடத்தில் ஆந்தைகள் ஆட்டம் போட்டன... குயில்களுக்குப் பதில் காகங்கள் பாட்டுப் பாடின...’ என்று இந்தப் ‘பிற்கால மொகலாய ஆட்சியை’ வர்ணிக்கிறார் ஒரு வரலாற்று ஆசிரியர்.

ஔரங்கசீப் இறந்தபோது அவர் மகன் ஷா ஆலம், காபூலில் கவர்னராகப் பணியில் இருந்தார். இன்னொரு மகன் ஆஸாம் குஜராத்திலும், கடைசி மகன் காம் பக்ஷ் பீஜப்பூரிலும் அதே பதவிகளில் இருந்தனர். மறைந்த பாதுஷா விரும்பியபடி சாம்ராஜ்யத்தைப் பாகப்பிரிவினை செய்துகொள்ளலாம் என்று சற்றாவது நினைத்தவர் மூத்தவர் ஷா ஆலம் மட்டுமே. ‘அடுத்த வாரிசை வாட்களே நிர்ணயிக்கட்டும்!’ என்று மற்ற இரு இளவரசர்களும் முழுங்கியதால் போர் என்னும் கொடுமையைத் தவிர்க்க முடியாமல் போனது.

தந்தை இறந்தபோது ஷா ஆலத்தின் வயது 64. எத்தனை வயதானாலும், அரியணையை அவ்வளவு சுலபத்தில் விட்டுவிடத் தோன்றுமா என்ன?! காபூலிலிருந்து பெரும் படையுடன் டெல்லி நோக்கி கிளம்பினார் அவர். ஜூன் 1707-ம் ஆண்டு, ஆக்ரா அருகில் ஷா ஆலம் - ஆஸாம் - இரு சகோதரர்களின் படைகளும் ஆவேசமாக மோதிக்கொண்டன.

நடந்து முடிந்த இந்த ஒரு நாள் யுத்தத்தில் வெற்றி பெற்றவர் ஷா ஆலம். போரில் கொல்லப்பட்டார் ஆஸாம். உடனே ஷா ஆலம் படை தெற்கே, காம் பக்ஷ் படையைச் சந்திக்கக் கிளம்பியது. ஹைதராபாத் அருகே நடந்த யுத்தத்தில் படுதோல்வி அடைந்த காம் பக்ஷ் பிறகு பலத்த காயங்கள் காரணமாக உயிரை விட்டார்.

இரு போர்களிலும் வெற்றிக்கொடி நாட்டிய முஆஸம் (அ) ஷா ஆலம் டெல்லிக்குத் திரும்பி ‘பகதூர் ஷா’ என்னும் பட்டப் பெயருடன் அரியணையில் அமர்ந்தார். தவிர்க்க முடியாமல் போரில் இறங்கினாலும் சற்றே மென்மையான மன்னர்தான் பகதூர் ஷா. நாலரை ஆண்டுகள் மட்டும் ஆட்சி புரிந்துவிட்டு தன் அறுபத்தொன்பதாம் வயதில் இறந்தார் பகதூர் ஷா. ஒளரங்கசீப் தந்த சான்ஸ் அவ்வளவே!

பகதூர் ஷா தலையைப் போட்டவுடன் மறுபடியும் வாரிசுப் பூசல் கிளம்பியது. பாதுஷாவின் நான்கு மகன்களும் ஆளுக்கொரு படையுடன் மோதலில் இறங்கி னார்கள். அவர்களில் ஜஹந்தர் ஷா தன் மற்ற மூன்று சகோதரர்களையும் போரில் தோற்கடித்துக் கொன்றுவிட்டு மகுடம் சூட்டிக்கொண்டார். இவருடைய ஓராண்டு கால ஆட்சி அலங்கோலமாக அமைந்தது.

தன் சகோதரர்களின் குழந்தைகளை யெல்லாம் சித்ரவதை செய்து கொன்று வெறியாட்டம் ஆடிய இந்த மன்னர், அந்தப்புர ஆட்டம் போடுவதிலும் சளைக்க வில்லை!

ஜஹந்தர் ஷா ஆட்சியில் அறிவார்ந்த ஆலோசகர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். அரைவேக்காடுகளின் ஆர்ப்பாட்டம்... ஆரணங்குகளின் ஆட்டபாட்டம் என்று அரண்மனையே அசிங்கமாகிப்போனது.

இந்த அநாகரிக ஆட்சிக்கு முடிவுகட்டினார் ஜஹந்தர் ஷாவின் சகோதரர் மகன் ஃபரூக்ஸியார். மன்னர் கையில் சிக்காமல் தப்பித்திருந்த அந்த இளவரசர், போரில் தன் தந்தை மடிந்ததைத் தொடர்ந்து மனமுடைந்து தற்கொலை முயற்சியில் இறங்கியதுண்டு. அவருடைய விதவைத் தாய், “நீ ஏன் சாக வேண்டும்? இறைவன் கருணை இருந்தால் ஏன் உன் சதிகாரப் பெரியப்பாவைத் தீர்த்துக் கட்டிவிட்டு அரியணையில் அமர முடியாது? படை திரட்டிக்கொண்டு போய்ப் பழிவாங்கு!” என்று வலியுறுத்த, புத்துணர்ச்சியுடன் ஒரு படை திரட்டினார் இந்த இளவரசர். பிறகு, ஜஹந்தர் ஷாவுடன் மோதி அதில் வெற்றியும் பெற்றார். சிறையில் தள்ளப்பட்ட ஜஹந்தர் ஷாவின் கழுத்தை நெரித்துக் கொல்ல ஆட்கள் அனுப்பப்பட்டனர். கைகளால் எத்தனை இறுக்கியும் அந்த சர்வாதிகார மன்னர் இறக்கவில்லையாம். வெறுத்துப் போன ஒரு மொகலாய மெய்க்காவலர், பருத்த தன் பூட்ஸ் காலால் ஜஹந்தர் ஷாவின் உயிர்நிலையில் தொடர்ந்து உதைத்து அவரைக் கொல்ல வேண்டி வந்தது!

சிம்மாசனம் என்பது சில்மிஷம் பிடித்ததாயிற்றே! ராஜ உடை தரித்தவுடன் ஃபரூக்ஸியாரும் உருப்படாமல் போனார். கீழ்த்தரமான சகவாசங்கள் அவரையும் பீடித்தது. 1719-ல் அவரைப் பதவியிலிருந்து இறக்கினார்கள் ராஜாங்க பிரபுக்கள். சிறையில் அவரைத் தள்ளினார்கள். அங்கே ஃப்ரூக்ஸியாரின் கண்கள் குறுவாளால் பறிக்கப்பட்டன. சுமார் ஆறாண்டு காலம் ஆண்ட இந்தப் பாதுஷாவைச் சித்ரவதை செய்து (1719-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் தேதி) சாகடித்தார்கள்.

இந்தக் கொலையைத் தொடர்ந்து, 1719 பிப்ரவரியிலிருந்து செப்டம்பர் மாதத்துக்குள் மூன்று ராஜகுலத்து இளைஞர்கள் அரியணையில் அமர்த்தப்பட்டு உடனே கீழே இறக்கப்பட்டார்கள். சரியான வாரிசு கிடைக்காமல் டெல்லி அரண்மனையில் ஏகமாகக் குழப்பம் நிலவியது!

ஒருவழியாக, மறைந்த பகதூர் ஷாவின் நாலாவது மகனுக்குப் பிறந்த பதினெட்டு வயது இளவரசர் ரோஷன் அக்தர், ‘முகமது ஷா’ என்ற பெயருடன் புதிய பாதுஷாவாகப் பட்டமேற்றார். நிர்வாகத்தில்

பாதுஷாவுக்கு வலதுகரமாகச் செயல்பட்டவர் நிஜாம்- அல்-முல்க் என்னும் சக்திவாய்ந்த ஓர் அமைச்சர். அறிவாற்றல் மிகுந்த இந்த அமைச்சரைப் பிரதம மந்திரியாக்க விரும்பினார் முகமது ஷா. ஆனால், டெல்லியில் நிலவிய, ராஜாங்க சூழ்நிலை அந்த அமைச்சருக்குப் பிடிக்காததால் டெல்லியிலிருந்து வெளியேறித் தெற்கே ஹைதராபாத் சென்று தன் செல்வாக்காலும் திறமையாலும் புதியதொரு ராஜ்யத்தை நிறுவினார். அவர் வழிவந்தவர்கள்தான் புகழ்பெற்ற ஹைதராபாத் நிஜாம்கள்!

மயிலாசனத்தில் அமர்ந்த (அதற்கு ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது!) கடைசி மொகலாய மன்னராக முகமது ஷா தனிப் பட்ட முறையில் மென்மையானவர். கொலை வெறியாட்டம் எதுவும் போட வில்லையே தவிர, அந்தப்புரத்தில் கும்மாளம் போட்டதில் குறைச்சல் இல்லை. ‘அதோடு சரி, அரசாளும் திறமையில் முகமது ஷா ஒரு சைபர்’ என்று அவரை வரலாற்று ஆசிரியர் ஒருவர் வர்ணிக்கிறார். அதற்கேற்ப, வரிசையாக மொகலாய ஆட்சிக்குட்பட் டிருந்த பல பிரதேசங்கள் ஒவ்வொன்றாக முகமது ஷாவின் கைப்பிடியிலிருந்து கழன்று கொண்டன. தெற்கே மராட்டியர்கள் தங்கள் எல்லைகளை மேலும் வெற்றிகரமாக விஸ்தரித்தார்கள். அயோத்தியும் வங்காளமும் மொகலாயர்களிடமிருந்து கை நழுவிப் போயின. ஆக்ரா அருகே ஜாட் இனத்தினர் ஒரு சுதந்திர நாட்டை நிறுவிக் கொடியேற்றிய போதும் டெல்லி பாதுஷாவால் ஏதும் செய்ய முடியவில்லை. பஞ்சாப் மாநிலத்தையோ சீக்கியர்கள் அழுத்தமாகத் தங்கள் வசமாக்கிக் கொண்டனர்...

இப்படியாக, மொகலாய ஆட்சி துவண்டு போயிருந்த இந்தத் தருணத்தில்தான் அந்தப் பேராபத்து நிகழ்ந்தது. ஆபத்தின் பெயர் - நாதிர்ஷா!

எளிமையான துருக்கியக் குடும்பத்தில் பிறந்தவர் நாதிர்ஷா. பாரசீக மன்னர் ஷா தாமஸ்ப் கி.பி.1727-ல் இறந்ததைத் தொடர்ந்து, அவரிடம் தளபதியாகப் பணிபுரிந்துவந்த நாதிர்ஷா, பாரசீக அரியணையைக் கைப் பற்றினார். பிறகு, அவர் கனவுகள் மேலும் விரிந்தன.

அதே சமயம், நாதிர்ஷாவுக்கு டெல்லி பாதுஷா மீது ரொம்பவே கோபம் உண்டு என்று சொல்ல வேண்டும். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பாரசீகத்துக்கும் இந்தியாவுக்கும் இடையே தூதர் பரிமாற்றம் ரொம்ப காலமாகவே இருந்து வந்தது. நாதிர்ஷா பாரசீக மகுடத்தைச் சூட்டிக் கொண்டதிலிருந்து இந்தியாவிலிருந்து தூதர் யாரும் அனுப்பப்படவில்லை. கடிதம் எழுதினாலும் டெல்லி பாதுஷாவிடமிருந்து பதில் இல்லை. பதில் போடுவதில் பாதுஷா ரொம்ப வீக். ஆகவே கொஞ்ச காலமாகவே எரிச்சலில் இருந்தார் நாதிர்ஷா.

‘நான் கேள்விப்பட்ட வரையில் ஒரு கையில் மதுவும் மற்றொரு கையில் மாதுவுமாக சுகபோகத்தில் டெல்லி பாதுஷா திளைத்துக் கொண்டிருப்பதாக அறிகிறேன். அவர் என்னை மதித்துப் பதில் போடாததில் வியப்பில்லை. நான் நேரில்தான் அவரிடம் பேச வேண்டும் போலிருக்கிறது!’ என்று கோபத்துடன் குமுறினார் நாதிர்ஷா

பிறகு, மனம் தளராமல் முகமது ஷாவுக்கு மற்றொரு கடிதம் அனுப்பினார்.

‘இந்தியாவின் தெற்குப் பகுதியிலிருந்து கிளம்பியிருக்கும் ஈனப்பிறவிகளான மராட்டியர்கள் இஸ்லாத்துக்குப் பெரும் பிரச்னைகள்

விளைவித்துக்கொண்டு இருப்பதாக அறிகிறேன். பாதுஷா அதுபற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை! இஸ்லாத்தைக் காப்பாற்றவும் தங்கள் நட்பை நாடியும் நான் இந்தியா நோக்கிப் பயணம் கிளம்பியிருக்கிறேன். பாரசீகத்துக்கும் இந்தியாவுக்கும் நீண்ட கால நட்பு உண்டு என்பதைத் தங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். என்னை வரவேற்பீர்கள் என்று முழு நம்பிக்கை எனக்கு உண்டு - நட்புடன் நாதிர்ஷா.' என்று ஒரு கடிதம் டெல்லிக்குப் போனது. இதற்கு அங்கிருந்து பதில் வரவில்லை!

கோபத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்ட நாதிர்ஷா, டெல்லிக்கு இன்னொரு கடிதம் அனுப்பினார் - இந்த முறை சற்றுச் சூடாகவே!

'(மராட்டிய) எதிரிகள் இஸ்லாத்தை அழிக்க முனைவதை நான் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. மொகலாய சாம்ராஜ்யத்தை தூக்கி நிறுத்திச் சீர்ப்படுத்த வேண்டிய கடமையும் எனக்கு வந்திருகிறது. விரைவில் தங்கள் பெருமைமிக்க டெல்லியில் என் படை பிரவேசிக்கும். இந்தச் சீரமைப்புப் பணிக்காக நாலு கோடி வெள்ளி ரூபாய் தயாராக வைத்திருக்கவும். வடக்கே நான் குறிப்பிடும் சில எல்லைப் பிரதேசங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். இந்தக் கடிதத்துக்கு நாற்பது நாட்களுக்குள் பதில் எதிர்பார்க்கிறேன்...'

நாற்பது நாட்கள் கழிந்தன. முகமது ஷா அசைந்து கொடுக்கவில்லை! இது ஆபத்துக்கு வழிவகுத்து விட்டது.

அதைத் தொடர்ந்து...

பாரசீகத்து முரசுகள் ஒலித்தன. வாத்தியங்கள் கிறீச்சிட்டன. ஒரு லட்சத்து முப்பதாயிரம் வீரர்கள் அடங்கிய நாதிர்ஷாவின் படை திமுதிமுவென்று இந்தியா நோக்கிக் கிளம்பியது. ஒரு ராட்சத மலைப் பாம்பு போல நீண்ட பாரசீகப்படை, கைபர் கணவாயைத் துரிதமாகக் கடந்து இந்திய எல்லைக்குள் புகுந்தது.

லாகூர் மொகலாய கவர்னர் ஜக்கார்யா கான் பாரசீகப்படைக்குச் சற்றே எதிர்ப்புக் காட்டிவிட்டுப் பின்வாங்கிப் பணிந்தார். கவர்னரை மன்னித்து நாதிர்ஷா அவரிடம் செலவுக்கு இருபது லட்ச ரூபாய் 'கட்டாய நிதி' வாங்கிக்கொண்டார். தொடர்ந்து டெல்லி நோக்கி முன்னேறியது அவர் படை....

'மொகலாய சக்ரவர்த்தி முகமது ஷா படை திரட்டிக்கொண்டு தயார்நிலையில் இருப்பதாக' வழியில் செய்தி வந்துசேர்ந்தது. "நல்லது! வளையிலிருந்து எலியைத் துழாவி எடுக்கவேண்டியிருக்குமோ என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன்!" என்று சொல்லி இகழ்ச்சியாகப் புன்னகைத்தார் நாதிர்ஷா.

13-ம் தேதி பிப்ரவரி 1739...

டெல்லிக்கு அருகே பானிப்பட்டுக்கு 20 மைல் தொலைவிலுள்ள கார்னால் என்னும் ஊரில் பாரசீகப் படை நுழைந்த போது, அதை எதிர்கொண்டது மூன்று லட்சம் வீரர்கள் அடங்கிய டெல்லிப்படை. இந்தியப் போர் யானைகள் மட்டுமே இரண்டாயிரத்துக்குமேல்!

முன்னொரு காலத்தில் இந்திய நாட்டுக்கே உரிய யானைப்படையைக் கண்டு கிரேக்க வீரர் அலெக்ஸாந்தரே கவலையிலும் குழப்பத்திலும் ஆழ்ந்ததுண்டு. அது பழைய கதை. பிற்பாடு பல நாடுகளில் யானைகள் பரவலாகப் போரில் பயன்படுத்தப்பட ஆரம்பித்துவிட்டதால், நீண்ட கரிய பெரும் சுவராக

வழிமறித்த யானைகளின் அணிவகுப்பைப் பார்த்து நாதிர்ஷா மிரளவில்லை!

பதிலடியாக, நூற்றுக்கணக்கில் நாதிர்ஷாவின் படையிலிருந்து கிளம்பிப் பாய்ந்த ஒட்டகங்கள். அவற்றின்மீது வைக்கோல் கட்டுக்கள் - தீச்சுவாலைகளுடன்! பரவலாக ஒரு நெருப்பு அலை முன்னேறி வருவது கண்டு யானைகள் மிரண்டு போய் பின்வாங்க, அதற்குள் டெல்லிப்படையைச் சுற்றி வளைத்த பாரசீகப்படை, மொகலாய வீரர்களைத் துவம்சம் செய்தது. மின்னல் வேகத்தில் வாட்களை இயக்கிய நாதிர்ஷாவின் வீரர்கள் இரண்டே மணி நேரத்தில் 20,000 டெல்லி வீரர்களை வெட்டித் தள்ளிச் சாதனை புரிந்தார்கள்.

எதிர்பார்த்ததைவிட விரைவிலேயே சுலபமாக வெற்றிக்கொடி நாட்டியது பாரசீகப்படை. நாதிர்ஷா பாசறையில் வெற்றிக்களிப்புடன் அமர்ந்திருக்க, கூடாரத்துக்கு வரவழைக்கப்பட்டார், தோல்வியடைந்த டெல்லி சக்ரவர்த்தி. புனித குர்-ஆன் புத்தகம் ஒன்றை மார்போடு அணைத்துக்கொண்டு தடுமாறி வந்து நின்ற அவர் முகத்தில் அச்சம் தெரிந்தது.

டெல்லி பாதுஷாவின் மீது பார்வையைச் செலுத்திய நாதிர்ஷா, "புத்தகத்தை வைத்து விட்டுப் பயப்படாமல் நெருங்கி வரலாம். போர்க்களத்தில் மட்டுமே வாளெடுப்பவன் நான்!" என்றார். பிறகு, டெல்லி மன்னரை அமரச்செய்து நாதிர்ஷா சொன்னதாவது -

"நான் எவ்வளவு கடிதங்கள் எழுதியும் தாங்கள் பதில் போடாதது குறித்து எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது! ஏன் இப்படி நடந்துகொண்டீர்கள்? இருமுறை தூதுவர்களை அனுப்பினேன். அதற்கும் அலட்சியம் காட்டினீர்கள். ஒருவர் கடிதம் எழுதினால் பதில் போட வேண்டும் என்ற அடிப்படை விஷயம்கூடத் தங்களுக்குத் தெரியவில்லை! உங்கள் நாட்டைப் பற்றியும் நீங்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. என் படை இந்திய எல்லைக்குள் புகுந்த பிறகும், என்னை முறையாக வரவேற்க யாரையும் தாங்கள் அனுப்பவில்லை. இதெல்லாம் பெரும் தவறு என்று தங்களுக்கு ஏன் தோன்றவில்லை? உங்கள் அலட்சியமும் ஆணவமும்தான் என்னை வலுக்கட்டாயமாக இங்கே வரவழைத்தன. கடைசியில் நடந்தது என்னவென்று பார்த்தீர்களா? இப்படி நாம் ரத்தம் சிந்தியிருக்க வேண்டுமா?" - நாதிர்ஷா சொல்லி நிறுத்த, தலை குனிந்து மௌனமாக இருந்தார் முகமதுஷா.

பாரசீக மன்னர் தொடர்ந்து கூறினார் - "சரி நீண்ட பயணமும் அதைத் தொடர்ந்து போரும் எங்கள் வீரர்களைக் களைப்படையச் செய்துவிட்டன. அவர்களுக்கும் எனக்கும் ஓய்வு தேவை. டெல்லியில் ஓய்வெடுத்துக் கொள்வோம். மற்ற விஷயங்கள் பற்றிப் பிறகு பேசுவோம்!"

கடைசிவரை தலையைத் தூக்கி நாதிர்ஷாவை நேருக்கு நேர் பார்க்கவில்லை மொகலாய மன்னர்.

வெற்றிப்படையுடன் ஏறக்குறைய கைதியாக முகமது ஷாவையும் கூடவே அழைத்துக்கொண்டு டெல்லி நகருக்குள் பிரவேசித்தார் நாதிர்ஷா. அச்சத்தில் இருந்த மக்கள் வழியெங்கும் வரவேற்புத் தோரணங்கள் அமைத்திருந்தனர். மாடிகளில் இருந்து மலர்கள் வீசினர். செங்கோட்டை அருகே சாந்தினி சௌக் கடைவீதியில் இந்த ஊர்வலம் நுழைந்தபோது நகை வியாபாரிகள் முத்துக்கள், பவழங்கள் மற்றும்

விலை மதிப்புமிக்க வைரக்கற்கள் பதிக்கப்பட்ட ஆபரணங்களை நாதிர்ஷாவிடம் பரிசாகத் தந்துவிட்டு மண்டியிட்டனர். ‘இந்தியர்கள் காக்காய் பிடிப்பதில் வல்லவர்கள்தான்!’ என்ற குறும்புப் புன்னகையுடன் அவற்றை ஏற்றுக்கொண்டு குதிரையைச் செலுத்தினார் பாரசீக மன்னர்.

அன்று இரவு செங்கோட்டைக்குள் வாத்தியங்கள் முழங்க, வாண வேடிக்கை களுடன் நாதிர்ஷாவுக்குக் கோலாகலமான வரவேற்பு தரப்பட்டது. விருந்துக்கு முன்னோடியாக மதுக்கிண்ணங்கள் அணிவகுத்தன. எதிரே, திறந்தவெளியில் கிறங்கடிக்கும் அழகுடன் அணிசேர்ந்த பெண்கள் நாட்டியம் துவங்கினர்.

ஒயின் கோப்பையுடன் தன் அருகில் போதையுடன் அமர்ந்திருந்த முகமதுஷாவை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு, “பாடல், ஆடல் போன்ற விஷயங்களில் பாதுஷாவுக்கு நிறைய திறமை உண்டாமே?!” என்றார் பாரசீக மன்னர். உடனே தன் இடையில் மணிகளைத் தொங்கவிட்டுக் கொண்டு, ஒரு கையில் மதுக்கோப்பையுடன் நாட்டியப் பெண்களுக்கு இடையில் புகுந்து தானும் பரிதாபமாக ‘டான்ஸ்’ ஆட ஆரம்பித்தார் பாபர், அக்பர் மற்றும் ஔரங்கசீப் போன்ற பேரரசர்கள் வழிவந்த மொகலாய சக்ரவர்த்தி முகமது ஷா!

மறுநாளும் விடிந்தது - பயங்கரம் நெருங்கியது!

தலைநகரில் கொலை விழா!

‘செழிப்போடும் செல்வாக்கோடும் பெரும் சக்தியாக விளங்கிய இந்தியத் தலைநகரா இவ்வளவு சுலபத்தில் தன் காலடியில் பணிந்து வீழ்ந்துவிட்டது..?!’ என்ற களிப்பில் மூழ்கிய நாதிர்ஷா, இரவுப் போர்வை நக்ரை மூடியவுடன் “சரி, ஓய்வெடுப்போம்!” என்று சொல்லிவிட்டு எழுந்து உள்ளே நடந்தார்.

டெல்லி அரண்மனைக்குள் அலங்கரிக்கப் பட்ட படுக்கையறை, பாரசீக மன்னருக்காகத் தயாராகக் காத்திருந்தது. சுவைத்து மகிழ வெற்றிக்கனி மட்டும் போதுமா? கொஞ்சித் திளைக்கக் கட்டழகுக் கிளி ஒன்றும் அவருக்குத் தேவைப்பட்டது. வந்ததிலிருந்தே அரண்மனையில் தன் கவனத்தைக் கவர்ந்த இந்து அடிமைப்பெண் நூர்பாய், இந்தப் பாரசீகப் பருந்தால் படுக்கையறைக்கு கொத்திச் செல்லப்பட்டாள்! மதுவும் மாதுவும் மனதை லேசாக்க, படுக்கையில் சரிந்து கண்ணயர்ந்தார் நாதிர்ஷா.

வெள்ளிக்கிழமை காலையும் விடிந்தது. காத்திருந்த செய்தி திகைப்பூட்டியது!

ஜும்மா மசூதியில் தொழுகையின்போது மன்னர் நாதிர்ஷாவின் பெயரை (கட்டாயத்தின் பேரில்தான்) முன்வைத்து ‘குத்பா’ ஓதப்பட்டபோது, கூடியிருந்த மக்களிடையே கேலிக் கூக்குரல்களும் கண்டனக் குரல்களும் எழுந்தன என்றும், அதைத் தொடர்ந்து செங்கோட்டைக்கு வெளியே சற்று அசந்தர்ப்பமான சூழ்நிலை நிலவுகிறது என்றும் வந்து வணங்கி நின்ற மெய்க்காவலர், மன்னரிடம் சொன்னார். பிறகு, தயக்கத்துடன் தரையைப் பார்த்தவாறு மேலும் தொடர்ந்தார் மெய்க்காவலர்.

“சக்ரவர்த்தி, என்னை மன்னிக்க வேண்டும்! துரதிர்ஷ்டசாலியான என்னிடம் தங்களுக்குச் சொல்ல நல்ல சேதி இல்லை! கடைத்தெரு வழியாகச் செல்லும் நம் வீரர்களைப் பார்த்துக் கேடுகெட்ட டெல்லி

மக்கள் ஏசுகிறார்கள். கிண்டலும் நையாண்டியும் தாங்க முடியவில்லை. பொறுமைமிக்க நம் தளபதிகள் தெருவில் குதிரைகளில் செல்லும் போது அவர்கள் மீது மாடிகளிலிருந்து பெண்கள் குப்பையைக் குறி பார்த்துக் கொட்டுகிறார்கள். அரிசி, இறைச்சி என்று கடையில் எது வாங்கப் போனாலும் நமக்கு மட்டும் தனி விலை - மூன்று மடங்கு அதிகம்! தங்கள் ஆணை எதுவும் இல்லாத நிலையில் இந்த விசித்திரமான சூழ்நிலையை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் கலங்கிப் போய் நிற்கிறார்கள் நம் தளபதிகளும் வீரர்களும்!" என்று முடித்த மெய்க்காவலர், நாதிர்ஷாவின் காலடியில் விழுந்து "உள்ளே நகருக்குள் இருக்கும் நம் வீரர்கள் சில நூறு பேர்தான். நம் பெரும் படை ஊருக்கு வெளியே நிற்கிறது. ஏன்? டெல்லி மக்களுக்கு தொந்தரவாக இருக்கக்கூடாது என்று தாங்கள் சொன்னதற்காக!" என்று புலம்பினார்.

நாதிர்ஷாவின் கண்கள் லேசாகச் சிவந்திருந்தன. பொங்கிய கோபத்தை அடக்கிக்கொண்ட அவர், "டெல்லி மக்கள் முட்டாள்கள் என்று தோன்றுகிறது. வலுக் கட்டாயமாகத் தண்டனையை வரவழைத்துக் கொள்ளப் பார்க்கும் இவர்களை வேறு எப்படி அழைப்பது? சரி, சற்றுப் பொறுமையோடு இருப்போம். இவர்களுக்குப் புத்தி திரும்புகிறதா என்று பார்ப்போம்!"

மறுநாள்... தேதி 10, மார்ச் 1739. சனிக்கிழமை.. விதி மேலும் விளையாடியது! அன்று ஈதுல்-ஜுஹா- (பக்ரீத்) பண்டிகை நாள். பலியிடுவதற்காகச் சில பசுமாடுகளை நாதிர்ஷாவின் வீரர்கள் பிடித்துக்கொண்டு போக, இந்துக்கள் ஆவேசப்பட்டனர். 'ஒழிக' குரல்கள் ஓங்கின. வீரர்கள் மீது சில கற்களும் விழுந்தன.

இதெல்லாம் ஒருபுறம் நடக்க, அரிசி வாங்க முடியாமல் நாதிர்ஷாவின் வீரர்கள் தவித்தனர். அரிசி மண்டிகள் வைத்திருந்த இந்துக்கள் கடைகளை மூடிக்கொண்டதுதான் காரணம். கோதுமை வியாபாரம் முஸ்லிம்கள் வசம். அதையாவது வாங்கலாம் என்றால், அந்தக் கடைகளின் கதவுகளும் முகத்தில் அறைந்தாற்போல மூடப்பட்டன. அதைத் தொடர்ந்து இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து நாதிர்ஷா படையெடுப்பை எதிர்த்து ஊர்வலங்கள் நடத்தினார்கள்.

திடீரென்று, மார்க்கெட் பகுதிக்குப் போன சில பாரசீக வீரர்களை மக்கள் கூட்டம் அடித்து விரட்டியது. இந்தச் செய்தி நாதிர்ஷாக்கு வந்து சேர, "அது உண்மைதானா..? நேரில் போய் நிலவரத்தைப் பார்த்துவிட்டு வாருங்கள்!" என்று சொல்லி ஏழு வீரர்களை அனுப்பினார் பாரசீக மன்னர். போனவர்களில் திரும்பியவர்கள் மூன்றே பேர்தான்! உடலெங்கும் காயங் களுடன், உடைகள் கிழிந்த நிலையில் தடுமாறித் திரும்பி வந்து சேர்ந்த அவர்கள், 'மற்ற வீரர்கள் மக்களிடம் மாட்டிக் கொண்டதாகவும் அவர்களைக் கூட்டம் உயிரோடு எரித்துவிட்டதாகவும்' கொடூரமான ஒரு செய்தியைச் சொன்னார்கள்.

நாதிர்ஷாவின் உடல் கோபத்தில் அனல் அடுப்பாக மாறியது. மூச்சுக் காற்றின் உஷ்ணம் அதிகரித்தது. "வெளியே இருக்கும் நம் படைக்குத் தகவல் அனுப்புங்கள். ஊருக்கு உள்ளே வந்து அவர்கள் அணிவகுக்கட்டும். தளபதிகள் எல்லோரையும் என்னை உடனே சந்திக்கச் சொல்லுங்கள். அதற்கு முன் நானே ஒருமுறை நகரை வலம் சென்று வருகிறேன். நாதிர்ஷா ஊருக்குத் திரும்பி விட்டதாக இந்த அகம்பாவம் பிடித்த மக்கள் தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்கள் என்று தோன்றுகிறது!" என்று கர்ஜித்துவிட்டுக் குதிரையேறி ஒரு சிறு

படையுடன் கிளம்பினார்.

அதேசமயம், பாரசீகப் பெரும் படை தகதகக்கும் வாட்களை உயர்த்திக்கொண்டு உள்ளே நுழைந்து பரவியது.

ஆச்சரியம்தான்! ஆனால், வெற்றிபெற்ற அந்நிய மன்னர்களின் வழக்கத்துக்கு மாறாக இரண்டு நாட்கள் நாதிர்ஷா பொறுமை காத்தது உண்மை. இதுபற்றி எல்லா வரலாற்றுப் புத்தகங்களுமே குறிப்பிடுகின்றன. அதேசமயம், தமக்குள்ளே எத்தனை பிரச்னைகள் இருந்தாலும் இந்த வேண்டாத விருந்தாளி உள்ளே திடும் பிரவேசம் செய்தது டெல்லி மக்களுக்கு எரிச்சல் ஊட்டியதிலும் வியப்பில்லை. ஒருவேளை, பாரசீக முழுப் படையின் அசுர பலத்தை நேரில் பார்த்திருந்தால் மக்கள் அச்சத்துடன் அடங்கிப்போயிருக்கலாம். கடைவீதிகளில் உதிரிகளாக எதிரிகளைக் கண்முன்னே பார்த்தபோது மக்களுக்குப் பயப்படத் தோன்றவில்லை... பந்தாடிவிட்டார்கள்!

பிறகு...

விதி கண்களை மூடிக்கொண்டு டெல்லியை நிராதரவாக விட்டு ஓட்டமெடுத்து விட்டது!

குதிரையில் ஏறிப் புறப்பட்ட நாதிர்ஷா, மார்க்கெட் பகுதியில் இருந்த ரோஷன் -உத்-தௌலா மசூதிப் படிக்கட்டுகளில் தாவிச் சென்று, அங்கிருந்த மேடைமீது அமர்ந்தார். மக்களிடமிருந்து “திரும்பிப் போ!” என்று ஆவேசக் குரல்கள் கிளம்பின.

“இதுதான் கடைசி எச்சரிக்கை! ஐந்து நிமிடங்கள் அவகாசம் தருகிறேன். எல்லோரும் கலைந்து போங்கள். ஐந்தே நிமிடங்கள்!” - மிகவும் கலவரமான அந்தச் சூழ்நிலையில், குரலை உயர்த்தி மிகுந்த கோபத்துடன் முழங்கினார் நாதிர்ஷா.

மக்கள் முகங்களில் பயம் தெரியவில்லை. மாறாக, சில அழுகிய பழங்களும் முட்டைகளும் பாரசீக மன்னர் மீது வந்து விழுந்தன...

அதையடுத்து, அந்த விபரீதம் நிகழ்ந்தது...

ஏதோ மாடியிலிருந்து குறிவைக்கப்பட்ட துப்பாக்கியிலிருந்து சீறிவந்த தோட்டா, நாதிர்ஷாவுக்கு வெகு அருகில் நின்று கொண்டிருந்த ஓர் இளம் மெய்க்காவலர் மார்பில் ஊடுருவ... உயிரிழந்த அந்த வீரரின் உடல் பாரசீக மன்னரின் மடியில் விழுந்தது.

வெறியோடு எழுந்து நின்ற நாதிர்ஷா, தன் இடையிலிருந்து வாளை உருவினார். கோபாவேசத்துடன் அதை உயர்த்திப் பிடித்தார். அதைத் தொடர்ந்து அடித் தொண்டையிலிருந்து வெளிப்பட்ட அவர் குரல், கனத்த பெரும் அருவியின் கர்ஜனையை ஒத்திருந்தது -

“இந்த வாளை நான் மறுபடியும் உறைக்குள் போடும்வரை பாரசீகப் படை இந்தக் கேடுகெட்ட மக்களை ஆசைதீரக் கொன்று தீர்க்கட்டும். ஆண், பெண், குழந்தை யாரையும் விடவேண்டாம். நம் அத்தனை வீரர்களின் வாட்களும் இயங்க வேண்டும். டெல்லியில் ஒரு உயிர்கூட மிஞ்சக் கூடாது...”

சுமார் முந்நூற்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தைமூரின் படை டெல்லியில் நிகழ்த்திய வெறியாட்டத்தை வாசகர்கள் மறந்திருக்க முடியாது. (இந்தப் புத்தகத்தின் முதல் மற்றும் இரண்டாம் அத்தியாயங்கள்!). அந்தப் பயங்கரம் மீண்டும் நிகழ்ந்தேறியது...

வரலாற்றில் பலமுறை பரிதாபப்பட்டுப் போன டெல்லி என்னும் களத்தில் ஒண்ணேகால் லட்சம் பாரசீக வீரர்கள் ஆவேசத்துடன் வாட்களைச் சுழற்றியவாறு குதித்தார்கள். சில மணி நேரத்தில் பல்லாயிரக்கணக்கான தலைகள் தலைநகர் வீதிகளில் உருண்டன. ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் நுழைந்து, ஒடுங்கி ஒளிந்து கொண்டிருந்தவர்களை வெளியே இழுத்துப் போட்டுக் குடும்பம் குடும்பமாக வெட்டிச் சாய்த்தனர் அந்நிய வீரர்கள். பீதியில் ஆழ்ந்த நூற்றுக்கணக்கான டெல்லிவாசிகள் மாடியிலிருந்து குதித்தும், குறுவாளால் குத்திக்கொண்டும் தற்கொலை செய்து கொண்டார்கள். இந்துக்கள் செந்நிறப் பொடி தூவிக் கொண்டாடும் ஹோலிப் பண்டிகை நாளான அன்று, வீதிகள் வேறு விதமாகச் சிவந்துபோன கொடூரம் நிகழ்ந்தது!

பிறகு, கடைவீதிப் பகுதிகளுக்குப் பாரசீக வீரர்கள் தீ வைத்தார்கள். கொழுந்து விட்டெறிந்த தீயில் எதிரிப் படையினரால் தூக்கிப் போடப்பட்ட இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றாகக் கதறித் துடித்து இறந்துபோனார்கள்.

யுத்தத்தின் ரத்தச் சூழ்நிலையில் வழக்கமாகத் தலைதூக்கும் வெறியும் அங்கே வெடித்தது. எரிந்த வீடுகளிலிருந்து அலறித் தப்பி ஓடிக் கொண்டிருந்த நூற்றுக் கணக்கான இந்து-முஸ்லிம் பெண்கள் அபகரிக்கப்பட்டு அலங்கோலப்படுத்தப் பட்டனர். இப்படிக் கற்பழிக்கப்பட்ட பல பெண்கள் குமுறிக் கிளம்பிய தீயில் வீறிட்டவாறு குதித்து உயிரை மாய்த்துக் கொண்டனர். வீதிகளெங்கும் கிளம்பிய தீச்சுவாலைகள், ‘ஐயோ’ என்பது போல வான் நோக்கித் தன் சிவந்த நெடிய கரங்களை நீட்டி அரற்றின!

காலை எட்டு மணி சுமாருக்குத் துவங்கப்பட்ட இந்தப் பாரசீகக் கொலை விழா, பிற்பகல் வரை நீண்டது...!

சில அமைச்சர்களுடன், கலங்கிப்போன முகத்துடன் நடுங்கியவாறு வந்தார் மொகலாய சக்ரவர்த்தி முகமது ஷா. நாதிர்ஷாவின் காலடியில் விழுந்து அவர் பாதங்களை முத்தமிட்டார். "போதும் இந்தத் தண்டனை... என் மக்களை மன்னித்துக் கருணை காட்டுங்கள்!" என்று கதறினார். டெல்லி பாதுஷா தன் காலடியில் துவண்டு விழுந்து அழுததைப் பார்த்த நாதிர்ஷாவின் கோபம் சற்றே தணிந்தது. அவர் வாள் மீண்டும் உறைக்குள் சென்றது. ஒருவழியாகப் பாரசீக வீரர்கள் ஓய்ந்தார்கள்.

அந்த ஒரு நாளில் நாதிர்ஷாவின் வீரர்களின் வாட்களுக்கு இரையான டெல்லி மக்களின் எண்ணிக்கை சுமார் இரண்டு லட்சம் பேர் என்று கூறப்படுகிறது!

நாள் முழுவதும் கொலைவெறியில் இருந்ததாலோ என்னவோ, அன்றிரவு படுக்கப் போன நாதிர்ஷாவின் உடல் கொதித்துக் கொண்டிருந்தது என்று கேள்வி. "ஐயோ... என் உடல் எரிகிறதே!" என்று படுக்கையில் புரண்டவாறு பாரசீக மன்னர் அலறித் துடிக்க, பயந்து ஓடிச்சென்ற அழகி நூர்பாய், ஹகீம் அலாவிகான் என்னும் வைத்தியரை அழைத்துக்கொண்டு வந்தாள். தான் தயாரித்த களிம்பை நாதிர்ஷாவின் உடலில் தேய்த்து சிகிச்சை அளித்த அந்த முதியவர், "இது என்ன கொலைவெறி..? ஒரு சிறந்த மன்னனுக்கு அழகா இது..? கோபம் என்பது பைத்தியக்காரத்தனத்துக்குப் பிறந்தது என்பது உங்களுக்குத் தெரியாதா..? அப்பாவி மக்களை, முதியவர்களை, பெண்களை, குழந்தைகளைக் கொல்வது வீரமா..? இது தான் தங்கள் நாட்டுக் கலாசாரமா..?" என்று துணிவோடு சரமாரியாக 'டோஸ்' விட... ஆயிரக்கணக்கானவர்களை வெட்டித் தள்ளிய நாதிர்ஷா, தட்டுத்தடுமாறி நின்ற இந்த முதியவரின் சுட்டெரிக்கும் பேச்சுக்கு முன் தோற்றுத் தலைகுனிந்து, "தவறுதான்! இப்படி நடந்துவிட்டது... உங்கள் ஊர் மக்கள்தான் முதலில் காரணம்... இந்த அளவுக்கு தூண்டிவிட்டுவிட்டார்கள்..." என்று சற்றே கூச்சத்துடன் முணுமுணுத்ததாகக் கூறப்படுகிறது!

யுத்தங்கள் நடந்து முடிந்த பிறகு இரு தரப்பினருக்கும் இடையே பல ஒப்பந்தங்கள் போடப்படுவதுண்டு. அதில், திருமண ஒப்பந்தம் ஒன்றையும் சேர்த்துக்கொள்வது அந்தக் காலத்தில் வழக்கம்! அதன்படி, மறைந்த ஔரங்கசீப் பாதுஷாவின் பேரன் இஸ்தன் பக்ஷ் (காம் பக்ஷ் மகன்!) என்னும் இளவரசரின் மகளுக்கும் நாதிர்ஷாவின் மகள் நெஸிர் இல்லாஹ் மிர்ஸாவுக்கும் (நகரெங்கும் குவியலாகக் கிடந்த உடல்களை அப்புறப்படுத்தி, டெல்லி வீதிகளைத் துப்புரவாக்கிய பிறகு!) திருமணம் நடந்தது.

'வசதியான இடம்! நிறையவே வரதட்சணை வாங்க வேண்டும்' என்று நினைத்த பாரசீக மன்னர், டெல்லி பாதுஷாவிடம் மரியாதைக்குக்கூட அனுமதி கேட்காமல் கஜானாவைத் துடைத்து எடுத்துக் கொண்டுவிட்டதாக வரலாறு கூறுகிறது!

எழுபது கோடி ரூபாய் தங்க-வெள்ளி நாணயங்கள், ஐம்பது கோடி ரூபாய் மதிப்புள்ள நகைகள், பல கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கத் தாம்பாளங்கள், 100 யானைகள், 7,000 குதிரைகள், 10,000 ஒட்டகங்கள், கலைஞர்கள் 150 பேர், தச்சர்கள் - பொற்கொல்லர்கள் என்று 500 பேர்... உச்சக்கட்டமாக, பல கோடி ரூபாய் மதிப்புள்ள மயிலாசனம்!

இப்படி 348 ஆண்டுகள் மொகலாய ராஜபரம்பரை சேர்த்து வைத்திருந்த சொத்து முழுவதும் ஒட்டுமொத்தமாக ஒரே நிமிடத்தில் கைமாறிப் போய்விட்டது! மிஞ்சியிருந்தது ஒன்றே ஒன்று... அதுதான்

விலை மதிக்க முடியாத கோஹினூர் வைரம்! கேட்டால், “அதைக் காணோம்... எங்கு போனது என்று தெரியவில்லை...” என்றார் சக்ரவர்த்தி (?) முகமது ஷா சற்றே கலவரத்துடன்! ஆனால், ‘வைரம் எங்கும் போகவில்லை.. மிக அருகிலேயே - மொகலாய பாதுஷாவின் தலைப்பாகைக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறது!’ - சரேலென்று ஒரு ஊகம் நாதிர்ஷாவின் மூளையில் பாய்ந்து ஊடுருவியது.

தன் எதிரில் நடுங்கி நின்று கொண்டிருந்த டெல்லி சக்ரவர்த்தி முகமது ஷாவிடம் விடைபெற்றுக்கொண்ட நாதிர்ஷா, திடீரென்று “பாதுஷா அவர்களுக்கு ஒரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேன்! நெருங்கிய இரு நண்பர்கள் பிரியும்போது தலைப்பாகைகளை மாற்றிக்கொள்வது எங்கள் நாட்டுச் சம்பிரதாயம்!” என்றார் புன்னகையுடன். மறுகணம் தானாகவே முகமது ஷாவின் தலைப்பாகையை எடுத்துக் கொண்டு தன் தலைப்பாகையை அவருக்கு அணிவித்தார். நாகரிகம், நாசூக்கு எல்லாம் காட்டத் தேவையில்லை என்று முடிவுகட்டிய பாரசீக மன்னர், தன் வசம் வந்த தலைப் பாகையை அங்கேயே கழற்றிப் பார்க்க... பளீரென்று மின்னலடித்தவாறு கீழே விழுந்தது கோஹினூர் வைரம்!

இந்த ஒரு வைரத்தைக் கொண்டுதான் எப்படியோ மிச்ச சொச்ச வாழ்க்கையைச் சமாளிக்க வேண்டும் என்று டெல்லி சக்ரவர்த்தி நினைத்திருக்கக்கூடும். அந்த ஆசையும் நிராசையாகிப் போனது. ஏமாற்றமும், வைரத்தின் ஒளியும் தாக்க... தலையைக் குனிந்துகொண்டு பரிதாபமாக அமர்ந்திருந்த மொகலாய பாதுஷாவிடம், “ஓ! இதுதான் நான் கேள்விப்பட்ட வைரமா..?! சரி, நான் கிளம்புகிறேன்... நம் மதத்துக்கும் மண்ணுக்கும் எப்போது ஆபத்து வந்தாலும், உதவிக்கு உரிமையோடு இந்த நண்பரைத் தாங்கள் கூப்பிட்டனுப்பலாம். உடனே வருவேன்!” என்று புன்னகையுடன் சொல்லி விட்டு நடந்தார் நாதிர்ஷா.

ஐம்பத்தேழு நாட்களுக்கு டெல்லியில் ஆர்ப்பாட்டமாகத் தங்கியிருந்த இந்த பாரசீக நாட்டு அரசர் நாதிர்ஷா, ஊருக்கு எடுத்துக்கொண்டு போகாமல் விட்டுவிட்டுப் போனது ஒன்றை மட்டுமே!

டெல்லியில் தங்கியிருந்த நாட்களில் தன்னை மகிழ்வித்த அடிமைப் பெண் நூர்பாயிடம் தன் மனதைப் பறிகொடுத்த நாதிர்ஷா, அவளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு போக விரும்பினார். “நான் வர மாட்டேன்... தயவுசெய்து என்னைக் கட்டாயப்படுத்தாதீர்கள். நான் இந்த மண்ணிலேயே சாக விரும்புகிறேன்...” என்று அந்தப் பேரழகி, நாதிர்ஷாவின் காலில் விழுந்து புரண்டு அழவே... மிகவும் மனம் இளகிப்போன மன்னர், நூர்பாயை ஆதரவோடு தூக்கி நிறுத்தி, “சரி, உன் விருப்பம்...” என்று சொல்லிவிட்டு விடை பெற்றுக் கொண்டதாக ஒரு ‘குட்டித் தகவல்’ உண்டு!

‘மிஞ்சியது வெறும் நினைவு..!’

வாள்முனையை உபயோகித்தோ அல்லது வாரிசாக இருந்த ஒரே காரணத்தினாலோ சிறுமதியாளர்கள் அரியணையைக் கைப்பற்றி ஆட்சியை அலங்கோலப்படுத்திய அவலங்கள் வரலாற்றில் நெடுகவே உண்டு! இத்தகைய கரும்புள்ளிகளின் தனிப்பட்ட சீரழிவையும் மீறிச் சில சமயங்களில் சாம்ராஜ்யங்கள் சுதாரித்துக்கொள்கின்றன. ஆனால், மக்கள் நலனை மதிக்காமல் மதிகெட்டுப் போய் ஆட்டம் போடும் கேடு கெட்ட தலைவர்கள் தொடர்ந்து வரிசையாக வந்து தொலைக்கும்போது

நாடும் தள்ளாட்டம் போடுகிறது. கூடவே அந்த சாம்ராஜ்யத்தின் மறைவுக்கு வரலாறு 'இரங்கற்பா' படிக்கும் தவிர்க்க முடியாத நாளும் வெகு விரைவிலேயே வந்து சேர்கிறது!

இந்தியாவைப் பந்தாடிவிட்டுத் திரும்பிச் சென்ற நாதிர்ஷா, எட்டாண்டுகள் கழித்து ஒரு பாரசீகக் கொலையாளியின் தனிப்பட்ட குறுவாளுக்குப் பலியானார். அவர் விட்டு விட்டுப் போன அகமது ஷா அப்தாலி என்னும் புலி, பதினாறடி பாய்ந்தது. நாதிர்ஷாவின் பிரதம தளபதிகளில் ஒருவர் அப்தாலி. எஜமானின் மறைவுக்குப் பிறகு ஆப்கானிஸ்தானில் காபூல், காண்டஹார் பகுதிகளை வளைத்துப் போட்டு ஆட்சி அமைத்தார் அந்த வீரர். ஏற்கெனவே நாதிர்ஷாவுடன் டெல்லிக்கு வந்து ருசி கண்ட அந்தப் புலி, தன் பங்குக்கு இந்திய மண் மீது குறி வைத்தது! 1748-ம் ஆண்டு ஆரம்பித்து 1761- வரை ஐந்து முறை இந்தியாவுக்குப் படையெடுத்தார் அப்தாலி.

1748-ம் ஆண்டில் பன்னிரண்டாயிரம் வீரர்கள் அடங்கிய படையுடன் இந்தியாவில் நுழைந்த அவரை மொகலாய பாதுஷா முகமது ஷாவின் வாரிசான அகமது ஷாவின் படை சமாளித்துத் துரத்தியடித்தது. 1750-ல் மறுபடியும் இந்திய எல்லைக்குள் நுழைந்த அப்தாலி பஞ்சாப் பிரதேசத்தை வெற்றி கரமாகக் கைப்பற்றினார். அவரது அடுத்த படையெடுப்பில் காஷ்மீர் ஆப்கானியர் வசம் வீழ்ந்தது.

முகமது ஷா இறந்த பிறகு தன் 22 வயதில் அரியணை ஏறிய அகமது ஷா ஒழுக்கக் கேட்டின் மறு உருவமாகத் திகழ்ந்தார். அவருடைய தாய் உதாம்பாய் மோசமான பெண்மணி. ஜாவித்கான் என்ற ஒரு அலியுடன் கும்மாளித்த அந்தப் பெண்மணி, அகமது ஷாவையும் அந்தப்புரத்தில் இழுத்துப் போட்டாள். அங்கிருந்து பாதுஷா மீளவேயில்லை. அமைச்சர்களும் பிரதானிகளும் மன்னரைச் சந்திக்க அனுமதி கிடைக்காமல் தவித்தனர். அந்தப்புரத்தில் தனக்கென்று ஒரு அரியணையைப் போட்டுக் கொண்டு ஒய்யாரமாக அமர்ந்துகொண்டு இருந்த அந்த அலியிடம்தான் மனுக்களைத் தந்து விட்டுத் திரும்ப வேண்டிய நிலை!

அறிவு இழந்த மன்னர், ஆட்டம் போட்ட அலி! - இவர்களின் ஆர்ப்பாட்டம் கண்டு நெஞ்சு பொறுக்காமல் போன அரசவைப் பெரியவர்கள் அதிரடிப் புரட்சிக்குப் பச்சைக் கொடி காட்டினார்கள். இமாத்-உல்-முல்க் என்னும் அதிகாரியின் தலைமையில் ஒரு சிறு படை அந்தப்புரத்தில் நுழைந்தது. சல்லாபத்தில் இருந்த மன்னர் அகமது ஷாவை இழுத்துக்கொண்டு வந்து சிறையில் தள்ளி முதல் வேலையாக அவர் கண்களைக் குத்திக் குருடாக்கினார்கள் (தலையைச் சீவாமல் விட்டால் அடுத்தபட்ச தண்டனையாகக் கண்களைத் தோண்டி எடுத்துவிடுவது அந்தக் காலத்தில் வழக்கமாக இருந்தது. பார்வையிழந்தவர்களுக்கு என்ன திறமையிருப்பினும் அவர்கள் பதவிப் போரில் இறங்க மாட்டார்கள் என்பதால்!).

சிறையில் தள்ளப்பட்ட அகமது ஷா தாகத்தால் தவித்துக் கதற, ஸைஃபுல்லா என்னும் சிறை அதிகாரி ஒரு மூலையில் பூச்சிப் பொட்டுடன் நாற்றமடித்துக் கொண்டிருந்த பானைத் தண்ணீரைக் கொண்டுவந்து இகழ்ச்சியுடன் அகமது ஷாவின் முகத்தை உயர்த்தி வாயில் கொட்ட, முந்தைய நாள் வரை வைரங்கள் பதிக்கப் பட்ட தங்கக்கிண்ணத்தில் ஒயின் அருந்திய பாதுஷா, இந்த பானைத் தண்ணீரை ஆவலுடன் தொண்டைக்குழி ஏறி இறங்கக் குடித்த கொடுமை நடந்தது!

இப்படித் தன் ஒன்றுவிட்ட சகோதரரைச் சிறையில் தள்ளிவிட்டு அரியணையில் அமர்ந்தவர் இரண்டாம் ஆலம்கீர். பெயருக்குத்தான் அரசர்! நடந்தது என்னவோ அதிகாரி இமாத்-உல்-முல்க் ஆட்சி. இந்த அதிகாரியின் இரும்புப் பிடியிலிருந்து கழற்றிக்கொள்ளப் பார்த்த ஆலம்கீர் 1759-ல் பதவியிலிருந்து அகற்றப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

அவருக்குப் பிறகு ஆட்சிக்கு வந்தார் இரண்டாம் ஷா ஆலம். இவரும் வெறும் பொம்மையே. அந்த நேரம் பார்த்து ஆப்கானிய அப்தாலி மறுபடி படையெடுக்க, பதவியிழந்த ஷா ஆலம் பன்னிரண்டு ஆண்டு காலம் பரதேசியைப் போலத் திரிந்தார். வலுவாக வளர்ந்திருந்த மராட்டியர்களின் உதவியைக் கோரினார். மனமிரங்கிய மராட்டியர்கள் அந்தப் பரிதாப பாதுஷாவை 1772-ல் டெல்லி அரியணையில் அமர்த்தினார்கள். காலத்தின் கோலம்!

பாவம், ஷா ஆலம்!... அரண்மனை காவலதிகாரி குலாம் காதிர் என்பவனால் அவருக்கு (1788-ல்) நேர்ந்த கொடுமைகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. யார் கட்டுப்பாட்டிலும் இல்லாமல் போய்விட்ட அரண்மனைக்குள், நிராதரவாக நடுங்கிக் கொண்டிருந்த பாதுஷாவைப் புரட்டியெடுத்து சித்ரவதை செய்தான் இந்த அதிகாரி. பாதுஷாவை நிர்வாணப்படுத்தி, சவுக்கால் அடித்து, கண்களைத் தோண்டியெடுத்து, உதைத்து, மிதித்து... மேலும் இந்த மனித மிருகம், மன்னருக்கு நிகழ்த்திய சித்ரவதைகள் எழுத முடியாத அளவுக்குக் கேவலமானவை. பாதுஷாவின் மகன்களுக்கும் அதேகதிதான். தர்பாரில் சவுக்கால் அடித்து அந்தச் சிறுவர்களை நடனமாட வைத்தான் அந்தக் கொடுங்கோலன். அரசகுலப் பெண்மணிகளும் சொல்ல முடியாத அவமானங்களுக்கு

உள்ளானார்கள். கடைசியில் ஒருவழியாக உள்ளே புகுந்த கிழக்கிந்திய கம்பெனிக்காரர்கள் பாதுஷாவைக் காப்பாற்றினார்கள்.

1806-ல் ஷா ஆலம் இறக்க, அவர் மகன் இரண்டாம் அக்பர்ஷா அரியணையில் அமர்த்தப்பட்டார். இந்தக் காலகட்டத்தில் மொகலாய சாம்ராஜ்யத்தின் எல்லைகள் அரண்மனையின் நான்கு சுவர்கள்தான்! வெளியே, முழுமையாக இந்தியா கைமாறிப் போய்விட்ட நிலை! வறுமையில் வாடிய மொகலாய 'சக்ரவர்த்திக்கு' கிழக்கிந்திய கம்பெனி உதவித் தொகை அளித்துப் பின்னணியில் நாட்டை ஆண்டது.

1837-ல் அக்பர்ஷா இறந்தவுடன் ஆட்சிக்கு வந்த இரண்டாம் பகதூர்ஷாதான் மொகலாய சாம்ராஜ்யத்தின் மிகக் கடைசி சக்ரவர்த்தி!

மொகலாய சாம்ராஜ்யத்துக்கு முற்றுப் புள்ளியாக வந்தமர்ந்த பகதூர்ஷா மென்மையானவர். மிகச் சிறந்த கவிஞர். ஒருவேளை, பேரரசர் அக்பருக்கு பிறகு இவர் ஆட்சிக்கு வந்திருந்தால் பெருமை மிக்கதொரு சக்ரவர்த்தியாகத் திகழ்ந்திருக்கக் கூடும். வசதியேதும் இல்லாத சூழ்நிலையில் அரண்மனையைக் கூட்டிப் பெருக்கக்கூட ஆட்கள் இல்லாமல் குப்பைக்கூளங்களுக்கும் ஒட்டடைத் தோரணங்களுக்கும் நடுவே பரிதாபமாக 'பாதுஷா' என்ற பெயரில் வாழ்ந்துவந்தார் பகதூர்ஷா. மற்ற எந்த மொகலாய பாதுஷாவுக்கும் கிடைக்காத ஒரு பெருமை இவருக்குக் கிடைத்தது என்று கூறலாம் - காமிராவால் புகைப்படம் எடுக்கப்பட்ட பெருமை (பார்க்க - போட்டோ!)!

ஆண்டு 1857...!...

தங்கள் என்ஃபீல்டு துப்பாக்கிகளில் உபயோகப்படுத்தப்பட்ட க்ரீஸில் பசு மற்றும் பன்றிக் கொழுப்பை பிரிட்டிஷ்காரர்கள் கலந்ததையடுத்து வெகுண்டுபோய்ப் போராட்டத்தில் இறங்கினார்கள் இந்து மற்றும் முஸ்லிம் சிப்பாய்கள். இந்தச் சிப்பாய்க் கலகம் வெடித்ததைத் தொடர்ந்து 'இனி இந்த மறைமுக ஆட்சியெல்லாம் சரிப்படாது' என்று முடிவுகட்டியது பிரிட்டிஷ் அரசு. சிப்பாய்க் கலகத்துக்கு ஆதரவு தந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டார் பகதூர்ஷா. 'கலகக்காரர்களால்' ஒரே நாளில் கைப்பற்றப்பட்ட டெல்லியை மீண்டும் மிருகபலத்துடன் ராணுவம் கொண்டு கைப்பற்றியது பிரிட்டிஷ் நிர்வாகம்.

அப்போது அரண்மனையிலிருந்து தப்பிச்சென்று ஹுமாயூன் கல்லறைக்குள் ஒளிந்துகொண்டது பகதூர்ஷா குடும்பம்! செப்டம்பர் 22, 1857-ம் ஆண்டு காப்டன் வில்லியம் ஹாட்ஸன் தலைமையில் சென்ற சிறு படையிடம் பதறிப் பதுங்கிக்கொண்டிருந்த பகதூர்ஷா சரணடைந்தார். கூண்டோடு ராஜகுடும்பத்தை பிரிட்டிஷ் அதிகாரிகள் கைது செய்தனர்.

மனிதர்கள் மாறினாலும் மனப்பான்மை எங்கே மாறுகிறது?! கைது செய்யப்பட்ட அரச குடும்பத்தைச் செங்கோட்டைக்குக் கொண்டு வரும் வழியில் பகதூர்ஷா விடமிருந்து அவருடைய இரு இளம் மகன்கள் பிரிக்கப்பட்டனர். பல்லக்கில் சென்றுகொண்டிருந்த பாதுஷா "என் மகன்கள்..." என்று அலற, ஹாட்ஸன் ஒரு மரத்தின் ஓரமாக அந்தச் சிறுவர்களைத் தள்ளிக்கொண்டு போய் இருவரையும் கொடூரமாகச் சுட்டுக் கொன்றான். சிறுவர்களின் உடல்கள் சாந்தினி சௌக் கடைவீதியில் பொதுமக்கள் பார்வைக்காகத் தொங்கவிடப்பட்ட கொடுமையும் நிகழ்ந்தது.

செங்கோட்டையில் ஆங்கிலேயர்கள் ஆர்ப்பாட்டமாக நடமாட, ஒரு தூண் அருகே கால்களை மடக்கியவாறு, கிழிந்த உடைகளுடன், பீதி

நிறைந்த விழிகளுடன் உடல் நடுங்க மொகலாய கடைசி பாதுஷா பகதூர்ஷா அமர்ந்திருக்க, அவருக்கு ‘குற்றவாளி’ என்று ஆங்கிலேய நீதிபதியால் தீர்ப்பு வழங்கப்பட்டது. தண்டனையாக, பகதூர்ஷா கப்பலில் ஏற்றப்பட்டு பர்மாவுக்கு நாடு கடத்தப்பட்டார். (1862-ல் ரங்கூனில் நிராதரவாக இறந்தார் பாபரின் வழித் தோன்றலும், கடைசி மொகலாய சக்ரவர்த்தியும் ஆன பகதூர் ஷா.).

ரங்கூனில்...

1858-ல் - பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்ட ஒரு சட்டத்தின் மூலம் மொகலாய ஆட்சி முடிவுக்கு வர, இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் போனது.

அன்றிலிருந்து...

இந்திய நாடு ஒரு புதிய நட்சத்திரத்தின் கைவசம் மாறியது. அந்த பிரிட்டிஷ் நட்சத்திரத்தின் பெயர் - விக்டோரியா மகாராணி.

இதோ கப்பலில் பர்மா நோக்கிக் கைதியாகச் செல்லும் பகதூர்ஷா, கண்களில் நீருடன் ஒரு கவிதை எழுதிக்கொண்டு இருக்கிறார். சற்று எட்டிப் பார்ப்போம் வாருங்கள்....

‘நான் நேசித்த எல்லாமே
எங்கோ போனது!
இது இலையுதிர் காலம்...
இழந்தது பூந்தோட்டம்
தன் அழகையெல்லாம்!
நான் இன்று....
மின்னிய பழம்பெருமையின்
மிஞ்சிய வெறும் நினைவு!’

கடைசியாக....

திட்டம் போட்டு, நிறைய குறிப்புகளெல்லாம் தயார்பண்ணிக் கொண்டு நான் இந்த வரலாற்றை எழுத ஆரம்பிக்கவில்லை. எல்லாமே எழுத ஆரம்பித்த பிறகுதான் நடந்தது!

தனிப்பட்ட முறையில் படித்து ரசிக்கலாம் என்று நினைத்து மொகலாய மன்னர்களைப் பற்றி இரு புத்தகங்கள் எதேச்சையாக வாங்கினேன். டைம் புக்ஸ் இன்டர்நேஷனல் வெளியீடான Bamber Gascoigne எழுதிய 'The Great Moghuls' மற்றும் 'Babur Nama'... இந்த இரு புத்தகங்களைப் படித்த பிறகு 'எவ்வளவு கலர்ஃபுல்லான மன்னர்கள்!' என்ற வியப்பும் பிரமிப்பும் ஏற்பட்டது. அப்போதும்கூட வரலாற்றுத் தொடர் எழுதலாம் என்று அதிகப்பிரசங்கித்தனமான ஐடியாவெல்லாம் கிடையாது! ஒரு நாள் மாலை நேரம், துணை ஆசிரியர் ராவ் அவர்களிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது பாபர் பற்றி படித்த சில தகவல்களைப் பகிர்ந்துகொண்டேன். துணை ஆசிரியர் 'பிஸினஸ் லைக்'கான டைப். 'இவ்வளவு சுவையான தகவல்களை வைத்துக்கொண்டு அதை ஒரு தொடராக எழுதாமல் இருக்கக்கூடாது' என்றார். விடாப்பிடியாக, கூடவே ஆசிரியரிடம் கூறிவிட்டு ஜூனியர் விகடனில் அதுபற்றிய ஒரு அறிவிப்பும் உரிமையோடு வெளியிட்டுவிட்டார்.

சரிதான், தைமூர் டெல்லியில் நிகழ்த்திய அராஜகம் பற்றி ஒரு வாரம் எழுதிவிட்டு பிறகு பாபரில் ஆரம்பித்து ஔரங்கசீப் வரை 'வாழ்க்கைக் குறிப்புகள்' மாதிரி பதினைந்து வாரங்கள் எழுதிச் சமாளித்துவிடலாம் என்று முடிவுகட்டினேன். முதல் அத்தியாயம் எழுதி முடித்தேன். அதைப் படித்துவிட்டு ஆசிரியர் எஸ்.பாலசுப்ரமணியன் கூப்பிட்டனுப்பினார். 'ஆரம்பத்திலேயே ஏகமாகச் சூடுபிடித்துவிட்டது. பிரமாதமாக வரவேற்புப் பெறும் போலிருக்கிறது. ஆகவே தொடரை விஸ்தாரமாகவே கொண்டு போங்கள்' என்றார்.

'பாபரிலிருந்து ஔரங்கசீப் வரை ஆறு சக்ரவர்த்திகளைப் பற்றித்தான் எழுதப்போகிறேன். எத்தனை வாரம்தான் சார் எழுதுவது?' என்றேன்.

பிறகு எங்கள் பேச்சு கோரி முகமது, கஜினி... குத்புதீன் அமைத்த அடிமைகள் சாம்ராஜ்யம், கில்ஜி மற்றும் துக்ளக் டைனாஸ்டி பற்றித் தொடர்ந்தது. அதையே பிடித்துக்கொண்டு விட்டார் ஆசிரியர்.

'இதெல்லாம் எப்படி எழுதாமல் விடுவது? புராண காலத்திலிருந்து டெல்லி எப்படி இருந்தது... அங்கே என்னவெல்லாம் நடந்தது என்றுகூடத் தகவல்கள் திரட்டி எழுதலாமே... வாசகர்கள் நன்றாகவே ரசிப்பார்கள். இது உங்களால் முடியும்!' என்றார். கல்லூரியில் ஆசிரியருக்கு இரண்டாவது முக்கியப் பாடம் சரித்திரம். அவரை டபாய்க்க முடியாது!

கூடவே, 'தொடருக்குத் தேவையான எல்லாப் புத்தகங்களையும் வாங்கிவிடுவது. ஒவ்வொரு வாரமும் ஏதாவது ஒரு தகவலுக்காக லைப்ரரி அது இது என்று அலைந்து கொண்டிருக்கக்கூடாது...' என்று முடிவாகியது. மேலும் சில முக்கிய புத்தகங்களையும் பல ஆதாரங்களையும் பல்கலைக்கழக நூலகத்திலிருந்து எனக்குத்

தேவைப்பட்ட போதெல்லாம் கொண்டுவந்து கொடுத்து உதவினார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சரித்திரம் மேற்படிப்புப் படிக்கும் குமாரி லக்ஷ்மி பத்மநாபன்.

ஒரு பக்கம் எல்லாப் புத்தகங்களும் ஒரு சூறாவளியாக மொகலாய காலத்துக்கு என்னை இழுத்துக்கொண்டுவிட, ஆசிரியர் சொன்னதும் நடந்தது. முதல் அத்தியாயத்தைப் படித்துவிட்டே ஏராளமான வாசகர்கள் பாராட்டிக் கடிதங்கள் எழுதியனுப்ப, ஒருவழியாகச் சற்று மயங்கிப் போனேன்.

ஆகமொத்தம் நான் அகலக்கால் வைத்துவிடக் காரணம் இதெல்லாம்தான்.

இந்தியாவுக்குப் படையெடுத்து வந்த முஸ்லிம் அரசர்கள் பற்றியும் மொகலாய அரசர்கள் ஆண்ட காலம் பற்றியும் நூற்றுக்கணக்கில் நுணுக்கமான புத்தகங்கள் நம்மிடையே இருப்பது மகிழ்ச்சியான விஷயம். இவற்றில் முக்கியமான எல்லாப் புத்தகங்களையும் ‘வந்தார்கள்... வென்றார்கள்!’ ஆரம்பித்த சூட்டோடு படித்துவிட நேர்ந்ததால், வரலாற்றுப் பின்னணிகளை ஓரளவு தெளிவாகப் புரிந்துகொண்டு நடுநிலைமையோடு, பொறுப்பு உணர்ச்சியோடு இந்தப் புத்தகத்தை என்னால் எழுத முடிந்தது.

இந்தத் தொடரில் ஆங்காங்கே நிகழும் உரையாடல்களை மட்டும் - இப்படித்தான் பேசியிருக்க முடியும் என்ற யூகத்தின் அடிப்படையில் - கற்பனை செய்து எழுதினேன். மற்றபடி ஒவ்வொரு வரியும் வரலாற்றில் உண்மையில் நடந்தவையாகும்!

ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் நிறைய வாசகர்கள் ‘அதை ஏன் விட்டுவிட்டீர்கள்?’ என்று குறிப்பிட்டுக் கடிதங்கள் எழுதினார்கள். அதுதான் அனார்கலி - சலீம் காதல் விவகாரம்! அப்படி ஒரு காதல் நடந்ததற்கான ஆதாரங்கள் எந்த வரலாற்றுப் புத்தகத்திலும் இல்லை என்பதே உண்மை. இதுபற்றி சரித்திரப் பேராசிரியர்களிடமும் கேட்டதில் அதற்கு ‘ஆதாரம் கிடையாது!’ என்றே சொன்னார்கள்! அனார்கலி என்ற பெயர் பொறிக்கப்பட்ட கல்லறை ஒன்று லாகூரில் இருப்பது உண்மை. அதோடு சரி. மற்றபடி எந்தப் புத்தகத்திலும் விவரம் இல்லை!

ஒவ்வொரு வாரமும் ஜூனியர் விகடனுக்கான மற்ற வேலைகளை முடித்துவிட்டு அந்த வாரத்துக்கான அத்தியாயத்தை எழுத ஆரம்பிக்கும்போது நிச்சயமாக நடுநிசி ஆகிவிடும். அப்போதும் என்னோடு கூடவே விழித்திருந்து பத்திரிகையில் அத்தியாயம் அழகாக வெளிவர வேண்டும் என்று அக்கறையெடுத்துக்கொண்டு செயல்பட்ட இளைஞர், சீனியர் ரிப்போர்ட்டர் அசோகனுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும்.

ஓவியர் அரஸ், விகடன் அலுவலகத்துக்கு வந்து தங்கி நான் எழுதி முடிக்கும்வரை காத்திருப்பார். பிறகு எதை, எந்தக் கோணத்தில் வரையலாம் என்று ஆர்வமாக விவாதித்துவிட்டு ஓவியம் வரைவார். அந்தப் பின்னிரவு நேரத்தில் வண்ணங்களையும் பிரஷ்ஷையும் எடுத்துக்கொண்டு அவர் இயங்கும் வேகம் என்னை அதிசயிக்க வைக்கும்.

கடைசியாக...

காலை மூன்று மணி சுமாருக்கு நான் வீட்டுக்குத் திரும்பி காலிங்

பெல்லை அழுத்தியதும் முகம் சுளிக்காமல் வந்து கதவைத் திறந்து வீட்டுக்குள்ளே அனுமதித்த என் மனைவிக்கும் நன்றி!

- மதன்

உதவிய புத்தகங்கள்..!

History of the Rise of the Mahomedan Power in India (4 Volumes) By Mahomed Kasim Ferishta - ஆங்கில மொழி பெயர்ப்பு - John Briggs ரோம் மற்றும் கிரேக்க ஆட்சியாளர்களைப் பற்றி ப்ளூ டார்க் எழுதிய புத்தகத்துக்கு இணையான அற்புதமான புத்தகம் இது. கி.பி.1570-ல் பிறந்த ஃபெரிஷ்டாவை 1589-ல் பாமினி சுல்தான் இந்தியாவுக்கு வரவழைத்து இந்த ‘வரலாற்றுப் பணியை’க் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Babur Nama கவிதை நயத்துடன் பேரரசர் பாபரே கைப்பட எழுதிய சுவையான வாழ்க்கைக் குறிப்பு (2 Volumes).

Humayun Nama (ஹுமாயூன் சரிதை) - பாபர் மகள் குல்பதன் எழுதியது. ஒரு பெண்ணின் கோணத்தில் எழுதப்பட்ட இதில் ‘வீட்டு விஷயங்களும், உறவுமுறை விவரங்களும்’ ஏராளம்!

அப்துல் ஃபஸல் எழுதிய Akbar Nama (3 Volumes) அக்பர் வாழ்க்கை வரலாறு.

The Crescent in India (S.R.Sharma எழுதிய வித்தியாசமான - தீர்க்கமான சுவையான அலசல்!)

An Advanced History of India by R.C.Majumdar (Macmillan) (உணர்ச்சி பூர்வமாக எழுதப்படாத தடிமனான பாடபுத்தகம்தான்! ஆனால் உள்ளே ஏராளமான தகவல்கள் உண்டு.)

Anecdotes of Aurangzib by Jadunath Sarkar.

Shivaji by Sarkar.

House of Shivaji by Sarkar. (ஔரங்கசீப் வாழ்க்கை வரலாற்றையும் அற்புதமாக எழுதியுள்ள சர்க்கார் இந்திய வரலாற்றுக்கு செய்த பணி மகத்தானது.)

A History of India by Hermann Kulke and Dietmar Rothermund.

A Political and Cultural History of India (Vol.II) by R.Sathianathaier.

‘The world’ an illustrated history - The Times Books.

Francis Watson எழுதிய The Concise History of India.

The Koh-i-noor Diamond, Stephen Howarth.

A Second Paradise. Indian Courtly Life 1590-1947 by Naveen Patnaik (இதற்கு முன்னுரை ஜாக்வலீன் கென்னடி!)

மராட்டியர்கள் பற்றிய The Grand Resistance - Murarirao Ghorpade and The 18th Century Deccan by M.Y.Ghorpade. (செஞ்சிக் கோட்டை பற்றியும் மராட்டிய மன்னர் ராஜாராம் பற்றியும் விவரமான தகவல்கள் உண்டு!)

A History of India 2 by Percival Spear (சுருக்கம், வேகம்!)

Delhi (A Novel) குஷ்வந்த்சிங். (வரலாற்று உண்மைகளோடு கூடிய நாவல் இது! மிகச் சுவையானது!)

மற்றபடி கைடு புத்தகங்கள்...

Northern India (Nelles Guides)

Murrays Hand Book India, Pakistan, Burma and Ceylon.

'Delhi' - A Sangam City Guide.

அற்புதமான புகைப்படங்கள் அடங்கிய புத்தகங்கள்... Delhi and Agra by Chapman and Petigura.

Delhi and its Monuments by Promodini Varma and Photos by D.N.Dube.

Agra and Fatehpur Sikri (Atlantis வெளியீடு).

Delhi, Agra & Jaipur - The Golden Triangle (Tiger Books International London வெளியீடு).

Agra and Delhi by Leila Ghosh and Dalia Roy.

Taj Mahal by Bikram Grewal.

வித்தியாசமான, மயங்கவைக்கும் வண்ணப்படங்கள் அடங்கிய The Taj and Fatehpur Sikri by R.Ian Lloyd and Wendy Moore-குறிப்பிடத்தக்க ஒரு புத்தகம்!

உள்ளே வந்தவர்கள்...

தைமூர்..

பிறகுதான் மறுபடியும் பயங்கரம்!

முகமது கோரி..

வாளேந்தினான் பிருத்விராஜ்!

முகமது கஜினி..

சோமநாதர் கோயிலும் முகமது கஜினியும்...

குத்புதீன் அய்பெக்..
ஆராம் ஷா..
இல்துாத் மிஷ்..

ஆரம்பம் - அடிமைகளின் சாம்ராஜ்யம்!

ரஸியா..

டெல்லியை ஆண்ட பெண்புலி!

பஹ்ராம்..
நஸிருதீன் மகமூத்..
பல்பன்..

இரும்புக்கரம்!

கெய்கூபாத்..

மதுக்கோப்பைகள்.. மங்கைகள்!

ஜலாலுதீன் கில்ஜி..

வஞ்சகத்தின் மறு உருவம்!

அலாவுதீன் கில்ஜி..

அமலுக்கு வந்த மதுவிலக்கு!

மாலிக் கஃபூர்..
முபாரக் கில்ஜி..

குஸ்ரூகான்..

அந்தப்புரத்து ஆண்கள்!

கியாஸுதீன் துக்ளக்..
முகமது பின் துக்ளக்..

‘ஹனூஸ் தில்லி தூர் அஸ்த்!’

முற்றுப்புள்ளி வைத்த முன்கோபம்!

பிரோஸ் துக்ளக்...

கடைசி டெல்லி சுல்தான்..!

கிஸிர்கான்..
சிகந்தர் லோடி..
இப்ரஹீம் லோடி..

பிறகு..!

மொகலாய சாம்ராஜ்யம்!

பாபர்..

சோதனைப் படிக்கட்டுகள்!
இந்தியாவை நோக்கி..!
எட்டாவது மனைவி!
புதியதொரு சாம்ராஜ்யம்!

ஹுமாயூன்..

கேலிக்கூத்தான மன்னிப்புகள்!
ஷெர்ஷாவின் பாய்ச்சல்!
மீண்டும் அரியணை!
இவரும் அவரும்!

அக்பர்..

பைராம்கான் மதிப்பு!
ஆட்டம் போட்ட ஆதாம்கான்!
சாம்ராஜ்ய விஸ்தரிப்பு!
வீழ்ந்தது சித்தூர் கோட்டை!
வெற்றி நகரம்!
'தீன்-இலாஹி.. இந்தியாவின் தேவை!'
தந்தையும் மகனும்!

ஜஹாங்கீர்..

கலையும் காதலும்!
மகனுக்குத் தண்டனை!
அந்தப்புரத்தில் ஓர் அரியணை
அதிர்ஷ்டக்காற்று இளவரசர் பக்கம்..!

ஷாஜஹான்..

ரத்தமயமான ஆட்சி மாற்றம்!
எதிர்ப்பு முட்கள்
அவளுக்காக...
வேண்டாத மகன்!

போர்க்களங்கள்... பொல்லாப்பு..!
புது நகர்ப்பிரவேசம்!
சகோதரப் போர்!

ஔரங்கசீப்..

உருண்டன தலைகள்..
வெறுப்பும் எதிர்ப்பும்!
சீக்கிய சிங்கங்கள்!
‘விடாக்கண்டர்’ துர்காதாஸ்!
மராட்டிய வேங்கையும் மொகலாய பீதியும்..!
ஆக்ரா சிறையில்..!
கரடியும் தேனீக்களும்..!
ஆலம்கீர் - ஒரு அலசல்!
கடைசிக்கால கவலைகள்!

மற்றவர்கள்..

பாரசீகப் பேராபத்து
தலைநகரில் கொலை விழா!
‘மிஞ்சியது வெறும் நினைவு..!’

Printed Books

மதன்

பதினேழு முறை இந்தியாவுக்குத் தொடர்ந்து படையெடுத்துப் பெரும் செல்வத்தைக் கொள்ளையடித்துச் சென்ற சுல்தான் கஜினியில் ஆரம்பித்து, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் நாடு கடத்தப்பட்ட கடைசி மொகலாய மன்னர் பகதூர்ஷா வரை நிகழ்ந்த சம்பவங்களை, வாழ்ந்த மன்னர்களை நெருக்கமாக விவரிக்கும் இந்தச் சுவையான வரலாறு ஜூனியர் விகடனில் ஐம்பத்துமூன்று வாரங்கள் தொடராக வெளிவந்தபோது, லட்சக்கணக்கான வாசகர்கள் பிரமிப்போடும் சிலிர்ப்போடும் படித்து ரசித்தார்கள்.

மதன் எழுதிய இந்த வரலாற்றுத் தொடர் முடிந்தபோது ‘அடடா! முடிந்துவிட்டதே... தொடரக்கூடாதா..?’ என்று நினைத்தவர்களே அதிகம்.

ஆனந்த விகடனில் 1970-ல் கார்ட்டூனிஸ்ட்டாகச் சேர்ந்து விகடன் நிறுவனத்தின் ஆனந்த விகடன், ஜூனியர் விகடன், ஜூனியர் போஸ்ட் ஆகிய மூன்று பத்திரிகைகளுக்கும் இணை ஆசிரியராகப் பணியாற்றினார்.

மதனின் முழுப்பெயர் மாடபூசி கிருஷ்ணஸ்வாமி கோவிந்தகுமார். மனைவி ஜெயந்தி. இந்தத் தம்பதிக்கு திவ்யா, அமிதா என்று இரு மகள்கள் உண்டு.

மதனின் பள்ளிப்பருவம் சென்னையில்... திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப்பள்ளி. கல்லூரிகள்: விவேகானந்தா, சென்னை மாநிலக் கல்லூரி. கல்லூரியில் அவர் படித்த சப்ஜெக்ட் சரித்திரமல்ல, பௌதீகம் என்பது குறிப்பிடத்தக்கது!

ஓவியங்கள்: அரஸ்



VANTHARGAL VENDRARGAL

₹ 200

ISBN 81-89780-59-X
9788189780593

விகடன் பிரசுரம்